சுஜாதாவின் சிறுகதைகள்

- சுஜாதா

அனாமிகா

மெரீனாவில் கடலருகே அதிகக் கூட்டம் இல்லை. அங்கே இங்கே ஓரிரு தப்பித்த படகுகள். வெயில் காயும் வலை தவிர மனித நடமாட்டம் இல்லை. ஈரம் இன்னும் காயாத மணல் பால் வெண்மை மறந்து பழுப்புக்கு அருகில் இருந்தது. அவசரமால உதித்துவிட்டு அபத்தமாகத் தொங்கும் பகல் நிலா தூரத்தில் காத்திருக்கும் கப்பல் வரிசை. விரைவாக மரம் திரும்பும் காகங்களைத் தொர்ந்து மௌனம்...இவையெல்லாம் ஏற்படுத்திய அமானுஷ்ய சூழ்நிலையில் சோகத்தின் கனம். தொட்டுப் பார்க்கும் அருகில் இருந்தது.

மெல்ல மணலில் நடந்தேன். விசுக்..விசுக் என்ற என் காலடியோசை எனக்குக் கேட்டது. அங்கே இங்கே ஒரு சிலர் தயங்கித்தான் மணல் பக்கம் துணிந்தனர். பலர் பத்திர தூரத்தில் பிளாட்ஃபாரத்தில் நடந்தார்கள். பலர் எதற்கு வம்பு என்று க்வின் மோரீஸ் பக்கமே நடந்து கடந்தார்கள்.

கிட்டே போய்த்தான் பார்ப்போமே. கடல் என்ன ஆசைகளைக் கொல்லக்கூடிய அத்தனைக் கொடியவளா. விசாரிக்கலாம் என்று கரை வரை சென்றேன். பேண்ட்டை மடக்கிக்கொண்டு சற்று நேரம் கடல் அலையைக் காலைத் தோட அனுமதித்தேன். நண்டுகள் குறுகுறுத்தன மழை பெய்யலாம் என்று என்று காலரில் குளிர்காற்று நினைவுறுத்தியது.

“இத்தனை அமைதியாக இருக்கிறாயே...நீயா அத்தனை அழிச்சாட்டியம் பண்ணினாய்?” – யாருமில்லாததால் உரக்கவே கேட்டேன்.

நவகளாமேகனின் வெண்பா ஞாபகம் வந்தது.

உடுக்க உடையும் உணவொடு மீன்கள்
பிடிக்கப் படகும் பணமும் கொடுத்தாய்
அலைத்தாயே அத்தனையும் தந்தோர் நொடியில்

கலைத்தாயே காரணத்தைச் சொல் ?

அந்தக் கடைசிச் சொல் வானமெங்கும் எதிரொலித்தது. ‘அங்கிள்’ என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். அந்த மாலை நேரத்தில் தெளிவாகத் தெரியவில்லை. தனியாக நிற்கிறேன். சற்று பயமாக இருந்தது. மறுபடி ‘அங்க்கிள்ள்’ என்று அழுத்தமான குரல் கேட்டது. அந்தப் பெண்ணை அப்போதுதான் பார்தேன். பதினான்கு வயதிருக்கும் பட்டுப் பாவாடை சட்டையுடன் கல்யாண வரவேற்புக்குச் செல்பவள் போல நிறைய நகை அணிந்திருந்தாள். “யாரும்மா நீ? இத்தனை நகை போட்டுகிட்டுத் தனியாக வந்தியா?”

“உங்களை பார்த்தேன் அங்கிள்! சீக்கிரம் போய்க் கையெழுத்து வாங்கிட்டு வந்துடறேன்னு சொல்லிட்டு ஓடு வந்த்தேன்!”

என் ‘விஞ்ஞானச் சிறு கதைகள்‘ புத்தகத்தைக் காட்டினாள்

“இந்த வயசுக்கு நீ இந்தக் கதையெல்லாம் படிச்சியா?”

“எல்லாக் கதையும் படிக்கலை. எப்பவும் கையில வெச்சுக்கிட்டு இங்க ஒண்ணு அங்க ஒண்ணுனு படிச்சுட்டு வரேன்!”

“படிச்சவரை புரிஞ்சுதா?”“புரியுதே... ஏன்?”
“எந்தக் கதை உனக்கு அதிகம் பிடிச்சுது?”

“தேஜஸ்வினி கடைசிக் கதையை முதல்ல படிச்சேன்!”

“அந்தக் கதை உனக்கு புரிஞ்சதுங்கறியா?”

“ஏன் அந்தாளு பறந்து போயிர்றான்?”

“அதான். ஏன்?”

“அவன் தேவலோகத்து ஆளா? தப்பா இருந்தா நீங்கதான் சொல்லுங்களேன்!”

நான் சொல்லவில்லை. “நீ நினைச்சுட்டிருக்கறதுதான் சரி!” என்றேன். முடிவை விளக்கவேண்டி இருந்தால் அது நல்ல கதை இல்லை.

“எனக்கு ஒரு கையெழுத்துப் போட்டு கொடுங்க அங்கிள்!” என்றாள் கெஞ்சலாக.”நீங்க சிறுகதை ஏழுதி ரொம்ப நாளாச்சே! ‘கற்றதும் பெற்றதும்‘ அதிகம் யோசிக்க வைக்குது என்றாள்.

நிறைய கதை எழுதி விட்டேன் எதை ஆரம்பித்தாலும் முன்பே எழுதிவிட்டது போல் தோன்றுகிறது என்றேன். (இனி சுத்தத் தமிழ்!)

“எனக்காக ஒரே ஒரு கதை!” என்றாள்

“சரி பெயர் சொல்லு!”

“சிறுகதைக்கா? அதற்கெல்லாம் பெயர் வைக்கத் தகுதியிருந்தால், நானே எழுதியிருப்பேனே!”

“அப்படியில்லை. ஒவ்வொருவரிடமும் ஒரு நல்ல சிறுகதை உள்ளது!”

“என்னிடம் இருப்பதெல்லாம் ஒரே ஒரு அணில்தான்!”

“சரி அதன் பெயர் சொல்லு!”

பெயர் இன்னும் வைக்கவில்லை. தோட்டத்தில் விளையாடுவேன். தயங்கி தயங்கி என் அருகே வரலாமா என்று அது யோசித்துக்கொண்டு இருக்கிறது!”

“சரி உன் பெயர் என்ன?”

“அனாமிகா நான்கூட ஏஞ்சல்!”

“அனாமிகா என்றால் அர்த்தம் தெரியுமா? பெயரில்லாதவள்!”

“எனக்குத்தான் பெயர் இருக்கிறதே!”

“ஏஞ்சல் அனாமிகாவுக்கு. அன்புடன் சுஜாதா..” என்று எழுதினேன்.

“எதாவது அறிவுரை எழுதுங்களேன்!” என்றாள்

“அறிவுரைகளை நம்பாதே!” என்றேன்

அவள் என்னை பார்த்துச் சிரித்து. “வித்தியாசமாக எதாவது எழுதுங்களேன். ஒரு பொன்மொழி அல்லது புன்னகைக்கும்படி ஏதாவ்து?” என்றாள்

“சரி. கடவுளை புன்னகைக்க வைப்பது எப்படி தெரியுமா?“

“எப்படி?“

“நம்முடைய எதிர்காலத் திட்டத்தை அவரிடம் சொல்வது!” என்றேன்.

அவள் முகத்தில் ஏமாற்றம் இருந்தது.

“சரி என்ன எழுத? சொல்!”

“நன்றாகப் படி… படித்து இங்கிலாந்து போ என்று எழுதுங்களேன்!”

அப்ப்டியே எழுதிக் கொடுத்தேன்.

“உன் மாதிரி பெண்கள் தமிழ் படிப்பதே ஆச்சரியம். சென்னையில்!”

“நான் சென்னை இல்லை மட்டக் களப்பு!”

“அனாமிகா வா நேரமாச்சு!“

எங்கிருந்து வந்தது அந்த குரல்?

“போய் வருகிறேன். அவர்கள் காத்திருக்கிறார்கள்!” என்றாள்

“ஏய்…ஏய் அந்தப் பக்கம் போகாதே!”

நான் தடுப்பதற்குள் அவள் செலுத்தப் பட்டவள் போல அலைகடலுக்குள் நுழைந்து நடந்து செல்ல ஓர் அலை எழுந்து அவளை அணைத்து பத்திரமாக வாரி அணைத்துக்கொள்ள…

மறைந்து போனாள்!

ஓர் உத்தம தினம்

ஜன்னல் வழியாக ஆதவன் தலையெடுக்கும் முன்னமேயே புல் தரையில் சிறு குழந்தை தவழ்ந்து வருகிறது. களுக்கென்று சிரிக்கிறது. அதனால் நடக்க முடியுமா என்று கவலையாக இருக்கிறது. அதற்குப் பெயர் இருக்கிறது. பறந்து வந்து விளிம்பில் உட்கார்ந்துவிட்டு அறைக்குள் சிற்றடி வைத்து இறங்கி, அவளருகில் வந்து அவள் மார்பைச் சுதந்திரமாகத் திறந்துகொண்டு, ஏங்கி ஏங்கிப் பால் குடிக்க... அதன் சின்ன விரல்கள் அவள் முலையை நெருட... உள்ளுக்குள் திகட்டிய சந்தோஷத்தைக் கலைக்க விருப்பமின்றி இன்னும் இன்னும் என்று ஒரு விளிம்பைத் தொட்டு ஒரு கணத்தில் சகலமும் வெடித்துப் புலனாகி விழித்தபோது, "நீங்களா?" என்றாள்.

சத்தீஷ் திருப்திப்பட்ட நிலையில் மல்லாந்து படுத்துக்கொண்டு புன்னகையுடன் தூக்கத்தின் இரண்டாம் பாகத்தைத் துவங்கினான். கஸ்தூரி தன் உடைகளை அவசரமாகச் சரிசெய்துகொண்டு எழுந்து, ஜன்னலைத் திறந்து சில்லென்ற காற்றிலும் சூரிய வெளிச்சத்திலும் முகத்தை அலம்பிக்கொண்டு திரும்பி நிதானமாகக் கணவனைப் பார்த்தாள்.

என் கனவில் புகுந்து என் கனவைக் கலைக்காமல் எனக்குள் நிரம்பிய என் கணவனே!

"எழுந்திருங்க" என்று தலையைக் கலைத்தாள். அவன் விழித்து அவளைப் பரிச்சயமே இல்லாத புதியவளைப் போலப் பார்த்துப் புன்னகைத்து, "ஹேப்பி பர்த்டே தில்லு! ம்ம்ம்... உன்னை வாசனை பார்க்கணும், வா!" என்று கையை விரித்து விரல்களால் அழைத்தான்.

"ம்ஹ¨ம். நான் மாட்டேம்பா. எனக்கு எத்தனையோ வேலை இருக்கு."

"ஒரு தேங்க்ஸ் முத்தம்கூடக் கிடையாதா?"

"கிடையாது."

டெலிபோன் ஒலிக்க, அதைப் படுக்கையில் இருந்தே எடுத்து ஆன்டெனாவை நீட்டிக்கொண்டு, "ஹலோ?" என்று அதட்டினான். சற்று நேரத்தில், "உனக்குத்தான்" என்று கொடுத்தான்.

”என்ன எழுந்துட்டியா, ஹேப்பி பர்த்டே” மஞ்சுவின் குரலை டெலிபோன்கூட அசைக்க முடியாது.

”தேங்க்ஸ் மஞ்சு.”

”உனக்கு என்ன வயசுன்னு கேக்கலை. வயசு முக்கியமா என்ன? இந்த வருஷமாவது பெத்துண்டுடு. ரொம்பத் தள்ளிப் போடாதே.”

”மஞ்சு, இன்னிக்குக் காலையில என் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத ஒரு கனா கண்டேன். அதை உனக்கு விரிவா சொல்லியே ஆகணும். எப்ப வரே?”

”எப்ப வேணும்னாலும் வரேன். தில்லுவோட பர்த்டேக்கு வராம இருப்பேனா? உன் ஹஸ்பண்ட் என்ன பிளான் வெச்சிருக்கார்னு கேட்டுக்கோ.”

”அவருக்கென்ன... வழக்கம்போல் ஆபீஸ் போவார்.”

சத்தீஷ் படுக்கையிலிருந்தே, ”இல்லை... இல்லை... நாமிருவரும் வெளியே போறோம்” என்று ஜாடை காட்டினான்.

”மஞ்சு, அவர் எங்கேயோ வெளியே போகப் பிளான் வெச்சிருக்கார்.”

”ஆல் தி பெஸ்ட் தில்லு. போன் பண்ணிட்டு மத்யானம், சாயங்காலம், ராத்திரி எப்பவாவது ஒரு சமயம் வந்து உன் கன்னத்தில் முத்தம் கொடுத்துட்டுத்தான் போவேன். பை தில்லு! மெனி ஹேப்பி ரிட்டர்ன்ஸ்!”

டெலிபோனை வைத்தபோது அது ‘டிரிரிக்’ என்றது பறவைபோல.

”மஞ்சுதானே! ஒழிஞ்சுதா?”

”சே! இன்னிக்கு யாரையும் திட்டக் கூடாது. அப்படிப்பட்ட நாள் இன்னிக்கு.”

அவளைப் பிடித்து இழுத்துக் கன்னத்தை உரசிக் கூந்தலுக்குள் கை செலுத்தி நிமிர்த்தி, ”ம், என்ன கனா? சொல்லு!” என்றான்.

”கையெடுங்க. சொல்றேன்.”

”எடுத்தாச்சு.”

”அந்தக் கை.”

”அதுபாட்டுக்கு அது. சொல்லு, என்ன கனா?”

”ஜன்னல் வழியா கிருஷ்ண விக்கிரகம் மாதிரி... ஐயோ, என்ன விஷமம்! நான் சொல்லமாட்டேன்.”

”சரி, இப்ப?” இடுப்பை வளைத்து அவளைத் தன்னிடம் இழுத்துக்கொண்டு முகத்துக்கு முகம் ஒரு இன்ச் பண்ணிக்கொண்டு ”ம், சொல்லு” என்று இழுத்தான்.

”ஜன்னல் வழியா தங்கக் கலர் குழந்தை வந்து அப்படியே எம் மேல படிஞ்சு உடம்பெல்லாம் முலாம் பூசினாப்ல குளுகுளுன்னு ஊர்றது.”

”மை டியர் தில்லு! அது குழந்தை இல்லை நானு! வி ஹேடு செக்ஸ்.”

”ச்சே! உங்களைப் போல எல்லாத்தையும் போட்டு உடைக்கிற ஆசாமி கிடையாது.”

இடுப்பின் உடைகளைத் தளர்த்தத் துவங்கவே, விஷயம் கவலைக்கிடமாகும் என்று கஸ்தூரி நழுவி எழுந்து பாத்ரூமுக்குச் சென்றாள்.

பல் தேய்த்து முகத்தில் தண்ணீர் தெளித்துக்கொள்ளும்போதும் உற்சாகம் மிச்சமிருந்தது. ஜன்னலைத் திறக்க வானம் மேகங்களற்று ‘விம்’ போட்டு அலம்பினாற் போல இருந்தது. கொன்றை மரத்தில் அந்த மாம்பழக் குருவியைப் பார்த்தாள். அவள் பிறந்த தினத்துக்கென்றே தனிப்பட்ட விஜயம் போல் தங்கத் தலையை வைத்துக்கொண்டு, ‘ச்சீயோ, ச்சீயோ’ என்று தேவதூதனைப் போலக் கூப்பிட வந்திருக்கிறது.

நடுவே, தெளிவாக அந்தக் குருவி அவளைத் ‘தில்லு’ என்று பெயர் சொல்லி அழைத்ததை கஸ்தூரி எல்லா கோயில்களிலும் சத்தியம்

பண்ணுவாள். நிச்சயம் இன்றைக்குப் பிறந்த தினம்தான். எனக்கு மட்டுமில்லை. எனக்குள் உத்தரவாதமாகப் புகுந்திருக்கும் அதற்கும்தான்.

சத்தீசுக்குக் காபி போட்டுக்கொண்டு போர்வையை விலக்கி, அவன் தலையைக் கலைத்து, "எழுந்திருங்க. ஆபீஸ் போக வேண்டாம்?" என்று கேட்டாள்.

"இன்னிக்கு ஆபீஸ் லீவு! உனக்குப் பிறந்த நாள் இல்லையா?"

"நாள் முழுக்க வீட்லயா இருக்கப் போறீங்க?"

"வீட்ல இருக்கலாம். வெளியவும் போகலாம். அல்லது ஏ.ஸி. போட்டுட்டுக் கட்டிண்டு படுத்துரலாம். இன்னிக்கு ராணி நீதான்."

"கோயிலுக்குப் போயாகணும்."

"ப்ரேக்ஃபாஸ்ட்டுக்கு எம்.டி.ஆர். போகலாமா?"

"முதல்ல கோயில். அப்புறம்தான் பாக்கியெல்லாம். ஜெயநகர் போய் அம்மாவையும் சரண்யாவையும் பார்த்துட்டு வந்தே ஆகணும்."

"சாயங்கால ஃப்ளைட்ல பம்பாய் போறதுக்குள்ளே முடிச்சிரணும்."

"பாம்பே போறீங்களா? சொல்லவே இல்லையே?"

"போர்டு மீட்டிங். நாளன்னிக்கு மார்னிங் ஃப்ளைட்ல திரும்பி வந்துடுவேன்."

புதுசாக கார், லாரி வாங்கினவர்கள் எல்லாம் பள்ளத்து பிள்ளையாருக்கு முன் வரிசையாகத் தத்தம் வாகனங்களை நிறுத்தியிருந்தார்கள். மல்லிகையும், அகர்பத்தியும், பட்டுப் புடவையும், இளங் காலையும், விபூதியும் கலந்து ஆரோக்கியமாக வாசனை அடித்தது. சத்தீஷ் பாசாங்கோடு மனைவியைக் கவனித்துக்கொண்டு இருந்தான். கஸ்தூரி வேண்டிக் கொண்டாள்.

"கடவுளே! ஏன் இத்தனை உத்தமமான தினம்?"

”இந்தாம்மா புஷ்பம்” என்று ஒரு சிறுவன் பளிச்சென்று திருநீறும் இந்த வயசுக்கு வேஷ்டியுமாக வந்து கொடுத்துச் சிரித்தான்.

பிளாட்ஃபாரத்தில் நடக்கையில், ”எல்லாமே நல்லபடியாக இருக்கு. காலங்கார்த்தால அந்தக் கனா, அந்தக் குருவி என்னைப் பேர் சொல்லிக் கூப்பிட்டது, இந்த அழகான பையன்....” என்று கூறினாள்.

”த பாரு, இன்னி முழுக்கவே இப்படித்தான். சொல்லிண்டிருக்கப் போறியா? மஞ்சள், குருவி, கிருஷ்ண விக்கிரகம், விநாயகர் பிரத்தியட்சம், இப்படி...?”

”நிச்சயம் எனக்கு இன்னிக்கு என்னமோ ஆயிருக்கு. உடம்பு பூரா பதர்றது.”

மாருதியில் ஏறிக்கொள்ள, ”தில்லு, உலகத்திலேயே ரொம்ப சுலபமான விஷயம் எது தெரியுமா?” என்று கேட்டான்.

”தெரியும், சொல்ல வேண்டாம்.”

”யு வான்ட் தி சைல்டு இல்லையா? வேணும்னா சந்தேகத்துக்கு சாம்பாரா வீட்டுக்குப் போய் இன்னுமொரு முறை ஊர்ஜிதம் பண்ணிரலாமா?”

”சே, புத்தி போறதே!”

ஜெயநகரில் மணிப் பொத்தானை அழுத்தியபோது சத்தீஷ், ”இதோ பாரு! அரை மணி, அதுக்கு மேல் அரட்டை கிடையாது” என்று கிசுகிசுத்தான். கதவு திறக்க, ”ஹலோ, கர்னல்!”

அப்பாவைத் தாரிணியின் குழந்தைகள் உள்பட எல்லோரும் ‘கர்னல்’ என்றுதான் கூப்பிடுவார்கள்.

கஸ்தூரியைப் பார்த்ததும் கட்டிக்கொண்டு உச்சியில் முத்தம் கொடுத்து, ”ஓ மை ஸ்வீட் தில்லு, ஹேப்பி பர்த்டே” என்றார்.

”தேங்க்யூ கர்னல்.”

”இங்கிலீஷ் தேதிப்படி லெவன்த் செப்டம்பர், இன்னிக்கு உனக்கு 25. நீ பிறந்தப்ப விஜயவாடா டூர் போயிருந்தேன் கிருஷ்ணா ரிவர்ல வெள்ளம் அதிகமாயி ரயில் எல்லாம் குளோஸ் பண்ணிட்டான். டக்கோடா ஃப்ளைட்டைப் பிடிச்சுக் காலங்கார்த்தால வந்துட்டேன். தில்லு டியர்! பெரி யாழ்வார் பாசுரம் சொல்லிண் டிருக்கியா?”

”தவறாம! தினம் பெரியாழ்வாருக்காகத்தானே நான் எழுந்திருக்கிறேன்” என்றான் சத்தீஷ்.

”தட்ஸ் மை கேர்ள். சின்ன வயசிலேயே நாலாயிரமும் ஒப்பிப்பா. மாப்பிள்ளை, இவ முழுப் பேர் கஸ்தூரி திலக்கா. நாங்க எல்லோரும் தில்லுன்னுதான் கூப்பிடுவோம். கஸ்தூரின்னு பேர் எப்படி வந்ததுன்னு தெரியுமா?”

”கர்னல் இதை என்கிட்டேயே முப்பது தடவை சொல்லியாச்சு” என்றான் சத்தீஷ்.

கஸ்தூரி, கணவனை முறைக்க... அவன் கடிகாரத்தைச் சுட்டிக் காட்டினான். ”வர்றோம் கர்னல்” என்றான்.

”சேச்சே, லஞ்ச் சாப்பிட்டுட்டுதான் போறீங்க!”

”தேர் கோஸ் மை எம்.டி.ஆர்.”

”அம்மா, நீங்க சும்மாருங்கோ. அவா வேற ஏதாவது பிளான் போட்டு வெச்சிருப்பா” என்று இடைமறித்தாள்.

அம்மா தனியாகக் கூப்பிட்டு, ”இன்னும் குளிக்கிறியா?” என்றாள்.

”ஆமாம்மா.”

”எல்லாம் போறும். அப்புறம் நாளாயிருந்துன்னா பிற்காலத்தில் வளர்க்கிறது கஷ்டம். இந்தப் புரட்டாசிக்கு இருபத்தஞ்சு முடிஞ்சுர்றது உனக்கு.”

அப்பா வந்து, ”தில்லு, மாப்பிள்ளை டூர் போறாராமே. இங்கே வந்து இரேன்?” என்றார்.

”இல்லைப்பா, ராத்திரி துணைக்கு வேலைக்காரப் பொண்ணு வரும். செக்யூரிட்டி இருக்கு. சௌக்கிதார் இருக்கான்.”

”எங்காத்திலெல்லாம் வந்து படுத்துப்பியா, ரிச் கேர்ள்.”

”அப்படி இல்லைப்பா. இவர் இல்லாதபோதுதான் வீட்டை ஒழிக்க முடியும்.” முக்கிய காரணம் அதில்லை. தனியாக வீடியோ பார்க்க வேண்டும் என்று தில்லு தீர்மானித்துவிட்டாள்.

ரேஸ் கோர்ஸ் வழியாக ஆபீசுக்கு வந்து பதினைந்து நிமிஷம் என்று சொல்லிவிட்டுச் சென்றான். பேண்ட் வாத்தியமும் பொய்க்கால் குதிரையுமாக கணேசா ஊர்வலம் ஏரியில் முங்குவதற்காக டெம்போவில் சென்றுகொண்டு இருக்க, பொய்க்கால் குதிரைக்காரன் கூலிங் கிளாசும், பொய்த் தாடியும், ஜிகினா ஜிப்பாவுமாக அவளைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போனான்.

சத்தீஷ் திரும்பி வந்து, ”முக்கியமா மூணு ஃபைல் பார்த்துட்டேன். ஏர் டிக்கெட் கன்ஃபார்ம் ஆயிடுத்து. சாயங்காலம் வரை நாம ஃப்ரீதான். எங்கே போகணும் சொல்லு?” என்றான்.

”எங்கேயாவது!”

”சரி லெட்ஸ் கோ டு ‘எங்கேயாவது’....”

ஸோஃபியா கான்வென்ட்டின் ஆரோக்கியமான ‘ஹன்’களும் கூட்டம் கூட்டமாகச் சட்டை அணிந்த ஆயிரம் உற்சாகப் பெண்களும்... நீச்சல் குளத்தில் உன்னதமாகக் குதித்த ஒரே இளைஞன். மரத்தடியில் டிராஃபிக் சந்தடியில் படுத்துத் தூங்கிக்கொண்டு இருந்த உழைப்பாளி. கீரை விற்றுக்கொண்டு இருந்த கறுப்புப் பெண்ணின் அருகில் சாக்கின் மேல் தூங்கிக்கொண்டிருந்த தேவதைக் குழந்தையின் அரைஞானில் முடிந்திருந்த தாயத்து. இந்த சுசுகியில் ஒரே மாதிரி ஜீன்ஸ் அணிந்து பையனும் பெண்ணும் எல்லோருமே சந்தோஷமாக இருக்கிறார்கள் என்னைப் போல.... என்னைப் போல.

ஏன் இந்தத் திகட்டும் சந்தோஷம்? விண்ட்சர் மேனரில் ஐஸ்க்ரீம் புடிங் வகைகளிலேயே பத்து தினுசு சாப்பிட்டாள். பெங்காலி போலிருந்த இளைஞன் சின்தஸைஸர் டிரம் அடிக்க... மைக்கை முழுங்குகிற மாதிரி

வைத்துக்கொண்டு ஸ்டீவி வாண்டர் பாடினான்.

மிக அழகான ஒரு வெயிட்டர் இளைஞன் அவளருகில் பூச்செண்டு கொண்டுவந்து, "மேடம்! ஹேப்பி பர்த்டே" என்றான். ஆச்சர்யப்பட்டு சத்தீஷைப் பார்க்க, அவன் மனோகரமாகக் கண்ணடித்தான். அந்த மலர்க் கொத்து செலஃபன் தயவில் புதுசு கலையாமல் அவளை அணைத்துக்கொண்டது. பக்கத்து டேபிள் குண்டுகுழந்தை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தது. இவள் 'வா' என்று அழைத்ததும் ஓடி வந்துவிட்டது.

"பிங்க்கு பேட்டே இதர் ஆவோ."

'லேஸ் மேக்கர்' போக வேண்டாம் என்று கப்பன் பார்க்கில் கொஞ்ச நேரம் லைப்ரரியில் உலவிவிட்டு, ஒரு கவிதைத் தொகுப்புடன் வெளியே வந்து, மண்டபத்தின் அருகில் மர அடர்த்தியின் கரும் பச்சை நிழலில் ஒரு பெஞ்ச் காலியாக இருக்க, அதில் அவள் உட்கார்ந்துகொள்ள அவள் மடி மேல் தலைவைத்து,

"ஜென்னி கிஸ்ட் மீ படிக்கட்டுமா?"

"படிங்க."

"ஜென்னி என்னை முத்தமிட்டாள் சட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்து வந்து! காலம் என்னும் கள்ளனே! உன் பட்டியலில் எத்தனையோ இனிய விஷயங்களைச் சேர்த்துக்கொள்ள விரும்புகிறாயே, இதையும் சேர்த்துக்கொள். நான் களைத்திருக்கிறேன் என்று சொல். நான் சோகமாக இருக்கிறேன் என்று சொல். ஏழை என்று சொல். உடல் நலமில்லை என்று சொல். வயசாகிக் கொண்டிருக்கிறேன் என்று சொல். ஆனால், ஜென்னி என்னை முத்தமிட்டாள் என்பதையும் சொல்."

பிற்பகலின் அமைதியில் தூரத்தில் நகரத்தின் சந்தடி கேட்க மடி மேல் கணவனை அமைதியாக அழுத்திக்கொண்டு அவன் முகத்தையே ஒரு மணி நேரம் பார்த்துக்கொண்டு இருந்தாள். நிச்சயம் இன்றைக்குத்தான் நிகழ்ந்திருக்கிறது!

இரண்டு நாளுக்காக மெத்தென்ற பெட்டியில் அவன் சூட், வெள்ளை

வெளேர் சட்டைகள், அவன் மாத்திரைகள், ஷேவிங் சாதனங்கள், ஆஃப்டர் ஷேவ் லோஷன், தங்க விளிம்பிட்ட சீப்பு, ஆண் பிள்ளை கர்ச்சீப், அவன் ஃபைல்கள் எல்லாவற்றையும் அடுக்கிவைக்கையில், குறும்பாகத் தன்னுடைய 'ப்ரா' ஒன்றையும் இடையில் செருகி மூடினாள்.

பம்பாய் ஃப்ளைட் எட்டரைக்குத்தான் கிளம்பும் என்றார்கள். பேப்பர் கப்பில் சத்தீஷுடன் காபி சாப்பிட்டுவிட்டு இருவரும் புத்தகம் பார்த்தார்கள். ஏர்போர்ட் ஜனங்களை வேடிக்கை பார்த்தார்கள். குல்லாயும், தொப்பியும், குங்குமமும், இடது பக்கம் ஸாரியும், அரசியலும், சூட்டும் கோட்டும், வெற்றியும், சவரம் செய்த பச்சை முகங்களும், நாசூக்கான அழுகைகளும்...

"நான் களைத்திருக்கிறேன் என்று சொல், ஏழை என்று சொல், உடல் நலமில்லை என்று சொல், வயசாகிக்கொண்டிருக்கிறேன் என்று சொல், சத்தீஷ் என்னை முத்தமிட்டான் என்பதையும் சொல்."

செக்யூரிட்டி கேட்டில் நுழையுமுன் சத்தீஷ் திரும்பிக் காற்றில் 'கேஸி' என்று வரைந்துகாட்ட, அதன் அந்தரங்க அர்த்தம் அவள் கன்னங்களில் ரத்தம் பாய, கண்ணாடிக்குப் பின்னாலிருந்து சின்னதாக நாலு விரல் டாட்டா காட்டிவிட்டு மறைந்தான்.

மாருதியை பேஸ்மென்ட்டில் நிறுத்திவிட்டு, கதவைத் தன் சாவியால் திறந்து உள்ளே வந்து உடை மாற்றி, படுக்கையறைக்குச் சென்று, பசியின்றி ஒரு சாண்ட்விச் தயாரித்து, 'விசிஆரை' இணைத்து, கல்யாண கேஸட்டை நுழைத்து, ரிமோட் கன்ட்ரோலை எடுத்து, மூன்று தலையணைகள் அமைத்து, விளக்கைத் தணித்துவிட்டு, 'ப்ளே' பொத்தானை அழுத்தினாள்.

எதிரே டெலிவிஷன் திரையில் மறுபடி சத்தீஷைக் கல்யாணம் செய்துகொள்ள ஆரம்பித்தாள். சத்தீஷ் சின்னப் பையன் போல கன்னத்தில் மை, நெற்றியில் அலையும் தலைமயிர், மஞ்சள் சரிகை வேட்டியில் பஞ்சகச்சம், அசௌகரியத்தில் வாத்தியாரைக் கனவுக் கண்களுடன் பார்த்துக்கொண்டே, அவ்வப்போது சாஸ்திரத்துக்கு மந்திரம் சொல்ல, கண்கள் மையிட்ட கண்கள் அலைய சத்தீஷ் எவ்வளவு அழகாக இருக்கிறான்.

நெற்றியில் அம்மா அவனுக்குப் பொட்டு இடுகிறாள். அத்தை, சித்தி, தாரணி, பேபி அம்மா எல்லாரும் மஞ்சள் நீரை இறைத்துக்கொண்டே சுற்றிச் சுற்றி வருகிறார்கள். கால் அலம்பிப் பாய் மேல் வைக்கிறார்கள். சத்தீஷ் கட்டை விரலைப் பிடித்துப் படிப் படியாகச் சம்பந்தாசம்பந்தமில்லாமல் பேசுகிறான். என்னைவிட சத்தீஷ்தான் நெர்வஸ்.

கர்னலின் மடியில் உட்கார்ந்திருக்க என்னை நெற்றியில் எங்கோ பார்க்கிறான். தாலி கட்டிய பின் அம்மாவின் கண்களில் கண்ணீர். எல்லோருமே கட்டிப் பிடித்துக்கொண்டு, கை குலுக்கிக்கொண்டு, இது என்ன புது வழக்கம்?

ரிசப்ஷனில் ஜெயராமன் கச்சேரியில் சிமென்ட் கலர் சூட்டு போட்டு நிற்க, மத்தியானத்திலிருந்து ப்யூட்டீஷியன் எனக்குச் செய்த அலங்காரம் எனக்குப் பிடிக்கவே இல்லை. ஏதோ விக்ரமாதித்தன் பதுமை மாதிரி, அலுங்காமல் ஆயில் மேக் அப் என்று எண்ணெய் வழிந்துகொண்டு...

வீடியோ முடிந்து கீற்றல் வந்த பின்னும் சற்று நேரம் திரையையே பார்த்துக்கொண்டு இருந்தாள். பின் அணைத்தாள்.

”அன்புள்ள கடவுளே, நான் உனக்கு எப்படி இந்த மகத்தான, உத்தமமான தினத்துக்கு வந்தனம் சொல்ல வேண்டும்? ஏன் இத்தனை சந்தோஷம்? ஏன் இத்தனை வெளிச்சம்? ஏன் இத்தனை உற்சா கம்? ஏன் இப்படி ஒரு ஸ்படிக சுத்தமான தினம்? தயவுசெய்து இதற்கு மேல் சந்தோஷம் தராதே. தாங்காது. எனக்கு இது போதும். இது போதும்!”

கஸ்தூரி தூங்கிப் போய்ப் பத்து நிமிஷத்தில் டெலிபோன் ஒலித்தது

****

பூனை

ரயில் பயணத்தின் போது ஏற்படும் அனுபவங்கள் சில மறக்க முடியாதவை. கீழ் வரும் அனுபவத்தைச் சந்தோஷமா, சங்கடமா என்று நீங்களே தீர்மானியுங்கள்.

ஒரு முறை பெங்களூரிலிருந்து சென்னை வரை பிருந்தாவனில் பயணம் செய்தபோது, ஒரு மாமா எதிர் ஸீட்டில் உட்கார்ந்துகொண்டு என்னையே ஐந்து மணி நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் தாங்க முடியாமல் அரக்கோணம் தாண்டியதும் கேட்டேவிட்டேன்.

“உங்களுக்கு ஏதாவது பேசணுமா ?”

“இல்லை....” என்று தலையாட்டினார்.

ஒருவேளை ஊமையோ என்றால், ஜிலேபிகாரரிடம் சில்லறை கேட்டு வாங்கும்போது பேசியிருக்கிறார்.

“ஏன் என்னையே பார்த்துண்டிருக்கீங்க ?”

“நீங்கதானே இந்தக் கதையெல்லாம் எழுதறவர் ?” என்று கையில் மானசீகமாக எழுதிக் காட்டினார்.

“ஆமாம்....” என்றேன்.

“அந்தப் பூனையை அந்தக் கதையில ஏன் ஸார் சாகடிச்சீங்க ?”

“எந்தப் பூனையை எந்தக் கதையில ?”

“உங்க கதைகளைப் படிக்கறதையே அதுக்கப்புறம் நிறுத்திட்டேன்....”

“எந்தப் பூனை ?”

“ஒரு படப்பிடிப்பில் கறுப்புப் பூனை....”

எனக்குச் சட்டென்று கதை ஞாபகம் வந்தது. படப்பிடிப்புக்காக எடுத்துச் சென்ற பயிற்சி பெற்ற பூனை, வில்லனைப் பிறாண்டி விடுவதால், அதன் ஓனர் அதை.... வேண்டாம், நீங்கள் படித்திருந்தால் you get the idea . "அந்தப் பூனை உங்களை என்ன பண்ணித்து ? எதுக்காக வாயில்லா ஜீவனைப் போய்க் கொன்னீங்க ?" என்று அவர் கேட்ட போது அவர் கண்களில் நீர் ததும்பியது.

"பூனையைப் பத்தி என்ன ஸார் தெரியும் உங்களுக்கு ? எத்தனை மில்லியன் வருஷங்களா அது மனிதனோட வாழறது தெரியுமா ? கிளியோபாட்ரா காலத்தில் அதைத் தெய்வமா மதிச்சாங்க. எத்தனை வருஷமானாலும் ஒரு பூனையால மனிதனைச் சாராமல் வாழ முடியும், தெரியுமா ?"

நான் மையமாகப் புன்னகைத்தேன்.

"நீங்க அதைக் கொன்னிருக்கக் கூடாது. அதை அவன் ரோட்டுல விட்டிருந்தாக் கூட, எங்கேயாவது பிழைச்சுப் போயிருக்கும்...."

"வீட்டுக்குத் திரும்பி வந்துடுமே ஸார் ?"

"அதைவிட்டு சுவத்துல.... சொல்லவே கூச்சமா இருக்கு. கிராதகன் ஸார் நீங்க! அஞ்சு மணி நேரமா உங்களை என்ன பிராயச்சித்தம் பண்ண வைக்கலாம்னு யோசிச்சிண்டிருந்தேன். நீங்க உங்க கதைல பூனையை ஒரு அதிர்ச்சிக்காகக் கொன்னிருக்கீங்க. எங்காத்துல எட்டுப் பூனையை வளர்த்தவன் நான். எவனும் அப்படிச் செய்ய மாட்டான்."

தனது மஞ்சள் பையில் கை விட்டு எதையோ ஆராய்ந்தார். எனக்குத் திக்கென்றது. ஆயுதம் தேடுகிறாரா, என்ன?

"ஸாரி... நான் பல கதைகளில் பல மிருகங்களைக் காப்பாற்றியிருக்கிறேன். எனக்கு மிருகங்கள்னா பிரியம். இந்தக் கதையில் அவனுடைய ஆத்திரத்தின் வெளிப்பாடு...."

"வெளிப்பாடாவது, உள்பாடாவது..." அவர் சமாதானமாகவில்லை.

வண்டி சென்ட்ரலில் வந்து நின்றதும், "நீங்க கொன்ன அந்தப் பூனைக்கு ஒரே ஒரு ப்ரீத்தி பண்ணிடுங்கோ. ஒரு எய்ட் அண்ட்ரட் ருப்பீஸ்

செலவழிச்சா, அந்த ஜந்துவைக் கொன்ன பிரம்மஹத்தி உங்களைத் துரத்தாது. ஏற்பாடு பண்ணவா ?”

“என்கிட்டே எய்ட் அண்ட்ரட் இல்லை…”

“செக்கா கொடுத்தாலும் பரவாயில்லை….”

எப்படித் தப்பித்தேன் ?

“ஒண்ணு பண்ணுங்க…. அது என்ன பூஜைன்னு சொல்லுங்கோ…. எனக்குத் தெரிஞ்ச வாத்தியாரை வெச்சிண்டு பண்ணிடறேன்…..”

அவர் என்னைக் கடைசி வரை சபித்துக் கொண்டுதான் சென்றார்.

அதிலிருந்து கதைகளில் நான் பூனைகளைக் கொல்வதில்லை.

********** *

வழி தெரியவில்லை!

ஒரு சினிமா பார்ப்பதற்காக சபர்பன் ரயில் மார்க்கத்தில், பெயர் தெரிவிக்க முடியாத அந்த ஸ்டேஷனில் நான் இறங்கினேன். படம், நான் சென்னையில் தப்பவிட்ட படம். ஊரெல்லாம் சளைக்காமல் ஓடி ஓய்ந்துவிட்டு மொபஸலில் ஓடிக்கொண்டு இருந்தது. நல்ல படம் என்று நண்பர்கள் வற்புறுத்திப் பார்க்கச் சொன்னார்கள்.

அதைத் துரத்திக்கொண்டு அந்த ரயில் நிலையத்தில் மாலை இறங்கினேன். பெயர் சொல்ல மாட்டேன். நண்பர்கள் வழி சொல்லியிருந்தார்கள். ‘லைனோடு நட, லெவல் கிராஸிங்கில் சாக்கடையைத் தாண்டு, பஞ்சாயத்து அலுவலகத்தில் திரும்பி நேராக நட, கடைத் தெருவெல்லாம் தாண்டினால் ஒரு சென்ட் கம்பெனி வரும். வாசனை அடிக்கும். அங்கே இடது பக்கம் திரும்பி, கல்லெறிகிற தூரம் நடந்தால் நெல் வயல் வரும். அதற்கு முன் கொட்டகை தென்பட்டுவிடும்’ என்று.

தென்பட்டது.

தென்னங்கீற்று சிங்கிள் ப்ரொஜக்டர் சோடா கலர் கை முறுக்(கு)

கொட்டகை. டிக்கெட் வாங்கி உள்ளே போய் உட்கார்ந்தேன். ஒரு நாய், காலடியில் ஓடியது. கொசு, காதடியில் பாடியது. காஞ்சனா ஈஸ்ட்மென் கலரில் சிரித்...

ஆனால், இந்தக் கதை அந்த சினிமாவைப் பற்றியது அல்லவே. சினிமா பார்த்துவிட்டு நான் ஸ்டேஷனுக்குத் திரும்பியபோது, எனக்கு ஏற்பட்ட விநோத அனுபவத்தைப் பற்றியது. படம் சற்று நீளமான படம். முடிந்து திரும்பும்போது, எனக்கு நல்ல பசி. கடைசி ரயிலைத் தவறிவிடப் போகிறேனே என்கிற கவலை. மாம்பலத்துக்குப் போய்ச் சப்பாத்தி சாப்பிட்டுக்கொள்ளலாம் என்று வேகமாக நடந்தேன்.

வந்த வழி ஞாபகம் இருந்தது. அப்படித்தான் நினைத்துக்கொண்டு இருந்தேன். இரவின் இருள் காரணமோ, அந்தத் தெருக்களின் பின்னல் காரணமோ, வழி தவறிவிட்டேன். போகிறேன்... போகிறேன்... ஸ்டேஷனையே காணோம்.

நான் கவலைப்பட ஆரம்பித்தேன். ஏதோ ஒரு கடைத் தெருவுக்கு வந்துவிட்டேன். அது நான் மாலையில் நடந்த கடைத் தெரு போல இல்லை. அப்போதுதான் நான் தனியாக இலக்கில்லாமல் நடந்துகொண்டு இருப்பதை உணர்ந்தேன். கடைகள் மூடியிருந்தன. ஓட்டல்களில் நாற்காலி கள் மேஜை மேல் கவிழ்ந்திருந்தன. வெளியே பலர் தூங்கிக்கொண்டு இருந்தனர்.

வழி கேட்பதற்கு எங்கும் தென்படவில்லை. தனியாக வந்தது தப்பு. என் நடை தயங்கியது. சற்று வியர்த்தது.

நல்லவேளை, எதிரில் ஒரு சைக்கிள் ரிக் ஷாகாரன் தென்பட்டான். அவன் தூரத்திலிருந்து சாலையின் சரிவில் இயல்பாகப் பெடல் செய்யாமல் ஒரு சினிமா பாட்டுப் பாடிக்கொண்டு வருவது தெரிந்தது. அவனை நிறுத்தி ஸ்டேஷனுக்கு வழி கேட்டேன். ரிக் ஷாவையும் பாட்டையும் நிறுத்தினான்.

"ஸ்டேஷனுக்கா?" என்றான் ஆச்சர்யத்துடன். தெரு விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் என் னைப் பூராவும் பார்த்தான். அவன் பார்த்த பார்வையை என்னால் இனம் கண்டுகொள்ள முடியவில்லை.

"ஸ்டேஷனுக்குப் போகறதுக்கு இங்கே வந்தியா?" என்றான்.

”ஏன்?”

”வழி தப்பு.”

”வழி எது?” என்றேன்.

”நேராப் போ. லெஃப்ட்ல ஒடி. ஆனா, உனக்கு ஜாஸ்தி டயமில்லையே... மணி என்ன இப்ப?”

சொன்னேன்.

”கடைசி வண்டி போய்டுமே? உன்னால நடந்து போக முடியாது. வா, நான் குறுக்கு வழில போறேன், ஏறு. 12 அணா கொடு. ஒரே மிதியா மிதிக்கிறேன்.”

பன்னிரண்டு அணா என்ன, பன்னிரண்டு ரூபாய் கொடுக்கத் தயாராய் ஏறிக்கொண்டேன். அவன் மிதித்தான். சைக்கிள் ரிக் ஷாவை ஒடித்துத் திருப்பி நான் எந்த வழியாக வந்தேனோ, அந்த வழியாகச் செலுத்தினான். எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

”இப்படியா போகணும்?” என்றேன்.

”அஆ” என்றான். அவன் செய்த சப்தத்தை ஏறக்குறைய அப்படித்தான் எழுத முடியும்.

கடைத் தெருவிலிருந்து விலகி நேராக ஒரு சந்தில் சரிந்தான். சந்தில் இருட்டாக இருந்தது. தன் சினிமாப் பாட்டைத் தொடர்ந்தான். மெட்டு மட்டும்தான். வார்த்தைகளுக்குப் பதில், தந்தானே தானே... பாட்டை நிறுத்தி விட்டான். கேட்டான், ”அவசர மாப் போகணுமா?”

”ஆமாம்” என்றேன். ”ஏன்?”

”இல்லை, சும்மா கேட்டேன்” மறுபடி... ‘தந்தானே தானே.’

என் பயம் சற்று அதிகமாகியது.

ரிக் ஷா சென்றுகொண்டு இருந்தது. மறுபடி ஒரு சந்தில் ஒடித்தது.

ஏன் பயப்படுகிறேன் என்று யோசித்துப் பார்த்தேன். அடுத்து நடக்கப்போவது என்ன என்பது தெரியாததால், இருட்டால், அந்தப் பாழாய்ப் போகிற பாட்டால்.

என்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்று யோசித்தேன். ரூபாய் முப்பதோ என்னவோ. ஆனால், ரிஸ்ட் வாட்ச்? மோதிரம்?

அவன் என்னை எங்கு அழைத்துச் செல்கிறான்?

சற்று நேரத்தில் எனக்குத் தெரிய வந்தது. ஒரு வீட்டின் எதிரே ரிக் ஷாவை நிறுத்தினான். இறங்கிவிட்டான். ரிக் ஷாவின் முன் பக்கத்தின் விளக்கை ஊதி அணைத்தான். "இரு வரேன்" என்று சொல்லிவிட்டு, அந்த வீட்டின் கதவை மெதுவாகத் தட்டினான். தட்டின தினுசில் ஒரு சந்தேகம் இருப்பதாக எனக் குப் பட்டது.

அவன் மெதுவாக, "சொர்ணம்" என்று கூப்பிட்டது கேட்டது.

உள்ளே இருந்து "யாரு?" என்று கேட்டது.

பெண் குரல்.

"நான்தான் கோபாலு."

சலங்கைச் சத்தம் கேட்டது. இல்லை, அது வளையல் சத்தம். கண்ணாடி வளையல்கள்.

கதவு திறந்தது. எண்ணெய் போடாத கதவு. கையில் அரிக் கேன் விளக்குடன் அந்தப் பெண் நின்றுகொண்டு இருந்தாள். சுமார் இருபது வயதிருக்கும். பெரிய வட்டமாகக் கறுப்பில் பொட்டு, தூக்கத்தில் கலைந்த உடை.

"வந்துட்டியா? நான் ரொம்ப...." என்னைப் பார்த்துவிட்டாள். அவள் குரலை உடனே தாழ்த்திக்கொண்டாள். என்னவோ அவனைக் கேட்டாள்.

கதவு பாதி திறந்திருந்தது. அவள் என்னிடம் "வாங்க" என்றாள்.

”என்னப்பா?” என்றேன் சைக்கிள் ரிக் ஷாவில் உட்கார்ந்திருந்த நான். எனக்கு வேறு வார்த்தை கிடைக்கவில்லை. தொண்டை அடைத்திருந்தது.

”சும்மா போ! அட!” என்றான்.

அந்த ரிக் ஷாவில் நான் ஏறிக்கொண்டதிலிருந்து நடந்த சம்பவங்கள் எல்லாவற்றிலும் ஏன், அதற்கு முன் நான் சினிமா பார்க்கத் தனியாக வந்ததில்கூட ஏதோ ஒரு தவிர்க்க முடியாத தன்மை இருந்ததாக எனக்குப்பட்டது. என்னதான் நடக்கப்போகிறது, பார்த்துவிடலாமே என்று நான் துணிந்திருக்கலாம்....

நான் அவள் பின் அந்த வீட்டுக்குள் சென்றேன்.

அந்தப் பாதி திறந்த கதவைக் கடந்ததும் உள்ளே நீண்ட வழிநடை தென்பட்டது. அதன் இறுதியில் இருந்த கதவை நோக்கி அவள் சென்றாள்.

கதவை அடைந்து, அதைத் திறக்காமல் எனக்காகக் காத்திருந்தாள் அவள். நான் சற்று தூரத்தில் தயங்கினேன்.

”வாங்க” என்றாள் பொறுமை இல்லாமல்.

சென்றேன்.

நான் வரும் வரை காத்திருந்து, வந்ததும் சரேல் என்று அந்தக் கதவைத் திறந்தாள்.

என் மேல் குளிர்ந்த காற்று வீசியது.

”அதோ பார், அதான் ஸ்டேஷன். போ!” என்றாள்.

********** **

ரிசப்ஷன் **2010**

ஆறரைக்கு ரிசப்ஷன் என்று ராமலிங்கத்தின் வி-மெயில் அறிவித்தது. ஏழரைக்கு ஏர்போர்ட்டில் ஒரு ஐகான் இருந்ததால், ஆறு பதினாலு நாற்பத்தேழுக்கே புறப்பட்டுவிட்டேன். ஹாலந்தில் இருந்து ட்யுலிப் மலர்க்கொத்து காரில் காத்திருந்தது. ராமலிங்கத்துக்குப் பிடித்த பானமான 'மே 22' ஒரு காஸ்க் கொள்ளை விலை கொடுத்து வாங்கி வைத்திருந்தேன். கல்யாணத்துக்குப் பொருந்தாத பரிசுப்பொருளோ என்று யோசித்தேன். வேறு என்ன கொடுப்பது?

எல்லாப் புத்தகங்களும் வலையில் உள்ளன. ராஜேஸ்வரியருகில் பார்க்கிங் இருப்பதாக ஜிபிஎஸ் சொன்னது. மாடி எண்ணை பைக் கணினி மனப்பாடம் செய்துகொண்டதற்கு அறிகுறியாக பீப்பியது. லிஃப்ட்டில் இறங்கி க-மண்டபத்தில் நுழையும்போது Aruna weds Ramalingam என்று பாலிமர் எழுத்துக்கள் பொருத்திக் கொண்டிருந்தார்கள். சீக்கிரம் வந்துவிட்டதால் மெள்ள நடந்தேன்.

மணமக்களின் மேடை காலியாக இருந்தது. ஆர்க்கெஸ்ட்ரா ஸின்தரானைச் சுருதி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ரிசப்ஷன் பெண்கள் நீல ரோஜா மலர்களையும், லோ காலரி கல்கண்டையும் தட்டில் அமைத்துக் கொண்டிருந்தார்கள். அதில் ஒருத்தி குஜராத்தி உடையில் சூப்பராக இருந்தாள். பழக்கதோஷத்தில் "நீங்க ராமலிங்கத்துக்கு உறவா?" என்று கேட்டேன்.

"இல்லைங்க... நாங்க கன்ட்ரோல்ல டைனமிக்ஸ் ஹாஸ்டர்ஸ்ங்க..!"

போச்சுடா, ரோபாட்!

இப்போதெல்லாம் மனிதர்க ளுக்கும் இயந்திரங்களுக்கும் வேறுபாடே இல்லை. கன்னக்குழி கூட அப்படியே செய்கிறார்கள். உரித்துப் பார்த்தால்தான், அந்தரங்க முடி அக்ரிலிக் என்று தெரியும். ஒருமாதிரி லூபாயில் வாசனை வரும்.

அந்தப் பெண் 'களுக்' என்று சிரித்தாள். அதைப் பார்த்தால் கவியரசு கணிதாசன் சொன்னது போல, "ஏமாந்த கவிஞர்கள் எழுநூறு கவிதை செய்வர்!"

ஏகதேசம் காலியாக இருந்த ஹாலில் போய் வீற்றேன்.

”ஹாய்ஸ்ஸ்ஸத்யா... என்ன இவ்வளவு சீக்கிரம்...?” என்றபடி வந்தான் ராமலிங்கம். கருநீல சூட் அணிந்து, ஸ்ப்ரே தெளித்து வாரி யிருந்தான். கல்யாணத்துக்கென்று முடியை வைக்கோல் நிறத்துக்கு மாற்றியிருந்தான். மூக்கைத் திருத் தியிருந்தான்.

”எங்கே, வாழ்க்கைப் படகில் உன்னோடு துடுப்புப் போடப் போகிற அருணா..?”

”அருணாவுக்குத்தான் காத்துக் கிட்டிருக்கேன். கமான்... வாழ்க் கைப் படகு, துடுப்பு... என்னடா ‘ரொமான்டிக்’காயிட்டிருக்கே..? நீயும் கல்யாணம் பண்ணிக்கணுமா..? அம்மாகிட்டே சொல்லவா?”

”ச்சே! ‘ராமலிங்கம் கல்யாணத்துக்கு ஒப்புக்கிட்டானா’னு அம்மா ஆச்சரியப்பட்டுப் போயிட்டா. முதல்ல எப்ப சந்திச்சே..?”

”போன வாரம் நம்ம வெங்கி கல்யாணத்துல... லவ் அட் ஃபர்ஸ்ட் மில்லி செகண்ட்! ஒரே ரசனை, ஒரே சாப்பாடு, ஒரே கணிபாஷை எல்லாம். பிடித்த கவிஞர்கள்கூட ஒரே ஒரே... நூறாண்டு காலம் ப்ராஸ்தெட்டிக் வாழ்க்கை வாழ உத்தேசம்..! எக்ஸ்க்யூஸ் மி, அலங்காரமெல்லாம் ஆயிடுச்சுனு நினைக்கிறேன். நீ நேர்ல வர முடிஞ்சதுக்குச் சந்தோஷம். எல்லோரும் வி-மெயில்லயே நழுவறாங்க. ஒரு நிமிஷம்... அழைச்சுட்டு வந்துர்றேன்...”

மெள்ள மெள்ளக் கூட்டம் சேர ஆரம்பிக்க, ராமலிங்கம் அதில் மறைந்தான். வாசலை நோக்கி விரைந்தான். நான் அருணாவைப் பார்க்க ஆவலாகக் காத்திருந்தேன். ராமலிங்கத்தின் மனதைக் கவர்வது அத்தனை எளிதல்ல. எல்லாவற்றிலும் வித்தியாசமானவன். கணிமேதை. மேடைக்குச் செல்லும் முன், ஒரு முறை தெரிந்தான்.

கடிகாரம் ‘ஆறு நாற்பது முப்பது’ என்றது. ‘காலம் பொன்னானது’ என்று போதனை வேறு.

”ஷட் அப்..!” என்றேன்.

”ஏர்போர்ட்டில் ஏழரைக்கு இருந்தாகணும். ப்ளேன் லேட்டாவதில்லை. என் கடமை சொல்ல வேண்டியது...”

”வர வர உனக்குப் பிரசங்கம் அதிகமாகிவிட்டது. ஒரு நாள் உன் ஆக்ஸிலியரி மெமோரியை நோண்டிவிடப்போகிறேன்...”

”நஷ்டம் உனக்குத்தான்; நானூறு ஷா. இன்னும் தவணையே முடியவில்லை” என்றது.

ராமலிங்கம் நண்பர்கள் சூழ வந்தான். அவன் பின்னால் மறைந்திருந்த அருணாவைப் பார்த்தேன். கண்ணுக்கு மை தீட்டி, கன்னத்தில் சிவப்பு ஒத்தி, ஒரு வாட்டசாட்ட தேவதை போல...

வெயிட் எ மினிட்!

”அருணா... சொன்னேன் பார்த்தியா, இது என் அருமை நண்பன் சத்யா...”

நெருங்கினேன்.

”ஹாய், ஐம் அருணாசலம்!”

அவன் கைகுலுக்கல் மென்மையாக இருந்தது.

********** **

சிவப்பு மாருதி

சித்ராவின் கல்யாணத்துக்காக மிக உற்சாகமாகத் துவங்கிய பயணம் மெள்ள மெள்ள ஒரு கெட்ட கனவாக மாறியது. பெங்களூரிலிருந்து சென்னைக்கு ஆயிரத்தெட்டு ரயில்களும், பஸ்களும் இருக்க, இவருக்கு, எல்லாருக்குமே பிக்னிக் போல காரில் போகலாம் என்று தோன்றியது விதிதான்.மூர்த்தி வீட்டில் அம்மா ஒரு மணி நேரம்கூட இருக்க முடியாதது என்று சொல்லி விட்டாள். "எல்லோருமே மாருதியில் போக முடியுமா?" என்று சொல்லிப் பார்த்தேன். "முன்னால் ஜெயந்தியும், அவள் மடியில் குமாரும் உட்காரட்டும். பின்னால் நீ, அம்மா, பாலாஜி. அவ்வளவுதானே " என்று எளிதாகச் சொல்லி விட்டார்."எல்லாம் சரிதான் அப்பா. பயணம் பூரா பாபநாசம் சிவன் பாட்டாகப் பாடி அறுப்பீங்களே..." என்று சிரித்தாள் ஜெயந்தி. என்னைத் தவிர எல்லோரும் உற்சாகமாக இருந்தார்கள். எனக்கென்னவோ இந்தப் பயணத்தில் எச்சரிக்கை இருப்பது போல வயிற்றில் ஒரு பட்டாம்பூச்சி பறந்தது. முதல் குழந்தை பிறந்து இறந்தபோது பறந்த அதே பட்டாம்பூச்சி. சொன்னால் என்மேல் பாய்வார் என்று உற்சாகத்தில் கலந்துகொண்டேன். இரண்டு நாளைக்கு அதிக சாமான் கட்ட வேண்டாம் என்று பார்த்தால் எட்டு அயிட்டமாகி விட்டது.எங்கள் குடும்பத்தைப் பற்றி உங்களுக்கு ஐடியா கிடைத்திருக்கும். மூத்தவள் ஜெயந்தி. மகாராணி காலேஜில் பி.ஏ. கார்ப்பரேட் படிக்கிறாள். அப்புறம் பாலாஜி பிளஸ் டூ. அப்புறம் நீண்ட இடைவெளிக்கப்புறம் ஒரு அசந்து மறந்த ராத்திரியால் பிறந்த குமார் ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட். அம்மா என்று நான் அழைப்பது என் மாமியாரை. அம்மாவுக்கும் பிள்ளைக்கும் சரிப்பட்டு வராது. பத்து நிமிஷத்துக்குள் சண்டை வந்து விடும். "இந்த முசுடுடன் எப்படிக் குடித்தனம் பண்ணுகிறாயோ... எனக்கென்ன தலைவிதியா ? இதோ மூர்த்தியிடம் போகிறேன்" என்று சொல்வாளே தவிர போக மாட்டாள்."எதற்கெடுத்தாலும் ரெண்டு அர்த்தம் வச்சுப் பேசி மூஞ்சியைக் காட்டினா யார் அவகிட்ட இருப்பா ?" இத்தனைக்கும் மூர்த்தியின் மனைவி ரமாமணி நல்லவள்தான். கொஞ்சம் படபடவென்று பேசி விடுவாள். ('அந்த கிழத்துக்கு நீதாம்மா சரி'). சில சமயம் ரொம்பப் பிடிவாதம் பிடித்தாலும் சோதித்தாலும் எனக்கு அம்மாவுடன் எந்தப் பிரச்னையும் இல்லை. கணவருக்குத்தான்!

எப்போதும் எங்களுடன்தான் இருந்தாள். எழுபது வயதுக்கு நல்ல ஆரோக்கிய தேகம்... கொட்டைப் பாக்கு வைரத் தோட்டைக் கழற்றாமல் காது தொங்கிப் போயிருந்தது. நெற்றியில் பெரிய குங்குமப்

பொட்டு. கணவர் இறந்தபோது சொல்லிட்டுப் போயிருக்கிறாராம். எனக்கு அவர்கள் குடும்பத்தில் கெட்ட பெயர். எல்லாம் சொத்து நகைக்குத்தான் அவளை வைத்துக் கொண்டாடுகிறேனாம். நான் கவலைப்படுவதில்லை.

அதிகாலை புறப்பட்டோம். எங்கள் கார் சிவப்பு மாருதி. போஸ்ட் ஆபீஸ் சிவப்பு. இந்த வண்ணம் அத்தனை முக்கியத்துவம் பெறப் போகிறது என்று தெரிந்திருந்தால் இரவோடிரவாக மாற்றியிருப்போம்.

முதல் நாளே காராஜ் போய் பாட்டரி லெவல், ஃபேன்பெல்ட் ஸ்டெப்னியில் காற்று எல்லாம் பார்த்துவிட்டு வந்தார். பாலாஜிக்குக் கொஞ்ச தூரம் ஓட்ட ஆசை.

“அப்பாகிட்ட சொல்லும்மா. ஹைவே தானேம்மா... சொல்லும்மா” என்று நச்சரித்தான்.

“நீயே கேளேன்!”

“தரமாட்டார். அப்பாவைவிட நல்லா ஓட்டுவேன்” என்றான்.

ஓட்டப் போகிறான் என்று அப்போது தெரியவில்லை. என் கணவர் வேகமாக ஓட்ட மாட்டார். “ராமு, மெள்ளப்பா ராமு! ஒண்ணும் அவசரமில்லை. ஒவ்வொரு முறையும் லாரியைத் தாண்டும் போது எனக்குப் படபடன்னு வரது” என்றாள் அம்மா.

“மெள்ளத் தாம்மா போயிட்டிருக்கேன்.”

‘தத்வ மறிய தரமா’ என்று பாட ஆரம்பித்தார். “ராமு ஒண்ணு ஓட்டு. இல்லை பாடு... ரெண்டும் வேண்டாம்ப்பா...” சொல்லிவிட்டு,

“காஸெட் போடுறி” என்றாள் அம்மா.

‘அடடா அல்வாத் துண்டு — இடுப்பு உன் இடுப்பு , அழகா பத்திக்கிச்சு நெருப்பு தூள் கிளப்பு....’

“என்னடா பாட்டு இது ?”

“பாட்ஸ்... இப்ப எல்லாப் பாட்டும் இப்படித்தான் இருக்கு. ‘மெட்டாலிக்கா’ கேக்கறியா, தூளு..” என்று பாப் சங்கீதம் போட்டான்.

“என்ன இது ராட்சசர்கள் பாடறா அடித்தொண்டையிலே ? ஏம்மா திருவரங்கம்னு ஒரு காஸெட் இருந்ததே...”

“அதை பாலாஜி ஒளிச்சு வெச்சுட்டான் பாட்டி” என்றான் குமார்.

“பாட்டி, நான் ரைம்ஸ் சொல்லட்டுமா ? பாட்டகேக் பாட்டகேக் பக்கர்ஸ் மேன்” என்று ஆரம்பித்த குமாரை வேண்டாம் என்று குடும்பமே ஒரே குரலில் அதட்டியது.

“குழந்தை ஆசையா பாடறேங்கறது...பாடட்டுமே!”

“பாட்டி, சூச்சூ வரது. அப்பாவை நிறுத்தச் சொல்லு” என்றான் சிறுவன்.

“பேசப்படாது, சித்தூர் போறவரை...”

“எனக்குக்கூட போகணும் ராமு.... கொஞ்சம் நிறுத்து காரை.”

“என்னம்மா ! புறப்படற போதே ப்ளாடரை காலி பண்ணுங்கன்னு எல்லாருக்கும் சொன்னேனா இல்லையா ?”

“அப்பவும் போனேன். இப்பவும் வரதே.... என்ன பண்ண ?”

“சித்தூர் பக்கத்துல பிரேக்ஃபாஸ்டுக்கு நிறுத்தறேன்... அங்க போய்க்கலாம்.”

“இப்ப நிறுத்தப்போறியா இல்லை இந்த சீட்டிலேயே போயிடவா ?”

“ஐயோ! ரோதனைம்மா உன்னோட. எங்க போனாலும் லக்கேஜ் மாதிரி கூட வந்தாகணுமா? மூர்த்தி கிட்ட இரண்டு நாள்...இரண்டே நாள் இருக்கக் கூடாதா ? என்ன ஒரு தாயார் நீ ?”

அம்மா மௌனமானாள்.

“அழாத பாட்டி” என்றான் குமார். “சூச்சூ வந்தா அடக்கிக்கோ பாட்டி!”

சட்டென்று ப்ரேக் போட்டு நிறுத்தினார்.

“எல்லாரும் போங்கோ” என்று வெடித்தார். நான் அவரைக் கண் கொட்டாமல் பார்த்தேன். என் எதிர்ப்பைத் தெரிவிக்கும் ஒரே ஆயுதம் அது. அம்மாவைக் கைத்தாங்கலாக அழைத்துப் போனோம். சுற்றுமுற்றும் பார்த்தாள்.

“ஏண்டா, பொட்டைக் காட்டுல நிறுத்தினா எப்படி ? மறைவா ஒரு இடம் பார்க்க மாட்டியோ... புதர்ல இறங்கினா பாம்பு பிடுங்கும்!”

“உனக்காக ஜனானா கட்ட முடியாதும்மா...”

ஜெயந்தியும் நானும் பவானி ஜமக்காளத்தை திரைபோலப் பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அப்புறம் மர நிழலைப் பார்த்து நிறுத்தி ஜமக்காளத்தை விரித்து இட்லி சமாசாரங்களைப் பிரித்து எல்லோரும் சாப்பிட்டோம். அம்மா “மோர் இல்லையா ?” என்றாள்.

நான் பதட்டத்துடன் அவரைப் பார்த்தேன்.

“திஸ் இஸ் தி லிமிட்! அம்மா மோர் இல்லை” என்றார் சுருக்கமாக.

“பக்கத்தில் கடை கண்ணி இல்லையா லட்சுமி. நான் மோர் சாப்பிடுவேனே தெரியாதா உனக்கு ? “ என்றாள்.

“பாரும்மா இன்னிக்கு ஒரு நாள் எங்களை மன்னிச்சுடு! பூந்தமல்லி வந்த கையோட உனக்குன்னு ஆச்சி மோர் ஆறு பாக்கெட் வாங்கித் தரேன். பொறுத்துக்கம்மா...”

“ராமு, எதுக்காக இவ்வளவு கோபப்படறே ? நான் லட்சுமியைத்தானே கேட்டுண்டிருந்தேன் ?”

“ரொம்ப லொள்ளு பண்றேம்மா நீ, ஏதோ போற இடத்துலே கோ ஆப்பரேட் பண்ணாம!”

“மோர் இருக்கான்னு கேட்டது தப்பா ?”

“ஆமாம்! ரொம்ப டென்ஷன் பண்ற என்னை நீ.”

“உனக்கு ஆஃபீஸ்ல வேற ஏதோ கோபம்னு நினைக்கிறேன்.”

“ஆமாம்... மெட்ராஸ் வரைக்கும் வாயை மூடிண்டு சும்மா வரயா ?”

“அப்படியே உங்கப்பா” என்றாள். இதற்கு மூர்த்தி பரவால்ல. அந்தப் பிசாசு இல்லைன்னா அங்க போய் இருந்துக்கலாம். சாக்கடைக்குப் போக்கிடம் ஏது ?” என்றாள் அழுகைக் குரலில்.

“அம்மா” என்று அதட்டினார். வாய் தவறிப் போய், “இந்த மாதிரி தொண தொணன்னு ஆரம்பிச்சே, இங்கேயே விட்டுப் போயிடுவேன்” என்றார்.

“விட்டுட்டுப் போயேன். எனக்கு என்ன பயமா ? என்னால தனியா சமாளிக்க முடியாதுன்னு நெனைச்சியா ? உங்கப்பா என்னை விட்டுட்டுப் பரலோகத்துக்கே போயிட்டார் இருபத்துநாலு வயசில!”

“ஐயோ! அதை ஆயிரம் தடவை சொல்லியாச்சும்மா....”

அம்மா அதைக் கவனிக்காமல், “ரெண்டு குழந்தைகளையும் வெச்சு வளர்க்கலையா ? விட்டுட்டுப் போயேன். யாரையாவது அப்பா தாயேன்னு கெஞ்சி லாரியைப் பிடிச்சு ஏறிண்டு வந்துடுவேன். கோயில்ல போய் உக்காந்துக்கறேன். நன்றியில்லாத ரெண்டு பிள்ளைகளை வளர்த்தன்னு கையை நீட்டினா யாராவது உண்டைக்கட்டி போடறா!”

“பாட்டி... கட்டைவிரலை இப்டி உசத்தி காட்டினா லாரில ஏத்திப்பா பாட்டி” என்றான் குமார்.

நான் அவரைத் தனியா கூப்பிட்டு, “கொஞ்சம் பொறுமையா இருக்கக் கூடாதா .... அப்புறம் ஓட்டறதில் கவனம் போய்டும். அம்மா அப்படித்தான்னு தெரியாதா உங்களுக்கு ?”

“என்ன டென்ஷன் பண்றா பாரு.. திஸ் இஸ் தி லிமிட்! “

“பாலாஜி, நீ பாட்டி கிட்ட பேச்சு கொடுத்துண்டு இரு” இதனிடையில் அம்மா தனியாகப் போய் ஒரு கல்லில் உட்கார்ந்து கொண்டாள். விரோதமான திசையில் பார்த்துக் கொண்டு. எனக்கு சிரிப்புதான்

வந்தது.

“அம்மா ஏதோ படபடப்பில் தப்பா பேசிட்டார்.”

“கோவிச்சுக்காத பாட்டி!”

“ஜெயந்தி! உன் வயசில இருக்கறப்ப எனக்கு ரெண்டு பிள்ளை கொடுத்துட்டுப் போய்ட்டார்.”

“எல்லாம் சரிதாம்மா வா” என்று அவள் கையைப் பிடித்து அழைத்து வந்தார்.

“நான் இனிமே பேசவே இல்லைப்பா! ராமு மாத்திரை சாப்ட்டியா ?”

“சாப்ட்டன்மா!”

பயணம் தொடர்ந்தது.

பகுதி 2:

“பாட்டி இந்த சீட்டுக்கட்டுல ஒரு சீட்டு எடுத்து பாத்து வெச்சுக்கோ!”

“பாத்தாச்சு… ஏழு ஆட்டின்!”

“எடுத்த கார்டை சொல்லாதே பாட்டி! நான் கண்டுபிடிக்கறேன்!”

“அம்மா, நீ சீட்டாடிருக்கியா?”

“நிறைய! உங்கப்பா சொல்லிக் கொடுத்திருக்கார். கழுதை ஆட்டம்தான். எப்பவும் நான்தான் தோக்கணும். தப்பித் தவறி ஜெயிச்சுட்டா கோவிச்சுண்டு ஒரு வாரம் பேச மாட்டார்!”

“அவர் எப்படி இருப்பார்மா…?”

“இதோ இவன் இருக்கானே.. இதே மூக்கு, இதே கோபம். நேரம் கொஞ்சம் குறைச்சல். என் கை பக்கத்திலே தன் கையை வெச்சுண்டு, ‘யார் சேப்பு, யார் சேப்பு’னு கேட்டுண்டே இருப்பார். கொஞ்ச

நாளைக்கு இட்லர் மீசை வெச்சுண்டிருந்தார். அது என்ன மூக்குக்குக் கீழே என்னவோ கருப்பா இருக்கே, அழிங்கோன்னு வேடிக்கைக்குச் சொல்லி சிரிச்சுட்டேன். வந்ததே கோபம். கேலியா பண்றேன்னு பண்ருட்டிக்கு அடுத்த ரயிலேற்றி அனுப்பிச்சுட்டார். நானும் விட்டுக் கொடுக்கலை. உங்களுக்கா எப்ப தோன்றதோ அப்ப வந்து அழைச்சுண்டு போங்கோன்னு வந்துட்டேன். ரெண்டு பேரும் பிடிவாதம். உம்மாதிரி தழைஞ்சு போகவே மாட்டேன். ஒருவாரம் கழிச்சு ஓட்டல் சாப்பாடு சரிப்படலைன்னு வந்துட்டார். அப்பத்தான் உன்மாதிரியே முதல்து பொறந்து தவறிப் போனப்புறம் மூர்த்தியை உண்டானேன்! லட்சுமி, இவன் என் வீட்டுப் பிள்ளையா இருந்தாலும் சொல்றேன். நிறையப் படிச்சிருக்கே. பயப்படக்கூடாது! பணிஞ்சு பணிஞ்சு போறே. அதனாலே தான் இவன் இந்த எகிறு எகிர்றான். பயமே கூடாது!"

"இதப் பார்ரா, மாமியார் மருமகளுக்கு கொடுக்கிற உபதேசம்!"

"ஒண்ணே ஒண்ணுக்குத்தான் பயப்படணும். இருபத்து நாலு வயசிலே போய்ட்டாரே... மூர்த்திக்கு பத்து வயசு. இவனுக்கு எட்டு. பிறந்தவீடுன்னு கிடையாது. உலகமே இருட்டின மாதிரி இருந்தது. யோசிச்சேன். எதுக்காகப் பயப்படணும்? எதிர்காலம் தெரியாததனாலதானே பயம்? அப்பல்லாம் ஒரு நாளைக்கு என்ன செலவு... அஞ்சு ரூபாயா? எப்படியும் எச்சில் எலை எடுத்தாவது சம்பாதிச்சுடலாம்னு தைரியம் வந்துடுத்து. அண்ணாகிட்டயும் இல்லை. மன்னிக்கும் எனக்கும் சரிப்படலை. கிஷ்ணசாமி அப்பப்ப வந்து பார்த்துப்பார். எல்லாரும் கதை கட்டி விட்டா, நான் அவரை வச்சிண்டிருக்கிறதா? பயப்படலையே....எதுக்கு? மனசாட்சி ஒண்ணுக்குத் தான் பயப்படணும். தெளிவு இல்லாம இருந்தா பயம் வரும். தப்பு பண்ணா பயம் வரும்!"

"பாட்டி... யானை!" என்று குமார் கத்தினான். ரோட்டோரத்தில்

மணியோசையுடன் ஆடி அசங்கி ஒரு யானை சென்று கொண்டிருந்தது.

"கோயிலுக்குப் போறது! ராமு, நாம காஞ்சிபுரம் போயிட்டுத்தானே போறம்?"

"என்னது..? காஞ்சிபுரமா? இது என்ன புதுசா...?" என்றார்.

“லட்சுமி, நீ சொல்லலையா...?”

எனக்கு மறுபடி பயம் வந்தது. மற்றொரு சண்டையின் துவக்கம். என்னிடம் எதும் சொல்லவில்லை.

“காஞ்சிபுரமும் இல்லை. கீஞ்சிபுரமும் இல்லையம்மா...”

“போறப்ப வந்து வரதராஜப் பெருமாளை சேவிக்கறதா வேண்டிண்டுட்டேண்டா. போற வழியிலேதானேடா இருக்கு?”

“போற வழி இல்லைம்மா. அதிலிருந்து விலகி ஒரு பத்து கிலோ மீட்டர் உள்ளே போகணும். இருட்டிடும். அப்புறம் நைட் டிரைவிங் ஆயிடும்!”

“மணி என்ன இப்ப..?”

“மணி என்னவா இருந்தாலும் நாம காஞ்சிபுரம் போகலை. திரும்பி வரப்ப வேணா போயிட்டு வரலாம்!”

“போய்டலாமே... வேண்டிடுட்டேண்டா... தெய்வ குற்றமாய்டும்டா!”

“யாரைக் கேட்டு வேண்டிண்டே... பாரும்மா, நீ மனசுக்குள்ள வேண்டிக்கறதெல்லாம் என்னால நிறைவேற்ற முடியாது!”

“லட்சுமி... உங்கிட்ட சொன்னேனேம்மா...?”

“சொல்லவில்லை. ”போயிட்டுத்தான் வந்துரலாமே...!” என்றேன்.

“சும்மாரு. நாம கல்யாணத்துக்குப் போறோம். காஞ்சிபுரத்துக்கு இல்லை.சாயங்கால ஜானவாசத்துக்குள்ள போகணும். பெங்களூர் திரும்பி போறப்ப வேணா போகலாம். அம்மா, வரதராஜப் பெருமாள்கிட்ட சொல்லிடு என்ன...?”

“வேண்டிண்டுட்டேனே... ஐயோ!”

“இப்ப சும்மா இருக்கப் போறியா இல்லையா!”

“பாட்டி நம்ம கார் மாதிரியே கார் போறது பாரு” குமார் அம்மாவின்

கவனத்தைக் கலைத்தது.

“அப்பா.. நம்ம காரைப் போலவே சிவப்பு மாருதிப்பா!”

“என்ன இவ்வளவு வேகமாப் போறான். மாருதி இந்த வேகம் தாங்காதே” ஒரு மின்னல் போலத்தான் அந்த சார் எங்களை அசுர வேகத்தில் கடந்து சென்றது.

“என்ன ஃபாஸ்டா போறான் பாருப்பா, நீயும் இருக்கியே” என்றான் பாலாஜி.

சற்று நேரத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எங்களைத் தொடர்ந்து வந்தன. இவர் கை நீட்டி வழி விட்டாலும் எங்களுடனே சமமாக வந்தன. சன்னலருகில் அந்த இளைஞன் “காரை நிறுத்துய்யா... ஓரங்கட்டுய்யா” என்று அதட்டினான்.

அவர்கள் ஒட்டிய விதம் எங்கள் காருக்குக் குறுக்கே அவ்வப்போது வருவது போல் அபாயகரமாக இருந்தது. இவர் வேகம் குறைத்து நிறுத்தினார். அவர்களும் திருப்பி நிறுத்தினார்கள். சற்று நேரத்தில் ஒரு டெம்போவில் ஆறு பேர் வந்தார்கள்.

“வாட்ஸ் த மேட்டர்?”

“தப்பிச்சுடலாம்னு பாக்கறியா ? இறங்குடா.”

“என்ன சொல்றீங்க?”

“மேக்கால தொரப்பாக்கத்துல சைக்கிள் மேல ஏத்திட்டுப் போனியே, அந்த ஆள் செத்துட்டான்!”

“என்னது? நானா ?”

“ஆமாம். துரத்தறோம் இல்லை... நிறுத்தாமப் போறியே? எங்களால பிடிக்க முடியாதுன்னு நெனைப்பா ?”

“இதே சிகப்பு காருதான் அண்ணே!”

அவருக்கு நிலைமை புரிந்து, “பாருங்க... தமிழ்நாட்டில் ஆயிரம் சிவப்பு மாருதி கார் இருக்கும்.”

“அண்ணே, இந்தாளுதாங்க. கறுப்புக் கண்ணாடி போட்டிருந்தான்.முன்னாடி பின்னாடி நாலு உருப்படிங்க உக்காந்துகிட்டு..”

“அவனோட என்ன பேச்சு? எறங்குடா முதல்ல.”

பின்சீட்டில் அம்மா, “எதுக்காக இறங்கணும்?” என்றாள் விரோதமாக.

“அம்மா! சும்மாரும்மா” என்று அதட்டினார். ”பாருப்பா... நாங்க...”

“எதுக்காகன்னா உங்க டிரைவரு சைக்கிள்ள போய்ட்டிருந்த எங்க கிராமத்து ஆளை அடிச்சுப் போட்டுட்டு நிக்காம வந்துட்டாரு. அதுக்காக.”

“நாங்க எந்த சைக்கிளையும் ஆக்ஸிடெண்ட் பண்ணலை!” என்றாள்.

“பெங்களூர்லருந்து ஃபேமலியோட ஒரு கல்யாணத்துக்குப் போறம்பா. நான் டிரைவர் இல்லை. குடும்பத் தலைவன்.”

“நீ எங்க போனா என்ன... இடிச்சுட்டு நிக்காம போன...”

“நான் இல்லையா அது...”

“இவங்கதாங்க... பின்னாலேயே வந்தமே... அதே சிவப்பு மாருதி, ரத்த துளி மாதிரி!”

“ஐயோ! நான் எப்படி விளக்குவேன் ?”

“விளக்கம் ஒண்ணும் வேண்டாம். எறங்கிரு. பாப்பா இதை ஒரு முடிவு பண்ற வரைக்கும் வண்டி போவாது.”

“என்ன முடிவு ?”

“இறந்து போனவனுக்கு காம்பன்சேஷன் ஒரு அம்பதாயிரம் கொடுத்துட்டுப் போ…”

“ஸ்கூல் வாத்தியாருங்க, கைல குழந்தை. போன வருஷம் தான் வேலூர்ல போய்ப் பொண்ணு எடுத்து வந்தான். ஒரு சைடே தெரியாம அதுங்கிப் போய் அடிபட்டிருக்காங்க….”

ஜெயந்தி என் முழங்கையை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

“கொஞ்ச நேரம் உடம்பு துடிச்சுக்கிட்டு இருந்துச்சு”

ஜெயந்தி, “ஐயோ அம்மா” என்றாள்.

“எறங்குய்யா அப்புறம் பொல்லாப்பாயிரும்.”

“ஏதாவது கொடுத்துட்டுப் போ…”

“யு ஆர் மிஸ்டேக்கன்.”

“”இங்கிலீசு பேசாதே, வவுறு எரியுது. இப்ப வரியா இல்லையா?”

“எங்க வரணும் ?”

“ஸ்பாட்டுக்கு வந்து அந்தாளை கொன்னுட்டியே, அந்தக் குடும்பத்துக்கு ஏதாவது செய்துட்டுப் போ. முதல்ல காரை விட்டு எறங்குங்க.”

ஜெயந்தியின் தரப்புக் கதவைத் திறந்து அவளை “வெளியே வா பாப்பா” என்றார்கள். ”பாட்டியம்மா, எறங்கு. எல்லாரும் எங்களுக்குப் பதில் சொல்லாம ஒரு அடி நவுர முடியாது. கார் போவாது!”

அம்மா, “என்னடா உளர்றீங்க? நாங்க என்ன செஞ்சோம்? எந்த சைக்கிளையும் நாங்க அடிக்கலைங்கறோம். அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிண்டு…”

“கௌவி…’டா’ போட்டுப் பேசாத.. மரியாதையாப் பேசு…”

“அம்மா, ப்ளீஸ்… லட்சுமி ஹாண்டில் திஸ்!”

“பாலாஜி, ஜெயந்தியைப் பார்த்துக்கோ... நீ குமாரைப் பார்த்துக்கோ!” என்று அவர் வெளியே இறங்கினார். நான் குமாரை எடுத்து மார்மேல் அணைத்துப் போர்த்திக் கொண்டேன். உடம்பு சூடாகியது.

“ஜெயந்தி, டோண்ட் கெட் அவுட்... டோண்ட் கெட் அவுட்” என்றார். “ஒதுங்கிப் போய்டும்மா.”

“எங்க போற பாப்பா... இங்கயே இருக்கணும்” என்று அவள் கையை ஒருவன் பிடிக்க... பாலாஜி, “லீவ் ஹர் அலோன்” என்று அவனை அடிக்க, அவன் திருப்பி அடித்ததில் சுருண்டுவிட்டான். அவர்கள் சற்றே வன்முறையுடன் அவனை வெளியே இழுக்க முற்பட... அவன் அதை எதிர்க்க... சட்டை பட்டன்கள் சிதற இழுத்தார்கள். எனக்கு முகம் பூரா சூடாகப் பயம் பரவியது.

“ஜெயந்தி ஒரு கல்லை எடுத்துக்கோ” என்றாள் அம்மா.

“அம்மா!”

“பாரு, என்னைத் தொட்ட அப்புறம்...”

இவர் கைகள் நடுங்கின. பயத்தில் வியர்த்திருந்தார். சிறிது சிறிதாக அவரை நெக்கி நெக்கித் தள்ளினார்கள்.

“போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் வருவேன்” என்றார்.

“முதல்ல ஸ்பாட்டுக்கு வா!”

“இங்கருந்து எவ்வளவு தூரம்பா?” என்று அம்மா யதார்த்தமாகக் கேட்டாள்.

“மூணு பர்லாங்கு இருக்கும் மேக்க...”

அம்மா, “ராமு! இங்கயே இரு. நான் போய்ப் பார்த்துட்டு வர்றன்” என்றாள். ”ஏம்பா! பாடி எங்க கிடக்குது?”

“அம்மா நீ வேற இப்ப குழப்பாதே... கொஞ்ச நேரம் சும்மாரு.”

“பாட்டிம்மா நீ எதுக்கு? ஓட்டனவரு வரட்டும்... பைசல் பண்ணிட்டுப் போவட்டும்.”

“கொஞ்சம் இருப்பா.. பர்ஸை எடுத்துக்கறேன்” என்று முன்பக்கம் ஏறிக் கொண்டார். பாலாஜியின் காதில் ஏதோ சொன்னார். பாலாஜி திடீர் என்று ஒரு காரியம் செய்தான். எங்கள் எல்லாரையும் உள்ளே தள்ளி டிரைவர் ஸீட்டில் பாய்ந்து காரைக் கிளப்பி ஒரே வேகமாக ஓடவிட்டான்.

“ஏய்! தப்பிச்சு ஓடறாண்டா! பிடிடா... பிடிடா!”

எனக்கு இதயம் படபடத்தது. அவர்கள் பின்னால் மோட்டார் சைக்கிளைக் கிளப்பித் தொடர்வதற்கு முன் நாங்கள் கொஞ்ச தூரம் வந்துவிட்டோம்.

கண்ணாடியில் பார்த்தோம். பின்தங்கியிருந்தார்கள். சட்டென்று திரும்பிவிட்டார்கள். பாலாஜி வேகம் அதிகரித்து பேயாக ஓட்டினான்.

“நேரா மெட்ராஸ் போயிடலாம். நிக்கவே வேண்டாம்” என்றார். ”அப்பாடா... தப்பிச்சோம்.”

“அம்மா, பாட்டி எங்க?” என்றாள் ஜெயந்தி.

“பாட்டி இல்லையா?” ”அம்மா பின்னால் இல்லையா?”

“எப்ப இறங்கினா ?”

“எதுக்கு இவ முந்திரிக்கொட்டை மாதிரி கார்லருந்து எறங்கணும்? எப்பவுமே இப்படித்தான் அவ...சே!”

“ஐயோ! அவாகிட்ட மாட்டிண்டிருப்பாளே” என்று அலறினேன்.

பகுதி 3:

“அம்மாவாலதான் வந்தது. அவங்கூட வாக்குவாதம் பண்ணிட்டு அவன் டென்ஷனாயிட்டான். பேசாம கார்ல உட்கார்ந்திருக்க வேண்டியதுதானே. எப்ப இறங்கினா ?”

நான் பதறிப் போனேன். ”ஜெயந்தி கழுதை... பாட்டிய பார்த்துக்கறதைவிட என்னடி வேளை உனக்கு!”

பாலாஜி, ”இப்ப நாம மேற்கொண்டு போறமா இல்லையா?”

“என்னடா பேசற நீ? பாட்டியை விட்டுட்டுப் போறதாவது.”

“திரும்பணுமா?”

ஜெயந்தி அழுதாள். ”பாட்டி! பாட்டி!”

“சும்மார்றி. அப்பா என்ன செய்யறது சொல்லு!”

“போலீஸ் பாதுகாப்பு இல்லாம போகக் கூடாது. வயலென்ட் மாப்... அருவா எல்லாம் வெச்சிருந்தா.”

“சே! இந்தப் பாட்டி!” என்றான் பாலாஜி.

ஜெயந்தி பெரிசாக அழ ஆரம்பித்தாள். ”அவா அடிச்சா பாட்டி உயிருக்கு ஆபததாய்டுமேப்பா!”

“என்ன பண்றது... அவ விதிப்படி நடக்கறது” அவருக்கு என்ன பண்ணுவது என்று தெரியவில்லை.

நான் அவரை முறைத்துப் பார்த்தேன். ”என்ன பண்றதாவது? திரும்பிப் போறது!”

அப்போதுதான் அந்தக் காவல் நிலையத்தைப் பார்த்தோம். ”நல்ல வேளை போலீஸ் பாதுகாப்போட போகலாம்.” காரை நிறுத்தி உள்ளே போய் அங்கிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் விஷயத்தைச் சொன்னோம். ”ஐயா! எங்கம்மா வயசானவங்க, அவங்ககிட்ட மாட்டிக்கிட்டு இருக்காங்க. நாங்க விட்டுட்டு வந்துட்டோம்.”

“என்ன ஜாமீனாவா?” என்றார் சிரித்துக்கொண்டே.

“இல்லைங்க... பாட்டி இல்லாததை கவனிக்கலை. கொஞ்ச தூரம் வந்ததும்தான் கவனிச்சோம் வாங்க.”

“ஒரு நிமிஷம் இருங்க, ரேடியோவில் செய்தி சொல்லிட்டு வரேன்”

இன்ஸ்பெக்டர் தன் மோட்டார் சைக்கிளில் தொடர, நாங்கள் காரில் திரும்பிச் சென்ற போது எனக்கு இதயம் தொண்டை வரை வந்துவிட்டது. ஐயோ! அம்மா என்ன ஆயிருப்பாளோ? என்ன ரகளையோ!

நாங்கள் முதலில் நின்ற இடம் காலியாக இருந்தது. அங்கிருந்து நாங்கள் விபத்து நடந்த இடத்தை அடைந்தோம். சாலையோரமாக ஒரு கயிற்றுக் கட்டிலில் பிணத்தை மூடியிருந்தார்கள். அருகே....

“பொன்னால் அரிக்கஞ்சட்டி என்னைப் பெத்த அப்பா புதுச்சம்பா வாய்க்கரிசி... நான் பொண்ணான தலை முழுவி பொழும்மி மயிராத்தி” என்று குடல் நடுங்கும் ஒப்பாரி கேட்டது. இன்ஸ்பெக்டர் நிறுத்தி விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டார். சாலை முழுவதும் கண்ணாடி சிதறியிருந்தது.

“முட்டாப்பயலுகளா... இவங்களை போட்டு ரேக்கிருக்கீங்களே... எட்லைட் கண்ணாடி உடைஞ்சு கெடக்குது... முதல்லே அதைப் பார்க்க வேண்டியதுதானே. பாருய்யா இவங்க காரை! ஏதாவது ஒரு டேமேஜ் இருக்குதா பாரு!”

“ஆமாங்க, அந்த காரு அது இல்லைங்க” என்று அவர்கள் சொல்ல,

“அந்த பெரியம்மா எங்கய்யா” என்றேன்.

“அவங்களை ஏதாவது அடிச்சுக் கிடிச்சு வெச்சீங்களா?”

“உள்ளே போய்ப் பாருங்க.”

அந்தக் குடிசைக்குள் கணவனை இழந்தவள் அருகில் அம்மா உட்கார்ந்திருந்தாள். அவளுக்கென்று ஒரு ஸ்டூல் போட்டிருந்தது. அம்மா புது விதவையின் தலையைக் கோதிக் கொண்டிருந்தாள்.

“மனசை தேத்திக்கோ மாரியம்மா. நானும் உன்னைப் போலத் தான். ரெண்டு பிள்ளைங்களை விட்டுப் போயிட்டார்.”

“பாட்டியம்மா... அவங்க உங்களை அடிச்சாங்களா?” என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

“சேச்சே... யாரும் என்னை அடிக்கலை, திட்டலை. எப்படியும் நீங்க என்னை அழைச்சுண்டு போக வந்துருவீங்கன்னு தெரியும். இவங்க கூட வரேன்னு சொன்னதுமே...”

“அம்மா எப்படி இங்கே வந்தே?”

“அதோ அவர் மோட்டார் சைக்கிள் பின்னால ஏறிண்டு வந்தேன்! அழாதடி மாரியம்மா... தைரியமா இரு!”

“பெரியம்மா! மோர் கேட்டீங்களே!” என்று ஓர் இளைஞன் தம்ளரில் மோர் கொடுத்தான்.

“தாங்க்ஸ்றாப்பா. படபடன்னு வந்துருத்து ராமு. என் பணத்திலிருந்து ஒரு ஐந்நூறு ரூபா கொடுத்துடு. பாவம் ரெண்டு பிள்ளை, வயித்துல ஒண்ணு, கைல ஒண்ணு பொட்டை!”

ஜெயந்தி பாட்டியருகில் உட்கார்ந்து கொண்டு அவள் தலையைத் தடவிவிட்டு கண்ணீர் சிந்தினாள். எனக்கும் இயல்பாக கண்ணீர் வழிந்தது. ”எதுக்குடி அழறீங்க? ஆனாலும் ராமு இந்த மாதிரி சொல்லாம கொள்ளாம திடுதிப்னு புறப்பட்டுப் போய்ட்டியா, நான் என்னன்னு யோசிப்பேன். வாக்குவாதம் பண்ண கோவத்தில் விட்டுப் போய்ட்டியா? அந்த மாதிரியெல்லாம் செய்ய மாட்டியே...”

அவர் தன் தாயாரை அணைத்துக் கொண்டு, ”மன்னிச்சுக்கம்மா தெரியாத்தனமா நடந்து போச்சு. ஒரு செகண்டு உன்னை விட்டுட்டு ஓடிப் போய்டலாம்னு தோணித்து பாரு! மஹா பாவம்மா! மன்னிச்சுக்கம்மா!”

“பாவம் இல்லைடா,,, பயம்தான் காரணம்” என்றாள் அம்மா.

“என்னை யாரும் ஏதும் செய்யலை. சொன்னனே... எதுக்குப் பயப்படணும்? எல்லாரும் கிட்டக் கிட்ட பார்த்தா நல்லவாதான். ஏதோ உணர்ச்சிவசப்பட்டு துரத்திருக்காளே தவிர, நம்மை அடிக்கணும், கொல்லணும்னு உத்தேசமே இல்லை இவாளுக்கு.”

இன்ஸ்பெக்டர், “போங்கய்யா பாடியை எடுக்க வழியைப் பாருங்க!”

“ஸார்! நீங்க பெரியம்மாவை அழைச்சுட்டுப் போங்க. இன்ட்ரஸ்டிங் லேடி” என்றார்.

“என் பிள்ளைகிட்ட சொன்னேன் ஸார், காஞ்சிபுரம் கோயிலுக்கு போய்ட்டுப் போகலாம்னுட்டு. கேட்டாத்தானே? போயிருந்தால் இந்த ரகளையெல்லாம் நடந்திருக்காதில்லையா!”

“ஆனா, எனக்கு உங்களைச் சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்காதே பாட்டியம்மா” என்றார் இன்ஸ்பெக்டர்.

“உங்க பேர் கேட்டு வெச்சுக்கலையே!”

“வரதராஜப் பெருமாள்” என்றார்.

சிவப்பு மாருதியின் பயணம் நிறைவுற்றது.

********** ***

ஒரே ஒரு மாலை

இந்தக் கதை எழுதுகிற எனக்கு, இதைப் படிக்கிற உங்களைவிட அதிகமாக ஆத்மாவையும் இந்துமதியையும் தெரியும். அவர்களைப் பற்றி என்ன சொல்ல வேண்டும், என்ன சொல்லக் கூடாது என்று பாகுபடுத்தும் உரிமை என்னிடம் இருக்கிறது. இந்த 'கேஸி'ல் கொஞ்சம் சங்கடமான நிலைமையாக இருக்கிறது.

பாருங்கள், இருவரும் புதிதாகக் கல்யாணம் ஆனவர்கள். புதிதாக என்றால், மிகப் புதிதாக. கையில் கட்டிய கயிறும், சங்கிலியில் தெரியும் மஞ்சளும், ஒருவரைப் பற்றி ஒருவர் அதிகம் தெரியாத ஆர்வமும், பயமும், ஒருவரை ஒருவர் தொடும்போது ஏற்படும் பிரத்யேகத் துடிப்பும் கலையாத சமயம். இந்தச் சமயத்தில் நடப்பது முழுவதும் சொல்வது கடினமான காரியம். மேலும், சில வேளை அநாகரிகமான காரியம்... அவர்கள் நடந்துகொண்ட புது நிலையை வர்ணிக்கப் புதிதாய்க் கல்யாணம் ஆன ஒருவனால்தான் முழுவதும் இயலும். என் கல்யாணம் முடிந்துவிட்டது. அந்த நாட்கள் என் ஞாபகத்தில் ஆறு வருஷம் பின்னால் இருக்கின்றன.

ஆனால், என் சங்கடம் இதில் இல்லை. இந்தக் கதையில் என் பொறுப்பு ஒன்று இருக்கிறது. ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அது அதை எப்படிச் சொல்வது, எங்கே சொல்வது அல்லது, சொல்லாமல் விட்டுவிடலாமா என்பதுதான் என் குழப்பம். அதைப் பற்றி நான் இன்னும் தீர்மானிக்கவில்லை.

ஆத்மா, ஹல்வாராவில் விமானப் படையில் வேலை பார்க்கும் ஒரு பறக்காத 'பைலட் ஆபீஸர்'. பதினைந்தே நாள் லீவு எடுத்துக்கொண்டு புயலாகச் சென்னைக்கு வந்து ரயில் மாறி, திருச்சி வந்து, சத்திரத்தில் மாடியில் இறங்கி, அவசரமாக க்ஷவரம் செய்துகொண்டு, சட்டை மாற்றி, சூட் அணிந்துகொண்டு, பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் 'லோக்கல்' சின்னப்பன் நாயனத்துடன் ஒரு பழைய எம்.டி.ஒய். காரில் 'டாப்'பை விலக்கி, ஊர்வலம் போய் உட்கார்ந்து, மந்திரங்களின் மத்தியில் புகைக் கண்ணீரில் அருகே இருப்பவளைப் பார்க்கச் சந்தர்ப்பமில்லாமல் மணம் செய்துகொண்டவன்.

இந்துமதி பி.யூஸியைப் பாதியில் நிறுத்திவிட்டு, ஒரு நாள் திடீரென்று தனக்கு வந்த முக்கியத்துவத்தில், புடவை சாகரத்தில், எவர்சில்வர்

மத்தியில், வைர ஜொலிப்பில், வரிவரியாக ஜரிகைப் பட்டுப் புடவையின் ஜாதிக்கட்டின் அசௌகரியத்தில், மாலையின் உறுத்தலில், மையின் கரிப்பில் அம்மா அவ்வப்போது தந்த 'ஆர்டர்'களில், மாமாவின் கேலியில் மணம் செய்துகொண்டவள்.

ஆத்மாவை நிமிர்ந்து ஒரு தடவை பார்த்ததில்லை. பார்த்தது போன மாத போட்டோ ஒன்று; மார்பு வரை எடுத்த, எதிரே பார்க்கும் போட்டோ. அப்போது கல்யாணம் நிச்சயமாகுமா என்பது சரிவரத் தெரியாததால் அம்மா அதை அதிகம் பார்க்க அனுமதிக்கவில்லை. பார்த்து என்ன நினைப்பது என்று தெரியாத தவிப்பு. அழகான முகமா என்று அலசுவதற்கு உரிமையில்லாத சமயம். நினைவில் தேக்கிக்கொள்ள முடியாத தவிப்பு. கல்யாணம் முடிந்துவிட்டது. முடிந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன. தூரத்து உறவினர் படுக்கைகளைச் சுருட்டிக்கொண்டு தேங்காய்களைக் கவர்ந்துகொண்டு விலகிவிட்டனர். ஆத்மா அவளை உடன் அழைத்துச் செல்வதற்கு ஆறு நாட்கள் இருந்தன. பந்தங்கள் பிரிந்தன.

முறையாக அவர்கள் அரைஇருட்டில் சந்தித்தாகிவிட்டது. இந்துமதிக்கு ஓர் ஆணின் தொடுகை எப்படிப்பட்டது என்று தெரிந்துவிட்டது. அந்த எழுபத்திரண்டு மணி நேரங் களில் விதம்விதமான அனுபவங்கள் இருவருக்கும். ஆத்மாவின் கல்யாணத்துக்கு வர முடியாத பெரியப்பாவைச் சேவித்துவிட்டு வந்தார்கள். கோயில்களுக்குப் போய் வந்தார்கள். அவனுடன் நடக்கும்போதே, அந்த வெயில் படாத பாதங்களையும், செருப்பையும், ஜரிகைக் கரையின் அறுப்பையும், நிழலையும் பார்த்துக்கொண்டே உடன் நடக்கும்போதே இந்துமதிக்குச் சந்தோஷம் திகட்டியது. எனினும், அவன் ஒவ்வொரு தடவையும் அவளைத் தொடும்போது அவளுக்குப் புல்லரிப்பைவிட பயம்தான் தெரிந்தது. இதை ஆத்மா உணர்ந்தான். ஸ்பரிசத்தில் உள்ளுக்குள் அவள் உடம்பின் தசைகள் மிக மெலிதாக இறுகுவதை அவன் கவனித்தான். பெண் புதியவள், மிகப் புதியவள் என்று எண்ணிக்கொண்டான். மேலும் மேலும் அவனுள் ஓர் அச்சம் இருந்தது. அடிக்கடி அவளை தொடுவதில் தயக்கம் இருந்தது.

முக்கியமாகப் பெண்ணுக்கு செக்ஸில் பயம் ஏற்படுத்தக் கூடாது. மிக ஜாக்கிரதையாக அணுக வேண்டும். பசித்த புலி இரை தேடுவதை ஞாபகப்படுத்தக் கூடாது. மேலும், எனக்கே எவ்வளவு தெரியும்? நான் படித்த புத்தகங்கள் வழங்கும் உபதேசம் சரியா, தப்பா?

‘நம் கல்யாண அமைப்பு குரூரமானது. திடீரென்று ஓர் ஆணிடம் ஒரு பெண்ணைக் கொடுத்து, இவள் உன்னுடையவள் என்று வசதி செய்து கொடுப்பது கொடுமை’ என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் ஆத்மா.

இருந்தும்...

கவிதையிலோ, உரைநடையிலோ வார்த்தைகளால் சொல்லவே முடியாத மிக அபாரமான தருணங்கள் அவர்களின் புதிய உறவில் இருந்தன. (இந்தத் தருணங்கள் எல்லாக் கல்யாணங்களிலும் இருக்கின்றன யோசித்துப் பாருங்கள் ‘நீடித்து இருக்கின்றன‘ என்பதற்கு நான் ‘கேரண்டி‘ இல்லை. முதலில்? நிச்சயம்.) அந்தத் தருணங்கள் இவர்களுக்கு ஒரு சிவாஜிகணேசன் படத்தின் இருட்டில் இருந்தன. சூப்பர் மார்க்கெட் செல்லும்போது முன் பஸ்ஸின் பின்புறத்தில் ‘இரண்டு அல்லது மூன்று போதுமே‘ என்ற விளம்பரம் துரத்தித் துரத்தி அடித்தபோது, ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டபோது இருந்தன.

”பெட் ரூமில் அரசாங்கம் புகுந்துவிட்டது” என்பான் ஆத்மா.

அப்புறம் மாடியில் இவர்கள் தனிப் படுக்கை சம்பிரதாயத்தில்... எவ்வளவு பாடு இந்துமதிக்கு! ஆத்மா முதலில் போய்விடுவான். இவள், எல்லோரும் தூங்கிய பிறகு, வாசல் விளக்கை அணைத்துவிட்டு அந்தப் பாழாய்ப்போகிற மெட்டி சப்தமிடாமல், திண்ணையில் தூங்குகிறவர்களின் கனமான மௌனத்தைத் தாண்டி, மரப்படியேறி... எவ்வளவு சஸ்பென்ஸ்!

அதன்பின், அதன்பின், அதன்பின்!

தருணங்கள்! அபாரமான தருணங்கள்!

நான் சொல்ல வந்தது ஒரே ஒரு மாலை நேரத்தைப் பற்றி. இரண்டு பேரும் மெதுவாக வீட்டின் சந்தடியிலிருந்து விடுபட்டு நடக்கிறார்கள். தெற்கு வாசல் தாண்டி, பஸ் ஸ்டாண்ட் தாண்டி, அம்மா மண்டபம் வந்து தனியான இடம் தேடுகிறார்கள்.

நதிக் கரை, காவிரி நதி, ஆடி மாத ஆரம்பம். மேட்டூர் அணை நிரம்பி வழிந்த பழுப்புத் தண்ணீர். இங்கிருந்து அந்தக் கரை வரை நிரம்பி,

அவர்கள் புதிய உறவு போல் உற்சாகமாக நழுவிக் கொண்டிருந்த நதி. இந்துமதி போல் அந்த நதி. சிறிய சிறிய பையன்கள் குதித்துக் குதித்து, எதிர்த்து எதிர்த்து நீந்திக் கரைக்கு மறுபடி வருகிறார்கள். இந்துமதிக்கு அதைப் பார்க்க ஆசை. ஆத்மாவுக்கு மாந்தோப்பின் கரையில் தனியிடம் தேட ஆசை. அவளை அணைத்து அழைத்துச் சென்று தனியாக உட்காருகிறான். "உன்னிடம் நிறையப் பேச வேண்டியது இருக்கிறது. நாம் இரண்டு பேரும் முழுவதும் ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்ள வேண்டும். கல்யாணம் என்கிறது ஒரு 'லைஃப் டைம்' சமாசாரம்..."

(அவன் பேச்சில் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். அவர்கள் சம்பாஷணையைப் பின்னால் தொடர உத்தேசம். அதற்குள் நான் முன்பு சொன்ன என் பொறுப்பு குறுக்கிடுகிறது. சொல்வதற்கு இதுதான் சமயம் என்று எனக்குப் படுகிறது. சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.) அவர்கள் சுமார் அரை மணி நேரம் பேசிக்கொண்டு இருந்தனர். அதன் பிறகு இந்துமதி ஆத்மாவைக் கேட்டாள்...

"உங்களுக்கு நீந்தத் தெரியுமா?"

"ஓ! நன்றாக நீந்துவேன். உனக்கு?"

"எனக்கும் கொஞ்சம் தெரியும். அப்பா கேரளத்தில் இருந்தபோது கற்றுக்கொண்டேன். சுமாராகத் தெரியும்."

"கிரேட்! ஹௌ எபவுட் நௌ?"

"இப்பவா? ம்ஹூம்! இந்த நதியில் எல்லாம் எனக்கு நீந்திப் பழக்கமில்லை."

"பயமா?"

"ஆம்."

"நான் இருக்கிறேன். ஹரித்வாரில் கங்கையில் நீந்தியிருக்கிறேன். ஹல்வாரா போனதும் உன்னை அழைத்துப் போகிறேன். அந்த நதியின் வேகத்தைவிடவா! சீறும் கங்கை! வா. நீந்தலாம்."

"நான் மாட்டேன். நீங்களும் வேண்டாம்."

”கம்ஆன் டியர்!” ஆத்மாவுக்குத் தன் மனைவியை நனைந்த உடைகளில் பார்க்க வேண்டும் என்கிற இச்சை பிடிவாதமாக மாறியது.

”இங்கே ஒருத்தரும் இல்லை.”

”சே...சே! என்ன கஷ்டமாகப் போய்விட்டது. எதற்குப் பேச்சை எடுத்தோம் என்று ஆகிவிட்டது.”

”வர மாட்டாய்?”

”ம்ஹூம், நீங்களும் போகக் கூடாது.”

‘அப்படியா?” என்று தன் டெரிலினைக் கழற்றினான் ஆத்மா. பனியனைக் கழற்றினான். சிறிய டிராயரில் வந்து கரைக்குச் சென்று குதித்தான். தண்ணீர் ஒரு துளி தெறிக்கவில்லை. அம்பு போலப் பாய்ச்சல். மிக அழகாக நீந்தினான். ஆற்றை எதிர்க்காமல் ஒரு பக்கம் வாங்கி, இருபத்தைந்து அடி தள்ளிக் கரை சேர்ந்து, தலையைச் சிலிர்த்துக்கொண்டான். மிகப் புனிதமாக, அழகாக இருந்தான். அவன் முடிகளிலிருந்து தங்கமாகச் சொட்டின தண்ணீர்த் துளிகள். இந்துமதிக்கு அவன் உடம்பின் தசைகளையும், (சூரியன் உபயம்) அவன் சிரித்துக்கொண்டே நடந்து வருவதையும் பார்க்க மிகப் பெருமையாக இருந்தது. ஆனால், முதல் தடவையாகத் தெரிந்த அவன் பிடிவாதம் அவளைப் பயப்படுத்தியது.

”போதும், சளி பிடித்துக்கொள்ளும்” என்றாள்.

”நீ வர மாட்டாய்?”

”நான் வர மாட்டேன். போதுமே நீந்தினது.”

”இன்னும் ஒரு தடவை, அவ்வளவுதான்.”

குதித்தான். மறுபடி அழகான குதிப்பு. நீந்தினான். மறுபடி அழகான நீச்சல். கரையிலிருந்து முப்பதடி போயிருப்பான். ஆழமான, இதமான சற்றுக் குளிர்ந்த தண்ணீர். அப்போதுதான் அவனுக்கு ‘க்ராம்ப்ஸ்‘ ஏற்பட்டது. காலின் தசைகள் பிடித்துக்கொண்டன. காலை அசைக்க முடியவில்லை.

‘க்ராம்ப்ஸ்‘ வருவது அவனுக்கு முதல் தடவை. நண்பர்கள் எச்சரித்திருக்கிறார்கள். ”வந்தால் கலவரப்படாதே. மித!” கலவரப்படாமல் இருக்க முடியவில்லை. ஆற்றின் வேகம் அவனைத் தள்ளிக்கொண்டு சென்றது. காலை அசைக்க முடியவில்லை. மேலும் மேலும் கைகளை அடித்துக்கொள்ள முயன்றான். ஒரு தடவை முழுகித் தண்ணீர் ஏகப்பட்டது உள்ளே இறங்கியது. நதி அவனைக் கடத்திக்கொண்டிருந்தது. இந்துமதியைக் கூப்பிட முயன்றான். பயம் அவனை நிரப்பியது.

தூர தூரமாகத் தன் கணவன் செல்வதையும் சீராக அவன் நீந்தாமல் பதற்றமாக அடித்துக்கொள்வதையும் பார்த்த இந்துமதி, திகைக்காமல், யோசிக்காமல் ஒரே பாய்ச்சலாகப் பட்டுப் புடவையுடனும் நகைகளுடனும் குதித்தாள்.

இரண்டு நாள் கழித்து அவர்கள் இருவரும் கொள்ளிடம் சேரும் கல்லணையில் கண்டெடுக்கப்பட்டனர்.

குறுக்கிட்டதற்கு மன்னிக்கவும். அவர்கள் அரை மணிக்கு முன் பேசிக்கொண்ட பேச்சைத் தொடர்வோம்...

ஆத்மா, ”கல்யாணம் என்பது லைஃப் டைம் சமாசாரம். நாம் ஒருவரையருவர் மெதுவாகத் தெரிந்துகொள்வோம். நிறைய ‘டயம்‘ இருக்கிறது. ஒருவிதத்திலே அது ஒரு ‘காம்பிள்’. நம் சுதந்திரம் கொஞ்சம் பறிபோகிறது. இனி மேல் நமக்கு ஒரு பொறுப்பு. அதுவும் எனக்கு ஒரு பொறுப்பு. உன்னைத் தனியாக அழைத்துக்கொண்டு போய், பாஷை தெரியாத காட்டில், ஒரு வீட்டில் அடைக்கப் போகிறேன். அங்கே நாம் இரண்டு பேரும்தான். சந்தோஷமாக இருக்க முயல வேண்டும். சந்தோஷமாக இருக்க வேண்டும். ‘கன்னா பின்னா‘ என்று குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடாது. இரண்டு வருஷம் ‘இடைவெளி’. என்ன?”

இந்துமதி சிரித்தாள். தலைகுனிந்து கன்னங்கள் நிறம் மாறின.

”அப்புறம் சில புத்தகங்கள் தருகிறேன். படிக்கணும். இந்தி கற்றுக்கொள்ள வேண்டும். அப்புறம் என்கிட்டே என்ன பிடிக்கிறது... என்ன பிடிக்கவில்லை என்று சொல்லு.”

மௌனம்.

”ம்... சொல்லு...”

”உங்களை எனக்கு நாலு நாளாகத்தானே தெரியும்!”

”நாலு நாளிலே என்ன என்ன பிடிக்கவில்லை சொல்லேன். என்னிடம் நீ ஃப்ரீயாக இருக்க வேண்டும்.”

”...”

”டாமிட்! சொல்லேன். ஏதாவது இருக்குமே!”

”டாமிட்... டாமிட் என்று நீங்கள் அடிக்கடி சொல்கிறது பிடிக்கலை” என்றாள் தயக்கமாக.

”வெரிகுட். அப்புறம்?”

”ம். யோசிக்கிறேன்.”

”யோசி.”

”தலையை இப்படிப் படியாமல் வாரிக்கொள்வது...”

”ஓ மை காட்!” என்று தலையைக் கோதிக்கொண்டான்.

”என்கிட்ட என்ன பிடிக்கலை உங்களுக்கு?”

”ஒன்றே ஒன்றுதான் பிடிக்கவில்லை.”

”என்ன?” என்றான் ஆவலுடன்.

”என்ன.... நீ இரண்டு மூன்று தடவை ‘அத்தான்‘ என்று கூப்பிட்டது. அத்தான் என்பது என் அகராதியில் ஆபாச வார்த்தை. சினிமா எக்ஸ்ட்ராக்களை ஞாபகப்படுத்தும் வார்த்தை.”

”எப்படி உங்களைக் கூப்பிடுவது என்று எனக்குத் தெரியவில்லையே!”

”ஆத்மா என்று.”

”முடியாது... செத்தாலும் முடியாது.”

”சொல்லு, ஆ...”

”ஆ...”

”த்...”

”த்...”

”மா...”

”மா...”

”ஆத்மா!”

சிரித்தாள். ”ஹூம்” என்று தலையாட்டினாள். அவன், அவளை மார்பில் தொட்டான். பனி போல் உறைந்தாள்.

”நான் தொட்டால் பயமாக இருக்கிறதா?”

”இல்லை, வெட்கமாக!”

”உன்னைத் தொடுவதற்கு எனக்கு லைசென்ஸ் இருக்கிறதே?”

”இப்படி லைசென்ஸ் என்று சொல்வது எனக்குப் பிடிக்கவில்லை. என்னை உங்களுக்குப் பிடிக்கிறதா?”

”இது என்ன கேள்வி?”

”என்னை உங்களுக்குப் பிடிக்கிறதா?”

”பாதாதிகேசம் ஒவ்வொரு சதுர மில்லி மீட்டரும் பிடிக்கிறது.”

”நான் உங்களுக்குத் தகுதியானவளா?”

”எல்லா விதத்திலும்.”

”அதிகம் படிக்கவில்லையே?”

”ஸோ வாட்?”

”எனக்கு முன்னால் எத்தனை பெண்களைப் பார்த்தீர்கள்?”

”36,621.”

”வேடிக்கை வேண்டாம். நிஜமாகச் சொல்லுங்கள்.”

”நான் பார்த்து ஆமோதித்த ஒரே, முதல் பெண் நீ.”

”என்னைப் பார்த்தபோது, முதலில் பார்த்தபோது என்ன தோன்றியது உங்களுக்கு?”

”உன்னைப் பார்க்கவேயில்லையே! நீதான் குனிந்த தலை நிமிரவில்லையே!”

”பின் எதற்காகக் கல்யாணம் செய்துகொண்டீர்களாம்?”

”இதற்காக” என்று சொல்லிவிட்டு, அவன் அவளைத் தொட்டதை அவள் விரும்பவில்லை. கோபித்துக்கொண்டாள். பொய்க் கோபம்.

”உங்களுக்கு எவ்வளவு சம்பளம்?”

”டேக் ஹோம் பே 621. அதில் 300 ரூபாய் உனக்கு வீட்டுச் செலவுக்குக் கொடுத்துவிடுவேன். போதுமா?”

”நான் 300 ரூபாய் நோட்டுக்களைச் சேர்த்தாற்போல் பார்த்ததில்லை இதுவரை.”

”பார்க்கப் போகிறாயே…”

”உங்களுக்கு ஆக்ட்டர்ஸ் யாரார் பிடிக்கும்?”

”சிவாஜி கணேசன், பால்நியூமன்.”

”அப்புறம்?”

”கே.ஆர்.விஜயா.”

இந்துமதிக்கு கே.ஆர்.விஜயாவின் மேல் பொறாமை ஏற்பட்டது.

”உனக்கு என்ன புத்தகம் பிடிக்கும்?”

”எனிட் பிளைட்டன்.”

”பதினைந்து வயதுப் பெண்கள் படிக்கிற புத்தகம் அது.”

”எனக்கு என்ன வயசு?”

”பதினைந்தா?”

”என்னப் பார்த்தால் என்ன வயது மதிப்பிடுவீர்கள்?”

”நான்கு.’‘

கோபித்துக்கொண்டாள். ”நான் சத்தியமாக உங்களுடன் பேசவே போகிறதில்லை.”

ஆத்மா சிரித்தான். அதில் உண்மையான சந்தோஷம் நிலவியது. அதன் பின் அவர்களிடையே பிரமாதமான, பூராவும் ஒருவரை ஒருவர் உணர்ந்த, பேச்சுக்கு அவசியமில்லாத கொஞ்ச நேரம் அற்புத மௌனம் நிலவியது. அவர்களும் அந்தச் சூரியனும் அந்த இடத்து மூன்று பெரிய உண்மைகளாக... அதன் பிறகு இந்துமதி ஆத்மாவைக் கேட்டாள்...

”உங்களுக்கு நீந்தத் தெரியுமா?”

சுஜாதா கூறுகிறார்... (விமர்சனங்கள் – என் அனுபவம்)

ரொம்ப நாள் முன்னால் என் சிறு கதையான ‘ஒரே ஒரு மாலை‘ ஆனந்த விகடனில் வெளி வந்த போது, மூத்த விமர்சகரான க.நா.சுப்ரமண்யம்

அந்தக் கதையைக் குறிப்பிட்டு, ‘இந்தக் கதை என்னைப் பிரமிக்க வைத்தது. இந்த எழுத்தாளர் பிற்காலத்தில் பெரிய ஆளாக வருவார்’ என்று எழுதி விட்டார். அதற்கு பல பேர் அவரைக் கோபித்துக் கொண்டிருக்க வேண்டும் — ‘என்ன விமர்சகன் நீ! சுஜாதா கதையைப் போய் நன்றாக இருக்கிறது என்கிறாயா ? மஹா பாவம் அல்லவா ?’ என்று. அதன்பின் க.நா.சு. என்னைப் பற்றி எழுதுவதையே நிறுத்திவிட்டார். டில்லியில் எதாவது கூட்டத்தில் பார்த்தால், அவர் கறுப்புக் கண்ணாடியை அணிந்து கொண்டு வெளியே ஜன்னலைப் பார்த்துக் கொண்டிருப்பார். இன்றும் பல க.நா.சுக்கள் இருக்கிறார்கள்.

********** ****

அயோத்யா மண்டபம்

கிருஷ்ணமூர்த்தி குரலில் உற்சாகம் பொங்க போன் செய்தான், ‘‘கண்ணே கலைச்செல்வி, பாஸ்போர்ட், ஏர்டிக்கெட் எல்லாம் தயார். வெள்ளிக்கிழமை சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் ப்ளைட்டில ஷய்க்! சிங்கப்பூர் நாரிட்டா சான்ஃப்ரான்சிஸ்கோ ஆண்டர்சன் ஏர்போர்ட்டுக்கு வந்துருவான், எல்லாம் பேக் பண்ணிட்டயோல்லியோ?’’

‘‘இன்னும் திணிச்சுகிட்டே இருக்கேன்’’ என்றாள் கலை.

‘‘நாசமாப் போச்சு, ஒரு மாசமாத் திணிச்சுண்டிருக்கே, இன்னும் முடியலையா?

‘‘ஒரு மாசமா கணவன் போத்திகிட்டு படுத்துக்கிட்டிருந்தா?’’

‘‘ரெண்டு நாள்தான் இருக்கு. மாம்பலத்துக்குப் போய்த் தலையைக் காட்டிட்டு வந்துர்றேன்’’.

‘‘நானு?’’

கிருஷ்ணமூர்த்தி தயங்கினான். ‘‘ம்.. நீ வேண்டாம். கலை... இப்ப வேண்டாம். அப்பாக்கு இன்னும் சமாதானமாகல்லை.’’

அவள் குரல் உயர்ந்தது. ‘‘எப்ப சமாதானமாவார், எனக்கு அறுபது வயசாகணுமா?’’

‘‘சே சே குழந்தை பெத்துகிட்டப்புறம்.’’

‘‘நான்சென்ஸ். நான் என்ன வேற்று கிரகத்து மனுசியா?’’

‘‘பாரு, சந்தோஷ சமயத்தில் இந்த டாபிக் வேண்டாமே’’

‘‘நாம யு எஸ் போவுறது உங்கப்பாருக்குத் தெரியுமில்ல?’’

‘‘இன்னும் சொல்லலை’’

‘‘பாரு கிருஷ், சரியாகக் காதில வாங்கிக்க உங்கப்பாவைச் சந்திக்காமப் புறப்படறது எனக்குப் பிடிக்கலை. டாமிட். மாமனாரைப் போய்ப் பாத்தா என்ன? கடிச்சுருவாரா? நான் என்ன பாவம் செய்தேன்?’’

‘‘அப்படி இல்லை கலை, மைகாட்... நான் இதை எப்படி... ஆல்ரைட் சரி முதல்ல நான் போய்ப் பூர்வாங்க வேலைகளைக் கவனிக்கறேன். புறப்படறதுக்கு முன்னாடி பார்க்கணும்கறான்னு சொல்லிப் பார்க்கறேன். சரி கூட்டிண்டு வான்னா...’’

‘‘அந்த அளவுக்கு என்னை வெறுக்க காரணம் என்ன?’’ என்று கண்ணீரை ஒத்திக் கொண்டாள்.

‘‘உனக்குப் புரியாதும்மா, அவங்களுக்கு என்னால எவ்வளவோ மனத்தாங்கல்... ஏமாத்தம்’’.

‘‘என்னை அவங்க பாத்தது கூட இல்லையே.’’

‘‘அம்மாகிட்ட போட்டோ காட்டிருக்கேன்’’.

‘‘அது போதாது’’

‘‘சரி சரி சரி கத்தாதே’’

‘‘பாரு கிருஷ், முதல்ல உனக்குத் தைரியம் வேணும். உங்கப்பாம்மாவைச் சந்திக்காம நான் அமெரிக்கா வரமாட்டேன். நாம செஞ்சுகிட்டது என்னவோ சொல்வாங்களே ‘காந்தர்வ விவாஹம்’ இல்லை ரிஜிஸ்ட்ரார் முன்னால நண்பர்கள், பெரியமனுசங்க சாட்சியோட ...’’

‘‘ஆல்ரைட், வெள்ளிக்கிழமைக்குள்ள கூட்டிண்டு போறேன்’’.

‘‘ஏர்ப்போர்ட் போறதுக்கு முன்னே அஞ்சு நிமிஷமா.’’

‘‘ஹய்யோ கூட்டிண்டு போறேங்கறேனே’’ என்றான் அதட்டலாக. இப்ப ஒரு கிஸ் குடு. என்றுஅவளை அணைத்துக்கொள்ள முற்பட்டவனைத் தள்ளினாள்.

மேற்கு மாம்பலத்தில் இரண்டு பல மாடி நடுத்தரக் குடியிருப்புகளின் மத்தியில் அபத்திரமாக வாழ்ந்து கொண்டிருந்தது அந்த ஓட்டு வீடு, அப்பா வாசலில் தொடையில் திரித்து தகளி நூற்றுக் கொண்டிருந்தார். முன்பு பார்த்ததற்கு மெலிந்திருந்தார். முகத்தில் ஒரு வார தாடி, குடுமி.

அவனை மேலும் கீழும் பார்த்து நூற்பதைத் தொடர்ந்தார். ''பார்வதி உன் பிள்ளை வந்திருக்கான். நான் கடைக்குப் போறேன்'' என்று எழுந்தார்.

''கொஞ்சம் இருப்பா உன்னோடதான் பேசணும்.''

அவர் அவனை அடிபட்ட பார்வையுடன் பார்த்தார்.

''எங்கிட்ட பேச என்ன இருக்கு. எல்லாம் சந்தி சிரிக்க பேசியாச்சே''

''நான் பேசவந்தது சந்தோஷமான விஷயம்பா.''

''உங்கிட்ட எனக்கு பேச ஏதும் இல்லை, கிச்சா. நீ எங்களுக்குத் துரோகம் பண்ணிட்ட. முதுகில குத்திட்ட. அதை முதல்ல ஒத்துக்கோ''.

''சரிப்பா சரி. நாங்க ரெண்டு பேரும் வர வெள்ளிக்கிழமை அமெரிக்கா போறோம்''.

''தாராளமா போ, லோகத்தையே ஜெயிச்சுட்டு வா.''

''போறதுக்கு முன்னால கலைச்செல்வி உங்க ரெண்டு பேரையும் சந்திக்கணும்ங்கறா''.

''கலைச் செல்விங்கறது...?''

''விளையாடாதப்பா, என் அகமுடையாள் கலைச்செல்வி''.

''ஓ... உனக்கு கல்யாணம் ஆயுடுத்தா.''

''ஏம்பா இப்படி படுத்தறே. எத்தனை நாளைக்குப்பா கோபம்? நான் என்ன செய்யணும்னு விரும்பற? வீடு வீடா போய் அமாவாசை தர்ப்பணம் பண்ணி வெக்கணும்னா.. மண்டபத்தில உக்காந்துண்டு

ருத்ரம் சமகம்னு...'' இதற்குள் அம்மா வந்து அவனைக் காப்பாற்றி உள்ளே அழைத்துச் சென்றாள்.

''அவருக்கு இன்னும் கோபம் ஆறலை. ரொம்ப அவமானப்பட்டு போய்ட்டோம். அந்தப் பொண்ணு மேல எங்களுக்கு எந்த விரோதமும் இல்லை கிச்சு. நடராஜையருக்கு வாக்குக் கொடுத்து தவறிட்டோம். பந்தக்கால் நட்டாச்சு. கல்யாண மண்டபம் புக் பண்ணி திருமாங்கல்யம் பண்ணியாச்சு. நாயனக்காராளுக்கு சொல்லியாச்சு.''

''தெரியும்மா, தெரியும்மா ''அதனால பவித்ராவுக்கு கல்யாணம் ஆகாம போச்சா சொல்லு''.

''கொத்திண்டு போயாச்சு. என்ன அழகு, என்ன படிப்பு, நமக்குத்தான் கொடுத்து வெக்கலை. என்ன காதல் கன்றாவியோ, உன் ஆம்டையா கருப்பா சேப்பான்னு கூட தெரியாது. அந்த அழகு இருப்பாளாடா?''

''போட்டோ காட்டினேனம்மா'.

''பாத்தேன். கொஞ்சம் பூசினா மாதிரி உனக்கு அக்கா மாதிரி இருக்கா''.

''அம்மா!'' என்று அதட்டலாகத் தாயைப் பார்த்தான்

''ரெண்டு பேருக்கும் அமெரிக்காவில் ஒரு பெரிய அசைன்மெண்ட் கிடைச்சிருக்கு. போறதுக்கு முந்தி நீதான் அப்பாவைச் சமாதானப்படுத்தி வெக்கணும் நாளைக்கு.''

''வா இப்பவே கேட்டுரலாம்''.

திண்ணைக்குத் திரும்ப வந்தபோது அப்பா, ''எங்க என் பனியன்'' என்று கேட்டார். ''இருக்கியா சாப்பிட்டுட்டுப் போ?''

அம்மா அழுத்தமாகவே சொன்னாள். ''போனாப் போறதுன்னா... அவளை வரச் சொல்லலாமே. கல்யாணமோ ஆய்டுத்து, பெரியவாதான் தாழ்ந்து போக வேண்டியிருக்கு''.

''இப்ப என்ன சொல்றே? பாக்க மாட்டேன்னு சொன்னா வத்தக்கொழம்பு பண்ணமாட்டியா?''

‘‘அந்தப் பொண்ணு உங்ககிட்ட வந்து ஆசீர்வாதம் வாங்கிக்கணுமாம்.’’

‘‘என்ன விசேஷம்?’’

‘‘சொன்னேனேப்பா, ரெண்டு பேரும் அமெரிக்கா போறம். குறைந்த பட்சம் ரெண்டு வருஷத்துக்கு பாக்க முடியாது.’’

‘‘அதுவரைக்கும் இருக்கமாட்டேன்னு சந்தேகமா?’’

‘‘என்ன பேச்சு இதெல்லாம்?’’

அப்பா நூற்ற நூலை சீராக பூணூல் பிரியாகப் பண்ணி, பிரம்ம முடிச்சுப் போட்டு, மஞ்சள் தொட்டு லாகவ விரல்களால் ஒரு பரத நாட்டிய முத்திரைபோலத் திருப்பி எட்டு வடிவில் சுற்றிச் சுற்றி விரல்களின் ஊடே சேகரித்தார். மௌனமாக காத்திருந்தான். அவர் நெற்றியில் யோசனை ஓடியது.

‘‘சரி! அமாவாசை வருது. நான் கடைல இருப்பேன். அங்க வந்து பாக்க சொல்லு. அந்த பொண்ணை நான் பாக்கணும், அவ்வளவுதானே?’’

‘‘பாத்து பேசணும்ப்பா. ரொம்ப நல்ல பொண்ணு’’

கிருஷ்ணமூர்த்தி பேருவகையில் உடனே கலைச் செல்விக்கு செல்லடித்தான்.

‘‘கலைக்குட்டி குட் நியூஸ். நீ உடனே அயோத்தியா மண்டபம் வரே’’.

‘அயோக்கியா மண்டபமா? அது எங்கருக்கு’’

‘‘அயோத்யா... அயோத்யா ராமர் பிறந்த ஊர்’’

‘‘மாம்பலத்திலயா பொறந்தாரு’’.

‘‘கட் தி காமெடி! நீ என்ன பண்றே, மேற்கு மாம்பலத்தில அயோத்தியா மண்டபம்னு இருக்கு. ஆட்டோகாரன்கிட்ட கேட்டா சொல்வான். அங்க வந்துரு’’.

‘‘உங்கப்பா அந்த மண்டபத்திலயா குடியிருக்கார்?’’

‘‘இல்லைடி, அவர் கடை எதுத்தாப்பல இருக்கு.’’

‘‘என்ன கடை?’’

‘‘நீ வந்து பாரேன்’’ என்றான்.

‘‘அப்பா, இதான் கலைச் செல்வி’’.

அவர் ஒரு முறை நிமிர்ந்து அவளைப் பார்த்துவிட்டு, வேறு யாரையோ ‘‘வாங்கோ, சவுண்டிகரணம் சுபஸ்வீகாரம் ஆச்சா?’’ என்றார். கலைச்செல்வி அந்தக் ‘கடையை’ வினோதமாகப் பார்த்தாள். நாமக்கட்டி, விபூதிப் பொட்டலம், குங்குமம், ஓலைப்பெட்டி, தோத்திரபுத்தகங்கள், திருப்பதி பெருமாள் படம் பல சைஸ்களில், சல்லிசு மர வேலைப்பாடுள்ள பெட்டிகள், உருத்திராட்ச மாலைகள், இச்சிலி பிச்சிலி சாமான்கள். மொத்தம் அந்தக் கடையில் ஐம்பது ரூபாய்க்குத்தான் பொருள் இருக்கும் போலத் தோன்றியது.

‘‘அய்யா, நானும் உங்க மகனும் ஐ.ஐ.டி.யில ஒண்ணா படிச்சோம். ஒண்ணா ஒரே கம்பெனியில வேலை பாக்கறோம். கிருஷ் ஒரு ஜெம். ரொம்ப நல்லா வளத்திருக்கீங்க’’.

‘‘ராங் ஓப்பனிங், பார்ட்னர்’’ என்று முணுமுணுத்தான்.

‘‘ம் வளத்தது யாரு’’ என்று ஏளனமாகப் பார்த்தார்.

‘‘ரெண்டு பேருக்கும் ஒரு ப்ராஜெக்ட் விஷயமாக அமெரிக்கா போற சான்ஸ் கெடைச்சிருக்கு’’.

‘‘எல்லாம் சொன்னான் தாராளமா போய்ட்டு வாங்கோ’’.

‘‘அய்யா, இது என்ன கடை?’

‘‘பூணூல், தர்ப்பை சமாசாரங்கள். பிராமின்ஸுக்கு ஏகப்பட்ட கடமைகள், சம்பிரதாயங்கள் இருக்கும்மா. தாயார், தோப்பனார் சொல்றைத கேக்கணும் முதல்ல. அதெல்லாம் யார் இப்ப பாக்கறா.

வில்வ இலை, தர்ப்பை பூணூல் மாத்தறது மாசியம் சோதம்பம்னு சடங்குகள் மட்டும் பாக்கியிருக்கு.''

''இதெல்லாம் சாமி சமாசாரம்ங்களா?''

''சாமி மட்டும் இல்லை பித்ருக்களை அப்பப்ப கூப்ட்டு சிரார்த்தம் பிண்டாதானம் செய்ய வெக்கறது. இது எங்க பேமிலியோட பரம்பரைத் தொழில். இது என்னோட நின்னு போகட்டும். இவனை இவம்மா திருமாங்கல்யத்தைக் கூட வித்து. படிக்க வெச்சோம்.''

''எங்கப்பா உழவு மாட்டை வித்தாருங்க''.

''ஏம்மா அம்மாப்பா வச்சபேரே அது என்னது... கலைச்செல்விதானா இல்லை பணங்கட்டி மாத்திண்டதா?''

''இல்லங்க.. ஒரு பேர்தான் கலைச்செல்வி''

''உங்கம்மா பேரு''.

''தமிழ்ச்செல்வி''.

''அம்பாள் பேரா ஏதும் இல்லையா''.

''கலைச்செல்வின்னா சரஸ்வதிப்பா''.

''நீங்கள்ளாம் என்ன ஜாதி?''

''போச்சுரா!'' என்று கிருஷ்ணமூர்த்தி' ''அப்பா அது வந்து, எனக்கே அது தெரியாது'' என்று குறுக்கிட்டுப் பார்த்தான்.

''இர்றா''.

''க்ருஷ்ணி, பெரியவர் கேக்கட்டும். நான் சொல்றன். அய்யா. நாங்க வந்து பிற்பட்டவங்க''.

''பிற்பட்டவங்கன்னா என்ன ஜாதி?''

அவள் சொல்வதற்குள் ஒரு ஆட்டோ வந்து நின்றது. அதில் முன் சீட்டில் இருவர், பின் சீட்டில் மூவர் என்று ஐந்து பேர் பளபளவென்று உருட்டுக்கட்டைகளுடன் இறங்கி வந்து 'மடேர் மடேர்' என்று அப்பாவின் மண்டையிலும் தோளிலும் தாக்கினர். ஒருவன் கத்தியால் விலாவில் தாக்க, கலைச் செல்வி குறுக்கிட்டாள். ''த்தா சாவுங்கடா'' என்று கடையில் இருந்த அனைத்தையும் கவிழ்த்து விட்டு பெட்ரோல் குண்டு வீசி விட்டு இன்ஜின் ஓடிக் கொண்டிருந்த ஆட்டோவில் மீண்டும் பாய்ந்து ஏறிச் சென்றனர். புரியாத வாழ்க கோஷம் காற்றில் கரைய, கலைச்செல்வியின் கரங்களில் அப்பாவின் ரத்தம் பிசுபிசுத்தது.

ட்ராவல் ஏஜெண்டிடம் சொல்லி பிரயாண ஏற்பாடுகளை தள்ளி வைத்து விட்டு டிக்கெட்டுகளை ரீ புக்கிங் செய்யச் சொல்லிவிட்டு கிருஷ்ணமூர்த்தி பி.ஆர். ஆஸ்பத்திரிக்கு வந்தான். ஒன்பதாவது அறையில் கலைச்செல்வி அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு ஸ்பூனில் ஆர்லிக்ஸ் புகட்டிக் கொண்டிருந்தாள். அவர் தோளிலும் தலையிலும் கட்டுப்போட்டிருந்தது. ஒரு கண் இடுங்கியிருந்தது. உதடு தடித்திருந்தது.

''நல்ல வேளை தப்பிச்சிங்கப்பா''.

''எதுக்கு என்னை அடிச்சா? எதுக்கு கடையை எரிச்சா? நான் யாருக்கும் துரோகம் பண்ணலையே'' என்றார் மெலிய குரலில்.

''சில கேள்விகளுக்கு விடையே கிடையாதுப்பா''.

''நல்ல வேளை நீங்க ரெண்டுபேரும் தப்பிச்சது தெய்வாதினம்தாம்மா. அமெரிக்கா போற சமயத்தில ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆகலை! அவங்களை புடிச்சட்டாளாமே''

''வேற யாரையோ ரௌடி ஷீட்டரை அரஸ்ட் பண்ணி வச்சுட்டு என்னை அடையாளம் காட்டச் சொன்னாப்பா. எல்லாம் கண்துடைப்பு!''

நர்ஸ் வந்து, ''க்ளுக்கோஸ் கொண்டு வந்ததா?'' என்று கேட்டாள். கிருஷ்ணமூர்த்தி க்ளுகோஸ் பாட்டில்களைக் கொடுத்தான்.

''டயபடிஸ், பிபி எதும் இல்லைப்பா உனக்கு. ஒரு வாரத்தில் டிஸ்சார்ஜ் பண்ணிடுவாப்பா''.

‘‘அமெரிக்கா போகலையா?’’

‘‘ஒரு வாரம் போஸ்ட்போன்பண்ணிட்டோம்பா’’ என்றாள் கலை. அவர் தலையைத் தடவிக் கொடுத்து உதட்டில் எச்சிலைத் துடைத்துவிட்டாள். ‘‘எவ்வளவு தலைமயிர்ப்பா உங்களுக்கு! கிருஷ்ஷ, சீப்பு கொண்டு வரச்சொன்னனே?’’

‘‘கலை! அவன் போகட்டும். நீ இரேம்மா. எங்க கூட இரேன்.’’

கலைச் செல்வி கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்தாள். அவன் சிரித்து, ‘‘இல்லைப்பா இவதான் சிஸ்டம் ப்ரொக்ராமர். நான் ஆர்கிடெக்ட். ரெண்டு பேரும் போகணும்.’’

‘‘சரி நல்லபடியா போய்ட்டு வாங்கோ. அது என்ன எடம்?’’

‘‘ஸான் ஹோஸே, சாக்ரமெண்ட்டோன்னு ரெண்டு எடத்தில், கலிஃபோர்னியாலப்பா’’.

‘‘அங்க அம்மாவாசை தர்ப்பணம் பண்ணி வெக்கறவா யாராவது நம்மவா இருக்காளா? விஜாரி, தர்ப்பையைத் தூக்கிண்டு வந்துர்றேன். என்னால இனிமே அடி தாங்கமுடியாது’’ என்றார்.

கலைச்செல்வியின் கண்ணீர் அவர் மணிக்கட்டில் உருண்டது.

********** *****

வாட்டர் கார் விவகாரம்

‘அன்புள்ள டாக்டர் ராகவானந்தம்,உங்கள் 16-8-73 தேதியிட்ட விண்ணப்பம் கிடைக்கப் பெற்றோம். நீங்கள் குறிப்பிட்ட முறைப்படி தானியங்கும் ஊர்தியொன்றைத் தயாரிப்பது விஞ்ஞான முன்னேற்றத்தின் தற்போதைய நிலையில் சாத்தியம் இல்லை என்று அரசாங்கம் நம்புவதால் உங்கள் விண்ணப்பத்தை ஏற்பதற்கில்லை.இக் கடிதம் உங்கள் 17-8-73 தேதியிட்ட ஞாபகக் கடிதத்தையும் தீர்வு செய்கிறது. உங்கள் விசுவாசமுள்ள கூப்சந்த் காரியதரிசி, இந்திய அரசாங்க வர்த்தகத் தொழில் துறை அமைச்சகம்.’

சிங்க முத்திரைக் கடிதத்தை மடித்தேன். எதிரே டாக்டர் ராகவானந்தம் சிவந்த மூக்குடன் நின்றிருந்தார்.

”நான் இவர்களுக்கு எழுதியது தப்பு. சுப்ரமணியத்துக்கு நேராக எழுதி இருக்க வேண்டும்.”

”நீங்கள் என்ன எழுதியிருந்தீர்கள்?”

”ஒரு கார் தயாரிப்பதற்கு லெட்டர் ஆஃப் இன்டெண்ட் கேட்டிருந்தேன்.”

”கார் தயாரிப்பதற்கா? பேஷ். பெட்ரோல் விற்கிற விலையில் இப்போது எதற்கு என்று அவர்கள்…”

”என் கார், வாட்டர் கார். அதற்கு பெட்ரோல் வேண்டாம்.’

”புரிந்தது, போட் மாதிரியா? பரிசல், ஓடம் மாதிரியா?”

”இல்லை. தரையில்தான் ஓடும். பெட்ரோலுக்குப் பதில் தண்ணீர். ஜஸ்ட் வாட்டர்.”

”டாக்டர், எங்கே அந்த கார்? நான் ஓட்டிப்பார்க்க வேண்டும்.”

டாக்டர் தன் இடது புருவத்துக்கு ஒரு சென்டிமீட்டர் மேலே தட்டி, ”இங்கேதான் இருக்கிறது. இரண்டு மாதம் பொறு. டிசைன் தயாராகிவிட்டது. எனக்கு வேண்டியது ஒரு பட்டறை, ஒரு மெக்கானிக், ஒரு வெல்டிங் செட். பொறு.”

டாக்டர் அவர்கள், தன் வாட்டர் கார் வேலை செய்யப் போகிற விதத்தை எனக்கு விளக்கியபோது நான் அயர்ந்துபோய் விரலில் மூக்கை வைத்து, ”ஒண்டர்ஃபுல் டாக்டர். கை கொடுங்கள்” என்று அவர் கையைப் பற்றிக் குலுக்கினேன். ”இது நிச்சயம் வேலை செய்யும். கையில் என்ன டாக்டர் பிசுபிசு என்கிறது- திருநெல்வேலி அல்வா மாதிரி?”

”வஜ்ரப் பசை. என் முதல் மாடலை என் சொந்தச் செலவிலேயே தயாரிக்கப்போகிறேன். தயாரித்து பத்திரிகைக்காரர்களைக் கூப்பிட்டு அவர்களை காரில் அழைத்துச் சென்று, ‘இதோ பார், இதற்குத்தான் அரசாங்கம் அனுமதி தர மறுத்துவிட்டார்கள்’ என்று சொன்னால்...”

”அப்புறம் இந்திராவிடமிருந்து போன். ‘டாக்டர், ஐயாம் எக்ஸைட்டட்...’ ”

”விஷயத்தை உனக்குள்ளேயே வைத்துக்கொள். ஐடியாவைத் திருடிவிடுவார்கள். அப்புறம் சந்திக்கலாம்” என்று என்னை வெளியே தள்ளி அறைக் கதவைத் தாளிட்டுக்கொண்டார்.

அந்த மேதையை நினைத்துக்கொண்டே நடக்கையில் மோதிக்கொண்டேன், மாலதியின் மேல்.

”ஹலோ மாலதி...”

அவள் தன் ஆண்பிள்ளைச் சட்டையை உதறிக்கொண்டாள். ”யார் நீங்கள்?”

நான் என் தலைமுடியைப் பிரித்துக் காட்டினேன்.

”யூ?”

”ஆம்! அதே யூ. யுவர்ஸ் ட்ரூலி.”

”மேலே மயிர் ஜாஸ்தி வளர்த்திருக்கிறாய். எங்கே வந்தாய்?”

”உன்னிடம் ஒரு ரகசியம் சொல்ல வேண்டும்.”

”என்ன..? நீ முன்று மாதம் முழுகாமல் இருக்கிறாயா?”

”ஹ்ஹ. சிரித்தாகிவிட்டது. இனி ரகசியம். உன் அப்பா இன்னும் இரண்டு மாதத்தில் லட்சாதிபதி ஆகிவிடுவார்.”

”அடுத்த மாதம் அப்பா லட்சாதிபதியாவதை விவித் பாரதியில் நிரோத் விளம்பரம் போல நிறைய தடவைக் கேட்டாகிவிட்டது.”

”டாக்டர், அவர்கள் இந்தத் தடவை ஒரு தங்கச் சுரங்கத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். பெட்ரோல் இல்லாமல் போகும் கார்.”

”தள்ளினால் எல்லா காரும் போகும்.”

”ச்ச்ச். இரண்டாவது உலக யுத்த ஜோக். டாக்டரின் கார் தண்ணீர் சக்தியால் போகிறது. ஹைட்ராலிக் டர்பைன் பிரின்சிபிள் தெரியுமா உனக்கு?”

”தெரியாது. தேவை இல்லை. நீயும் அப்பாவும் சேர்ந்து அடித்த கூத்தெல்லாம் நான் மறக்கவில்லை. உன் மாதிரி மறை கழன்ற ஆசாமிகளுடன் பேச எனக்கு நேரமில்லை. உனக்கு வேறு வேலை இல்லை என்றால் பனகல் பார்க்கில் சிமென்ட் பெஞ்ச்சில் உட்காரப் போ.”

அது நிகழ்ந்து ஒரு மண்டலம் வரை, என்னால் டாக்டர் அவர்களைச் சந்திக்க முடியவில்லை. ஒரு மாலை பெரியண்ணன் கடையில் மசாலா டீ சப்பிக்கொண்டு இருந்தபோது, என் எதிரே அரை வேஷ்டியை முண்டாசாக அணிந்து, காதில் பீடி செருகி இருந்த சைக்கிள் ரிக்ஷா ஓட்டி ஒருவனும் அவன் நண்பனும் பேசிக்கொண்டு இருந்தது என் கவனத்தைக் கவர்ந்தது.

”நாளைக்குத்தான்டா ஓடுதாம்.”

”இன்னாடா?”

”காரு. தண்ணி போட்டா ஓடுதாம். ஒரு கெய்வன் கண்டுபிடிச்சிருக்கானாம். இத பார், போட்டிருக்கு.”

”இன்னாடா இது ஜீனி வேலை? டைவர் தண்ணி போட்டா காரு ஓடுதா? அட!”

”ஐயா! அந்த செய்தித்தாளை சற்றுத் தருகிறீர்களா?”

”இன்னா நய்னா... ஷோக்கா சட்டையெல்லாம் போட்னுகீறே? தமிள்ள பேசறே. பாஞ்சு பைசா கொடுத்து வாங்க்யேன்.”

நான் அவன் சொல்வதில் நியாயமிருப்பதை உணர்ந்து, அந்தப் பத்திரிகையைக் காசு கொடுத்து வாங்கிப் பார்த்தேன். அதில்-

நாளை வெள்ளோட்டம்!

நீரில் ஓடும் சிற்றுந்து(கார்)!

பெட்ரோல் தேவையில்லை!

அந்தப் பத்திரிகை ஆபீஸில் உள்ள ஆச்சர்யக்குறிகள் அனைத்தையும் விரயமாக்கி, டாக்டர் ராகவானந்தத்தின் அதிசய கார் நாளை மக்கள் முன் பவனி வரப்போகும் செய்தி முன் பக்கம் முழுவதும் பரவி இருந்தது.

நான் உடனே டாக்டருக்கு டெலிபோன் செய்தேன்.

”பையா, எங்கே காணாமல் போய்விட்டாய் உடனே வா.”

நான் பறந்து அங்கே சென்றபோது மாலதி ஸ்டார் டஸ்ட் படித்துக்கொண்டு இருந்தாள். என்னைப் பார்த்துவிட்டு மறுபடி படிப்பில் ஆழ்ந்தாள்.

”மால், டாக்டர் எங்கே?”

”ஷெட்” என்றாள், அதைவிடச் சுருக்கமான வார்த்தை கிடைக்காததால்.

”கார் ஓடுகிறதா?”

அவள் என்னைப் புரியாமல் பார்த்தாள்.

”கார்?”

”வாட்டர் கார்?”

”எனக்கு என்ன தெரியும்?”

”மாலதி, நாளைக்கு இனாகுரேஷன். பேப்பர் பார்க்கவில்லையா?”

”அப்படியா? சென்ற பதினைந்து நாட்களாக ஷெட்டில்தான் இருக்கிறார். அங்கேதான் சாப்பாடு, உப்புமா, காபி எல்லாம் போகிறது. உள்ளே என்ன செய்கிறார் என்பது எனக்குத் தெரியாது. எனக்கு இது மட்டும் தெரியும். நாளைக்கு இங்கே ரகளை, அடிதடி நடக்கப்போகிறது; நான் மாடியிலிருந்து பார்த்துக்கொண்டு இருப்பேன். இதோ அப்பா.”

டாக்டர் அவர்கள் ஈஸ்ட்மென் கலரில் நடந்து வந்தார். உடம்பில் பச்சை பெயின்ட். காது நுனியில் மூக்குக் கண்ணாடியில் இடது செருப்பில் சிவப்பு பெயின்ட். உடம்பின் மற்ற சிற்சில இடங்களில் அங்கங்கே மஞ்சள் நிறம். இப்படி. கையில் ஒரு ஃப்ளிட் டின்.

”வந்துவிட்டாயா. மாலதி, பிரெஸ் கான்ஃபரன்சுக்குப் பிரம்பு நாற்காலிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சுவரில் நம்பர் எழுதியிருக்கிறேன். போன் பண்ணிவிடு.”

”டாக்டர், கார் ஓடுகிறதா?”

”ஓடும்... ஓடும். ஃபினிஷிங் டச்சஸ் கொடுத்துக்கொண்டு இருக்கிறேன். ஸ்ப்ரே பெயின்ட் அடித்துக்கொண்டு இருக்கிறேன். பையா, மாலதி கடைசியில் காலை வாரி விட்டுவிட்டாள். மாட்டேன் என்கிறாள்.”

”மாட்டேன், மாட்டேன், மாட்டேன்” என்றாள் மாலதி.

”என்ன மாட்டாய்?”

”நான் அந்த காரை நாளை ஓட்ட வேண்டுமாம். செத்தாலும் மாட்டேன். நீ அதைப் பார்த்தாயோ? அது கார் போலவே இல்லை. ஒட்டகம் போல் இருக்கிறது. அதில் நான் உட்கார்ந்து அதுவும் பத்திரிகைக்காரர்களின் முன்னிலையில்... சே.”

”ஒரு பெண் அதை ஓட்டினால் க்ளாமர் இருக்கும்.”

”டாக்டர், அது ஓடுமா?”

”ஓடாது” என்றாள் மாலதி.

”ஓடும்” என்றார் டாக்டர். ”நான் ஜாக் பண்ணி உயர்த்தி முந்நூறு மைல் ஓட்டிப் பார்த்தேன். பையா நான் உன்னைக் கூப்பிட்டதன் காரணம் அதுதான். நீதான் நாளைக்குப் பத்திரிகைக்காரர்கள் முன் என் காரை ஓட்டப்போகிறாய். இளம் சமுதாயத்தின் கார் இது. இளம் சமுதாயம்தான் ஓட்ட வேண்டும்...”

”நானா?”

”நீதான். சரித்திரம் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறது.”

”டாக்டர், எனக்கு டிரைவிங் லைசென்ஸ் இல்லை என்பது சரித்திரத்துக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.”

”மேலும், இவருக்கு ஈயைத் தவிர வேறு எதையும் ஓட்டத் தெரியாது என்பதும் சரித்திரத்துக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.”

”டாக்டர், நான் நாளைக்கு திருவான்மியூர் வரைக்கும் பொடிநடையாகப் போய்விட்டு வர வேண்டும். ஒரு வேண்டுதல்.”

”அப்பா, கழல்கிறார் பாருங்கள். கோழை. புறமுதுகு காட்டும் இழிதகை.”

எனக்கு ரோசம் வந்துவிட்டது. ”டாக்டர், ஆல்ரைட். உங்கள் காரை நான் ஓட்டத் தயார். மாலதி, கட்டுண்டோம். காத்திருப்போம். நாங்கள் சிரிக்கும் காலம் வரும். டாக்டர், நான் காரைப் பார்க்க வேண்டும்.”

”ஷி இஸ் எ ப்யூட்டி. வா, காட்டுகிறேன்” என்றார்.

ஷெட் கதவைத் திறந்ததும் என் மூஞ்சியில் அறைந்தது போல பளிச் என்று அந்த கார் தெரிந்தது. அதை கார் என்று அறுதியிட்டுச் சொல்வது கார்களின் வளர்ச்சிக்கு ஆக்கமளித்திட்ட சான்றோர்களைப் புறக்கணிப்பதாகும். கார் போலவும்இருந்தது. கார் இல்லை போலவும் இருந்தது. நல்ல உயரம். வாளிப்பான உடம்பு. அதன் மாடியில் ஒரு செப்டிக் டேங்க் அளவுக்குப் பெரிய டேங்க் ஒன்று இருந்தது.

அதிலிருந்து பதினெட்டு டிகிரி சாய்வில் ஒரு குழாய் சரிந்தது. மற்றொரு டேங்க்.

”மேலே இருப்பது மெயின் டேங்க். கீழே ஆக்ஸிலரி டெயில் ரேஸ் டேங்க். இதுதான் பட்டர்ஃப்ளை வால்வ் கன்ட்ரோல். அதை இழுத்தால் வேகம் அதிகமாகும். விட்டால் குறையும். அது பிரேக். இது ஸ்டீயரிங். அவ்வளவுதான். எப்படி இருக்கிறாள் பார்ப்பதற்கு?”

”ஓ, ஓ. நன்றாகத்தான் இருக்கிறாள். ஸீட் கொஞ்சம் உயரமாக இருக்கிறது.”

”படி இன்னும் வைக்கவில்லை. இந்த டிரம் மீது ஏறி ஸீட்டில் உட்கார்ந்துகொள்ள வேண்டும். தச்சனிடம் படிச்சுச் சொல்லியிருந்தேன். அவன் கொடுத்த காசைக் குடித்துவிட்டு, நாளைக்கு என்று சொல்லிவிட்டான். பரவாயில்லை. ஏறிப் பார்.”

”டாக்டர், நாளை காலை பார்த்துக்கொள்ளலாமே.”

”பயப்படாதே. ஏறி உட்கார்ந்து பார்.”

நான் ஃபைட்டர் விமானத்தை எட்டி வேடிக்கை பார்க்க ஏறும் மந்திரி போல் அந்த டிரம் மீது கால் வைத்து காரினுள் ஏறிக்கொண்டேன்.

டாக்டர் டிரம்மை அந்தப் பக்கம் உருட்டிச் சென்று அதன் மேல் ஏறி, என் அருகே உள்ள ஸீட்டில் ஏறிக்கொண்டார்.

ஏறும்போது, ‘கீச் கீச்’ என்ற சத்தமும் அதன் பின் ‘க்ளங்’ என்று நிறைந்த கங்காளம் அசைவது போல் சத்தமும் கேட்டது. தவிர, டாக்டரின் மாடியிலிருந்து ஒரு திவலைத் தண்ணீர் வழிந்து என் பேன்ட்டை தொடை பாகத்தில் நனைத்தது.”

”ஃபுல் டேங்க், நூறு மைல் ஓடும்” என்று கண் சிமிட்டினார் டாக்டர்.

”மர ஸீட். இன்னும் மெத்தை தைக்கவில்லை போலும்” என்றேன்.

”யூஃபோமுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறேன்.”

ஸ்டீரியங் மேல் கைவைத்துக்கொண்டேன். மாலுமி போல் உணர்ந்தேன். அது என்ன?”

”அது கன்ட்ரோல் சுவிட்ச்.”

அது ஊ ஊ உ என்றது கார். ”ஓ யெஸ். இது ஹாரன்.”

மாலதி ஓரத்தில் கீழே நின்றுகொண்டு இருந்தாள்.

”அங்கிருந்து உங்களைப் பார்த்தால் முல்லைக்குத் தேர் ஈவதற்கு முன்பான பாரி போல இருக்கிறீர்கள்.”

நான் அவளை மதிக்கவில்லை. உலகம் எப்போதும் முதலில் சிரிக்கத்தான் செய்யும்.”

”டாக்டர், இது என்ன குமிழ்?”

அதுதான் த்ராட்டில் கன்ட்ரோல்... ஏய், ஏய், இழுக்காதே. இழுக்காதே!”

இழுத்தாகிவிட்டது!

அந்த சரித்திரப் பிரசித்தமான பயணம் அப்போதுதான் துவங்கியது.

இழுக்காதே என்று சொன்ன குமிழை இழுத்ததால் ஜோ என்று அந்தரங்கத்தில் (கடைசியாக நான் குற்றாலத்தில் கேட்ட) சத்தம் கேட்டது.

டாக்டரின் கார் பெல்டன் வீல் தத்துவத்தில் அமைந்தது. வால்வைத் திறந்தால் மேலே நிரம்பி இருக்கும் தண்ணீர் திறக்கப்பட்டுக் குழாய் வழியாக மிக வேகமாகச் சரிந்து, கீழ் டேங்குக்கு ஓடும். போகிற போக்கில் டர்பைன் சக்கரத்தைச் சுற்றிவிட்டு ஓடும். டர்பைனுடன் இணைக்கப்பட்ட காரின் சக்கரங்கள் சுழல, கார் ஓடும்.

திறந்துவிட்டேன் போலிருக்கிறது, கார் ஒரு முறை சோம்பல் முறித்துக்கொண்டு குலுங்கி நகர ஆரம்பித்தது.

”டாக்டர், நகர்கிறது. எனக்கு ஓட்டத் தெரியாது.”

”பையா, உடனே எழுந்திரு. ஸீட் மாற்றிக்கொள்ளலாம். என்னால் சமாளிக்க முடியும்.”

நான் எழுந்திருக்க முயன்றேன். முடியவில்லை.

”டாக்டர், என் பேன்ட் ஸீட்டில் ஒட்டிக்கொண்டுவிட்டது.”

”பெயின்ட் ஈரமாக இருந்திருக்கிறது. பையா, க்விக். பேன்ட்டைக் கழற்றிவிட்டு எழுந்திரு.”

”டாக்டர், டாக்டர் லுக் அவுட்.”

கார் ஷெட்டுக்கு வெளியே வந்து நேராக ‘சிறு குடும்பம் போதுமே’ சுவரை நோக்கிச் சென்று கொண்டு இருந்தது.

”பையா, ஸ்டீயரிங்கைத் திருப்பு.”

”டைட்டாக இருக்கிறது டாக்டர்.”

”பயப்படாதே, நான் இருக்கிறேன். அந்த பிரேக்கை லேசாக அழுத்து. ஸ்மூத்தாகப் போகும். பிரேக்கை அழுத்திப் பார்.”

”டாக்டர், பிரேக் தொளதொளவென்று இருக்கிறது.”

”ஓ, மறந்துவிட்டேன். ஒரு கனெக்டிங் ராடை இன்னும் இணைக்கவில்லை.”

”டாக்டர், ஏதாவது செய்யுங்கள். கார் ஓடிக்கொண்டு இருக்கிறது...”

”அதானே, த்ராட்டிலை மூடிவிட்டேன். வால்வை மூடிவிட்டேன். இன்னும் ஓடிக்கொண்டு இருக்கிறதே, இது ஓடக் கூடாது.”

”டாக்டர், இறங்கிவிடலாமே. நல்ல சரிவு. வேகம் அதிகமாகிக்கொண்டு வருகிறது.”

”பையா, யூர் எ ஜீனியஸ். அதானே? ஏன் ஓடுகிறது என்று இப்போது தெரிந்துவிட்டது. சரிவு, அதனால்தான் ஓடுகிறது. ஏனென்றால்

தண்ணீரை நான் அப்போதே நிறுத்தியாகிவிட்டது.”

என் கணுக்கால் வரை தண்ணீர் ஏறி நனைத்திருந்தது.

நாயர் கடை நோக்கி நாங்கள் விரைந்துகொண்டு இருந்தோம். அந்த முச்சந்தியில் ரோடு இடம் வலமாகப் பிரிகிறது. அந்த மெயின் ரோட்டில் பஸ்களும் லாரிகளும் உற்சாகமாகச் சென்றுகொண்டு இருந்தன. ஒரு போலீஸ்காரர் டியூட்டி ஏற்றுக்கொள்ளலாமா என்கிற உத்தேசத்தில் எதிரே நாயர் கடையில் பன் கடித்துக்கொண்டு இருக்க... எங்கள் ஊர்வலம் வருவதைப் பார்த்து கலவரப்பட்டு, அங்கிருந்தே ‘ஸ்டாப்’ அடையாளம் காட்டினார்.

ஸ்டாப்பாவது, அடையாளமாவது! எங்கள் காரை நிற்க வைப்பது யார்?

போலீஸ்காரர் தன் ஆணைக்குப் படியாமல் தன்னையே நோக்கி எங்கள் கார் வருவதை உணர்ந்து, பன்னைக் கீழே போட்டுவிட்டு விசில் ஊதித் தள்ளினார். நாங்கள் அந்த முச்சந்தியை அடைய கார்கள் ‘கிறீச் கிறீச்’ என்று பிரேக் போட்டுச் சமாளித்து நிற்க... ஏதோ ஒரு பூர்வ ஜென்ம ஞாபகம் போல் கார் அந்த நாயர் கடையை ஏகாக்கிரச் சிந்தையுடன் அடைந்து, ஒரு பாய்லரை வென்று, ஓரிரண்டு பெஞ்சுகளை உருட்டிவிட்டு, நான்கைந்து டீ குடிப்பவர்களை கையில் செருப்பை எடுத்துக்கொண்டு ஓடவைத்து, கடையின் தற்காலிகச் சுவரை உடைத்து, பின் கட்டில் ஒரு சிறிய அறையில் ஒரு பெண்ணுக்குப் பாட்டு சொல்லிக்கொண்டு இருந்தவரை வாரிச் சுருட்டிக்கொண்டு ஆர்மோனியத்துடன் ஓடவைத்து... மரத்தூண் ஒன்றின் மேல் மோதி...

அதற்கப்புறம் என் நினைவுகள் அவ்வளவு தெளிவாக இல்லை. என்னைச் சுற்றி நீர் சூழ்ந்துகொள்ள... யாரோ, ”என்ன அக்கிரமம், தண்ணி லாரியை வீட்டுக்குள்ளேயே ஓட்டறாங்களே படுபாவி” என்று புகார் செய்வது கேட்க... என் மூக்கு, நெற்றிப் புருவம், தலை மயிர் என்று தண்ணீர் ஏற... நான் உள்ளே உள்ளே உள்ளே...

********** *****

பொதுவாழ்வு

‘இன்றிரவு எட்டு ம்ணிக்கு ஷெர்ட்டனில் சந்திக்கலாம். நீல சாரி அணிந்திருப்பேன். மெரூன் பார்ட்ர்’ மனைவி வருவதை கவனித்து சட்டென்று அதன் குறிப்பை கிழித்துப் போட்டான்.

“என்னங்க அது?”

“ஒண்ணுமில்லை ஒரு மீட்டிங்குக்கு சீட்டு அனுப்பி கூப்பிட்டிருக்காங்க. போகணும்.”

“இன்னைக்குமா? தினப்படி மீட்டிங் ஆயிடுத்தே உங்களுக்கு”

“என்ன பண்றது... பொது வாழ்வுன்னா அப்படித்தான்.”

“முந்தாநேத்து கொரில்லா இனத்தை காப்பாத்தறது
பற்றி மீட்டிங்னீங்க, நேத்து குடும்பக்-கட்டுப்பாடுன்னீங்க... இன்னிக்கு?”

“எய்ட்ஸ் விழிப்புணர்வு.”

********** *****

ஓநாய்கள்

சுலோசனா சின்ன வயசில் அடிக்கடி ஓநாய்கள் அவளைத்துரத்துவதாகக் கனவு கண்டாள். ஒவ்வொரு முறையும் தலை தெறிக்க ஓடுவாள். அவை நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு எச்சில் வழிய துரத்தும். அவை, அவளைப் பிடிப்பதற்குள் கண்விழித்து விடுவாள். வியர்வை வெள்ளத்தில் எழுந்து தண்ணீர் குடிப்பாள். ஆனால், அவள் எந்த இரவும் ஓநாய்களிடம் மாட்டிக் கொண்டதில்லை.

வளர்ந்து பெரியவளாகி அவளுக்கு கல்யாணம் நடந்து முடிந்த பிறகு கனவுகள் நின்றுவிட்டன. ஒருமுறை தன் கணவனுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவனை உற்றுப்பார்த்தாள்.

“என்ன பார்க்கறே சுலோசனா?”

“உங்களை நான் கல்யாணத்துக்கு முந்தியே எங்கயோ பாத்திருக்கேன்.எங்க பாத்திருக்கேன்?”

“கல்யாணத்துக்கு முன்னாடி நாம சந்திச்சதே இல்லையே”

“எனக்கென்னவோ கனவிலேயோ எங்கயோ உங்களைப் பார்த்தா மாதிரி இருக்கு.”

“என்ன கனா சொல்லு?”

“ஓநாய்களா வந்து துரத்தும். திடீர்னு முழிச்சிண்டுடுவேன்…”

“என்னை அப்டின்னா ஓநாய்ங்கறயா?”

“இல்லை இல்லை நீங்க ஓநாய் கூட்டத்தில் இல்லை. நான் சொல்ல வந்தது என்னன்னா”

“சரித்தான் வந்து படுடி!”

‘இன்னிக்கு வேணாமே…”

“நான் வேணுங்கங்கறப்ப வரணும். அப்பதான் பொண்டாட்டி.”

அன்று அவள் மீண்டும் கனவு காண ஆரம்பித்தாள்.அதே ஓநாய்கள் அதே நாக்கைத் தொங்கப் போட்டு எச்சில் வழிய...ஒரே ஒரு வித்தியாசம்... அவளை ஓநாய்கள் துரத்தவில்லை. அவள் ஓநாய்களுடன் ஓடிக் கொண்டிருந்தாள்

********** *****

எப்படி ?

என் நண்பனுடன் ஒரு வாக்குவாதத்தின் இறுதியில் நான் சொன்ன வார்த்தைகள் தெளிவாக, அழுத்தமானதாக இருந்தன.

“நான் சொல்வதுதான் சரி. கடவுள் இல்லை. கடவுளை நம்பினவன் முட்டாள். வாழ்க்கை அர்த்தமற்றது.”

இதை நிரூபிப்பதற்கு என் துப்பாக்கியை வெளியில் எடுத்தேன். அதன் முனையை என் நெற்றியில் வைத்துக்கொண்டேன். அதன் விசையை அழுத்தினேன். என் மூளை வெடித்துச் சிதறியது. இன்னும் ஒரே விஷயம் மட்டும் என்னைத் தொந்தரவு செய்கிறது. அதை மட்டும் என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை. நான் சொன்ன்து சரியென்றால் எப்படி என்னால் இதை எழுத முடிகிறது?.

********** *****

உபக்கிரகம்

பட்டாபிராமன் தினம் போல் சாயங்காலம் நடப்பதற்குக் கிளம்பினார். ரிட்டயர் ஆனதிலிருந்து அது இப்போது பத்து வருஷமாகிறது. அதிக நாள்கள் இந்த வாக் தவறினதில்லை. பட்டாபிராமன் நிறைய நாள் வாழ்ந்திருக்க விரும்பினார். தினசரி மூன்று மைல் நடந்தால் நிறைய நாள் வாழலாம் என்று டாக்டர் சொன்னார். ரீடர்ஸ் டைஜஸ்ட்டில் படித்தார். டவுனுக்கு வெளியே வந்து மைதானத்துக்குக் குறுக்கே நடந்து, சன்னமாக மேலே ஏறி இறங்கும் ஹை கிரவுண்ட் பகுதியில் நடந்து செல்வது அவருக்கு மிகவும் விருப்பம்.

அவர் செல்லும் சமயத்தில் அவரைத் தவிர வேறு ஒருவரும் இருக்க மாட்டார்கள். தனக்குத்தானே இரைந்து பேசிக்கொள்ளலாம். அவர் மனைவி, மகள், மகன் எல்லோரும் சுத்தமாக அவர் இறப்பதற்காகக் காத்திருக்கிறார்கள் என்று சில சமயம் அவருக்கு வரும் சந்தேகங்களைஎல்லாம் தனக்குத்தானே வாதப் பிரதிவாதம் செய்துகொள்ளலாம். மேலும், பச்சைப் புல்வெளியில் மெத்துமெத்தென்று நடப்பது அவருக்குப் பிடிக்கும். தன் சென்ற காலத்தை அசைபோட்டுக்கொண்டே டிராஃபிக் பயமில்லாமல் உத்தமமான தனிமையில் நடக்கலாம். நடந்து சென்றுகொண்டு இருந்தார்.என்றும் போல் மாலை. என்றும் போல் ஐந்து பதினெட்டு. என்றும் போல் கழுத்தைச் சுற்றி மஃப்ளர். கையில் வாக்கிங் ஸ்டிக், காலில் கான்வாஸ் ஷூக்கள். என்றும் போல் தனக்குள் பேச்சு.ஆனால், என்றும் போல இல்லாமல் இன்று ஒரு விநோதம் நடந்தது. சமீபத்திய மழையில் பளீர் என்று பச்சை நிறைந்துவிட்ட அந்தப் பிரதேசத்தில் நடந்துகொண்டு இருந்தபோது ‘விஷ்’ என்று உயரே அவர் பின்னே ஒரு சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்தை அவர் முதலில் கவனிக்கவில்லை. அதன்பின் அந்தச் சத்தத்தில் அதிகரித்த புதுமை அவர் கவனத்தை நிச்சயம் ஈர்த்தது. அந்த ‘விஷ்’ஷை சரியாக விவரிக்க, மொழியில் வார்த்தை இல்லை. உடலைச் சிலிர்க்கவைக்கும் சத்தம். திரும்பிப் பார்த்தார். ஒன்றும் தெரியவில்லை. மேலே பார்த்தார். திடுக்கிட்டார்.ஆகாயத்தில் சுமார் முந்நூறு அடி உயரத்தில் பளபளக்கும் ஒரு கோளம் மெதுவாகத் தனக்குத்தானே சுற்றிக்கொண்டு ஒரு மெல்லிய சரிவில் இறங்கிக்கொண்டு இருந்தது. துல்லியமான கோளம். பளபளக்கும் உலோகம். சற்று நீளம் கலந்த உலோகம் போல் தெரிந்தது. அதில் ஜன்னல் போல் ஒரு பக்கத்தில் அம்பர் வர்ணத்தில் விளக்கு பளிச் பளிச்.ஆனால், என்றும் போல இல்லாமல் இன்று ஒரு விநோதம்

நடந்தது. சமீபத்திய மழையில் பளீர் என்று பச்சை நிறைந்துவிட்ட அந்தப் பிரதேசத்தில் நடந்துகொண்டு இருந்தபோது 'விஷ்' என்று உயரே அவர் பின்னே ஒரு சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்தை அவர் முதலில் கவனிக்கவில்லை. அதன்பின் அந்தச் சத்தத்தில் அதிகரித்த புதுமை அவர் கவனத்தை நிச்சயம் ஈர்த்தது. அந்த 'விஷ்'ஷை சரியாக விவரிக்க, மொழியில் வார்த்தை இல்லை. உடலைச் சிலிர்க்கவைக்கும் சத்தம். திரும்பிப் பார்த்தார். ஒன்றும் தெரியவில்லை. மேலே பார்த்தார். திடுக்கிட்டார்.பட்டாபிராமன் பிரமித்துத் தன் கைத்தடியை நழுவவிட்டு, 'ஆ' என்று பார்த்துக்கொண்டு இருக்க... அந்தக் கோளம் அவருக்கு முன் மெதுவாகச் சரிந்து சுமார் முந்நூறு அடி தள்ளி ஜம்மென்று இறங்கியது. இறங்கும்போது பெரிதாகச் சுவாசம்விட்டது ரூஉம் ரூஉம் ரூஉம் என்று ஒரு ஒலி தொடர்ந்து கேட்டது. அதன் இருபுறங்களிலும் கிளை போல் இரண்டு கால்கள் புட்டுக்கொண்டு வெளிவர... அதன் விர்ர் சற்று அதிகமாக... அந்தக் கால்கள் மெத்தென்று புல்வெளியில் பட்டு அழுத்த... ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டு உருண்டை ஸ்திரமாயிற்று. அதன் காற்றுச் சத்தம் இப்போது சீராகக் கேட்டது.அந்தக் கோளம் சுமார் நாற்பதடி அளவு இருந்தது. அமைதியாக அப்படியே நின்றது. நிச்சயம் அந்த வடிவத்தைப் பட்டாபிராமன் நிஜ வாழ்க்கையிலோ, சினிமாவிலோ, பார்த்ததில்லை. கண்ணாடியை எடுத்துத் துடைத்துப் போட்டுக்கொண்டு பார்த்தார். முதலில் அதை ஏர்ஃபோர்ஸ்காரர்கள் பரிசோதிக்கும் விமானம் என்று நினைத்தார். ஆனால், விமானம் அவ்வளவு உருண்டையாக இருந்து பார்த்ததில்லை. அவர் ரிட்டையர்டு ஜட்ஜ். இருந்தும் அவருக்குத் தெரிந்திருந்த ஆதார விஞ்ஞானத்தில்கூட அந்த வடிவத்தில் எந்தச் சாதனமும் பறக்க முடியாது என்பது தெரிந்தது. 'பின் இது என்ன?'சுற்றிலும் பார்த்தார், யாரையாவது கூப்பிடலாமா என்று. ஒருவரும் இல்லை. அவருக்குச் சற்றுப் பயமாக இருந்தது. இருந்தும் இது என்ன என்று தெரிந்துகொள்ள இருந்த ஆர்வம் அவரை அங்கேயே நிற்கவைத்த

இப்போது அந்தக் கோளத்தில் ஒரு கதவுச் சுளை திறந்து உள்ளே இருந்து நாக்கு நீட்டுவது போல் ஒரு ஏணி போன்ற வஸ்து வெளியே வந்து, தரையைத் தொட்டது. பட்டாபிராமன், மார்பு மிக வேகமாக அடித்துக்கொள்வதை உணர்ந்தார். ஏணி வழியாகக் குதித்துக் குதித்து ஒன்று இறங்கி வந்தது. அது என்றுதான் அதைச் சொல்ல முடியும். நிச்சயம் மனித உருவம் இல்லை. கிட்டத்தட்ட வர்ணித்தால் விளம்பரத்துக்குப் பெரிதாக வைத்திருப்பார்களே ஃபவுண்டன் பேனா எட்டு அடி பேனா அதைப் போன்ற வஸ்து குதித்துக் குதித்துத் தரையில்

வந்து ஏதோ கார்ட்டூன் படங்களில் வருவது போல ஒரு தடவை ஆடிவிட்டு நின்றது. சற்று நேரத்தில் மற்றொரு பேனா வடிவம் குதித்துக் குதித்துக் குதித்து இறங்கியது.

முதலில் வந்த அதன் அண்ணனுடன் அருகில் நின்றது. பட்டாபிராமன் தன் கைத்தடியை எடுத்துக்கொண்டு ஓட நினைத்தார். அப்போது...

”பூமி மனிதரே, நாங்கள் நண்பர்கள்” என்று ஆங்கிலத்தில் குரல் கேட்டது. அங்கிருந்துதான் வந்தது. குரல் ஏதோ ஜலதோஷம் பிடித்த கம்ப்யூட்டரின் குரல் போல் இருந்தது. அதில் மனிதத்துவம் இல்லை. செயற்கையாக இருந்தது. ஏற்ற இறக்கங்கள் இல்லாமல் ஒரே சீராக... ஒரே லெவ லில் இருந்தது. பட்டாபிராமன் அசந்து போனாலும் அவர் முதல் ஆசை ஓடுவதில்தான் இருந்தது. யாராவது கூட இருந்தால் பரவா யில்லை. கொஞ்சம் தைரியமாக இருக்கலாம்.

அறுபத்து மூன்று வயதில் ஓடுவது எப்படி? விரைவாக நடக்கலாம். விரைவாக நடந்தார்.

”பயப்படாதீர்கள், இங்கே வாருங்கள்” என்றது ஃபவுண்டன் பேனா. பட்டாபிராமன் ஓடத் துவங்கிவிட்டார்.

”பூமி மனிதரே, பயப்படாதீர். நாங்கள் துன்பம் தர மாட்டோம். நாங்கள் நட்புக்காக வந்திருக்கிறோம். வாருங்கள், உள்ளே வாருங்கள். தயவுசெய்து வாருங்கள். வந்தே தீருங்கள். வருகிறீர்களா? வந்துவிடுகிறீர்களா?”

பட்டாபிராமன் சற்றுத் தயங்கினார். திறந்திருந்த கதவின் உள்ளே வர்ண வர்ண விளக்குகள் தெரிந்தன. அந்த இரண்டு பேனா நண்பர்களும் அப்படியே நின்றுகொண்டு இருக்க... அவர்களைப் பார்த்தால் அடிக்கடி வந்திருப்பவர்களைப் போலத் தோன்றவில்லை. பட்டாபிராமன் கொஞ்சம் கிட்டத்தான் போய்ப் பார்க்கலாமே என்று மூன்று தப்படி முன் வந்தார்.

”நல்லது நண்பரே! அருகில் வாரும்.”

பட்டாபிராமன் மெதுவாக அதை நோக்கி வந்தார்.

முப்பது நிமிஷம் கழித்து பட்டாபிராமன் மெயின் ரோடில் மிக வேகமாக நடந்து சென்றுகொண்டு இருந்தார். டவுனுக்குப் போகிற வாகனங்கள் எல்லாவற்றையும் நிறுத்த முயற்சி செய்துகொண்டு இருந்தார். ஒரு லாரிக்காரன் நிறுத்தினான். பஸ் ஸ்டாண்டு வரை கொண்டுவிடுவதாகச் சொன்னான். லாரியில் ஏறிக்கொண்டார். லாரிக்காரன் சற்றுத் தண்ணியில் இருந்தான். அது பட்டாபிராமனுக்குத் தெரிந்திருக்கவில்லை. "நான் இப்ப என்ன பார்த்தேன் தெரியுமா?"

"சாமி?" என்றான்.

"நான்... இப்ப... வெளி உலகத்து மனுசங்க வந்து இறங்கறதைப் பார்த்தேன். மைதானத்திலே இறங்கியிருக்காங்க... வேற உலகம்."

"அப்படியா! அங்கெல்லாம் சர்க்கரை என்ன விலை விக்குதாம்?"

"அவுங்க மனுஷங்க இல்லை. வேறு மாதிரி ஆசாமிங்க."

"எவன் அய்யா இப்ப மனுசன்? நீ மனுசனா சொல்லு. நான் மனுசனா! எவன் மனுசன்? எல்லாரும் திங்கறாங்க."

பட்டாபிராமன் மேலும் லாரி டிரைவரைப் புரியவைக்க முயற்சிக்கவில்லை. அவருக்கு நேரம் குறைவாக இருந்தது. அவர்கள் சரியாக ஒரு மணி நேரம் காத்திருப்பதாகச் சொன்னார்கள். பட்டாபிராமனுக்கு வேறு சிலரைக் கூட்டிவந்து அந்த அதிசயத்தைக் காட்ட ஆவலாக இருந்தது. யாரைக் கூப்பிடுவது? தன் மகளைக் கூப்பிடலாம். அப்புறம் ஊருக்குப் பிரபலஸ்தர் யாராவது உடனே வருவதாக இருந்தால் கூப்பிடலாம். பத்திரிகைக்காரனைக் கூப்பிடலாம். ரிப்போர்ட்டர் சாமராவ் சிட்டி கிளப்பில் சீட்டாடிக்கொண்டு இருப்பான். அவனுக்கு டெலிபோன் செய்யலாம். அப்புறம் போலீசுக்குச் செல்ல வேண்டும். இப்போதே செல்லலாமா? அவர்கள் வருவதற்கு நேரமாக்குவார்கள். முதலில் ஓர் ஐந்து ஆறு பேரைக் கூட்டிச் செல்லலாம். காரை எடுத்துக்கொள்ளலாம்.

ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வருவதை, என்ன அய்யர் இப்படி ஓடறது என்று கோபாலன் நாயர், கடையிலிருந்து வியந்தான். வீட்டுக்கு

வந்ததும் ”ரேவதி ரேவதி” என்று மகளைக் கூப்பிட்டார். ரேவதி ஃபெமினா படித்துக்கொண்டு இருந்தாள். சோம்பல் முறித்துக்கொண்டு வந்தாள்.

”என்ன அப்பா?”

”உடனே காரை எடு. மாடியில் கேமரா ஃப்ளாஷெல்லாம் எடுத் துக்கொள்.”

”என்ன விஷயம்?”

”ரேவதி! சம்திங் எக்ஸைட்டிங்! நான் உனக்கு ஒன்று காட்டப்போகிறேன். ஊருக்கு வெளியே மைதானத்தில் புல்வெளியில். காரைச் சீக்கிரம் எடு!”

பட்டாபிராமனின் மனைவி வந்தாள். ”கார் எதுக்கு இப்போ? இன்னிக்கு டவுன் ஹால்ல எம்.டி.ராமநாதன் கச்சேரி. ஏன் அப்படி இரைக்கிறது உங்களுக்கு? ஓடினேளா?”

பட்டாபிராமன் டெலிபோனை நோக்கி ஓடினார். விர் விர் விர் என்று சிட்டி கிளப் நம்பரைச் சுழற்றினார். மகளும் மனைவியும் அவரையே பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

”என்னப்பா?”

”என்னன்னா?”

”விண்வெளியில் ஒரு உபக்கிரகத்திலிருந்து புதிய ஆசாமிகள் வந்து இறங்கியிருக்கிறார்கள்.”

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். ”ஹலோ சிட்டி கிளப்! நான் பட்டாபிராமன் பேசறேன். சாமராவ் ப்ரிட்ஜ் ரூமில் சீட்டாடிக்கொண்டு இருப்பார். ரொம்ப அவசரம். அவரைக் கூப்பிட வேண்டும்.”

”நீங்கள் என்ன பேத்தறேள்? உடம்புகிடம்பு சரியா இல்லையா?”

”ரேவதி, போ சீக்கிரம்! கேமராவை எடுத்துக்கொண்டு வா.”

”எதுக்கப்பா?”

”ஹலோ... ஹலோ சாமராவ்! நான்தான் பட்டாபிராமன். உனக்கு ஒரு பெரிய ஸ்கூப்.

சாமராவ்! சரியாகக் கேள். தி கிரேட்டஸ்ட் ஸ்கூப் இன் தி ஹிஸ்டரி ஆஃப் ஜர்னலிசம். ஸ்பேஸ் இல்லை ஸ்பேஸ், விண்வெளி? அதிலிருந்து சில பேர் வந்து நம் ஊருக்குப் பக்கத்திலே வந்து இறங்கி இருக்கா. ஒரு கப்பல்ல... இன்னும் அங்கேயே இருக்கா. ஒரு மணி நேரம் இருக்கப்போறா. இங்கிலீஷ்ல பேசறா. ட்ரான்ஸ்லேட்டிங் மிஷின் வெச்சிருக்கா. என்னோட பேசினா. எட்டு பேர் இருக்கா. நம்ம மனுஷாள் மாதிரி இல்லை. ஏதோ ஒரு உருண்டையா, நீளமா தடி மாதிரி. என்னது... நானா..? நான் குடிக்கலை சாமராவ்! டோண்ட் பி சில்லி. நான் சீரியஸாதான் பேசறேன்... ப்ரிட்ஜா? உன் ப்ரிட்ஜைக் கொண்டு உடைப்பிலே போடு. சாமராவ் நான் எப்பவாவது உன்கிட்ட ஜோக் பண்ணி இருக்கேனா? அவாளை இருக்கச் சொல்லிட்டு வந்திருக்கேன். இருக்கேன்னு சொல்லி இருக்கா. நீ அங்கேயே இரு. நான் வந்து உன்னை பிக்அப் பண்ணிக்கிறேன். நான் கேமரா கொண்டுவரேன். பிரஸ் ஆளு, அதனாலேதான் உன்னைக் கூப்பிடறேன். ரெடியா இரு. பத்து நிமிஷத்திலே வந்துடறேன்.”

டெலிபோனை வைத்துவிட்டு மூச்சு வாங்கினார்.

”என்னடி ஆச்சு இவருக்கு இன்னிக்கு?”

”இரும்மா. அப்பா என்ன பார்த்தீங்க நீங்க?”

”எங்கே கேமரா, சீக்கிரம் கொண்டு வா!”

”என்னப்பா இது?”

”நான் இத்தனை நேரம் கத்தறேனே புரியலை? வெளி உலகத்திலிருந்து சில பேர் மைதானத்திலே வந்து இறங்கி இருக்கா. நான் பார்த்தேன். கண்ணாலே பார்த்தேன். அதுக்கு உள்ளே போனேன்.”

”எதுக்கு உள்ளே?”

”அவா உருண்டையா ஒரு கப்பல்லே வந்து இறங்கினா. அதுக்குள்ளே போனேன். ஆச்சர்யம்! எங்கே இந்த ரவி? அவனையும் அழைச்சுண்டு போகலாம்.”

”என்னடிது? இந்த மாதிரி இவர் பேசினதே இல்லையே? ஏன்னா... இன்னிக்கு மாத்திரை சாப்பிட்டேளா?”

”சே! என்ன நீங்க டயத்தை வேஸ்ட் பண்ணிண்டு... நான் சொல்றதை நீங்க நம்பலையா? நான் பார்த்ததை நீங்க நம்பலையா?”

”அப்பா! நீங்க சொல்றது ரொம்பக் குழப்பமா இருக்கு.”

”குழப்பமெல்லாம் தீர்ந்தே போய்டும். நீ காரை எடு. நீங்க நம்பறது கஷ்டமாத்தான் இருக்கும். ஒரு தடவை பார்த்துட்டா தெளிவாயிடும். அதனாலதான் நான் வேகுவேகுன்னு ஓடி வந்தேன். நான் மட்டும் பார்த்துச் சொன்னா ஒருத்தரும் நம்பமாட்டா. கூட ஒரு அஞ்சாறு பேருக்குக் காட்டணும்னுட்டு... காரை எடு, காரை எடு.”

”வெங்கடேசப் பெருமாளே! இவருக்கு என்ன ஆய்டுத்து.”

”இந்தா புலம்பாதே! ரேவதி நீ இப்ப..” அவளை அவர் பார்த்த பார்வையில் அசாத்தியக் கோபம் இருந்தது.

ரேவதி முகத்தில் கலவரத்துடன் ஷெட்டை நோக்கிச் சென்றாள்.

சிட்டி கிளப் வாசலில் தொடர்ந்து ஹாரன் அடித்துப் பார்த்தும் சாமராவ் வராதிருக்க, பட்டாபிராமன் அலுப்புடன் உள்ளே சென்று சாமராவ் சீட்டாட்டத்திலிருந்து கையைப் பிடித்து இழுத்தார்.

”பட்டாபி சார், ஆர் யூ சீரியஸ்?”

”டோண்ட் பி சில்லி! கம் மேன்... நான் காட்டுறேன்.”

‘ஏதாவது ஜோக்காக இருந்தால் சொல்லிவிடுங்கள். நீங்கள் டெலிபோனில் சொன்னது பாதி புரியவில்லை. ஏதோ விண்வெளி

அப்படி இப்படி என்று...”

”சாமராவ் உனக்குக் கண் இருக்கா? பார்த்தா புரியுமா! வா காட்டறேன்! இதை முதல்ல ரிப்போர்ட் பண்ணா ஓவர் நைட் யு வில் பி ரிச் மேன்! அதிர்ஷ்ட தேவதை. அவங்க காத்திருக்காங்க. வா!”

தரதரவென்று வாய் திறந்த சாமராவை காரில் தள்ளி அடைத்தார். ”ராஜரத்தினம் வந்திருகானா?”

”இருக்கார்.”

”கூப்பிடு அவனை! இரு. நானே இழுத்துண்டு வரேன். ஒரு அஞ்சு பேராவது பார்க்கலாம்...”

காரில் சாமராவ், ”மாமி என்ன இது! மாமா இப்படிப் பேசறார். கேமராவை வேற எடுத்துண்டு வந்திருக்காரே!”

”என்னமோ திடீர்னு இப்படி ஆய்டுத்து. பாயைப் பிராண்டறார். கேட்டா சிங்கம் மாதிரி சீறறார்.”

‘அம்மா சும்மா இரு. அம்மா, அப்பா எதையோ வினோதமாப் பார்த்திருக்கார். இல்லைன்னா இப்படி எல்லாம் செய்யவேமாட்டார். என்னதான்னு பார்க்கலாமே?”

”அறுபத்து அஞ்சு, அறுபத்து ஆறு வயசிலே இப்படித்தான் சித்தப்பிரமை ஆய்டும்னு பட்டு சொன்னா. அவளாம்படையான் திடீர்னு நடு ராத்திரியிலே எழுந்து கோலம் போட்டாராம்! யாராவது சூனியம் வெச்சுட்டாளா என்ன?”

”சும்மா இரும்மா! அப்பாவுக்கு அதெல்லாம் ஒண்ணும் இல்லை.”

ஆச்சர்யம் மிகுந்த ராஜரத்தினத்தைத் தரதர என்று கையில் ஷூக்களுடன் இழுத்து வந்து காரில் அடைத்து, ”ரேவதி! ஓட்டு!” என்றார் பட்டாபிராமன்.

அவர்கள் அந்த இடத்தை அடைந்தபோது சூரியன் அஸ்தமித்திருந்தான். மைதானம் துல்லியமாக இருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை

காலியாக இருந்தது. காணோம்!

பட்டாபிராமன் ”இங்கேதான். இங்கேதான்! எனக்கு நன்னா ஞாபகமிருக்கு. மூணாவது மைல் கல்லிலேதான் திரும்பினேன். இங்கேதான்... இங்கேதான்” என்றார்.

”இங்கேதான். என்ன?”

”இங்கேதான் இறங்கி இருந்தது.”

”என்ன?”

”அந்தக் கப்பல்.”

”பட்டாபி சார்.”

”வெங்கடேசப் பெருமாளே!”

”அப்பா, என்னப்பா ஆச்சு உங்களுக்கு?”

”பட்டாபி! எதுக்காக என்னை இங்கே கூட்டியாந்தேன்னு சொல்லவே இல்லையே!”

”பட்டாபி சார்! கப்பலா? விண்வெளிக் கப்பலா?”

”சூனியம்வெச்சுட்டா, சூனியம்வெச்சுட்டாளே!”

”இங்கேதான் பார்த்தேன், சாமராவ், மேலேருந்து வந்து உஷ்ஷ்ஷ்னு சத்தம் போட்டு இறங்கித்து. இரண்டு கால் வந்தது. கதவு திறந்துண்டது. இரண்டு பேர் இறங்கினா. என்னைக் கூப்பிட்டா. நான் உள்ளே போனேன். உள்ளே சேப்பு, பச்சை, மஞ்சள் எத்தனை விளக்குகள்? மிஷின் மாதிரி பேசினா, சினேகிதமா பேசினா, இன்னும் ஒரு மணி நேரம் இருக்கோம். வேற யாரையாவது கூட்டிண்டு வான்னு சொன்னா. மணி என்ன ஆச்சு? ஆறு இருவதுதானே ஆறது, அதுக்குள்ளே போய்ட்டாளா? என்னண்டை இருக்கேன்னு சொன்னாளே! இதே இடத்துல இறங்கின முத்திரை தெரியறதா பார்க்கலாம் சாமராவ் போ பார்க் கலாம். சாமராவ்... ராஜரத்தினம்... ரேவதி...” அவர்கள்

நால்வரும் அவரையே பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

அடுத்த சில தினங்களில் பட்டாபிராமன் மிகவும் அல்லல்பட்டார். திரும்பத் திரும்ப அவர் அன்று மாலை பார்த்த காட்சியை விவரிக்க விவரிக்க, கேட்ட ஒவ்வொருவரும் அவரை ஒருவிதமாகப் பார்க்க ஆரம்பித்தார்கள். பட்டாபியின் மனைவி அடிக்கடி "நீங்க படுத்துக்குங்கோ, படுத்துக்குங்கோ" என்று சொல்லிவிட்டு வெங்கடேசப் பெருமாளை ரகசியமாக விளித்தாள். பட்டாபிராமன் 'ஹிந்து'வுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். தான் பார்த்த காட்சியை விவரமாக வர்ணித்திருந்தார். அந்தக் கடிதம் பிரசுரமாகவில்லை.

அவர் தெருவில் போகும்போது அவருக்குப் பின்னே சிலர் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். "திடீர்னு இந்த ஆளுக்கு இப்படி ஆய்டுத்து, போன வாரம் வரை நல்லாத்தான் இருந்தார்... என்னவோ முனி அடிச்சிருக்கு" ரவியும் ரேவதியும் ஒரு டாக்டரை வரவழைத்தார்கள். "சும்மா பேசுவதற்கு" என்றார். டாக்டர் அவருடன் பேசிவிட்டு வெளியே போகும்போது "இது கொஞ்சம் சீரியஸ் கேஸ். ஷாக் கொடுக்க வேண்டும். மெட்றாசுக்கு அழைத்துக்கொண்டு போங்கள். டாக்டர் சக்ரபாணிக்கு ஒரு லெட்டர் கொடுக்கிறேன்" என்று சொன்னது பட்டாபிக்குக் கேட்டது.

ஒருவர்கூட நம்பவில்லை. பட்டாபிக்கு உள்ளூர சோகமும் மறுபடி அந்தப் பயமும் ஏற்பட்டது. இனிமேலும் இதைப்பற்றிப் பேசினால் எல்லோரும் சேர்ந்துகொண்டு தன்னைப் பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்துவிடுவார்கள் என்கிற பயம். பட்டாபி தன் டயரியில் 'நான் பார்த்தேன், நான் பார்த்தேன்' என்று நூறு தடவை எழுதி அதை ஒளித்துவைத்துக் கொண்டார்.

மத்திய சர்க்காரின் டிபார்ட்மென்ட் ஆஃப் ஸ்பேசுக்கு ஒரு கடிதம் எழுதினார். பதில் வரவில்லை. எப்பொழுதும் அதைப் பற்றி சிந்தித்தவராகச் சாப்பிடும்போதோ, பேப்பர் படிக்கும்போதோ, திடீரென்று நிறுத்திவிட்டுத் தூரப் பார்வை பார்க்கலானார். தினசரி வாக் போவதை நிறுத்திவிட்டார்.

அன்று மாலை அவர் வீட்டில் சில புதிய காரியங்கள் நடந்தன. குண்டுக் கொட்டைப்பாக்கு மாலை அணிந்து, ஒரு சாஸ்திரி வந்து கூடத்தில் கம்பளத்தை விலக்கி சுள்ளிகள் அமைத்து, நெருப்புப் பற்றவைத்து,

பக்கத்தில் அனுமார் படம் வைத்து, பால், புஷ்பம், மாதுளம்பழம், ஊதுவத்தி, சாம்பிராணி எல்லாம் சேர்த்துப் புகை போட்டு மந்திரங்கள் ஓத ஆரம்பித்தார். மாடியிலிருந்து இறங்கி வந்த பட்டாபிராமன் தன் மனைவியைக் கூப்பிட்டு "என்னடி இதெல்லாம்?" என்றார்.

"பூஜைன்னா!"

"என்ன பூஜை? எதுக்குப் பூஜை?"

"அனுமார் பூஜை. காத்துக் கருப்பு அண்டாம இருக்கறதுக்கு."

"ஒரு தாயத்துப் போட்டுண்டா உங்களைப் புடிச்ச ப்ரம்மஹத்தி விலகிப்போய்டும்."

சாஸ்திரி அவரைச் சந்தேகப் பார்வை பார்த்துக்கொண்டு மந்திரம் ஓதிக்கொண்டு இருந்தார்.

"யாருக்கு ப்ரம்மஹத்தி? எனக்கு ஒண்ணும் இல்லை. உங்களுக்கு எல்லாம்தான் ப்ரம்மஹத்தி! உனக்கு, ரேவதிக்கு, ரவிக்கு, ராஜரத்தினத்துக்கு, சாமராவுக்கு, இந்தக் குடுமி சாஸ்திரிக்கு..."

சாஸ்திரி, "மாமி கைல கண்டதை எடுத்து அடிச்சுறப் போறார். தள்ளி வாங்கோ" என்றார்.

பட்டாபிராமன், சாஸ்திரியைக் கூடம் பூராவும் ஓட ஓடத் துரத்த, அவர் கச்சம் அவிழ்ந்துபோய் வெளியே ஓட, வீட்டு வாசலில் பெரிய கூட்டம் கூடிவிட்டது.

மாடிக்குச் சென்ற பட்டாபிக்கு உடல் நடுங்கியது. "என்னை நானே அழித்துக்கொள்ளக் கூடாது. இவர்கள் எல்லோரும் சேர்ந்து என்னைப் பைத்தியமாக அடிக்கிறார்கள். எதனால்? நான் அந்தச் சம்பவத்தைப்பற்றிப் பேசுவதால். பட்டாபி மறந்து போ! சாதாரணமாக இரு. இயல்பாக இரு. அதைப்பற்றிப் பேசவே பேசாதே. நினைக்காதே."

பட்டாபி தன் மப்ளரைக் கழுத்தில் சுற்றிக்கொண்டார். கான்வாஸ் ஷூக்கள் அணிந்துகொண்டார். கைத்தடியை எடுத்துக்கொண்டார். கீழே மனைவியும் பெண்ணும் பயந்து நிற்க, எப்போதும் செல்வது போல

”ரேவதி! நான் வாக் போய்ட்டு வரேம்மா” என்று சொல்லிக்கொண்டு பத்து நாளாக விட்டுப்போன தன் சாயங்கால வாக்கிற்குக்கிளம்பி விட்டார்.

இயல்பாக நடந்து சென்றார். எவரையும் பொருட்படுத்தவில்லை. எப்போதும் போல் மூன்றாவது மைல் கல்லில் திரும்பி, அந்தப் புல்வெளியில் நடந்தார். சற்று நிம்மதி ஏற்பட்டது. இந்த இடத்தில்தான். இதே இடத்தில்தான். போன வாரம் அது வந்து இறங்கியது. சே, அதைப் பற்றி நினைக்காதே! பொய், பார்த்தது பிரமை. அது ஒரு மாயக் காட்சி, மறந்து போ! மறந்து போ!

அப்போது வானத்தில் விஷ் என்று சத்தம் கேட்டது. பட்டாபி திகைத்து மேலே பார்த்தார். அதேதான்! அதே கோளம். தனக்குத்தானே சுற்றிக்கொண்டு அவருக்கு எதிரே முன்னூறு அடி தூரத்தில், புல்வெளியில் இறங்கியது. முன் போல் அதில் கதவு பிரிந்து ஒரு ஏணி இறங்கி ஒரு ஃபவுண்டன் பேனா வடிவில் ஓர் ஆசாமி குதித்துக் குதித்து இறங்கி, ”பூமி மனிதரே வணக்கம்! இங்கே வாருங்கள்!” என்றது.

பட்டாபி திரும்பிப் பார்க்காமல் அந்த இடத்தைவிட்டு ஓடினார்!

********** *****

.

சூரியன்

ஒன்பதாவது மாடியிலிருந்த தன் அலுவலகத்திலிருந்து மூன்றாம் மாடிக்கு வந்த ஆத்மா, தன் மனைவியைப் பார்த்து வழக்கம் போல் சிரித்துவிட்டு, வழக்கம் போல் தன் அறைக்குச் சென்றான். அங்கிருந்தே ”என்ன எழுதுகிறாய்?” என்றான்.

அங்கிருந்தே சிலேட்டைக் காட்டினாள். நெருக்கமாக அதில் ‘நித்யா நித்யா நித்யா நித்யா...’

”என்ன இது உன் பெயரையே எழுதிக்கொண்டு இருக்கிறாய்?”

”பொழுதுபோக வேண்டும். அழித்து அழித்து ஆயிரம் தடவை எழுதிவிட்டேன்.”

”புத்தகம் ஏதாவது படியேன்.”

”நூலகத்தில் இருக்கும் முப்பது புத்தகங்களையும் நான்கு தடவை படித்தாகிவிட்டது.”

ஆத்மா சிரித்தான். சிரிப்பில் கொஞ்சம் அவநம்பிக்கை, கவலை... ”இன்னும் கொஞ்ச நாட்கள்தானே?” என்றான்.

”எத்தனை நாள்?”

ஆத்மா இதற்குப் பதில் சொல்லாமல்,

”ரவி எங்கே?” என்றான்.

”கிழவரிடம் கதை கேட்கப் போயிருக்கிறான். உங்கள் பையனைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.”

”என்ன செய்தான்?”

”கவிதை எழுதுகிறான்.”

”என்னது!” ஆத்மாவின் முகம் திடீர் என்று விகாரமாயிற்று.

”கவிதையா?”

”ஆம்!”

”காகிதத்திலா?”

”ஆம்.”

”சர்க்கார் காகிதத்திலா?”

”ஆம்.”

”யாராவது பார்த்தார்களா?”

”என்ன தெரியும்? அவன் அறையைச் சுத்தம் செய்யப் போயிருந்தேன். விளையாட்டுச் சாமான்களுக்கு இடையில் இது கிடந்தது.”

நித்யா உள்ளே வந்து அந்தக் காகிதத்தைக் கொடுத்தாள்.

சர்க்கார் காகிதம்தான். எண்ணி, கணக்குப் பார்த்து ஆத்மாவுக்கு அளிக்கப்பட்டு இருந்த அரிய காகிதங்களில் ஒன்று. அதன் ஓரத்தில் சிறியதாக தெளிவாக ‘சர்க். காகி. எண் 32637. அனுமதிக்கப்பட்ட உபயோகத்துக்கு மட்டுமே. மீறினவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.’ அதன் மத்தியில் மிகப் பெரிய எழுத்துக்களில்:

சூரியனே நீ யார்?

ஆரியனோ

வேறெவனோ

யாருன்னைப்

பார்த்திருந்தார்?

இப்படி எழுதியிருந்தது. ரவியின் கையெழுத்துதான். ”சூரியன்... ஆரியன்! எதுகை... கவிதைதான்... எங்கே இந்த ஆரியன் என்ற வார்த்தையைப் பிடித்தான்?”

”தாத்தா சொல்லியிருக்கும்! யாருக்காவது தெரிந்தால் ஏதாவது ஆகுமா

ஆத்மா?”

”தண்டனை கிடைக்கும். ரேஷனைக் குறைத்துவிடுவார்கள். இது என்ன மசி? தண்ணீரில் நனைத்துப் பார்க்கலாம்.”

ஆத்மா சமையல் அறைக்குச் சென்று தண்ணீரில் நனைப்பதற்கு முன் தயங்கினான். குழாய் அருகில் ‘தண்ணீரைச் சேதம் செய்யாதே. உனக்கு அளிக்கப்பட்ட மாதாந்திரத் தண்ணீர் கணக்கு 200 லிட்டர்‘ என்று எழுதியிருந்தது. நனைத்துத்தான் ஆக வேண்டும். மாத இறுதியில் காகிதக் கணக்கு வரும்போது மாட்டிக்கொண்டுவிடுவேன். மூன்று நாட்கள் குளிக் காமல் இருந்தால் போகிறது.

தண்ணீரில் அந்த வரிகள் அழிய மறுத்தன. மருந்து அலமாரியில் தேடினான். அரசாங்கம் சுகாதாரப் பிரிவு (ஒரு டாக்டர். இரண்டு நர்ஸ்) அளித்த ஆறு மாத்திரைகள், அரை பாட்டில் டானிக், ஒரே ஒரு தூக்க மாத்திரை... ம்ஹூம்!

”எலுமிச்சம் பழம் தேய்த்தால் போய்விடும்!” என்றான்.

”எலுமிச்சையைப் பார்த்து இருபது வருஷங்கள் ஆகின்றன” என்றாள்.

”உன் பையனால் எத்தனைத் தொந்தரவு பார்! யார் என் அலமாரியைத் திறந்தது?”

”அவன்தான் என்ன செய்வான்? எத்தனை நேரம்தான் இப்படி முடங்கிக் கிடப்பான்? அவனுக்கு அலுத்துவிட்டது. நீண்ட நேரம் பேசாமல் இருக்கிறான். வெற்றுப் பார்வை பார்க்கிறான். கவிதை எழுதுகிறான்...”

”உடம்பு சரியில்லையா? தொட்டுப் பார்த்தாயா?”

”உடம்புக்கு ஒன்றும் இல்லை. பத்து வயசுப் பையனை இப்படிக் கட்டிப்போட்டால்? விளையாட, திரிய, நடக்க, ஓட, ஆரவாரம் செய்ய இடமில்லாத இந்தப் பள்ளத்தில் எப்படி இருப்பான்? அவனுக்கு எத்தனை ஆசை இருக்கும்... எத்தனைக் கேள்விகள் கேட்கிறான் என்னை... கணக்குப் பார்த்து கணக்குப் பார்த்து, நாள் நாளாகத் தள்ளுவது எத்தனை கஷ்டம். நீங்களாவது மாடிக்கு மாடி போய்வருகிறீர்கள். நான் இந்த அறையில் உட்கார்ந்து ரவிக்கு எல்லாக்

கதையும் சொல்லியாகிவிட்டது. எல்லா விளையாட்டுகளும் விளையாடியாகிவிட்டது.”

”இன்னும் கொஞ்ச நாட்கள்தான் நித்யா.”

”எத்தனை நாள்? எத்தனை நாட்கள் சொல்லுங்களேன்?”

”நான்கு வருஷமோ ஐந்து வருஷமோ! அவ்வளவுதான் இப்போதே மேலே கதிர்களின் சுரத்துக் குறைந்திருக்கிறது. அப்புறம் நம்மைக் கட்டுப்படுத்த யார்? கால் போனவரை நடக்கலாம். நதிக் கரையில் வீடு கட்டிக்கொள்ளலாம். பன்னிரண்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ளலாம். இன்னும் கொஞ்ச நாள்!”

”ஒவ்வொரு நாளும் ஒரு வருஷம் போல் இருக்கிறது.”

”ஷர்ர்” என்று கத்திக்கொண்டு விரல் துப்பாக்கியைக் காட்டியபடி ரவி வந்தான்.

”அப்பா! நீ திரும்புவதற்குள் உன்னைச் சுட்டுவிட்டேன். நீ செத்துப்போ!” என்றான்.

ஆத்மா ‘ஹா’ என்று பொய்யாக மயங்கி நாற்காலியில் சாய்ந்தான். ரவி அவன் நாடித் துடிப்பைப் பரிசோதித்தான். ரவிக்கு வெளிறிப் போயிருந்த தேகம்! எல்லாமே வெளுப்பு, வெயில் படாத வெளுப்பு. புரோட்டீன் குறைவினால் உடலில் ஒரு சோனித்தனம். அடுத்த வாரம் இவனுக்கு ஒரு புரோட்டீன் பிஸ்கட் கிடைக்கும். ஒன்றே ஒன்று.

”காகிதத்தில் எழுதக் கூடாது என்று எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன்...”

”சேச்சே! யார் எழுதினார்கள்? நான் உன் காகிதத்தைத் தொடவில்லை.”

”இப்போது பொய் வேறு சொல்கிறாய்.” காகிதத்தைக் காட்டினான். ‘சூரியனே! நீ யார்?’

ரவி குற்ற உணர்வுடன் கீழே பார்த்தான்.

”ஒரே ஒரு காகிதம்தானே அப்பா!”

”சிலேட்டில் எழுதக் கூடாதா? உனக்குப் பாட்டு எழுத வேண்டும் போலிருந்தால் நாடாவில் பதித்துக்கொள்ளக் கூடாதா?”

”பாட்டு இல்லை அது. கவிதை! நூறு வரிகள் இன்னும் மனசிலேயே இருக்கிறது.”

”கவிதை எழுதுவதற்கெல்லாம் காகிதத்தை உபயோகப்படுத்தலாமா? ‘ஆரியன்‘ என்றால் என்ன அர்த்தம்?”

”தெரியாது. சும்மா ஓசைக்காக எழுதினேன்.”

”ரவி, மொத்தமே நம்மிடம் காகிதம் கொஞ்சம்தான் இருக்கிறது. முக்கியமான அரசாங்க உபயோகத்துக்குத் தேவை. ஒவ்வொரு காகிதமும் முக்கியம்.”

”உனக்கு அந்தக் காகிதம் எதற்கு?”

”அதில் நான் முக்கியமான படம் வரைய வேண்டும். அதை ஆதாரமாகக்கொண்டு ஒரு இயந்திரம் செய்யப் போகிறோம்.”

”அந்த இயந்திரம் என்ன செய்யும்?”

”நம் எதிர்காலத்துக்குப் பயன்படும்.”

”எப்படி?”

”சூரிய ஒளியை ஏமாற்றிச் சிறு தானியங்கள் வளரச் செய்யப் போகிறோம். செயற்கையான போட்டோஸின்தஸிஸ். நீ பெரியவன் ஆனதும் புரியும்!”

”ஏன், சூரிய ஒளியிலேயே காட்டலாமே! அது மேலே நிறைய இருக்கிறதே. நீ கூடச் சொன்னாயே! தகடுபோல் ஜொலித்துக்கொண்டு வட்டமா...”

”மேலே நாம் சுதந்திரமாகப் போக முடியாது ரவி!”

”ஏன் அப்பா?”

”அங்கே காற்று விஷக் காற்று. அங்கே போனால் செத்துப் போய்விடுவோம்.”

”காற்று ஏன் விஷமாயிற்று?”

”நீ போ! வேறு ஏதாவது செய்.” ஆத்மா அலுத்துக்கொண்டான். ”உனக்கு இப்போது சொன்னால் புரியாது. நீ அதற்கு இன்னும் தயாராகவில்லை மகனே!”

ஏன் விஷமாயிற்று? நம் முன்னோர்கள் செய்த பாவங்களால்! அவர்கள் செய்த மெஷின்களால்... ராட்சத குண்டுகளால்! ஒருவருடன் ஒருவர் நேசமாக இருக்க முடியாத தேசிய அகங்காரங்களால்... எதிர்காலத்தைப் பற்றிய கவலையே இன்றி நூற்றாண்டின் இறுதியில் நேர்ந்த மகா மகா யுத்தத்தினால்... அதனால் விளைந்த தர்மோ நியூக்ளியர் தாண்டவத்தினால். பூமி எங்கும் மெதுவாகப் பரவிய கொல்லும் கதிர்கள் காற்றில் கலந்து... ஐரோப்பா, அரேபியா, இந்தியா, ஆஸ்திரேலியா என்று அந்தப் போர்வை ஒவ்வொரு தேசத்தையும் அரவணைத்துக்கொள்ள... பள்ளம் தோண்டி, கான்கிரீட் சுவர் அமைத்து, ஈயத்தில் உறவாடி... மறந்து... எலிகள் போல், முயல்கள் போல்... கீழே! கீழே! மேலே இரவு முழுதும் நெற்கதிர்கள் ரேடியேஷனில் ஜொலிக்கின்றன. ஏக்கர் ஏக்கராக மாம்பழம்... தென்னை, பலா... சீஸனுக்குச் சீஸன் பூத்துப் பழுத்து, முதிர்ந்து, உதிர்ந்து... மறுபடியும் பூத்துப் பழுத்து... ஒன்றையும் தொட முடியாது. ரேடியேஷன்!

”அப்பா...” என்று அங்கிருந்தே கூப்பிட்டான் ரவி.

”என்ன?”

”இன்னொரு காகிதத்திலும் கவிதை எழுதியிருக்கிறேன்.”

”என்னடா இது! நித்யா, எங்கே அந்தக் காகிதம்!” இப்போது நிஜமாகவே கோபம் வந்தது ஆத்மாவுக்கு.

ஆத்மாவும் நித்யாவும் வீடு முழுவதும் அந்த மற்றொரு காகிதத்தைத்

தேடினார்கள். கிடைக்கவில்லை.

ஆத்மா தன் சப்ளை ஆபீசுக்குச் சென்றபோது 'பெரியவர் கூப்பிடுகிறார்' என்ற செய்தி அவன் மேஜையின் மேல் இருந்தது.

பெரியவரின் அறை வாசலில் அந்தப் பெண் சிரித்தாள். வெளிறிப் போயிருந்த உதடுகள். கல்யாணத்துக்கு இருக்கிறாள்... கட்டடத்திலேயே அவளைச் சமாளிப்பதற்கு ஆள் இல்லை. பயப்படுகிறார்கள்... எனினும்.... எனினும் ஒரு பெண்! ஒரு பிரஜாவிருத்தி இயந்திரம். மிகத் தேவையான இயந்திரம்!

பெண்ணே உனக்குத் தெரியுமா? தெரிந்தால் சிரிப்பாயா?

"கொஞ்சம் இருங்கள். டைரக்டர் உள்ளே போயிருக்கிறார்."

எதிரே சுவர் முழுதும் கரும்பலகைகளில், புள்ளி விவரங்கள் வியாபித்தன. மொத்தம் 350 பேர். சுத்தமான தானிய இருப்பு விவரம், செத்தவர் விவரம், இருப்பவர் விவரம், எதிர்பார்த்த பிடிப்புகள்... ஓர் ஆளுக்கு ஒரு நாளைக்கு 200 கிராம் அரிசி, 5 கிராம் பருப்பு, இரண்டு தேக்கரண்டி பவுடர் பால்! இந்த ரீதியில் எத்தனை தினம் தாங்கும்? தினமா? பகலில்லை இரவில்லை. விளக்கிருந்தால் பகல், விளக்கணைத்தால் இரவு. மூன்று வருஷம், நான்கு வருஷம். அதற்குள் கண்டுபிடித்தாக வேண்டும். செயற்கை முறை! செயற்கைத் தானியம், செயற்கைச் சூரியன். அல்ட்ரா வயலெட் கொஞ்சம், இன்ஃப்ராரெட் கொஞ்சம், வண்ணங்கள் அத்தனையும் கலந்த வெண்மை கொஞ்சம்...

சூரியனே நீ யார்?

"ஆத்மா, உள்ளே வா!" என்றார் பெரியவர். பெரியவரின் அறையில் உலகப் படத்தில் அத்தனை கண்டங்களிலும் சிவப்புப் பூசியிருந்தது. அங்கங்கே வட்டங்கள்! மனிதர்கள்! சில நூறு அல்லது ஆயிரம் பேர் பூமிக்குள் பதுங்கியிருக்கும் வட்டங்கள்! அவர்களுடன் ரேடியோ தொடர்பு இருக்கிறது. மடகாஸ்கரில் ஒரு வட்டம். அரிஸோனாவில் ஒன்று. ஐஸ்லாந்தில் ஒன்று... இந்தியாவில் ஒன்றே ஒன்று! எங்கள் வட்டம்! மின் நிலையத்துக்கு அடியில்!

"ஆத்மா, உட்கார். நீ கொடுத்த திட்டக் காகிதங்களைப் பார்த்தேன்."

ஆத்மா உட்கார்ந்தான்.

”இன்னும் எத்தனை மாதங்கள் ஆகும், முதல் மாடல் தயாரிக்க?”

”இரண்டு வருஷம்.”

”இரண்டு வருஷம்? ம்ஹூம்! மிக அதிகம்!”

”தேவையான சாதனங்கள் நம்மிடம் இல்லையே!”

”என்ன வேண்டும்?”

”ஸ்பெக்ட்ராஸ்கோப் இல்லாமல் வேலை நடக்காது. ஸ்பெக்ட்ராஸ்கோப் மேலே இருக்கிறது. அருகிலேயே ஐந்து மைலில் ஒரு கட்டடத்தின் ஓர் அறையில் இருக்கிறது.”

”அதை உடை அணிந்துகொண்டு எடுத்து வர முடியுமா? ஆபத்தான விஷயம் நீ தயாரித்த உடை. ஐந்து நிமிஷத்துக்கு மேல் தாங்குவதில்லை. கெய்கர் அலறுகிறது. ஐந்து நிமிஷத்தில் பத்து மைலா? முடியாது.”

”இன்னும் அதிக நேரம் தாங்கக்கூடிய உடை தயாரிக்க முயற்சி செய்ய வேண்டும்.”

”பொருள்? பொருள் எங்கே இருக்கிறது? எனக்கு என்னமோ இது விரயமான முயற்சியாகத் தோன்றுகிறது.”

”எது, உடை தயாரிப்பதா?”

”ஆம்.”

”வேறு வழி ஒன்றும் புலப்படவில்லை!”

”புலப்பட்டுத்தான் ஆக வேண்டும்.”

பெரியவருக்கு அறுபது வயதிருக்கும். இவரைச் செலுத்துவது எந்த நம்பிக்கை..?

ப்ராஜெக்ட் சர்வைவல்! தொடர்ந்து உயிர் வாழ ஒரு திட்டம். இவர் வாழ்நாளிலா..?

பெரியவர், பெருமூச்சுடன், ”கயவாளிப் பயல்கள். எல்லாவற்றையும் வெடித்துவிட்டுச் செத்து ஒழிந்தனர். எவனோ சண்டை போட்டுவிட, நாம் எலி மாதிரி வாழ்கிறோம், ரேட்கௌண்டர் அலறுகிறது” என்றார்.

ஆத்மா எழுந்திருந்ததும், ”மற்றொரு விஷயம்” என்றார்.

”காகிதங்களை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்று உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.”

”ஏன்?”

”உன் இயந்திரப் படங்களின் நடுவே இதுவும் கிடைத்தது.”

ரவியின் மற்றொரு கவிதை!

”மன்னிக்க வேண்டும். இது என் மகனின் விஷமம்.”

”உன் மகனுக்குச் சூரியனைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறாய்! கவிதை எழுதுகிற ஆசாமிகள் நமக்கு வேண்டாம். நமக்குத் தேவையானவர்கள் வெறும் ஆண்கள்! அவனை டாக்டரிடம் காட்டு. இது உதவாத சரக்கு. கவிதையெல்லாம் பிழைத்து எழுந்ததும் எழுதலாம்! நம் காகிதங்கள் இயந்திர பாஷை பேசட்டும். உன் மகனைக் கொஞ்சம் அதட்டி வை. எத்தனை வயசு?”

”பத்து முடிந்துவிட்டது.”

”கவனிக்க வேண்டிய வயசு! இந்தத் தடவை தண்டனை வேண்டாம். அடுத்த தடவை இது நிகழக் கூடாது! போ.”

கதவருகில் மறுபடியும் கூப்பிட்டார்.

”ஒன்று செய். உன் மகனுக்கு சூரியனைப் பார்க்க ஆவல் இருக்கிறது எனத் தோன்றுகிறது. ஒரு தடவை மின் நிலையத்தில் பழுது பார்க்க மேலே செல்லும்போது அவனையும் இழுத்துச் செல். ஜன்னல் வழியாக

ஒரு தடவை காட்டிவிடு. அப்புறம் கவிதை எழுத மாட்டான். மனைவியையும் அழைத்துப் போ!”

”சரி, வந்தனம்” என்றான்.

ரவி குதூகலத்தில் இருந்தான். மிகச் சீக்கிரமாகவே எழுந்து ஆத்மாவையும் நித்யாவையும் சீண்டிக்கொண்டே இருந்தான்.

”மகனே, இன்னும் மூன்று மணி நேரம் இருக்கிறது... மேலே இன்னும் சூரியன் வந்திருக்காது...”

”அப்புறம் லிஃப்ட்டில் இடம் கிடைக்காது அப்பா. சீக்கிரம் போய் நின்றுகொள்ளலாம்.”

”பயப்படாதே, நமக்காகக் காத்திருப்பார்கள். இன்னும் கொஞ்ச நேரம் தூங்கு!”

”தடுப்பு உடை அணிந்திருக்கிறீர்களா?” என்று லிஃப்ட்டில் எழுதியிருந்தது. மெதுவாக அது மேலே செல்லச் செல்ல... ரவி தன்னை முழுவதும் மூடிய வெண்மையான உடையில் குதித்தான். கண்களுக்கான சிறிய கண்ணாடி. ஜன்னலின் ஊடே அவன் கரிய விழிகள் ஜொலித்தன.

”ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் ரவி. சொன்ன பேச்சை மீறக் கூடாது.”

”சரி அம்மா!”

பலத்த கதவைத் திறந்து வெளியேறி, அதை மூடித் திருகிவிட்டு ஆர்க் வெளிச்சம் பரவிய அந்த இரும்புக் குகையில் நடந்து, மற்றொரு கதவைத் திறக்கு முன்...

”ரவி, நித்யா! கதவு திறந்ததும் தூரத்தில் ஒரு கதவு தெரியும். சிவப்புக் கதவு, அதை நோக்கி ஓட வேண்டும். ஒரே ஒரு நிமிஷம்தான் ஆகும். என் கூடவே என் கையைப் பிடித்துக்கொண்டு ஓட வேண்டும். இடது பக்கம், வலது பக்கம் பார்க்கக் கூடாது.”

கதவு திறந்தது. அதிகாலை. மரங்கள், இலை அசைவுகள், காற்றில் நடனங்கள், பூக்கள் வர்ணங்கள்... விநோத வர்ணங்கள்... எல்லாமே இளம் இருட்டில் ஜொலித்தன. அவர்கள் ஓடினார்கள். ரவி கும்மாளமாகச் சிரித்தான். 'நான் உன்னைவிட வேகமாக ஓடுவேன்' என்று ஆத்மாவை இழுத்துக்கொண்டு ஓடினான். எதிர்க் கதவை ஒரு நிமிடத்தில் அடைந்து, அதன் வாயிலில் இருந்த பட்டனை அழுத்த, அது திறந்துகொண்டு மெலிதாக இடம் விட்டு மற்றொரு ராட்சதக் கதவைக் காட்டியது. அது திறந்து அதனுள் 'ம்ம்ம்' என்று மின் இயந்திரங்களின் ஒலி கேட்டது. கீழே இருப்பவர்களுக்கு வாழ்வளிக்கும் ஒரே ஒரு அணுசக்தி மின்நிலையம்.

"சூரியன் எங்கே அப்பா?"

"இரு, காட்டுகிறேன்."

ஆத்மா ஷிஃப்ட்டில் இருந்தவர்களுடன் பேசினான். இயந்திரம் பல வருஷங்களுக்குப் போதுமானது

ரவி அகலக் கண்களுடன் காத்திருந்தான். மெதுவாக ஆத்மா இரும்புப் படிகள் ஏறி, அந்த அறைக்கு அவர்களை அழைத்துச் சென்று, உள்ளே இருக்கும் கெய்கரைச் சரி பார்த்துக்கொண்டான். அந்தப் பட்டனை அழுத்த... மெதுவாக அந்தச் சுவரின் பகுதி நகர, எட்டுக்கு எட்டடி ஒரு கண்ணாடி ஜன்னல்... ஈயம் கலந்த கண்ணாடி கெய்கர் டிக் டிக் டிக் டிக் என்று சத்தமிட்டது. உள்ளே ரேடியேஷனின் அளவு அபாய அளவுக்கு அதிகமாவதற்குள் கதவு தானாக மூடிக்கொண்டுவிடும். ஆத்மா அமைத்த மெஷின்.

"சீக்கிரம் பார்!" என்றான்.

ரவி உயர உயரக் குதித்தான். நித்யா, ஆத்மாவின் கையை இறுகப் பற்றிக்கொண்டாள். எதிரே வானம்... கடல்... கடற்கரை...

அழகான கருநீல வானத்தில் தொடங்கி, அது மெள்ள மெள்ள அடிவானத்தில் ஆரஞ்சு நிறமாகியது. கடல் அலைகளைத் தங்கம் தொட்டது. அமோக ஒளி வெள்ளமாக நடுங்கும் பொன்னிறத்தில் சூரியன் மெதுவாக எழுந்துகொண்டு இருந்தான்.

மற்றொரு நாள்! மற்றொரு தினம்... ரவி தன் மகனுக்கு இதே காட்சியைக் காட்டப்போகிறான்...

”கடவுளே, என்ன அழகாக இருக்கிறது! எப்போது நாங்கள் வெளியேறப் போகிறோம்? இன்னும் கொஞ்ச நாட்கள்தான் என்ற பொய்யை எத்தனை நாட்கள் புகட்டப் போகிறோம்?”

‘பூமிக்கு அடியே இருக்கிற தானியத்தைப் பகிர்ந்துகொண்டு, இருக்கிற நம்பிக்கைகளைப் பகிர்ந்துகொண்டு, மெலிதாக வம்ச விருத்தி பண்ணிக்கொண்டு, தினம் தினமாக, தலைமுறை தலைமுறையாக... எப்படி நூற்றி எழுபது வருஷங்களைக் கழிக்கப் போகிறோம்?’ என்று எண்ணினான் ஆத்மா.

கதவு தானாக மூடிக்கொண்டது.

********** ******

நகர்வலம் !

அந்தப் படகு மிகப் பெரிதாக இருந்தது. எனினும், அதைக் கப்பல் என்று சொல்ல முடியவில்லை. கேளிக்கையும் சந்தோஷமும் நிறைந்த பிரயாணங்களுக்காக ஏற்பட்ட பெரிய படகு அது. அதன் மேல்தளத்தில் மிகவும் இயல்பான நிலையில் நின்றுகொண்டும் உட்கார்ந்து கொண்டும் சூரிய வெளிச்சத்தில் படுத்துக்கொண்டும் ஒரு கனவுச் சதுரம் போலிருந்த சிறிய நீச்சல்குளத்தில்(வெந்நீர்) சோம்பேறித் தனமாக நீந்திக்கொண்டும் இருந்த சந்தோஷ மனிதர்களில் ஆத்மா நித்யாவுக்காகக் காத்திருந்தான். தன் கையில் இருந்த புத்தகத்தில் கவனம் இல்லாமல்... எதிரே நீந்திக்கொண்டு இருந்த நித்யாவின் அவ்வப்போது தெரிந்த உடல் வடிவ அழகைப் பார்த்துக் கொண்டு இருந்தான். படகு அத்தனை வேகத்தில் செல்வது தெரியவே இல்லை. அதன் வயிற் றில் இருந்த சிறிய அணு மின்சார நிலையத்தின் சக்தியில் அது கடல் பரப்பின்மேல் ஒரு காற்று மெத்தையில் மிதந்து சென்றது.

ஆத்மாவுக்கு அந்தப் பிரயாணம் அவன் வாழ்வின் ஆதர்சங்களில் ஒன்று... இன்னும் பதினைந்து நிமிடங்களில் படகு சென்னையை அடையப்போகிறது.

சென்னை!

அவன் முன்னோர்களின் ஊர்! அவன் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தாவுக்கு... அவர்கள் குடும்பத்துக்கு ஒரு வீடு அங்கே இருந்திருக்கிறது. அது என்ன இடம்? திருவல்லிக்கேணி... தேரடித் தெரு... கோயிலின் அருகில்...கம்ப்யூட்டர் தந்த விவரம்...

மார்பில் ‘வழிகாட்டி‘ என்ற வாசகம் எழுதப்பட்ட ஓர் இளைஞன் ஆத்மாவுக்கு முன்னால் வந்து புன்சிரித்து, ”எல்லாம் சௌகர்யமாக இருக்கிறதா?” என்றான்.

ஆத்மா தலையசைத்தான்.

”உங்கள் மனைவி இந்தப் பிரயாணத்தை மிகவும் ரசித்திருக்கிறார் என நினைக்கிறேன்” என்று நீச்சல் குளத்தில் அம்புபோல் குதித்த நித்யாவைப் பார்த்துச் சொன்னான். நித்யா தண்ணீரிலிருந்து தலை தூக்கி ”ஆத்மா, நீயும் வாயேன்” என்றாள்.

ஆத்மா தலையசைத்தான்.

மெலிதான கடல் காற்று அவன் கேசங்களை அலைக்கழித்தது. அவனுள் இன்பம் பொங்கியது.

”எப்போது சென்னைக்குப் போய்ச் சேருவோம்?”

”இன்னும் பதின்மூன்று நிமிஷங்களில்...”

எதிரே பார்த்தான். சூரியன் ஜரிகையிட்ட கடல் சோம்பேறித்தனமான ஆரஞ்சுப் படுதாவைப் போலப் புரண்டுகொண்டு இருந் தது. வெண்பறவைகள் சீராகப் பறந்துகொண்டு இருந்தன. ஓசோன் வாசனை ஆத்மாவுக்குப் பிடித்திருந்தது.

ஓலிபெருக்கி உயிர் பெற்றது.

”கவனியுங்கள்.. அன்புள்ள பிரயாணிகளே! கவனியுங்கள்! மகிழ்ச்சிப் பகுதியில் ஆனந்தப் படகில் சென்னை நகரத்தைக் காண வந்திருக்கும் உங்களுக்குப் படகின் தலைவருடைய வணக்கங்கள். இந்தப் படகு உங்கள் சொந்தப் படகு. இதில் கிடைக்கா தது எதுவும் இல்லை. நவீன விஞ்ஞானத்தின் நவீன அதிசயம் இது. ஐந்நூறு கிலோ மீட்டர் வேகத்தில் நாம் சென்றுகொண்டு இருக்கிறோம். இந்தப் படகுகடல் மேல், கடலுக்குள், ஏன் மணல்மேல்கூடச் செல்லக்கூடியது...

”சென்னை நகரின் பல பகுதிகளைக் காண இன்று வந்திருக்கும் உங்களுக்குச் சென்னையைப் பற்றிய அறிமுகம் தேவை என்றால் உங்களுக்கு அருகிலேயே இருக்கும் ஒலிப்பெட்டியை இணைத்துக் கொள்ளலாம்... வந்தனம்.”

ஆத்மா சென்னை நகரைப் பற்றி முழுதும் படித்துவிட்டான். இருந்தும் மறுபடியும் மறுபடியும் தன் நகரத்தைப் பற்றிக் கேட்க அவனிடத்தில் ஆவல் மிச்சம் இருந்தது. ஒலிப்பெட்டியை இணைத்துக்கொண்டான். மெலிதான வற்புறுத்தும் குரலில் சங்கீதப் பின்னணியுடன் அது அவன் காதுகளுக்குள் மட்டும் ஒலித்தது.

‘தென்னிந்தியாவின் மகத்தான நகரமாக இருந்த சென்னை அல்லது மதறாஸ் தார்மல அய்யப்ப நாயக்கன் என்பவர் 1639-ம் வருஷம் ஆகஸ்ட்

மாதம் 23-ம் தேதி ஃப்ரான்ஸிஸ்டே என்பவருக்கு செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டுவதற்கு அனுமதி தந்ததற்கு முன்னமேயே இருந்திருந்தாலும், அதன் சரித்திரம் அப்போதுதான் தொடங்குகிறது...

”டே என்பவர் ஒரு தொழிற்சாலை அமைப்பதற்காக இருபத்தைந்து ஐரோப்பியச் சிப்பாய்களுடனும் நாகபட்டன் என்கிற இந்திய வெடிமருந்து தயாரிப்பவருடனும் 1640-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி அங்கே வந்து சேர்ந்தார். செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் உட்பகுதி 1640-ம் ஆண்டு ஏப்ரல் 23-ம் தேதி முடிவுற்றது...”

நித்யா தன்னைத் துடைத்துக்கொண்டு வந்து அவன் காது அருகில் முகத்தோடு முகம் ஒட்டிக்கொண்டு அவன் என்ன கேட்கிறான் என்பது மாதிரிப் பார்த்தாள்.

”மதறாஸ் பட்டணம் என்பதுதான் அதன் பழைய பெயர். இந்தப் பெயரின் ஆதாரம் சரிவரத் தெரியவில்லை. மத்த ராஜு என்று அந்தப் பகுதியின் அரசன் ஒருவன் பெயரிலிருந்து ஏற்பட்டு இருக்கலாம்... அல்லது கடலில் சென்ற மரக்கால் ராயர்கள் என்கிற ஓர் இனத்தின் பெயரிலிருந்து மரக்கால் ராயர் பட்டணம் என்று தொடங்கி மதறாஸ் பட்டணம் என்று மாறி இருக்க லாம்...”

நித்யா அவனைச் சீண்டினாள்... ஆத்மா ஒலிப்பெட்டியைக் குறைத்தான்.

”எத்தனை தடவை இந்தச் சென்னைச் சரித்திரத்தையே கேட்டுக்கொண்டு இருப்பாய்? எனக்கு அலுத்துவிட்டது!”

”இது நம் நகரம் நித்யா! நம் வீட்டுக்குப் போகப்போகிறோம்!”

”உங்கள் முன்னோர் வீட்டில் என்ன பார்க்கப் போகிறாய்? பிற்காலத்தில் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின் இந்தச் சந்ததியில் ஆத்மா என்று ஒருவன் பிறக்கப்போகிறான் என்று சுவரில் எழுதி வைத்திருப்பார்களா?”

”முதலில் அந்த வீட்டைக்கண்டு பிடிப்பதே கடினமாக இருக்கும்! எந்த நிலையில் இருக்கிறதோ... பெரும்பாலான கட்டடங்கள் பத்திரமாக அன்று இருந்தது போலவே இருக்கின்றனவாம்... அந்த வழிகாட்டி

உன்னை விசாரித்தான்...”

”ஆம். அவன் என்னைப் பார்த்துக்கொண்டே இருந்தான்.”

”அது உனக்கு எப்படித் தெரியும்?”

”நான் பார்த்த திசையில் எல்லாம் அவன் தெரிந்தான்.”

”மார்பை மூடிக்கொள், ஜலதோஷம் பிடித்துக்கொள்ளும்.”

”எனக்குப் பசிக்கிறது.”

”கீழே சென்று ஏதாவது சாப்பிடு. நான் கேட்டுவிட்டு வருகிறேன். ஐந்து நிமிஷங்களில் வந்துவிடு... சென்னை வந்துவிடும்.”

ஆத்மா மறுபடியும் ஓலிப்பெட்டியை இணைத்துக்கொண் டான்.

”மைலாப்பூரில் லாஸரஸ் தேவாலயத்துக்கு அஸ்திவாரம் தோண்டும்போது மான்யுவல் மத்ரா என்பவரின் கல்லறைதென் பட்டதாம். மத்ராவின் குடும்பம் ஒரு பெரிய செல்வாக்குள்ள குடும்பம். எனவே நகரத்தின் பெயர் மத்ராவின் பெயரிலிருந்து வந்திருக்கலாம் என நினைக்கலாம்...

மதர்ஸா என்பதற்குப் பெர்சிய மொழியில் பள்ளிக்கூடம் அல்லது கல்லூரி என்று அர்த்தம். ஒரு பழைய முகம்மதியக் கல்லூரி அங்கு இருந்திருக்கலாம். இதிலிருந்து மதறாஸ் என்ற பெயர் தோன்றி இருக்கலாம் எனவும் எண்ணக்கூடும்.

எனினும், சென்னைப் பட்டணம் என்ற பெயரே பிற்பாடு நிலைத்து சென்னை என்று மாறியது. இந்தப் பெயரைப் பற்றிச் சந்தேகம் இல்லை. தார்மல சகோதரர்களின் தந்தை சென்னப்ப நாயக்கரின் நினைவில் சென்னப் பட்டணம் என்று பெயர் பெற்று, சென்னை ஆயிற்று...”

அவர்கள் ஒவ்வொருவராகப் படகின் மேல் அடுக்குக்கு வந்து கொண்டு இருந்தார்கள்... சென்னையை நெருங்கிக்கொண்டு இருக்கிறோம்! ஆத்மாவின் உள்ளம் துடித்தது... தன் அன்னையை நோக்கிப் போவது போல உணர்தான்.

எத்தனை தூரம் வந்திருக்கிறான். இந்தப் பிரயாணத்துக்காக..! அஸ்ட்ரா 7-ல் அவனுக்கு விடுமுறை கிடைத்து, நித்யா வுக்கு விடுமுறை கிடைத்து, அங்கிருந்து ஷட்டில் பிடித்து ஸ்பேஸ் நிலையத்துக்கு வந்து அங்கே ரிசர்வேஷன் கிடைக்காமல் அந்தரத்தில் தொங்கும் அந்த பிளாட்ஃபாரத்தில் இரண்டு தினங்கள் கழித்து இடம் கிடைத்து, கிரகப் பிரயாணக் கப்பலில் பூமிக்கு வந்து... மற்றொரு பூமிப் பிரயாணம் செய்து... ஒரு வாரமாக ஓட்டல்கள், பழக்கம் இல்லாத பிரயாணங்கள், பழக்கம் இல்லாத அறைகள்... முகங்கள்...

”ஏன்தான் உனக்கு இந்தப் பிடிவாதமோ! விடுமுறையை வீணடிக்கிறாய். எத்தனையோ புதிய இடங்களுக்குச் சென்று இருக்கலாம்... ஹீலியாஸ் என்கிற புதிய காலனி அப்படித் தேவலோகம் போல இருக்கிறதாம். நீயும் உன் சென்னையும்! சரித்திரத்தைக் கட்டிக்கொண்டு அழு!”

”உனக்கு இஷ்டம் இல்லை என்றால் நீ தனியாகப் போயிருக்கலாமே நித்யா!”

”ஆம், தெரியாத்தனமாகத்தான் வந்துவிட்டேன். பூமியே போர் அடிக்கிறது.”

சென்னை கண்டுபிடிக்கப்பட்ட செய்தி அஸ்ட்ராவில் கிடைத்தது முதலே அவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. அதற்காகப் பணம் சேர்த்து, விடுமுறை சேர்த்து... வந்து சேர்ந்துவிட்டான்.

வழிகாட்டி தென்பட்டான். அத்மா அவனைக் கூப்பிட அவன் புன்சிரிப்புடன் வந்தான்.

”நீ சென்னை நகரைப் பார்த்திருக்கிறாய் அல்லவா?”

”தினம் ஒரு தடவை... அதுதானே என் தொழில்.”

”நகரின் பல பகுதிகளும் உனக்குத் தெரியுமல்லவா?” அவன் சிரித்து. ”ஹைகோர்ட், சாந்தோம், அண்ணாசாலை, வள்ளுவர் கோட்டம், கபாலீஸ்வரர் கோயில், கந்தசாமி கோயில், கோட்டை... என்ன

வேண்டும் உங்களுக்கு..?”

”திருவல்லிக்கேணி தெரியுமா?”

”பார்த்தசாரதி சாமி கோயில் இருக்கிறது.. மூன்றாவது குழுவில் சேர்த்துக்கொள்வார்கள்...”

”அங்கே தேரடித் தெருவில் ஒரு வீடு...”

”வீடா!” என்றான் ஆச்சர்யத்துடன்.

”ஏன்!”

அவன் பதில் சொல்வதற்கு முன் ஒரு சைரன் ஒலித்தது. ”கவனியுங்கள்... கவனியுங்கள்... படகின் மேல் ஓரங்களிலிருந்து விலகிக்கொள்ளுங்கள்... விலகிக்கொள்ளுங்கள்... படகு மூடிக்கொள்கிறது...”

மேல் தளத்தில் இருந்த அனைவரும் நடுவே சேர்ந்துகொண்டார்கள். ம்ம்ம்ம்ம் என்று இயந்திர முனகல் கேட்க ஒரு பிளாஸ்டிக் கண்ணாடிச் சுவர் அரைச் சதுர வில்லையாக உயர்ந்து வளைந்து படகின் மேல் தளத்தை முழுவதும் மூடிக்கொண்டது... திடீரென மௌனமும் எதிர்பார்ப்பும் அவர்களிடையே பரவியது.

”கவனியுங்கள்! கவனியுங்கள்! படகு கடலுக்குள் செல்லப்போகிறது, இன்னும் மூன்று நிமிடங்களில் நாம் சென்னை நகரை அடையப் போகிறோம்... இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் இறுதியில் கடலில் மூழ்கிய சென்னை நகரத்தின் புராதனக் கட்டடங்கள் நவீன ரசாயனத்தின் உதவியால் பாசி நீக்கப்பட்டு. மாசு நீக்கப்பட்டுச் சுத்தப்படுத்தப்பட்டு... உங்களுக்காகக் காத்திருக்கிறது... உங்கள் படகு அமிழ்ந்து சென்னை நகரின் புராதன வீதிகளின் ஊடே செல்லும்... அவ்வப்போது கட்டடங்களின் வருணனை கிடைக்கும். நாம் இன்னும் இரண்டு நிமிஷங்களில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை அணுகுவோம்..!”

அந்தப் படகு நீரில் அமிழ்ந்தது.

கடல் இப்போது வெள்ளி ஜரிகையிட்டு மெதுவாகப் புரண்டு... மிக அமைதியாகவே இருந்தது.

****

மறு

கல்லூரி நாள்களில் திருச்சி புனித ஜோசப் கல்லூரிக்குத் தினசரி காலையில் ஸ்ரீரங்கம் ஸ்டேஷனுக்கு நடந்து போய்,ஒன்பது மணி 'ஆபீஸர்ஸ் ரெயிலை'ப் பிடித்து டவுன் ஸ்டேஷனில் இறங்கி, அங்கிருந்து ஆண்டார் தெரு அல்லது பட்டர்வொர்த் சாலை வழியாக மண்டபங்களை எல்லாம் தாண்டிப்போய், பத்து மணிக்குள் போய்ச் சேருவதற்குள் தினசரி அவசரந்தான். இருந்தாலும் உற்சாகமாகவே இருந்தது. மஞ்சளாக சீஸன் பாஸ் எடுத்துத் திருப்புகழ் பஜனையும் சீட்டாட்டமுமாக, அந்த வண்டியில் சன்னலோரமாக, காலரில் கைக்குட்டையைச் செருகிக்கொண்டு காவேரி வரும்போது எட்டிப் பார்ப்பதெல்லாம் குஷிதான். ஒரு விஷயந்தான் சரிப்பட்டு வரவில்லை, பாட்டி தினப்படி கைச் செலவுக்கு என்று கொடுக்கும் காசு.

ஒரு நாள் கல்லூரியிலிருந்து தாமதமாக வந்தால் ஊரைக் கூட்டிவிடுவாள். என் நண்பர்களில் எவன் படிக்க வருவான், யார் கொக்கோகப் புத்தகம் கொண்டுவருவான் என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரியும். என் புத்திசாலித்தனத்தைப் பற்றி அவளுக்குச் சந்தேகம் இல்லை. இறந்துபோன தாத்தா (அவள் கணவர்) பி.ஏ., படித்தபோதே எம்.ஏவுக்குப் பாடம் எடுத்தாராம். இது எந்த வகையிலும் சாத்தியமில்லை என்று சொல்லிப் பார்த்தும் பிரயோசனம் இல்லை.நாலணாவுக்கு மேல் கொடுத்தால் பேரன் கெட்டுப் போய்விடுவான் என்று பாட்டிக்குத் தளராத நம்பிக்கை. பெற்றோர்களை விட்டு அவளிடம் வளர்ந்ததால் என்னுடைய நற்பெயருக்குப் பாட்டி பொறுப்பேற்றுக்கொண்டு இருந்தாள்.

அவர் புத்திசாலித்தனத்தில் கால் பங்கு எனக்கு இருந்தால் போதும். ஆனால், அம்மா வழித் தாத்தா சினிமா எடுத்துத் தேர்தலுக்கு நின்று சீரழிந்தவர். அவர் சுபாவம் என்னிடம் தலைகாட்டாமல் பாதுகாக்கத்தான் கைச்செலவுக்கு நாலணா.

நாலணாவுக்கு அந்த நாட்களில் சுமாராக 'வாங்கும் பலம்' இருந்தது

என்று சொல்லத்தான் வேண்டும். தெப்பக்குளத்தை ஒட்டி இருந்த ‘பெனின்சுலர் கபே‘யில் ஒரு சாதா தோசையும் காபியும் கிடைக்கும். அவ்வளவுதான். சாப்பிடும் அயிட்டத்தை மாற்ற முடியாது. இனிப்புப் பட்சணம் எல்லாம் பேச முடியாது. சினிமா போக முடியாது. எட்டு நாளைக்கு காபி அல்லது தோசை என்று ஒன்றைத் தியாகம் செய்து சேர்த்து வைத்துதான் போக முடியும். இது சிரமம். எனவே, தக்க சமயங்களில் கல்லூரிக்குச் சென்று தக்க சமயங்களில் திரும்பி வந்து நல்லபிள்ளையாகவே இருந்தேன். இப்படிப்பட்டவனுக்கு மூன்று ரூபாய் முழுசாய்க் கிடைத்தால் சபலம் ஏற்படும் இல்லையா?

மூன்று ரூபாய்க்கு உரியவள் செவளா என்கிற வேலைக்காரி. அவளுக்கு அப்போது முப்பது வயசுக்குள்தான் இருக்கும். விதவை.

சின்னராசு என்ற அழுக்கு டிராயர் பையனை எப்போதும் உடன் வைத்திருப்பாள். காலை ஐந்து மணிக்கு வருவாள். திண்ணையில் படுத்திருக்கும் என்னைப் பாயோடு தள்ளிவைத்துவிட்டுப் பெருக்குவாள். என் மேல் நீர்த்திவலை படும்படியாகச் ‘சளக் சளக்‘ என்று வாசல் தெளிப்பாள்.

‘ரங்கராசு, ரங்கராசு‘ என்று என்னை இரு முறை கூப்பிட்டுப் பார்ப்பாள். அப்படியும் நான் எழுந்திருக்கவில்லை என்றால், பாயோடு சேர்த்து இழுத்துத் திண்ணையிலிருந்து கவிழ்த்து என்னை எழுப்பிவிடுவாள். நான் வேடர்கள் தூரத்துவது போல் எல்லாம் கனவு கண்டு, இறுதியில் பாழுங்கிணற்றில் விழுவதற்கு முன் எழுந்திருந்து அவளை, ‘மூதேவி, முண்டம்‘ என்றெல்லாம் திட்டுவேன்.

அவள் சிரித்துக்கொண்டு, ”என் ராசா, பள்ளியோடத்துக்கு நேரமாவுதில்லே” என்று மறு படுக்கையைப் பற்றி சிந்திக்க நேரம் தராமல் சுருட்டிவிடுவாள். உடனே, குளித்தாக வேண்டும். இல்லையேல் பல் தேய்க்கும்போதே இடுப்பு வேட்டியை உருவிக்கொண்டு போய்விடுவாள். இவளைப் பற்றிப் பல முறை புகார் செய்தும் பாட்டி இவளை அதட்டியதில்லை.

அதிகாலைப் புயல். முப்பது நிமிஷத்தில் வாசல் தெளித்து வீடு பெருக்கிப் பற்றுப் பாத்திரம், பாய்லர் தேய்த்து முடித்துவிடுவாள்.

வாரத்தில் சில தினங்களில் மாவு அரைப்பது, கடைக்குப் போவது போன்ற உபரி வேலைகள் எல்லாம் சேர்த்துச் சம்பளம் மூன்று ரூபாய்.

இந்த மூன்று ரூபாயைத்தான் நான் ஒரு முறை திருடினேன்.

தற்செயலாகத்தான் நிகழ்ந்தது. கல்லூரி இல்லாத ஒரு நாள் லாலிஹாலில் வழக்கம் போல் நண்பர்களுடன் அரட்டை அடித்துக்கொண்டு இருந்தபோது, குல்ஸா என்கிற ரங்கநாதன், "ஏய், நீ அவ்வளவு பணக்காரனாடா" என்று கேட்டது எனக்குப் புரியவில்லை.

"பார்டா, புஸ்தகத்தில் என்ன அலட்சியமா ரூபாயைச் செருகி வெச்சிருக்கான்?"

பார்த்தபோது எனக்குத் திக்கென்று 'ஜூலியஸ் சீஸர்' புத்தகத்தில் மூன்று ஒரு ரூபாய் நோட்டுக்கள் செருகியிருந்தன.

"வேண்டாம்னா குடுத்துடுப்பா? கெயிட்டில மாட்னி போய்க்கறேன்."

என் மனதில் எண்ணங்கள் ஓடின. எப்படி இந்த ரூபாய் என் புத்தகத்துக்குள் வந்திருக்க முடியும்? யோசித்ததில் புரிந்தது. இந்தச் செவளா கிறுக்கு சம்பளப் பணத்தை வேலை செய்யும்போது பத்திரமா இருக்கட்டும் என்று அலமாரியில் என் புத்தகத்தில் செருகி இருக்கிறாள். நான் கவனியாமல் எடுத்து வந்துவிட்டேன். "டேய்! இந்தப் பணம் என்னுது இல்லேடா. எங்க வீட்டு வேலைக்காரி சம்பளப் பணம்" என்று சொல்வதற்குப் பதிலாக, "வாடா, ஐ.ஸி.எச். போகலாம்" என்றேன்.

"ஏதுடா பணம்?"

"அதெல்லாம் கேக்காதே, வரயா... இல்லையா?"

ஐ.ஸி.எச். என்பது விசிறித் தலைப்பாகை வைத்துக்கொண்டு வெயிட்டர்கள் பீங்கான் கோப்பைகளில் காபி கொண்டுவரும் 'ஒஸ்தி' ஓட்டல். டிப்ஸ் எல்லாம் வைக்க வேண்டிவரும். கப் காபியே நாலணா. அங்கே போய் நான், குல்ஸா, பாபு மூவரும் காபி சாப்பிட்டோம். ஸ்பென்ஸர் பக்கமாகப் பெட்டிக் கடை இருக்குமே, அங்கே போய் 'ப்ளேயர்ஸ்' சிக்ரெட் பிடித்தோம். 'பருவ மங்கை' என்ற புத்தகத்தை எட்டணாவுக்கு வாங்கினேன். கெயிட்டியில் ராஜ்கபூர் 'ஆவாரா' படம்

இரண்டாவது தடவை பார்த்தோம். இருட்டில் இன்னொரு சிகரெட் பிடித்தோம். குல்ஸா மட்டன் கட்லெட் சாப்பிடலாம் என்றான். நான்தான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். ஒரு நாளைக்கு இத்தனை பாவங்கள் போதும் என்று தோன்றியது. மூன்று ரூபாயில் ஆறு மணி வண்டியில் திரும்பும்போது இரண்டணாதான் பாக்கி இருந்தது. அதையும் உப்புக்கடலை வாங்கித் தீர்த்துவிட்டான் பாபு. வீடு திரும்பும்போது வயிற்றுக்குள் கடபுடா.

தேர்முட்டி திரும்பியதுமே பாட்டி வீட்டு வாசலில் தெரிந்தாள். கண்ணைச் சுருக்கிக்கொண்டு நான் வருகிறேனா என்று பார்த்துக்கொண்டு இருந்தாள். அருகில் செவளாவும் காவேரி மாமியும் நின்றார்கள். அருகில் வந்ததும் காவேரி மாமியும் செவளாவும் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். அதாவது நானே 'பணத்தைக் கொண்டு போய் புஸ்தகத்தில் செருகி வைத்துவிட்டாயே? இந்தா' என்று நிச்சயமாகத் திருப்பிக் கொடுத்துவிடுவேன் என்கிற எதிர்பார்ப்பில் சிரிக்கிறார்கள். நானா? முகத்தை ரொம்ப ஒன்றும் அறியாதவனாக வைத்துக்கொண்டு, "பிராக்டிகல் இருந்ததா? அஞ்சு மணி வண்டியை விட்டுட்டேன். அதான் தாமதம் பாட்டி" என்றேன்.

"தாமதமானது கிடக்கிறது, இவ பணம் என்ன ஆச்சு சொல்லு?"

"என்ன பணம்?"

"சம்பளப் பணம்டா, செவளா உன் பொஸ்தகத்தில் செருகியிருந்தாளாம்."

"என்ன? என் பொஸ்தகத்திலியா?" என் புத்தகங்களை எடுத்து நிதானமாகப் புரட்டிப் பார்த்தேன்.

"இல்லையே."

"இஸ்கோலுக்குப் போவையில பாக்கலையா ராசா?" என்றாள் செவளா கலவரமாக.

"இல்லையே."

"போக்கணங் கெட்டவளே, புஸ்தகத்தில் கொண்டுசெருகுவாளோ?

எங்க விழுந்ததோ?”

”என்ன பாட்டி? என்ன சொல்றா இவ? எனக்குப் புரியவே இல்லையே.”

”ராசா, என் விதி. காலையில அச்சாபீஸ் வூட்ல சம்பளம் வாங்கினேனா? நம்ம வீட்ல செய்துக்கிட்டு இருக்கையிலே அலமாரில பொஸ்தகத்துல சொருகி வெச்சுட்டேன். அதைப் பார்க்காம அப்படியே எடுத்துட்டுப் போயிருக்கே நீ? எங்க விளுந்துச்சோ? எப்படித் தேடுவேன்?”

”நான் பாக்கலையே செவளா, பார்த்திருந்தா எடுத்துக் கொடுத்திருப்பேனே. எத்தனை ரூபா?”

”மூணு ரூபாடா ராசா! என் தலைஎழுத்து. ரேசன் அரிசியும் புள்ளைக்கு கால்சராயும் எடுக்கலாமுனுட்டு... இந்த முறையும் இல்லையா? என் விதி” என்று அழத் துவங்கியவளை என்னால் நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை.

”பணம் போயிருச்சு. கொலுசை வெச்சுத்தான் கடன் வாங்கணும்.”

”இத பாரு செவளா, என் பேரன் இருக்கானே, அதுக்குத் திரிசமன் எல்லாம் தெரியாது. பணத்தைப் பாத்திருந்தா நிச்சயம் கொடுத்திருப்பான். நீதான் எங்கேயோ கவனம் இல்லாம போட்டிருக்கே.”

”ஐயோ! நம்ம ராசாவை எடுத்ததா சொல்லலாமா? என்ன வம்சம்! இது எடுக்குங்களா? என் ரங்கராசாவை எனக்குத் தெரியாதா? என் தலைவிதி” என்று மூலையில் உட்கார்ந்து அவள் அழுதது, தீட்டின ஈட்டியை என் உள்ளத்தில் பாய்ச்சியது போல இருந்தது.

”சே, என்ன காரியம் செய்துவிட்டோம். மூணு ரூபாயை மூணு மணி நேரத்தில் வேட்டு விட்டு என்ன சாதித்துவிட்டோம்? மாசம் முழுக்க ஓடியாடி உழைத்துச் சம்பாதித்த பணம்... கொல்லைப் பக்கம் முகம் கழுவிக்கொண்டு இருந்தபோது பாட்டியிடம் போய், ”பாட்டி நான்தான் எடுத்தேன். செலவழித்துவிட்டேன்” என்று உடனே ஒப்புக்கொள்ளும் தைரியம் வரவில்லை. பாட்டி அடித்திருக்க மாட்டாள், திட்டியிருப்பாள். திட்டட்டுமே என்ன போச்சு? ஏன் அந்தத் தைரியம் வரவில்லை?

இது நிகழ்ந்து முப்பது வருஷத்துக்கு மேல் ஆகிவிட்டது. என் வாழ்வில் பல கட்டங்களில் அந்த மறுவைப் பற்றி யோசித்ததுண்டு. செவளா என்ன ஆனாள் என்று தெரியாது. அவளைத் தேடிப் போய் மூன்று ரூபாயைத் திருப்பிக் கொடுக்கலாமா என்று யோசித்ததுண்டு. ஆடிட்டர் நண்பனிடம் ஒரு முறை கேட்டதற்குச் சுமாரான வட்டி விகிதத்தில்கூட அவளுக்கு 1,044 ரூபாய் தர வேண்டும் என்றான். ஆயிரம் ரூபாய் பெரிது அல்ல. நான் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்குரிய தைரியம் பாபநாசத்தில் ஒரு மே மாதம் பாட்டி செத்துப் போவதற்கு முன்தான் வந்தது. அத்தனை வருஷங்களாயின. படுத்த படுக்கையாக என்னைக் கலங்கப் பார்த்துக்கொண்டு இருந்தவளை ”பாட்டி ஞாபகம் இருக்கா உனக்கு? நான் காலேஜ்ல படிக்கறப்ப செவளான்னு வேலைக்காரி இருந்தாளே?” என்று கேட்டு நிறுத்தினேன்.

”ஏன் ஞாபகம் இல்லாம? அவகூட ஒரு தடவை உம் புஸ்தகத்தில் ரூபாய் நோட்டை வெச்சுட்டு அதை நீ தொலைச்சுட்டயே?”

”பாட்டி, ரொம்ப நாளா உங்கிட்ட சொல்லணும்னு இருந்தேன். அன்னிக்கு அதை நான் தொலைக்கலே. வேணும்னுட்டே திருடிச் செலவழிச்சுட்டேன் பாட்டி” என்றேன்.

”எனக்குத் தெரியுமே!” என்றாள் பாட்டி.

******** ********

சேச்சா

ஆர்.சேஷாத்ரிநாதன் என்ற பெயர் எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்திலும் பாஸ்போர்ட்டிலும்தான் பயன்படுத்தப்பட்டது. அனைவரும் அவனை சேச்சா என்றுதான் அழைப்போம். சிலசமயம் ராமான்ஜு, சிலசமயம் எல்.பி.டபிள்யு என்று கூப்பிடுவோம். காரணம்1, கணக்கில் மிக கெட்டிக்காரன். 2: எப்போதாவது எங்களுடன் கிரிக்கெட் ஆட வரும்போது எல்.பி.டபிள்யு கொடுத்தால் ஒப்புக்கொள்ள மாட்டான். என் வாழ்க்கையும் அவன் வாழ்க்கையும் மூன்று முறை குறுக்கிட்டன. ஸ்ரீரங்கத்தில் ஒன்றாகப் படித்தோம். நான் சௌரிராஜ ஐயங்கார் செக்ஷன். அவன் கே.என்.ஆர். செக்ஷன். அப்போதே அவனிடம் ஏழ்மையின் அடையாளங்கள் தெரிந்தன. ஒரே சட்டையை நனைத்து உலர்த்தி அணிவதால், கிட்ட வந்தால் ஒருவித முடை நாற்றம் வீசும். காலுக்குச் செருப்பில்லாமல் சித்திரை மாதத்து வெயிலில் நிழலோரமாக பதியப் பதிய நடந்து செல்வான். தீபாவளிக்கு நாலைந்து ஓலைப்பட்டாசும் ஒரே ஒரு கம்பி வாணமும் சுட்டுவிட்டு, நாங்கள் வெடிப்பதைக் கண்ணியமாகப் பார்த்துக்கொண்டு இருப்பான்.

சேச்சாவின் வீடு கீழச்சித்திரை வீதியில் எங்கள் வீட்டுக்கு எதிர் சாரியில் சவுகார் வீட்டுக்கும் சிரஸ்தார் ராமுவின் வீட்டுக்கும் இடையே புத்தகத்தில் அடையாளம் செருகினாற் போல ஒரு கூரை வீடு. அதன் வாசலில் அதிர்ஷ்டவச முனிசிபல் விளக்கின் வெளிச்சத்தில்தான் பாடம் படிப்பான். சேச்சா பிறந்த நான்காம் மாதம் அவள் தாய் விதவையானவள். அவன் தந்தை ரங்கசாமி ஐயங்கார் பொன்மலை ரயில்வே ரிப்பேர் தொழிற்சாலையில் அக்கவுண்ட்ஸில் இருந்தவர். படக்கென்று ஒருநாள் போய்விட்டார். ஃபேமிலி பென்ஷன் ஒன்றுதான் வருமானம். அதில் சிக்கனமாகக் குடித்தனம் செய்தாலும் மாசக் கடைசியில் பாட்டியிடம் காபிப்பொடி கடன் கேட்க வருவாள். சிவப்பான உடம்பு. விதவைகளுக்கென்று ஏற்பட்ட காவி கலர் புடவை, ரவிக்கையில்லாமல் போர்த்திக்கொண்டு, நெற்றியில் லேசாக சூர்ணம் அணிந்துகொண்டு பாட்டியுடன் தகாத இளமையில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் சந்நிதிக்கு பகவத் விஷயம் உபன்யாசம் கேட்கச் செல்வாள். அவள் வாழ்க்கை முழுவதுமே சேச்சாவைச் சுற்றி இயங்கியது. சேச்சா பள்ளியிலிருந்து வரக் கால் மணி தாமதமானாலும் பதறிப் போய்விடுவாள். கோட்டைக்குப் போனால் வீட்டுக்கு வரும் வரை வாசலையே பார்த்துக் கொண்டு இருப்பாள். என்னை எப்போது பார்த்தாலும் ‘நன்னா படிக்கிறயா‘ என்று விசாரிப்பாள். தினம் சிறிய

வெண்கலச் செம்பு எடுத்துக்கொண்டு காவேரிக்குப் போய் அதிகாலையில் ஈரப் புடவையுடன் வருவாள். பாட்டியிடம் அஞ்சு பத்து கைமாத்தாக வாங்க வரும்போது "சேச்சா படிச்சு முன்னுக்கு வந்துட்டா என் கஷ்டம் எல்லாம் தீர்ந்துடும் மாமி."

"நன்னாத்தான் படிக்கிறான் மாமி. ஆனா, எதுத்து எதுத்துப் பேசறான். அரிசி உப்புமா நன்னால்லைன்னு அன்னிக்குப் பாருங்கோ தட்டத்தை வீசி எறிஞ்சான். தோசை வேணுமாம். உளுந்துக்கும் புழுங்கரிசிக்கும் எங்கே போவேன்?""அவனுக்கென்னடி செல்லம், எட்டூருக்குப் படிப்பான்."

"நான் கேக்கட்டுமா?"

"வேண்டாம்... வேண்டாம். திருப்பதிப் பெருமாளுக்கு முடிஞ்சு வெச்சிருந்ததை எடுத்து தெற்கு வாசல்ல போய் கிருஷ்ணா கபேல வாங்கிச் சாப்ட்டுக்கோன்னு அனுப்பிச்சேன்."

சேச்சா படிப்பைப் பற்றிய கவலை அந்தத் தாய்க்கு இல்லை. நான்காம் வகுப்பிலிருந்து பள்ளிஇறுதி வரையில் பள்ளியில் உள்ள அத்தனை ஸ்காலர்ஷிப் ஃப்ரீஷிப்புகளையும் அவன் பெற்றான். ஆண்டு விழாவில் படிப்பு சம்பந்தமான அத்தனை கோப்பைகளையும் அத்தனை டிரஸ்ட் பரிசுகளையும் ஆர்.சேஷாத்ரி, ஆர்.சேஷாத்ரி என்று மைக்கில் சொல்லி அலுத்து, ஸ்டேஜ் ஓரத்திலேயே அவனை நின்றுகொள்ளச் சொல்வார்கள். அடுத்தடுத்துப் பரிசு வாங்கி வகுப்பில் முதல், பள்ளியில் முதல், கல்லூரியில் முதல், மாகாணத்தில் முதல் என்று வரிசையாக அத்தனை முதல்களையும் கவர்ந்துவிட, "உன் பிள்ளைக்கு என்னடி குறை, கலெக்டர் பரீட்சை எழுதச் சொல்லு, எட்டூருக்கு கலெக்டராவான்" என்றாள் பாட்டி.

"அதெல்லாம் வேண்டாம் மாமி. அவனை வெளிய எல்லாம் அனுப்பறதா இல்லை. பேசாம கோல்டன் ராக்லயே அவா அப்பா ஆபீஸ்லயே வேலை போட்டுக் கொடுப்பாளாம். அப்ரண்டிஸ் மனு போட்டிருக்கான். கெடைச்சுட்டா மேல அடையவளைஞ்சான்ல முறைப் பொண்ணு காத்துண்டிருக்கு. நப்பின்னைன்னு நம் குடும்பத்துக்கு அனுசரணையான, அடக்கமான பொண்ணு. கல்யாணத்தைப் பண்ணிடலாம்னு இருக்கேன் வர சித்திரைக்குள்ள."

சேச்சா ஃபார்வர்டு கம்யூனிட்டியாக இருந்தாலும் இன்ஜினீயரிங், மெடிக்கல் இரண்டு ஸீட்டும் கொடுத்தே ஆக வேண்டியிருந்தது அவனுக்கு. என்ன படித்தான், எப்படி எதைத் தேர்ந்தெடுத்தான் என்று தெரியுமுன் எங்கள் குடும்பத்தில் மாறுதல்கள் ஏற்பட்டு, ஸ்ரீரங்கத்தைவிட்டு வெளியே வந்து, என் கவலைகள் திசை திரும்பிவிட்டதால் தொடர்பு விட்டுப்போய் பல வருஷங்கள் இடைப்பட்டு, நான் டெல்லிக்கு சிவில் ஏவியேஷனில் சேர்ந்து மாற்றலாகி மாற்றலாகி அலகாபாத், கல்கத்தா, பம்பாய் என்று பல ஊர்களில் வேலை பார்த்து சில ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் போஸ்டிங் ஆனபோது, ஒரு முறை கன்ட்ரோல் டவரில் போன் வந்திருப்பதாகச் சொன்னார்கள். போய்க் கேட்டால், ”ஞாபகமிருக்கிறதா ரங்கா? நாதன் பேசறேன்.”

”எந்த நாதன்?”

”சேஷாத்ரிநாதன், சேச்சா!”

”சேச்சா, வாட் எ சர்ப்ரைஸ்... இப்ப எங்க இருக்கே? அம்மா எல்லாம் சௌக்கியமா? உன்னை யாருக்கும் ‘நாதன்’னு தெரியாதே. ஸாரி, என்ன படிச்சே? இன்ஜினீயரிங்கா, மெடிக்கலா, ஐ.ஏ.எஸ்ஸா?”

”அதெல்லாம் இல்லைப்பா. ஐ.ம் எ டீச்சர். அம்மாவையும் திருச்சியையும் விட்டுட்டு வர முடியாதுன்னு பி.எஸ்ஸி., ஆனர்ஸ் சேர்ந்தேன். பிஸிக்ஸ் எடுத்துண்டேன். இப்ப அசிஸ்டென்ட் புரொபஸர் ஆஃப் பிஸிக்ஸ்” என்று நகரத்தின் பிரசித்தி பெற்ற இயேசு சபைக் கல்லூரியின் பெயர் சொல்லி, குவார்ட்டர்ஸில் இருப்பதாகவும் அம்மா என்னைப் பார்க்க விரும்புவதாகவும் சொன்னான்.

”கல்யாணமாய்டுத்தா?”

”ஆச்சு, அம்மாவுக்காக” என்றான்.

அடுத்த ஞாயிறு அவன் வீட்டுக்குச் சென்றபோது கோடம்பாக்கத்தில், அந்தக் கல்லூரி வளாகத்தில் காற்றோட்டமாக குவார்ட்டர்ஸ் கொடுத்திருந்தார்கள். சேச்சாவின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம்

இருப்பது சந்தோஷமாக இருந்தது. தெரு விளக்குக்குப் பதில் சற்று அதிகப்படியாகவே குழல் விளக்குகள்! கட்டில், காத்ரெஜ் அலமாரி, பதினாலு இன்ச் டி.வி. நல்ல வீடு, அழகான மனைவி. செல்லம்மாள் அப்படியே இருந்தாள். மருமகளைப் பெண் போல அழைத்தாள். நப்பின்னை கர்ப்பமாக இருப்பது தெரிந்தது. கையில் மூன்று வயசுக் குழந்தை பெயர் ரங்கநாதன் அவ்வப்போது களுக் களுக் என்று சிரித்துக்கொண்டு இருக்க, சேச்சாவின் டேப் ரெக்கார்டரில் மாலியின் குழலிசை ஒலிக்க, ஏதோ ஒருவிதத்தில் நியாயம் நடந்துவிட்டதாகத் தோன்றியது. வெண்ணெயும் வெல்லமும் வைத்து அடை சாப்பிட்டபோது, ”இந்த மாதிரியெல்லாம் டிபன் சௌகரியங்கள் இருக்குன்னா கல்யாணம் பண்ணிக்கலாம் போலத்தான் இருக்கு மாமி” என்றேன். நப்பின்னை களங்கமில்லாமல் கன்னம் சிவந்தாள்.

”ஏன்டாப்பா, நீயும் பண்ணிக்க வேண்டியதுதானே?”

”அதுக்கென்ன மாமி, வத்சலாவுக்கு ஆகட்டும் முதல்ல” என்றேன்.

”இப்ப ஊம்னு சொன்னா நப்பின்னை தங்கையே பெருந்தேவின்னு இருக்கா.”

”பேரை மாத்திண்டுட்டா சித்ரான்னு” என்றாள் நப்பின்னை.

சேச்சாவுக்கு காலேஜில் மிகப் பெரிய பெயர் என்றும், ஒரு ஃபோர்டு ஃபவுண்டேஷன் கிராண்ட்டில் அவனுக்கு மூன்று வருஷம் டாக்டரேட் படிக்கத் தாராளமான உபகாரச் சம்பளத்துடன் அமெரிக்கா போகச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பதும் தெரிந்தது.

”எப்ப போறே?”

”எப்படி அம்மாவையும் இவளையும் விட்டுட்டுப் போறது?”

செல்லம்மாள்தான் சொன்னாள், ”நான் பார்த்துக்கறேன். எனக்குத் தைரியம் வந்துடுத்து. போய்ட்டு வாடான்னு சொன்னா கேக்க மாட்டேங்கறான். அது பெரிய பிரக்யாதி இல்லையா ரங்கு? இந்த மாதிரி இண்டியாவிலேயே ஒருத்தருக்குத்தான் கிடைச்சிருக்காம். போய்ட்டு வாடான்னா...”

”சேச்சா, ஒண்ணு பண்ணேன். அங்கேயே முயற்சி செய்தா வேலை கிடைச்சுடும். அம்மாவையும் ஃபேமிலியையும் அழைச்சுண்டு போய்டலாமே” என்றேன்.

”அப்படி ஒரு சாத்தியம் இருக்கா என்ன?”

”உனக்கு இருக்கிற புத்திசாலித்தனத்துக்கும் திறமைக்கும் நிச்சயம் அந்த யூனிவர்சிட்டிலயே வேலை கொடுப்பான் தெரியுமா?”

”அதான் சொல்றேன், நீங்க போய்ட்டு வாங்கோ. நான் அம்மாவோட என் தம்பி நச்சு வந்து இருக்கேன்கிறான். அக்கம் பக்கத்தில் எல்லாம் ரொம்ப அனுசரணையா இருக்கா. தனியா இந்த கேம்பஸ்ல இருக்கிறதுல கஷ்டமே இல்லை. வருஷம் ஒரு தடவை வரலாம். போக வர சார்ஜ் கொடுக்கறாளாம்.”

”இருந்ததே இல்லை.”

”எனக்கென்னவோ இந்த ஆஃபரை விட வேணாம்னு தோண்றது சேச்சா” என்றேன்.

சேச்சா அலட்சியமாகப் பேசினான்.

”அமெரிக்கா போனா முதல்ல சூட்டெல்லாம் போட்டுக்கணுமேப்பா.”

”இவரை ஒரு தடவைகூட நான் சூட்டு போட்டுப் பாத்ததில்லை” என்றாள் நப்பின்னை. ”காலேஜுக்கும் வேஷ்டிதான். பேன்ட்கூடப் போட்டுக்க மாட்டார்!”

”கல்யாணத்துல போட்டுக்கலை?”

”கல்யாணத்திலயும் வேஷ்டிதான்; காலேஜுக்கும் வேஷ்டிதான்! போட்டுக்க மாட்டேங்கறார். சொல்லுங்கோ நீங்க” என்றாள் நப்பின்னை.

”அடுத்த வருஷத்தில் இருந்து கிளாசுக்கு பஞ்சகச்சம் கட்டிண்டு குடுமியோட போலாம்னு இருக்கேன்.”

”பையன்கள்லாம் கலாட்டா பண்ண மாட்டாங்களா?”

”இல்லப்பா, லெக்சர் இன்ட்ரஸ்டிங்கா இருக்கிறதால தே டோன்ட் மைண்ட்” என்றான். கொஞ்சம்கூடப் பெருமை சேர்க்காமல் சரளமாக இதைச் சொன்னான்.

”அமெரிக்கா போறதுக்கு சூட்டு போட்டுண்டுதான் ஆகணும்னு கட்டாயம் இல்லை மாமி” என்றேன்.

”இருந்தாலும் சின்னதிலேர்ந்து எனக்கு ஆசை. இவனுக்கு சூட்டு போட்டுப் பார்க்கணும்னு. இவப்பா கல்யாணத்துக்குத் தெச்சது. நல்ல அல்பாக்கா சூட்டு. அந்துப்பூச்சி கடிச்சுடுத்து. சின்னவங்களுக்கு ஆசை இருக்காதா என்ன? என்னவோ இப்பவே சன்யாசியாய்ட்ட மாதிரி.”

”அதெல்லாம் இல்லை” என்று சிரித்தான் சேச்சா.

சேச்சா அமெரிக்கா போனானா என்பதைத் தெரிந்துகொள்ளும் முன் என்னைத் தற்காலிகமாக ஹைதராபாத் பேகம்பேட்டைக்கு மாற்றிவிட்டதால், நான்கு மாதம் கடந்து திரும்பினதும்தான் அந்தக் கல்லூரிக்கு போன் செய்து கேட்டதில் அவன் அமெரிக்காவுக்குப் போய்விட்டதாகத் தெரிந்தது. அடுத்து சேச்சா நிச்சயம் அங்கே பிரபலமாகி அந்த மேல்நாட்டு சூழ்நிலையில் எதையாவது புதுசாகக் கண்டுபிடித்தான் என்ற செய்தியை எதிர்பார்த்தேன்.

அடுத்த முறை சேச்சாவின் வாழ்க்கையும் என் வாழ்க்கையும் குறுக்கிட்டது ஒரு விநோதமான சந்தர்ப்பத்தில். மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் ஏர் இந்தியாவின் நேரடி விமானம் லண்டன், நியூயார்க்கிலிருந்து வந்து நின்றுகொண்டு இருந்தது. அப்போது நான் ஏட்டிஸி டியூட்டியில் இருந்தேன். இன்ஸ்பெக்ஷனுக்காக எங்கள் மேலதிகாரி ஒருவர் வருகிறார் என்று அரைவல் லவுஞ்சுக்குச் சென்றபோது கேவி என்னைப் பார்த்தான். அவனுடன் சேச்சாவின் மச்சினன் நச்சுவும் ஏராளமான கல்லூரி மாணவர்களும் பிளாஸ்டிக் நாற்காலிகளில் காத்திருந்தார்கள். என்னை அவசரமாகக் கூப்பிட்டு கேவி, ”உனக்கு கஸ்டம்ஸ்ல யாரையாவது தெரியுமா? ஏரோட்ரோம்லதானே வேலையா இருக்கே?”

”ஆமாம், என்ன வேணும்?”

”ஒரு கன்ஸைன்மென்ட்டைக் கிளியர் பண்ணணும்.”

”இதுதான் நச்சு, சேச்சாவோட மச்சினன்.”

”சேச்சா, இந்த ஃப்ளைட்ல வரானா?”

”ஆமாம்” அவன் கண்கள் கலங்கியிருந்ததை முதலில் கவ னித்தேன்.

”என்ன கேவி, எதாவது உடம்பு கிடம்பு சரியில்லையா?”

”இந்த ஃப்ளைட்ல சேச்சாவோட பாடி வருது!”

”ஐயோ, என்ன ஆச்சு?” என்றேன் பதறிப் போய்.

”அமெரிக்காவில் எங்கயோ இடம் தெரியாம நியூயார்க்ல சுத்தப் போயிருக்கான். கைல டாலர் அதிகம் இல்லையாம். பட்டப் பகல்ல, அதென்ன சொல்வா, ‘மகிங்’காம் அவன்கிட்ட டாலர் இல்லைன்னு மண்டைல அடிச்சிருக்கான். அடி பலமா பட்டதுல செத்துப் போயிட்டானாம்.”

”மை காட்.”

கார்கோ ஹோல்டிலிருந்து மெள்ள அந்தப் பெட்டி இறங்குவதைப் பார்த்தேன். எதிரே இடிந்துபோய் சேச்சாவின் அம்மாவும் நப்பின்னையும் உட்கார்ந்திருக்க, நிறைக் கர்ப்பமாக இருந்தாள். குழந்தை தாயின் மயிரைப் பிடித்து, இழுத்து விளையாடிக் கொண்டு இருந்தது. அடிக்கடி தாயின் கண்ணீர் புரியாமல் முகத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டு இருந்தது.

நான் ”செல்லம் மாமி! என்னாச்சு?”

அந்த இடத்து இரைச்சலில் அவள் அழுதது பெரிசாக யாருக்கும் கேட்கவில்லை. யாரோ வெளிநாடு சென்று திரும்பும் தலைவருக்கு மலர் மாலைகள் தொடர்ச்சியாக அணிவிக்கப்பட்டபோது, கரகோஷ ஆரவாரம் அவள் அழுகையைப் புதைத்தது.

மெள்ள மெள்ள அந்தப் பெட்டி இறங்க நான் கஸ்டம்ஸில்

ராசரத்தினத்திடமும் ஏர்போர்ட் ஹெல்த் ஆபீஸர் சங்கரமூர்த்தியிடமும் சொல்லி, ஃபர்மாலிட்டிகள் அனைத்தையும் சுருக்கி ஏர் இண்டியா மேனேஜரிடமும் சொல்லி விரைவிலேயே பெட்டியை விடுவித்து அவர்களுக்கு என்னால் ஆன உதவி செய்து தந்தபோது, அந்தப் பெரிய பெட்டி நம் ஊர் ஆம்புலன்சுக்குள் நுழையாமல் வெளியே நீட்டிக் கொண்டிருக்க, பேருக்குப் பேர் ஆணை பிறப்பித்துக்கொண்டு இருந்தார்கள். நான் சேச்சா எதற்காகப் பிறந்தான். எதற்காக அத்தனை திறமையாகப் படித்து, எதற்காக அமெரிக்கா சென்று நியூயார்க் நகர வீதியில் விரயமாக ரத்தம் சிந்திச் செத்தான் என்பதை யோசிக்கையில், அப்போதே மலர் வளையங்களை வைக்கலாமா, வளாகத்துக்குச் சென்றதுமா என்பதை விவாதித்தார்கள்.

”க்ரீன் கார்டு கெடைச்சதும் எல்லாருமா சேர்ந்து அமெரிக்கா போலாம்னு எழுதியிருந்தானே... நான் என்ன பாவம் செய்தேன்? இப்படிக் கண்காணாத தேசத்தில் சேச்சா... சேச்சா... இப்படிப் பண்ணிட்டியேடா!”

”தெருவில் அடிபட்டுச் சாகணும்னு என்ன நியா யம் இது!” நப்பின்னை புழுதித் தலையும் திறந்த மார்புமாகப் பார்த்துக்கொண்டு இருந்தாள்.

அந்தப் பெட்டி மிகத் திறமையாக பேக் செய்யப்பட்டு இருந்தது. அதை எப்படி, எந்த உபகரணங்களைக்கொண்டு திறக்கலாம் என்பதற்குக் குறிப்புகள் ஒரு காகிதத்தில் பாலிதீன் பையில் வைக்கப்பட்டு இருந்தது. அதற்கான டூல்சும் சேர்ந்து, மார்ட்டின் அண்டு கம்பெனி எம்பாமர்ஸ் அண்டு ஃப்யுனரல் டிரக்டரஸ்‘ என்று கார்டு வைத்திருந்தது. ‘Have a Good Die‘ முதலில் அலுமினியப் பெட்டி. அதைத் திறந்ததும் உள்ளே பளபளவென்று பாலிஷ் போட்டு தேக்கு மரப் பெட்டி. அதில் எங்கள் முகங்கள் தெரிந்தன. அதை சீலைப் பிரித்து மூடியை நெம்புவதற்கு கார்பென்ட்டரைக் கூட்டி வர வேண்டியிருந்தது. நச்சுதான் சொன்னான், ”அங்க இருக்கிற இண்டியன் அசோசியேஷன்ல இன்டர்நெட் மூலம் காண்டாக்ட் பண்ணி அவாள்லாம் ஒரே நாள்ல பணம் சேர்த்து முழுச் செலவையும் ஏத்துண்டாளாம்.”

”என்ன அருமையா பேக் பண்ணிருக்கான் பாருங்கோ, அமெரிக்கா அமெரிக்கா தான்.”

பெட்டியைத் திறந்ததும் லேசாக ரோஜா வாசனை வீச, சேச்சா

வெல்வெட் மெத்தையில் படுத்திருந்தான்.

”வாடி, வந்து பாரு. உன் புருஷனை சூட்டு போட்டுண்டு பார்க்கணும்னியே, பாரு!”

நான் அதிர்ச்சியுற்று சேச்சாவின் முழு உடலையும் அப்போதுதான் பார்த்தேன். அவன் உடலில் உள்ள கெட்ட திரவங்கள் நீக்கப்பட்டு, நல்ல கலராக இருந்தது. தேகமும் கைகளும் கன்னத்தில் லேசாக ருஜ் தடவப்பட்டு வாய் லேசாகச் சிரிப்பது போல் ‘க்ளிப்‘ வைக்கப்பட்டு இருந்தது. தலை மயிர் மிக சுத்தமாகத் தழைய, படிய வாரப்பட்டு சேச்சா அற்புதமான சூட் அணிந்துகொண்டு இருந்தான்.

******** ********

மஞ்சள் ரத்தம்

ஞாயிற்றுக்கிழமை காலை மூர்த்தி அவளை அழைத்து வந்தான். சம்பிரதாய அறிமுகம் இல்லாமல், ”ராமு, இவ பேரு சத்யா. மாதம் பூரா இவ உன்கூட இருக்கப் போறா.”அவன் அழைத்து வந்த பெண்ணுக்குப் பத்தொன்பது வயசு இருக்கும். கலைந்த தலை, தீவிரமான தோற்றம். சகல சொத்துக்களும் முதுகுச் சுமையில் அடங்கி இருந்தது. என்னைப் பார்த்துச் சிரிக்கவும் இல்லை, முறைக்கவும் இல்லை. நின்றுகொண்டு இருக்கும்போதே புத்தகம் படித்துக் கொண்டு இருந்தாள்.”சத்யா, இதுதான் ராமு. நான் சொன்னனே, இங்கதான் நீ இருக்கப்போறே” என்றான்.

”எனக்கு இதில் ஏதாவது உரிமை இருக்கா என்ன? என் ரூமைக் காட்டினா அங்கே போறேன்” என்றாள் அந்தப் பெண்.

”நீதானே சொன்னே. உன் மனைவி பிரசவத்துக்குப் போயிருக்கா. சில மாதங்களுக்கு யாரும் இருக்க மாட்டானு, கம்பெனிக்காக யாரையாவது அனுப்புன்னு?”மூர்த்தி என்னைச் சற்றுத் தர்மசங்கடமாகப் பார்த்தான். ”அவ ஒரு மாதிரி” என்றான். மூர்த்தியைத் தனியாக அழைத்து ”மூர்த்தி, நீ செய்யற காரியம் உனக்கே நல்லா இருக்கா?”

”அதுக்காக இந்த மாதிரி சிடுமூஞ்சிப் பெண்ணையா சொன்னேன்?”

”ஏன் இவளுக்கு என்ன?”

”என்ன மூர்த்தி, அவளைப் பார்த்தா ஒரு மாதிரி இல்லை?”

மூர்த்தி என்னை நிதானமாகப் பார்த்து, ”ராமு, நீ... நீ எப்படி முடிவெடுக்க முடியும்? அவளோடு ஒரு வார்த்தை பேசியிருக்கியா இதுவரைக்கும்? பேசிப் பாரு.”

”தோற்றத்தைப் பார்த்தாலே தெரியவில்லையா?”

”என்ன தெரியுது?”

‘ஒரு மாதிரின்னு.”

”ஒரு மாதிரின்னா என்ன? புரியலை. நான் வேணா சொல்லிர்றன்,

சுத்தமாகக் குளிக்கும்படி. ராமு, நான் ஒரு இக்கட்டில் இருக்கேன். எக்ஸ்சேஞ் புரொகிராம்படி இவள என் வீட்டுக்கு அனுப்பியிருக்காங்க. எனக்கு இப்ப இக்கட்டான நிலை. என் மாமனார் பரிவாரத்தோட கண் ஆபரேஷனுக்கு வந்திருக்கார். அதனால் வீட்ல இடம் இல்லை. அரசாங்கத்துக்கு இவளைச் சேர்த்துக்கறதா ஒப்புத்துக்கிட்டேன். அதனால் நீ இவள ஒரு மாதம் சகிச்சுக்கிட்டா போதும். எப்ப பார்த்தாலும் புஸ்தகம் படிப்பாளாம். இவளால தொந்தரவு எதுவும் இருக்காது." அவளை இங்கி ருந்து பார்த்தேன். நின்றுகொண்டு புத்தகம் படித்துக்கொண்டு இருந்தாள்.

"இவ யாரு?"

"ஏதோ அரசாங்க ஆராய்ச்சிக்கு முக்கியமா தேவைப்படறா. முக்கியமான அப்ஸர்வேஷனுக்கு முந்தி ஓரியண்டேஷனுக்கு அனுப்பப் போறாங்களாம். கொஞ்சம் பேச்சுக் கொடுத்துப் பாரு. நல்ல புத்திசாலிதான். என்ன, கொஞ்சம் பேச்சு கம்மி, அவ்வளவுதான். சாப்பாடு எல்லாம் வெளியே போய்ச் சாப்பிட்டுப்பா. மாடி சாவி கொடு போதும். அப்புறம் இவளால எந்தத் தொந்தரவும் இருக்காது."

"சோப்புக்கே செலவாகும் போல இருக்கே, நாமெல்லாம் எத்தனை சுத்தமான பிரஜைங்க."

"எல்லாம் சரியாப்போய்டும் ராமு. தயவுசெய்து என்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாத்தின, உனக்குப் பிரதியுதவி..."

"தேவையில்லை, நண்பர்களுக்குள்ள என்ன" என்றேன்.

மூர்த்தி போனதும் அவளை அழைத்து மாடி ரூமைக் காட்டினேன்.

அவள் உள்ளே நுழைந்து படுக்கையில் படுத்துக்கொண்டு படிப்பதைத் தொடர்ந்தாள். கையில் ஒரு குடை வைத்திருந்தாள். இந்த ஊர்ல மழையே கிடையாது. குடை எதுக்கு?

"சாப்பிட ஏதாவது இருக்குமா?" என்றாள்.

”எங்க சாப்பாடு உனக்குப் பிடிக்குமா” என்றேன் சாமர்த்தியமாக.

”வேற வழி” என்றாள் சுத்தமாக. நான் அறையைவிட்டு விலகக் காத்திருந்தாள்.

மூர்த்தி சொன்னது போல் அவளால் எந்தத் தொந்தரவும் இல்லை. மாடியில் இருக்கிறாளா என்று தெரியாத அளவு சின்னச் சத்தம்கூட வரவில்லை. ஒரு முறை மாடிக்குப் போய்ப் பார்த்தபோது மிகமிக நிசப்தமாக இருந்தது. இவள் என்ன இப்படியா தூங்குவாள் என்று கதவைத் தட்டிப் பார்த்தேன். பதிலே இல்லை.

நீண்ட நேரம் தட்டின பிற்பாடு எட்டிப் பார்த்ததில் எனக்கு அவள் தூங்கிய விதம் விநோதமாக இருந்தது. ஒரு சலனமும் இல்லாமல் இப்படியா பிணம் போல... இல்லை, ஏதாவது மருந்தின் விளைவா?

யார் இந்த அந்நியள்?

காலை அவள் இறங்கி வந்தபோது புன்னகைக்கவில்லை. செய்தித்தாளை அவளிடத்தில் கொடுத்தேன். அவள் அதைப் படிக்கவில்லை. அதனால் தன் காலணிகளைச் சுத்தம் செய்துகொண்டாள்.

”உங்கள் செய்திகளில் இஷ்டமில்லை” என்றாள்.

உங்கள் செய்தி!

”பின் என்ன செய்தித்தாள் வேண்டும்?” என்று கேட்டேன்.

”எதும் வேண்டாம் எனக்கு” என்றாள்.

”என்ன சாப்பிடுகிறாய்?” என்றேன்.

”நான் இனி இங்கே சாப்பிடப்போவதில்லை, கேன்டீனில் எனக்கு ஏற்ற உணவு தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கிடைக்கும்” என்றாள்.

”என்ன மாதிரி உணவு? சொல், நான் ஏற்பாடு செய்கிறேன்.”

”வேண்டாம்.”

ஏன் தன் உணவுப் பழக்கத்தை என்னிடம் சொல்ல மாட்டேன் என்கிறாள்?

காலை மேஜை மேல் போட்டுக்கொண்டு புத்தகம் படித்தாள். ”கெடல் எஷர் பாக் சென்ற நூற்றாண்டுப் புத்தகமா” என்றேன். கவனிக்காமல் நிதானமாகப் படித்தாள்.

”உன் சொந்த ஊர் எது, சத்யா?” என்றேன்.

”இந்த ஊர் இல்லை.”

”வேற்றுக் கிரகமா?” என்றேன். அவள் என்னை நிமிர்ந்து பார்த்து, ”அந்த ரங்கமான கேள்விகளுக்கு நான் பதில் சொல்ல வேண் டிய கட்டாயம் இல்லை.”

அவள் செய்யும் காரியங்கள் எல்லாம் ஒருவாறு நம்மிடமிருந்து வித்தியாசப் பட்டது போல் இருந்தது. பேச்சு, நடை, உடை, பாவனை எல்லாமே நிச்சயம் இவள் நம்மவள் இல்லைஎன்ற சந்தேகத்தை என்னுள் விதைத்தது. படிக்கும் புத்தகங்கள் நம்மிலிருந்து வேறுபட்டவை. பேச்சுவார்த்தைகளில் ‘விடையிறுக்க’, ‘பயன்பாடு’, ‘துல்லியம்’ போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினாள். யார் இவள்? எப்படி அதைத் தீர்மானமாகக் கண்டுபிடிப்பது? பிடி கொடுத்தே பேச மாட்டேன் என்கிறாளே. என் ஆர்வம் அதிகரித்தது. கை கால்களை முழுவதும் மறைத்து ஏன் உடையணிகிறாள்? பேசும் போதெல்லாம் தலையையும் புஜங்களையும் ஏன் இவ்வாறு ஆட்டி ஆட்டிப் பேசுகிறாள்? யார் இவள்? கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்கிற ஜுரம் கொஞ்சம் கொஞ்சமாக ஆர்வமாக அப்புறம் வெறியாக மாறிற்று. என் ஆராய்ச்சியைத் துவங்கிவிட்டேன். முதலில் அவளை ஆடையில்லாமல் பார்க்க விழைந்தேன். இதில் என்னைச் செலுத்தியது ஒரு விதமான விஞ்ஞான ஆர்வமே தவிர, வேறு எந்த விபரீத இச்சையும் இல்லை என்பதை இப்போதே சொல்லிவிடுகிறேன். அவளுடைய உள் அங்கங்கள் நம் அங்கங்கள் போல இருக்கின்றனவா என்று தெரிந்துகொள்ளவே இந்த யத்தனம்.

அவள் இரவு ஏழு மணிக்கு அப்புறம், ஆனால் நான்

அலுவலகத்திலிருந்து வருவதற்குள் குளிக்கிறாள் என்பதை அறிந்தேன்.

ஒருமுறை குளியல் அறையை ஒட்டியிருக்கும் அறையில் என் மனைவி பழைய துணிகளையெல்லாம், கண்டாமுண்டா சாமான் களையெல்லாம் அடுக்கியிருந்தாள். சாதாரண நாட்களில் நான் அந்த அறைக்குள் போனதே இல்லை. அந்த அறைக்கும் குளிக்கும் அறைக்கும் கதவு இருப்பது தெரியும். அன்றைக்கு அரை நாள் விடுமுறை எனக்கு. அதனால் சீக்கிரமே திரும்பிவிட்டேன். மாடியில் அவள் பாடிக்கொண்டே குளிக்கும் சத்தம் கேட்டது. தண்ணீரைத் திறந்துவிட்ட 'சோ'வென்ற சீரான இரைச்சல் கேட்டது. மெள்ள, மிக மெள்ள, அடுத்த அறைக்குள் நுழைந்து, சன்னமாக ஒரு இன்ச் அந்தக் கதவைத் திறந்து உள்ளே பார்த்தேன். அவளை மெல்லிய நீராவிப் புகை மறைத்திருந்தது. அவ்வப்போது அவள் உடலின் வேறுவேறு பாகங்கள் ஆவித்திரையினூடே கோடி காட்டியது. இங்கே ஒரு புஜம். அங்கே ஒரு முழங்கால் அழுந்திய வயிறு, மார்பு. எனக்கு அனைத்தும் ஆச்சர்யம் அளித்தது. அவள் பாகங்கள் எதுவும் நம்மைப் போல் இல்லை. எனக்கு வியர்த்துவிட்டது. இவள் நம்மவள் இல்லை. வேற்றுக் கிரகத்துப் பிரஜை என்பது திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது. சற்று நேரத்தில் குளித்து முடித்து, தன் உடைகளை மேலே போர்த்திக்கொண்டு இருந்தவள் சட்டென்று சற்றும் எதிர்பாராமல் அந்தக் கதவருகே வந்து சரேல் என்று திறந்து, "எனக்குத் தெரியும் இந்த மாதிரி எதாவது நடக்கும் என்று. என் உள்ளுக்குள் தெரிந்துவிட்டது. உணர்வு சொல்லிவிட்டது. உனக்கு வெட்கமாக இல்லையா? ஒரு பெண் குளிப்பதை மறைந்திருந்து பார்ப்பது எத்தனை கேவலம்? இந்த முறை உன்னை மன்னித்தேன். இனிமேல் இந்த வேலை வைத்துக்கொள்ள வேண்டாம். அடுத்த முறை இம்மாதிரி நடந்தால், உன் மேற்பார்வை அதிகாரிக்குச் சொல்ல வேண்டி வரும்" என்றாள்.

எனக்கு அவமானமாக இருந்தது. "இனி இவ்வாறு நடக்காது" என்று சொல்லிவிட்டு வந்தேன்.

ஆனால், என் ஆர்வம் தணியவில்லை. கேவலம் இந்தப் பெண்! வேற்றுக் கிரகத்துப் பெண் என்பது எனக்கு முழுவதும் தெரிந்ததா? இவளிடம் நாம் ஏமாறுவதா என்று என் நண்பன் தணிகையிடம் சொன்னேன். "எப்படிச் சொல்கிறாய் அவள் வேற்றுக் கிரகத்துப் பெண் என்று?" தணிகை எதிலும் சந்தேகன்.

”குளிக்கும்போது பார்த்துவிட்டேன் தணி! அங்கங்கள் எல்லாம் நம் மாதிரியே இல்லை.”

”அதனால் வேற்றுக் கிரகம் என்று சொல்ல முடியாது. நம்மில் எத்தனையோ வகை.”

”பின் எப்படிச் சொல்ல முடியும் என்கிறாய்?”

”ஒரே ஒரு வழி, ரத்தப் பரிசோதனை. அவளைக் கத்தியால் கீறிப் பார்ப்பதுதான். ரத்தம் வருகிறதா இல்லையா என்று கண்டுபிடிக்க வேண்டும்.”

தணிகை தன் அலமாரிக்குச் சென்று பளபளப்பான சிறிய கத்தி ஒன்றை எடுத்து ”இதை அவள் முதுகில் அல்லது முழங்காலில் கழுத்தில் கீறாதே மற்ற எந்த இடத்திலாவது கீறிப் பார். வலி அதிகம் இருக்காது. அதன் கூர்மை அப்படிப்பட்டது. மிக மெலிதாகத்தான் சருமங்களைக் கீறும். நம் சர்ஜன்கள் பயன்படுத்தும் லேசர் விளிம்புக் கத்தி இது.”

அவன் அந்த அருமையான கத்தியை ஒரு சின்ன உறைக்குள் போட்டுக் கொடுத்தான். அதை வாங்கிக்கொள்ளத் தயங்கினேன்.

”பயமாக இருக்கிறது.”

”ஒன்று செய்து பார். அவள் நெஞ்சில் கை வைத்துப் பார். ஏதாவது அடித்துக்கொள்கிறதா? க்ளாக் ஏதாவது இருக்கிறதா பார்த்துவிடு. அதைவிடக் கீறிப் பார்த்துவிடுவதுதான் உத்தமம். ரத்தம் உத்தரவாதமாகக் காட்டிக் கொடுத்துவிடும்.”

”அவள் பயத்தில் சத்தம் போட்டு அதிகாரிகளுக்குப் புகார் கொடுத்தால்?”

”கொடுப்பாளா?”

”ஆம். சண்டைக்காரி. குளிக்கும்போது பார்த்ததற்கே ரொம்ப ரகளை செய்தாள்.”

”ஆர்வம் இருப்பவர்களுக்குத் தைரியம் வேண்டும். எப்படியாவது

ஏதாவது விபத்து போலக்கூட ஏற்பாடு செய்து கீறிப் பார்த்துவிடலாம். இல்லை, தூங்கும்போது கீறிப் பார்க்கலாம். இல்லை, என்னை அழைத்தால் நான் உத்தமமாகக் காரியத்தை முடிக்கிறேன். நீ பிடித்துக்கொள். நான் கீறுகிறேன், பெண்தானே!"

"இல்லை தணிகை, முதலில் நீ அவளுடன் பேசிப் பார். அதன்பின் இந்தக் கீறல் சமாசாரம்எல்லாம் வைத்துக்கொள்ளலாம்" என்றேன்.

தணிகை சிரித்தான். "சரி" என்றான்.

பத்தாம் தேதி தணிகை வீட்டுக்கு வந்தான். பெட்டியில் நியூஸ் போட்டுப் பார்த்தான். மற்றொரு கப்பல் நிறைய முந்நூறு பேர் அகதிகளாக அனுமதிக்கப்பட்டுஇருக்கிறார்கள் என்று. அவர்கள் ராக்கெட் தளத்தில் வந்து இறங்கும் காட்சியையும் மேயர் அவர்களை வரவேற்பதையும் காட்டினார்கள்.

"இந்தக் கதியில் இவர்கள் ஜனத்தொகை அதிகாரித்துவிடும் போல் இருக்கிறதே!" என்றான்.

"கட்டுப்பாடாகத்தான் செய்கிறார்கள். வீட்டு வேலைக்குத் தேவைப்படுகிறார்களே" என்றேன்.

அப்போது அந்தப் பெண் சத்யா உள்ளே வந்தாள்.

"சத்யா ஒரு நிமிஷம். இது தணிகை, என் நண்பன்."

சத்யா அவனை உணர்ச்சியில்லாமல் பார்த்து 'ஹலோ' என்றாள். மாடிக்குப் புறப்பட்டாள்.

"உன்னுடன் பேச வந்திருக்கிறான்."

"மன்னிக்கவும், நான் பேசும் நிலையில் இல்லை. வினோதகர்களுடன் பேச எனக்கு இஷ்டம்இல்லை."

எனக்குக் கோபம் வந்து தணிகையைப் பார்த்தபோது, அவன் என்னைச் சைகையால் நிறுத்தினான்.

”சத்யா, உனக்கு ஏதாவது உதவி வேண்டுமா?” என்றான்.

அவள் கண்கள் சற்று விரிந்தன. ”என்ன உதவி?”

”இங்கிருந்து தப்பிக்க.”

”இங்கிருந்து தப்பிக்க முடியாது. எனக்குத் தெரியும். நீ அரசாங்க ஒற்றன்.”

அவள் அலட்சியமாகப் புறப்பட, தணிகை அவள் கையைப் பிடித்தான்.

”விடு என் கையை” என்றாள். அவள் முகம் வெளிறியது.

”உனக்குள்ளே என்ன ரத்தம் இருக்கிறது என்று பார்த்தே ஆக வேண்டும். நீ மனுஷியா? உனக்குள் ஓடுவது என்ன? ரத்தமா, இல்லை வேறு ஏதாவது சிலிக்கோன் திரவமா? பார்த்தே ஆக வேண்டும். ராமு, எடு கத்தியை!”

”விடு, வலிக்கிறது.”

”இந்த வலி என்பது செயற்கை வலியா, இயற்கை வலியா? தெரிய வேண்டும்.”

”ப்ளீஸ் விடு” என்ற அவள் கண்களில் கண்ணீர் தெரிந்தது.

”இந்தக் கண்ணீர் சிந்தட்டிக்கா, இல்லை இயற்கையா?”

கத்தி வெளிச்சத்தில் ஒரு செகண்டுக்கு மின்னல் அடித்து அவள் மென்மையான கன்னத்தில் பிரதிபலித்தது.

”வேண்டாம், என்னைக் கொல்லாதே.”

”கொல்லவில்லை, ஒரு சின்ன வெட்டு, ஒரு சொட்டு ரத்தப் பரிசோதனை. உன் ரத்தம் என்ன நிறம்? சிவப்பா அல்லது எங்கள் நோரா கிரகத்து பிரஜைகள் போல மஞ்சளா? அவ்வளவுதான் தெரிய வேண்டும்!”

அவள் அலறினாள். ”வேண்டாம், வேண்டாம். சொல்கிறேன். நான் பூமியைச் சேர்ந்தவள். மனுஷி. என் ரத்தம் நிறம் சிவப்பு. அடிமைக் கப்பலில் வந்தவள்” என்றாள்.

அதற்குள் லேசாகக் காயம்பட்டு அவள் கன்னத்தில் ஒரு ரத்த முத்து புறப்பட்டது, சிவப்பாக!

****

வேதாந்தம்

பாரில் நின் பாதமல்லால் பற்றிலேன் பரம மூர்த்தி
– தொண்டரடிப்பொடி

ஒரு காலகட்டத்தில் மத்தியிலும் மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சியில் (சாஸ்திரி, பக்தவத்சலம்) இருக்கும்போது இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது தமிழகத்தில். துப்பாக்கிச் சூடு, கடையடைப்பு, ராணுவம் வந்து ரகளை எல்லாம் இருந்தது. ஸ்ரீரங்கத்திலும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் எதிரொலிகள் இருந்தன. கீழ உத்தர வீதியில் இருந்த நரசிம்மாச்சாரி என்னும் இந்தி வாத்தியாருக்கு வேலை போய்விட்டது. ரங்கு அவருக்கு ''ஓய் இனிமே 'லட்கா, லட்கி, யஹ் கலம் ஹை, தவாத் ஹை'ன்னு எதாவது குதிரை ஒட்டினீர்... கையை ஒடிச்சுருவா. பேசாம கொஞ்ச நாளைக்கு தொன்னை தச்சுண்டு, வாழைப்பட்டை உரிச்சுண்டு இரும். கலகமெல்லாம் அடங்கறவரைக்கும் லீவு எடுத்துண்டு ஆத்திலயே இரும்!'' என்று அவருக்கு அறிவுரை வழங்கினான்.

''என்னடா ரங்கு! ஜீவனத்துக்கு எங்கே போவேன்?'' என்று அழாக் குறையாகக் கேட்டார். நரசிம்மாச்சாரிக்கு இந்தி தவிர வேறு எதுவும் சொல்லித்தரத் தெரியாது. இவருக்கு முன் இருந்த பாச்சா இந்தி எதிர்ப்பை எதிர்பார்த்துச் சட்டென்று மேத்தமட்டிக்ஸ§க்கு மாற்றிக் கொண்டார். சாரியை வாத்தியாராக வைத்துக்கொள்வதே சலுகைதான் என்று ஹெட்மாஸ்டர் சொன்னாராம். ரொம்ப ரொம்பக் கிட்டப்பார்வை. பகலில் பசுமாடு தெரியாது. பூதக்கண்ணாடி போன்ற சோடாபுட்டிக் கண்ணாடி போட்டும் புத்தகங்களை முகத்துடன் தொட்டுக் கொண்டுதான் படிக்க முடியும். பையன்கள் விஷமம் செய்தால் பொதுவாக அந்த திக்கைப் பார்த்து அதட்டுவார். யார் என்று அவருக்குத் தெரியவே தெரியாது. ''அங்க என்னடா சத்தம்?'' என்று மட்டும் கேட்பார். விஷமம் செய்யும் மாணவர் களைக் கிட்டத்தில் வந்தால்தான் அடிக்க முடியும். அவர்கள் சற்று துரத்தில் நின்றுகொண்டே சமாளிப்பார்கள். வீட்டில் கஷ்ட ஜீவனம்.

நான் அப்போது சிவில் ஏவியேஷனில் ஏ.டி.சி. ஆபீஸராக சென்னை மீனம்பாக்கத்தில் சேர்ந்திருந்தேன். தற்காலிகமாகத் திருச்சியில் போஸ்டிங். ஸ்ரீரங்கத்திலிருந்து செம்பட்டுக்கு தினம் ஜீப்பில் செல்வேன்.

இந்தி எதிர்ப்பால் பள்ளிகளுக்கு காலவரையறையின்றி லீவு விட்டிருந்தார்கள். இந்தி வாத்தியாரை வேலை நீக்கம் செய்தாகி விட்டது என்று நோட்டீஸ் போர்டில் போட வேண்டியிருந்தது. 'இல்லையேல், பள்ளி கொளுத்தப்படும். எச்சரிக்கை!' என்று போராட்டக்குழு அறிவித்திருந்தது. இந்தப் போராட்டக்குழுவில் ஸ்ரீரங்கத்து மூஞ்சிகள் யாரும் இல்லை. அது எதோ அந்நியப் படையெடுப்பு போல. எப்ப வருவார்கள், எப்பப் போவார்கள் என்று சொல்ல முடியவில்லை!

''பாவம்டா நரசிம்மாச்சாரி. எதாவது பண்ண முடியுமா பாரு... ஏதாவது உங்க ஆபீஸ்ல கிடைக்குமா பாரு.''

''இந்தி வாத்தியாருக்கா? ஏரோட்ரோம்லயா... என்ன விளையாடறியா?''

ரங்கு என்னிடம், ''நீ வேணா வேதாந்தம் கிட்ட சொல்லிப் பாரேன். உனக்கு ஃப்ரெண்டுதா&ன? ஏதாவது ஏற்பாடு பண்ண முடியுமான்னு பாரு. வீட்டில குந்துமணி அரிசிகூட இல்லைங்கறார். எங்க பார்த்தாலும் கடன். எனக்கே நூத்தம்பது பாக்கி!''

வேதாந்தம், ஸ்ரீரங்கத்தின் ஆர்.எஸ்.எஸ். சாகையின் தலைவன். அந்தக் கால ஆர்.எஸ்.எஸ். பற்றி கொஞ்சம் சொல்கிறேன். ஒரு காலத்தில் என்னை ஆர்.எஸ்.எஸ்-ஸில் சேர்ப்பதற்குத் தீவிர முயற்சிகள் நடந்தன. காலேஜில் கெமிஸ்ட்ரி வாத்தியார் ஆர்.எஸ்.எஸ்-ஸில் சேர்ந்தால் நிறைய மார்க் போடுகிறார் என்று கேள்விப்பட்டேன். நான் கெமிஸ்ட்ரியில் வீக். அதனால் ஒருநாள் போய்த்தான் பார்க்கலாமே என்று காலை முனிசிபல் லைப்ரரி பக்கத்தில் – இப்போது அதை நேத்தாஜி சாலை என்று சொல்கிறார்கள் – போனால் மைதானத்தில் எல்லாம் சம்ஸ்கிருதத்தில் கட்டளைகளாக இருந்தன. பையன்கள் காக்கி டிராயர் அணிந்துகொண்டு ஒல்லிக்கால் தெரிய தய்னா பாய்னா பண்ணிக் கொண்டிருந்தார்கள் 'நமஸ்தே சதா வத்ஸலே மாத்ருபூமி' பாடினார்கள். சிலர் கம்பு வைத்திருந்தார்கள். ஒரு சில தலைவர்களுக்கு விசில் இருந்தது.

மாமா மாமாவாக உள்ளவர் களெல்லாம் பனியனும் தொப்பை மேல் அரை டிராயரும் போட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்துச் சிரித்துவிட்டேன். அதனால் நான் வரிசையிலிருந்து நீக்கப்பட்டேன். மேலும் அதிகாலையில் எழுந்து போவது சிரமமாக இருந்தது. ஏனோ

பாட்டியும் நான் சங்கத்தில் சேருவதை அங்கீகரிக்கவில்லை!

வேதாந்தம் இப்போது பார்த்தாலும் ‘‘ஆர்.எஸ்.எஸ்-ல சேராம டபாச்சுட்ட பாரு...’’ என்று விசாரிப்பான். அவன் வந்தால் ஒளிந்துகொள்வேன்.

இப்போது நரசிம்மாச்சாரிக்காக வேதாந்தத்தை பார்க்கப் போக வேண்டியிருந்தது.

‘‘இந்தி வாத்தியாரை பள்ளிக் கூடத்தை விட்டு டெம்பராரியா நீக்கிட்டா வேது. பாவம் ரொம்பக் கஷ்டப்படறேர். அவரைக் காப்பாத்த வேற வழியிருக்கா?’’ என்று கேட்டேன்.

அவன் யோசித்து, ‘‘நரசிம்மாச்சாரிக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?’’

‘‘சும்மா... மனிதாபிமானம்தான்!’’

‘‘மனிதாபிமானமா... இல்லை அவாத்தில் மூணு பெண்ணு இருக்கே, அதில ஏதாவது...’’

‘‘சேச்சே நான் அவாத்துப் பக்கம் போனதே இல்லை. அவள்ளாம் கறுப்பா சேப்பான்னுகூட தெரியாது!’’ என்றேன்.

‘‘எல்லாம் சேப்பு. பாக்க நன்னாவே இருக்கும்பா. ஒண்ணு பண்றேன்... தக்ஷிண் பாரத் இந்தி பிரசார் சபாவிலிருந்து ஒரு வியக்தி என்னைப் பார்க்க வருவார். அவர்கிட்ட சொல்லி பிரைவேட்டா ஏதாவது ஏற்பாடு பண்ண முடியுமான்னு பார்க்கறேன். எதுக்கும் சாரியை இந்தில எதும் உளறாம இருக்கச் சொல்லு. ஊரே கொல்லுன்னு போச்சு. அவனவன் கர்ச்சீப்பை தலைல கட்டிண்டு அரியலூர் வரைக்கும் போய் ரயில்வே ஸ்டேஷன்லாம் இந்தி எழுத்துக்களை தார் போட்டு அழிச்சுட்டு வரான். ஒரு ஸ்டேஷன் அழிச்சா நாற்பது ரூபாயும் பொட்டலமும் தராங்க. நான்கூட பிக்ஷாண்டார் கோயிலுக்கு தார் டின்னோட போ&னன். அதுக்குள்ள யாரோ அழிச்சுட்டான்!’’

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முக்கிய அங்கம் அது. மைய அரசின் அலுவலகங்களில் இந்தியில் எழுதியிருப்பதை தார் பூசி அழிப்பது. அனைத்து போஸ்ட் ஆபீஸ்களிலும் ரயில்நிலையங்களிலும் கிடைத்த

அத்தனை போர்டுகளையும் அழித்து ரோடு போட தார் இல்லாமல் பண்ணிவிட்டார்கள். இனிமேல் அழிக்கவேண்டுமானால் புதுசாக போர்டு எழுதினால்தான் உண்டு என்று பண்ணிவிட்டார்கள். 'இந்தி ஒழிக... தமிழ் வாழ்க' என்று மதில் எல்லாம் எழுதி ரங்கராஜா டாக்கீஸ் 'அன்னையின் ஆணை' பட போஸ்டர் ஒட்ட முடியாமல் – இடமே இல்லாமல் போய்விட்டது.

ஸ்ரீரங்கத்தில் பெண்கள்தான் அதிகம் இந்தி படித்தார்கள். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துவிட்டு திருச்சிக்கு காலேஜ் அனுப்பப்படாத பெண்கள் கல்யாணத்துக்குக் காத்திருக்கும்போது தையல் கிளாஸ், பாட்டு கிளாஸ், டைப் கிளாஸ் இவற்றுடன் இந்தி கிளாஸ§ம் போய் வந்தனர். அதற்கான சான்றிதழ்களை இந்தி பிரசார சபா கொடுத்துவந்தது. ப்ராத்மிக், மத்யமா, ராஷ்டிரபாஷா என்று எம்.ஏ. லெவல் வரைக்கும் படிக்கலாம். இந்த பரீட்சைகள் எல்லாம் ஒத்திப் போடப்பட்டிருந்தன. திருச்சி கெயிட்டி, ஜூபிடர் போன்ற தியேட்டர்களில் இந்திப்படம் காண்பிப்பதை நிறுத்தி 'நீச்சலடி சுந்தரி' என்று டப்பிங் படம் போட் டார்கள். உணர்ச்சிக் கொந்தளிப்பு வேளை. எங்களுக்கெல்லாம் ஓ.பி. நய்யாரின் இசை ரொம்பப் பிடிக்கும். 'மிஸ்டர் அண்டு மிஸஸ் 55', 'ஆர்பார்' போன்ற படங்களில் 'ஆயியே மெஹரபான், ஹ¨ன் அபிமே ஜவான்' போன்ற பாடல்களை அர்த்தம் புரியாமல் பாடிக் கொண்டிருப்போம். இப்போது அவற்றை கிராமபோனில் கேட்�

��தை கொஞ்ச நாளைக்கு ஒத்திப்போட்டோம்.

தக்ஷிண் பாரத் இந்தி பிரசார் சபாவிலிருந்து ஷர்மா வந்திருந்தார். அவரிடம் நரசிம்மாச்சாரியின் வேதனையை வேதாந்தம் சொல்லி அழைத்துச் சென்றான்.

அவர், ''நீங்கள் செய்யும் சேவை மகத்தானது. சபாவிலிருந்து உங்களுக்கு அரைச் சம்பளமாவது தரச்சொல் கிறேன். தனிப்பட்ட முறையில் பாடங் கள் நடத்த, படிக்கக் குடிமக்களுக்கு உரிமை இருக்கிறது. இங்கிலீஷ் கற்பதில்லையா? பிரெஞ்ச் கற்பதில் லையா... அதுபோல் ஒரு மொழியைக் கற்பதற்கு யாரும் ஆட்சேபணை தெரிவிக்க முடியாது!'' என்று தைரியம் சொல்லிவிட்டு நரசிம்மாசாரி சாப்பாட்டுக்குக் கஷ்டப் படுதாகச் சொன்னபோது, ''தா&ன தா&ன மே நாம் லிக்கா ஹை (ஒவ்வொரு தானியத்திலும் பெயர் எழுதியிருக்கிறது)'' என்று பழமொழி சொன்னார்.

‘‘அதெல்லாம் சரி. இவர் கஷ்டம் தீர என்ன செய்ய?’’ என்றபோது நரசிம்மாச்சாரிக்கு ஐம்பது ரூபாயும் வேதாந்தத்துக்கு பத்து ரூபாயும் கொடுத்துவிட்டுப் போனார். ஒப்பந்தம் என்னவென்றால், ‘எங்கள் வீட்டு மாடியில் பிரைவேட்டாக இந்தி கிளாஸ் ஆரம்பிப்பது. யாராவது வந்து கேட்டால் அதை தையல் கிளாஸ் என்றோ பிரெஞ்ச் கிளாஸ் என்றோ சொல்லிவிட வேண்டியது. விளம்பரம் எதும் கூடாது. ஒரு அம்பது பேராவது சேர்ந்தால் தொடர்ந்து சபா பணம் அனுப்பும். அதற்குள் கலகங்கள் அடங்கிவிடும்!’ என்றார்.

எங்கள்வீட்டு மாடியில் வாசல் திண்ணை அருகில் மர ஏணி வைத்து மேலே ஹால் போன்ற இடம் இருந்தது. கம்பி கேட்டை பூட்டிவிட்டால் யாரும் மாடி ஏறி வர முடியாது. பத்திரமான இடம்தான்.

இருந்தும் முதல் கிளாஸ் ஆரம்பித்த போது சற்று டென்ஷனாகத்தான் இருந்தது. நரசிம்மாச்சாரி முகத்தில் சவுக்கம் போட்டு மறைத்துக்கொண்டு சாயங்காலம் வெயில் தாழ இங்குமங்கும் பார்த்துக் கொண்டுதான் உள்ளே நுழைந்தார். ‘‘கீழ வாசல்ல டி.கே-காரங்க வேஷ்டியை உருவறாங்க ரங்கு.’’

‘‘அந்த வழியா ஏன் வந்தீர்... நான் என்ன சொன்&னன்?’’

‘‘எனக்கென்னவோ பதஷ்டமா இருக்கு வேது!’’

‘‘பயப்படாதேயும்.’’

கிளாசில் சேர விரும்புபவர்களுக்கு தற்போது ‘பாஸ்வேர்டு’ என்கிறார்களே, அந்த மாதிரி ஒரு ரகசிய சமிக்ஞை வார்த்தை கொடுக்கப்பட்டிருந்தது. அதை உச்சரித்தால்தான் உள்ளே அனுமதி. நாற்பது பேர் சேருவதாகச் சொல்லியிருந்ததாக ரங்கு சொன்னான்.

ராத்ரி ஏழு மணிக்கு கிளாஸ் என்று பெயர். ஏழரை ஆச்சு... எட்டாச்சு... ஒருவரும் வரவில்லை. நான், வேதாந்தம், நரசிம்மாச்சாரி ஒரு கரும்பலகையில் சாக்கட்டியில் எழுதப்பட்ட ஸ்வாகத் அவ்வளவு தான்.

‘‘என்னடா ஆச்சு?’’

வேதாந்தம், ‘‘எல்லாரும் பயந்தாரிப் பசங்க ஓய்!’’

‘‘என்னடா வேது... வேதனையா இருக்கு. ஒரு பாஷை கத்துக்கறதுக்குக்கூட இந்த நாட்டில உரிமை கிடையாதா? என்ன சுதந்திரம் வந்து என்ன பிரயோசனம்?’’

வேதாந்தம், ‘‘நம்ம தாய்மொழியைப் புறக்கணிச்சுட்டு இந்தி கத்துக்கோன்னு சொன்னதுதான் தப்பு!’’

‘‘வேது, நீ யார் கட்சி?’’

‘‘என்னை சொந்த அபிப்ராயம் கேட்டா, எனக்கு இந்தி பிடிக்காது. சம்ஸ்க்ருதம்தான் எல்லாம். ஆனா, உம்ம சங்கடம் வேற. கவலைப்படாதேயும். இவங்களையெல்லாம் பாடித்தான் கறக்கணும்’’ என்றான் வேதாந்தம். காத்திருந்து பார்த்து எட்டரை மணிக்கு நரசிம்மாச்சாரியை வீட்டில் கொண்டு விட்டபோது அவர் முகத்தில் கவலை ரேகை படிந்திருந்தது.

‘‘என்ன பண்ணப்போறேனோ... பேசாம தமிழ் வாத்தியாரா இருந்திருக்கலாம். எங்கப்பா ஆனமட்டும் சொன்னார்...’’

‘‘நீர் போய்ப் படும். இந்த வயசில தமிழ் வாத்தியாரா மாறமுடியாது!’’

‘‘பாச்சாதாண்டா கெட்டிக்காரன்! சட்டுனு கணக்கு வாத்யாராய்ட்டான் பாரு... இத்தனைக்கும் எல்.டி. கூட இல்லை.’’

அப்போது தீர்த்தம் கொண��

�டு வந்து வைத்த மூத்த மகள் கல்யாணியைப் பார்த்தேன்.

‘‘வேது, எனக்கு ஒரு ஐடியா...’’

‘‘எனக்கும் அதேதான் ஐடியா! எம்மா உனக்கு இந்தி தெரியுமா?’’

‘‘தெரியுமே மாமா!’’

‘‘எங்கே ஏதாவது இந்தில சொல்லு?’’

‘‘பாரத் ஹமாரா தேஷ் ஹை. பஹு¨த் படா ஹை. இஸ் மே கங்கா பெஹ்தி ஹை.’’

‘‘உன் போட்டோ இருக்கா?’’ என்றான் வேதாந்தம்.

‘‘இல்லையே... எதுக்கு?’’

தெற்கு வாசலிலிருந்து கஸ்தூரியை அழைத்துவந்து அவளை ‘சுள் சுள்’ என்று நாலைந்து போட்டோக்கள் எடுக்க வைத்தான்.

‘‘எதுக்கு மாமா?’’

‘‘எல்லாம் உங்கப்பாவுக்கு ஒத்தாசை பண்ணத்தான். அப்பாகிட்ட சொல்லாதே?’’ என்றான்.

வேது திருச்சிக்குப் போய் அதை ப்ளாக் எடுத்து ஒரு நோட்டீஸ் அச்சடித்தான்

‘இண்டர் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபாரின் லாங்வேஜஸ்.

லேர்ன் ஆல் வேர்ல்டு லாங்வேஜஸ்.

காண்டாக்ட் வேதாந்தம் பிரின்ஸிபல்’

‘ஒன்ஆஃப் அவர் டீச்சிங் ஸ்டாஃப்’ என்று கல்யாணியின் போட்டோவை போட்டிருந்தான். புசுபுசு ரவிக்கையுடன் பக்கத்தில் ஒரு பூச்செண்டை தொட்டுக் கொண்டு எடுத்த போட்டோ அட்டகாச மாக இருந்தது. அதும் இத்தனை இளம்வயதில் மூக்கு குத்தியிருந்தது கிறக்கமாக இருந்தது.

வேது தம்பியின் கிரிக்கெட் சிநேகிதர்களைக் கூப்பிட்டு வீடு வீடாகப் போட்டுவிட்டு வரச் சொன்னான்.

‘‘வேது, ப்ராப்ளம் ஏதாவது வருமா?’’

‘‘இதில எங்கயாவது ‘இந்தி’ங்கிற வார்த்தை இருக்கா பாரு...’’ என்றான்.

இல்லைதான். அந்தச் சுற்றறிக்கைத் துண்டுப்பிரசுரம் ஆச்சரியமான விளைவைத் தந்தது. வெள்ளிக்கிழமை மாலையிலேயே ஜனங்கள், ‘‘மாமா இங்க எங்கயோ.... ஏதோ கத்துத் தாராளாமே... எங்க பட்டாபி கத்துக்கணும்னான்!’’ என்று விசாரித்துக்கொண்டு வர ஆரம்பித்தார்கள். ‘‘லைஃப்ல ஒண்ணு ரெண்டு லாங்வேஜ் கத்துக்கறது இம்பார்ட்டெண்ட் பாருங்கோ...’’

முதல் கிளாஸ் ஹவுஸ் ஃபுல். கேட்டு கதவைப் பூட்ட வேண்டியிருந்தது.

வேதாந்தம்தான் கல்யாணியை அழைத்து வருமுன் ‘நமஸ்தே சதாவத்சலே மாத்ருபூமி’ பாடிவிட்டு ‘‘பிரின்ஸிபல் ஓரிரு வார்த்தைகள் பேசுவார்’’ என்றான்.

நரசிம்மாச்சாரியும் தன் அடர்ந்த தலைமயிரையும் தாடியையும் தள்ளி வாரிமுடிந்து புதுசாக மொரமொரவென்று தோச்ச கோட்டு போட்டுக்கொண்டு ஏறக்குறைய அழகாக இருந்தார்.

‘‘நம் பாஷைகள் எல்லாமே ப்ராசீனமானவை. சம்ஸ்க்ருதத்தில் பிறந்தவை. அது தேவபாஷை. தேவநாகரி லிபி என்பதுதான் எல்லாவற்றுக்கும் ஆதாரம்’’ என்று பாணினி, ஐந்திரம் என்று ஏதேதோ பேசினார். லேசான சலசலப்பு ஏற்பட்டது. ‘‘அந்த டீச்சரை வரச்சொல்லு வேது!’’ என்று குரல்கள் கிளம்பின.

‘‘நாந்தாம்பா டீச்சர்..’’

‘‘அப்ப நோட்டீஸ் போட்டது?’’

வேதாந்தம், ‘‘வருவாடா... ஆலா பறக்காதீங்க. முதல்ல இண்ட்ரொடக்டரி கிளாஸ். அப்புறம்தான் மத்ததெல்லாம்.’’

‘‘வேது... என்னடா இது?’’ என்றார் நரசிம்மாச்சாரி புரிந்தும் புரியாமலும். ‘‘ஒண்ணுமில்லை ஓய்... நீர் பாடத்தை நடத்தும்.’’ அப்போது கல்யாணி வந்தாள். ‘‘கூப்டிங்களா மாமா?’’ வகுப்பு மௌனமாகியது.

‘‘கல்! வா! அப்பாவுக்கு ஒத்தாசையா அ ஆ இ ஈ சொல்லிக் கொடு. கல்யாணி போர்டில் எழுதியதை மாணவர்களை நோட்டுப்

புத்தகங்களில் எழுதச் சொன்னான். அவர்கள் ஆர்வமாக எழுதி அவளிடம் திருத்தி வாங்க விரும்பினார்கள். நானோ வேதாந் தமோ திருத்தவேண்டாம் என்றார்கள். அருகில் சென்று சந்தேகம் கேட்டார்கள். மாணவர்களில் எல்லா வயதினரும் இருந்தனர். கீமான்தாங்கியான சீமாச்சுவிலிருந்து மாங்கொட்டை நாணு, தனகோபால், ரகு, நந்து எல்லோரையும் பார்த்தேன்.

கல்யாணி வளப்பமான பெண். அதனால் அவள் சிரத்தையாகக் கற்றுத் தந்தாலும் மாணவர்கள் கவனம் பிசகியது.

சாரியிடம

ஃ யாரும் சந்தேகம் கேட்க வரவில்லை.

கஸ்தூரியை வரவழைத்து வகுப்பை போட்டோவும் எடுக்க வைத்தோம்.

சாரியைப் பார்த்து அவர்கள், ‘‘உமக்கேன் சிரமம்? டாட்டரே பாடம் நடத்தட்டும்!’’ என்றார்கள்.

நரசிம்மாச்சாரி கோபமாக இருந்தார்.

அவர்கள் போனதும், ‘‘வேதாந்தம் நீ பண்றது உனக்கே நன்னா இருக்கா? அது சின்னக்குழந்தைடா. அதுக்கு எதும் தெரியாது. அத்தனை பேர் பார்வையும் அலையறதுரா... அதுக்குத் தெரியவே இல்லை!’’

‘‘பாரும்... ஆள் சேர்ற வரைக்கும் ஒரு வாரம் இவ வந்துட்டுப் போகட்டும். சபாவில இன்ஸ்பெக்ஷன் வர வரைக்கும்தா&ன? பாரும்... ஒரு ப்ராடக்டை விக்கணும்னா அதை அலங்காரமா கண்ணாடி, காயிதம் எல்லாம் போட்டு விக்கறதில்லையா... அந்த மாதிரிதான்!’’

‘‘எனக்கு இதில சம்மதமே இல்லை வேதாந்தம்!’’

‘‘ஒரு வாரம் சமாளிச்சு அம்பது பேர் சேந்துட்டா, ஆயிரம் ரூபா தர்றதா சொல்லியிருக்கா சபாவில.’’

மறுநாள் அட்மிஷனுக்கு இன்னும் சில பேர் விண்ணப்பம் செய்தார்கள். காலையே வந்து சிலர் விசாரித்து விட்டுப் போனார்கள். ஜாக்கிரதை யாகத்தான் பதில் சொன்னோம். எங்கும் இந்தி என்கிற வார்த்தையே

பயன்படுத்தவில்லை. மாடி ஹாலில் முப்பது பேருக்கு மேல் உட்கார இடமில்லாததால் இரண்டு கிளாஸ் ஷிஃப்ட் போடுவதாக முடிவெடுத் தோம். யார் யாரோ மேல அடையவளைஞ்சான், நொச்சியம் போன்ற இடங்களில் எல்லாம் வந்து சேர விருப்பம் தெரிவித்தார்கள்.

விஷயம் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவுக்குத் தெரிந்து போய்விட்டது. இவர்கள் மாற்றுப் பெயரில் இந்தி கற்றுத் தருகிறார்கள் என்பதை அறிந்த இளைஞர்கள், 'புறப்படு தமிழா... ஆரிய மாயையை அடக்கக் கொதித்து எழு!' என்று ஒரு கோஷ்டி நரசிம்மாச்சாரியின் வீட்டைச் சூழ்ந்துகொண்டு ''ஆரியப் பதரே வெளியே வா!'' என்று சத்தம் போட்டார்கள். சாரி புறக்கடையை விட்டு வெளிவரவில்லை. கல்யாணி தான் வெளியே வந்து, ''அப்பா கோட்டைக்குப் போயிருக்கார்!'' என்று பொய் சொன்னது. விஷயம் தீவிர மாகிவிட்டது. அவசர அவசரமாக ரங்கு கடைக்கு வந்து சாரியின் பக்கத்து வீட்டுப்பையன்!'' ''மாமா உங்களை இந்தி வாத்தியார் அழைச்சுண்டு வரச்சொன்னா"ர். ஒரே கலாட்டா... நெருப்பு வெக்கப் போறாளாம்.''

நாங்கள் ஓடிச் சென்று பார்த்த போது ஊர்ப்பையன்கள் யாரையும் காணோம். பொன்மலையிலிருந்து வந்த ரௌடி கும்பல். அவனவன் கையில் கழி – கம்பு, அரிவாள் வைத்திருந்தார்கள்.

வேதாந்தம் நிலைமையை எடை போட்டான்.

''பாருப்பா... யாரோ உங்களுக்குத் தப்பா சொல்லியிருக்கா. இந்தியாவது தொந்தியாவது... என்ன எங்களுக்குப் பைத்தியமா? தையல் கிளாஸ், பாட்டு கிளாஸ் நடத்தறா இந்தப் பொண்ணு.''

''இவளா, பாட்டா! ஏய் எங்க பாடு... பார்க்கலாம்'' என்றான்.

கல்யாணி உட&ன கணீர் என்ற குரலில், 'பாரத தேசம் என்ற பெயர் சொல்லுவார் துயர் வெல்லுவார்!' என்று பாடி 'நீராரும் கடலுடுத்த'வும் பாடினாள். எல்லாரையும் திகைக்க வைத்தாள். கூடவே அதன் தங்கையும் பாடியது. வேதுவும் சேர்ந்துகொண் டான்.

''சார் கோட்டைக்குப் போயிருக் கார். வந்ததும் சொல்றேன். கலாட்டா பண்ணணும்னா நிச்சயம் பண்ணுங்கோ. இன்ஸ்பெக்டர் ராஜகோபாலுக்குச் சொல்லி அனுப்பிச்சிருக்கேன்.'' ராஜகோபால்

முரடர். சேர்த்தி உற்சவத்தின்போது மாந்தோலாலேயே மட்டையடி அடித்துக் கூட்டத்தைக் கட்டுப் படுத்துவார்.

இவர்கள் இந்தி கிளாஸ் எதுவும் நடத்தவில்லை என்ற உறுதிமொழியில் வேதாந்தத்தின் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டுதான் கலைந்தார்கள்.

வேதாந்தமும் நானும் உள்ளே சென்றோம். புறக்கடையில் தோக்கிற கல்லில் சாரி உட்கார்ந்திருந்தார். ''சாரி உமக்கு ஹெல்ப் பண்ண நினைச்சு, உயிருக்கே ஆபத்தாயிடுத்து. கொஞ்ச நாளைக்கு இந்தி கிளா��

��ே வேண்டாம்!'' என்றான்.

''நான் போய் காவேரில குதிக் கிறேன்'' என்றார்.

''அப்படி சொல்லாதீங்கப்பா..!''

''ஓய் காவேரில முழங்கால் அளவு கூட ஜலம் இல்லை. குதிச்சா முட்டிதான் பேரும். கொஞ்சம் பொறுமையா இரும்... நான் உமக்கு வழி சொல்றேன்'' என்றான்.

''நீ வரதுக்கு முன்னாடி வீதில நின்னுண்டு என்னவெல்லாம் கத்தினான் தெரியுமா? பொண்ணை அனுப்பு. இந்தி கிளாஸ் வேண்டாம் வேற கிளாஸ் நடத்தலாம்னான்!''

கல்யாணி, ''என்ன கிளாஸ்ப்பா..''

''சும்மார்றி அறிவுகெட்ட முண்டம்!''

சாரிக்கு வேறு மார்க்கம் பார்க்க முடியாத நிலையில் எனக்கு டெம்பரரி டிரான்ஸ்ஃபர் முடிந்து லீவில் போன ஏ.ஏ.ஓ. வந்துவிட்டதால் மீண்டும் மீனம்பாக்கத்துக்கு டியூட்டிக்கு திரும்ப வரும்படி ஆர்டர் வந்துவிட்டது. எனக்குச் சாரியை நினைத்து வருத்தமாகத்தான் இருந்தது.

ஊருக்குக் கிளம்புமுன் ஸ்ரீரங்கம் ஸ்டேஷனில் ஜங்ஷன் போவதற்கு லால்குடி பாசஞ்சர் பிடிக்கக் காத்திருந்தேன். வாசலில் இந்தி எதிர்ப்பு உண்ணாநோன்பு என்று பெரிசாக போர்டு எழுதி பந்தல் போட்டுச் சிலர் ஜமக்காளத்தில் உட்கார்ந்திருந்தார்கள். போராட்டத்தை முன்னின்று

நடத்துபவர் பேராசிரியர் மறையிறுதி என்று என் கையில் திணிக்கப்பட்ட நோட்டீஸிலிருந்து தெரிந்தது. அவர் தலைமையில் சாகும் வரை உண்ணாநோன்பு எனத் தெரிந்தது.

'மைய அரசே ராணுவத்தை வாபஸ் வாங்கு!' என அதட்டலாக எழுதியிருந்தது. நான் அந்தக் கூட்டத்தைக் கடக்கும்போது உண்ணாவிரதம் இருப்பவர் முன்னால் துண்டுவிரித்து 'போராட்ட நிதிக்கு பொற்குவை தாரீர்!' என்று எழுதி கண்ணாடிப் பெட்டியில் ரூபாய் நோட்டுகள் அடைந்திருந்தன. ''தமிழ் வாழ்க... இந்தி ஒழிக...'' என்று அவ்வப்போது கோஷம் லேசாக எழுந்தது. நிறைய நோட்டுகளும் நாணயங்களும் சிதறியிருக்க... அவ்வப்போது கண்ணாடிப் பெட்டியைத் திறந்து பெரிய பையில் திணித்துக் கொண்டிருந்தார்கள். பேராசிரியர் மறையிறுதியை கவனித்தேன். மூன்று நாள் தாடி... முழங்கையில் முறுக்கிவிட்ட ஜிப்பாவினால் அடையாளம் கண்டுகொள்ளச் சற்று நேரமாயிற்று.

''வேதாந்தம் நீயா?''

''வா... வா... பக்கத்தில உக்காரு. தோழர்களே இவர் என் நண்பர் அரங்கத்தரசு. தாய்மொழிக்காக எதுவும் செய்வார். ஆரம்ப எழுத்தாளன். மைய அரசுப் பணியை நிராகரித்துவிட்டு நம் போராட்டத்தில் கலந்துகொள்ள வந்திருக்கிறார்... வா கொஞ்ச நேரமாவது உக்காரு. ரயில் எங்களை மீறிப் போகாது!''

''அரங்கத்தரசு வாழ்க!'' என்று கோஷம் எழுந்தது. சங்கடமாக இருந்தது. நான் அவன் அருகில் அசௌகரியமாக உட்கார்ந்து காதருகில், ''இதெல்லாம் என்னடா வேதாந்தம்?''

''தாய்மொழியைக் காப்பாத்தப் போராட்டம். ஒரே நாளில் ஐயாயிரம் ரூபாய் சேர்ந்திருக்கு.''

''இந்த நிதியை என்ன பண்ணப் போறே...''

மெள¢ளக் குரலைத் தாழ்த்தி ''நரசிம்மாச்சாரிக்கு கொடுக்கப் போறேன்'' என்று கண் சிமிட்டினான் வேதாந்தம்.

****

உஞ்சவிருத்தி

சில ஆண்டுகள் வடக்கே இருந்து விட்டு ஒரு முறை ஸ்ரீரங்கம் போன போது வழக்கம்போல் ரங்கு கடையில் போய் உட்கார்ந்தேன். ரங்கு 'அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல்' அப்படியே இருந்தான். புதுசாக கூலிங்கிளாஸ் போட்டிருந்தான். ஆண்டாளின் பையன் அமெரிக்காவில் இருக்கிறா&ன பாச்சாவோ, யாரோ... அவன் கொடுத்ததாம். வழக்கம்போல் தம்பு, சீது போன்றவர்கள் வந்து அரசியலையும் சினிமாவையும் அலசினார்கள். தம்பு தேவகாந்தாரிக்கும் ஆரபிக்கும் வித்தியாசம் என்னவென்று பாடிக் காட்டினான். சீது யாருக்கு மொட்டைக் கடுதாசி எழுதலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தான்.

''நீ எப்ப வந்தே?'' என்று கேட்டான் ரங்கு.

''நேத்திக்குதான்.''

''கொஞ்ச நாள் இருப்பியா?''

''ஒரு மாசம் இருக்கலாம்னு ஆன்யுவல் லீவ்ல வந்திருக்கேன்.''

''நீ ஏர்ஃபோர்ஸ்லதான இருக்கே?''

''ஏர்போர்ட்ல.''

''ப்ளேன் எல்லாம் ஓட்டுவியாமே! பாகிஸ்தான் மேல நீதான் பாம் போட்டதா பேசிக்கிறா.''

''ரங்கா... பாரு, சரியா புரிஞ்சுக்கோ! நான் இருக்கறது ஏர்போர்ட். டெல்லில சப்தர்ஜங்னு பேரு > விமானநிலையம். நீ சொல்றது ஏர்ஃபோர்ஸ். அது 'பாலம்'கிற இடத்தில் இருக்கு.''

''ரெண்டும் ஒண்ணுதா&ன.''

''இல்...லை.''

''பின்ன... ஏர்ஃபோர்ஸ்ல யார் இருக்கா?''

‘‘மேலச் சித்திரை வீதில ரங்காச்சாரிடா அது... அவன்கூட பைலட் இல்லை.’’

‘‘ஏர்ஃபோர்ஸ்னா எல்லாரும் பறக்க மாட்டாளோ?’’

‘‘மாட்டா!!’’

‘‘அப்ப நீ ஏர்ஃபோர்ஸ்ல இல்லை?’’

‘‘ஏர்போர்ட்... ஏர்போர்ட்!’’

‘‘பின்ன யாரோ, நீ ப்ளேன் ஓட்டறதா சொன்னாளே..?’’

‘‘அது சின்ன ப்ளேன். டிரெய்னிங் ப்ளேன்.’’

‘‘ஏர்போர்ட்ல பெரிய ப்ளேன்தா&ன இருக்கும்! போட்டுக் குழப்பறாங்கப்பா!’’

நான் அவனுக்கு மேலும் விளக்கும் முயற்சியைக் கைவிட்டேன். ரங்குவின் உலகம் அவன் வீடு, கடை இரண்டை விட்டு வெளியே எதும் கிடையாது. உலகம் முழுக்க அவன் கடைக்கு அரட்டையடிக்க வரும். இவன் இடத்தைவிட்டு நகரமாட்டான். பெருமாளைக்கூட பங்குனி, சித்திரை உற்சவங்களில் கடையைக் கடந்து செல்லும்போதுதான் சேவிப்பான்.

அப்போது ஒரு கிழவனார் கையில் சொம்புடன், ஒரு சிறுவன் குச்சியைப் பிடித்துக்கொண்டு அழைத்துச் செல்ல... ‘உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்...’ என்று ஏறத்தாழ உளறலாகச் சொல்லிக்கொண்டு நட்ட நடுத் தெருவில் வந்துகொண்டிருந்தார். முகத்தில் ஒரு வாரத்துக்கு உண்டான வெண் தாடி. மார்பில் பூணூல். சவுக்கம். பத்தாறு வேஷ்டி.

‘‘ரங்கு, இது யாரு?’’

‘‘இவர் பேரு தேசிகாச்சாரி. ஜி.பி>னு ஐஸ்கூல்ல மேத் டீச்சர் இருக்காரே, அவரோட அப்பா.’’

‘‘ஆமாம். எதுக்கு சொம்பை கைல வெச்சுண்டு பிரபந்தம் சொல்லிண்டுபோறார்?’’

யாரோ அவர் சொம்பில் அரிசி போட்டுவிட்டு வணங்கி விட்டுச் சென்றார்கள்.

‘‘உஞ்சவிருத்தி.’’

‘‘புரியலை. ஜி.பி. இவரை வெச்சுக் காப்பாத்தலியா?’’

‘‘அதெல்லாம் இல்லை. பிடிவாதம்.’’

‘‘பணம் காசு இல்லையா? ஜி.பி. நிறையச் சம்பாதிக்கிறாரே!’’

‘‘இவருக்கே நிறைய சொத்து இருக்கு. சித்திரை வீதில ஜி.பி. இருக்கற வீடு இவர்துதான். மகேந்திர மங்கலத் தில் நெலம் எல்லாம் இருக்கு.’’

‘‘உஞ்சவிருத்தின்னா பிச்சை எடுக்கறதில்லையோ?!’’

‘‘ஆமாம். ‘பவதி பிக்ஷாம் தேஹி’ன்னு சொல்லலே... அவ்ளவுதான்!’’

‘‘புரியலை ரங்கு.’’

‘‘சில வேளைல பெரியவர்களுடைய பிடிவாதங்கள் புரியாது நமக்கு. இந்த பிராமணனுக்கு வீம்பு. போக்கடாத்தனம்.’’

ஜி.பி. என்னும் பார்த்தசாரதி செயலாக இருப்பவர். கணக்குப் பாடப் புத்தகம், நோட்ஸ் எல்லாம் போடுபவர். லட்சக்கணக்கில் விலை போகும்.

எஸ்.எஸ்.எல்.சி>க்கு ஒரு செக்ஷனுக்கு கிளாஸ் டீச்சர். ஹைஸ்��

�கூலில் சீனியர் டீச்சர் என்று மதிக்கப்பட்ட ஆசிரியர். தேசிய விருது வாங்கியிருக்கிறார். அடுத்த ஹெட்மாஸ்டர் அவர்தான் என்று பேசிக்கொண்டார்கள். அவர் தந்தையார் பிச்சை எடுக்கிறார் என்றால்...

‘‘வேணும்னுட்டே, மகனை அவமானப்படுத்தறதுக்குன்னுட்டே..’’

‘‘கண்ணு வேற தெரியலை.’’

‘‘கண்ணெல்லாம் நன்னாத் தெரியறது. தன்மேல சிம்பதியை வரவழைச்சுக்க, கண் தெரியாத மாதிரி பாடசாலைப் பையனை வெச்சுண்டு குச்சியைப் பிடிச்சுண்டு போறார்.’’

‘‘என்ன ப்ராப்ளம் அவருக்கு?’’

‘‘வரார். கேட்டுப் பாரேன்.’’

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போது அவரே கடைக்கு வந்து பெஞ்ச்சில் உட்கார்ந்தார். அவருடன் கொஞ்சம் ஈரம் காயாத வேஷ்டியின் நாற்றமும் வந்தது. எதையோ வாயிலே மென்றுகொண்டிருந்தார். கிட்டப் பார்க்கையில் ஆரோக்கிய மாகத்தான் இருந்தார். நல்ல மூங்கில் கம்பு. அதைப் பையன் ஒரு ஓரத்தில் வைத்துவிட்டு நின்றுகொண்டிருக்க...

‘‘ஓய்! லைப்பாய், ரெக்சோனான்னு சோப்பு ஏதாவது போட்டுக் குளிக்கிறதுதா&ன? கிட்ட வந்தாலே கத்தாழை நாத்தம்!’’

‘‘மாட்டுப்பொண்ணு எங்கடா சோப்பு கொடுக்கறா? ஒரு அண்டா தண்ணிகூட வெக்கமாட்டேங்கறா ரங்கு.’’

‘‘ஜி.பி>கிட்ட சொல்றதுதா&ன?’’

‘‘அவனா? பொண்டாட்டிதாசன்..! தொச்சு, அது என்னடா சாக்லெட்டு?’’

‘‘பட்டை சாக்லெட் தாத்தா.’’

‘‘அது எனக்கு ஒண்ணு இவனுக்கு ஒண்ணு கொடு! ரங்கநாதா..!’’ என்று பெஞ்ச்சில் உட்கார்ந்து, ‘‘தீர்த்தம் இருக்குமா? என்ன வெயில்.. என்ன வெயில்!’’

ரங்கு சாக்லெட் எடுத்துத் தர, மடியிலிருந்து அஞ்சு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார்.

‘‘நீ யாரு... கோதை பேரன்தா&ன?’’ என்றார் என்னைப் பார்த்து.

‘‘ஆமாம் மாமா!’’

‘‘நீ ஏர்போர்ஸ்ல இருக்கியா?’’

‘‘ஏர்போர்ட்! மாமா, எதுக்காக இந்த வெயில்ல அலையறீங்க? வெயில் தாழ வீதிப் பிரதட்சணம் போகக்கூடாதா?’’

‘‘பாரு, வைஷ்ணவனா பொறந்தா பஞ்ச சம்ஸ்காரங்கள்னு அஞ்சு காரியங்கள் செய்யணும். அதான் ஐயங்கார். ஊர்த்வ புண்ட்ரம், சமாஸ்ரணம், திருவாராதனம், ஆசார்யன்கிட்ட உபதேசம் கேக்கறது, பரன்யாசம் வாங்கிண்டப்றம் உஞ்ச விருத்தி. பிச்சைபோடற அரிசியைத் தான் சாதம் வெச்சு சாப்பிடணும்!’’

‘‘மாமா, அதெல்லாம் வசதியில்லாத வாளுக்கு!’’

‘‘இல்லை. வைஷ்ணவனா பொறந்த எல்லாருக்கும். உனக்கு, எனக்கு... அந்த நாராயண&ன மகாபலிகிட்ட யாசகம் போனான்.’’

‘‘நீங்க இப்படித் தெருவில போறது அந்தக் கடமையை நிறைவேத்தறதுக் காகவா?’’

‘‘ஆமா, வேறென்ன..?’’

‘‘உங்க ஃபேமிலியில அவாளுக்கு சங்கடமா இருக்காதோ?’’

‘‘எதுக்குச் சங்கடப்படணும்? எதுக்குங்கறேன்?’’

‘‘இல்லை மாமா... உங்க சன் பெரிய கணக்கு வாத்தியார். ஹெட்மாஸ்டர் ஆகப் போறார். நேஷனல் அவார்டெல்லாம் வாங்கினவர்.’’

‘‘அதனால?’’

‘‘மத்தவாள்ளாம் என்ன நினைச்சுப்பா? தோப்பனாரை சரியா வெச்சுக்காம தெருவில யாசகம் பண்ண அனுப்பிச்சுட்டார் பாரு, இவர்

என்ன வாத்தியார்னு தா&ன நினைச்சுப்பா?''

''நினைக்கத்தான் நினைச்சுப்பா. அதுக்கு நான் என்ன பண்ண முடியும்?''

ரங்கு சில சமயம் பட்டென்று போட்டு உடைத்துவிடுவான்.

''ஓய்... உமக்கு மாட்டுப் பெண்ணோட சண்டை. ஜி.பி. அவ பேச்சைக் கேட்டுக்கறார். அந்தக் கோபத்தைத்தான் நீங்க இப்படி அவரை அவமானப்படுத்திக் காட்டறீர்னு ஊர் உலகமெல்லாம் பேசிக்கிறது. உஞ்சவிருத்தி குஞ்ச விருத்தியெல்லாம் சால்ஜாப்பு!''

''சரி, அப்படியே பேசிக்கிறான்னா நீ என்ன செய்யணும்?''

அவர் 'நீ' என்று அழைத்தது ரங்குவை அல்ல. அங்கு இல்லாத தன் மகன் ஜி.பி>யை. ''நீ என்ன செய்திருக்கணும்? 'அப்பா, நீங்க சொல்றதிலயும் நியாயம் இருக்கு. கொஞ்சம் தழைஞ்சு போங்கப

ாபா. நானும் அவளைத் தூக்கி எறிஞ்சு பேசாம இருக்கச் சொல்றேன்'னு சமாதானமா போகலாம் இல்லையோ..? எப்ப பார்த்தாலும் 'அவ சொல்றதுதான் ரைட்டு, அப்பா... வாயை மூடுங்கோ'னு அதட்டினா எனக்கு எப்படி இருக்கும்..?''

''தனியா இருந்து பாருமேன்.''

''அதைத்தான் யோசிச்சிண்டிருக்கேன்.''

''இப்ப வீட்ல சாப்பிடறதில்லையா?''

''ரெண்டு தளிகை. எனக்கு உண்டான ஒரு மெந்தியக் குழம்பு, அப்பளத்தை நா&ன பண்ணிக்கறேன். ஒரு நெய் கிடையாது, கறமுது கிடையாது, தயிர் கிடையாது. மோர்தான். ஓட்டல் சாப்பாடு ஒத்துக்கலையே ரங்கா! பேதியாறது. அவா என்னவோ சாப்ட்டுட்டுப் போகட்டும். எனக்கு?''

''பிள்ளை?''

''அவனோட பேசியே ஒரு மாசம் ஆச்சு, ஒரே ஆத்துல இருந்துண்டு.''

‘‘இதெல்லாம் சரி, உஞ்சவிருத்தி எப்டி உடம்புக்கு ஆறது உமக்கு? ரேஷன் அரிசியும் புழுங்கரிசியும் கைக்குத்தலும் கலந்திருக்குமே?’’

‘‘ஏதோ ரங்கநாதன் கிருபையில கல்லையும் ஜீரணிக்கிறது இந்த வயிறு. ஓடிண்டிருக்கு வண்டி.. இன்னும் எத்தனை நாள்... பார்க்கலாம். நான் செத்துப் போ&னன்னா இந்தப் பாடசாலைப் பையன்தான் எனக்குக் கொள்ளி போடணும், கேட்டுக்கோ ரங்கு.’’

‘‘நீர் எங்கே செத்துப் போவீர்? இருக்கறவாளை சாகடிச்சுட்டுத் தான் போவீர். ஆயுசு கெட்டி உமக்கு!’’

அவர் மறுபடி வீதி பிரதட்சிணத் துக்குப் புறப்பட, ‘‘ஸ்ட்ரேஞ்ச்... வெரி ஸ்ட்ரேஞ்ச்’’ என்றேன்.

ஹைஸ்கூல் எப்படி நடக்கிறது என்று... என் கிளாஸ்மேட்தான் கரெஸ்பாண் டெண்டாக இருந்தான், அவனை விசாரிக்கப் போயிருந்தபோது ஜி.பி-யைச் சந்தித்தேன். பொதுவாக மேத்ஸில் மல்ட்டிப்பிள் சாய்ஸ் கேள்விகள் வந்து தரமே போய்விட்டதாகச் சொன்னார். அவரேதான் ஆரம்பித்தார்...

‘‘அப்பாவைப் பாத்தியோ..?’’

‘‘பாத்தேன் சார்.’’

‘‘என்ன பிடிவாதம் பாத்தியா?’’

‘‘அவர் சொல்றதைப் பார்த்தா அவருக்குச் சோறு தண்ணி கூட சரியா கொடுக்கறதில்லைன்னு...’’

‘‘அப்படியா சொன்னார்? ஒரு நா எங்காத்துக்கு வந்து மாமியை சந்திச்சுக் கேட்டுப்பாரு. என் அப்பாதான்... இல்லேங் கலை. ஆனா, அவர் கார்த்தாலை எழுந்திருக்கற திலிருந்து பண்ற அட்ட காசம்... எனக்கு நாலும் பொண்ணு. நாலும் நன்னாப் படிக்கறதுகள். அதுகளைப் படிக்க விடாம சத்தமா பாராயணம் பண்ணிண்டு, எல்லா ரையும் கண்டார... வல்லாரன்னு திட்டிண்டு, கோமணத்தோட புழக்கடைல அலைஞ்சுண்டு...’’

‘‘தனி வீடு பாத்துக் கொடுத்துர்றதுதா&ன?’’

‘‘போகமாட்டேங்கறாரே! ‘என் வீடு, நான்தான் இருப்பேன்’கறார்!’’

‘‘சரி, நீங்க போய்டறதுதா&ன?’’

‘‘யோசிச்சிண்டிருக்கேன். வாடகை கொடுத்து மாளுமா?’’

‘‘அவர்கிட்ட பணம் இருக்கில்லே?’’

‘‘இருக்கு. என்ன வெச்சிருக்கார்னு காட்டமாட்டார். வக்கீலைக் கூப்ட்டு நாலு தடவை வில்லை மாத்தி மாத்தி எழுதிட் டார். சீரங்கம்னு ஒரு பேத்தி மேல கொஞ்சம் பிரியம். அதுங் கிட்ட எதோ சொல்லிண்டிருக்கார்... ‘உங்க யாருக்குமே நன்னி கிடையாது. தொச்சுக்குத்தான் எல்லாம்னு உங்கம்மா கிட்ட சொல்லிடு...’ ’’

‘‘தொச்சுங்கறது...’’

‘‘பாடசாலைப் பையன். அவரை கார்த் தால கம்பு பிடிச்சு அழைச்சுண்டு போறா&ன அவன். கேக்கறதுக்கு நன்னாவா இருக்கு? எதுக்குக் கிழத்துக்கு நான் சிசுருஷை பண்ண ணும்கறா என் ஆம்டையா! நான்தான் அவளை சமாதானப்படுத்தி வெக்கறேன்... ‘அப்படியெல் லாம் செய்ய மாட்டார். கோபத்தில ஏதோ சொல் றார்’னு. அவ சொல்றது நியாயம்தா&ன?’’

‘‘தா&ன தளிப்பண்றதா...’’

‘‘அதெல்லாம் வெட்டிப்பேச்சு! ஆடிக் கொரு தடவை அமாவாசைக்கு ஒரு தடவை தளிப்பண்ற உள்ளை மாடு கன்னுபோட்ட எடம் மாதிரி பண்ணிட்டுப் போவார். என் அப்பாவா இருந்தாலும், இந்த மாதிரி ஒரு பிடிவாதம் புடிச்ச கிழவனை நான் பாத்ததில்லை. ��

�ோய்த் தொலைஞ்சாலும் பரவாயில்லைன்னு சில சமயம் அவ்வளவு வெறுப்பேத்தறார்.’’

‘‘அவருக்கு என்ன வேணுமாம்? எதாவது மனசில குறை வெச்சுண்டு இருக்கலாம் ஒரு இன்சொல், ஒரு பரிவு... அல்லது, ‘தாத்தா எப்டி இருக்கே?’னு பேத்திகள் கேட்டாலே போறுமா இருக்கலாம். உங்க

மனைவியும் ‘அப்பா, எப்டி இருக்கீங்க? கண்ணுக்கு மருந்து போடட்டுமா’னு எதாவது கேக்கலாம்.’’

‘‘அதெல்லாம் ஒரு புண்ணாக்கும் இல்லை. நீ வேணா சீதாகூட பேசிப்பாரு. நான் சொன்னது பாதிதான். அவ ஆங்கிள்ள பார்த்தா கதை ரொம்பக் கடுமையா இருக்கும். டெல்லிக்குப் போறதுக்கு முன்னாடி ஒரு தடவை சாப்பிட வா, எங்காத்துக்கு!’’

போயிருந்தேன். நான்கு பெண்கள் பதினைந்து, பதின்மூன்று, பத்து, எட்டு என்று அலைந்தன. எனக்கு முன்னால் ஸ்டூல் போட்டு தீர்த்தம் எல்லாம் பதவி சாகக் கொண்டுவந்து கொடுத்தார்கள். எனக்காக மாமி ஜவ்வரிசிப் பாயசம் பண்ணியிருந்தாள். சமையல் எல்லாம் சூப்பராக இருந்தது.

நான் சென்றபோது, கிழவர் வாசல் திண்ணையில் காலை அகட்டி உட்கார்ந்து கொண்டு பனை விசிறியால் கீழே விசிறிக் கொண்டிருந்தார். நெற்றி சுருங்கி விரோதமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். ‘‘இருக்கறவனுக்கு ஒரு வேப்பம்பூ சாத்துமது கிடையாது. வரவா போற வாளுக்கெல்லாம் பால்பாயசம். கேக் கறவா கிடையாது இந்தாத்துல’’ என்றார்.

‘‘வாங்களேன் மாமா... உங்காம்தா&ன? வாங்கோ, பாயசம் சாப்டலாம்’’ என்றேன்.

‘‘இந்தாத்திலயா? ஒரு திருஸ்தம் கூட எடுத்துக்கமாட்டேன்.’’

வாத்தியார் ஜி.பி-யின் மனைவி வெளிப்படையாகப் பேசினாள். ‘‘எவ்வளவு தூரம் பொறுத்துக்கறது? ‘பொறுத்துப் போ’னு இவர் பாட்டுக்கு சொல்லிட்டுப் பள்ளிக் கூடம் போய்டறார். இருபத்துநாலு மணி நேரமும் இவர் கூட மல்லுக் கட்ட வேண்டியிருக்கு. ரெண்டு பொண் வயசுக்கு வந்துட்டா. அவா முன்னாலயே கோமணத்தை அவுத்துக் கட்டிக்கறேர். ரெங்கராஜுவை கூப்ட்டு திண்ணைல உக்காந்துண்டு சர்வாங்க க்ஷவரம் பண்ணிக்கறேர். சாக்லெட்டு, பப்பர்மிட்டுனு வாங்கி ஒளிச்சு வெச்சுக்கறேர். பாட சாலைப் பையன்களுக்குக் கொடுத்தாலும் கொடுப்பேர்... பேத்திகளுக்குக் கொடுக்க மாட்டேர். அதுகளைப் படிக்க வெக்கறதே அவருக்குப் பிடிக்கலை. என்னைக் கண்டா ஆகவே ஆகலை...’’

‘‘இதுக்கெல்லாம் ஆதாரமா ஒரு சம்பவம் அல்லது காரணம் இருக்கணும் மாமி.’’

‘‘இருக்கு. அதைச் சொல்லிட்டுத் தான் ரசாபாசமாய்டுத்து! எங்காத்தில எனக்கு நிறைய செஞ்சிருந்தா. அதை அவர் அலமாரில வெச்சுப் பூட்டியிருந்தார். மாமியார் போறவரைக்கும் அதை நான் பார்த்தேன். பண்டிகை நாளில் என்னை எடுத்துப் போட்டுக்கச் சொல்வா. மாமியார் தங்கமான மனுஷி. அவர் போனதும், இது எதோ தங்கை பொண்ணு கல்யாணத்துக்கு எடுத்துக் கொடுத் துடுத்து போல! பாலிஷ் போட்டு வெள்ளிப் பாத்திரத் தையெல்லாம் கொடுத்திருக் கேர். போனாப் போறது, சொல்லிருக்கலாமில்லையா? ரங்கநாதன் கிருபை இவரும் சம்பாதிக்கிறேர். ஒரே ஒரு தடவை எச்சுமிக்கு தோடு செஞ்சு போடலாம். ‘அப்பா, அம்மா என் நகையெல்லாம் எங்க வெச்சிருக்கா?’னு கேட்டதுக்கு, ‘‘நகையா... உன்னை எதிர்ஜாமீன் இல்லாம இலவசமா கல்யாணம் பண்ணிண்டோம். உங்காத்துல உனக்கு என்ன போட்டா? உங்கப்பன் ஏமாத்திட்டான்’னார்.

எனக்கே தெரியும்... எனக்கு எத்தனை கேஷா கொடுத்தா, வைர மோதரத்துக்கு, பட்டு வேஷ்டிக்குன்னு... எத்தனை நகை போட்டான்னுட்டு. அதை எடுத்துச் சொன்னப்ப எல்லாம் கவரிங்னார். ‘இதை அப்பவே சொல்லியிருக்கறதுதா&ன?’ன்&னன். இவ்வளவுதாம்பா கேட்டேன். அதிலேர்ந்து என் மேலயும் என் பெண்கள் மேலயும் வெறுப்புன்னா வெறுப்பு அப்படிப்பட்ட வெறுப்பு. நின்னா குத்தம்.. உக்காந்தா குத்தம்...’’

இந்தச் சம்பாஷணை முழுவதும் அவருக்குக் க

ேட்டிருக்கவேண்டும்.

திண்ணையிலிருந்து சத்தம் போட்டார்... ‘‘எல்லாத்தையும் சொன்னியே, உன் நகை அத்தனையும் சப்ஜாடா நான் திருப்பித் தந்ததைச் சொன்னியா?’’

இவள் ‘‘மொத்தத்தில கால்பாகம் கூடத் திரும்ப வரலைப்பா. ரெட்டை வடம் சங்கிலி என்ன ஆச்சு, பச்சைக்கல் தோடு என்னாச்சு, பேசரி என்னாச்சு, ஒட்டியாணம், நாககொத்து என்ன ஆச்சு, வங்கி என்னாச்சு..?’’ என்றாள்.

''பச்சைப்பொய். உங்களுக்கெல்லாம் என் கெட்ட குணம் மட்டும் தான் தெரியும். நல்ல குணம் எதும் கண்ணுக்கே தெரியாது.''

இவள் சன்னமாக ''நல்லது எதாவது இருந்தா சொல்லுங்கப்பா'' எனறாள்.

நான் இந்தச் சண்டை ஓயாது என்று புறப்பட்டு வந்துவிட்டேன். என் சமாதான முயற்சிகள் அத்தோடு முடிந்தன.

அடுத்த வாரம், புறக்கடையில் பாசி வழுக்கி விழுந்துவிட்டார் கிழவர். தொடை எலும்பும் இடுப் பிலும் முறிந்துபோய் ஜி.பி. அவரை புத்தூருக்கு அழைத்துப் போக, அங்கே இன்னமும் சீரியஸாகி, அப்புறம் தில்லைநகரில் அவரை அட்மிட் பண்ணி, மாற்றி மாற்றி வாத்தியாரும் மாமியும் பதினைந்து தினம் அவருக்கு வேளா வேளைக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு போய்... ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் நான் ஊருக்குக் கிளம்பும் முதல் நாள்தான் இறந்து போனார்.

இத்தனைப் பாடுபட்டதுக்கு ஜி.பி>க்கோ மனைவிக்கோ பேத்திகளுக்கோ எந்தவிதப் பயனும் இல்லை. சொத்து முழுவதையும் தொச்சு என்கிற துரைசாமியின் பேரில் எழுதி வைத்துவிட்டு, அவன் மேஜராகும் வரை > பதினெட்டு வயசு வரும் வரையில் வக்கீலை அந்தச் சொத்துக்கு கார்டியனாகப் போட்டு பதினெட்டாம் வயதில் அந்தச் சொத்து அவன் படிப்புக்கும் பராமரிப்புக்கும் போகவேண்டும் என்று எழுதி வைத்திருந்தார்.

பாடி எடுக்குமுன் துக்கம் விசாரிக்க அவர் வீட்டுக்குப் போய் திண்ணையில் சற்று மௌனமாக உட்கார்ந்திருந்தேன். உள்ளே பேத்தி ஒருத்தி மட்டும் 'தாத்தாஆஆஆ...' என்று அழுது கொண்டிருந்தது. உஞ்ச விருத்திக்கு அழைத்துச் சென்ற பாடசாலைப் பையன் ''மாமா, நாளைலருந்து வரவேண்டாமா? வேற எதாவது ஒத்தாசையா இருக் கே&ன!'' என்றான். ''இந்த ஆமே உன்னுதுரா'' என்றார் ஜி.பி. விசும் பலுடன். அவனுக்குப் புரியவில்லை. மாமிக்கு ஆத்து ஆத்துப் போயிற்று. ''என்ன பாவம் பண்ணோம்னு இந்தத் தண்டனை கொடுத் துட்டுப் போனார் கிழவனார். எங்கப் பாம்மா போட்ட நகை எங்கேனு கேட்டது ஒரு பெரிய தப்பா? அதுக்கு இத்தனை பெரிய தண்டனையா?''

ரங்கு ஜி.பி-யிடம் ''ஓய்... இது பிதுரார்ஜித சொத்து. அதை எழுதி வெக்க

கிழத்துக்கு உரிமையே கிடையாது. கிறுக்குப் புடிச்சாப்ல இப்படியெல்லாம் வில் எழுதினா கோர்ட்டில ஒத்துக்க மாட்டா. சண்டை போட்டு வாங்கிடலாம்.''

ஜி.பி-தான் ''ரங்கு, நமக்கு எது உண்டு, எது இல்லைன்னு தீர்மானிக்கிறதெல்லாம் ஸ்ரீரங்கநாதன்தான்'' என்றார்.

அதன்பின் நான் அலகாபாத் போய்விட்டு கல்கத்தா, டெல்லி, அல்மோரா, பதான்கோட், கொலம்போ என்று சுற்றிவிட்டு ஆறு வருஷம் கழித்துதான் ஸ்ரீரங்கம் திரும்ப முடிந்தது. ரங்குவை முதல் காரியமாக விசாரித்தேன்... ''ஜி.பி. வாத்தியார் என்ன ஆனார் ரங்கு?''

''ஏன் கேக்கறே... ஸ்கூல்ல புதுசா ஹெட்மாஸ்டரை நியமனம் பண்ணிட்டா. ரெண்டு பேருக்கும் ஆகலை. நோட்ஸ் போடக் கூடாதுன்னு தடை பண்ணிட்டா. கோவிச்சுண்டு ரிஸைன் பண்ணிட்டேர். மணச்சநல்லூர்ல போய்ச் சேர்ந்தேர். அங்கயும் சரிப்பட்டு வரலை. சம்பளம் சரியா வரலை. அதுக்கப்புறம் நோட்ஸ் போட்டு விக்கறதும் பாழாப் போச்சு. இவர் போட்ட நோட்ஸையே காப்பி அடிச்சு இன்னொருத்தன் போட்டு அரை விலைக்கு வித்தான். அவன்மேல கேஸ் போடறேன்னு வக்கீல்கள்ட்ட காசு நிறைய விட்டேர். ஏறக்குறைய பாப்பர் ஆறநிலைக்கு வந்துட்டேர். சொத்தும் இல்லை. பத்ரிக்கு போ

றேன்னு காலை ஓடிச்சுண்டேர். மனசொடிஞ்சு போய்ட்டேர். அப்றம்...'' என்று ரங்கு பேச்சை நிறுத்தினான்.

நான் சன்னமாக, ''எதாவது விபரீதமா ரங்கு?'' என்றேன்.

''அதை ஏன் கேக்கறே... கடைசியா ரங்கநாதன் கண்ணைத் திறந்துட்டார்.

''எப்படி?''

''மூத்த பொண்ணு எச்சுமி இருக்கு பாரு, தொச்சுவைக் கல்யாணம் பண்ணிண்டு டுத்து. எல்லாம் சரியாப் போய்டுத்து. உஞ்சவிருத்தி தேசிகாச்சாரி சொத்து மறுபடி ஃபேமிலிக்கே வந்துடுத்து!''

''அந்தப் பையன் அதிகம் படிச்சிருந் தானா?''

‘‘எட்டாம் கிளாஸ்க்கு மேல படிப்பு ஏறலை...’’

‘‘இந்தப் பொண்ணு?’’

‘‘எம்.சி.ஏ.’’

நான் வியப்புடன் ‘‘எப்படிக் கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சது அந்தப் பொண்ணு... ஃபேமலிக்காக தியாகமா?’’

‘‘அதெல்லாம் இல்லை, காதல்!’’ என்றான் ரங் கு.

****

குதிரை

சிலருக்கு லாட்டரியில் பரிசு விழுகிறது. சிலரை பிரபல டைரக்டர் பஸ்ஸடாண்டில் பார்த்து “அடுத்த அமாவாசைக்கு ஷ¨ட்டிங்குக்கு வா” என்கிறார்.இப்படித் திடீர் என்று தனிமனிதர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.ஏதோ ஒரு வகையில் பிரசித்தி பெறுகிறார்கள்.அம்மாதிரி நானும் பிரசித்தமானேன். என்னை ஒரு குதிரை கடித்ததால்!

“குதிரையா?” என்று வியப்புடன் கேட்கிறீர்கள் அல்லவா? உங்களுக்குச் சொல்கிறேன். முதலில் என்னைப் பற்றி. அப்புறம் குதிரையைப் பற்றி. என்பேர் கிஷ்ண சாமி அதை கிச்சாமி என்று சுருக்கி மனதில் ஒரு பிம்பம் ஏற்படுததிப் பாருங்கள். அதேதான் நான். தொழில், தோற்றம் என்று எந்த வகையிலும் எனக்குப் பிரத்தியேகம் கிடையாது. தினப்படி காப்பி குடித்து, பேப்பர் படிதது, துணி மடித்து, பஸ் பிடித்து அங்குலம் அங்குலமாக மாயும் மனித எறும்பு.

மனைவி, குழநதை ,மாமனார், வாடகை வீடு, பாத்ரூமில் பாட்டு, மண் தொட்டியில் ஒன்றிரண்டு மலர்ச்செடிகள், தவணை முறையில் ரேடியோ என்று பிரகாசமற்ற பிரஜைதான் நான்.

குதிரை கடிக்கும் வரை! குதிரையும் அவ்வளவு பிரசித்தமில்லாத ஜட்கா வண்டிக் குதிரைதான்.எங்கள் வீட்டிலிருந்து அஹமத் ஸ்டோர்ஸ்க்கு போகும் வழியில் ஆஸ்பத்திரி இருக்கிறது.அதன் வாசலில் வழக்கம்போல் இளநீர் காலி பாட்டில்கள் எல்லாம் விற்கும் இடத்துக்கு எதிரே ஒரு குதிரைலாயம் இருக்கிறது. பொதுவாக எல்லா ஆஸ்பத்திரிகளுக்கும் எதிரில் இந்த லாயம் இருப்பதை நீங்கள் கவனித் திருக்கலாம்.இந்த லாயங்களில் மற்றொன்றையும் கவனித்திருக்கலாம், திருச்சி தென்னூர் போனலும் பிட்ரகுண்டா போனலும். ஒரே அமைப்பு. உயரமான கருங்கல் கம்பங்கள் மேல் ஜாக்கிரதையாக ஓடு வேய்ந்திருக்கும். நடுவே 1938 ல் ஏதோ ஒரு உள்ளூர் நாயுடுவின் உபயத்தில் கட்டடப் பட்டது என்று அறிவித்து ஒரு தண்ணீர்த் தொட்டி இருக்கும்.நகரச் சந்தடியில் ஒரு சோம்பேறித் தீவாக கொஞ்சம் சேணம்,கொஞ்சம் லத்தி ஈரப்புல் கலந்து நாற்றமடிக்கும்.

வண்டிக் காரர்க்ள் சுகமாக எங்கேயோ கவனித்துக்கொண்டு

உட்கார்ந்திருப்பார்கள். ஒன்றிரண்டு குட்டிக் குதிரைகள் தெனபடும்.அவை அழகாக இருக்கும். திடீர் என்று குதிரைக் குட்டி உற்சாகம் பெற்று வெறி பிடித்தாற்போல போக்கு வரத்தின் ஊடே ஓடும். இந்த மாதிரித் தான் நான் சொல்லும் இடமும். அதைக் கடந்து செல்லும்போது லேசாக மழை பெய்ததால் சற்று ஒதுங்கி குதிரைகளின் கிட்டே நடந்து போனேன்.சில குதிரைகள் என்னை சட்டை செய்யாமல் அவ்வப்போது உடம்பில் எதிர்பாராத இடங்களைச் சிலிர்த்துக்கொண்டு தெய்வமே என்று வண்டிக்காரன் கொடுத்ததை மென்று கொண்டிருந்தன. எல்லாமே கிழட்டுக் குதிரைகள். முதுகெலும்புகள் தெரிய தோள்பட்டையில் தழும்போடு கால்கள் ஜபேட் அடித்து குதிரையா கழுதையா என்று தீர்மானமாக சொல்ல முடியாத அளவுக்கு இருந்தன. அவற்றில் ஒன்று என் முழங்கையைக் கடித்துவிட்டது.

நான் நடந்து கெசாண்டே இருக்கும் போது முழங்கைப் பகுதியில் சுரீர் என்கிறதே என்று பார்த்தால் குதிரை கடித்து முடித்துவிட்டு என்னைப் பார்த்தது. தொள தொள என்ற உதடுகளுடன் சிரித்தது. நான் 'ஸ்ஸ்ஸ்ஸ்' என்று முழங்கையைப் பார்ததுக்கொணடு குதிரைக் காரனைத் தேடினால் காணவில்லை. ஒரே ஒரு பையன் எங்கோ பார்ததுக் கொண்டு நின்றான். மறுபடி கடித்துவிடப் போகிறதே என்று விலகி வந்து காலை வெளிச்சத்தில் காயத்தை ஆராய்ந்தேன். லேசாகப் பல்லுப் பட்டிருந்தது.

அது ஒன்றும் நிகழவில்லைபோல் என் மேல் சுவாரசியம் விலகிப் போய் எதையோ மென்று கொண்டிருந்தது.என்னை யாரும் பார்க்கவில்லை.'ச்சே' என்று பொதுப்படையாகத் திட்டிவிட்டு அடிக்கடி காயத்தைப் பார்த்துக் கொண்டே' டெட்டால்' போட்டு அலம��

�பிக் களிம்பு தடவ வேண்டும் என்று எண்ணிய படி வீட்டுக்கு விரைந்தேன். என் மனைவி வாசலில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.கடைக்குப் போன கணவன் குதிரை கடித்து இத்தனை சீக்கிரம் திரும்பி வருவான் என்று எதிர் பார்க்கவில்லை.

"என்ன வந்துட்டிங்க? அகமத் ஸ்டோர் மூடியிருக்கா?" "இல்லை வரவழியில.." " என்ன ஆச்சு? என்ன கையில" "உள்ள வாயேன் சொல்றேன்" "என்ன ஆச்சு விழுந்திட்டிங்களா?" "இல்லை ஆஸபத்திரிக்கு எதிர்ல கதிரை லாயம் இருக்கு பாரு அது வழியா நடக்கறபோது குதிரை கடிச்சுடுத்து" "என்னது,குதிரையா?" "ஆமாம்" "கடிச்சுதா?" மாமனார் உள்ளே வர "அப்பா குதிரை எங்கயாவது

கடிக்குமா?" என்று அவரிடம் கேள்வி. "எதை" "மனுஷாளைப்பா" "சேச்சே" "இதோ உங்க மாப்பிள்ளையைக் கடிச்சிருக்கு" "அப்படியா, ஆச்சரியமா இருக்கே! என்ன மாப்பிளளை எதாவது அதைப்போய் சீண்டனம் பண்ணேளா?" "இல்லே ஸார் அந்தப் பக்கமா நடந்து போயிண்டிருந்தபோது லபக்குன்னு கவ்விடுத்து" "குதிரை லாயத்துக் கெல்லாம் எங்க போறேன். கல்யாணி நீ எதாவது வண்டி கொண்டுவரச் சொன்னாயா?" "இல்லைப்பா ஸ்டவ்வுத் திரி வாங்கிண்டு வர அகமத் ஸ்டோர்ஸ்க்கு அனுப்பிச்சேன். எதுக்கு நீங்க குதிரை கிட்டல்லாம் போறேள்? அய்யோ நன்னாப்பல்லுப் பட்டிடிருக்கே. விஷப் பல்லா இருந்துடப் போறது. அப்பா அதைப் பாருங்க" மாமனார் கிட்ட வந்து பார்த்து,"கன்னித்தான் போயிருக்கு. மாப்பிள்ளை நீங்க எதுக்கும் ராயர் கிட்டக் கொண்டு காட்டிடுங்கோ. கல்யாணி, அழைச்சுண்டு போயிடு. ஜட்கா வண்டிக் குதிரையா" "ஆமாம்" சற்று யோசித்து"ஜட்கா வண்டிக் குதிரை கடிக்காதே" என்றார் ஜ.வ.குதிரைகளில் டாக்டர் பட்டம் வாங்கினவர் போல். "இந்தக் குதிரை கடிச்சுது ஸார் என்ன பண்ண?" என்றேன். "இவருக்கு மட்டும எல்லாம் ஆகும்பா, கணக்கால் அளவுக்கு தண்ணீர் போதும் இவருக்கு முழுகிப்போய்டுவார்.இப்படித்தான் திருச்சினாப்பள்ளியில உய்யக் கொண்டான் வாய்க்கால்ல.." "சரிதான் நீ ஆரம்பிக்காதே" என்று அதட்டினேன். "எதுக்கும் டாக்டர் ராவ் கிட்ட கொண்டு காட்டிடறது நல்லது" என்றாள். எனக்கும் காயத்தைப் பார்த்ததில் அபபடித்தான் பட்டது.ஆனால் இதை டாக்டரிடம் எப்படிச் சொல்லப் போகிறேன் என்று கவலையாக இருந்தது.

நரஹரி ராவ் எங்கள் குடும்பத்து டாக்டர் . அறுபது வயசானாலும் நல்ல ப்ராக்டிஸ், நாங்கள் போனது காலை வேளையாக இருந்தாலும் நல்ல கூட்டம்.குழந்தைகளும் தாய்மார்களும் க்ளார்க்ககுகளும் மப்ளர்காரர்களுமாக அடைத்துக் கொண்டு காத்திருந்தார்கள்.சின்ன இடம் அதில் பாதி தடுத்து நரஹரிராவ் உள்ளே உட்கார்ந்துகொண்டு யாரையோ 'ஆ' சொல்லிக் கொண்டிருப்பது பனிக் கண்ணாடியில் குழப்பமாகத் தெரிந்தது. எங்களுக்கு உட்கார இடம் இல்லை. அடுத்த முறை பையன் வெளியே வந்தபோது கல்யாணி "இந்தாப்பா டாக்டர் கிட்ட சொல்லு அவசரமா பார்க்கணும்னு" என்றாள்.

"எல்லாருக்குந்தாம்மா அவசரம்" "இல்லைப்பா இவரை குதிரை கடிச்சுடுத்துப்பா. ரத்தமா கொட்டறது பாரு "என்றாள். "கல்யாணி! என்ன சொன்னே? சரியாக் காதுல விழலை குதிரையா?" "ஆமாம் மாமி. போயும் போயும் குதிரை கிட்ட கடி பட்டுண்டு வந்திருக்கார்.

என்னத்தைச் சொல்லி மாள?" "குதிரை வளக்கறிங்களா?" "அதுங்கிட்ட எதுக்குப் போனார்? " எல்லோரும் என்னையே பார்த்தார்கள். "உள்ளே வாங்க கிச்சாமி" என்றார் டாக்டர். "என்ன குதிரை கிட்டல்லாம் போய் விளையாடிண்டு இந்த வயசில" "டாக்டர் அது வந்து ஆஸ்பத்திரிக்கு எதிர்த்தாப்பல நடந்து போயிண்டிருநதேனா.." என் கதையைத் தணிந்த குரலில் சொன்னேன்." டாக்டர் அதுக்கு எதாவது விஷப் பல்லு இருக்குமா" என்றாள் கல்யாணி இடையே. "தெரியலைம்மா. இருக்காதுதான். ஆனா கல்யாணி நானும் இதே மில்கார்னர்ல முப��

�பது வருஷமா ப்ராக்டிஸ் பண்ணிண்டிருக்கேன்.குதிரை கடிச்ச கேஸை இப்பதான் முதல்ல பார்க்கறேன்" என்றார். "என்ன பண்றது டாக்டர்? ஆக்ஸிடெண்ட்டுக்குன்னே பொறந்தவர் இவர்.ஸ்கூட்டர் ஓட்டக் கத்துக்கறேன்னு ஸ்கூட்டரை ஸ்டாண்டில இருந்து எடுக்கறதுக்கு முன்னாடியே ஆக்ஸிடெண்ட் பண்ணிட்டார்.தொப்புன்னு போட்டுண்டு கீழே விழுந்தார். கால்ல பாருங்ஙகோ தழும்பு" டாக்டர காயத்தை கவனித்தார். "வலிக்கிறதா? இருங்க காட்டரைஸ் பண்ணிடறேன்" என்று குட்டியாக இருந்த ஸ்பிரிட் அடுப்பைப் பற்ற வைத்து விட்டு அலமாரியிலிருந்து தடிமனான ஒரு புத்தகத்தைப் பிரித்து அதன் பின் அட்டவணையில் குதிரை, குதிரைக் கடி என்று தேடினார். "ம் ஹ§ம் டெக்ஸ்ட் புக்லயே இல்லை. எதுக்கம் கவலை படாதங்கோ சீட்டு எழுதிக் கொடுக்கறேன். நேரா ஆஸபத்திரிக்குப் போய் இன்ஜெக்ஷன் ஒரு கோர்ஸ் ஆரம்பிச்சுடுஙகோ இப்பவே"என்றார். "அந்த இன்ஜெக்ஷனை இஙகேயே போட்டுண்டடுடலாமே டாக்டர்" "எங்க கிட்ட ஸீரலம் கிடையாது, ஆதுவும் இல்லாம டாக்டர் கோபி எல்லாம் தேர்ந்தவர். அவர் பார்த்து தேவைப் பட்டுதுன்னாத்தான் ஊசி போட்டுக்கணும். இப்ப காட்டரைஸ் பண்ணி அனுப்பிச்சுர்றேன்" என்று சொல்லிவிட்டு கொஞ்ச நேரம் சிரித்துவிட்டு "குதிரை" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு"டாக்டர் கோபிக்கு லெட்டர் கொடுக்கறேன் உடனே போம்" என்றார். ஆஸபத்திரியை நோக்கி நடக்கும்போது ஒரு மாடு கிழிசல் பனியனை மென்று கொண்டிருந்தது. "பாத்து வாங்கோ .இது வேற கடிச்சு வெக்கப்போறது" என்றாள் கல்யாணி. "என்ன கல்யாணி சொல்றே? வேணும்னுட்டா கடிச்சுப்பா?" "வேணுமோ வேணாமோ நம்மாத்தில மட்டும்தான் இந்தமாதிரியெல்லாம் நடக்கறது. டாக்டர் சொன்னார் பாருங்கோ" "எல்லாம் எனக்கும் கேட்டுது. அதபாரு குதிரை கடிக்காதுதான் என்னைக் கடிச்சுடுத்து என்ன பண்ணச் சொல்றே ? ஏன் கடிச்சேன்னு வேணா விசாரிச்சுன்டு வரட்டுமா?" "வேண்டாம். மறுபடியும் கடிச்சு வெக்கப் போறது. கடிக்கறதுன்னா அந்தப் பக்கம் ஏன் போகணும்?" "குதிரை கடிக்கும்னு யாருக்குடி

தெரியும் மூதேவி!”

நடுரோடில் எங்களை வேடிக்கை பார்கக கூட்டம் கூடிவிடவே நாங்கள் கலைந்து நடந்தோம்.ஆஸபத்திரியில் டாக்டர் கோபிநாத்தைத் தேடிக்கொண்டு சென்றேன்.நீண்ட பெஞ்சு போட்டு பலபேர் உட்கார்ந்திருந்தார்கள். கல்யாணி இங்கே வந்து “குதிரை கடித்துவிட்டது” என்று இரைந்து கூறி சலுகை கேட்கப் போகிறாளே என்று பயமாக இருந்தது.ஆககால் கல்யாணி பேசாமல்தான் உட்கார்ந்தாள்.அங்கே உட்கார்ந்திருந்தவர்களை விசாரித்ததில் பெரும்பாலோர் நாய்க்கடிக் காரர்கள் என்று தெரிந்தது. அங்கங்கே ஒன்றிரண்டு எலி தேள் இருந்தன. எல்லாருடைய சீட்டுகளிலும் நாய் நாய் என்றுதான் எழுதியிருந்தது.அங்கே அருந்த சிப்பந்தி அவற்றை அடுக்கி வைக்கம் போது என் சீட்டு வந்தபோது மட்டும மயங்கினான்.

“குதிரை! இங்க யாருப்பா கிருஷ்ணசாமி” “கிருஷ்ணசாமி நான்தான் ”என்றேன். “உங்க டிக்கெட்டில் தப்பா போட்டிருக்கு குதிரை ன்னு. கொஞ்சம் திருத்திக் கொடுக்கறிங்களா” “இல்லை ஸார் என்னை குதிரைதான் கடிச்சிருக்கு” இப்போது அத்தனை பேரும் திக்கித்துப் போய் என்னைப் பார்க்க, சிப்பந்தி உடனே உள்ளே போய் கோபிநாத்திடம் சொல்ல “கூப்பிடு உள்ளே அவரை முதல்ல” என்றார். “வாங்க உக்காருங்க. ராயர் போன் பண்ணிச் சொன்னார். நீங்கதானா அது? குதிரை எங்கே கடிச்சுது உங்களை?”என்று விசாரித்தார். “ஆஸ்பத்திரிக்கு எதித்தாப்பல ஸ்டாண்டு இல்லை? அங்கே” “அதைக் கேக்கலை.உடம்பில எந்த பாகத்தில?” நான் என் கைச்சட்டையை வழித்துக் காட்டினேன்.“காட்டரைஸ் பண்ணாரா?”என்று அலமாரியிலிருந்து தடியான புத்தகம் ஒன்றை எடுத்தார். “அந்தப் புஸ்தகத்தில் ‘குதிரைக்��

�டி’ கிடையாது டாக்டர்”என்றாள் கல்யாணி. “எப்படிச் சொல்றிங்க?” “டாக்டர் ராவ் பார்த்துட்டார்” “மிஸடர் கிருஷ்ணசாமி ஒண்ணு பண்ணலாம் நான் குதிரை கடிச்ச கேஸை இதுவரை ட்ரீட் பண்ணதில்லை எதுக்கு ரிஸ்க் எடுக்கணும். ஒரு ஷார்ட் கோர்ஸ் ஆரம்பபிச்சுர்றேன் ஸ்ப்க்யுட்டேனியஸ்ஸா..” “டாக்டர் உயிருக்கு ஆபத்து எதும்ம இல்லையே?” “சேச்சே பயப்படாதிங்கம்மா.மிஸ்டர் கிருஷ்ணசாமி எதுக்கும் ரெண்டு மூணுநாள் அந்தக் குதிரையை வாட்ச் பண்ணிக்கிட்டு இருங்க.செத்து கித்து வெக்குதான்னு. எந்தக் குதிரை கடிச்சுது ஞாபகம் இருக்குமோல்லியோ?” “ம்” என்றேன் சந்தேகமாக “மூணு நானைக்கு எதுக்குப் பார்க்கணும்” என்றாள் கல்யாணி. “அதுக்கு

வெறி கிறி எதாவது பிடிச்சிருந்தா செத்துப்போய்டும் . அது உயிரோட இருந்தா கவலைஇல்லை.எதுக்கும் பயப்படடிதிங்க ரிஸ்க் எடுத்துக்காம கோர்ஸை ஆரம்பிச்சுர்றசூஷன். தினம் காலை இந்த வேளைக்கு வந்துடுங்க என்ன ?" "பகவானே என்ன சூஷசொதனை பாத்திங்களா?" என்று புலம்பிக்கொண்டே வெளியே வந்தாள் கல்யாணி.வந்ததும் அங்கே உட்கார்ந்திருந்தவர்களிடம சட்டென்று பேச்சு நின்று போய் ஒரு சிலர் உள்ளங்கையால் வாயை மறைத்துக்கொண்டு பக்கத்தில் இருப்பவரிடம் என்னைக் காட்டிப் பேசுவதை கவனித்தேன். முதுகில் கூட அவர்களது பார்வை பட்டது. திடீரென்று திரும்பி'குதிரை கடிச்சா என்னய்யா?" என்று சத்தமாகக் கேட்க நினைத்தேன். ஆஸ்பத்திரியை விட்டு வெளியே போகும் போதே குதிரையை ஒரு நடை விசாரித்து விட வேண்டும் என்று கல்யாணி சொன்னாள். எனக்கு அது தேவையாகப் படவில்லை. இருந்தும் அங்கே போனோம். "குதிரையை ஞாபகம் இருக்கோல்லியோ?" என்றாள். "இருக்கும்னு நெனைக்கிறேன்.நெத்தில டைமண்ட் ஷேப்பில வெள்ளையா ஒரு திட்டு இருந்ததா ஞாபகம்."

லாயத்துக்குப் போனபோது ஏறக்குறையக் காலியாக இருந்தது. சிறுவன் மட்டும் காலை ஆட்டிக்கொண்டு பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். "ஏம்பா எல்லாக் குதிரையும எங்கே?" "எல்லாம் சவாரி போயிருக்குதுங்க. கொச்ம் இருங்க வந்துடும். பாடி கொடுத்துட்டாங்களா" "பாடியா?" "இவன் என்ன சொல்றான்" என்றாள் கல்யாணி. "ஏம்பா இந்த அடத்தில எத்தனை குதிரை இருக்கு?" "ஏங்க எதாவது எலக்சனா? குதிரைச் சின்னத்தில் நின்னறிங்களா? ஊர்கோலம் போகணுமா? எத்தனை குதிரை வேணும்?" "ஒரே ஒரு குதிரைதாம்பா. நெத்தில டைமண் மாதிரி இருக்கும்" "கரீம்பாய் குதிரையை சொல்றிங்க. இதோ இப்ப சவந்துடுங்க. கபர்ஸ்தான் போயிருக்குது" "அது உயிரோட இருக்கில்லே?" "இல்லாம,பின்ன?" "நல்லது" என்று புறப்பட்டு வந்துவிட்டோம். "தினம் ஆஸ்பத்திரிக்கு வர வழியில ஒரு விசை குதிரையை விசாரிச்சுண்டு வந்துருங்கோ" என்றாள் கல்யாணி. மறுதினம் ஆஸபத்திரிக்குப் போகிற வழியில் என்னைக் கடித்த குதிரையை மறுபடி சந்தித்தேன் அந்தப் பையன்தான் " கரீம்பாய் கல் பூச்சானா? ஓ ஆத்மி ஆயா " என்றான். கரீம்பாய்க்கு காலையிலேயே கண்கள் கலங்கியிருந்தன. என்னைப் பார்தது, "என்ன சாமி நம்ம சுல்தானைப் பத்தி விசாரிச்சிங்களாமே?"என்றான்.நான் கிட்டப்போய்ப் பார்த்ததில் என்னைக் கடித்த குதிரை அதுதான் என்று தெரிந்துபோய்விட்டது. "பாய்! இந்தக் குதிரை நல்லாத்தானே இருக்குது? உயிரோடதானே இருக்குது?" சேணம் எல்லாம் கழற்றிப்

போட்டு எண்ணெய் தேய்த்துக் கொள்வதற்கு முன்பிருக்கும் நங்கை போல் இருந்தது. ”ஏன் சாமி“ ”நேத்திக்கு இது என்னை கடிச்சிடுச்சுப்பா. குதிரை உயிரோடதான் இருக்கான்னு தினம் பார்க்கச் சொல்லியிருக்கார் டாக்டர்“ ”கடிச்சுதா? அதெல்லாம் செய்ய மாட்டானே நம்ம சுல்தான், க்யூன் சுல்தான் ஸாப்கோ காட்டா?“ குதிரை ”பிஹிர்ர்ர்“ என்றது. ”என்னா குதிரைங்க இது?“ என்று அதன் கழுத்தருகில் சொரிந்து கொண்டே சொன்னான். ”ரேக்ளா ரேஸ்ல எல்லர்ம ப்ரைஸ் வாங்கிருக்கு. க்யுன் சுல்தான்?“ ”பிஹிர்ர்ர்“ ”ஏதோ சௌக்கியமா இருந்தா சரி. அதோ பார் முழங்கையைக் கடிச்சுடுச்சு. தினப்படி ஊசி போட்டுக்க வேண்டியிருக்கு. குதிரையைக் கட்டுப் படுத்தி வெச்சுக்கக் கூடாதாப்பா?“ ”ஊசி போட்டுக்கறியலா?“ என்று சுல்தான் போலவே சிரித்தான். ”எதுக்கு? குதிரை கடிச்சதுக்கா? இத பாரு.“என்று தன் கையைக் காண்பித்தான். ”எத்தனை தடவை புல் குடடுக்கறப்ப கொள் கொடுக்கறப்ப சுல்தான் என்னைக் கடிச்சிருக்கான் தெரியுமா? ஊசியா போட்டுக் கிட்டேன்? க்யூன் சுல்தான்?“ எதற்கும் நான் ரிஸ்க் எடுத்துக் கொள்ளவில்லை.ஆஸ்பத்திரிக்குப் போகும் போதெல்லாம் சிப்பந்திகள் குதிரைக்காரர் வந்துட்டாரு” என்று பேசிக்கொண்டாலும், எதிர் வார்டிலிருந்து நண்பர்களையெல்லாம் கூட்டி வந்து என்னைக் காட்டினாலும், வீட்டில் கல்யாணியின் பல உறவினர்கள் பேருக்குப் பேர்“குதிரை கடிச்சுடுத்தாமே ” என்று விசாரித்தாலும் மதிக்காமல் பிடிவாதமாக சிகிச்சைக்குச் சென்றேன்.சில நாட்களில் காயம் ஆறிவிட்டது. ஆனால் அந்த சம்பவத்துக்குப் பின் என் பெயர் மாறிவிட்டது ‘குதிரைக் கிச்சாமி’ என்று.

ஊருக்கு ஊர் கிச்சாமி இருக்கிறார்கள், ஆனால் நாட்டில் ஒரே ஒரு ‘குதிரைக் கிச்சாமி’ நான்தான் என்பதில் ஒரு அற்ப சந்த ோஷம்.

****

அப்பா அன்புள்ள அப்பா

செய்தி வந்த உடனே பஸ் பிடித்து சேலம் போய்ப் பார்ததால் அப்பா படுக்கையில் உட்கார்ந்திருந்தார்.

“எங்கே வந்தே” என்றார்.

“உனக்கு உடம்பு சரியில்லைன்னு” என்று மழுப்பினேன்.

“நேற்று வரை சரியில்லாமல்தான் இருந்தது. டாக்டர்கள் என்னமோ பண்ணி உட்கார வைத்து விட்டார்கள்.சாப்ட்டியா?”என்றார்” எனக்கு என்ன வாங்கிண்டு வந்தே?”

“என்னப்பா வேணும் உனக்கு”

“உப்பு பிஸ்கட். கொஞ்சம் பாதாம் அல்வா. அப்பறம் ஒரு சட்டை வாங்கிக் கொடுத்து விட்டுப் போ-”

சட்டையைப் போட்டு விட்டதும் “எப்படி இருக்கேன்” என்றார்.

பல்லில்லாத சிரிப்பில் சின்னக் குழந்தை போலத்தான் இருந்தார்.

நர்ஸ் வந்து “தாத்தா உங்க மகன் கதைகள் எல்லாம் படிச்சேன். ரொம்பஇன்டெலிஜெண்ட்” என்றதற்கு “நான் அவனை விட இன்டெலிஜெண்ட்” என்றார்.

பேப்பர் பேனா எடுத்து வரச்சொல்லி “உன் முன்னோர் யார் என்று அபபுறம் தெரியாமல் போய் விடும்” என்று வம்சாவழியைச் சொல்லி எழுதிக் கொள்ளச் செய்தார். ஞாபகம் தெளவாக இருந்தது. முதன் முதன் முதல் திருவாரூரில் நுறு ரூபாய் சம்பளத்தில் பதவியேற்ற தேதி சொன்னார். கணக்கம் பாளையம் பின்கோடு நம்பர் சொன்னார். “பழைய விஷயங்கள் எல்லாம் ஞாபகம் இருக்கிறது. சமீப ஞாபகம்தான் தவறிப்போகிறது. நீ வந்தால்கேட்கவேண்டும் என்று ஏதோ ஒன்று. என்ன என்று ஞாபகம் இல்லை. ஞாபகம் வந்ததும் ஒரு காகிதத்தில் குறித்து வைக்கிறேன்”

“அப்பா உனக்கு எத்தனை பென்ஷன் வருகிறது தெரியுமோ?”

“தெரியும் .ஆனால் பணத்தில் சுவாரஸ்யம் போயவிட்டது. எத்தனை இருந்தால் என்ன? நீங்கள் எல்லாம் என்னைக் காப்பாற்றாமலா போவீர்கள்?”

“ஏதாவது படித்துக்க காட்டட்டுமா அப்பா?”

“வேணட்ம். நிறையப் படித்தாயிற்று. இப்போது அதெல்லாம் எதற்கு என்று ஒரு அலுப்பு வந்து விட்டது. நீ போ உனக்கு எத்தனையோ சோலி

இருக்கும். அமமாவின் வருஷாப்திகம் ஏப்ரல் ஒண்ணாம் தேதி வருகிறது. அப்போது வநதால் போதும். நான் படுத்துக் கொள்ளட்டுமா? களைப்பாக இருக்கிறது. காலையில் போவதற்குள் ஒரு முறை சொல்லிவிட்டுப் போ" என்றார்.

பெங்களூர் திரும்பிவந்து ஒரு வாரத்துகுள் மறுபடி சீரியஸ் என்னனனறு தந்தி வந்தது.

என்.எஸ் பஸ்ஸில்" என்ன ஸார் அடிக்கடி சேலம் வர்றிங்க?"

"எங்கப்பா சீரியஸா இருக்கார்ப்பா"

"ஓ அப்டிங்களா? டேய் அந்த மல்லி மூட்டையை பாத்து இறக்குங்கடா"

ஸ்பெஷல் வார்டில் அவரைப் பார்த்து திடுக்கிட்டேன். படுக்கையில் கண்மூடிப் படுத்திருந்த முகத்தில் தாடி. காலில் பட்டர்ஃப்ளை ஊசி போட்டு சொட் சொட்டெனறு ஐவி க்ளுக்கோஸ் உள்ளே போய்க்கொண்டிருந்தது. சுவாச மூக்கில் ஆக்ஸிஜனும் ஆஸ்பத்திரி வாசைனயும் வயிற்றைக் கவ்வியது.

கண்ணைக் கொட்டிக்கொட்டிக் கண்ணீரை அடக்கிக்கொண்டு "அப்பா அப்பா" என்கிறேன்.

கண்ணைத் திறக்கிறார் பேசவில்லை. "நான்தான் வந்திருக்கிறேன்" என்று கையைப் பற்றுகிறேன்.

பேசும் விருப்பம் உதடுகளில் தவிக்கிறது.கையை மெல்லத் துக்கி முக்கில் இருக்கும் குழாய்களை அகற்றப் பார்க்கிறார். தோற்கிறார்.

"நீ போனப்புறம் ஒரு நாளைக்கு சரியா இருந்தார் அதுக்கப்புறம் இப்படி"

படுக்கையில் பூஞ்சையாக நெற்றியைச் சுருக்கிகொண்டிருக்கும் அபபாவைப் பார்க்கிறேன். இவரா ஆயிரம் மைல் தனியாகக் கார் ஓட்டிக்கெண்டு சென்றவர்? இவரா மின் வாரியத்தை தன் டிஸிப்ளினால்

கலக்கியவர் “நல்ல ஆபிஸர்தான் ஆனா கொஞ்சம் முன் கோபிங்க”

இவரா அணைக் கட்டின் பாரப்பெட் சுவரின் மேல் ஏறிக்கொண்டு விளிம்பில் ஒரு ஃபர்லாங் நடந்தவர்?”என் வில் பவரை டெஸ்ட் பண்ணிப் பார்ககணும் போலிருந்தது” இன்ஜினியரிங் படிப்பையும் இளம் மனைவியையும் விட்டு விட்டு காஙகிரசில் சேருகிறேன் என்று காணமால் போனவர் இவரா?”ஐ வாஸ் கிரேஸி தட் டைம்”.

மேல் நர்ஸ் வந்து அவரை உருட்டி முதுகெல்லாம் யுடிகொலோனும் பேபி பவுடரும் போடுகிறார். “பெட்ஸோர் வந்துரும் பாருங்க”

ஸ்டாஃப் வந்து பக்கத்துககு ஒரு ஊசி கொடுத்து “நீங்கதான் ரைட்டர்ங்களா?” என்கிறார். நான் ஆஸபத்திரியைத் திகைத்துப் போய்ப் பார்க்கிறேன்.

ஆஸபத்திரியிலிருந்து தப்பிப்பதைப் பற்றி ஸர்வைவல் புத்தகங்கள் ஆங்கிலத்தில் எழுதீயிருக் கிறார்கள். டாக்டர்கள் எல்லோரும் நல்லவர்கள். ஆனால் ஸ்பெஷலிஸ்டுகள்.

“ஒரு ஸிடி ஸ்கான் எடுத்துரலாமே டாக்?”

“முழுங்கறதுக்கு ரொம்ப கஷ்டப்படறார், ஒரு பேரியம் மீல் கொடுத்துப் பார்த்துரலாம். அப்றம் ஒரு ஆன்ஜியோ”

“ஃப்ளுயிட் ரொம்ப கலெகட் ஆயிருச்சு. புட் ஹிம் ஆன் எ ஹெவி டோஸ் ஆஃப் லாஸிக்ஸ்” எல்லா டாக்டர்களுமே திறமைசாலிகள்தான், நல்ல நோக்கமுள்ளவர்கள் தான், ஆனால் ராத்திரி முழுக்க அவர் அருகில் கீழே படுத்திருக்கிறேன். துக்கமில்லை. கொஞ்ச நேரம் வராந்தாவில் உட்கார்ந்து காற்று வாங்குகிறேன். கான்க்ரீட் மேடையில் வேப்ப மரம் முளைத்திருக்கிறது. காகங்கள் ஸோடியம் விளக்குகளைச் சூரியன் என்று குழம்பிப்போய் இரை தேடச் செல்கின்றன. இங்கிருந்து அப்பா தெரிகிறார். அசையாமல் படுத்திருக்கிறார். முகத்தில் வேதனை எழுதியிருக்கிறது. கூப்பிடுகிறாரா? கிட்டப்போய்க் கேட்கிறேன்.

“என்னப்பா?”

“போதும்ப்பா என்னை விட்டுருப்பா” என்று மெல்லச்

சொல்கிறார்.வில்லியம் ஹண்ட்டரின் கட்டுரை ஞாபகம் வருகிறது. If I had strength enough to hold a pen. I would write how easy and pleasant it is to die.

பொய்!

ஆனால் இவர் அவஸ்தைப் பட்டால் எனக்கு அபத்தமாகத்தான் படுகிறது. இவர் செய்த பாவம் என்ன? ப்ராவிடணட் பண்டில் கடன் வாங்கி பையன்களைப் படிக்கவைத்ததா? அவர்களுக்கு வரதட்சணை வாங்காமல் கல்யாணம் செய்துவைத்ததா? ஏழை உறவினர்களுக்கும் ஆசிரியருக்கும் மாசாமாசம் பென்ஷனிலிருந்து பணம் அனுப்பியதா? குடும்ப ஒற்றுமைக்காகப் பாடுபட்டதா? பிரபநதத்தில் ஒரு வரி விடாமல் மனப்பாடமாக அறிந்ததா?

காலை ஐந்து மணிக்கும்பிக்கத்தில் இருக்கும் சர்ச் எழுந்து ஒலி பெருக்கி மூலம் ஏசுநாதரைப் பேசுகிறது. அப்பாவுக்கு இது கேட்குமா? ரேடியோ சிலோனில் சுவிசேஷத்தை தவறாத ஆர்வததுடன் கேட்கும் தீவிர வைஷ்ணவர் “பைபிளில் பல இடஙகளில் நம்ம சரணாகதி தத்துவம் சொல்லியிருக்கு தெரியுமோ? சில இடஙகளில் ஆழ்வார் பாடல்க ளுக்கும் அதற்கும் வித்தியாசமே தெரிவதில்லை” பங்களூரில் குரான் முழுவதையும் படிக்கச் சொல்லிக் கேட்டது நினைவுக்கு வருகிறது.

ஆஸபத்திரி புது தினத்துக்குத் தயாராகிறது.மணி அடித்துவிட்டு சில்லரை கொடுக்காதவர்களை யெல்லாம் விரட்டுகிறார்கள். டாக்டர் ரவுண்ட்ஸ் வருகிறார். “இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி இருப்பார்னு சொல்லமுடியாது.இன்னிக்கு கொஞ்சம் இம்ப்ருவ்மெண்ட் தெரிகிறது. கன்னத்ததைத் தட்டி “நாக்கை நீட்டுங்கோ” மெல்ல நாக்கை நீட்டுகிறார்.

“பேர் சொல்லுங்கோ”

“சீனிவாசரா..”

“அஃபேஸியா அத்தரோ சிலிரோஸிஸ் .ஹி இஸ் மச் பெட்டர நௌ. டோண்ட் ஒர்ரி”

புதுசாக பல்மனரி இடீமா உன்று சேர்ந்து கொண்டு அவரை வீழ்த்தியது.

சென்ற மாதம் இருபத்திரண்டாம் தேதி பிற்பகல் மூன்று மணிக்கு இறந்து போனார் உடன் அப்போது இருந்த சித்தி “கண் வழியா உசிர் போச்சு “என்றாள். பம்பாயிலிருந்து தம்பி வரக் காத்திருந்து மூன்று பிள்ளைகளும் அவரைச் சுற்றி நின்று கொண்டு அவர் மார்பைக் கண்ணீரால் நனைத்தோம்..வீட்டுக்குக் கொண்டு வந்ததும் வாசலில் நெருப்புக் கொண்டுவைத்தார்கள்.

நண்பர்கள் வந்தார்கள். ஆஸபத்திரி வண்டியில் எடுத்துக் கொண்டு போய் “வீட்டில் ஒருவரில்லை வெட்டவெளியாச்சுதடி காட்டில் எரித்த நிலா கனவாச்சே கண்டதெல்லாம்” என்று முழுமையாக எரித்தோம்.

காலை எலும்புகளைப் பொறுக்கிச் சென்று பவானி போய்க் கரைத்தோம்.இந்து பேப்பரில் இன்ஸர்ஷன் கொடுத்தோம். “மாலை மலர்ல செய்தி வந்திருந்ததே பார்த்திங்களோ?”

உறவுக் காரர்கள் வந்தார்கள். சினிமாவுக்குப் போனார்கள். வாத்தியார் கருட புராணத்தின் பிரதியை என்னிடம் கொடுத்தார். பிராமண போஜனம் செய்விக்காதவர்களை யெல்லாம் சிரித்துக்கொணடே கொடுமைப் படுத்திக் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு நதியைக் கடப்பதற்கு கோதானம் இல்லையென்றால் ஒரு தேங்காய் கிஞசித்து ஹிரண்யம்! அப்பா மரணத்தைப் பற்றி ஒரு முறை சொன்னது ஞாபகம் வருகிறது “அது ஒரு முற்றுப் பள்ளி.வி ஸீஸ் டு எக்ஸிஸ்ட்.எபிக்யுரஸ் சொன்னதை மறுபடி படி”

“Death is nothing to us since so long as we exist death is not with us but when death comes. we do not exist”.

ஒன்பதாம் நாள் பத்தாம் நாள் பதினோராம் நாள்.. பிரேதத்தின் தாகமும் தாபமும் திருவதற்காக அதன் ரெப்ரசெண்டேடிவ்வாக வந்த “ஒத்தன்” என்னைப்பார்த்து சிரித்து “நீங்க எழுதின ரத்தத்தின் நிறம் சிவப்பு குங்குமத்தில நன்னா இருக்கு ஸார் அடுத்ததடவை ஒரு ஸோஷல் தீமா எடுதுண்டு எழுதுங்களேன்”

சேலம் கடைத் தெருவில் பத்தாறு வேஷ்டிகளுக்கும சொம்புகளுக்கும் அலைந்தோம். ங்கத்திலிருந்து ப்ரபந்த கோஷ்டி வந்து எங்கள் தலையில் பரிவட்டம் கட்டி நாலாயிரமும் ராமானுச நுத்தந்தாதியும சரம ஸ்லோகமும் சொல்லிவிட்டு”எனக்கினி வருத்தமில்லை” இரண்டு மணி பஸ் பிடித்துப் போனார்கள்.

“அவ்வளவு தாம்பா பிள்ளைகள்ளாம் சேர்ந்துண்டு அவரை பரமபதத்தில ஆசார்யன் திருவடி சேர்த்துட்டேள். இனி அந்த ஆத்மாவுக்கு ஒரு குறையும் இல்லை! மாசிய சோதம்பத்தை மட்டும் ஒழுங்கா பண்ணிடுங்கோ”.

சுபஸ்வீகாரம். எல்லோரும் பந்தி பந்தியாக சாப்பிடுகிறோம். எட்டணா தட்சணைக்காக வாசல் திண்ணையில் ஒன்பதுபேர் காலையிலிருந்து காத்திருக்கிறார்கள். காஷுவல்ட்டியில் எனக்கு ட்ரங்க் டெலிபோன் வருகிறது.தொடர் கதைக்கு டைட்டில் கேட்டு. பங்களூர் திரும்பி வருவதற்கு முன் அப்பாவின் அந்த கடைசிக் குறிப்பைப் பார்க்கிறேன். Ask Rangarajan about Bionics ஓவர்சீஸ் பாங்கில் மிசையில்லாத என்னைப் பார்தது சிரிப்பை கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்கிறார்கள். அப்பாவின் ‘எய்தர் ஆர் சர்வைவர்’ அக்கவுண்டில் அவர் தகனத்துககு ஆன செலவு முழுவதும் இருக்கி றது.

****

தேனிலவு

கார், அநாயாசமாக மலை ஏறிக்கொண்டு இருந்தது. நெட்டையான நாகலிங்க மரங்களின் உடம்பெல்லாம் பூத்திருந்தது. காற்றுடன் நீலகிரித் தைல வாசனை கலந்திருந்தது. போலீஸ்காரர்கள் கறுப்பாகக் கோட்டு அணிந்திருந்தார்கள். தொப்பி வைத்துக்கொண்டு மைசூர்த்தனத்துடன் சிற்சிலர் கூடைகளில் சிவப்பு சிவப்பாகப் பழம் விற்றார்கள்.

சோபனாவுக்கு நிறுத்தி வாங்க வேண்டும் போலிருந்தது. நிறுத்திப் பூப்பறிக்க வேண்டும் போலிருந்தது. அந்தத் துல்லியமான காற்றை நெஞ்சு பூரா நிரப்பிக்கொள்ள வேண்டும் போலிருந்தது.

காருக்குள் ரவி சோபனா என்று ஸ்டிக்கர் ஒட்டியிருந்தது. ரவி ஒரு கையால் கார் ஓட்டிக்கொண்டு இருந்தான். மற்றொரு கை...

அதை விலக்கி "ஏதாவது பாட்டுப் போடுங்களேன்" என்றாள் சோபனா. அவன் காருக்குள் இருந்த கேஸட் ரிக்கார்டரைத் தட்ட, கீச்சுக்குரல் ஒலித்தது.

'அட அபிஷ்ட்டு
நேக்கும் நோக்குமா கல்யாணம்
நீ ஒரு அம்மாஞ்சி
ஆத்திலே இருக்கா கண்ணாடி
பாத்துக்க உம் மூஞ்சி!'

"எப்படி பாட்டு?" என்று ரவி சிரித்தான்.

"வேற இல்லியா?"

"சிரி சிரி மாமா, இருக்கு" என்றான் ரவி.

"சம்சா! சம்சா! சம்சா!" என்றது டேப்.

"பெரிசா வெக்கட்டுமா?"

”நிறுத்திடுங்க.”

”புடிக்கலியா? உனக்கு சினிமா பாட்டு யார்து புடிக்கும். ஜானகியா? ஈஸ்வரியா? சுசீலாவா?”

”ஜோன் பேயஸ் இருக்கா?”

”அது யாரு? ஊட்டில கிடைக்கும்னா வாங்கிடலாம்.”

சோபனா வெளியே பார்த்தாள். மலைச்சரிவு குளிருக்குப் பச்சைப் போர்வை போர்த்திருந்தது. ராபர்ட் ஃப்ராஸ்ட்டின் கவிதை ஞாபகம் வந்தது.

சோபனாவுக்கு மலைப்பாக இருந்தது. இரண்டு தினங்களில் எத்தனை புதுசான சமாசாரங்கள், எத்தனை புதிய முகங்கள், உறவுகள்... ரவியின் இடக்கை மறுபடி அவளை நாடியது. அதை எடுத்து ஸ்டீயரிங் சக்கரத்தின் மேல் வைத்து ”ரெண்டு கையாலயும் ஓட்டுங்க” என்றாள்.

”நான் என்வி சாப்பிடுவேன். ஸ்மோக் பண்ணுவேன். தெரியுமில்ல?” என்றான் ரவி.

”தெரியும். சொன்னீங்களே!”

”ஆரம்பத்திலேயே இதை எல்லாம் சொல்லிடணும் பாரு! உனக்கு ஆட்சேபனை இல்லையே!”

”இல்லை.”

முட்டையைப் பார்த்தாலே குமட்டும் சோபனாவுக்கு.

”யூரோப் போனபோது கத்துக்கிட்டேன். அங்கெல்லாம் நான் வெஜ் இல்லாம உயிர் வாழ முடியாது.”

”எத்தனை நாள் போயிருந்தீங்க?”

”ஒரு வாரம். நாம ஃபாரின் போகலாமா சோபனா?”

”ம்.”

”எங்கே போகணும் சொல்லு? கம்பெனில எக்ஸ்போர்ட் பண்றதால எந்த கன்ட்ரி வேணும்னாலும் போகலாம்.”

”சரி, யோசிச்சுச் சொல்றேன்.”

மலை ஏறிக் கொஞ்சம் இறங்கிச் சரிந்து வளைந்து சென்ற பாதையில் உயர்ந்து தனியாகத் தெரிந்தது அந்த ஓட்டல்.

”ஏ.ஸி. ரூம் இல்லீங்களா?”

”ஊட்டில ஏ.ஸி. ரூம் எதுக் குங்க. ஊரே ஏ.ஸிதானே!”

”சரி, இருக்கிறதுக்குள்ளேயே டூலக்ஸ் பார்த்துக் கொடுங்க. ரெண்டு பேப்பர் ரோஸ்ட் அனுப்பிடுங்க.”

”டிபன் செக் ஷன் ஆரம்பிக்கிறதுக்கு மூணரை ஆயிடுங்க.” அலுத்துக்கொண்டான். ”க்ளார்க்ஸ் போயிரலாமா சோபனா?”

”இங்கேயே பரவாயில்லை” என்றாள்.

”உனக்காகப் போனாப்போறதுன்னு இந்த ஓட்டல்ல இருக் கலாம்!”

அறைக்குள் புதிய பெயின்ட் வாசனை அடித்தது. கீழே கயிற்றுப் பாய் விரித்து, சுவர்களில் மர யானை முகங்கள் கோட் ஸ்டாண்டுகளாக நின்றன. ஒரு மஹா மஹா படுக்கை காத்திருந்தது. அதில் படுத்துக்கொண்டு ரவி, ”வா சோபனா” என்றான். சோபனா ஜன்னல் கதவைத் திறந்து வெளியே பார்த்தாள்.

”ரவி, இங்க பாருங்க. ப்யூட்டிஃபுல்!”

”வா சோபனா!”

”ரவி, இங்கேருந்து கீழே பெரிய குதிரைப் பந்தய மைதானம் தெரியுது. குதிரையெல்லாம் சுத்திச் சுத்தி வந்து நடை பழகுது. ஊர் பூராத் தெரியுது. அங்கங்கே அட்டைப்பெட்டி சொருகிச் சொருகி வெச்சாப்பல வீடுகள்.”

”அட்டைப்பெட்டி கிடக்கட்டும் சோபனா. இப்ப வர்றியா இல்லியா நீ?”

”ஏரிக்குப் போகலாம் ரவி!”

”க்ளிக்!” ஆஸாஹி பென்டாக்ஸ் அவளை நோக்கிக் கண் சிமிட்டியது. விசைப் படகில் ஏரியில் அவளை அவன் அணைத்துக்கொண்டு இருக்க, எதிரே படகுக்காரன் எடுத்த ‘க்ளிக்’ ”ஆட்டோவைப் போட்டுட்டாப் போதும். யார் வேணா எடுக்கலாம். நாலாயிரம் ரூபா. லென்ஸே நாலாயிரம் ஆச்சு!” ரவி அதை வாங்கிக்கொண்டு அதன் கழுத்தைப் பல கோணங்களில் திருகி, சோபனாவை வரிசையாக க்ளிக் க்ளிக் என்று தட்டிக் கொண்டு இருந்தான்.

”வீட்ல ஒரு போலராய்ட் இருக்கு. ஃபிலிம் ஆப்படலை!”

சோபனா தன் விரல்களால் நீரைத் தொட்டுப் பார்த்தாள். சில்லென்று எதிர்பாராத குளிர்ச்சி.

”கொஞ்சம் பெரிய எடம் போலிருக்கே! நமக்குச் சரிப்பட்டு வருமா?”

”பையன் பொண்ணைப் பார்த்துப் புடிச்சுப்போய் அவனே கேக்கறான். ரொம்பப் பணக் காராடி அவா!”

”நம்ம சோபனாவுக்கு அடிச்ச அதிர்ஷ்டத்தைப் பார்த்திங்களா! இருந்தாலும் அவளை ஒரு வார்த்தை கேட்டுர்றது நல்லதில்லையா?”

”பால் பாயசம் சாப்பிடறதுக்குச் சம்மதம் கேக்கணுமா என்ன? என்னடி சோபனா?”

”……..”

”எப்பவாவது அவ வாயைத் திறந்து பதில் சொல்லியிருக்காளா?”

”அவங்க வீட்டிலே மூணு கார் இருக்குக்கா!”

”க்ளிக். ஏ.எஸ்.ஏ.நம்பர் செட் பண்ணிட்டாப் போதும். பாக்கி எல்லாத்தையும் கேமராவே பாத்துக்கும். உள்ளுக்குள்ள எல்லாமே எலெக்ட்ரிக் வேலை… இதை ரிப்பேர் பண்றதுக்கு ஜப்பான்லதான்

முடியும்! ரூமுக்குப் போக லாமா சோபனா?”

”இல்லை. பொட்டானிக்கல் கார்டன் போகலாம்.”

புல்வெளியில் புரள வேண்டும் போல இருந்தது. சரிவில் சின்னக் குழந்தை போல உருள வேண்டும் போல இருந்தது. ஒரே மாதிரி உடை அணிந்து ஏறக்குறைய ஒரே வயசுள்ள குழந்தைகள் வரிசையாக உட்கார்ந்திருக்க, அவர்களுடன் தானும் உட்கார்ந்து பிஸ்கட்டோ ஏதோ சாப்பிட வேண்டும் போல இருந்தது.

”ரூமுக்குப் போகலாமா சோபனா?”

”இப்பவேயா?”

”ஆரம்பிச்சதை முடிச்சுட வேண்டாம்?”

”இந்தப் பூக்கள் எல்லாம் எவ்வளவு நல்லா இருக்கு?”

”நிக்கறயா, ஒரு க்ளிக் எடுத் துடறேன்.”

”கொஞ்ச நேரம் நடக்கலாமே!”

”உன் இஷ்டம். நீ சொன்னா சரி” என்று கடிகாரத்தைப் பார்த் தான்.

சரியாக ஒரு நிமிஷம் நடந்ததும், ”நடந்தது போதுமா?” என்றான்.

”எங்கே போகலாம்?”

”காருக்குப் போய் கேஸட் போட்டுக் கேட்கலாம். அப்புறம் ரூம்ல போய் டிபன் சாப்பிட்டுட்டு ராத்திரி ஃபிலிம் போகலாம்.”

”’லட்சுமி’ ஓடுது. நான் இன்னும் பார்க்கலை. நீ பாத்தியோ?”

”என்ன?”

”லட்சுமி; ஒரு குரங்கு டாப்ஸா ஆக்ட் பண்ணியிருக்காம்!”

”அப்படியா?”

”ஒரு ஸாங் நல்லா இருக்குன்னு எழுதியிருந்தான்.”

”அப்படியா? ரவி இங்க கொஞ்ச நேரம் உட்காரலாமே.”

”உக்காந்து போட்டோ எடுக்கலாமா?”

”இல்லை, படிக்கலாம்.”

பைக்குள்ளிருந்து அவள் கலீல் கிப்ரானின் ‘A Jear and a Smile‘ என்கிற புத்தகத்தை எடுத்தாள். அவன் ஒரு வாரப் பத்திரிகையை எடுத்து சிகரெட் பற்ற வைத்துக்கொண்டான்.

I freed myself yesterday from the clamour of the city and walked in the quiet fields until I gained the heights which nature had clothed in her choicest garments.

”இதோ இப்படித்தான்” என்று இளவரசன் தன் கூர்வாளை உறையிலிருந்து உருவி சிறைக்கூடத்தின் தரைப்பாகத்தில் சில இடங்களை வாள்முனையால் தட்டிப் பார்த்தான்…”

”மனசுக்குள்ள படிங்க?”

”இந்தத் தொடர்கதை படிக்கறியோ? டாப்பா இருக்குது.”

”இல்லை.”

”ரஜினி மறுபடி நடிக்க வந்துட்டான், தெரியுமா?”

”அப்படியா?”

Sleep then, my child, for your father looks down upon us from eternal pastures.

”தீர சாகசம் புரிந்த வீர இளைஞனே வருக...”

”ரெண்டு ஜாதகமும் என்னமாப் பொருந்தியிருக்குங்கறேள்!”

”சோபனா வாயேன். ரூமுக்குப் போயிரலாம். எத்தனை நேரம் பூவையே பாத்துக்கிட்டு... புஸ்தகம் படிச்சுக்கிட்டு... ரூமுக்கு ஒரு நாளைக்கு நூறு ரூபா கொடுத்துட்டு... கொஞ்ச நேரமாவது இருக்கலாமே!”

அறையில் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக்கொண்டான் ரவி.

”என் மீசை உனக்குப் பிடிச்சிருக்கா?”

”ம்.”

”ஸ்டெப் கட்?”

”ம்?”

”இதுக்குன்னே சலூன்ல அஞ்சு ரூபா வாங்கறான்.”

”அப்படியா?”

ரவி தன் உடம்பெல்லாம் பர்ஃப்யூம் அடித்துக்கொண்டான்.

”புடிச்சிருக்கில்ல!”

”ம்!”

”இந்தா, இதை மாத்திக்கிட்டு வந்துரு! பாரிஸ்ல வாங்கினது இது, போ, வெக்கப்படாதே. கட்டின புருசன்கிட்ட என்ன வெக்கம்!”

சோபனா பாத்ரூம் பக்கம் சென்றாள்.

ரவி தன் சட்டையைக் கழற்றினான்.

”சோபனா! சொர்க்கம்னா இதுதான் இல்லையா? இந்த மாதிரி க்ளைமேட்! இந்த மாதிரி ரூம்! இந்த மாதிரி மனைவி! சோபனா!

‘நினைத்தாலே இனிக்கும்‘ கேட்டிருக்கியா?”

”சோபனா...”

”சோபனா...”

ரவி சற்றுக் கவலைப்பட்டு பாத்ரூம் கதவைத் தட்டினான்.

கதவு திறந்துகொண்டது.

சோபனா தரையில் உட்கார்ந்துகொண்டு விசித்து விசித்து அழுது கொண்டு இருந்தாள்.

மலை வாசஸ்தலமான உதக மண்டலத்துக்குக் கல்யாண சீஸனின்போது தினம் நூறு ஜோடிகள் தேனிலவுக்கு வருகிறார ்கள்!

****

நிதர்சனம்

திரும்பி வந்துகொண்டு இருந்தபோது, ஆஃபீஸர்ஸ் கிளப்பை அடுத்து இருந்த ஹாஸ்டல் வாசலில் கூட்டமாக இருந்தது. கம்பெனி லாரி நின்றிருந்தது. செக்யூரிட்டி ஆசாமிகள் சிகரெட் புகைத்தபடி அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். பேசாமல் வீட்டுக்குப் போயிருக்கலாம்.

ஏதாவது திருட்டாக இருக்கலாம் என்று அருகே சென்று விசாரித்தேன்.

"மேலே போய்ப் பாருங்க! மாடில வலது பக்கம் கடைசி ரூம்."

தயக்கத்துடன் மாடி ஏறினேன். எதிர்பார்த்ததை மனசு விரும்பவில்லை. உடம்பு பூரா ஒரு தரிசனத்துக்குத் தயாராகிக்கொண்டு இருக்க, படிப்படியாக இஷ்டமின்றி ஒருவிதமான குரூர ஆர்வத்துடன் மேலே சென்றேன். காரிடாரில் மௌனமாகச் சிலர் நின்றிருந்தார்கள். ஓரிரண்டு பரிச்சய முகங்கள். எதையோ யாரோ செய்வதற்கு எல்லாரும் காத்திருந்தார்கள் போலத் தோன்றினார்கள்.

"எப்பப்பா?" என்றேன் அதிர்ந்து.கடைசி அறை வாசலில் அவனை இறக்கிப் படுக்க வைத்திருந்தார்கள். முகம் கறுப்பாக இருந்தது. கழுத்தில் படுக்கைக் கயிறு இறுக்கியிருந்த இடத்தில் நீலம் பாரித்திருந்தது. கன்னங்கள் சற்று உப்பியிருந்தன. கண்கள் சொருகிப்போய் வெண்ணிற விழிகள் மட்டும் தெரிந்தன. கட்டம் போட்ட சட்டையும் டெரிகாட் பேன்ட்டும் அணிந்திருந்தான். கரிய தலைமயிர். கையில் கட்டியிருந்த டிஜிட்டல் கடிகாரம் இன்னும் உயிரோடு இருந்தது.

"ரெண்டு நாளாயிருக்கும்போலத் தோணுது. இன்னிக்குத்தான் கதவை உடைச்சுத் திறந்து பார்த்திருக்காங்க!"

நான் தயக்கத்துடன் கால்மாட்டுக்குச் சென்று அவன் முகத்தை நேராகப் பார்த்தேன். "மை காட்! நான் இவனைச் சந்தித்திருக்கிறேன். இவனிடம் பேசியிருக்கிறேன்."

மத்தியானம் இரண்டு மணிக்கு (சென்ற வாரம் என்று ஞாபகம்) அவன் என் அறைக்குள் கதவைத் தட்டாமல் நுழைந்தான். அன்றைக்குக்

கொடுத்தாக வேண்டிய அவசர ரிப்போர்ட் டில் இருந்தேன்.

”வாட் டு யூ வான்ட்?” என்றேன் கோபத்துடன்.

”உங்ககிட்ட பேசணும் சார்” என்றான் சன்னமான குரலில்.

”வெய்ட் அவுட்ஸைட், ஐ’ல் கால் யூ.”

”அஞ்சு நிமிஷம் சார்.”

”ஐ ஸெட் வெய்ட்!”

அவனை நான் உடனே கவனித்திருக்க வேண்டுமோ? காத்திரு என்று சொன்னது தப்போ?

அரை மணிக்கு அப்புறம் அவனை மறந்தே போய்விட்டேன். மறுபடி எட்டிப்பார்த்து ”கேன் ஐ ஸி யூ நௌ?”

”ஆல்ரைட், அஞ்சு நிமிஷம்தான்” என்றேன். உள்ளே வந்து என்னைச் சற்று நேரம் பார்த்தான்.

”சார், என் பெயர் தர்மராஜன். எனக்கு உங்கள் டிபார்ட்மென்ட்டுக்கு மாற்றல் வேண்டும்.”

”இப்ப எந்த டிபார்ட்மென்ட்டில் இருக்கிறாய்?”

”டி.பியில்.”

”அங்கே என்ன செய்கிறாய்?”

”ப்ரொகிராமிங்.”

”எதற்காக மாற்றல் வேண்டும் என்று கேட்கிறாய்?”

”அங்கே எனக்குப் பிடிக்கவில்லை.”

”என்ன பிடிக்கவில்லை?”

”வேலை.”

”ஏன்?”

”அந்த வேலை என் திறமைக்குச் சவாலாக இல்லை.”

அந்த நிமிஷமே அவன் வேறு பட்டவன் என்று உணர்ந்திருக்க வேண்டுமோ?

”நீ என்ன படித்திருக்கிறாய்?”

”படிப்பு முக்கியமானால், நான் பி டெக்., கம்ப்யூட்டர் சயின்ஸ்.”

”கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்திருக்கிறாய். ப்ரொகிராமிங் செய்கிறாய். சரியான வேலையில்தானே இருக்கிறாய்?”

”அது எனக்குச் சரியான வேலையில்லை. மாடசாமிக்கும் முனுசாமிக்கும் சம்பளம், பிடிப்பு எல்லாவற்றையும் கணக்கிட கோபால் ப்ரொகிராம் எழுதுவது என் திறமைக்குத் தாழ்மையான செயலாக, என் திறமையை அவமானப்படுத்துவதாகப்படுகிறது. எனக்கு உரிய வேலை உங்கள் டிபார்ட்மென்ட்டில்இருக் கும் என்று தோன்றுகிறது.”

அவன் என் மேஜை மேல் பொருள்களை ஆராய்ந்தான். நகத்தைக் கடித்தான். ”கேன் ஐ ஸ்மோக்?” என்றான். நான் உயர் அதிகாரி. என் ஆபீஸ் வம்சாவளியில் எனக்கு அதி ஜூனியர், ஜூனியர்கள் சாதாரணமாக என் முன் சிகரெட் பிடிப்பதில்லை.

அவன், என் அனுமதிக்குக் காத்திராமல் பற்றவைக்கத் துவங்கியது, எனக்கு அவன் மேல் வெறுப்பை ஏற்படுத்தியது. நான்கு தீக்குச்சிகள் செலவு செய்து, பற்ற வைப்பதை மிகச் சிக்கலான காரியமாக்கி, மிக ஆழமாகப் புகையை இழுத்து வெளிவிட்டான். பிடிவாதக்காரனை நிமிர்ந்து பார்த்தேன். சிறிய உடலமைப்பு. பிரதானமான மூக்கு. சற்றுத் தூக்கலான பற்கள். உயர்ந்த ரகத் துணியில் சட்டை அணிந்திருந்தான். கண்கள் என்னைச் சந்திக்க மறுத்து குத்துமதிப்பாக என் சட்டையின் இரண்டாவது பட்டனில் பதிந்திருந்தன.

”சார், ஒரு கம்ப்யூட்டரை டிஸைன் பண்ற அளவுக்கு என்னிடம் திறமை

இருக்கிறது” என்றான்.

”என் டிபார்ட்மென்ட்டுக்கு அந்தத் திறமை தேவையில்லை. கம்ப்யூட்டரை உபயோகப்படுத் தும் திறமை போதும்.”

”ட்டிரிங் மெஷின் பற்றிய என் கட்டுரையை நீங்கள் வாசிக்க வேண்டும்.”

”அதெல்லாம் கம்ப்யூட்டர் வேதாந்தம். எனக்குத் தேவை நடைமுறை அனுபவம்.”

”உங்கள் டிபார்ட்மென்ட் டுக்கே பெருமை தரக்கூடியதாகச் சில விஷயங்களைச் செய்துகாட்டு வேன். எனக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்.”

”என் டிபார்ட்மென்ட்டில் இப்போது வேகன்ஸி இல்லை.”

”சமீபத்தில் சந்திரகுமார்னு ஒருத்தனை எடுத்துக்கொண்டீர்களே?”

எனக்கு உறுத்தியது. ”சந்திரகுமார் கேஸ் வேற.”

”எப்படி?”

”எப்படி என்று விஸ்தாரமாகச் சொல்ல எனக்குச் சமயமில்லை.”

அவன் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

”நீங்கள் என்னை ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் வந்தேன்.”

”வேகன்ஸி இல்லை.”

”வேகன்ஸி எப்போது வரும்?”

”ஆறு மாசம் ஆகும்.”

”நான் என் வேகன்ஸியுடன் டிரான்ஸ்ஃபர் வாங்கிக்கொண்டு வந்தால்

எடுத்துக்கொள்வீர்களா?”

”லுக் ஹியர், யங் மேன்! எல்லோருக்கும் அவர்கள் மன உசிதப்படி வேலை அமைவது இல்லை. இந்தத் தொழிற்சாலை ஒரு மிகப் பெரிய மெஷின். இதில் நானும் நீயும் சின்னப் பல் சக்கரங்கள். விதித்த நியதிப்படி நாமிருவரும் சுழன்றாக வேண்டும். நீ இப்போது இருக்கும் வேலையிலேயே தொழிற்சாலைக்கு உபயோகமாக எவ்வளவோ செய்யலாம். அதை யோசித்துப்பார்த் தாயா?”

அவன் யோசிக்கவில்லை.”ஒரே தொழிற்சாலை; ஒரு டிபார்ட் மென்ட்டிலிருந்து இன்னொரு டிபார்ட்மென்ட்டுக்கு மாற்றிக் கேட்கிறேன். எனக்குக் கிடைப்பது உபதேசம்!” என்றான்.

”ஆல்ரைட்! யூ மே கோ நௌ!”

”உங்கள் மூக்கின் மேல் கறுப்பாக ஏதோ ஒட்டிக்கொண்டுஇருக் கிறது” என்றான்.

நான் தன்னுணர்வுடன் மூக்கைத் தடவிக்கொண்டேன்.

”பத்து ரூபாய்க்குச் சில்லறை இருக்குமா?” என்றான்.

”வாட் டு யூ மீன்?”

”நாம் எல்லோரும் இந்த உலகத்தை ஆள வேண்டிய நேரம் வரப்போகிறது” என்றான்.

அதே சமயம், டெலிபோன் மணி அடித்து எம்.டி. என்னைக் கூப்பிட்டதால் அவனுடைய அந்த கடைசி மூன்று வாக்கியங்களின் சமகால அபத்தத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் அப்போதே அவனை மறந்து போனேன்.

மறுதினம் டி.பி. டிபார்ட்மென்ட் கோவர்த்தனை கான்டீனில் சந்தித்தேன். ஏதோ பேச்சை ஆரம்பிப்பதற்காக ”தர்மராஜன்னு ஒரு பையன்...”

”எ க்ராக். அவன் உங்ககிட்டயும் வந்துட்டானா?”

”ம். நேற்று வந்து டிரான்ஸ்ஃபர் கேட்டான்.”

”சரிதான். என் டிபார்ட்மென்ட்டுக்கு வந்து ஒரு மாசம்கூட ஆகலை. இதுவரைக்கும் மூணு டிபார்ட்மென்ட் மாறி இருக்கிறான். முதல்ல ஆர் அண்ட் டியில் இருந்தான். அப்புறம் ஹெட் ஆபீஸ் போனான், மேனேஜ்மென்ட் சர்வீசுக்கு. அப்புறம் டெக்னாலஜி டெவலப்மென்ட். பூனைக் குட்டியை மாத்தற மாதிரி...”

”பையன் ஒரு மாதிரி நெர்வஸா இருந்தான்.”

”இல்லை, திமிர். கொடுத்த வேலையை நல்லாவே செய்துடறான். அப்புறம் மேஜை மேல் காலை நீட்டிண்டு ஃபிரெஞ்சு புஸ்தகம் படிப்பான். எதிர்த்தாப்பல ஒரு பெண் உட்கார்ந்திருந்தா. அவளையே வெச்ச கண் வாங்காம ஒரு மணி நேரம் பார்த்துண்டு இருந்தானாம். அப்புறம் ”போய் காலை அலம்பிண்டு வா” என்றானாம். அந்தப் பெண் உடனே வேற இடம் கேட்டு மாத்திண்டு போயிடுத்து. வேலையில் கெட்டிக்காரன்தான். ஆனா, ரெஸ்ட்லஸ். நீ வேணா எடுத்துக்கறியா, தாராளமா போஸ்ட்டோட டிரான்ஸ்ஃபர் பண்ணி அனுப்பறேன்.”

”சேச்சே, எனக்கு வேண்டாம்பா.”

அடுத்த முறை அவனை ஆபீஸர்ஸ் கிளப் மெஸ்ஸில் பார்த்தேன். ஒரு ஓரத்தில் காபிக் கோப்பை, சிகரெட் சகிதமாக ‘டைம்’ படித்துக்கொண்டு இருந்தான்.

என்னைக் கண்டவுடன் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு அடுத்த அறைக்குச் சென்றான்.

அவ்வளவுதான் அவனுக்கும் எனக்கும் ஏற்பட்ட சம்பந்தங்கள். இப்போது அவனைத் தரையில் கிடத்திப் பார்க்கிறேன்.

செக்யூரிட்டி ஆபீஸர் என்னை அடையாளம் கண்டுகொண்டு அருகில் வந்தார். ”ரூம் உள்ளே பூட்டியிருந்தது, சார். கதவைத் திறந்தோம். நீங்க அவன் ரூமைப் பார்க்க வேண்டும்.”

”ஏதாவது கடிதம் எழுதி வெச்சிருந்தானா?”

”இல்லை.”

”காதல் கீதல் என்று...”

”ம்ஹூம்! அப்படி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.”

”ஆஸ்பிடலில் அவன் ரிக்கார்டைப் பார்த்தீர்களா? தீராத வயிற்றுவலி என்று ஏதாவது?”

”இல்லை.”

தயக்கத்துடன் அவனைத் தாண்டி அறைக்குள் நுழைந்தேன்.

அறையில் மேல்நாட்டுச் சாதனங்கள் அத்தனையும் இருந்தன. ரேடியோ, கேசட் ரிக்கார்ட் பிளேயர், ஸ்டீரியோ, சுவர்களில் வண்ண வண்ணப் படங்களில் காட்டுக் குதிரைகள் ஓடின. ஏராளமாகப் புத்தகங்கள். திறந்திருந்த மேஜையின் இழுப்பறையில் நூறு ரூபாய் நோட்டுக்கள். பிரகாசமான விளக்குகள். புதிய மின் விசிறி.

”போனவாரம்தான் வாங்கியிருக்கான் சார். பில் கிடக்குது.”

அவன் தொங்கின விட்டத்து வளையத்தைப் பார்த்தேன்.

”கட்டில்ல இருந்து இரண்டு இன்ச் தள்ளி அவன் கால் மட்டம் இருந்தது. எந்த நேரமும் அவன் தற்கொலையை ரத்து பண்ணி கட்டில்ல ஏறி நின்றிருக்க முடியும்.”

அறை முழுவதும் பார்த்தேன். ஏதாவது ஒரு பெண், ஏதாவது ஒரு காதல் கடிதம், ஏதாவது ஒரு வியாதி... ஏதாவது ஒரு சம்பிரதாயமான காரணம்?

ஜன்னலுக்கு வெளியே பார்த்தேன். பக்கத்து கிராமங்களில் செய்தி பரவி, அவசரஅவசரமாகப் பார்த்துவிட்டுப் போக வந்துகொண்டு இருந்தார்கள். பெண்கள் தலையில் செவ்வந்திப் பூ வைத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டுஇருந்தார்கள்.

”அவன் தற்கொலைக்கு நானா காரணம்! சே அபத்தம்.”

வீட்டுக்குச் செல்லும்போது என்னை அறியாமல் என் விரல் மூக்கை அழுந்த அழுந்தத் தேய ்த்தது.

****

எப்படியும் வாழலாம்!

”உங்களுக்கு வயசு எத்தனை?”

”செரியாச் சொல்ல முடியாதுய்யா!”

”உங்க அப்பாஅம்மா?”

”அவங்கதான் இல்லியே... பூட்டாங்களே... இருந்தாங்கன்னா விசாரிச்சு எத்தனை வயசுன்னு சொல்லலாம்.”

”உங்க சொந்த ஊரு?”

”கோலாருக்குப் பக்கத்துல கொடுமூர்னு ஒரு கிராமம்.”

”தொழில்?”

” ‘....’ன்னு சொன்னா பத்திரிகைல போடுவாங்களா, போட மாட்டாங்களா?”

”போட மாட்டாங்க!”

”அப்ப இரவு ராணின்னு வெச்சுக்க. என்னைப் பொறுத்தவரையிலும் பகல்லயும் நான் ராணிதான்.”

”அப்படியா?”

”என் பேரே ராணிதானே!”

”எழுதப் படிக்கத் தெரியுமா உங்களுக்கு?”

”அதெல்லாம் நல்லா வராதும்மா... எனக்கு வந்த ஒரே கலை அதைப்பத்திதான்... கொஞ்ச நேரம் களிச்சுச் சொல்லப் போறேனே, இருட்டினதும்! என்ன சிரிக்கிறே?”

”உங்களுக்கு வேற எதுவுமே தெரியாதா? யோசிச்சுப்பாருங்க.”

”இதப் பாரு, உங்களுக்கு கிங்களுக்கு எல்லாம் வேணாம். ஒனக்குன்னு சொல்லேன். இன்னிக்கிருந்தா உனக்கென்ன வயசிருக்கும்? நீ, நான்னு கூப்பிடு, பரவாயில்லை... என்னை நீங்க, போங்கன்னு யாரும் கூப்பிடறதே கிடயாது. கூப்ட்டா ஒரு மாரி... க்குள்ள துருதுருங்குது, வேணாம்.”

”சரி உனக்கு வேற ஏதும் தெரியாதா?”

”சின்னப் புள்ளைல போடைஸ்கூல்ல ஆண்டு விளாவிலே பாரதி பாட்டுக்கு டான்ஸ் பண்ணிருக்கேன். ஊதுவோம் ஒதுவோம்னு வருமே அதான்! காலை மடக்கிட்டு, கை தூக்கிக்கிட்டு, சங்கு மாரி கை வெச்சிக்கிட்டு பக்கவாட்டில உக்காந்துகிட்டு ஆடினப்போ, எல்லோரும் உய்யுன்னு விசிலடிச்சாங்க. அப்ப எதுக்குன்னு புரியலை. இப்பப் புரியுது.”

”என்ன புரிஞ்சுது?”

”எனக்கு அப்பவே இடுப்பு பெரிசு!”

”அப்புறம் நடனம் ஆடலியா?”

”ஆ, அத அப்பவே நிறுத்திட்டு... எல்லாம் மறந்துபோச்சு, அந்தப் பாட்டும் பளசாப்போச்சு, எப்பனாச்சியும் சிலோன்ல வெப்பாங்க, அளுகையா வரும்.”

”ஏன்?”

”அதுவரைக்கும் நான் பூ கணக்கா இருந்தேன். அப்பறம்தான் எல்லாமே தப்பா நடந்துபோச்சு.”

”அப்ப நீங்க.... நீ இந்தத் தொழிலுக்கு வந்ததுக்கு வறுமைதான் காரணம்னு சொல்லலாமா?”

”இல்லை.”

”உங்கப்பாம்மா இறந்துபோயி ஆதரவு இல்லாததாலா?”

”அதுவும் இல்லே. அவங்க எறந்துபோனதே போன வருசந்தானே!”

”பின்ன, என்ன காரணம்?”

”காரணம்னு ஒண்ணு இருக்கணுமா என்ன?”

”அப்படித்தான்!”

”அப்படிப் பாக்கப்போனா, என் திமிர்தான் காரணம்னு சொல்லலாம்.”

”திமிரா?”

”ஆமா, திமிர்தான். அந்தாளைப் பாத்து சிரிச்சிருக்க வேணாமில்ல?”

”எந்த ஆள்?”

”ஏதோ ஆளு! இப்ப அவன் பேர்கூட மறந்துபோச்சு, அப்ப கிணத்தாண்டை வந்து சாது கணக்காப் பார்ப்பான். கோயிலுக்கு விசுவாசமா வருவான். ஏதோ காதல் மாரின்னு வெச்சுக்கயேன்...”

”அதுக்கு உங்கப்பாம்மா எதிர்ப்பு தெரிவிச்சாங்களா?”

”ஒரு ....ம் இல்லை.”

”கல்யாணம் செய்துக்கறதா சத்தியம் பண்ணினானா?”

”அதும் இல்லியே. கல்யாணம் பண்ணிக்கறதா கூட்டிட்டுப் போறதாத்தான் இருந்தான். நாந்தான் அதுக்குள்ள...”

”அதுக்குள்ள?”

”அதுக்குள்ள வேற ஆளைப் பாத்துக்கிட்டேன். ரைஸ் மில் வெச்சிருந்தான். களுத்தில் புலி நகம் போட்டு சங்கிலி தொங்கவிட்டிருந்தான். டூரிங் கொட்டாய் வெச்சிருந்தான். அங்க அளைச்சிக்கிட்டுப் போயி பச்சையா ரூம்பு இருக்கும் பாரு, அங்க தீ

பக்கெட்டுக்குப் பக்கத்தில் உக்காத்திவெச்சுருவான். சோடா வாங்கிக் கொடுப்பான். வயக்காட்டுக்குக் கூட்டிட்டுப்போய் நெலா வெளிச்சத்தில் ரீல் போட்டுக் காட்டினதெல்லாத்துக்கும் மாத்தா நோட்டு கொடுப்பான்.”

”அந்த மனிதனுடன் ஸ்திரமா எதும் சினேகிதம் வெச்சிக்க விருப்பமில்லியா உனக்கு?”

”இல்லியே... அவன் பெண்டாட்டி வந்து சத்தமா அளுது. ஜாய்ட்டில இருந்து தாலியை எடுத்துக் காட்டி, ‘என்னைக் காப்பாத்து என் புருசனை எங்கிட்டருந்து பிரிச்சுராத’ன்னு சக்களத்தி மாதிரிப் பேச, இன்னடாதுன்னு ஆயிருச்சு. நம்மால ஒரு குடும்பம் நாசமாவுறது வேண்டான்னு... கோலார்ல டிராமா போட்டாங்க. அதுல, ‘பார்ட்டு எடுத்துக்கறயா?’ன்னு நடராசன்னு ஒரு ஆளு கேட்டாரு. கதை வசனம் எல்லாம் பொம்பாடா எளுதுவாரு. என்னை வெச்சு பாட்டு எளுதி, ஆர்மோனியத்தில் நொய் நொய்னு பாடிக் காட்டினாரு. ஜார்செட்டில சேலை எடுத்துக் கொடுத்து, ரொம்ப மரியாதையாத்தான் வெச்சுக்கிட்டிருந்தாரு. ஊரூராப் போயி நாடகம் போட்டோம். எனக்கு வில்லி பார்ட்டுதான்கொடுப் பாங்க. வசனம் அவ்வளவு பேச வராதுன்னுட்டு. குலுக்கி ஒரு ஆட்டம் காட்டுவேன். விசில் அடிப்பாங்க.”

”நடராசு என்பவரோடு நீ ஒரு ஸ்திர வாழ்க்கைஅமைச்சுக் கலையா?”

”அதுக்குள்ளதான் அந்தாளு போய்ட்டாரே?”

”எங்க...?”

”செத்துப்போய்ட்டார், ஆஸ்பத்திரில ரெண்டு நாள் மயக்கமா இருந்துட்டு.”

”வருத்தப்பட்டியா?”

”வருத்தப்பட்டு முடிக்கிறதுக்குள்ளே வீரராகவன்னு ஒரு எண்ணெய் மண்டிக்காரரு வந்துட்டாரு!”

”எப்ப பங்களூர் வந்தே?”

”பாத்தியா, உனக்கே கசப்பா இருக்கு, இல்லியா?”

”அப்படி இல்லை. நீ இந்த வாழ்க்கைக்கு வந்த காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாது போல இருக்கு...”

”அதான் சொன்னேனே, திமிர்தான். பேசாம மாமனையோ மச்சானையோ கல்யாணம் கட்டிக்கிட்டு இந்த வருசத்துக்கு எட்டு பெத்துப் போட்டிருக்கலாம். அப்படிச் செய்யலை. ஏதோ தப்புய்யா என்கிட்ட! புத்தி ஒரு நிலை இருக்காது. ஒரு ஓட்டல்ல போனா நாலு பேர் பாக்குறாங்கன்னு ஃபேமிலி ரூமுக்குள்ற நுளைய மாட்டேன். பாக்கட்டுமேன்னு முன்னாலதான், தனியாத்தான் காப்பி சாப்பிடுவேன். ஆம்பிளைங்கள்லாம் பாக்கறப்போ, எனக்கு சிரிப்பாத்தான் வரும். எங்கிட்ட அசட்டுத்தனமா என்னமோ குடிச்ச மாடு மாதிரி வழியாதவங்களே இல்லை. இப்ப நீயே வந்திருக்கில்ல... இப்ப உன்னை, பேனாவைத் தூக்கி எறிஞ்சுப்புட்டு அப்புறம் பாத்துக்கலாம்னு சட்டையைக் களட்டவெக்கட்டுமா?”

”வேண்டாம். என் கேள்விக்கெல்லாம் பதில் சொன்னாப் போதும்!”

”கல்யாணம் ஆயிருச்சாய்யா உனக்கு!”

”பேட்டி உன்னைப்பத்தினது!”

”கல்யாணம் ஆனவங்கதான் ரொம்ப பேர் வராங்க. அது ஏன்யா? பொண்டாட்டிகிட்ட இருக்கறதுதானே எங்கிட்டயும் இருக்குது! அது இன்னா புரியலியே..?”

”வர்றவங்கூட பேசுவியா?”

”நான் ஏன் பேசணும்? அவங்களே பேசுவாங்க. பெரும்பாலும் குடிச்சிருப்பாங்க. தொரதொரன்னு அவங்க வாழ்க்கைய வாந்தி எடுத்துருவாங்க.”

”உன்னைப் பத்தி யாரும் கேட்பாங்களா?”

”கேட்பாங்க. இப்ப நீ கேட்ட பாரு, அந்த மாதிரி ‘ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தே?’னு சில பேர் கேட்பாங்க. பெரும்பாலும் சின்னப்

பசங்க. என் தம்பி கணக்கா வர்றாங்களே, தாடி வெச்சிக்கிட்டு சூடண்சுங்க, அவங்கதான் கேட்பாங்க. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு கத சொல்வேன். தங்கச்சியைப் படிக்க வெக்கறம்பேன் எங்கப்பாவுக்கு ஒரு கால் விளங்காது. அல்லாங்காட்டி அம்மாளுக்குக் கண்ணு ரெண்டும் குருடு...”

”அப்படின்னா, நீ எங்கிட்ட சொல்லறதுகூட கதைதானா?”

”சேச்சே.... இது பேப்பர்ல போடறதாச்சே! பேப்பர்ல பொய் சொல்வாங்களா? ஏன்யா, போட்டோ உண்டுல்ல?”

”போட்டா போச்சு!”

”போட்டோவைப் பார்த்து ஒரு பணக்காரன், தியாகி என்னைய முளுசா கல்யாணம் பண்ணிக்க வந்துரலாமில்ல? விலாசம் என்ன போடுவே?”

”விலாசம் வேண்டுவோர் எழுதவும்னு போடலாம்.”

”அப்படிப் போடாதே. நிறையப் பேர் எளுதுவாங்க. வேற விசியமுன்னு.... ஆமா நீ இன்னா பேர்ல எளுதறன்னு சொன்ன?”

”சுஜாதா!”

”அட, நான் படிச்சிருக்கன்யா, பொம்பாடா இருக்கும். எல்லாத்திலியும் எளுதுவே போல இருக்கே. அது இன்னாது நடுப்பகல் ரத்தமா? பொம்பாடு கய்யா அது? மத்தியானம் முளுக்க வேல சோலி ஏதும் கடியாதா? லாட்ஜிலயே அறுத்துக்கிட்டு சும்மனாச்சியும் உக்காந்துகினு இருக்கறபோது தொடர் கதை படிப்பேன். எல்லாத் தொடர்கதையும் எனக்குப் புடிக்கும். அதுல வர்றவங்க கஸ்டப்பட்டா எனக்குப் பேஜாரா இருக்கும். சிரிச்சு சந்தோஷமா இருந்தா, எனக்குப் பொம்பாடா இருக்கும். நிறைய பத்திரிகிங்க இருக்குறதாவல, கொஞ்சம் பாபு யாரு, விமலா யாரு, ரங்கய்யா யாருன்னு கம்ப்யூஸ் ஆயிரும், அதனால பரவால்ல, அங்கங்க அஜிஸ் பண்ணிக்கிடுவேன். தொடர்கதைல வர்றவங்க அத்தினி பெரும் எனக்கு சிநேகிதங்க.... மத்தியான சிநேகிதங்க... வாரா வாரம் திரும்ப வர்ற சினேகிதங்க. அது போல ராத்திரியும் சிநேகிதங்க உண்டு. அவங்களும் சில பேர் வாரா வாரம் வருவாங்க.... எனக்கு கதை சொல்லுவாங்க. அந்த கதைங்கள்லாம் வேற

மாதிரி இருக்கும்.”

”உனக்கு இந்தத் தொழில் இஷ்டமா?”

”வேற தொழில் ஒண்ணும் தெரியாதே எனக்கு.”

”கத்துக்கலாமே.”

”எதுக்கு?”

”அப்படிக் கேட்டா... இது வந்து...”

”ஒரு நாளிக்கு எவ்ள வர்றது தெரியுமா உனக்கு! லாட்ஜிக்காரரு சும்மா சொல்லக் கூடாது நல்லவரு. காசுல குறைக்க மாட்டாரு. செவ்வாக்கிளமை எண்ணெய், சீக்கா தருவாரு. அப்பப்ப அமிதாப்பச்சன் படம் பாத்துட்டு வரணுமுன்னா பேட்டா தருவாரு. ‘இத பாரும்மா, நாமெல்லாம் ஒரு குடும்பம் போல. எல்லாரும் எனக்கு சமம்தாம்’பாரு... இப்ப சாவித்திரியை எடுத்துக்க, குளந்தை உண்டாயிருச்சு. செரியாப் பார்க்காம லேட்டாயிருச்சு. டாக்டரு ஒண்ணும் செய்ய முடியாதுன்னுட்டாரு, என்ன பண்ணாரு முதலாளி? தொரத்திவிட்டாரா? ‘சாவித்திரிம்மா, நீ பெத்து பொளைச்சு ஒடம்பைத் தேத்திக்கிட்டு வர்ற வரைக்கும் வேலை செய்ய வேண்டாம். நான் ஆஸ்பத்திரி செலவைப் பார்த்துக்கறேன்’னு சொல்லிட்டாரு... தாராள மனசு.”

”குழந்தை பிறந்ததா?”

”ம், பொண்ணு! லாட்ஜில்தான் வளருது, சாவித்திரி வேலைக்குத் திரும்பிச்சில்ல...”

”லாட்ஜிலயா? இங்கயா?”

”ஆமா... எங்க எல்லாருக்கும் குளந்தய்யா அது!”

”அப்பா யாருன்னு...”

”திருப்பதி வெங்கடாசலபதிதான் அப்பா! நல்லா கொளுக்குமுளுக்குன்னு இருக்குது. பாக்கறியா!”

”இப்ப வேண்டாம், பட்.... ராத்திரி வேளைல குழந்தையை...”

”ஒண்ணும் பிரமாதமில்ல, சாவித்திரி வர்ற வரைக்கும் அஞ்சு பத்து நிமிசம் நாங்க யாராவது பாத்துப்போம். பெரும்பாலும் ஏளு மணிக்கு வசதியா தூங்கிப்போயிரும்! அப்பப்ப எளுந்திருச்சி அளுதா, கொஞ்சம் உச்சு உச்சுன்னா அடங்கிப்போயிரும். இல்லை, ஒரு ஸ்பூன் பிராந்தி கொடுத்துருவா. பம்பரம் கணக்கா உறங்கிடும். அவசரத்துக்குக் கட்டிலுக்கு அடிலேயே படுக்கப்போட்டுருவா. சத்தமே வராது...ஏன்யா பேசாம இருக்கே? இதுல ஒரு தமாசு பாரு... போன மாசம்தான் நடந்தது. ஒரு ஆளு டேசன்ல இருந்து நேரா பொட்டி படுக்கையோட இங்க வந்திருக்கான். என்னமோ அவனுக்கு தலைபோற அவசரம்! ரூம்புல தங்கிட்டு பெட்டியை வெச்சுட்டு தலை வாரிக்கிட்டு வர மாட்டானோ? நேரா இங்கதான் தகரப் பொட்டியும் மலாய் செருப்புமா வந்துட்டான். சாவித்திரிதான் போயிருந்தா. குழந்தையைக் கட்டிலுக்கடில படுக்கவெச்சுட்டிருந்தா...”

”பாதில என்ன ஆயிருக்கு. குழந்தை முளிச்சுக்கிட்டுப் பெரிசா அழ ஆரம்பிச்சுருச்சு. அந்தாளு ஒரேடியா பயந்து படக்குன்னு எந்திரிச்சு ஒரே ஓட்டமா ஓடிட்டான். ‘இன்னாடாது, இப்பதானே ஆரம்பிச்சம், அதுக்குள்ள குழந்தையா?’ன்னு ஆயிருச்சோ என்னவோ! ஒத்தக்கால் செருப்பை போட்டுக்காமயே ஓடிப் போய்ட்டான். எப்படி டமாசு! இல்லை, ஒரு வேளை அவன் குளந்தை கியாபகம் வந்துருச்சோ என்னவோ?”

”இந்த இடத்துக்கு ஒரு நாளைக்கு எத்தனை பேர் வருவாங்க!”

”அதெல்லாம் ரயில் டேசன் மாதிரி, கணக்கு ஏதும் இல்லிய்யா.”

”உங்களுக்குள்ள போட்டி உண்டா?”

”சேச்சே... இருக்கறவங்களே ஆள் பத்தலை. கூட ஆளு போடுங்கன்னு முதலாளிகிட்ட அரிச்சுகிட்டிருக்கோம்.”

”முதல்ல வர்றவங்க எப்படி இங்கே வர முடியும்?”

”நம்ம ஆளுங்க, அங்கங்க சினிமாக் கொட்டாயாண்ட, ஓட்டலாண்ட, அப்புறம் காபரே முடிச்சுட்டு வெளியே வராங்களே, எல்லாத்தையும்

ரோந்து சுத்திக்கிட்டு இருப்பாங்க. ஒரு ஆளைப் பாத்தா, பாத்தாலே கஸ்ட்மரா இல்லியான்னு கண்டுபிடிச்சுக் கூட்டியாந்துருவாங்க. உள்ள அனுப்பறதுக்கு முந்தியே கமிசன் வாங்கிடுவாங்க. அடுத்த ஆளைக் கூட்டியாரப் போயிருவாங்க."

"உங்களை மாதிரி எத்தனை பேர் இந்த ஊர்ல இருக்கீங்க?"

"பத்தாயிரம் பொண்ணுங்க இருக்கோம்னு ஒருமுறை இன்ஸ்பெக்டரம்மா சொன்னாங்க. அட, சொல்ல மறந்துரப்போறேன்.... தற்கொலை செஞ்சுக்கறத்துக்கு முந்தி ஒரு பையன் எங்கிட்ட வந்தான்யா, சின்னப் பையன்தான்."

"அப்படியா, அவனுக்கு..."

"புத்தி சொன்னியான்னு கேக்கறியா? அதான் இல்லை. போய் பண்ணிக்கடான்னு சொல்லிட்டேன்."

"அப்புறம் என்ன ஆச்சு?"

"அதும் டமாசு கதை. இதபாரு, இந்த மாலை அவந்தான் கொடுத்தது, எவ்வளவு இருக்கும்?"

"அவன் என்ன ஆனான்..?"

"சொல்றேன், கொஞ்சம் இரு. ஆளு வந்திருச்சு. சித்த நேரத்துக்கு தொடரும் போட்டு வையி.... போய்ட்டு வந்து சொல்றேன்..."

"என்ன அதுக்குள்ள வந்துட்ட..?"

"அந்தாளுக்கு சரசாதான் வேணுமாம்... எங்கேஜா இருக்குது. காத்திருக்கான். என்ன ஒரு மாதிரி ஆயிட்டே?"

"அதிர்ச்சி. நீ உள்ள வர்றபோது கொஞ்சம் நொண்டறதைப் பார்த்தேன். கால்ல என்ன?"

"அதுவா.... ஒருமுறை 'ரெய்டு'ம்போது கூரை மேல் எகிறிக் குதிச்சு ஓடினனா... அப்ப மடங்கிக்கிச்சு. இன்னும் சரியாகலை. புத்தூர்

வைத்தியம் பார்க்கணும்.”

”ரெய்டா..?”

”ஆமா; அப்பப்போ மாமூலா போலீசு பளுப்பா வண்டில ரேடியோ எல்லாம் வெச்சுக்கிட்டு வருவாங்க. பெரும்பாலும் முன்னாடியே தகவல் வந்துரும். சில நாளு தெரியாமப் போயி மாட்டிக்கிடுவோம். வர சமயம் பாத்து பையன் மணி அடிப்பான். போட்டது போட்டபடி பாதி எந்திரிச்சி, எகிறிக் குதிச்சு மொட்டை மாடி ஓடிருவோம்.”

”எப்பவாவது அகப்பட்டிருக்கியா?”

”ஓ, எத்தினியோ வாட்டி.”

”அகப்பட்டா அடிப்பாங்களா.?”

”சேச்சே.... சும்மா சொல்லக் கூடாது. அடிக்கல்லாம் மாட்டாங்க. டமாசா பேசிக்கிட்டே டேசனுக்குக் கூட்டிப் போவாங்க. காலைல கோர்ட்டுக்குக் கூட்டிப் போவாங்க. மேஸ்திரேட்டும் தங்கமான மனுஷன். ‘என்ன ராணி திரியும் வந்துட்டியா?’ன்னு விசாரிப்பாரு. வக்கீலுக்குத் தெண்டம் அளுதா, ஃபைனோட விட்டுருவாங்க. முதலாளிதான் கட்டித் திரியும் அளைச்சுக்கிட்டு வந்துருவாரு.”

”பின்ன ஏன் போலீசுக்குப் பயந்து ஓடணும்.”

”ரெண்டு மூணு நாள் வருமானம் போயிடுதில்ல?”

”ஏதோ ஒரு பையனைப் பத்திச் சொல்லவந்தியே?”

”பாத்தியா, மறந்தே போய்ட்டேன். ஒரு நாள் ராத்திரி என்னாச்சு, மணி எட்ரை இருக்கும். இந்தாளு வரான் திருதிருன்னு முளிச்சிக்கிட்டு. ஆளு புதுசு. பதினேழு பதினெட்டு வயசுதான் இருக்கும். சட்டை கால்சராயெல்லாம் ஒளுங்கா மாட்டிக்கிட்டிருக்கான். நான் நாலஞ்சு பேரு வரிசையா நிக்கிறோம். பேசாமா நிக்கிறான். ‘இன்னா தம்பி, சீக்கிரம் சொல்லு. எங்களுக்கும் வேற வேலை இருக்கு பாரு’ன்னேன். நிமிர்ந்து ஒரு தபாகூடப் பார்க்க மாட்டான். ‘ஊம், எதுக்கு வந்த?’ன்னு கேட்கறேன். ‘எதுக்கு வந்தேன்?னு அவனும் கேக்கறான். டமாசு பாரு,

இன்னும் கேளு. பொம்பாடா இருக்கும். ‘சொல்லித் தரவா?’ன்னு கேக்கறோம். சின்னப் பையன் கைல மோதரம். பைல நோட்டுங்க தெரியுது. ‘எத்தினி காசு வெச்சிருக்க?’ன்னு சும்மானாச்சியும் கேட்டுப் பார்த்தேன். நோட்டை எடுத்துக் காட்டறான். அம்மாடின்னு ஆயிருச்சு. எண்ணிக்கிட்டே இருக்கான். எல்லாம் பச்சை நோட்டு!

‘அச்சடிக்கிறியா?’ன்னு கேட்டன். சரசு, சாவித்திரி, ராமம்மா மூணு பேரும் உஷாராய்ட்டாங்க. இன்னா வலை போடறாளுக, சாலாக்குப் பண்றாளுக. உதட்டைக் கடிக்கிறா, உச்சுங்கறா, மார் பொடவை பறக்குது. ராமம்மா படக்குனு போயி சட்டை டிராயர் மாத்திக்கிட்டு வந்துருச்சு. அந்தப் பையன் யாரையும் பாக்கல. ‘யாராவது ஒருத்தர் சொல்லுப்பா, சீக்கிரம்’னேன். திடீர்னு என்னைப் பார்த்து, ‘நீ வா!’ன்னான்; மத்தவங்க மூஞ்சியப் பார்க்கணுமே?

நான் அவனைக் கூட்டிட்டு ரெண்டாம் நம்பர் ரூம்பில்ல அதான் கொஞ்சம் டீஜென்ட்டா இருக்கும். அங்க இட்டாந்தேன். அவன் உள்ள வந்து படுக்கை மேல உக்காந்துகிட்டான். நான் கதவைச் சாத்திட்டு தலையை முடிஞ்சுக்கிட்டு, மேலாக்கை உதறிட்டு பக்கத்தில் போய் உக்காந்துகினேன். முகத்தைத் திருப்பினேன்.... பொட்டை மாதிரி அளுதுகிட்டே இருக்கான். ‘எதுனாச்சியும் சாப்பிடறியா? பையனை ஆனுப்பி அரை புட்டி பீட்டர் ஸ்காட்டு வாங்கியாரவா?’ன்னு கேட்டா, வேணாமாம். ‘பின்ன என்னதான் வேணும்?’னேன். ‘சும்மா இருக்கேன், ஒண்ணும் வேணாம்’கறான். ‘இத பாரு இங்க சும்மா ஒண்ணும் வராது’ன்னேன். அவன் உடனே தன் பைல உள்ள அத்தினி பணத்தையும் என் கைல, ‘இந்தா வெச்சிக்க’ன்னு கொடுத்துட்டான். எனக்குப் பயமாயிருச்சு.

‘ஏன்யா?’ன்னேன். ‘எனக்கு உயிர் வாழ்றதுக்கு இஸ்டமில்லை’ன்னான். ‘எனக்கு இஸ்டம்’னேன். ‘எனக்குச் சாவணும். ஏதாவது வழி சொல்லு’ன்னான். ‘இதுல என்ன கஸ்டம்.... வெங்கடாத்ரி எக்ஸ்பிரஸ்ல போய் தலையைக் கொடு. நேரா மோச்சம்தான்’னேன். டமாசுக்கு சொன்னேன். அவன் நிஜங்காட்டியும்னுட்டு, ‘அந்த எக்ஸ்பிரஸ் எத்தினி மணிக்கு வருது?’ங்கறான். அப்புறம் கொஞ்ச நேரம் சும்மா தன் கையையே பார்த்துக்கிட்டு இருந்தான். ‘நான் வரேன்’னு போய்ட்டான். என்னைத் தொடக்கூட இல்ல. பணம் ஐந்நூறோ என்னவோ இருந்துச்சு. முதலாளிக்கு வேர்த்து வந்து வாங்கிக்கிட்டு போய்ட்டார்.”

”அவன் ஏன் சாக விரும்பினான்னு நீ கேக்கவே இல்லையா?”

”அதையேன் நான் கேக்கணும்? அவனுக்கு என்ன துக்கமோ, என்ன தாளாமையோ.... அதெல்லாம் கஸ்டமருங்ககிட்ட நான் வெச்சுக்கிறதில்லை.”

”அவனைப் பததி அப்புறம் ஏதும் தெரியலையா?”

”ஒருமுறை சூப்பர் கொட்டாயில சிவாஜி படம் பாக்கப் போய்க்கிட்டிருந்தப்ப எதிர்த்தாப்பல மோளம் அடிச்சிக்கிட்டு கூட்டமா வருது.... இன்னாடான்னு ஒதுங்கிப் பாத்தா அசப்புல இந்த ஆளு மாதிரிதான் இருந்தது.”

”சவ ஊர்வலமா?”

”இல்லை, கல்யாணம். வடக்கத்திக்காரன் போல, சேட்டு போல இருக்கு. குதிரை மேல தலைல கும்பாச்சியா வெச்சுக்கிட்டுப் போறான். கல்யாணம்தானய்யா அது. ஏன்னா உயிர் இருந்தது. என்ன சிரிக்கிறே?”

”தேங்க்ஸ்! உன் டயத்தை ரொம்ப எடுத்துக்கிட்டேன்!”

”எனக்குன்னு டயமே கிடையாதுய்யா!”

”நான் வரட்டுமா?”

”இரு.”

”என்ன...”

”இத்தினி நேரம் என்னைய இத்தினி கேள்வி கேட்டியே... நான் உன்னைக் கேக்க வேண்டாமா?”

”கேளு தாராளமா.”

”நான் சொன்னதை எல்லாம் எளுதப் போறியா?”

”ஆமாம். அப்படியே மாத்தாம.”

”அதுக்குப் பணம் கொடுப்பாங்களா?”

”ஆமா. அந்தப் பணத்தை உங்கிட்ட கொண்டு கொடுத்துர்றதா உத்தேசம்.”

”நான் அதுக்குச் சொல்ல வரலை. நீயும் நானும் ஒண்ணுன்னு சொல்ல வரேன். உனக்கு ஒரு தெறமை இருக்கு எளுதுற தெறமை. அதை உபயோகிக்கறே. காசு வாங்கறே. என் தெறமை இது ஒண்ணுதான். நானும் அதைக் காட்டிக் காசு வாங்கறேன். என்ன சொல்றே?”

”அப்படிப் பார்த்தா எல்லா உத்தியோகத்துக்கும் இது பொருந்தும் இல்லையா?”

”இப்ப இந்தப் போட்டி பண்ணியே, இதுக்கு ஏதாவது பலன் உண்டா?”

”போட்டி இல்லை, பேட்..!”

”சரி, பேட்டி.”

”நான் இந்தப் பேட்டிக்கு வந்த காரணம் வேற. அதனோட பர்ப்பஸே வேற. உன் சின்ன வயசுல நடந்த நிகழ்ச்சிகளில் எங்கயோ அந்தக் காரணம் பொதிஞ்சிருக்கு...”

”பொதிஞ்சிருக்குன்னா?”

”மறைஞ்சிருக்கு.”

”என்ன காரணம்?”

”நீ ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தேன்...னு?”

”காசு சம்பாதிக்க.”

”நான் அந்த அர்த்தத்திலே கேக்கலை ராணி... ஆல் ரைட். நீதான் இந்த தர்க்கத்தை ஆரம்பிச்சுக் கொடுத்தே... உன்னைக் கேக்கறேன். நீ பண்றது தப்பான காரியம்னு உனக்கு எப்பவாவது தோணுதா?”

”தப்பா... எனக்குப் புரியலை.”

”பாவம்னு புரியுதா?”

”இப்ப நான் செய்யறது பாவம்கறியா... அப்ப என்னைத் தேடி வர்றவங்க செய்யறது!”

”தேடி வரும்படியான சூழ்நிலையை ஏன் உருவ... ராணி! எனக்கு இதைச் சரியா உனக்குப் புரியும்படியா கேக்கத் தெரியலை. இத பாரு? வாழறதுக்கு எத்தனையோ வழி இருக்கு இல்லையா? உன்னை மாதிரி பெண்கள் இப்பல்லாம் எத்தனையோ நவீனமான காரியங்கள் பண்றாங்க. ஏரோப்ளேன்கூட ஓட்டறாங்க. கம்ப்யூட்டர்னு ஒண்ணு இருக்கு. அது எல்லா கணக்கும் போடும். அதை எல்லாம் இயக்கறாங்க!”

”ஆ! அடி ஆத்தே!”

”இது நீ வியக்கறதுக்காகச் சொல்லலை ராணி... இப்ப உன்னை ‘ரெய்டு’ பண்ணி அரஸ்ட் பண்ணாங்களே போலீஸ் ஆபீஸர்...”

”அவங்ககூட பொண்ணுதான். நீ இன்னாங்கறே? எனக்குப் புரியலியே.”

”ராணி! ஒழுங்கா வாழறதுக்கு எத்தனையோ வழிகள் இருக்கறப்போ. உலகத்தில் மிகப் புராதனமான தீமை இந்த ப்ராஸ்டிட்யூஷன். இதில் போய் மாட்டிக் கிட்டு...”

”எனக்கு இதான்யா தெரியும். வேற எதும் தெரியாதே. நானும் காதல் பண்ணிப் பார்த்தேன். டிராமா ஆடிப் பார்த்தேன். எங்க பார்த்தாலும் போட்டி! எங்கயும் எனக்கு செரிப்படலை. இங்கயும் போட்டிதான். ஆனா டிமாண்டு இருந்துகிட்டே இருக்கு. இப்ப நீ என்ன செய்யணும்கறே? இதெல்லாத்தையும் விட்டுட்டு ஏதாவது கவுரதையா தொழில் செய்யணும்கறியா?”

”ஆமா.”

”எனக்கு ஏதாவது அந்த மாதிரி ஏற்பாடு செய்து தர்றியா?”

”அதுக்குன்னு சில மறுவாழ்வு ஸ்தாபனங்கள்லாம் இருக்கு.”

”மறு வாள்வா. பாருய்யா, அதையும் நான் பாத்துட்டு ஆறு மாசம் இருந்துட்டு வந்திருக்கேன்! சுவர் எத்தினி அடி உசரம் தெரியுமா? பத்தடி. உள்ள தைய ஊசி கொடுத்து கிளிஞ்ச துணியையே திருப்பித் திருப்பித் தெக்கச் சொல்வாங்க. அரை வயித்துக்குச் சோறு. ஏஜென்ட்டுகளுக்கும் அட்டண்டர்களுக்கும் கனிக்ஷன். கொடுத்த காசை அவங்களே சாப்பிட்டுக்கிட்டு யாராவது பெரிய மனுசங்க வர்றப்போ மட்டும் புதுசா துணி குடுத்து உடுத்துக்கச் சொல்லி, ரொம்ப பித்தலாட்டம்யா... அப்புறம் அதுல நடக்கிற வேற ஒரு கூத்தைச் சொல்லட்டுமா? எளுதுவியா?” ”வேண்டாம்.”

”மறு வாள்வு, மறு வாள்வுகங்கறியே இன்னாய்யா அது?”

”இத பார் ராணி. நீ இந்தப் பேட்டியுடைய ஆரம்பத்தில் சொன்னது ஞாபகம் இருக்கா? நீ இந்தத் தொழிலுக்கு வந்ததுக்குக் காரணம் ஏழ்மை இல்லைன்னு...”

”இப்பவும் சொல்றேன் திமிருதான் காரணம்னு.”

”காரணம் அதில்லை. சூழ்நிலைதான்.... சமூகச் சூழ்நிலை. இந்தப் பாவத்தை அனுமதிக்கிற நம் சட்டங்கள்ல இருக்கிற ஏராளமான ஓட்டைகள். உன்னை ‘ரெய்டு’ பண்ணிப் புடிச்சா, எப்படி மூணாவது நாள்ள திருப்பி இந்த வேலைக்கு வந்துர முடியுது உன்னால? சட்டம் போதாது. இதனால கம்யூனிஸ்ட் நாடுகளில் ப்ராஸ்டிட்யூஷன் கிடையாது தெரியுமா?

”அது என்ன மிஷினி?”

”சரிதான்! நான் வரட்டுமா?”

”இருய்யா, ஒரே ஒரு சின்ன விசயம் பாக்கி இருக்குது.”

”சொல்லு!”

”இதுவரைக்கும் மறுவாள்வு அது இதுன்னு பெரிசா பேசறல்ல பிரமாதமா... என்னைக் கல்யாணம் பண்ணிக்குவியாய்யா..?”

”எனக்குக் கல்யாணம் ஆய்டுச்சே...”

”இப்ப கல்யாணம் ஆவலைன்னு வெச்சுக்க.”

”....”

”ஏன் பேசாம இருக்கே? பதில் சொல்லத் தெரியலை. அப்ப என்னைப்பத்தி பத்திரிகையில எழுதப் போறல்ல, இதையும் எளுது. மகா சனங்களே! ஆமா, நான் செய்யறது பாவந்தான். தப்புதான். இவுரே சொல்லிட்டாரு. அதுக்கெல்லாம் காரணம் நான் வளர்ந்த சூழ்நிலைதான்னுட்டு. ஏதோ சந்தர்ப்பவசத்தால நான் இந்த தொழில்ல வந்து மாட்டிக்கிட்டேன். என்னை இதுல இருந்து விடுவிச்சு கூட்டிட்டுப் போக உங்கள்ல என் கதையைப் படிக்கிறவங்க இருந்தாங் கன்னா பெங்களூர் கிக்பேட்டை விஜயலட்சுமி கொட்டா யண்ட வந்து, பக்கத்துல சந்து இருக்குது. அதுல நுளைஞ்சா செட்டுக்கு மாடில இருக்குது லாட்ஜு. அங்க வந்து யாரை வேணா ராணின்னு கேட்டா போதும். உடனே என்னைக் கூப்பிடுவாங்க. பகல் வேளைல வாங்க. சாயங்காலம் அஞ்சரைக்கு மேல கொஞ்சம் பிஸியா இருப்பேன்... வாங்க நான் காத்துக்கிட்டு இருக்கேன். மறுவாழ்வு தாங்க இத இப்படியே போடு ய்யா.”

”சரி.”

****

நயாகரா

எனக்கும் நீர் வீழ்ச்சிகளுக்கும் அவ்வளவாக ஒத்துப்போவதில்லை. பாண தீர்த்தத்தில் ஒரு முறை தடுக்கி விழுந்து, தாமிரபரணியில் சேர்ந்துகொள்ள இருந்தேன். அதே போல், ஒகனேக்கலில் பாசி வழுக்கி காவிரியில் கலக்க இருந்தேன். அப்புறம் அகஸ்தியர் ஃபால்ஸில்... எதற்கு விவரம்? நீ.வீக்கும் எனக்கும் சரிப்பட்டு வராது என்கிற சினேரியோ புரிந்தால் சரி. வீழ்ச்சியைக் கண்டாலே எனக்கு ஞமஞம என்று மூக்கில் உறுத்தும். அடுத்த பஸ்ஸைப் பிடிப்பதற்குள் ஜலதோஷம் பிடித்துக்கொண்டுவிடும்.

இருந்தாலும் அமெரிக்காவுக்குப் போய் நயாகராவைப் பார்க்காமல் வந்தால்,

1. ஜன்மம் சாபல்யம் அடையாது.

2. திரும்பி வந்ததும் ஜனங்கள் வெறுப்பேற்றும் (”என்ன சார் அவ்வளவு தூரம் போயிட்டு நயாகரா பார்க்கலை... உச்... உச்... உச்” எக்ஸைட்ரா).

எனவே, நயாகரா பார்க்கச் சென்றோம்.

அமெரிக்காவில் நகரங்களைச் சுற்றிப் பார்க்க வசதியாக எங்களிடம் ஒரு ‘ஸீ யு.எஸ்.ஏ.’ ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸின் டிக்கெட் இருந்தது. ரொம்ப சல்லிசான டிக்கெட். அதை வைத்துக்கொண்டு அந்த கம்பெனியின் ஏரோப்ளேனில் ஏறிக்கொண்டு எங்கே வேண்டுமானாலும் போகலாம், புறப்பட்ட இடத்துக்குத் திரும்ப வராத வரையில். ‘பரவாயில்லையே’ என்று வியக்காதீர்கள். இந்தச் சுதந்திர சீட்டில் ஒரே ஒரு சிக்கல். பெரும்பாலான ஃப்ளைட்டுகளுக்கு அட்லாண்டா போய்த்தான் போக வேண்டும். உதாரணம் நியூயார்க்கிலிருந்து பஃபலோ போவதற்கு, நியூயார்க் அட்லாண்டா, அட்லாண்டா பஃபலோ என்ற ரூட்டில்தான் போக முடியும். இது சென்னையிலிருந்து பெங்களூரு போக, சென்னை டெல்லி, டெல்லி பெங்களூரு போகிற மாதிரி! எனவே அவர்கள் ஒன்றும் சும்மா கொடுத்துவிடவில்லை என்பது உங்களுக்குத் தெள்ளென விளங்கும் (‘தெள்’ என்றால் என்ன?) எனவே பத்து நகரங்களைப் பார்ப்பதற்குள் எத்தனை முறை அட்லாண்டா பார்த்திருப்போம் என்று நீங்கள் சுலபமாகக் கணக்கிட்டுக்கொள்ளலாம். அட்லாண்டா விமான

நிலையத்தில் சிப்பந்திகள் அனைவரும். ”என்ன அண்ணா, மறுபடியும் வந்துட்டேளா” என்று விசாரிக்கும் அளவுக்குப் பரிச்சயமாகிவிட்டார்கள்.

நான் சொல்ல வந்தது நயாகரா பற்றி அல்லவா? நயாகராவுக்கு பஃபலோதான் விமான நிலையம். அங்கே போக வழக்கம் போல அட்லாண்டா விமான நிலையத்தில் காத்திருந்தபோது, பொடி நடையாகப் போய் ஒரு காபி சாப்பிட்டு வரலாம் என்று சென்று திரும்பியபோது, என் மனைவியின் அருகில் இரண்டு இந்தியர்கள் உட்கார்ந்துகொண்டு கையைத் தீவிரமாக ஆட்டிப் பேசிக்கொண்டு இருந்தார்கள். கிட்டே போனதில், ஒருவர் பிஸ்வாஸ். மற்றவர் சின்ஹா. பெங்காலிக்காரர்கள்.

இந்தியர்கள் எந்த மாநிலத்தவர்கள் என்று கண்டுபிடிக்க அவர்கள் ஒரு வாக்கியம் இங்கிலீஷ் பேசினால் போதும். மலையாளியை காலேஜ் என்று சொல்லச் சொன்னால் மதி. பெங்காலிகள் போல்ட்டை வோல்ட் என்றும் வோல்ட்டை போல்ட்* என்றும் சொல்லுவார்கள். எல்லாப் பெயருக்கும் ஓகாரம் சேர்த்துக்கொண்டு, ரங்கராஜன் என்பதை ரொங்கொரோஜன் என்பர்.

பிஸ்வாஸ், கல்கத்தாவில்ரொம்ப பிஸியான சர்ஜன் என்று தெரியவந்தது. சின்ஹா, மெட்டலர்ஜிஸ்டோ என்னவோ. இருவரும் லண்டனில் சந்தித்துக் கூட்டணி அமைத்துக்கொண்டு அமெரிக்கா வந்திருக்கிறார்கள். எங்களைப் போலவே இடங்களைச் சுற்றிப் பார்க்க ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸ் டிக்கெட் கைவசம் வைத்திருந்தார்கள். அதைப்பற்றிக் கேட்டபோது, ”சே! டிக்கெட்டா இது! அட்லாண்டா அட்லாண்டா!” என்றனர். ரொம்ப நொந்து போயிருந்தார்கள். சக சோகத்தால் சினேகிதமாகிவிட்டோம். இப்போது நயாகரா பார்க்க பஃபலோ போகிறோம் எனக் கேட்டதும் சந்தோஷப்பட்டு எங்களை ஆட்கொண்டு. ”கவலைப்படாதே. நாம் எல்லோரும் சேர்ந்தாற் போலப் போகலாம்” என்றனர். என் மனைவியும் ஒப்புக்கொள்ள, எனக்கு வயிற்றைக் கலக்கியது.

எனக்குத் தெரிந்த பெங்காலி நண்பர்கள் எல்லோரும் நல்லவர்களே. அவர்கள் சரோட் வாசிப்பார்கள். பிரிட்ஜ் ஆடுவார்கள். கவிதை எழுதுவார்கள். சங்கீதம், நடனம் எல்லாம் சரிதான். ஆனால், சுலபத்தில் கோபித்துக்கொண்டுவிடுவார்கள். கொல்கத்தாவில் ஒரு பெங்காலி

நண்பருடன் பார்ட்னராக பிரிட்ஜ் ஆடிக்கொண்டு இருக்கும்போது, நாலு ஸ்பேடை டபிள் பண்ணி ஆயிரத்து இருநூறு பாயின்ட் கொடுத்துவிட்டேன் என்று, என் மேல் பெஞ்சு நாற்காலியை வீசினார். அதனால் இந்த பெங்காலி தமிழ் நட்பு, நயாகரா வரை தாங்குமா என்பது சந்தேகமாகத்தான் இருந்தது. மேலும் அவர்கள் இரண்டு பேருக்குள்ளேயே உறவு அவ்வளவு பேப்பரில் போடும்படியாக இல்லை. சிநேகிதம் மெல்லிய கண்ணாடி போலிருந்தது. பிஸ்வாஸ் எதையாவது சொன்னால் அதற்கு நேர்மாறாக சின்ஹா சொல்ல, முணுக்கென்று சண்டை வந்துவிடும். சீ! நீ ஒரு மனுஷனா என்கிற தொனியிலே பெங்காலியில் 'கீ!' 'கீ!' என்று மூக்குக்கு மூக்கு தொட்டுக்கொண்டு எதிர்ப் பேச்சு துவங்கிவிடும். இருந்தும் இரண்டு பேரும் வலுக்கட்டாயமாக எங்கள் தோழமையை நாட, அவர்களுடன் சேர்ந்துகொண்டோம். ப்ளேனில் நாலு பேரும் வரிசையாக உட்கார்ந்துகொண்டோம். என் மனைவியிடம் சின்ஹா, 'என்ன என்ன வாங்கினாய்' என்று விசாரிக்க, நான் எழுத்தாளன் என்றதும் 'சுனில் கங்குலியைத் தெரியுமோ?' என்று பிஸ்வாஸ் கேட்க, 'நான் தெரியாது' என்று சொல்ல, நீ என்ன எழுத்தாளன் என்கிற மாதிரி பார்த்தார். பத்து நிமிஷத்துக்குப் பேசவில்லை. இவர்களிடமிருந்து பஃபலோவில் இறங்கின மாத்திரம் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்கிற தீர்மானம் வந்துவிட்டது.

இறங்கினவுடன், 'வா' என்று மனைவியைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு பாகேஜ் செக்குக்கு ஓடிப் போய் சடுதியில் பெட்டி படுக்கைகளை விடுவித்துக்கொண்டு கலர் கலராக நகரத்துக்குப் போகும் பஸ்சுக்குக் காத்திருக்க, என் பின்னாலேயே, "ரொங்கொரோஜன்!"

"ஓ, ஹலோ மிஸ்டர் பிஸ்வாஸ்! ஐ வாஸ் லுக்கிங் ஃபார் யூ!"

"ஓட்டல் ஏற்பாடு பண்ணிவிட்டேன்."

"அப்படியா சந்தோஷம்... ஸீ யூ!"

"உங்கள் இருவருக்கும் சேர்த்துத்தான்!"

"வாடகை ஒரு வேளை அதிகம் இருக்கப் போகிறது. நாங்கள்..."

”வாடகை பதினஞ்சு டாலர்!”

பதினைந்து டாலர் என்பது அமெரிக்காவில் ரொம்ப சீப். ”ஊருக்கு வெளியே இருக்குமோ என்னவோ?”

”சேச்சே! நயாகராவிலிருந்து கூப்பிடு தூரத்தில் இருக்கிறதாம்!”

”சன்னலைத் திறந்தால் நயாகரா தெரியுமாம்” என்றார் சின்ஹா. என்னால் நம்ப முடியவில்லை.

”ஓட்டல் பேர் என்ன?”

கார்டைக் காட்டினான். ”இந்த பஸ் போகிற வழியில் இறக்கிவிடுமாம். டிரைவர்தான் சொன்னான். அமெரிக்காவில் கொஞ்சம் தீர விசாரித்தால் செலவு இல்லாத இடம் கிடைக்கும்.”

நான் என் மனைவியைப் பார்க்க அவள், ”அங்கேயே போகலாம்” என்றாள்.

”வாருங்கள். எதற்கு முப்பது டாலரும் நாற்பது டாலரும் கொடுக்க வேண்டும்?” என்றார் பிஸ்வாஸ். பஸ்ஸில் ஏறினோம். பிஸ்வாஸ், சின்ஹா, நான், மனைவி என்ற நாலு பேரும் இ.பிரியாத நண்பர்கள் போல உட்கார்ந்துகொள்ள, ‘பஸ் டிக்கெட் நான்தான் வாங்குவேன், நான்தான் வாங்குவேன்’ என்று சண்டை போட்டு டிக்கெட் ஐந்து டாலர் என்று தெரிந்ததும், ‘ஓட்டல் போய் செட்டில் பண்ணிடலாம்” என்றார்கள்.

பஃபலோ நகரம் பிழைப்பதே நயாகராவுக்கு வரும் டூரிஸ்ட்டு களால்தான். எங்கு திரும்பினாலும் நயாகராவுக்கு வழி போட்டிருந்தது. பஸ் வெண்ணெய் போலச் செல்ல, தூரத்திலிருந்தே நீர்வீழ்ச்சி சுந்தரமாகத் தெரிய ஆரம்பித்து விட்டது. அங்கங்கே ஒளிந்துகொண்டு மறுபடி மறுபடி எட்டிப் பார்த்தது. நயாகரா, கனடா அமெரிக்க எல்லையில் இருப்பது உங்களில் ஜியாக்ரஃபி தெரிந்தவருக்குத் தெரிந்திருக்கும். கனடா சைடிலிருந்து பார்த்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று கேள்வி. எங்களிடம் கனடியன் விசா இல்லை. அதற்கு மனுப் போடாமலிருந்தது என் மனைவிக்குக் குறை. ஷேக்ஸ்பியரின் ரோஜா போல, ஒரு நீர்வீழ்ச்சியை கனடாவிலிருந்து பார்த்தாலும்

அமெரிக்காவிலிருந்து பார்த்தாலும் அது நீர்வீழ்ச்சிதான் என்பது என் சித்தாந்தம். பிஸ்வாஸைக் கேட்டேன், ”கனடியன் விசா இருக்கிறதா?”

”இல்லை. ஆனால், தற்காலிகமாக விசா தருகிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.”

”நான் கேள்விப்பட்டது, அதெல்லாம் கிடையாது. ஒரு வாரம் முந்தி மனுப் போட்டால்தான் கிடைக்கும் என்று.”

”கேட்டுப் பார்க்கலாம்! கொடுக்காமல் போய்விடுகிறார்களா, பார்த்துவிடலாம்.”

பஸ் டிரைவர் சிரித்துக்கொண்டே நால்வரையும் இறக்கிவிட்டு, ”அதோ பார் ஓட்டல்” என்று காட்டிவிட்டு விலகினான்.

பிரமாதமாகத்தான் இருந்தது ஓட்டல் கட்டடம், சொன்னதெல்லாம் சரிதான். நயாகரா நீர்விழ்ச்சி அருகிலேயே இருப்பது தெரிந்தது. என்னால் நம்ப முடியவில்லை. ”பிஸ்வாஸ் நீங்கள் சரியாகக் கேட்டுக்கொண்டீர்களா? தினத்துக்குப் பதினைந்து டாலர் சொன்னானா? மணிக்கு பதினைந்து டாலரா?”

”தினத்துக்குத்தான். நீ வாயேன்” என்றார்.

அந்தப் பளபளப்பான ஓட்டல் கட்டடத்தில் போய் விசாரித்ததில் நாங்கள் தேடிச் சென்ற ந்யூ மெட்ரோ அதில்லை என்றும் அதற்கு அடுத்த கட்டடம் என்றும் தெரிய வந்தது.

”அடுத்த கட்டடமா? கட்டடமில்லையே! காலி மனையல்லவா இருக்கிறது?”

‘உன்னிப்பாகப் பாருங்கள் தெரியும்.”

பார்த்ததில் சின்னதாக ஒரு அமெரிக்கக் குடிசை போல ஒரு கட்டடம் தெரிந்தது. அதன் மூஞ்சியையே மறைக்குமாறு ‘ஓட்டல் மெட்ரோ வேகன்ஸி’ என்று சாக்பீஸில் எழுதியிருந்தது. அருகே சென்று பார்த்ததில் ஒற்றை மாடியுடன் மே ஃபிளவர் தினங்களில் கட்டிய கட்டடம் போல ஒன்று தெரிந்தது. வாயிற் கதவில் மணிப் பொத்தான்

இருந்தது. அழுத்தியதில் சப்தம் வரவில்லை. கதவைத் தட்டினதில் லேசாகப் பொடி தூவித் திறந்துகொண்டது. உள்ளே டெலிவிஷன் அருகில் படுத்திருந்த நாய் என்னை ஒற்றைக் கண்ணால் பார்த்தது. இதுதான் ஓனரோ என்ற சந்தேகம் உடனே தீர்ந்தது. சுமார் எண்பது வயசு மதிக்கத்தக்க ஒரு கிழவர் மூக்கைத் தக்காளி நிறத்துக்குத் தேய்த்துக்கொண்டு வந்தார்.

”இங்கே ரூம் இருப்பதாக..?”

‘ட்வென்டி டாலர்ஸ்!”

”பஸ் டிரைவர் பதினைந்து என்று சொன்னான்.”

”ஓ.கே, ஃபிஃப்டீன் டாலர்ஸ்!” என்று ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து விரைவில் பதினைந்து பதினைந்து டாலருக்கு இரண்டு ரசீது எழுதி, ”ஐ டேக் அட்வான்ஸ்” என்றார்.

”ரூமைப் பர்க்கலாமா” என்றார் சின்ஹா.

”குட் ரூம், பே ஃபிஃப்டீன் டாலர்ஸ்.”

அட்வான்ஸாகப் பதினைந்து டாலர் கொடுத்துவிட்டு, எங்கள் இருவருக்கும் கொடுக்கப்பட்ட அறையை நோக்கிப் போனோம். சாவியைத் துவாரத்தில் தொடுவதற்கு முன்னமேயே கதவு திறந்துகொண்டது. உள்ளே ரூமை ஏழில் எட்டு பாகம் ஒரு கட்டில் அடைத்திருந்தது. குட்டியாக மேசை போட்டு, அதன் மேல் மேசை விளக்கு வைத்திருந்தது. உத்தரத்தில் இருந்த விளக்கைப் போடுவதற்கு ஸ்விட்சுடன் ஒரு கயிறு கட்டியிருந்தது. அதை இழுத்துப் பார்த்ததில், மாடியில் தடால் என்று உருண்ட சப்தம் கேட்டது.

பிஸ்வாஸ் என் அறையை எட்டிப் பார்த்து, ”உன் அறையும் இப்படித்தானா? ரொம்ப மோசம், இதற்குப் போய் பதினைந்து டாலரா? வழிப்பறி. கிழவனிடம் போய்ப் பணத்தைக் கேட்டு வேறு ஓட்டலுக்குப் போகலாம்” என்றார்.

”பாத்ரூம் எங்கே இருக்கிறது?” என்று என் மனைவி கேட்க, அந்த ஓட்டலில் தங்குபவர்கள் அத்தனை பேருக்கும், கிழவனுக்கும், நாய்க்கும்

சேர்த்து ஒரே ஒரு பாத்ரூம்தான் என்பது தெரிய வந்தது.

”வேண்டாம். வேறு இடத்துக்குப் போய்விடலாம்” என்றான் பிஸ்வாஸ்.

”நீதானே இங்கே அழைத்து வந்தாய்” என்றார் சின்ஹா.

”நீதான் பதினைந்து டாலரில் அறை வேண்டும் என்றாய்” என்றார் பிஸ். ‘நீதான் நீதான்...’ என்று இரண்டு பேரும் அடிதடிக்கு வந்துவிட்டார்கள். இடம் போதவில்லை.

”இது என்ன சோப்பா, மெழுகுவத்தியா?” என்று டேபிள் விளக்கை சின்ஹா போட்டுப் பார்க்க, ‘ஊய்’ என்று ஷாக் அடித்து விளக்கிலிருந்து பிசுபிசு என்று புகை வந்தது. விளக்கின் அடியில் ”டோண்ட் ஸ்விட்ச் ஆன்” என்று எழுதியிருந்தது. ”அமெரிக்காவில்கூட இந்த மாதிரி ஓட்டல் இருக்கிறது ஆச்சர்யம்தான்” என்றேன்.

”எங்கே அந்தக் கிழவன்?” என்று கீழே போய் விசாரிக்கப் போன பிஸ்வாஸ் உடனே திரும்பிவிட்டார். ”நாய் துரத்தறது” என்றார்.

”பதினைந்து டாலர் கொடுத்தாகிவிட்டது. ராத்திரி படுக்க மட்டும்தான் இந்த இடம்! என்ன போச்சு? முகம் கழுவிக்கொண்டு வாருங்கள். நயாகரா போய்ப் பார்க்கலாம்” என்றேன்.

நாய் போனதும் சின்ஹா பாத்ரூம் போய்விட்டார். கால்மணி கழித்து பிஸ்வாஸ் பாத்ரூம் வாசலில் காத்திருப்பது தெரிந்தது. ”இந்த ஆள் எப்போதும் இப்படித்தான். பாத்ரூம் போனால் ஒரு மணி நேரம்!” என்றார்.

”சேச்சே ! இவ்வளவு மோசம் என்று தெரியாமல் போய்விட்டது. ராஸ்கல் அந்த டிரைவரை உதைக்க வேண்டும். சின்ஹா! என்ன தூங்கிவிட்டாயா!”

அவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று என் மனைவியை அவசரப்படுத்தி, வேறு ரூட்டாக நடந்து போய் நயாகரா பார்க்கச் சென்றோம். அங்கே நயாகராவின் அடிமடிக்கே அழைத்துப் போகும் படகுக்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு க்யூவில் போய் நின்றால், ”ரொங்கோ ரோஜன்” என்று கேட்க பின்னால் சின்ஹாவும் பிஸ்வாசும்!

நயாகராவில் எத்தனை காலன் ஒரு நிமிஷத்துக்கு ஊற்றுகிறது. எத்தனை மெகா வாட் சக்தி பண்ணுகிறார்கள், எத்தனை அழகு என்றெல்லாம் விவரம் கொடுத்து உங்களை அறுக்க விரும்பவில்லை. நயாகராவில் எனக்குப் பிடித்தது படகு அதன் அடியில் செல்லும்போது ஆரவாரமும் நம்மேல் படரும் குளிர் மழையும்தான். இந்தக் குளிர் மழையில் சின்ஹாவை பிஸ்வாசும், பிஸ்ஸை சின்னும் படம் பிடிக்க, காமிரா லென்ஸ் முழுவதும் நீர் கோத்துக்கொண்டுவிட, 'சொன்னேன். கேட்டாயா?' என்று நயாகராவைவிடச் சத்தமாக சண்டை போட்டுக்கொண்டே வந்தார்கள். படகைவிட்டு மேலே வந்து நாங்கள் கழன்றுகொள்ள விருப்பப்பட, "வா கனடா பகுதிக்கு நடந்து போகலாம்" என்றார் பிஸ்வாஸ். "வேண்டாம் விசா கொடுக்க மாட்டார்கள்" என்று சொல்ல, "யார் சொன்னது? பாஸ்போர்ட்டுகளை சரண்டர் பண்ணிவிட்டால் ஒரு மணி நேரத்துக்கு அனுமதி கொடுப்பார்கள். அங்கேயிருந்து பார்ப்பதுதான் உத்தமம்" என்றார்.

நிஜமாகவே இங்கிருந்து தெரிந்த கனடியப் பகுதி கலகலப்பாகத்தான் இருந்தது. வ்யூவிங் டவர், வண்ண வண்ண விளக்குகள், ஜிலுஜிலுப்பு எல்லாமாக ஆசை காட்டியது. போய்த்தான் பார்க்கலாமே என்று பாலத்தைக் கடந்து கனடியப் பகுதிக்குச் சென்றோம். வாட்டசாட்டமாக ஒரு போலீஸ்காரி, "லெட் மி ஸீ யுவர் பாஸ்போர்ட்ஸ்" என்றாள். ஆளுக்கு ஐந்து சென்ட் வாங்கிக்கொண்டாள். "இங்கே நில்லுங்கள் பிஸ்வாஸ்" என்று பவ்யமாகச் சொன்னாள். 'பார்த்தாயா!' என்று என்னைப் பார்த்து கண்ணடித்தார். காத்திருந்தோம். அந்தப் பெண் மற்றொரு அதிகாரியைக் கொண்டுவந்து எங்களைச் சுட்டிக்காட்டினாள். பற்பல அமெரிக்கர்கள் உற்சாகமாக லைனைக் கடந்து சென்றுகொண்டிருக்க, எங்கள் நாலு பேரை மட்டும் தண்டையார்பேட்டை ஐ.டி. ஆஸ்பத்திரியில் போல் ஒதுக்கி வைத்திருந்தார்கள். மற்றொரு வெள்ளைகார ஆபீஸர் வந்து இடது கையால் எங்கள் பெயர்களை ஒரு ஃபாரத்தில் எழுதி நிரப்பி, "விசா இல்லை. அது இல்லாமல் கனடிய மண்ணில் அனுமதி கிடையாது. திரும்ப அமெரிக்கா செல்லுங்கள்" என்றார்.

சின்ஹாவுக்குக் கோபம். "எதற்காக எங்களுக்கு அனுமதி இல்லை என்று சொல்ல முடியுமா?"

"விசா இல்லை. அனுமதி இல்லை."

”நாங்கள் இந்தியர்கள் என்பதால்தானே இந்த மாதிரி நடத்துகிறீர்கள்?”

”அதெல்லாம் இல்லை.”

”அமெரிக்கர்களை மட்டும் அனுமதிக்கிறீர்கள்?”

”அவர்களிடம் விசா இருக்கிறது.”

”எப்படித் தெரியும்?”

”எங்களுக்குத் தெரியும். பாருங்கள். அதிகம் வாதாடினால் உங்களைச் சிறைக்கு அனுப்புவோம்” என்று காகிதங்களை எங்களிடம் கொடுத்தார்.

”இந்தக் காகிதங்களை நயாகராவிலேயே போடுகிறோம்” என்று பிஸ்வாஸ் சிரித்தார்.

”அது உங்கள் இஷ்டம்! இந்தக் காகிதம் இல்லையென்றால் மறுபடி அமெரிக்காவில் அனுமதி கிடைக்காது. உங்கள் வாழ்நாளை இந்தப் பாலத்தின் மத்தியிலேயே கழிக்க விருப்பமென்றால் சரி.”

நான் அவசரமாகக் காகிதங்களை வாங்கி வைத்துக்கொண்டேன்.

சின்ஹா திரும்பும் வழியெல்லாம், ”இந்தியர்கள் என்றால் எவ்வளவு மட்டமாக ட்ரீட் பண்ணுகிறார்கள்” என்று அரற்றிக் கொண்டே வந்தார்.

”நாம் அந்த மாதிரி நடந்துகொள்கிறோம்” என்றார் பிஸ்வாஸ்.

”நாம் என்ன தப்பாக நடந்துகொண்டுவிட்டோம்?”

”இல்லீகல் இமிக்ரேஷன்.”

”அதைப் பற்றி உனக்கென்ன தெரியும்?”

”உனக்குத்தான் தெரியுமோ?”

இருவரும் கனடிய அமெரிக்க எல்லைக்கோட்டில் நின்று கொண்டு இரைச்சலாகச் சண்டை போட்டுக்கொண்டார்கள். கம்யூனிஸம்,

மார்க்ஸிஸம், விவேகானந்தா... என்று என்னென்னவோ வார்த்தைகள் எல்லாம் கேட்க, நான் மனைவியை அழைத்துக்கொண்டு விரைவாக நடக்க, சட்டென்று பிஸ்வாஸ், "ரொங்கொரோஜன் எங்கே போகிறாய்?" என்று காலரைப் பிடித்து நிறுத்தினார். விதியே என்று நடந்து அமெரிக்கப் பகுதிக்கு வந்தோம்.

சின்ஹா தாகமாக இருக்கிறது என்று கோக்கோ கோலா மெஷினில் ஒரு ஐம்பது சென்ட் நாணயத்தைப் போட்டார். அமெரிக்காவில் இருந்த ஒரே ஒரு பழுதடைந்த கொக்கோ கோலா மெஷின் அது. காசை வாங்கிக்கொண்டு சும்மா இருந்தது.

சின்ஹா அதை அடித்து உதைத்து பற்பல சித்ரவதைகள் செய்து பார்த்தார். ஹ§ம்! போட்ட காசையோ, கோக்கோ கோலாவையோ தர மாட்டேன் என்று சொல்லிவிட்டது.

"அமெரிக்கர்கள் இத்தனை விஞ்ஞான முன்னேற்றம் அடைந்து என்ன பிரயோசனம்? ஒரு கோக்கோ கோலா மிஷினைச் சரியாக வைத்துக்கொள்ளத் தெரியவில்லையே!"

"உனக்கு ஒரு கோக்கோ கோலா கிடைக்கவில்லை என்றால் மேற்கத்திய நாகரிகத்தைச் சாடுவது என்ன நியாயம்?"

"இதெல்லாம் வைத்து என்ன பிரயோசனம்? ஒழுங்காக வைக்க வேண்டும், இல்லை மிஷின் வைக்கவே கூடாது."

"இந்த ஒரு மிஷின் வேலை செய்யவில்லை. எத்தனை மிஷின் வேலை செய்திருக்கிறது அதாவது எத்தனை கோக் சாப்பிட்டிருக்கிறோம்."

"தட்ஸ் நாட் தி பாயின்ட்."

"தட் இஸ் தி பாயின்ட்!"

"நீ ஒரு பூர்ஷ்வா... அடிவருடி!"

"நீ ஒரு சிவப்பு எலி..."

யார் சிவப்பு எலியோ, இரண்டு பேருக்கும் முகம் சிவந்து

போனதென்னவோ வாஸ்தவம்.

கம்யூனிஸம் காபிடலிஸம் என்று குடுமியைப் பிடித்துக் கொண்டிருக்கும் சமயம் நான் என் மனைவியின் கையைப் பிடித்து இழுத்து, ”வா ஓடலாம்!” என்றேன்.

அதிகாலை எழுந்து சொல்லாமல்கொள்ளாமல் பஸ் ஏறி திரும்ப ப்ளேன் பிடித்து, உட்கார்ந்ததும் பெருமூச்சுவிட்டேன்.

”அப்பாடா ஒழிஞ்சாங்க.”

”ரொங்கோரோஜன்!” என்று பின் ஸீட்டில் ஒரு கு ரல் கேட்டது!

****

பேப்பரில் பேர்

படிப்பு முடிந்து வேலை கிடைப்பதற்கு முன் கொஞ்ச காலம் சும்மா இருந்தேன். வேலை கிடைப்பதைப் பற்றி அப்போது சந்தேகங்களோ கவலையோ இல்லை. எப்படியாவது யாராவது ஏமாந்து வேலை கொடுத்துவிடுவார்கள் என்கிற நம்பிக்கை இருந்ததால் இப்போதைய இளைஞர்களைப் போல கோபமும் கம்யூனிசமும் இல்லாமல் ஹாய்யாக ஸ்ரீரங்கத்தில் சில மாதங்கள் இருந்தேன். அம்மா காலையில் காட்டமாகக் காப்பி கொடுப்பாள். குடித்துவிட்டுச் செய்தித்தாளை வரி விடாமல் படிப்பேன். காவேரிக்குப் போய்க் குளிப்பேன். பத்து மணிக்கெல்லாம் சாப்பிட்டுவிட்டு பிற்பகல் காப்பி வரை அரட்டை அடிக்க ரங்கு கடைக்குப் போய்விடுவேன்.

ரங்கு கடை என்பதைக் கடை என்று சொன்னால் கடைகள் எல்லாம் கோவித்துக்கொண்டு கூட்டம் கூட்டி நோட்டீஸ் விசிறி என்னைத் திட்டும். கீழ வாசலில் ஸப்-போஸ்ட் ஆபீசாக இருந்த இடம். நாலைந்து கைமாறி ஒருத்தருக்கும் செழிக்காமல் ரங்கு கடை போடலாம் என்று குத்தகை எடுத்த இடம். சுமார் ஆறுக்கு ஒன்பது அடி இடம். அதைப் பாதியாய்ச் சாக்கில் மறைத்து, அந்தப் பின் பாதி வருகிற சிநேகிதர்கள் சிலர் சிகரெட் குடிப்பதற்கும், கிடைத்தால் ஜிஞ்சர்பரிஸ் போன்ற கலக்கல்களைச் சப்பிப் பார்ப்பதற்கும் இருட்டான இடம். முன் பாதியில் நாலைந்து பலகைகளால் செய்த நொண்டி ஸ்டாண்டு. அதில் பழைய சிகரெட் டின்களில் ‘பலப்பம்’ என்று சொல்லப்படும் ‘ஸ்லேட்டுக்குச்சி’, நாற்பது பக்கம் அன் ரூல்டு, நன்கு அழிக்கும் ரப்பர், வாய் பூரா லிப்ஸ்டிக் போட்டது மாதிரி பண்ணிவிடும் ‘பப்பரமுட்டு’, கொஞ்சம் உப்புக் கடலை; இவ்வளவுதான் கடை.

இந்த மாதிரிப் பொருள்களை வியாபாரம் செய்து எப்படிப் பிழைக்க முடியும் என்று உங்களுக்கு யோசனை ஏற்படலாம். ரங்குவுக்கு ஒரு வீடு, கொஞ்சம் நிலம், கொஞ்சம் மனைவி எல்லாம் உண்டு. வசதியானவன். தன் மனைவியிடமிருந்து தினத்துக்கு ஒரு எட்டு மணி நேரமாவது தப்பிக்கிற ஆசையால் ரங்கு அந்தக் கடையை ஆரம்பித்திருந்தான். அதில் வேலை இல்லாத இளைஞர்கள் நாங்கள் அத்தனை பேரும் கூடுவோம்.

இன்றும் எப்போதும் போலக் காப்பி சாப்பிட்டுவிட்டு குளித்துவிட்டுப் பளபளவென்று ரங்கு கடைக்குப் போனேன். மேலவீதி அம்பி என்கிற

சுந்தர் வந்திருந்தான்.

‘தன்னன்னே’ என்று அழுவது போல முகத்தை வைத்துக்கொண்டு பாடினான். ”ரங்கா! என்னடா ராகம் இது?” என்று கேட்டான்.

”ஆரபியா?”

”தேவகாந்தாரி. பல்லைப் பேத்துருவேன்.”

”வாடா இன்ஜினீயர்!”

என்னைத்தான்.

நான் அவர்களுடன் அதிகம் பேச மாட்டேன். எது சொன்னாலும், என்ன கிண்டல் செய்தாலும் லேசாகச் சிரித்து மழுப்புவேன். அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பதில் எனக்கு இஷ்டம்.

”என்ன, வேலை கிடைச்சுதா?”

”இல்லை அம்பி.”

”அடுத்த வாரம் ஊர்ல இருக்கியோல்லியோ?”

”ஏன்?”

”தஞ்சாவூர் டீமோட கிரிக்கெட் மாட்ச், ஐஸ்கூல் மைதானத்தில். உன்னை லெவன்ல போட்டிருக்கேன். காலேஜுக்கு ஆடிருக்கேன்னு சொன்னியே?”

சொல்லியிருந்தேன். ஆனால், ரிஸர்வாக இருந்ததைச் சொல்லவில்லை.

”தஞ்சாவூர் டீமா?”

”ஆமா பெரிய டீம். கேவி ஏற்பாடு பண்ணியிருக்கான்!”

”மொத்தம் நம்மகிட்ட பதினோரு பேர் இருக்காளா?”

”தேத்திரலாம். ஸ்கூல் பசங்களை ஒண்ணு ரெண்டு பேர் சேத்துக்கலாம்.”

”என்னிக்கு மாட்ச்?”

”வர ஞாத்திக்கிழமை. நீ நன்னா ஆடுவியோல்லியோ? உன்னைத்தான் நம்பியிருக்கேன்.”

”சுமாரா ஆடுவேன்” என்று ஜகா வாங்கினேன்.

”பாட்ஸ்மனா, பௌலரா?”

”ரெண்டும் சுமாரா.”

”உங்ககிட்ட பாட், பந்து ஏதாவது இருக்கா?” பாட் என்றால் Bat.

”ஸாரி, இல்லையே!”

”பந்து வெச்சிருக்கறவனா பாத்து ஒருத்தனை டீம்ல சேர்த்துக்கணும். நம்ம வரதன் வரேன்னான். மண்ணச்சநல்லூர் போயிருக்கான். இன்னிக்கு பிராக்டிஸ் ஆரம்பிச்சாகணும். வரப்போறது அயனான டீம்.”

”கேவி ஒருத்தன் போதுமே.”

”இல்லையே. இந்தப் பக்கம் ஸ்டாண்டு குடுக்கணுமே அவனுக்கு.”

சொல்லப்பட்ட கேவி நிஜமாகவே ரொம்ப சாமர்த்தியமான கிரிக்கெட் ஆட்டக்காரன். கச்சலாகத்தான் இருப்பான். அவனுக்கு ஏறக்குறைய எல்லா ஆட்டமும் ஒழுங்காக வரும். கிரிக்கெட்டில் அவன் பாட்டிங் பார்க்க அப்படி ஒன்றும் அழகாக இருக்காது. இருந்தாலும் எப்படியாவது பந்தைத் தேக்கி அடித்துவிடுவான். பௌலிங் ஒரு மாதிரி ‘த்ரோ’ மாதிரிப் போடுவான். எப்படியாவது சாலக்காக விக்கெட் எடுத்துவிடுவான். அவன்தான் டீமுக்கு முதுகெலும்பு. மற்ற பேர் எல்லாம் எப்போதோ துணிப் பந்திலும் ரப்பர் பந்திலும் வீதி கிரிக்கெட் விளையாடியவர்கள்.

அப்போது கேவி வந்தான். கையில் ஒரு பழைய பாட் வைத்திருந்தான்.

அதில் பலவிதமான பாண்டேஜுகள் போட்டிருந்தன. ”சத்தியத்துக்கு இதுதான் கிடைச்சுது. பந்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன்.”

”கேவி... மாட்ச் நிஜ மாட்சா?”

”ஆமாடா! அம்பி சொல்லலை?”

நிஜ மாட்ச் என்றால் ரப்பர் அல்லது துணிப் பந்தில்லாமல், நிஜமாகவே கிரிக்கெட் பந்தில் மாட் விரித்து இரண்டு பக்கமும் ஸ்டம்ப் வைத்து அம்பயர்கள் சகிதமாகப் பாதுகாப்புக்கு கிளவுஸ் எல்லாம் போட்டுக்கொண்டு ஆடுவது. அந்த மாதிரி மாட்சுகள் எல்லாம் சமீபத்தில் எங்களிடையே வழக்கொழிந்து போயிருந்தன. ஏதோ பால்காரர் இல்லாதபோது தெருவில் சுவரில் கரிக்கோடிட்டு ரப்பர் பந்து தொலையும் வரை ஆடுவோம்.

கேவி ஒரு திசையில் பார்த்துக்கொண்டு ”ரெண்டு நாளாவது பிராக்டீஸ் பண்ணுவியோல்யோ? வரப் போறது பெரிய டீம்.”

”உனக்கேண்டா இந்த வம்பெல்லாம்? கேவி, பெரிய டீம்னா எங்கயாவது எக்கச்சக்கமா பந்து போட்டு மர்மஸ்தானத்துல பட்டுரப் போறது” என்றான் ரங்கு.

”அதெல்லாம் நான் பாத்துக்கறேன். என்னைப் பார்த்து நீ வரயோல்லியோ?” என்றான்.

”நெட் பிராக்டீஸ் போட்டு நல்லா விளையாடறவங்களை செலக்ட் பண்ணேன் கேவி.”

”செலக்ட்டாவது ஒண்ணாவது. பதினோரு பேருக்கே இங்க சிங்கியடிக்கிறது..! நீ எதுக்கும் நாளைக்கு சாயங்காலம் ஹைஸ்கூல் மைதானத்துக்கு வந்துரு. புறப்பாடு ஆயிருக்கும். பெருமாள் சேவிக்கப் போகணும்” என்று விரைந்தான்.

கேவி கோவிலில் சில்லரை கைங்கர்யங்கள் எல்லாம் செய்வான். கூட்டத்தை விலக்க மாந்தோல் அடிப்பான். தேரின்போது பின்னால் கட்டை போட்டு நெம்புவான். டமாரம் அடிப்பான். முட்டுக்கட்டை போடுவான். வையாளியின்போது முன் வரிசையில் ஸ்ரீபாதந்

தாங்கியாக இருப்பான்.

எனக்கு அப்போதே தஞ்சாவூர்க்காரர்களுடன் கிரிக்கெட் மாட்சைப் பற்றிக் கவலையாக இருந்தது. இதுவரை நான் ஆடின கிரிக்கெட் எல்லாம் ஓரங்கட்டின கிரிக்கெட்தான். அதாவது பன்னிரண்டாவது ஆசாமி, அல்லது ஸ்கோரர் என்று. ஒரு தடவை அம்பயர் ஆக இருந்தபோது எங்கள் காலேஜ் கட்சி அதட்டிக் கேட்டார்களே என்று எல்பிடபிள்யூவுக்குக் கைதூக்கிவிட்டேன். அந்த பாட்ஸ்மன் 'நீ வெளிய வருவில்ல' என்று பேனாக் கத்தியைக் காட்டி, முறைத்துவிட்டுப் போனான். ஆட்டம் முடிந்ததும் என்னை நாலு பேர் கக்கூஸ் கதவு வழியாக அடைகாத்துக் கடத்திக்கொண்டுபோக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இப்போது மறுபடி என் கிரிக்கெட் திறமைக்கு பரீட்சை! பார்க்கலாம். கேவி எல்லாம் பார்த்துக்கொள்வான். எனக்கு சந்தர்ப்பம் வருவதற்குள் 'டிக்ளேர்' செய்துவிடலாம். ஃபீல்டிங்கின்போது எங்கேயாவது டீப் தர்ட் மேனாக நின்றால் போயிற்று. தப்பித்துவிடலாம் என்று எண்ணிக்கொண்டேன்.

மறுநாள் அவசரமாகத் தயாரிக்கப்பட்ட 'ஸ்ரீரங்கம் கிரிக்கெட் கிளப்'பின் முதல் வெள்ளோட்டம் பள்ளி மைதானத்தில் துவங்கியது. கேவி கால் பாதுகாப்புக்காக இரண்டு பேடும் (Pad) கட்டைவிரல் பகுதியில் ஓட்டையாக இருந்த ஒரு ஜோடி கிளவ்சும் விக்கெட் கீப்பருக்காக அதே ஏழ்மையுடன் பாதுகாப்புச் சாதனங்களும் திரட்டிவிட்டான். ஸ்டம்புகள் சிதைந்திருந்தன. சிங்க வாத்தியார் அன்றைக்கு மட்டும் ஸ்கூல் ஸ்டம்பு கொடுக்கிறதாகச் சொல்லியிருக்கிறாராம். என்னைப் பந்து போடச் சொல்லி கேவியே பாட்டிங் பயிற்சி செய்தான். எகிறி எகிறி அடித்து முள்ளுச் செடிகளில் எல்லாம் போய்ப் பந்து பொறுக்கச் சொன்னான். இருட்டினதும் எனக்கு பாட்டிங் கொடுத்தான். இரண்டே பந்தில் என் ஸ்டம்பைப் பெயர்த்துவிட்டான். "கேவி நான் வரலைடா!" என்றேன்.

"பரவாயில்லை, தைரியமா ஆடு, சுமாரா ஆடறியே!"

அம்பிதான் கேப்டன். அவன் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். சின்னச் சின்ன பையன்களாக நான்கு பேர் உற்சாகமாகப் பந்து பொறுக்கிக்கொண்டிருந்தார்கள். "பாக்கி ப்ளேயர்ஸ் எல்லாம் வரலையா?" என்று கேட்டதற்கு கேவி, "இவங்கதான் ப்ளேயர்ஸ்! இவன் பாட் கொண்டு வரான். இவனைச் சேர்த்துண்டுதான் ஆகணும்" என்று ஒரு குழந்தையைக் காட்டினான்.

”நிச்சயம் தோத்துப் போயிருவோம்” என்றேன்.

”நீ ஏன் கவலைப்படறே? தோத்தா ஸ்கோர் ஏத்தறதுக்கு வேம்பு வரான். ஒரு பக்கம் எல்பிடபிள்யூ கொடுக்கறதுக்கு அம்பயர் நம்பாளு. இதெல்லாம் தேவைப்பட்டாத்தானே?”

தஞ்சாவூர் டீம் ஞாயிற்றுக்கிழமை ஜங்ஷனில் ரயில் மாறி பாசஞ்சர் பிடித்து வந்தார்கள். அம்பியும் கேவியும் நானும்தான் ஸ்டேஷனுக்கு அவர்களை வரவேற்கப் போயிருந்தோம். டீம் வந்து இறங்கினபோது எனக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. ஒவ்வொருத்தரும் மாமா மாமாவாக, தடித்தடியாக இறங்கினார்கள். சிலர் கூடவே மனைவி மக்களையும் அழைத்து வந்திருந்தார்கள். எல்லோரும் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே பேசினார்கள். ”பெரியவங்க யாரும் வரலையா தம்பி?” என்று கேட்டார் இருக்கிறதிலேயே உயரமாக இருந்த ஒருத்தர்.

”நாங்கதான் வந்திருக்கோம்.”

”உங்க டீம் கேப்டன் வரலையா?”

”இதோ இவன்தான் கேப்டன்” என்று அம்பியை முன்னே தள்ளினான்.

”இந்தப் பையனா?” என்று அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து விஷமமாகச் சிரித்துக்கொண்டார்கள். ”தம்பி! நாங்க விளையாட வந்தது ஸ்ரீரங்கம் பி டீமோட இல்லை” என்றார்.

”ஏபி ஒண்ணும் கிடையாதுங்க. இருக்கறது ஒரே டீம்தான்” என்றான் கேவி.

”கிரிக்கெட் பால்தானே, கவர் பால் இல்லையே?” என்றார் சிரிப்புடன்.

”கிரிக்கெட் பால்தான்.”

”இல்லை, ரொம்ப சின்னவங்களா இருக்கிங்களே. பெரியவங்கள்லாம் கிரவுண்டில இருக்காங்களா?”

”இல்லைங்க. இருக்கறதுக்குள்ள பெரியவங்க நாங்கதான்.”

”அப்ப ராம்கி வா போயிரலாம். டீம் ரொம்ப தேசல். இவங்களோட எப்படி ஆடுறது?”

”பரவால்லை, ஆடிப்பாருங்க” என்றான் கேவி.

”எப்படி தம்பி ஆடறது? இதபார், ராம்கியைப் பாத்தல்ல, தென் மண்டலத்திலேயே ஃபாஸ்ட் பௌலர். மண்டை கிண்டை எகிறிக்கிச்சுன்னா யார் பொறுப்பு? எங்களை போலீஸ் புடிச்சுக்கும்! குழந்தைகளோட வெளையாட நாங்க வரலை. அதபாரு ஜான். எங்க விக்கெட் கீப்பர், உங்க மூணு பேத்தையும் இடுப்பில தூக்கி வெச்சுப்பார். சேச்சே, உங்ககூட நாங்க விளையாட முடியாதுப்பா. என்னவோ ஸ்ரீரங்கம்னா பெரிய டீம்னு அந்த சாமிநாதன் சொன்னாரு. அதனாலதான் பிக்னிக் போற மாதிரி கிளம்பி வந்தோம். ராம்கி, வா பேசாம கோயில் பார்த்துட்டு திரும்பிப் போயிரலாம். ரொம்பப் பொட்டி டீம் இது.”

நான் விக்கெட் கீப்பரைப் பார்த்தேன். ஆங்கிலோ இந்தியர். தன் மனைவி, சிவப்பு சிவப்பாக இரண்டு பெண் குழந்தைகளுடன் வந்திருந்தார். ஸ்டைலாக உதட்டில் சிகரெட் பொருத்தியிருந்தார். என்னைப் பச்சைக் கண்களால் பார்த்துச் சிரித்தார். ”வாட் ஆர் யூ? பாட்ஸ்மன் பௌலர்?” என்று நக்கலாகக் கேட்டார்.

கேவி ”அப்ப வரமாட்டிங்க?” என்றான்.

”சேச்சே, நான்தான் சொன்னேனே.”

”பயப்படறிங்களா?”

ராம்கி சிரித்தார்.

”பயந்தாங்குள்ளி! ஆட்டம் தெரியாம என்னவோ காரணம் சொல்லித் தப்பிச்சுக்கப் பாக்கறீங்களா? பயந்தாங்குள்ளி! பயந்தாங்குள்ளி!” என்று இரைந்தான்.

”என்னடா சொன்னே?”

”நாங்க எல்லா ஏற்பாடும் பண்ணிட்டோம். இப்ப போய்

ஆடமாட்டேன்னு சொன்னா பயந்தாங்குள்ளின்னுதான் சொல்வோம்.”

அவர்கள் சிரித்துக்கொண்டே ”என்ன ராம்கி? சின்னப் பயங்களோட ஆடணுமா?”

”வந்தது வந்தோம், பாத்துரலாமே.”

”நீ ஃபுல் ஸ்பீட் போடாதே. பசங்க மேல எக்கச்சக்கமா பட்டுதுன்னா பிராணனை விட்டுருவாங்க.”

”அதெப்படி? பௌலிங்னா ‘பேஸ்’ போடத்தான் போடுவேன்.”

”கமான் பாய்ஸ், லெட்ஸ் ஹேவ் ஃபன்” என்று அவர்கள் கடைசியில் இசைந்தார்கள்.

எல்லோரும் பெரியவர்கள். துல்லியமாக வெள்ளைச் சட்டை, பேன்ட் எல்லாம் அணிந்திருந்தார்கள். அவர்கள் கொண்டுவந்த எல்லாம் புத்தம் புதுசாக இருந்தன. பாட்டில் விஜய் ஹஸாரேயின் கையெழுத்து பொறித்திருந்தது. புதுசாகப் பந்து பளபளவென்று செங்கல் சிவப்பில் மூன்று வைத்திருந்தார்கள். பிராக்டீஸ் பந்து வேறு ஆறு வைத்திருந்தார்கள். கிட் நிறைய கிளவ்ஸ், பேடுகள் என்று பயங்கரமாக நிரம்பி வழிந்தது. நாங்கள் இதுவரை பார்த்தே இராத அப்டாமன் கார்டு வைத்திருந்தார்கள். மைதானத்தில் அவர்கள் பளபளவென்று வந்து சேர்ந்தபோது வரதன் ”சைடு கட்டாதுடா, நான் போறேன்” என்றான். கேவி அவனைச் சமாதானப்படுத்தி உட்கார வைத்தான். எனக்கு நெர்வஸாகத்தான் இருந்தது. வயிற்றை என்னவோ சங்கடம் பண்ணியது.

அவர்கள் சிரித்துக்கொண்டே மைதானத்தைச் சுற்றி வந்தார்கள். சின்னப் பையன்கள் மாட்ச் பார்க்க நூறு பேர் கூட்டம். கேவி சேர்த்திருந்தான். எல்லோரும் அந்த விக்கெட் கீப்பர் மாமா சிகரெட் பிடிப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ராம்கி என்பவர் ஆறைரை அடி உயரம் இருந்தார். அங்கேயிருந்து ஓடிவந்து மாதிரிக்கு ஒரு பந்து போட்டுக் காட்டினார். திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் போல தூள் பறந்தது. எனக்கு இப்போது வயிற்றில் பட்டுப் பூச்சிகள் விளையாடின.

அம்பிதான் டாஸ் போடப் போனான். தோற்றுவிட்டான்.

அவர்கள் ”மாட்சை சீக்கிரம் முடிக்கணும். நீங்களே பாட் பண்ணுங்க முதல்ல” என்று எங்களிடம் கொடுத்துவிட்டார்கள்.

பதினோரு மாமாக்களும் உற்சாகமாகப் பழைய பந்தைப் பிடித்துக்கொண்டு மைதானத்தில் இறங்கினார்கள். புதிய பந்தைச் சின்னக் குழந்தை போலப் போற்றித் தேய்த்துக் கன்னத்தைச் சிவக்க வைத்துக்கொண்டிருந்தார்கள்.

கேவிதான் ஓப்பனிங். அவனுடன் செல்ல எல்லோரும் மறுத்தோம். கேவி கொஞ்ச நேரம் யோசித்து என்னைப் பார்த்தான். ”நீதான்டா வரணும்” என்றான்.

”அய்யோ, நான் மாட்டேம்பா. நான் எய்ட் டவுன் வரேன்!”

”சேச்சே, அனுபவம் உள்ள ஆள் யாரும் இல்லை. நீ வந்துதான் ஆகணும். என்ன விளையாடறே?”

”டீம்னு வந்தாச்சுன்னா கேப்டன் சொல்றதைக் கேட்கணும்” என்றான் அம்பி.

”அடப்பாவி, காவு வாங்கறீங்களேடா” என்று ஒற்றைப் பேடைக் கட்டிக்கொண்டு ”கொஞ்சம் இரு. நம்பர் டூ போய்ட்டு வந்துடறேன்” என்று ஓடினேன்.

அந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற மாட்ச் துவங்கியது. கேவிதான் முதலில் பாட் செய்தான். நான் ரன்னர். அந்த ராம்கி அதிக தூரத்தில் புள்ளியாக நின்றுகொண்டிருக்க விக்கெட் கீப்பர் இருபது கெஜம் தள்ளி ஏறக்குறைய கேர்ள்ஸ் ஹைஸ்கூல்கிட்ட நின்றுகொண்டு ‘டேக் இட் ஈஸி ராம்கி’ என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

முதல் பந்து சரியாக பிட்சில் விழாமல் எங்கேயோ போக விக்கெட் கீப்பர் அதைத் தடுமாறிப் பிடிப்பதற்குள் கேவி ”ஓடுரா” என்று ஒரு ‘பை’ எடுத்து என் பக்கம் ஓடி வந்து என்னைப் பந்தை எதிர்க்க அனுப்பிவிட்டான்.

‘கார்டு’ வாங்கிக்கொள்வதற்கு எல்லாம் எனக்குத் தோன்றவில்லை. உடல் பூரா எலக்ட்ரிக் ஹாமர் மாதிரி நடுங்கிக்கொண்டிருக்க, மறுபடி

பாத்ரூம் போகும் இச்சையுடன் ஸ்ரீரங்கப் பெருமாளைப் பற்றிச் சில சுலோகங்களும் கலந்திருந்தன. அதோ... தூரப் பிரயாணி போல் அந்த ராம்கி என்கிறவர் தடதடவென்று சூட்டில் இருக்கும் காட்டெருமை போல் ஓடி வருகிறார். கை, ர் ர் ரென்று சுழல ஒரு கரு ரத்தக் கட்டிபோல் பந்து என்னை நோக்கி வந்து டமால் என்று என் காலில் படுகிறது. 'ஹௌஸாட்!' என்று மைதானம் முழுவதுமே அலறுகிறது! ஆனால் எங்கள் கட்சி அம்பயர் பையாக் குட்டி ஞானம் பெற்ற புத்தர்போல் அசங்கவில்லையே! ராம்கி அவனை அற்பப் புழுபோலப் பார்த்தார்.

அடுத்த பந்து பற்றி என்னால் ஏதும் எழுத முடியவில்லை. கம்பராமாயணத்தில் வில் உடைத்ததுபோல வந்தது. என் பாட்டில் எங்கோ பட்டு பவுண்டரிக்குப் பிய்த்துக்கொண்டு ஓடியது. எல்லோரும் சிரித்துக்கொண்டே என்னைப் பார்த்துத் தலையில் அடித்துக்கொண்டாலும் எனக்கு நான்கு ரன்கள் கிடைத்ததற்குச் சின்னப் பயல்கள் விசிலடித்துக் கைதட்டினார்கள். எனக்குக் கொஞ்சம் புளகாங்கிதமும் பயத்துடன் சேர்ந்துகொண்டது. அடுத்த பந்து மற்றொரு 'ஹௌஸாட்!' கேட்டு முடிப்பதற்குள் கேவி ஓடுரா ஓடுரா என்று 'லெக் பை'க்கு ஓடிவந்துவிட்டான்.

மொத்தம் ஆறு ரன் ஆகிவிட அந்த ராம்கி சற்றுக் கோபத்துடன் டீப் ஃபைன் லெக்கில் ஒரு ஆளை நிறுத்தி இன்னும் கொஞ்சம் அடியெடுத்து இன்னும் கொஞ்சம் தூரம் போய் ஓ...டி வந்து கேவியின் தலைக்குமேல் பெரிசாக பம்பர் போட்டார்.

கேவி அஞ்சா நெஞ்சன்! என்னவோ மாதிரி பாட்டை வைத்துக்கொண்டு ஒரு வீசு வீச பந்து பட்டு ஏறக்குறைய இரண்டு தென்னைமர உயரத்துக்கு எவ்வியது. ராம்கி நிறுத்தி வைத்திருந்த ஃபீல்டருக்கு, அருமையாக அழகாக ஒரு காட்ச் வந்தது. அவருக்கு நிதானமாக பந்தின் கீழ் அட்ஜஸ்ட் பண்ணி நின்றுகொள்ள ஏக சமயம் இருந்தது. சிரித்துக்கொண்டு கையைத் தேய்த்துக்கொண்டு கீழே வரும் பந்தை வாங்கி வழியவிட்டார்! சற்று அசட்டு முகத்துடன் "ஸாரி கேப்டன். தி ஸன் வாஸ் ஆன் மை ஐஸ்!" என்றார். இதற்குள் கேவி கவலைப் படாமல் என்னுடன் ஓடி இரண்டு ரன் எடுத்துவிட்டான்.

கேப்டன் ராம்கி, "பரவாயில்லை. அடுத்த பால்ல எடுத்துரலாம்" என்று திரும்பி தன் பௌலிங் ஆரம்பத்துக்குப் போனார்.

அடுத்த பாலும் கேவியை எடுக்க முடியவில்லை. அதற்கு அடுத்த பாலும் முடியவில்லை. நானும் கேவியும் முதல் விக்கெட்டுக்கு ஐம்பத்து ஐந்து ரன்கள் செய்தோம். அதில் நாற்பத்தெட்டு கேவி. முதலில் அடித்த நான்குக்கு அப்புறம் என்னை ஆடவே விடவில்லை. ஆறாவது பந்து, டாண் என்று ஒரு ரன் எப்படியாவது எடுத்து விடுவான். 'ஓடுரா ஒடு!' எங்கள் முதல் விக்கெட் ஜோடியைப் பெயர்க்க ராம்கி ஆங்கிலோ இந்தியரிடமும் மற்ற ஸீனியர் மெம்பர்களிடமும் அடிக்கடி கூடிப் பேச வேண்டியதாகிவிட்டது.

கடைசியில் என்னைக்கூட ரன் அவுட்தான் செய்ய முடிந்தது. கேவி பேராசையுடன் எடுக்க முயற்சித்த மூன்றாவது ரன்னுக்கு விழுந்தேன். நான் திரும்பி வந்தபோது என்னவோ செஞ்சுரி போட்ட மாதிரி எல்லோரும் கை தட்டினார்கள். கேவி என்னை மாதிரியே மற்ற பேரையும் நாக்கு உலர ஓடவைத்தே, மொத்தம் 152 ரன் எடுத்துவிட்டோம். கேவி அதில் 93, கேவி சைபரில் இருக்கும்போது அந்த லட்டு மாதிரி காட்சை விட்ட அந்த ஆசாமிகளை எல்லோரும் சபித்துக்கொண்டே வந்தார்கள். அவன் தாழ்த்தப்பட்டவன்போல மூலையில் அடிக்கடி தலையை ஆட்டிக்கொண்டு சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தான்.

அந்த மாட்சில் நாங்கள் வென்றது செய்தியல்ல. இதிலும் கேவியின் தந்திரம்தான் அவர்களை 139இல் அவுட் ஆக வைத்துவிட்டது.

தஞ்சாவூர்க்காரர்கள் திரும்பிப்போகும்போது ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை. மறு மாட்சுக்கு தஞ்சாவூர் கூப்பிட்டார்கள். எங்கள் ஸ்டார் ப்ளேயர் வரவில்லை என்றார்கள். கேவி புன்னகையுடன் "ஊம். தாராளமாக வரோம்" என்றான். "தோத்தாங்குள்ளி தோல் புடுங்கி" என்று நடனமாடிய சிறுவர்களைக் கட்டுப்படுத்தினான்.

சும்மா பொழுது போகவில்லை என்று அன்று அங்கு வந்திருந்த 'எக்ஸ்பிரஸ்' ஏஜண்டும் நிருபரும் மறுநாள் எங்கள் வெற்றியைப் பற்றிச் செய்தி அனுப்பி K.V.Srini vasan was ably supported by Rangarajan, varadan and Ambi sundar….made a Sparkling 93' என்று ஒரு மஹா ஓரத்தில் பேப்பரில் பேர் வந்தது. இப்போது எல்லா பேப்பரிலும் எத்தனையோ முறை என் பேர் வருகிறது. ஆனால் அந்த ஒரு தினம் ஒரு மூலையில் ஒரு வரியில் கிடைத்த துல்லியமான சந்தோஷம் எனக்குத் திரும்பக் கிடைக்கவில்லை.

அந்த மறு மாட்ச் நடக்கவில்லை. எல்லோரும் அதன் பின் சிதறிவிட்டோம். சிலர் மணந்துகொண்டோம். சிலர் இறந்துவிட்டோம். இருபத்தைந்து வருஷம் கழித்து சமீபத்தில் ஸ்ரீரங்கம் போயிருந்தபோது கேவியைப் பார்த்தேன். என்னதான் நரைத்த தலையாக இருந்தாலும் கண்களில் பிரகாசம் போகவில்லை. 'என்ன, இன்னொரு மாட்ச் ஏற்பாடு பண்ணட ுடுமா?' என்றான்.

****

நிபந்தனை

ஒன்பது மணிக்கே வெயில் கொளுத்திற்று. கசகசவென்று வியர்வை முதுகுக்குள், மார்பில் எல்லாம் சின்னச் சின்ன ஊசிகளாகக் குத்தியது. ஈஸ்வரிக்குப் பட்டுப்புடவை ஏன் உடுத்திக்கொண்டு வந்தோம் என்றிருந்தது.

பெரிய யானை ஒன்று முனிசிபாலிட்டி குழாயில் சமர்த்தாகத் தண்ணீர் பிடித்து முதுகில் ஆரவாரமாக வாரி இறைத்துக்கொண்டு இருந்தது. யானைப்பாகன் பீடி குடித்துக்கொண்டு இருந்தான். எதிரே கட்டை குட்டையாகக் கோபுரம் தெரிந்தது. அருகே தெப்பக்குளம். அதற்கு எதிர்ப்புறத்தில் பழங்காலத்து மரக் கட்டடத்தின் உச்சாணியில் இருந்த விநோத கடிகாரத்தையே பார்த்துக்கொண்டு பத்துப் பதினைந்து பேர் ஒன்பது அடிக்கக் காத்திருந்தார்கள். மணியடிக்கும்போது இரண்டு பொம்மை ஆடுகள் ஒன்றை ஒன்று முட்டிக்கொள்ளுமாம். மஹாராஜா செயலாக இருந்தபோது வாங்கிப் போட்ட கடிகாரம். இப்போது மஹாராஜாவே அந்தப் பதினைந்து பேரில் ஒருவராக இருந்தால் ஆச்சர்யப்படக் கூடாது என்று சோமசுந்தரம் எண்ணினான்.

"கோயிலுக்குப் போயிரலாமே முதல்ல" என்றாள் ஈஸ்வரி.

"இத பார்... எனக்குப் பசிக்குது. காலைல எழுந்து ஒரு காபி சாப்பிட்டது. ஒண்ணு ரெண்டு பிளேட் இட்லி தின்னாத்தான் வண்டி ஓடும்."

"எங்க வந்தாலும் சாப்பாடுதான் உங்களுக்கு."

"என்ன செய்யறது. வேளைக்கு வேளை செய்து போட்டு என்னைக் கெடுத்துவெச்சிருக்க."

சோமசுந்தரம் காரை அந்தக் கட்டட நிழலில் நிறுத்தினான். மூஞ்சியைப் பார்த்து சுமார் என்று சொல்லக்கூடிய ஓர் ஓட்டலில் நுழைந்தார்கள். கல்லாவில் ஊதுபத்திப் பட்டைகள் அடுக்கியிருந்தன. பத்திரிகைகளின் இந்த வார அட்டைப் படப் பெண்மணி கேரளத்துத் தேங்காய்களை நினைவுபடுத்தினாள். குலைகுலையாகச் செக்கச் சிவந்த வாழைப் பழங்கள் தொங்கின. மரவள்ளியும் பலாவும் வறுவலாகப் பாலிதீன் பைகளில் அடங்கியிருந்தன. கமல்ஹாசனுக்குக் கீழே மலையாளத்தில் நண்டு நண்டாக ஏதோ எழுதியிருந்தது.

”எந்தா வேண்ட?” என்றான். காதில் பென்சில்.

”எனக்கு மலையாளம் தெரியாது. தமிழ்தான்.”

”சாரமில்லா... பரயு...”

”என்னத்தைப் பரயறது. ஈஸ்வரி, நீ என்ன சாப்பிடற?”

”எனக்கு ஒண்ணும் வேண்டாம். சாமி கும்பிட்டுட்டு அப்புறம் சாப்பிடலாம்னு இருக்கேன்.”

”சரியாப்போச்சு, மறுபடி ஓட்டலுக்கு வரணுமா?”

”ஏன்? வந்தா என்ன?” என்றாள் சற்று அழுத்தமாக.

”ஓ.கே! ஓ.கே!”

”சின்னப் புள்ளைலேர்ந்து எங்க அப்பாம்மா கத்துக்கொடுத்திருக்காங்க, சாமி கும்பிட்டுட்டுச் சாப்பிடணும்னு. உங்களுக்கு அது மூடநம்பிக்கையா இருக்கலாம். வேணா...”

”சேச்சே. இந்தச் சின்ன விஷயத்துக்குச் சண்டையைத் துவங்காதே. சரி... ஏம்ப்பா எனக்கு முதல்ல மூணு இட்லி, வடை. அப்புறம் பச்சைத்தண்ணி; பச்சைவெள்ளம். சுக்கைப் போட்டுக் காய்ச்சி மஞ்சளா ஒரு வெள்ளம் கொண்டுவெப்பிங்களே... அது வேண்டா. கேட்டோ?” என்றான்.

கணவனின் மலையாள முயற்சிகளில் சிரிப்பு வந்தது ஈஸ்வரிக்கு.

கோபம் போய்விட்டது.

”முணக்குன்னா கோபமா?” என்றான்.

”பின்ன என்னவாம். நான் எது சொன்னாலும் அதுக்கு எதிராச் சொன்னா?”

”சரி! இன்னிக்கு ஒரு பிராமிஸ். நீ என்ன சொன்னாலும் சரி சரி. மறுப்பே தெரிவிக்க மாட்டேன். வெளியூர்ல ஓட்டல்ல வந்து எதுக்காகச் சண்டை போடணும்?”

சாப்பிட்டுவிட்டு வெளியே வரும்போது, ஈஸ்வரி அந்த அம்மாளைப் பார்த்தாள். பிராமண மாது. நாற்பது இருக்கலாம். கிழிந்த நார்ப்பட்டில் ஜாதிக்கட்டு; ரவிக்கையில் ஒட்டு; நெற்றியில் வெறுமை. நரை இழையோடிய தலை ஒரு சின்னத் தேங்காய் போல இருந்தது. அவர்களை அணுகி சன்னமாகப் பிச்சை எடுத்தாள். தயக்கமாகக் கை நீட்டி ஹாஸ்யமில்லாமல் சிரித்து மெல்லிய குரலில், ”அம்மா மஹாலட்சுமி, ஏதாவது காசு தாயேன்” என்றாள். பற்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சோழிகள்.

அவள் ஒரு காலத்தில் செல்வாக்காக இருந்து நொடித்துப்போய் பிச்சை எடுக்க வந்திருக்க வேண்டும் என்பது அவள் தோற்றத்திலும் கூசிக் குறுகிய தயக்கத்திலும் வெளிப்பட்டது.

சோமசுந்தரம் அவளுக்கு நாலணா கொடுத்தான்.

அவள் அதை வாங்கிப் பார்த்து, ”நாலணா போறாதுப்பா. குழந்தை பசியாக் கிடக்கிறாள். நானும் பட்டினி” என்றாள்.

”எவ்வளவு தரணும்கறிங்க பாட்டி?” ‘பாட்டி’ என்று அழைத்தது அசம்பாவிதமாக இருந்தாலும் ‘மாமி’ என்று அழைத்துத் தனக்கு ஒரு அவசியமில்லாத பிராமணத்தன்மையை வரவழைத்துக்கொள்ள சோமசுந்தரம் விரும்பவில்லை.

”ஒரு ரூபா கொடுத்தா எதிர்த்தாப்ல காபி கிளப்பில் ஒரு முழுச் சாப்பாடு கிடைக்கும். நானும் என் பெண்ணும் சாப்பிடலாமாக்கும்” அவள் தமிழில் மலையாள உச்சரிப்புத் தென்பட்டது. பாலக்காடாக இருக்கலாம்.

”இத பாருங்க... உங்களுக்கு ஒரு ரூபா கொடுத்தா உங்க வாழ்க்கைப் பிரச்னை தீர்ந்துபோயிடப் போறதில்லை. கொடுக்கிறத வாங்கிட்டுப் போங்க பெரியம்மா! வேற மூணு நாலு ஆளுங்ககிட்ட கேட்டா ஒரு ரூபா. அவ்வளவுதான்!” என்று சோமசுந்தரம் நடந்தான். ஈஸ்வரி சற்றுத் தயங்கினாள்.

”அம்மா மகாலட்சுமி; ஜகதீஸ்வரி; பூவும் பொட்டுமா அழகாத் தங்கமாட்டமா இருக்கியே. உனக்குத் தங்க விக்கிரகம் மாதிரி ஒரு புள்ளை பொறந்து எல்லாரும் செழிப்பா இருப்பீங்க. ஒரு ரூபா கொடுத்துட்டுப் போம்மா ராஜாத்தி.”

கணவன் அங்கிருந்து, ”அவகூட என்ன பேச்சு? வா வா!” என்று அவசரப்படுத்தினான். ஒரு கடைக்குள் நுழைந்தான். ”தொந்தரவு பண்ணாதிங்கம்மா, போங்க!” என்று ஈஸ்வரி நடக்க, அந்தப் பெண்மணி தொடர்ந்து கடைவாசல் வரைக்கும் நீட்டிய கையுடன் வந்தாள்.

கடைக்குள் ஆயிரம் உதவாக்கரை சாமான்கள் இருந்தன. எத்தனைவிதமான மர யானைகள். மரம் இழுக்கும் யானை, சேவிக்கும் யானை, ஏன்... யானை மேல் யானையைக்கூட விட்டுவைக்கவில்லை.

”என்ன, போனாளா?”

”இல்லீங்க. பாவம் அய்யர் சாதி.”

”ஆமா! அய்யர் சாதிதான். அதுக்குன்னு ஜாஸ்தி பணம் குடுக்கணும்கறியா? பிச்சைலேகூட வர்ணாச்சரம தர்மமா? இந்த யானை என்ன விலைங்க?”

”சட், அது வேண்டாங்க. புத்தி போவுது பாரு!”

”விலை கேட்டேன்! திருவனந்தபுரத்துக்கு வந்ததுக்கு ஞாபகமா யானை வாங்கிட்டுப் போக வேண்டாமா?”

”அது நல்லா இருக்குதில்ல?” என்று நீண்ட சதுரப்பாயின் மேல் தத்ரூபமாக ஒரு யானை வரையப்பட்டிருந்ததைக் காட்டினாள். ”ஹாலில் அலங்காரமா தொங்கவிடலாம். என்னப்பா விலை?”

பதினெட்டு ரூபாய் கொடுத்து அதை வாங்கிச் சுருட்டிக்கொண்டு கடைக்கு வெளியே வரும்போது, அந்த அம்மாள் இன்னும் நின்றிருந்தாள். அதே அரைக்கை நீட்டல். அதே அசட்டுச் சிரிப்பு. ஏழ்மையின் தங்க மெடல்கள். ஈஸ்வரிக்குக் குற்ற உணர்வு உறுத்தியது. 'பதினெட்டு ரூபாய் கொடுத்து அலங்கார சாமான் வாங்குகிறாய். எனக்கு நாலணாவுக்குக் கணக்குப் பார்க்கிறாய்!' என்று அவள் பார்வையே கேட்பது போல் தோன்றியது.

கணவன் கவனிக்காமல் காரை நோக்கி நடந்துகொண்டு இருக்க, ஈஸ்வரி இரண்டாம் முறை தயங்கி யோசித்தாள்.

"பாட்டி, உங்க பேர் என்ன?"

"அலமேலும்மா."

"எந்த ஊர் நீங்க?"

"வடக்கே திருச்சூர்."

"ஏன் இப்படிப் பிச்சை எடுத்துப் பிழைக்கும்படியா ஆய்டுச்சு?"

"அதை ஏண்டிம்மா கேக்கறே. எங்க தாத்தா சப்ரிஜிஸ்திராரா இருந்தார். ஆத்துல நாலு சேவகா இருந்தா. தென்னந்தோப்பும் துரவுமா காய் காய்ச்சு தாழ்வாரம் பூரா கொட்டியிருக்கும்."

"அது சரி... இப்ப ஏன் இப்படி ஆய்டுச்சு?"

"எங்கப்பன் சொத்தையெல்லாம் அழிச்சுட்டு எங்கள நடுத்தெருவில் நிக்கவெச்சுட்டுப் போயிட்டான். சமையல்காரனுக்கு வாக்கப்பட்டேன். அவரும்
போய்ட்டார். நானும் என் பெண்ணும் மட்டும் தனியா."

"கூடப் பிறந்தவங்க யாரும் இல்லையா?"

"இருக்கான். தம்பிக்காரன் திருச்சூர்ல வாத்தியாரா இருக்கான். ஆம்படையா பேச்சைக் கேட்டுண்டு துரத்திவிட்டுட்டான்."

”வீட்டு வேலை ஏதாவது செஞ்சு பிழைக்கிறதுதானே?”

”பிழைக்கலாம். யாராவது வேலை குடுத்தாத்தானே? அதுக்குக்கூட சிபாரிசு தேவையா இருக்கு. இல்லைன்னா, திருடிப்பிடுவேனாம். இப்பகூட ஒரு நம்பூதிரி வீட்ல கூப்ட்டிருந்தா. போறதுக்குள்ள வேற பொம்மனாட்டி வந்துட்டா. என் மூஞ்சியப் பார்த்தா திருடற மாதிரியா இருக்கு. சொல்லும்மா. ஒரே ஒரு பொண்ணு. ஸ்கூலுக்குப் போயிண்டிருக்கு. மத்யானச் சாப்பாடு ஒரு சத்திரத்துல கிடைக்கும். இன்னிக்கெல்லாம் என்ன வயசுங்கறே எனக்கு? நாப்பத்திரண்டு. பசிச்சுப் பசிச்சு அறுபது வயசாட்டம் இருக்கேன். ‘பாட்டி’ங்கறே!”

”வீட்டு வேலை எல்லாம் செய்வீங்களா?”

”பேஷா! சமைப்பேன். பத்துப்பாத்திரம் தேய்ப்பேன். மாடு கறப்பேன். இட்லி தோசைக்கு அரைப்பேன். கைக்குழந்தைக்கு எண்ணெய் தேய்ச்சுவிடுவேன். வேண்டப்பட்ட காரியம் செய்வனாக்கம், எட்டூருக்கு வேலை செய்வேன்.”

சோமசுந்தரம் கார் வரை சென்று காத்திருந்து பொறுமையிழந்து திரும்பி வந்தான். ”என்ன ஈஸ்வரி... இங்கேயே நின்னுட்டே? இத பாருங்க அய்யர் வீட்டு அம்மா, காசு கொடுத்தாச்சில்ல? பேசாம போயிட வேண்டியதுதானே?”

ஈஸ்வரி அவனைக் கவனிக்காமல், ”இப்ப எங்ககூட வர்றீங் களாம்மா?” என்றாள்.

”எங்கே?”

”மெட்ராசுக்கு. வீட்டு வேலை செய்யறதுக்கு எனக்கு ஒரு ஆள் தேவையா இருக்கு.”

”வெயிட் எ மினிட், வெயிட் எ மினிட். என்ன ஈஸ்வரி... உடனே அப்பாய்ன்ட்மென்ட் ஆர்டர் கொடுத்துர்றதா?”

”சும்மா இருங்க! பாட்டி. பெரியம்மா! உங்களால மெட்ராஸ் வர முடியுமா, சொல்லுங்க!”

அம்மாள் கண்களில் முதல் தடவையாகப் பிரகாசம் ஏற்பட்டது. ”என்னம்மா இப்படிக் கேட்டுட்டே! உடனே புறப்பட்டு வரேம்மா! கடல் தாண்டிவேணும் னாலும் வரேன்!”

”கொஞ்சம் இரு ஈஸ்வரி!”

”இன்னிக்கு மத்யானம் நாங்க கார்ல இந்த ஊரைவிட்டுக் கிளம்பி நாகர்கோவில் போறம்.”

”இன்னிக்கே வந்துர்றேம்மா!” அவள் முகம் பூரா இப்போது அந்தப் பிரகாசம் பரவியிருந்தது. ”ஆனா கோமதி?”

”கோமதி யாரு?”

”எம் பொண்ணு. பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கா.”

”எப்பத் திரும்பி வரும்?”

”ஒரு மணிக்கு.”

”நாங்க ரெண்டு மணிக்குக் கிளம்பறம். உங்க பொண்ணையும் அழைச்சுக்கிட்டு வந்திருங்க. பொட்டி படுக்கையெல்லாம் கொண்டுட்டு வந்துருங்க.”

”பொட்டியுமில்ல... படுக்கையுமில்ல. ஒத்தக் கடையில ஒண்ணு ரெண்டு பை! பிளாட்ஃபாரத்திலாக்கும் படுத்துக்கறது” கண்களைத் துடைத்துக்கொண்டாள். ”மஹாலட்சுமி மாதிரிதாம்மா வந்து சேர்ந்தே நீ! நான் நாயா உழைக்கிறேன்! உடம்பைச் செருப்பா தேய்ச்சுப் போடறேன்.”

”சரி, சீக்கிரம் போய்ட்டு வாங்க!”

”இதோ...” ஓடினாள்.

சோமசுந்தரம் மௌனமாகத் தன் மனைவியையே பார்த்துக்கொண்டு இருந்தான்.

”என்ன பாக்கறீங்க! வாங்க கோயிலுக்குப் போகலாம்!”

”நீ செய்றது சரிதானா? இது உனக்கே நல்லா இருக்கா? முன்னப்பின்னத் தெரியாத தேசத்துல முன்னப்பின்னத் தெரியாத பொம்பளைய கார்ல கூப்பிட்டு மெட்றாசுக்கு அழைச்சுட்டுப் போறதா?”

”காலைல என்ன சொன்னீங்க?”

”விசாரிக்க வேண்டாமா?”

”காலைல ஓட்டல்ல என்ன சொன்னிங்க?”

”மெட்ராஸ்ல கிடைக்காத பொம்பளைங்களா?”

”காலைல நீ என்ன சொன்னாலும் மறுப்பே தெரிவிக்க மாட்டேன்னு சொல்லல நீங்க?”

”அது சரி, ஆனா இந்த விஷயம்...”

”நடங்க கோயிலுக்கு.”

சட்டையைக் கழற்றி பேன்ட்டை மடக்கி அதன் மேல் வாடகை வேஷ்டி சுற்றிக்கொண்டு சோமசுந்தரம் வர, இருவரும் கோயிலுக்குள் நுழைந்தார்கள்.

”ஆம்பளைங்களுக்கு மட்டும் சட்டையைக் கழட்டணும்னு என்ன ரூல் இது?” என்ற அவன் ஹாஸ்யத்தை அவள் கவனிக்கவில்லை.

”எவ்வளவோ தடவை சாமி கும்பிடறோம். என்ன பிரயோசனம்? நடைமுறையில் ஏதாவது நல்ல காரியம் செய்ய வேண்டாம்? இந்த ட்ரிப்புக்கு இதுவரை எவ்வளவு ரூபா செலவழிச்சிருக்கம்? எத்தனை பெட்ரோல், எத்தனை சினிமா, எத்தனை ஐஸ்க்ரீம், எத்தனை கண்டாமுண்டா சாமான்கள்? ஓர் ஏழைப் பொம்பளைக்கு நாலணா குடுக்க மூக்கால அழறோம். நாம எல்லாம் மனுசங்க இல்லியா? இரக்கம் கிடையாது. வேற யாராவது பார்த்துப்பாங்கன்னு எல்லாருமே

விட்டுட்டா, யார் அந்த வேறு யாராவது? கோயிலுக்குக்கூடப் போக வேண்டாங்க. இந்த மாதிரி ஒரு நல்ல காரியம் செஞ்சா அதுவே பெரிய தபஸ்!”

சோமசுந்தரம் நடந்துகொண்டே கை தட்டினான்.

இருவரும் சந்நிதிக்குள் நுழைந்தார்கள்.

கோயிலைவிட்டு வெளியே சட்டை அணிந்துகொண்டு காசு கொடுத்துவிட்டு வெளியில் இறங்கியபோது, தாடிவைத்த ஆசாமி ஒருவன் சைக்கிளில் வந்து அவர்கள் அருகில் நிறுத்தி இறங்கினான். அவனைச் சமீபத்தில் பார்த்த மாதிரி இருந்தது.

”சார், ஒரு விஷயம்.”

”ஒண்ணும் வேண்டாம்ப்பா.”

”நான் ஏதும் விக்கறதுக்கு வரலையாக்கம். எதுத்தாப்பல கடைக்காரன்தான். அம்மாவும் அந்த அலமேலுவும் கொஞ்ச நேரம் முன்னாடி என் கடை வாசல்ல பேசிட்டிருந்ததைக் கவனிச்சேன். அம்மா அவளை மெட்ராசுக்கு அழைச்சுட்டுப் போறதா சொன்னது.”

”ஆமாம். என்ன இப்ப?”

”கோவிக்க வேண்டாம். அந்தப் பொம்பளைய நீங்க கூட்டிப் போகக் கூடாது.”

”ஏன்?”

”அது செரியில்ல.”

”சரியில்லைன்னா?”

”உங்ககிட்ட பொய் சொல்லியிருக்கு. எனக்குச் செரியா காதுல விழல. கேவலமானா பொம்பள. பதினாலு வயசுல ஒரு பொண்ணு. அதைத் தெருவுல அலையவிட்டு அதை வெச்சுச் சம்பாதிக்கிறவளாக்கம் அவ!”

”மை காட்! பொண்ணு ஸ்கூலுக்குப் போறதா சொன்னாளே?”

”பொய்! ஸ்கூலாவது ஒண்ணாவது. சுத்தப் பொய். இவளுக்கு ஏகப்பட்ட கடனாக்கும். திருச்சூர்ல தம்பி இருக்கான். அவன்கூட சரியா இருக்க முடியாம ஓடி வந்தாச்சு. எங்கிட்ட இருந்தே நூத்தம்பது ரூபா கடன் வாங்கியிருக்கு. வீட்டு வேலை ஒண்ணும் தெரியாது. வெறும் கச்சடை. உடம்பெல்லாம் பொய்யி. நான் சொல்றதைச் சொல்லிட்டேன்.”

சோமசுந்தரம் மனைவியைப் பார்த்தான். ஈஸ்வரியின் முகத்தில் தீர்மானமின்மை தெரிந்தது. ”என்னங்க இப்படிச் சொல்றான்?” என்றாள்.

அப்போது அலமேலு அம்மாளும் அவள் பெண் கோமதியும் ஒரு துணி மூட்டை, கோணிப்பை, தகரப் பெட்டி சகிதம் அவர்களை நோக்கி ஆர்வத்துடன் வந்துகொண்டு இருந்தார்கள்.

”இப்ப என்னங்க செய்யறது?” என்றாள் ஈஸ்வரி. சைக்கிள்காரனைப் பார்த்ததும் அம்மாவும் பெண்ணும் பிரேக் போட்டாற்போல் நின்றார்கள்.

”வாங்க அலமேலு அம்மா! வெளியூர் கிளம்பிட்டாப்பல?” என்றான். அவள் பார்வை சரிந்தது.

சோமசுந்தரம் அந்த கோமதியைப் பார்த்தான். வளர்த்தியான பெண். பதினாலு வயசுதான் இருக்கும். குழந்தை முகம். சாயம்போன பாவாடை. சாயம்போன தாவணி. பிளாஸ்டிக் மாலை ஒன்றைக் கடித்துக்கொண்டு இருந்தாள். கன்னங்கரேல் என்று தலைமயிர். கண்கள், கொஞ்சம் கொஞ்சம் தீபா.

”என்னம்மா, இந்த ஆளு உங்களைப் பத்தி வேற மாதிரி இல்ல சொல்றார்?”

”அய்யா! அவர் சொல்றதை நம்பாதீங்க! அவருக்கு நான் பணம் கொடுக்கணும்னு என்ன என்னவோ பொய் சொல்வார். எல்லாம் பொய்! அப்படி எல்லாம் இல்ல!”

”ஏய் மூதேவி! நீ எனக்கு ஒண்ணும் பணத்தை திருப்பித் தர வேண்டாம். வெளியூர்க்காரங்களை ஏமாத்தாதே!”

”அப்ப இவர் சொல்றது நிஜமா பெரியம்மா?”

”பொய்! எல்லாம் பொய்! நான் ஏழை. ஏழை சொல் அம்பலம் ஏறாதும்பா. எல்லாரும் சேர்ந்துண்டு அழிச்சாட்டியம் பண்ணி...”

ஈஸ்வரி, கோமதியைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். அந்தப் பெண் பூமியைப் பார்த்துக்கொண்டு கால் கட்டை விரலால் வட்டங்கள் வரைந்துகொண்டு இருந்தது.

ஈஸ்வரி, ”வாங்க போகலாம்” என்றாள்.

”இரு ஈஸ்வரி. இதைச் சரியா விசாரிச்சுரலாம். யார் பொய் சொல்றான்னு பார்த்துறலாம்!” என்றான் சோமசுந்தரம்.

”யார் பொய் சொன்னாலும், யார் நிஜம் சொன்னாலும் இந்த அம்மா நமக்கு வேண்டாம்!” என்றாள் தெளிவாக.

”அப்படி பட்டுனு சொல்லிட்டா எப்படி? உனக்கு உதவிக்கு வேணும்னுட்டுதானே...”

”மெட்ராஸ்லே கிடைக்காத பொம்பளைங்களா?”

”இந்த ஆள் சொல்றது எவ்வளவு தூரம் நிஜம்னு யாருக்குத் தெரியும்?”

ஈஸ்வரி கோபத்தில் வெடித்தாள். ”இப்ப நீங்க கிளம்பறீங்களா இல்லையா?”

சோமசுந்தரம் மௌனமாக காரை ஸ்டார்ட் செய்தான். மெதுவாக நகர்ந்தான். அந்த அம்மாள் அந்தப் பொண்ணுடன் கூட ஓடி வந்தாள். ”அய்யா! அம்மா! அம்மாடி! எனக்கு ஒரு வழி பண்ணிக் குடுப்பேன்னு நினைச்சேன்! ஏதோ பசிக் கொடுமையினால, அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு இல்லாத கொடுமையில தவறுதலா நேர்ந்திருக்கலாம். நீங்க மன்னிக்கக் கூடாதா? என்னை உங்காத்துல சேர்த்துக்க வேண்டாம். பட்டணத்தில் அழைச்சுண்டுப் போய் ஏதாவது ஒரு ஆசிரமத்துல ரெண்டு பேரையும் சேர்த்துடுங்கோ. புண்ணியம் உண்டு! இந்த இடத்திலிருந்து எனக்கு விடுதலை கொடுங்கோ.” தாடிக்காரனைக் காட்டி, ”இவாதான் என்னை அந்த மாதிரி பண்ணா! இவாதான்

சொல்லிக்கொடுத்தா! இவாதான் சொல்லிக்கொடுத்தா!”

”ஸாரி பெரியம்மா. உங்களுக்கு ஹெல்ப் பண்ண முடியாத நிலையில் இருக்கேன்!” சோமசுந்தரம் கியர் மாற்ற கார் வேகம் பிடித்தது.

அதன் கண்ணாடி வழியாக மூவரும் நிற்பதைப் பார்த்தாள் ஈஸ்வரி. புடவைத் தலைப்பில் அழுதுகொண்டு அலமேலு; சங்கிலியைக் கடித்துக்கொண்டு காலால் தரையில் கோடிட்டுக்கொண்டு கோமதி; சற்று தூரத்தில் அவர்களை வா என்று கூப்பிடும் அந்த சைக்கிள் தாடி.

கருணைக்கும் சில நிப ந்தனைகள் உண்டு!

****

நகரம்

சுவர்களில் ஓரடி உயர எழுத்துக்களில் விளம்பரங்கள் விதவிதமாக ஒன்றி வாழ்ந்தன. நிஜாம் லேடி புகையிலை , ஆர்.கே.கட்பாடிகள் - எச்சரிக்கை! புரட்சி தீ! சுவிசேஷக் கூட்டங்கள் – ஹாஜி மூசா ஜவுளிக்கடை (ஜவுளிக்கடல்) – 30 .9 -1973 அன்று கடவுளை நம்பாதவர்கள் சுமக்கப் போகும் தீச்சட்டிகள்

மதுரையில் ஒரு சாதாரண தினம். எப்போதும் போல “பைப்” அருகே குடங்கள் மனிதர்களுக்காகவரிசைத் தவம் இருந்தன . சின்னப் பையன்கள் ‘டெடன்னஸ்” கவலை இன்றி மண்ணில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பாண்டியன் போக்குவரத்துக் கழக பஸ்கள் தேசியம் கலந்த டீசல் புகை பரப்பிக் கொண்டிருந்தன . விரைப்பான கால்சராய் சட்டை அணிந்த ப்ரோடீன் போதா போலீஸ்காரர்கள் இங்கிட்டும் அங்கிட்டும் செல்லும் வாகன- மானிட போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி கொண்டுஇருந்தார்கள் நகரின் மனித இயக்கம் ஒருவிதப் ப்ரோவ்னியான் இயக்கம் போல இருந்தது . கதர் சட்டை அணிந்த மெல்லிய அதிக நீளமில்லாத ஊர்வலம் ஒன்று, சாலையின் இடதுபுறத்தில் அரசாங்கத்தை விலைவாசி உயர்வுக்காக திட்டிக்கொண்டே ஊர்ந்தது. செருபில்லாத டப்பாக்கட்டு ஜனங்கள் மீனாட்சி கோயிலின் ஸ்தம்பித்த கோபுரங்கள் , வற்றிய வைகை , பாலம் .. மதுரை !

நம் கதை இந்த நகரத்துக்கு இன்று வந்திருக்கும் ஒரு பெண்ணைப் பற்றியது. வள்ளியம்மாள் தான் மகள் பாப்பாத்தியுடன் மதுரை பெரியாஸ்பத்திரியில் ஓ.பி டிப்பாட்மேண்டின் காரிடாரில் காத்திருந்தாள். முதல் தினம் பாப்பாத்திக்கு சுரம். கிராம ப்ரைமரி ஹெல்த் சென்டரில் காட்டியதில் அந்த டாக்டர் பயங்காட்டிவிட்டார். “உடனே பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துகிட்டு போ’ என்றார் அதிகாலை பஸ் ஏறி ….

பாப்பாத்தி ஸ்ட்ரெச்சரில் கிடந்தால். அவளைச் சூழ்ந்து ஆறு டாக்டர்கள் இருந்தார்கள். பாப்பாத்திக்குப் பன்னிரண்டு வயது இருக்கும். இரண்டு மூக்கும் குத்தப்பட்டு ஏழைக் கண்ணாடிக் கற்கள் ஆஸ்பத்திரி வெளிச்சத்தில் பளிச்சிட்டன. நெற்றியில் விபூதிக் கீற்று . மார்பு வரை போர்த்தப்பட்டுத் தெரிந்த கைகள் குச்சியாய் இருந்தன. பாப்பாத்தி சுரத் தூக்கத்தில் இருந்தால். வாய் திறந்திருந்தது.

பெரிய டாக்டர் அவள் தலையை திருப்பி பார்த்தார். கண் இரப்பையை தூக்கிப் பார்த்தார். கண்ணகளை விலரால் அழுத்திப் பார்த்தார். விரல்களால் மண்டையோட்டை உணர்ந்துப் பார்த்தார். பெரிய டாக்டர் மேல் நாட்டில் படித்தவர் போஸ்ட் க்ராசுவேட் வகுப்புகள் எடுப்பவர். ப்ரொபசர் . அவரைச் சுற்றிலும் இருந்தவர்கள் அவரின் டாக்டர் மாணவர்கள் .

“acute case of meningitis . notice this ..”

வள்ளியம்மாள் அந்தப் புரியாத சம்பாசனையின் ஊடே தான் மகளையே ஏக்கத்துடன் நோக்கிக் கொண்டிருந்தாள் . சுற்றிலும் இருந்தவர்கள் ஒவ்வொருவராக வந்து ஆப்தல்மாஸ்கோப் மூலம் அந்தப் பெண்ணின் கண்ணுக்குளே பார்த்தார்கள். ‘டார்ச்’ அடித்து விழிகள் நகருகின்றனவா என்று சோதித்தார்கள் . குறிப்புகள் எடுத்துக் கொண்டார்கள் .

பெரிய டாக்டர், “இவளை அட்மிட் பண்ணிடச் சொல்லுங்கள் ” என்றார்.

வள்ளியம்மாள் அவர்கள் முகங்களை மாற்றி மாற்றிப் பார்த்தாள். அவர்களில் ஒருவர், ‘இத பாரும்பா, இந்தப்ப் பெண்ணை உடனே ஆஸ்பத்திரியில் சேர்க்கணும். அதோ அங்கே உக்காந்திருக்காரே , அவர் கிட்ட போ , சீட்டு எங்கே ?” என்றார்

வள்ளியம்மாளிடம் சீட்டு இல்லை.

“சாரி அவரு கொடுப்பாரு . நீ வாய்யா இப்படி பெரியவரே ! “

வள்ளியம்மாள் பெரிய டாக்டரைப் பார்த்து, ” அய்யா, குழந்தைக்குச் சரியா போயிருங்களா ?” என்றாள் .

“முதல்ல அட்மிட் பண்ணு. நாங்க பார்த்துக்கறோம் . டாக்டர் தனசேகரன், நானே இந்தக் கேசை பார்க்கிறேன். ஸீ தட் ஸீ இஸ் அட்மிட்டட் எனக்கு கிளாஸ் எடுக்கணும். போயிட்டு வந்ததும் பார்க்கறேன்”

மற்றவர்கள் புடைசூழ அவர் ஒரு மந்திரி போல கிளம்பிச் சென்றார். டாக்டர் தனசேகரன் அங்கிருந்த சீனிவாசனிடம் சொல்லிவிட்டு பெரிய டாக்டர் பின்னால் விரைந்தார்.

சீனிவாசன் வள்ளியம்மாளைப் பார்த்தான்.

“இங்கே வாம்மா . உன் பேர் என்ன ..? டேய் சாவு கிராக்கி ! அந்த ரிஜிஸ்டரை எடுடா..! “

“வள்ளியம்மாள்”

“பேசண்டு பேரு?”

“அவரு செத்து போயிட்டாருங்க ..”

சீனிவாசன் நிமிர்ந்தான்

“பேசண்டுன்னா நோயாளி .. யாரைச் சேர்க்கணும் ?”

“என் மகளைங்க “

“பேரு என்ன ..?’

“வள்ளியம்மளுங்க”

“என்ன சேட்டையா பண்ற ? உன் மாக பேரு என்ன ../’

“பாப்பாத்தி ‘

“பாப்பாத்தி!.. அப்பாடா. இந்தா , இந்தச் சீட்டை எடுத்துகிட்டு போயி இப்படியே நேராப் போனின்னா அங்கே மாடிப்படிகிட்ட நாற்காலி போட்டுகிட்டு ஒருத்தர் உக்காந்திருப்பார் . வருமான பாக்குறவரு அவருகிட்ட கொடு.”

“குளந்தங்கே..?’

“குளைந்தைக்கு ஒண்ணும் ஆவாது. அப்படியே படுத்து இருக்கட்டும் கூட யாரும் வல்லையா ? நீ போய் வா. விஜயரங்கம் யாருய்யா ?”

வள்ளியம்மாளுக்கு பாபதியை விட்டுப் போவதில் இஷ்டமில்லை . அந்த கியூ வரிசையும் அந்த வாசனையும் அவளுக்குக் குமட்டிக்கொண்டு

வந்தது. இறந்து போன தான் கணவன்மேல் கோபம் வந்தது.

அந்த சீட்டை கொண்டு அவள் எதிரே சென்றால். நாற்காலி காலியாக இருந்தது. அதான் முதுகில் அழுக்கு இருந்தது. அருகே இருந்தவரிடம் சீட்டைக் காட்டினாள்.ஆவர் எழுதிக்கொண்டே சீட்டை இடது கண்ணின் கால்பாகத்தால் பார்த்தார்.”இரும்மா அவரு வருத்தம்’ என்று காலி நாற்காலியை காட்டினார். வள்ளியம்மாளுக்கு தயும்பித் தன் மகளிடம் செல்ல ஆவல் ஏற்பட்டது. அவள் படிக்காத நெஞ்சில் , காத்திருப்பதா – குழந்தையிடம் போவதா என்கிற பிரச்சனை உலகளவுக்கு விரிந்தது.

“ரொம்ப நேரமாவுங்களா..? ” என்று கேட்க பயமாக இருந்தது அவளுக்கு.

வருமானம் மதிப்பிடுபவர் தன் மருமானை அட்மிட் பண்ணிவிட்டு மெதுவாக வந்தார் உட்கார்ந்தார். ஒரு சிட்டிகைப் பொடியை மூக்கில் மூன்று தடவை தொட்டுக் கொண்டு கர்சிப்பைக் கயிறாக சுருட்டித் தேய்துக்க் கொண்டு சுறு சுறுப்பானார்.

“த பார் வரிசையா நிக்கணும். இப்படி ஈசப்புச்சி மாதிரி வந்திங்கன்ன என்ன செய்யிறது ..?”

வள்ளியம்மாள் முப்பது நிமிஷம் காத்திருந்தபின் அவள் நீட்டிய சீட்டு அவளிடமிருந்து பிடுங்கப்பட்டது.

“டாக்டர் கிட்ட கை எழுத்து வாங்கி கிட்டு வா , டாக்டர் கையழுத்தே இல்லையே அதிலே ..?

“அதுக்கு எங்கிட்டு போவனும்..?”

“எங்கிருந்து வந்தே ..?’

“மூனாண்டிபாடிங்கே !’

கிளார்க் “ஹாத்” என்றாள். சிருதார். “மூணாண்டிபட்டி ! இங்கே கொண்ட அந்த சீட்டை “

சீட்டை மறுபடி கொடுத்தால். அவர் அதை விசிறி போல் இப்படிப் திருப்பினார்.

“உன் புருசனுக்கு என்ன வருமானம் ?”

“புருஷன் இல்லீங்க “

“உனக்கு என்ன வருமானம்? “

அவள் புரியாமல் விழித்தாள்.

“எத்தன ரூபா மாசம் சம்பாதிப்பே ?”

“அறுப்புக்குப் போன நெல்லாக் கிடைக்கும் அப்புறம் கம்பு, கேழ்வரகு !’

“ரூபா கிடையாதா.! சரி சரி .. தொண்ணூறு ரூபா போட்டு வைக்கிறேன்.”

“மாசங்களா?”

“பயப்படாதே .சார்ஜு பண்ண மாட்டாங்க . இந்த , இந்த சீட்டை எடுத்துகிட்டு கொடு இப்படியே நேராப் போயி இடது பாக்கள் – பீச்சாங்கைப் பக்கம் திரும்பு. சுவத்திலே அம்பு அடையாளம் போட்டிருக்கும் . 48 – ம் நம்பர் ரூமுக்கு போ .”

வள்ளியம்மாள் அந்த சீட்டை இரு கரங்களிலும் வாங்கி கொண்டால். கிளார்க் கொடுத்த அடையாளங்கள் அவள் எளிய மனதை மேலும் குழப்பி இருக்க , காற்றில் விடுதலை அடைந்த காகிதம் போல் ஆஸ்பத்திரியில் அலைந்தாள். அவளுக்கு படிக்க வராது. 48 ம் நம்பர் என்பது உடனே அவள் ஞாபகத்திலிருந்து விலகி இருந்தது. திரும்பி போயி அந்த கிளார்க்கை கேட்க அவளுக்கு அச்சமாக இருந்தது.

ஒரே ஸ்ட்ரச்சரில் இரண்டு நோயாளிகள் உக்கார்ந்து கொண்டு, பாதி படுத்துக்கொண்டு மூக்கில் குழாய் செருகி இருக்க அவளைக் கடந்தார்கள். மற்றொரு வண்டியில் ஒரு பெரிய வாயகன்ற பாத்திரத்தில் சாம்பார் சாதம் நகர்ந்து கொண்டிருதது. வெள்ளைக் குல்லாய்கள் தெரிந்தன . அலங்கரித்து கொண்டு வெள்ளை கோட் அணிந்து

கொண்டு ஸ்டேதேஸ்கோப் மாலையிட்டு, பெண் டாக்டர்கள் சென்றார்கள். போலீஸ்காரர்கள், காபி டம்ளர்காரர்கள், நர்சுகள் எல்லோரும் எல்லா திசைகளிலும் நடந்து கொண்டு இருந்தார்கள். அவர்களை நிறுத்திக் கேட்க அவளுக்கு பயமாக இருந்தது. என்ன கேட்பது என்றே அவளுக்குத் தெரியவில்லை. ஏதோ ஒரு அறையின் முன் கும்பலாக நின்று கொண்டு இருந்தார்கள். அங்கே ஒரு ஆள் சீட்டுப் போல பல பழுப்புச் சீட்டுகளைச் சேகரித்து கொண்டிருந்தான். அவன் கையில் தான் சீட்டைக் கொடுத்தாள். அவன் அதைக் கவனமில்லாமல் வாங்கி கொண்டான். வெளியே பெஞ்சில் எல்லோரும் காத்திருந்தார்கள். வள்ளியம்மாளுக்குப் பாப்பாத்தியின் கவலை வந்தது. அந்த பெண் அங்கே தனிய இருக்கிறாள். சீட்டுகளைச் சேகரித்தவன் ஒவ்வொரு பெயராக கூப்பிட்டு கொண்டிருந்தான். கூப்பிட்டு வரிசையாக அவர்களை உட்கார வைத்தான். பாப்பாத்தியின் பெயர் வந்ததும் அந்த சீட்டை பார்த்து, "இங்க கொண்டு வந்தியா! இந்தா, " சீட்டை திருப்பி கொடுத்து, "நேராப் போ,' என்றான். வள்ளியம்மாள், "அய்யா , இடம் தெரியலிங்களே" என்றாள். அவன் சற்று எதிரே சென்ற ஒருவனை தடுத்து நிறுத்தி, " அமல்ராஜ் இந்த அம்மாளுக்கு 48 ம் நம்பரை காட்டுய்யா . இந்த ஆள் பின்னாடியே போ . இவர் அங்கேதான் போறார்." என்றான்.

அவள் அமல்ராஜின் பின்னே ஓட வேண்டியிருந்தது.

அங்கே மற்றொரு பெஞ்சில் மற்றொரு கூட்டம் கூடி இருந்தது. அவள் சீட்டை ஒருவன் வாங்கி கொண்டான். வள்ளியம்மாளுக்கு ஒன்றும் சாப்பிடாததாலும், அந்த ஆஸ்பத்திரி வாசனையினாலும் கொஞ்சம் சுற்றியது.

அரை மணி கழித்து அவள் அழைக்கபட்டாள். அறையின் உள்ளே சென்றாள். எதிர் எதிராக இருவர் உட்கார்ந்து காகிதப் பென்சிலால் எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தன் அவள் சீட்டைப் பார்த்தான். திருப்பி பார்த்தான். சாய்த்துப் பார்த்தான்

"ஓ,பி. டிபார்ட்மேண்டிலிருந்து வரியா ..?"

இந்த கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

"அட்மிட் பண்றதுக்கு எழுதி இருக்கு. இப்ப இடம் இல்லை. நாளைக்கு

கலையிலே சரியாய் ஏழரை மணிக்கு வந்துடு என்ன..?”

“இங்கேயே வா, நேரா வா, என்ன ?”

வள்ளியம்மாளுக்கு அந்த அறையை விட்டு வெளியே வந்ததும் அவளுக்கு ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் தியாக வந்த விட்ட தன் மகள் பாப்பாத்தியின் கவலை மிகப் பெரியதாயிற்று.அவளுக்குத் திரும்பிப் போகும் வழி தெரியவில்லை. ஆஸ்பத்திரி அறைகள் யாவும் ஒன்று போல் இருந்தன.ஒரே ஆசாமி திரும்ப திரும்ப பல்வேறு அறைகளில் உட்கார்ந்திருப்பது போல தோன்றியது. ஒரு வார்டில் கையை காலைத் தூக்கி கிட்டி வைத்துக் கட்டி பல பேர் படுத்திருந்தார்கள் . ஒன்றில் சிறிய குழந்தைகள் வரிசையாக முகத்தைச் சுளித்து அழுது கொண்டிருந்தன.மிஷின்களும், நோயாளிகளும், டாக்டர்களுமாக, அவளுக்குத் திரும்பும் வழி புரியவில்லை.

“அம்மா” என்று ஒரு பெண் டாக்டரை கூப்பிட்டு தான் புறப்பட இடத்தின் அடையாளங்களைச் சொன்னாள். “நெறைய டாக்டருங்க கூடிப் பேசிக்கிட்டாங்க. வருமானம் கேட்டாங்க. பணம் கொடுக்க வேண்டாமுன்னு சொன்னாங்க. எம் புள்ளைய அங்கிட்டு விட்டுட்டு வந்திருக்கேன் அம்மா! “

அவள் சொன்ன வழியில் சென்றாள். அங்கே கேட்டுக் கதவு பூட்டி இருந்தது. அப்போது அவளுக்கு பயம் திகிலாக மாறியது. அவள் அழ ஆரம்பித்தாள். நட்ட நடுவில் நின்று கொண்டு அழுதாள். ஒரு ஆள் அவளை ஓரமாக நின்று கொண்டு அழச்சொன்னான். அந்த இடத்தில் அவள் அழுவது அந்த இடத்து அசெப்டிக் மணம் போல எல்லோருக்கும் சகஜமாக இருந்திருக்க வேண்டும்.

“பாப்பாத்தி! பாப்பாத்தி! உன்னை எங்கிட்டு பாப்பேன்? எங்கிட்டுப் போவேன்? ” என்று பேசிக் கொண்டே நடந்தாள். ஏதோ ஒரு பக்கம் வாசல் தெரிந்தது. ஆஸ்பத்திரியை விட்டு வெளியே செல்லும் வாசல். அதான் கேட்டை திருந்து வெளியே மட்டும் செல்ல விட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வாசலைப் பார்த்த ஞாபகம் இருந்தது அவளுக்கு.

வெளியே வந்து விட்டாள்.அங்கிருந்து தான் தொலை தூரம் நடந்து மற்றோரு வாசலில் முதலில் உள் நுழைந்தது ஞாபகம் வந்தது. அந்தப்

பக்கம் ஓடினாள். மற்றொரு வாயிலை அடைந்தாள். அந்த மரப்படிகள் ஞாபகம் வந்தது. அதோ வருமானம் கேட்ட ஆசாமியின் நாற்காலி காலியாக இருக்கிறது. அங்கேதான்!

ஆனால் வாளில்தான் மூடப்பட்டிருந்தது உள்ளே பாப்பாத்தி ஒரு ஓரத்தில் இன்னும் அந்த ஸ்ட்ரச்சரில் கண் மூடிப் படுத்திருப்பது தெரிந்தது.

“அதோ! அய்யா, கொஞ்சம் கதவைக் திறவுங்க, எம்மவ அங்கே இருக்கு .’

சரியா மூணு மணிக்கு வா. இப்ப எல்லாம் க்ளோஸ்’” அவனிடம் பத்து நிமிஷம் மன்றாடினாள். அவன் பாஷை அவளுக்குப் புரியவில்லை. தமிழ்தான். அவன் கேட்டது அவளுக்கு புரியவில்லை. சில்லறையைக் கண்ணில் ஒத்திக் கொண்டு யாருக்கோ அவன் வழி விட்டபோது அந்த வழியில் மீறிக்கொண்டு உள்ளே ஓடினாள். தன் மகளை வாரி அணைத்துக்கொண்டு தனியே பெஞ்சில் போய் உட்கார்ந்து கொண்டு அழுதாள்.

பெரிய டாக்டர் எம்.டி. மாணவர்களுக்கு வகுப்பு எடுத்து முடிந்ததும் ஒரு கப் காப்பி சாப்பிட்டு விட்டு வார்டுக்கு சென்றார். அவருக்கு காலை பார்த்த மெனின்ஜைடிஸ் கேஸ் நன்றாக ஞாபகம் இருந்தது.B .M .J யில் சமீபத்தில் புதிய சில மருந்துகளை பற்றி வர படித்திருந்தார்.

“இன்னைக்குக் காலையிலே அட்மிட் பண்ணச் சொன்னேனே மெனின்ஜைடிஸ் கேஸ். பன்னிரண்டு வயசுப் பொண்ணு எங்கேய்யா..?

“இன்னிக்கு யாரும் அட்மிட் ஆகலையே டாக்டர் “

“என்னது? அட்மிட் ஆகலையே? நான் ஸ்பெசிபிக்கா சொன்னேனே! தனசேகரன், உங்களுக்கு ஞாபகம் இல்லை ..?”

“இருக்கிறது டாக்டர் ! “

“பால்! கொஞ்சம் போயி விசாரிச்சு கிட்டு வாங்க அது எப்படி மிஸ் ஆகும் ?”

பால் என்பவர் நேராகக் கீழே சென்று எதிர் எதிராக இருந்த கிளாற்குகளிடம் விசாரித்தார்.”எங்கயா! அட்மிட் அட்மிட்டுன்னு நீங்க பாட்டுக்கு எழுதிபுடுறீங்க. வார்டிலே நிக்க இடம் கிடையாது! “

“சுவாமி சீப் கேக்குறார் !”

“அவருக்கு தெரிஞ்சவங்களா ?”

“இருக்கலாம் எனக்கு என்ன தெரியும்?”

“பன்னண்டு வயசுப் பொண்ணு ஒண்ணும் நம்ம பக்கம் வரல. வேற யாரவது வந்திருந்தாக் கூட எல்லோரையும் நாளைக்கு காலையிலே வர சொல்லிட்டேன். ராத்திரி ரெண்டு மூணு பெட்டு காலியாகும். எமேர்ஜன்சின்னா முன்னாலேயே சொல்லணும்! இல்லை பெரியவருக்கு அதிலே இண்டரஸ்ட் இருக்குன்னு ஒரு வார்த்தை! உறவுக்காரங்களா ..?’

வள்ளியம்மாளுக்கு மறுநாள் காலை ஏழரை மணி வரை என்ன செய்ய போகிறோம் என்பது தெரியவில்லை. அவளுக்கு ஆஸ்பத்திரியின் சூழ்நிலை மிகவும் அச்சம் தந்தது. அவர்கள் தன்னைப் பெண்ணுடன் இருக்க அனுமதிப்பார்களா என்பது தெரியவில்லை. வள்ளியம்மாள் யோசித்தாள். தன் மகள் பாப்பாத்தியை அள்ளி அணைத்துக் கொண்டு மார்பின் மேல் சார்த்திக் கொண்டு, தலை தோளில் சாய, கைகால்கள் தொங்க, ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தாள். மஞ்சள் நிற சைக்கிள் ரிக்சாவில் ஏறிக் கொண்டாள். அவனை பஸ் ஸ்டாண்டுக்குப் போகச் சொன்னாள்.

“வாட் நான்சென்ஸ்! நாளைக்கு காலை ஏழரை மணியா! அதுக்குள்ள அந்த பொண்ணு செத்துப் போயிடும்யா! டாக்டர் தனசேகரன் நீங்க ஓ.பி யிலே போயி பாருங்க . அங்கேதான் இருக்கும்! இந்த ரெச்சர்ட் வார்டிலே ஒரு பெட் காலி இல்லைன்னா நம்ம டிப்பாட்மென்ட் வார்டில பெட் இருக்குது. கொடுக்க சொல்லுங்க! க்விக்!”

“டாக்டர்! அது ரிசர்வ் பண்ணி வைச்சிருக்கு “

“i dont care. i want that girl admitted now. Right now!”

பெரியவர் அம்மாதிரி இதுவரை இரைந்தது இல்லை. பயந்த டாக்டர் தனசேகரன், பால், மிராண்டா என்கிற தலைமை நர்ஸ் எல்லோரும் வள்ளியம்மாளை தேடி ஓ.பி டிபாட் மெண்டுக்கு ஓடினார்கள்.

“வெறும் சுரம்தானே ? பேசாமல் மூனாண்டிப் பட்டிக்கே போயி விடலாம்.வைத்தியரிடம் காட்டிவிடலாம். கிராம ஆஸ்பத்திரிக்கு போக வேண்டாம். அந்த டாக்டர் தான் பயங்காட்டி மதுரைக்கு விரட்டினார். சரியாக போயிவிடும். வெள்ளைக்கட்டி போட்டு விபூதி மந்திரித்து விடலாம்.” சைக்கிள் ரிக் ஷா பஸ் நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. வள்ளியம்மாள், “பாப்பாத்திக்குச் சரியாய் போனால் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு இரண்டு கை நிறைய காசு காணிக்கையாக அளிக்கிறேன்’ என்று வ ேண்டி கொண்டாள்.

****

ஒரு லட்சம் புத்தகங்கள்

சிங்களத் தீவினுக்கோர்

பாலம் அமைப்போம்!

- மகாகவி

Welcome to delegates of Bharathi International

நீல வண்ணத்தில் எழுத்துக்கள் வெள்ளைத் துணியில் ஐந்து நட்சத்திர ஹோட்டலின் வாயிலில் ஆடின. தலைப் பாகைக்காரரின் படம் கீழே துடித்துக்கொண்டு இருந்தது. அருகே பல வண்ணக் கொடிகள் சஞ்சலித் துக்கொண்டு இருந்தன. டாக்டர் நல்லுசாமி கண்ணாடிக் கதவைத் திறப்பதற்கு முன் சேவகன் திறந்து புன்னகைத்தான். உள்ளே குளிர்பதனம் செய்யப்பட்ட அரங்கில் கம்பளத்தில் தமிழ் அறிஞர்கள் நிறைந்து இருந்தார்கள். புதுக் கவிஞர் 'கேக்' கடித்துக்கொண்டு இருந்தார். சாகித்திய அகாதமி சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு இருந்தார். பரிபாடல் சோபாவில் உட்கார்ந்து கொண்டு தொடை மேல் காகிதம் வைத்துக் கடிதம் எழுதிக்கொண்டு இருந்தார். உரையாடலில் தமிழ் உலவியது.

" 'தமிழ்நாட்டிலே சாஸ்திரங்கள் இல்லை. உண்மையான சாஸ்திரங்களை வளர்க்காமல், இருப்பனவற்றையும் மறந்துவிட்டு, தமிழ்நாட்டுப் பார்ப்பார் பொய்க் கதைகளை மூடரிடம் காட்டி வயிறு பிழைத்து வருகிறார்கள்!'

இதைச் சொன்னது யாரு, சொல்லுங்க பார்க்கலாம்?"

"பேரறிஞர் அண்ணாங்களா?"

"இல்லைங்க. பார்ப்பனரான சுப்பிரமணிய பாரதி. 'காற்று'னு வசன கவிதை படிச்சுப் பாருங்க."

"அவரு எல்லாவிதத்திலும் புரட்சியாளருங்க. ஆயிரத்துத் தொளாயிரத்துப் பத்து இருபதுகளில் ஒரு பார்ப்பனர் இந்த மாதிரி சொல்றதுக்கு எத்தனை தைரியம் வேணும்!"

டாக்டர் நல்லுசாமி அவர்களை அணுக ”வாங்க, வாங்க, வாழ்த்துக்கள்!”

”எதுக்கு?” என்றார் டாக்டர்.

”அ! தெரியாத மாதிரி கேக்கறீங்க.”

”உண்மையிலேயே தெரியாதுங்க.” தெரியும்.

”பாரதி பல்கலைக்கழகத்துக்கு உங்களைத்தான் துணைவேந்தராப் போடப் போறாங்களாம்.”

”ஓ... அதுவா? எத்தனையோ பேர்களில் என் பேரும் இருக்குது.”

”இல்ல. நீங்கதான்னு சொல்றாங்க. அமைச்சர் உங்களைக் கவனிக்கத்தான் இன்னிக்கு உங்க கூட்டத்துக்கே வராருன்னு சொல்றாங்க.”

”சேச்சே! அமைச்சருக்குப் பாரதி மேல அப்படி ஒரு ஈடுபாடுங்க.”

”உங்களை விட்டா பொருத்தமா வேற யாருங்க?”

”எதோ பாக்கலாம். அதெல்லாம் அவ்வளவு சுலபம் இல்லைங்க. அரசியல் வேற கலக்குது...” டாக்டர் நல்லுசாமி அவர்களை விட்டு விலக,

”வள்ளுவர் சொல்லியிருக்காரு...

மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்

பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்’னு.

இப்ப யாருங்க பாப்பான்? யாரும் கிடையாதுங்க. அந்த அர்த்தத்தில்தான் பாரதி சொல்லி இருக்காரு.”

ரிசப்ஷனில் அவர் தன் அறைச் சாவியை வாங்கிக்கொள்ளும்போது அந்தப் பெண், ”சார் யூ ஹவ் எ மெசேஜ்” என்று புறாக் கூட்டில் இருந்து ஒரு குறிப்பை எடுத்துக் கொடுத்தாள்.

‘செல்வரத்தினம் மூன்று முறை உங்களுக்காக போன் செய்தார்’. நல்லுசாமிக்குச் சற்றுக் குழப்பமாக இருந்தது. ‘யார் இந்த செல்வரத்தினம்? புரியவில்லை.’ ”தேங்க்ஸ்!” என்று அவளைப் பார்த்தபோது ”யூ ஆர் வெல்கம்” என்று புன்னகைத்தபோது அவள் உடுத்தியிருந்த சன்ன ஸாரி டாக்டர் அவர்களைப் படுத்தியது. தன் வாழ்நாளிலேயே முதன்முதலாக மனைவியை (டாக்டர் மணிமேகலை) விட்டு வந்திருக்கிறார். இந்தப் புன்னகையில் நிச்சயம் வரவேற்பு இருந்தது!

‘கூடிப் பிரியாமலே – ஓரிராவெல்லாம்

கொஞ்சிக் குலவியங்கே

ஆடி விளையாடியே – உன்றன் மேனியை

ஆயிரங்கோடி முறை நாடித் தழுவி…’

”டாக்டர், வணக்கம்!”

”ஓ, பெருமாள்! வாங்க, எங்க இருக்கீங்க இப்ப?”

”உத்கல்ல! புதுசா டமில் செக்ஷன் ஆரம்பிச்சு இருக்காங்க…”

”உத்கல் எங்க இருக்குது?”

பக்கத்தில் பச்சைக் கண்களுடன் ஒரு பெண்பிள்ளை இவர்களைப் பார்த்துச் சிரித்து ‘ஹலோ’ என்று சொல்ல, டாக்டர் பெருமாள் அறிமுகப்படுத்திவைத்தார்.

”இது வந்து கத்தரினா. ரஷ்யாவுல இருந்து பாரதி ஆராய்ச்சி பண்ண வந்திருக்காங்க. திஸ் இஸ் டாக்டர் நல்லுசாமி!”

”ஆ, ஐஸ்ஸீ!” என்று பெண்மணி அவர் கையைப் பற்றிக் குலுக்கினாள். சற்று வலித்தது. டிராக்டர் ஓட்டும் பெண்பிள்ளைபோல் ஏராளமாக இருந்தாள். வல்லி இடையில்லை, ஓங்கி முன்னிற்கும் மார்பையும் சரியாக மூடாமல் ததும்பினாள்.

”யூர் ரீடிங் பேப்பர், ஆர்ன்ட் யூ?”

”நோ... ஐம் பிரிஸைடிங்! மத்தியானம்... ஆஃப்டர் நூன். யூ நோ டாமில்?”

”யெஸ்! கான்ட் ஸ்பீக்!”

”இந்தம்மா பாரதியை வறுமைல ஏன் வாட விட்டாங்க தமிழங்கன்னு கேக்குது!”

”அவர் காலத்துத் தமிழங்க அவர் பெருமையை உணரலை...”

”டாக்டர்! உங்களுக்குத் துணைவேந்தர் ஆயிருச்சாமே?”

”சேச்சே! இன்னும் எதும் தீர்மானிக்கலைப்பா.”

”ஆயிட்டுதுன்னுதான் சொல்றாங்க. உங்களைத் தான் நம்பியிருக்கேன். என்னை உத்கல்ல இருந்து எப்படியாவது ரீடராக் கொண்டு வந்துருங்க. சப்பாத்திச் சாப்பாடு. சூடு அதிகமா... என்னுடைய பைல்ஸுக்கு ஒப்புக்கலை!”

”பாக்கலாங்க, முதல்ல ஆகட்டும்.” செல்வரத்தினம்... எங்கயோ கேட்ட மாதிரி பேராக இருக்கிறதே? ரஷ்யியைப் பார்த்து மறுபடி புன்னகைத்துவிட்டு, டாக்டர் மெத்தென்ற மாடிப்படிகளில் ஏறும்போது உற்சாகமாகத்தான் சென்றார். மணிமேகலைக்குச் செய்தி சொல்ல வேண்டும். அவளுக்குத்தான் சந்தோஷமாக இருக்கும். சே! அதற்குள் எத்தனை கோட்டைகள்!

மெஸனைன்னைத் தாண்டியதும் இங்கிருந்தே மாநாட்டு முதல் ஹால் தெரிந்தது. அதன் வாசல் ஏர்கண்டிஷனுக்கு அடைத்திருந்ததால் உள்ளே பேச்சு கேட்கவில்லை. அவ்வப்போது உள்ளே இருந்து டெலிகேட் ஒருவர் டாய்லெட் போகவோ அல்லது முந்திரிப் பருப்பு கேக்குடன் தயாராக இருந்த காபி சாப்பிடவோ கதவைத் திறந்தபோது, ”அவன் சர்வதேசக் கவிஞன்! பிஜி மக்களுக்காக இங்கிருந்து கண்ணீர் வடித்தான். ‘மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற் கடைக்கண் வைத்தாள்’ என்று ரஷ்யப் புரட்சியைப்பற்றிப் பாடினான். அவனன்றோ...” என்று மாநாடு கசிந்தது. பல பேர் டாக்டரை வணங்கினார்கள். பரிச்சயம் இல்லா முகங்கள். எல்லோருக்கும் தெரிந்திருக்கும். துணைவேந்தர் என்றால் சும்மாவா? அமைச்சர்

அதற்குத்தான் பிற்பகல் கூட்டத்துக்கு வருகிறார். என்னைக் கணிக்கத்தான்! நல்லுசாமிக்கு உள்ளுக்குள் புல்லரித்தது. திறமைப்படி கொடுக்க வேண்டுமானால் அவருக்குத்தான் கொடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் அவரைக்காட்டிலும் பாரதி கவிதைகளில் பரிச்சயம் உள்ளவர் யாரும் கிடையாது. 'பாரதி கவிதைகளில் சமத்துவம்' என்று டாக்டர் பட்டத்துக்கு அவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை இன்னும் ஒரு மைல் கல்!

மத்தியானக் கூட்டம் தொடங்க இன்னும் இரண்டு மணி நேரம் இருந்தது. ஆனால், திறமை மட்டும் போதாதே. அறைக்குச் சென்று சற்று ஓய்வு எடுத்துக்கொண்டு வரலாம். முதலில் மணிமேகலைக்குத் தொலை பேசி மூலம் விவரம் தெரிவித்து விடலாம்.

டாக்டர் லேசாக,

'காதல் செய்தும் பெறும் பல இன்பம்,

கள்ளில் இன்பம், கலைகளில் இன்பம்,

பூதலத்தினை ஆள்வதில் இன்பம்...'

என்று பாடிக்கொண்டே அறைக் கதவில் சாவியைப் பொருத்தும்போது, அறை வாசலில் நின்றுகொண்டு இருந்தவனைக் கவனித்தார்.

"வணக்கம் ஐயா!"

"வணக்கம்! நீங்க..?"

இருபத்தைந்து சொல்லலாம். ஒல்லியாக இருந்தான். உக்கிரமான கண்களுக்குக் கீழ் அவன் வயசுக்குச் சற்று அவசரமான நிழல்கள். தோளில் பை மாட்டியிருந்தான். அதில் விழாவின் சிறப்பு மலர் எட்டிப் பார்த்துக்கொண்டு இருந்தது.

"கண்டு கன காலம்" என்றான். டாக்டர் அவனைத் தன் ஞாபக செல்களில் தேடினார்.

எங்கோ பார்த்திருக்கிறோம் மையமாக. "வாங்க! எப்ப வந்தீங்க?"

”இஞ்சாலையா?”

இப்போது ஞாபகம் வந்துவிட்டது. சிலோன்! இவனைச் சிங்களத்தில் பார்த்திருக்கிறோம்.

”நீங்கதானா, செல்வரத்தினம்?”

”ஐயாவுக்கு நினைப்பு உண்டு. யாழ்ப்பாணத்தில் சந்திச்சிருக்கோம்.”

இப்போது முழுவதும் ஞாபகம் வந்துவிட்டது. இவன் வீட்டில் யாழ்ப்பாண உலகத் தமிழ் மகாநாட்டின்போது டாக்டர் இரண்டு நாள் தங்கியிருக்கிறார்.

”எங்க வந்தீங்க?”

”சும்மாதானாக்கம். இடைசுகம் விசாரிச்சுக் கொண்டு போவமெண்டு வந்தனாக்கம்!” மனசுக்குள் மொழி பெயர்த்துக்கொள்ள வேண்டியிருந்த அவன் தமிழ் சற்று நிரடியது. இருந்தும், ”வாங்க! உள்ள வாங்க” என்றார்.

அறைக்குள் ஆஷ் – டிரே தேடினான். டாக்டர் அவனுக்கு நாற்காலி காட்ட அதில் விழுந்தான்.

”விழாவில் எண்ட பேச்சும் உண்டு” என்றான்.

”அப்படியா! சந்தோஷம். விழாவுல கலந்துக்கறதுக்காக வந்தீங்களா சிலோன்ல இருந்து?”

”ஆமாம்.”

”ரொம்பப் பொருத்தம். சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்னு மகாகவி சொன்னதுக்கு ஏற்ப...”

இப்போது அவனை முழுவதும் ஞாபகம் வந்துவிட்டது. யாழ்ப்பாணம் மாநாட்டில் இவன் குடும்பமே தமிழில் ஈடுபாடுகொண்டு அவர்கள் வீட்டில் இவருக்கு விருந்து வைத்ததும், இவன் தங்கை இனிமையான குரலில் ‘நெஞ்சில் உரமுமின்றி’ பாடியதும் நினைவுக்கு வந்தது. அந்தப்

பெண் பெயர் என்ன..?

”உக்காருங்க... ஊர்ல எல்லாரும் சௌக்கியமுங்களா?”

”ஊர்ல யாரும் இல்லீங்க.”

”அப்படியா? அவங்களும் வந்திருக்காங்களா? உங்க தங்கச்சி வந்திருக்குதோ?”

”தங்கச்சி இல்லைங்க” என்றான். அவன் கண் களில் பளபளப்பு ஏற்பட்டது.

”என்ன சொல்றீங்க?”

”எண்ட தங்கச்சி, அப்பா, அம்மா எல்லாரும் இறந்துட்டாங்க.”

”அடப்பாவமே! எப்ப? எப்படி?”

”ஆகஸ்ட் கலகத்துலதாங்க!”

”ஐயையோ! எப்படி இறந்துபோனாங்க?”

”தெருவுல வெச்சு... வேண்டாங்க! விவரம் வேண்டாங்க... நான் ஒருத்தன்தான் தப்பிச்சேன். அதுவும் தற்செயல்.”

டாக்டர் மௌனமாக இருந்தார். எப்படி ஆறுதல் சொல்வது? அவன் சிரமப்பட்டுக் கண்ணீரைக் கட்டுப்படுத்திக்கொண்டு இருக்கும்போது, எது சொன்னாலும் பிரவாகம் துவங்கிவிடும் என்று தோன்றியது. இருந்தும் ஏதோ பேச வேண்டிய அவசியத்தில்,

”ஏதாவது சாப்பிடறீங்களா?”

”கோப்பி” என்றான்.

”இத்தனை நடந்திருக்குனு நினைக்கவே இல்லை! அதும் நமக்குத் தெரிஞ்சவங்க. நாம பழகினவங்க இதுல பலியா இருக்காங்கன்னா ரத்தம் கொதிக்குது...”

”அதைப்பத்தி இப்பப் பேச வேண்டாங்க. நான் வந்தது வேற விசயத்துக்காக.”

”சொல்லுங்க. உங்களுக்கு எந்த விதத்துல என்ன உதவி தேவையா இருக்குது?”

”நிகழ்ந்தது எல்லாம் தமிழ் நாட்டுல முழுவதும் தெரியாதுண்டுதான் தோணுது. யாழ்ப்பாணம் பொது நூலகத்துல இருந்த ஒரு லட்சம் தமிழ்ப் புத்தகங்களை போலீஸ்காரங்களே எரிச்சாங்க. அது தெரியுமோ உங்களுக்கு?”

”அப்படியா?”

”அருமையான புத்தகங்கள்! பாரதியாரே சொந்தச் செலவில் பதிப்பித்த ‘ஸ்வதேச கீதங்கள்’ 1908-லயோ என்னவோ வெளியிட்டது. ‘இதன் விலை ரெண்டணா’ண்டு போட்டு இருந்தது. ஆறுமுக நாவலருடைய முதல் எடிஷன்கள் எல்லாம் இருந்தது. 1899-ல் வெளியிட்ட சிங்காரவேலு முதலியாருடைய அபிதான சிந்தாமணி முதல் பிரதி! லட்சம் புத்தகங்கள்னா எத்தனை தமிழ் வார்த்தைகள்! எண்ணிப் பாருங்க. அத்தனையும் தெருவுல எரிச்சாங்க.”

”அடடா!”

”அதை நான் சொல்ல விரும்பறேன். அப்புறம் நான் இந்தியாவுக்கு வந்து பதினஞ்சு நாளா தமிழ்நாட்டில் பார்த்த சில விஷயங்களையும் சொல்ல விரும்பறேன்.”

”எங்க சொல்ல விரும்பறீங்க?”

”இன்றைய கூட்டத்தில்தான்!”

”இன்றைய கூட்டம் பாரதி பற்றியதாச்சே!”

”பாரதி பெல்ஜியம் நாட்டுக்காகவும் பிஜி தீவினருக்கும் அனுதாபப்பட்ட சர்வதேசக் கவிஞன். ருஷ்யப் புரட்சியை வாழ்த்தினவன்! இன்றைக்கு இருந்திருந்தா, சிங்களத் தமிழர்களுக்காக உருகியிருக்க மாட்டானா?”

”கட்டாயம்... கட்டாயம்...”

”அதைத்தாங்க சொல்லப்போறேன்!”

”அதுக்கு இந்த மேடை சரியில்லைங்களே!”

”இந்த மேடைதான் மிகச் சரியானது. தமிழ் பயிலும் எல்லா நாட்டவர்களும் வந்திருக்காங்க. தமிழக அமைச்சர் வரார். சர்வதேச ஆராய்ச்சியாளர்கள், அனைத்திந்தியத் தமிழறிஞர்கள் எல்லாரும் வர்ற இந்த மேடையில எனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கத்தான் துக்கத்தையும் மறந்து வந்திருக்கிறேன்!”

டாக்டர் சற்றே கவலையுடன், ”குறிப்பா என்ன சொல்லப்போறீங்க?” என்றார்.

”சிங்களத் தமிழர்களைத் தமிழகம் நடத்தற விதத்தையும் பார்த்தேன். அதையும் சொல்லப்போறேன்.”

”புரியலீங்க.”

”ஐயா! நான் வந்து பதினைந்து தினம் ஆச்சு. முதல்ல மண்டபம் டிரான்ஸிற் காம்ப்புக்குப் போனேன். இலங்கையைத் துறந்து இங்க வந்த தமிழர்கள் என்ன செய்யறாங்க, அவங்களை எப்படி ‘றீட்’ (treat) பண்ணறாங்கன்னு பாக்கிறதுக்கு. ராமேஸ்வரம் வந்து சேர்ந்த உடனே அவங்களைத் தமிழகம் எப்படி வரவேற்குது தெரியுமோ? டிரான்ஸிற்றர் வெச்சிருக்கியா? றேப் றிக்கார்டர் கொண்டுவந்திருக்கியா?

தங்கத் தமிழ்நாட்டுக்குத் திரும்பி வந்துட்டோமிண்டு கண்ணில கனவுகளை வெச்சுக்கிட்டு வந்தவங்களுக்கு எல்லாம் ரெண்டே மணி நேரத்துல கலைஞ்சுபோயிருதுங்க, அந்த காம்ப்பைப் பார்த்ததும். சிறைக் கைதிங்க பரவாயில்லை! சன்னல் இல்லாத ஓட்டு வீடு. பிரிட்டிஷ் காலத்துல க்வாரன்டைன் காம்ப்பா இருந்ததை இன்னும் மாற்றாமவெச்சிருக்காங்க. இரண்டு ரூமுக்குப் பத்து பேற்றை அடைச்சுவெச்சிருக்காங்க. அவங்களுக்கு ஆளுக்கு இரண்டு வாரத்துக்கு எட்டு ரூபா உபகாரப் பணம். ஆறாயிரம் ரூபா சர்க்கார் கடன் கொடுக்குதுனு பேரு. எல்லாம் அப்ளிகேசனாத்தான் இருக்குது. ஆறு மாதம் காத்திருந்தாலும் லஞ்சம் இல்லாம வராது. இவங்க உடமைகளை,

கொண்டு வந்த அற்பப் பணத்தை ஏமாற்றிப் பறிக்க எண்ணூறு பேர். சிலோன் ரூபாய்க்கு எழுபத்து மூணு பைசா கொடுக்கணும். கிடைக்கிறது நாப்பத்தஞ்சுதான். எல்லாரும் திரும்பிப் போயிரலாம், அந்த நரகமே மேல்னு சொல்றாங்க. திரும்பச் சேர்த்துக்க மாட்டாங்க! போக முடியாது.

1964 வரைக்கும் இலங்கையைத்தான் தாயகம்னு நினைச்சுக்கிட்டு இருந்தாங்க. திடீர்னு 'இது உன் தாயகம் இல்லை, தமிழ்நாட்டுக்குப் போ'னு அழையாத விருந்தாளிங்களா பேப்பரை மாற்றிக் கொடுத்துட்டு கப்பலில் அனுப்பிச்சிட்டாங்க. எதுங்க இவங்க தாயகம்? அங்க பொறந்து வளந்து ஆளாகி, ஒரே நாளில எல்லாம் கவரப்பட்டு, இங்கயும் இல்லாம அங்கயும் இல்லாம இவங்களைப் பந்தாடிக்கிட்டு இருக்காங்க. இது ஒரு சர்வதேசப் பிரச்னை இல்லையா?"

"எல்லாம் சரிதாங்க. இதை நீங்க சொல்ல வேண்டிய மேடையைப் பத்தித்தான் எனக்கு..."

"வேற எங்கங்க சொல்ல முடியும்? அரசியல் வாதிங்ககிட்டயா? ஏ.டி.எம்.கே-காரங்க, 'இதுக்குத்தான் நாங்க தமிழகம் பூரா கதவடைப்பு செஞ்சமே'ங்கறாங்க! டி.எம்.கே, 'இதுக்குத்தான் நாங்களும் தமிழகம் பூராக் கதவடைப்பு செஞ்சமே'ங்கறாங்க!"

"இல்லை. இதைத் தமிழ்ப் பத்திரிகைகளில் ஒரு கட்டுரை மாதிரி எழுதலாமே நீங்க..."

"சொல்றேங்க! எல்லாப் பத்திரிகையையும் போய்ப் பார்த்தேன். விகடன்ல சொன்னாங்க; நாங்க அட்டைப் படமே கண்ணீர்த் துளியா ஒரு இஷ்யூல போட்டாச்சேன்னாங்க. குமுதம் ஆளுங்களைச் சந்திக்கவே முடியலை. குங்குமத்துல கேட்டா, விகடன்ல வந்துருச்சேன்னாங்க. ராணியில இதைப்பத்தித்தான் கட்டுரைத் தொடர்ல நாங்களே எழுதிட்டு இருக்கமேன்னாங்க..."

"நீங்க என்ன எழுதறதா சொன்னீங்க?"

"அந்தப் புத்தகங்களை எரிச்சதைப்பற்றித்தாங்க! ஒரு லட்சம் புத்தகங்க! அத்தனை வார்த்தைகளும் எரிஞ்சுபோய், ராத்திரி பூரா வெளிச்சமா இருந்ததை! ஒருத்தர் மட்டும் சொன்னாரு எழுதுங்கனு... ஆனா,

அப்படியே உங்க தங்கச்சி றேப்பையும் எழுதுங்க... அவங்க கலர் ட்ரான்ஸ்பரன்ஸி இருந்தா கொடுங்க, அட்டையில போடுவோம்... கொஞ்சம் ஹ்யூமன் இன்ட்ரஸ்ட் இருக்கும்னாருங்க! அவர் பேர் சொல்ல விரும்பலை. எனக்கு என் சொந்த சோகத்தை எழுத விருப்பம் இல்லை. அவளை என் கண் எதிரிலேயே துகிலுரிச்சாங்க! முதல்ல பக்கத்து வீட்ல சிங்களக் குடும்பத்தில்தாங்க அடைக்கலம் கொடுத்தாங்க. நாள் பூரா கக்கூஸ்ல ஒளிஞ்சிக்கிட்டு இருந்தது! அவங்க உயிருக்கே ஆபத்து வந்திரும்போல நிலையில பின்பக்கமா ஓடிப்போயிருச்சுங்க. சந்துல வெச்சுப் பிடிச்சுத் தெருவுல... நடுத் தெருவுல... என் கண் முன்னாலயே! கண் முன்னாலயே...” அவன் இப்போது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுதான்.

”ரொம்பப் பரிதாபங்க.”

கொஞ்ச நேரம் அழுதுவிட்டு ”எனக்கு இதைச் சொல்லி அனுதாபம் தேடிக்க விருப்பம் இல்லைங்க. இந்த மாதிரி வன்முறைங்க உங்க ஊர்லயும் நிறைய நடக்குது. இங்கயும் றேப்புக்குப் பஞ்சம் இல்லை. ஆனா, அந்தப் புத்தகங்களை எரிச்சது, அது என்னவோ ஒரு சரித்திர சம்பவமாத்தான் எனக்குத் தெரியுது. அந்த நெருப்புல இருந்த வெறுப்பு நிச்சயம் சர்வதேசக் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டியதுங்க...” சட்டையில் முழங்கைப் பகுதியில் தன் முகத்தைச் சரியாகத் துடைத்துக்கொண்டு, ”எனக்கு ஒரு நாட்டு ‘குடிமகன்’கிறது யாருங்கறதைப்பற்றி ஆதாரமா சந்தேகங்கள் வருதுங்க. சிங்களவர்கள் தமிழர்கள் இரண்டு பேரும் இந்தியாவுல இருந்து வந்தவங்க. அவங்க வங்காளம் ஒரிஸ்ஸாவில் இருந்து வந்த ஆரியர்களாம். நாங்க ஒண்ட வந்த கள்ளத் தோணிங்களாம். சக்கிலியங்களாம்! இதைஎல்லாம் சொல்ல வேண்டாம்? ஆறு லட்சம் பேர் எங்க போவோங்க? என்ன செய்வோங்க? இதெல்லாம் சொல்ல வேண்டாமா?”

டாக்டர் மூக்கைச் சொறிந்துகொண்டார்: ”இவ்வளவு விவரமாச் சொல்ல வேண்டாங்க. ஏன்னா, இது இலக்கியக் கூட்டம். இதில் அரசியலை நுழைக்கிறது நல்லால்லை. ஒண்ணு செய்யுங்க...”

”அரசியல் இல்லைங்க, மனித உரிமைப் பிரச்னை இல்லையா?

‘சொந்தச் சகோதரர்கள்

துன்பத்திற் சாதல் கண்டும்

சிந்தை இரங்காரடீ-கிளியே!
செம்மை மறந்தாரடீ!'னு

பாரதி பாடலையா? இலங்கைத் தமிழர்களைச் சகோதரர்கள்னுதானே நீங்க எல்லாரும் சொல்றீங்க?"

"அதுவும் ஒருவிதத்துல வாஸ்தவம்தான். இருந்தாலும்..."

"எனக்கு இதைவிட்டா வேற வாய்ப்புக் கிடையாதுங்க. ரத்தினாபுரத்துல நடந்ததைச் சொன்னா, கண்ல ரத்தம் வரும். அதெல்லாம் நான் சொல்லப்போறது இல்லை. ஒரு லட்சம் புத்தகங்களை எரிச்சாங்க. அதுக்குப் பதில் ஒரே ஒரு புத்தகத்தை மேடையில எரிக்கப்போறேன்!"

"என்ன புத்தகம்?" என்றார் கவலையோடு.

"இந்த மாநாட்டு மலரை!"

"எதுக்குங்க அதெல்லாம்..?"

"பாரதி சொன்ன எதையும் செய்யாம ஏர் கண்டிசன் ஹோட்டல்ல சாக்லேட் கேக் சாப்ட்டுக்கிட்டு மாநாடு போடறது எனக்கு என்னவோ பேத்தலாப் படுது. அதனோட சிகரம்தான் இந்த வெளியீடு. இதை மேடையில எரிச்சுட்டு, பாரதி சொன்னதை நடைமுறையில் செய்து காண்பிங்கனு சொல்லப்போறேன். 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்'னு அவன் சொன்னது கான்க்ரீட் பாலம் இல்லை. முதல்ல மனப்பாலம் அமைங்க! அப்பதான் பளிச்சுனு எல்லார் மனசிலயும் பதியும். நேரமாயிடுச்சுங்க. ரெண்டு மணிக்குல்ல கூட்டம்?" அவன் எழுந்து வணங்கிவிட்டுச் சென்றான். 'செல்வரத்தினம்...'

டாக்டர் அவன் போன திக்கைத் திகைப்பில் பார்த்துக்கொண்டு இருந்தார். சற்று நேரம் யோசித்தார். நிகழ்ச்சி நிரலைப் பார்த்தார். இரண்டாவதாகப் பேசுவது 'செல்வரத்தினம், ஸ்ரீலங்கா' என்றிருந்தது. யோசித்தார். நாய்க்குட்டி போல் இருந்த டெலிபோனை எடுத்தார். மதுரைக்கு டிரங்க்கால் போட்டார். "பீப்பி கால். டாக்டர் மணிமேகலை..."

பத்து நிமிஷத்தில் கால் வந்தது.

”மணி! நாந்தான்.”

”என்ன, விசாரிச்சீங்களா? கிடைச்சிருச்சா?”

”ஏறக்குறைய கிடைச்ச மாதிரிதான். செக்ரெட்டரியேட்லயே விசாரிச்சுட்டேன். அமைச்சர் கையெழுத்து ஒண்ணுதான் பாக்கியாம்.”

”அப்ப இனிப்பு செய்துர வேண்டியதுதான். இந்தக் கணத்துல உங்ககூட இருக்க...”

”மணி! ஒரு சின்ன சிக்கல்...”

”என்னது... அருணாசலம் மறுபடி பாயறாரா?”

”அதில்லை மணி! இன்னிக்குக் கூட்டத்துல அமைச்சர் வராரு. எனக்கு முன்னால ஒரு சிலோன்காரன் பேசறதா இருக்கு. நாம யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ் மகாநாட்டுல சந்திச்சிருக்கோம். அவன் பேசறான்.”

”பேசட்டுமே, உங்களுக்கு என்ன?”

”அதில்லை மணிமேகலை. அவன் சமீபத்திய கலகத்துல ரொம்ப இழந்து போய் ஒரு வெறுப்புல இருக்கான். ஏறக்குறைய தீவிரவாதியாக் கிறுக்குப் புடிச்ச பயலா இருக்கான்.”

”என்ன செய்யப்போறான்?”

”யாழ்ப்பாணத்துல லட்சம் புத்தகங்களை எரிச்சாங்களாம். அதுக்குப் பதிலா மேடையில விழா மலரை எரிச்சுக் காட்டப்போறேங்கறான். கேக்கறதுக்கே விரசமா இருக்குது. எனக்கு என்னடான்னா, கூட்டத்துல கலாட்டா ஆகி, எங்கயாவது எனக்குச் சந்தர்ப்பம் வர்றதுக்குள் கலைஞ்சுபோச்சுன்னா, அமைச்சர் வந்து...”

”த்ரீ மினிட்ஸ் ப்ளீஸ்!”

”எக்ஸ்டென்ஷன் பண்ணுங்க.”

”என்ன, கேக்குதா?”

”கேக்குது... கேக்குது. இத பாருங்க. உங்க பேச்சை இன்னிக்கு அமைச்சர் கேக்க வேண்டியது ரொம்ப முக்கியம். நீங்க முன்னாடி பேசிடுங்களேன்.”

”எப்படி? நிகழ்ச்சி நிரல்ல மாறுதல் செய்யணுமே! தலைமை தாங்கறதால, இறுதியுரைன்னா நானு?”

கொஞ்ச நேரம் மதுரை யோசித்தது.

”என்ன செய்யச் சொல்றீங்க?”

”எப்படியாவது உங்க அண்ணன்கிட்ட அவசரமா போன் பண்ணிச் சொல்லிடு...”

”அதைத்தான் நானும் யோசிச்சுக்கிட்டு இருந்தேன்... வெச்சுருங்க.”

”எப்படியாவது...”

”வெச்சிருங்கன்னு சொன்னனில்லையா? அதிக நேரம் இல்லை. ஒரு டிமாண்ட்கால் போட்டுர்றேன்.”

”சரி மணிமேகலை!”

”கவலைப்படாதீங்க. பேச்சு நல்லா பேசுங்க. கிடைச்சா மாதிரிதான்னு அண்ணனும் சொல்லியிருக்காரு. அமைச்சர் உங்க பேச்சைக் கேட்டுட்டாப் போதும்னாரு...”

டெலிபோனை வைத்துவிட்டு டாக்டர் சற்றுத் திருப்தியுடன் எழுந்தார். மணிமேகலை செய்து காட்டிவிடுவாள். இவ்வளவு செய்யக் கூடியவள் இது என்ன? இப்போதே அவள் விரல்கள் தொலைபேசியில் செயல்பட்டுக் கொண்டு இருக்கும். அவள் சக்தி!

வாழ்வு பெருக்கும் மதியே சக்தி

மாநிலம் காக்கும் மதியே சக்தி

தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி

சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி

இரண்டு மணிக்குக் கூட்டம் துவங்கியது. எதிரே ஹால் நிரம்பியிருந்தது. வெள்ளைக்கார முகங்கள் முதல் வரிசையில் பளிச்சென்று தெரிந்தன. பட்டுப்புடவை உடுத்திய நங்கை மைக்கைத் தொட்டுப் பார்த்துவிட்டு ‘எண்ணிய முடிதல் வேண்டும், நல்லதே எண்ணல் வேண்டும்...’ என்று இனிமையாகப் பாடினாள். மேடையில் பேச இருப்பவர்கள் வரிசையில் ஓரத்தில் செல்வரத்தினம் உட்கார்ந்து இருந்தான். டாக்டரைப் பார்த்துப் புத்தகத்தை உயர்த்திக் காட்டினான். கவலையாக இருந்தது. என்ன! ஒன்றுமே செய்ய முடியவில்லையா? இரு இரு பார்க்கலாம். அமைச்சர் இன்னும் வரவில்லை. எல்லோரும் வாயிலையே பார்த்துக்கொண்டு இருக்க, வரவேற்புரைஞர், ”தலைவர் அவர்களே! உலகெங்கிலும் இருந்து வந்திருக்கும் தங்கத் தமிழர்களே!” என்று துவங்க, சலசலப்பு தொடர, அமைச்சர் அங்கும் இங்கும் வணங்கிக்கொண்டு நடுவில் நடந்து வந்தார். டாக்டரைப் பார்த்துப் புன்னகைத்து விட்டுத் தன் இருக்கையில் உட்கார்ந்துகொண்டு, உடனே தன் முழுக்கைச் சட்டையை உருவி கடிகாரம் பார்த்தார். டாக்டர் அருகில்தான் உட்கார்ந்திருந்தார்.

இப்போது கேட்கலாமா? இது சந்தர்ப்பமா? இல்லை... இல்லை. அவர் கேட்கும் வரை காத்திருப்போம்.

பின்னால் பார்த்தார். இன்னும் இருந்தான். கவலை சற்று அதிகமாகியது.

”முதற்கண் பிஜி தீவில் இருந்து வந்திருக்கும் ஜார்ஜ் மார்த்தாண்டம் அவர்கள் பேசுவார்” என்று அறிவித்துவிட்டு உட்கார்ந்தார்.

”ரெஸ்பெக்டட் அண்ட் ஹானரபிள் மினிஸ்டர் அண்ட் ஃபெலோ டெலிகேட்ஸ்! ஐ’ம் எ தர்ட் ஜெனரேஷன் டமிலியன் அண்ட் ஐ’ம் ஸாரி ஐ’ம் நாட் ஏபிள் டு ஸ்பீக் இன் டமில். பட் தி கிரேட் ஸுப்ரமண்ய பாரதி...”

டாக்டர் தன்னை அறியாமல் பின்னால் பார்க்க... போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு காகிதத்தைப் பின் வரிசை ஓரத்தில் இருந்தவரிடம் காட்டி ஏதோ கேட்க, அவர் செல்வரத்தினத்தைக் காட்ட, இன்ஸ்பெக்டர் செல்வரத்தினத்தின் பின் நழுவி வந்து தாழ்ந்த குரலில் ஏதோ சொல்ல, செல்வரத்தினம் கலவரத்துடன் உடனே எழுந்து அவருடன் செல்வதைப் பார்த்தார்.

பெரிதாக மூச்சுவிட்டுக்கொண்டார். மணிமேகலை மணிமேகலைதான்!

ஒரு மணி நேரத்தில் சாதித்துவிட்டாள். அவருக்குள் புன்னகை ஒன்று மலர்ந்தது.

”அடுத்துப் பேசவிருந்த ஸ்ரீலங்காவைச் சேர்ந்த திரு.செல்வரத்தினம் அவர்களை மேடையில் காணாததால், சோவியத் நாட்டைச் சேர்ந்த கத்தரீனா ஐவனோவாவை அழைக்கிறேன்...”

தினமணி நாளிதழில் மறுதினம் செய்தி வந்திருந்தது:

டாக்டர் நல்லுசாமி தன் தலைமை உரையின்போது, ” ‘சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்’ என்று பாரதி சொன்னது கான்க்ரீட் பாலத்தை அல்ல; மனப் பாலத்தை...” என்றார். அமைச்சர் தன் உரையில் உள்ள புதிதாகத் துவக்கப்போகும் பாரதி பல்கலைக்கழகத்துக்கு டாக்டர் நல்லுசாமி துணைவேந்தராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற செய்தியை அறிவித்தார்.

செல்வரத்தினத்தின் விசா ரத்து செய்யப்பட்டு இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் தாய்நாடு திரும்பிச் செல்லும்படி, கட்டளையிடப்பட்ட செய்தி நாளிதழ்கள் எ திலும் வரவில்லை!

****

அரிசி

உலகத்தில் உள்ள அத்தனை கார் மெக்கானிக்குகளும் ஏமாற்று வேலைக்காரர்கள் என்றால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.இரண்டு மூன்று பேர் நல்லவர்களும் இருக்கிறார்கள். எனக்கு வாய்த்த மெக்கானிக் துரதிர்ஷ்டவசமாக, முன் பட்டியலைச் சார்ந்தவர்.'தேமேனு' சென்று கொண்டிருந்த–என் காரின் உட்பகுதியில் சில வினோத சப்தங்கள் திடீரென்று ஜனிக்க, மெக்கானிக்கிடம் அழைத்துச் சென்றேன். அவர் ஒரு முறை ஓட்டிப் பார்த்து 'ஸஸ்பென்ஷன் புடுங்கிக்கிச்சு' என்று சொன்னார்.

என்னதான் நான் இன்ஜினியாரக இருந்தாலும் என் திணை துறை எல்லாம் வேறு. மோட்டாரின் உள் அவஸ்தைகளைப் பற்றிய என் அறிவை ஒரு பஸ்டிக்கெட்டின் பின் பக்கத்தில் எழுதிவிடலாம் உதாரணமாக ஸஸ்பென்ஷன் எங்கிருக்கிறது என்று சுத்தமாகத் தெரியாது எனக்கு இருந்தும் என் அறியாமையை மெக்கானிக்கிடம் காட்டிக் கொள்ள விழையாமல்"அப்படியா? மாத்திட்டாப் போச்சு" என்றேன்

அந்த ஆள் உடனே ஒரு பழைய சாக்கை விரித்து காரின் அடியில் மறைந்தார்.அங்கிருந்து பேசினார் "கிட்டு நீங்க வாங்கிட்டு வரீங்களா! நான் வாங்கிட்டு வரவா"

உலகத்தில் உள்ள அத்தனை கார் மெக்கானிக்குகளும் ஏமாற்று வேலைக்காரர்கள் என்றால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.இரண்டு மூன்று பேர் நல்லவர்களும் இருக்கிறார்கள். எனக்கு வாய்த்த மெக்கானிக் துரதிர்ஷ்டவசமாக, முன் பட்டியலைச் சார்ந்தவர்.'தேமேனு' சென்று கொண்டிருந்த–என் காரின் உட்பகுதியில் சில வினோத சப்தங்கள் திடீரென்று ஜனிக்க, மெக்கானிக்கிடம் அழைத்துச் சென்றேன். அவர் ஒரு முறை ஓட்டிப் பார்த்து 'ஸஸ்பென்ஷன் புடுங்கிக்கிச்சு' என்று சொன்னார்.

என்னதான் நான் இன்ஜினியாரக இருந்தாலும் என் திணை துறை எல்லாம் வேறு. மோட்டாரின் உள் அவஸ்தைகளைப் பற்றிய என் அறிவை ஒரு பஸ்டிக்கெட்டின் பின் பக்கத்தில் எழுதிவிடலாம் உதாரணமாக ஸஸ்பென்ஷன் எங்கிருக்கிறது என்று சுத்தமாகத் தெரியாது எனக்கு இருந்தும் என் அறியாமையை மெக்கானிக்கிடம்

காட்டிக் கொள்ள விழையாமல்”அப்படியா? மாத்திட்டாப் போச்சு” என்றேன்

அந்த ஆள் உடனே ஒரு பழைய சாக்கை விரித்து காரின் அடியில் மறைந்தார்.அங்கிருந்து பேசினார் “கிட்டு நீங்க வாங்கிட்டு வரீங்களா! நான் வாங்கிட்டு வரவா”

“அது எங்க கிடைக்கும்?”

“ஜே,ஸி, ரோடு போகணும்” சரிதான் நீங்க ஒண்ணு செய்யுங்க மொத்தமா ரிப்பேருக்கு எவ்வளவு ஆகும்னு எஸ்டிமேட் போட்டு சொல்லிடுங்க”

“அதெப்படிங்க முளுக்க பார்க்காம சொல்லிட முடியாதே”

“முளுக்கப் பாருங்களேன்”

அவர் பார்க்கும் நேரத்தில் நான் அந்தப் பட்டறையை விட்டு வெளியே வந்தேன்.திரும்பிப் பார்த்தால் என் கார் ஜாக்கி போடப்பட்டு பரபரவென்று முன் சக்கரங்கள் நீக்கப் பட்டு எண்ணைக் கசிவுடன் வெவ்வேறு வடிவங்களில் உதிரிப் பாகங்களை இழந்து கொண்டிருந்தது. என் வயிற்றில் கவலை கவ்விப் பிடித்தது. கழற்றிக் கழற்றி இதற்கு நூறு-அதற்கு ஐம்பது என்று ஏற்றிக் கொண்டே செல்லப் போகிறார்.கார் உள்ளே சத்தம் வந்தால் என்ன குறைந்து போய்விடும் ? வெட்டி வம்பில் மாட்டிக் கொண்டேன் என்று சுயமாகச் சபித்துக்கொண்டே வெளியே வந்தேன்.

அந்தப் பட்டறை தெரு முனையில் இருந்தது.மில்கார்னர் சென்ட்ரலுடன் ஒட்டிக் கொள்ளும் இடம். காலை பத்து.போக்கு வரத்து கணிசமாக இருந்தது.எத்தனையோ கார்கள் ஆரோக்கியமான சஸ்பென்ஷனுடன் சென்று கொண்டிருந்தன.அருகே ஒரு ஓட்டலில் காப்பி சாப்பிட்டு விட்டு என் பலிபீடத்துக்குத் திரும்புகையில் அந்த விபத்தைப் பார்ததேன்.

ஒரு கிழவன் சென்ட்ரல் தியேட்டர் பக்கத்திலிருந்து சைக்கிளில் ‘லொடக்கா லொடக்கா‘என்று சப்தமிட்டுக் கொண்டு வந்து கொண்டிருந்தான். மெயின் ரோடில் காவி நிறத்தில் ஒரு ‘மெட்டடார்‘ வேன் வந்து கொண்டிருந்தது. கிழவன் யோசிக்காமல்

,பார்க்காமல்,நிறுத்தாமல், முட்டாள்தனமாக சரேல் என்று திரும்பி வேனின் குறுக்கே சென்று விட்டான்.அதன் டிரைவருக்கு ப்ரேக் போட சந்தர்ப்பமே கிட்டவில்லை . டம் என்று சப்தம் கேட்டது அப்புறம் நான் கிழவனைப் பார்க்கவில்லை. என் வயிற்றில் பந்து சுருண்டு கொண்டது.

பரபரவென்று கூட்டம் கூடிவிட்டது. எனக்கு என்ன ஆயிற்று என்று அறிந்து கொள்ளும் ஆவல் பற்றிக் கொண்டது. ஆனால் அங்கே செல்லத் தயக்கமாக இருந்தது . இருந்தும் மெல்ல நெருங்கினேன். வேன் நின்றிருந்தது.கிழவன் மேல் சுத்தமாக ஏறிவிட்டது. சைக்கிள் காய்ச்சிய அப்பளம் போலக் கிடந்தது.

கிழவன் கீழே ஒருக்களித்துப் படுத்தவாறு இருந்தான்.அவன் மண்டையில் அடிபட்டு பக்கவாட்டில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது வாய் திறந்திருந்தது.உடல் ஒரு வித நடுக்கம் போல் ஆடிக் கொண்டிருந்தது அவன் உயிர் விரைவில் பிரிந்து கொண்டிருந்தது. அவனைச் சுற்றியிருந்த நாங்கள் அதாவது பங்களூர் நகரத்தின் பொறுப்புள்ள பிரஜைகள் எப்படி நடந்துகொண்டோம்? சொல்கிறேன்.

“டிரைவர் எங்கய்யா?”

“அதோ உக்காந்துக்கிட்டிருக்காரு”

“நான் இல்லிங்க டிரைவர்”

“ஆசாமி இறந்துக்கிட்டிருக்கான் தூக்குங்க”

“தூக்காதிங்க! போலீஸ்–வரட்டும்”

“அந்த ஆட்டோவை நிறுத்துய்யா” நிறுத்தப் பட்ட ஆட்டோ கூட்ட வளையத்தை முத்தமிட்டுவிட்டு உடனே வேகம் பிடித்துப் பறந்தது:

அருகே கடந்த பி.டி.எஸ் பஸ்ஸின் ஜன்னல் பூரா முகங்கள்!”பிரசன்னா சீக்கிரம் வந்து பாரு!” என்று பஸ்ஸின் உள் ஒரு அழைப்புக் கேட்டது.

“போலீஸ் வரட்டும் அது வரைக்கும் ஒண்ணும் செய்யக் கூடாது”

“டெலிஃபோன் செய்யுங்களேன்”

“ஸார் நீங்கதான் போய் செய்யுங்களேன்”

“எனக்கு அர்ஜண்டா வேலை இருக்கு.போலீஸ் வந்துருவாங்க”

இப்போது கிழவனின் நடுக்கம் நின்றிருந்தது. வாயால் பெரிசாக மூச்சு விட்டதால் வழிந்த ரத்தத்தில் காற்றுக் கொப்புளங்கள் வெடித்தன.

“ஆள் யாருங்க”

“யாருக்குத் தெரியும்”

“கூட ஒருத்தரும் வரலியா”

“நீங்க என்ன பண்றிங்க எதிர்த்தாப்பல ஓட்டலுக்குப் போய் போன் பண்ணிடுங்க” என்று என்னை ஒருவர் தேர்ந்தெடுத்தார். நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் ஓட்டலுக்குச் சென்றேன்.அங்கே உற்சாகமாக எல்லோரும் டிபன் பண்ணிக் கொண்டிருந்தார்கள்

“டெலிஃபோன் செய்யணும்”

“எழுபத்தஞ்சு பைசா”

“தர்றேன்”

“முதல்ல கொடுத்துடுங்க எஸ்.டி டி கூடாது”

“இல்லை . போலீசுக்கு ஃபோன் செய்யணும். ஒரு ஆக்ஸிடெண்ட்”

“பண்ணிக்கங்க”

“டைரக்டரி வேணும்.அவசர போலீஸ்-உதவிக்கு என்ன நம்பர் செய்யணும்?”

“தெரியாது”

“டைரக்டரி இல்லையா?”

“இல்லை!”

“அந்தாளு இறந்துகிட்டு இருக்கான்”

“ஸார் நான் உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லட்டுமா-”

“என்ன?”

“இதில மட்டும் மாட்டிக்காதீங்க”

“எதில?”

“ஆக்ஸிடெண்ட் கேஸில நான் ஒரு முறை ,இந்த மாதிரி ஆக்ஸிடெண்ட்–கேஸ்தான், வழில கிடக்கான்.கார்ல எடுத்திட்டு ஆஸபத்திரிக்குப் போனேன்.’அங்க ஏன் கொண்டு வந்தே மெடிக்கோ லீகல் கேஸ். விக்டோரியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போ’ன்னாங்க.விக்டோரியா எவ்வளவு துரம்?- அங்கே போனேன் .”அங்க போனா ‘போலீஸ்காரங்க இல்லாம எப்படி நீ பாடிய மட்டும கொண்டு வரலாம்’னு ஒரு ஓரத்தில் ஒன்றரை மணி நேரம் காக்க வெச்சாங்க அதுக்கப்புறம் அங்க ஃபோன்–பண்ணி இங்க ஃபோன் பண்ணி போலீஸ்-வந்தாங்க..

முதல்லயே என்மேல ஏறினாங்க’எப்படிய்யா எங்களுக்கு சொல்லாம இங்க கொண்டுட்டு வரலாம்னுட்டு என்னைத் திட்டினாங்க அவங்க ஆஸபத்திரில கேஸ் எடுத்துக்கிட்ட போது ஆள் போய்ட்டான்’ டெட் ஆன் அரைவல்’னு முடிச்சுடடு கையெழுத்துப் போட்டு கிடங்குங்குக்கு அனுப்பிச்சுட்டாங்க.”கேஸ் அத்தோட நின்னுச்சா? இல்லை நான்தான் ஸார் சாட்சி ஆறு மாசம் இழுத்து அடிச்சாங்க கோர்ட்டுககு .சம்மன்ஸ் வரும் அங்கே போவேன் இன்ஸ்பெக்டர் வந்தா கவர்மெண்ட் வக்கீல் வரமாட்டாரு ரெண்டு பேருமே வந்தா டிரைவரோட வக்கீல் ஒத்திப் போட்டுருவாரு “அன்னிக்கு ஒரு சின்ன கணக்குக்காக மொத்தம் என்ககு ஆன செலவை கணக்குப் பண்ணிப் பார்ததேன். கிட்டத் தட்ட ஆயிரம் ரூபா அதோட நின்னுச்சா கேஸ் ? என்ன ஆச்சு கேளுங்க ஏறக்குறைய அந்த விபத்துக்கு நானே காரணம்ங்கற மாதிரி குறுக்கு கேள்வி போட்டு கண்ல விரலை விட்டு ஆட்டிட்டான் வக்கீல். விட்டாப் போதும்னு ஆயிருச்சு எல்லாம் எதுக்காக? ஒரு குடிமகன்ங்கற முறையில் என் பொறுப்பை என் கடமையை செஞ்சதுக்கு”

“நான் பிரமிப்புடன்–கேட்டுக் கொண்டிருந்துவிட்டு “யாராவது போலீசுக்கு ஃபோன் செய்ய வேண்டாமா” என்றேன்

“நீங்க தாராளமா ஃபோன் பண்ணுங்க கூப்பிட்டா கூட போய்ட்டு வாங்க .எனக்கு நடந்ததெல்லாம் சொல்லிட்டேன்”

“நம்பர் தெரியலையே”

“நூறு பண்ணுங்க”

நான் போலீசுக்கு–டெலிஃபோன் செய்துவிட்டு திரும்ப அங்கே சென்றேன்.ஏற்கெனவே இரண்டு டிராஃபிக் போலீஸ்–ஆசாமிகள் நின்று சாக்கட்டியில் கோடு போட்டுக் கொண்டிருந்தாரகள் நான் சென்றதும் “இவர்தாங்க ” என்றார் ஒருவர் என்னை சுட்டிக்காட்டி “போலீசுக்கு சொல்லிட்டேன்” என்றேன்

“போலீஸ் வந்தாச்சு .பக்கத்தில்தானே சேஷாத்ரிபுரம் போலீஸ்–ஸ்டேஷன். அங்கே போய் கூட்டி வந்துட்டார் டிரைவரு”

போலீஸ்-இன்ஸ்பெக்டர் என்னைப் பார்தது “கொஞ்சம் வாங்க” என்றார் நான் தயக்கத்துடன் சென்றேன்.

“நீங்க இந்த ஆக்ஸிடெண்ட்டை பார்த்திங்களா?”

” ம்.. பார்த்தேன்”

“உங்க பேரு?”

அவர் பையிலிருந்து ஒரு டயரி புறப்பட்டது.என்னுள் எச்சரிக்கை சக்திகள் உயிர் பெற்றன .

”எதுக்கு?”

” எதுக்கா?..விட்ன்ஸ் ஸார்! சாட்சி. நீங்க பார்க்கலை?”

“அது வந்து … பார்த்தேன் துரத்தில இருந்து சரியாப் பார்க்கலை”

“இப்பதான் பார்த்தேன்னு சொன்னிங்க? அட்ரஸ் சொல்லுங்க”

“அட்ரஸ் வந்து.. நான் ஊருக்குப் புதுசுங்க”

“ஊருக்குப் புதுசா? பங்களூர்ல தங்கறவர்தானே?”

“அதாவது மெட்றாஸ்காரன் நான்”

” சரி. இங்க வேலை செய்யறவரா?”

” இல்லை.. இன்ஃபாக்ட் நான் இன்னிக்கு பிருந்தாவன்ல திரும்பிடறேன்” அவர் நான் சொன்னதை சுத்தமாக நம்பவில்லை.என்னை வருத்தத்துடன் பார்த்துச் சிரித்தார்

“ஏன் ஸார் சாட்சி சொல்றதுக்கு அவ்வளவு பயமா?”

“பயம்னு இல்லிங்க. வந்து நான் ஊர்லயே இல்லாம இருந்தா எப்படி சாட்சி சொல்ல முடியும் இதோ இவர் கூடப் பார்த்தார்”

“அய்யோ நான் பார்க்கலை இப்பத்தான் வரேன்”

“யாராவது பாத்தவங்க சாட்சி சொல்ல வரமாட்டிங்களா? யாராவது?

கூட்டம் மெல்லக் கலைந்தது நான் ஒரு சின்ன சமாதான முயற்சியாக ”ப்ளீஸ் லுக் இன்ஸ்பெக்டர் ! தி ஃபாக்ட் இஸ் திஸ்! என்னால சாட்சிக்கு வரமுடியும் எனக்கு எந்தவிதத் தயக்கமும் கிடையாது.சந்தோஷமா வருவேன். ஆனா வெளியூர்க்காரன்.. அதனால மெட்றாஸ்ல இருந்தா எப்படி..”

இன்ஸ்பெக்டர் கோபத்துடன் “போய்யா! மெட்றாஸ் போய்யா இங்க ஏன் நிக்கறே ! போ” என்றார்.கிழவனின் அருகில் சென்றார் அவன் இந்த-நேரத்தில் இறந்திருந்தான் நான் சற்று நேரம்-நின்றேன். மெதுவாக அருகில் இருப்பவரிடம்”மெட்றாஸ்ல இருந்து வந்து எப்படி சாட்சி சொல்ல முடியும் சொல்லுங்க”

“அதானே! ஆவுறதில்லை அது” என்று அனுதாபித்தார்.

திரும்ப மெக்கானிக் ஷாப்பிற்கு வந்தேன் அவர் என் காரின் அக்கக்கான பாகங்களைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தார்

“கிளட்சு ப்ளேட்டு கூட தேஞ்சிருக்கு மாத்திரலாமா” என்றார்

“செய்யுங்க”

“இன்ஜினை டவுன் பண்ணணும் மூணு நாளாகும்”

“செய்யுங்க. எஸ்டிமேட் கொடுத்துடுங்க”

“மொத்தம் முன்னூத்தம்பது, எல்லாத்துகும் பில் கொடுத்துர்றேன்”

“சரி”

“உங்க அட்ரஸ் சொல்லுங்க” சொன்னேன்

“எத்தனை வருசமா அந்த ஃபாக்டரில இருக்கிங்க”

“ஒம்பது வருஷமா”

“புதன் கிழமை வந்துருங்க”

“சரி” என்று வெளியே வந்தேன்

இப்போது அந்த காவி வர்ண வேனைக் காணவில்லை. கூட்டம் விலகியிருந்தது ஒன்றிரண்டு பேர்களே இருந்தனர். போலீஸ்காரர்களையும் காணோம். நான் விபத்து நடந்த இடத்தை மறுபடி கடக்க வேண்டியிருந்தது கிழவன் கிடந்த இடத்தில் அடையாளமாக உறைந்த ரத்தத்திட்டு இருந்தது. சைக்கிள் கிடந்தது. ஏறக்குறைய கிழவனின் வயசிருக்கும் போல் புராதன சைக்கிள். அதன் ஹாண்டில் பாரில் ஒரு அழுக்குப்பை மாட்டியிருந்தது அதில் கிழவன் அரை கிலோ அரிசி வாங்கி வைத்திருந்தான் போலும். அந்த அரிசி சாலையில் சிதறியிருந்தது. பாதி அரிசி ரத்தத்தில் இருந்தது இரண்டு சிறுவர்கள் ரத்தம் படாத அரிசி மணிகளை ஆர்வத்துடன் அள்ளி டிராயர்

பைக்குள் அவசரமாகத் திணித்துக் க ொண்டிருந்தார்கள்.

****

அம்மோனியம் பாஸ்ஃபேட்

நாஜி ஸல்யூட் போல நின்ற கான்கிரீட் கம்பங்கள், விண் என்று முடிச்சு முடிச்சாக முள் கம்பிகள், விரோதமாக மூடியிருக்கும் கேட், உள்ளே பசுமைப் பண்ணை,. காற்றில் பயிர்களின் பலவிதப் பச்சைகள். மஞ்சள் பச்சை, எமரால்ட் பச்சை, பாட்டில் பச்சை, கண்மட்டத்துக்கு உயர்ந்த கதிர்கள், ஃபர்லாங் பாதையின் S-Z ஓட்டம். அதோ வீடு. வீட்டின் நிழல், மரங்களின் நிழல், நிழலில் இளைப்பாறிக்கொண்டிருக்கும் டிராக்டர்கள். சங்கிலிக் கட்டுப்பாட்டை மீறி ஒருவித தற்கொலை இயக்கத்துடன் எம்பிக் குரைக்கும் ஆக்ரோஷ நாய்கள். ஒரு நாய், இரண்டு நாய். மற்றபடி அமைதி. மறுபடி வீடு. வீட்டினுள் வசதிகள். மத்தியில் அந்தப் பெரியவர். எதிரே நான்.

அவருக்கு வயது ஐம்பதுக்கு அருகில் இருக்கும். தலையின் நரை ஐம்பத்து ஐந்து என்றது. உடலின் வலிமை நாற்பத்து ஐந்து என்றது. ஹாலில் படங்கள் இருந்தன. அவைகளில் சில பக்தியைத் தெரிவித்தன. சில பெண்களைத் தெரிவித்தன.

‘இவ்வளவு பெரிய பண்ணையை நீங்க ஒரு ஆளா சமாளிக்கிறீங்க?’என்றேன் !....த்துடன்.

‘எனக்கு ஒத்தாசைக்கு இரண்டு பேர் இருக்காங்க. வெளியுலகத்துக்கும் எனக்கும் அவங்கதான் தொடர்பு. தபால் சேகரிப்பாங்க. விதை வாங்குவாங்க. உரம் வாங்குவாங்க. மற்றபடி நான்தான் எல்லாம். டிராக்டர் இருக்கவே இருக்கு. அதுக்கு உலகத்திலே உள்ள அட்டாச்மெண்ட் எல்லாம் இருக்கு. நானே உழறேன். நானே விதைக்கிறேன்; நானே பயிர் செய்கிறேன்; களைகிறேன்; சேர்க்கிறேன்; எல்லாத்துக்கும் டெக்னாலஜி கொடுத்த சாதனங்கள். மருந்து அடிக்கக் கோயமுத்தூர் ஏரோடிரோமிலிருந்து ப்ளேன் வரும். ஒர்ரே ஓட்டு....என்ன?’

‘நீங்க ஒரு வித்தியாசமான விவசாயி சார்!’

‘மேல் நாட்டிலே இதெல்லாம் சாதாரணம் இல்லையா?’

‘இருந்தாலும் நம் நாட்டிலே ரொம்பப் புதுசுங்க’

‘மிஷின் தம்பி. மிஷின்! மிஷின் இருக்கு; டீஸல் இருக்கு; பணம் இருக்கு. பத்திரிக்கை படிக்கிறதில்லை. பொய்யை எதுக்குப் பைசா கொடுத்துப் படிக்கணும்? ரேடியோவிலே நியூஸ் கேப்பேன். அவ்வளவு தான். லெட்டர் எழுதறதில்லை. இந்த முள் கம்பிக்கு உள்ளே நான்தான் கடவுள். மனித சகவாசம் கிடையாது!’

‘அப்ப எனக்கு அனுமதி கிடைச்சது ரொம்ப பெரிசுன்னு சொல்லுங்க!’

‘ஒரு விதத்துல சரி. நான் வெளியாட்கள் யாரையும் பார்க்கிறது கிடையாது. போனவருஷம் சித்திரை மாசம் ஒருவன் இன்ஸ்யூரன்ஸ் விக்க வந்தான். நாயை அவுத்து விட்டேன்.’

வெளியே ஒரு பெரிய ‘வள்’ கேட்டது.

‘என் மேல நாயை அவுத்து விடலியே?’

‘உரம் விக்க வந்தீங்க. எனக்கு உரம் தேவையாயிருக்கு. கந்தசாமிதான் வாங்கி வருவான். காச்சல்ல படுத்துட்டான். சமயத்துல வந்தீங்க; அதான்...’

‘அதான் உள்ள விட்டீங்களாக்கும். சரியான க்ரெமலின் சார், இந்த இடம்’

‘தம்பி எனக்கு மனுஷங்க வேண்டாம். மோர் சாப்பிடறீங்களா?’

‘வேண்டாம்’ என்றேன். ‘எங்க உரம் அம்மோனியம் பாஸ்ஃபேட் ஸார். தமிழ்நாடு பூரா இப்ப பரவலா உபயோகப்படுத்தறாங்க. நாளைக்கு எங்க வான் வரலாமா உள்ளே...தயங்காம....?’

‘தாராளமா’

‘முள் கம்பியைப் பார்த்தாலே பயமா இருந்தது ஸார். அந்த ஆள் காவல்காரன் என்ன பாஷை பேசறான் அவன்?’

‘அவன் ஒரு நேபாளி...விசுவாசம், பேச மாட்டான்.’

‘என்னவோ கேட்டான்...சரி, நீங்க ஒண்ணு யோசித்துப் பார்த்தீங்களா,

ஸார்?’

‘என்ன?’

‘இந்த மாதிரி மெகானிகல் ஃபார்மிங்கினாலே ஒரு 500 ஆட்களுக்கு வேலை கிடைக்கிற வாய்ப்பு போய்விடறதே’

‘தம்பி, எனக்கு மனுசங்க மேலே நம்பிக்கை போய்டுத்து. மெஷின்ப்பா, மெஷின்! மெஷின் எதிர்த்துப் பேசாது. போட்ட டீஸலுக்கு உழைக்கும்.மெஷின் எப்படி வேலை செய்யறதுன்னு புரியும். மெஷின் விசுவாசம் உள்ளது. மெஷினுக்கு மனசு கிடையாது. சிவப்புக் கொடி கிடையாது. தொழிற்சங்கம் கிடையாது. மீட்டிங் கிடையாது. ரகளை கிடையாது. –எனக்கு மனுசங்க வேண்டாம்’

‘அவங்களுக்கு நீங்க வேணுமே. அதுவும் நம்ப தேசத்துலே அந்த மாதிரி மெஷின் ஆதிக்கம் சரிப்பட்டு வருமா? இந்த மாதிரி நீங்க சிங்கிளா நடத்தறதனாலே எவ்வளவு வேலைவாய்ப்புகள் வீணா போய்டுது...?’

‘தம்பி, ஆயிரம் பேர்க்கு வேலை கொடுத்து ராஜா மாதிரி பண்ணை நடத்திட்டிருந்தேன். இங்கே இல்லை. தஞ்சாவூர் பக்கம்’

‘எப்ப?’

‘சில வருஷங்களுக்கு முன்னாடி’

‘அதை விட்டுட்டீங்களா?’

‘வித்துட்டேன்’

‘ஸார் நான் ஒண்ணு கேக்கறேன். கோவிச்சுக்க மாட்டீங்களே?’

‘கேளு’

‘நீங்க இந்த இடத்துலே தனியா வந்து வெளிக் காத்து படாம இருக்கறதுக்கு வேற ஒரு காரணம் இருக்கலாம்னு படறது...’

‘மேலே சொல்லு’

‘ஏதோ ஒரு ஞாபகத்துலிருந்து விலகி நிற்க, மறக்க, நீங்க இங்கே வந்திருக்கலாம்னு எனக்குப் படறது. நீங்க இதுக்குப் பதில் சொல்ல விரும்பலேன்னா வேண்டாம்.’

‘பதில் சொல்றேன். நீ புத்திசாலிப் பையனா இருக்கிறே. எனக்கு புத்திசாலிகளைக் கண்டா பயம்...என்ன படிச்சிருக்கே?’

‘பி.எஸ்.ஸி அக்ரிகல்ச்சர்’-தயங்காமல் பொய் சொன்னேன்.

‘கல்யாணம் ...ஆயிடுச்சா?’

‘இன்னும் இல்லே’

‘செய்யாதே. பெண்களை ஒதுக்கு. சினிமா போ. சீட்டாடு, சிதறு. பெண்கள் கிட்ட போகாதே’

‘இதுவரை சந்தர்ப்பம் எதுவும் வரவில்லை எனக்கு’

‘இனிமேலும் வேண்டாம். நான் சொல்றது ஒரு பட்டினத்தார் வெறுப்பினாலே இல்லை. பெண் எல்லாம் பிசாசு என்கிற ரீதியிலே இல்லை. பெண் வேண்டும். ‘செக்ஸ்’ வேண்டும். பெண் இல்லாம நீயும் நானும் அம்மோனியம் பாஸ்ஃபேட்டை இப்ப விலை பேசிக்கிட்டிருக்கமுடியாது. ஆனா வெக்க வேண்டிய இடத்திலே வைக்கணும். எனக்கு மட்டும் ஆசையில்லையா என்ன? ஆசையிருந்தா, அது என் நடைமுறை வாழ்க்கையிலே தொந்தரவு செஞ்சு குறுக்கிடறாப்பில அவ்வளவு தீவிரமா இருந்தா, கோயமுத்தூரிலிருந்து வரவழைப்பேன். அவ்வளவுதான். மறுநாள் காலை மண்ணுக்குத் திரும்பிடுவேன். என்ன பார்க்கிறே? டேஞ்சரான ஆசாமி இவன்னு யோசிக்கிறியா?’ சிரித்தார்.

‘இல்லைங்க. இதுவும் ஒருவித அபிப்ராயம்தான்’

‘நான் அனுபவப்பட்டுச் சொல்றேன். நான் வைத்திருந்தது ஐந்நூறு ஏக்கராப் பண்ணை. கரும்பு கதலி நெல்லுன்னு பசுமையிலே ஜொலிச்சிட்டிருந்த பண்ணைய ஒரு ராத்திரியிலே வித்து தொலைச்சது ஒரு பெண்ணாலே’

நான் பேசவில்லை. அவர் தொடரக் காத்திருந்தேன்.

‘நான் சொன்னேனே பண்ணை-எப்பேர்ப்பட்ட பண்ணை? நூறு மைல் வட்டாரத்துக்குப் பொறாமையால எரிஞ்சாங்க. தகதகன்னு, செழிப்பா, செல்வமா, பண்ணையா அது...! அதிலே என் குமாஸ்தா ஒருத்தன் இருந்தான். பேர் ஷண்முகம். பேரை மறக்க மாட்டேன். அவனுக்குப் பெண் ஒருத்தி இருந்தா, சரஸ்வதி. பேரை மறக்க மாட்டேன். ஷண்முகம் பரம்பரை பரம்பரையா எங்க குடும்பத்துக்கு உழைச்ச குடும்பத்திலே வந்தவன். அவன் என்னை எதுத்துக்கிட்டான். எங்க முப்பாட்டனார் பைசா பைசாவாக சேர்த்தபோது அவனுடைய முப்பாட்டன்தான் கணக்குப் பார்த்தான்.’

‘சரஸ்வதி?’

‘ஆமாம், சரஸ்வதி. மறக்கவே மாட்டேன் அவளை. சரியான உயரம். ஏறக்குறைய என் உயரம். என்னிக்கோ ஒருநாள் திடீர்னு அவளை வித்தியாசமா கவனிச்சேன். அவள் பிறந்தது என் பண்ணையிலே, வளர்ந்தது பாவாடை கட்டினது, தாவணி மாறினது, பள்ளிக்கூடம் போனது – எல்லாம் என் ஏரியாவிலேதான். கவனிச்சதே இல்லை. கவனிக்க ஆரம்பித்தேன். அ! அவதான் என்கிட்டே வந்து கேட்டா, ஞாபகம் வருது. ‘முதலாளி! எங்க அப்பா என் படிப்பை நிறுத்திப்பிட்டாங்க. பத்தாவதுக்கப்புறம் படிக்க வெக்கலை. என்னைக் கட்டிக் கொடுக்க ஆசைப்படறாங்க. எனக்கு படிக்க ஆசை. எங்கப்பாகிட்டே நீங்கதான் சொல்லணும்னு’ ஒரு சாயங்காலம் நான் தனியா நடக்கப் போனபோது நிறுத்தி கேட்டா. நான் அப்பதான் நிஜமா பார்த்தேன் அவளை.சரியான ஜடை, சரியான நடை. அந்த மாதிரி உடம்பெல்லாம் இப்ப அதிகம் தென்படறதில்லை. உடம்பான உடம்பு, பண்ணையில இருக்கிற இளம் பயல்களையெல்லாம் கரகம் ஆட வெக்கிற உடம்பு, பருத்தி உடுத்தினாலும் அப்படியே, அப்படியே... எனக்கு இதெல்லாம் சொல்ல வராது. நான் அப்ப தனியாள். தனி ஆள்னா பொண்டாட்டி இறந்து போய் வாரிசில்லாம துக்கம் மறைஞ்சு போன முதல் வருஷம்...அந்தப் பெண்ணோட அப்பன்கிட்ட ‘பணம் தரேன், மேலே குழந்தையைப் படிக்க வை’ன்னு சொன்னேன். அவன் செய்தான். ஜில்லா போர்டு பள்ளிக்கூடத்திலே சேர்க்க வைச்சேன். படிச்சது. இரண்டு மூணு வருஷம் விட்டுப்போன படிப்பு, டவுனுக்குப் பஸ்ஸுக்கு என் ஜன்னல் எதிரேதான் நடந்து போவா. பள்ளி வாசனை,டவுன் வாசனை,டூரிங் தியேட்டர் சினிமா வாசனை, பத்திரிகை

வாசனை-எல்லாம் சேர்ந்து அவ ஸ்டைல் மாறியது. நடக்கிற விதம் மாறியது. பாவனை மாறியது. எனக்கு முன்னாலே நாளுக்கு நாள் என் விருப்பத்தையும் வெறுப்பையும் தூண்டிக்கொண்டு போவா. விருப்பம் அவள் பெண்மையினாலே. வெறுப்பு என் வயசு வித்தியாசத்தினாலே...'

'சாயங்கால வேளை தம்பி. செப்டம்பர் மாதம் 8ம் தேதி. மறக்கவே மாட்டேன். அவ வயக்காட்டுப் பக்கம் நடக்கிறா. தனியா நான் நடக்கிறேன். நான் எதிரே வந்ததும் ஒதுங்கறா. 'இந்தா உன் பேர் என்னன்னு கேக்கறேன், தெரிந்துகொண்டே. 'சரஸ்வதி'ங்கறா'

'நல்லா படிக்கிறியா?'

'நல்லா படிக்கிறேன். 'சமூகத்திலே எண்பத்தெட்டு வாங்கினேன்'ங்கிறா'

'சரஸ்வதி உனக்கு நிஜ முத்திலே மாலை போட்டுக்க ஆசையான்னு கேட்டேன். நிஜப் பட்டிலே சேலை கட்டிக்க ஆசையான்னு கேட்டேன். உனக்கு உடம்பு பூரா தங்கம் இழைச்சுக்க ஆசையான்னு கேட்டேன். எப்பவாவது நூறு ரூபாய் நோட்டைக் கண்ணாலே பாத்திருக்கியான்னு கேட்டேன்'

'புரியலையே முதலாளின்னா, வயக்காட்டு மத்தியிலே ஆள் உயரம் பயிர்களுக்கு நடுவிலே அவளை வீழ்த்தினேன். என்ன பலம் அவள் பலம்! என் பலம் அதைவிட. இருட்டற வேளை. சத்தம் போட்டா கேக்கறதுக்கு சூரியன் கூட இல்லை. குடம் உருண்டுது. முள் குத்தித்து. பருத்தி கிழிஞ்சது. நான் வருத்தப்பட்டேன்.'

'யாருக்கும் பிரியமில்லை.எனக்கும் பிரியமில்லை. அந்த ஒரு பலவந்தம் என் பாதையையே திருப்பிடுச்சி. என்ன என்னவோ சொன்னேன். பேசாம குடத்தை எடுத்துக்கிட்டா. முகத்தை துடைச்சுக் கிட்டா. நடந்தா. பத்தடிக்கப்புறம் ஓடினா'

'அவ போய் அவ அப்பங்கிட்ட சொல்லியிருக்கா. அவன் வருஷம் வருஷமா எனக்கு அடிபணிஞ்சவன். என்னை எதிர்க்காதவன்.'

'ராத்திரி எட்டு மணிக்கு வீட்டு வாசலுக்கு வந்து சத்தம் போட்டான். கூட ரெண்டு மூணு ஆளுங்க கம்பும் கழியுமா வந்து சுழட்டினாங்க. அதிலே

ஒருத்தன் தமிழ்ப்புலவன். ‘ஒரு தமிழ்ப் பெண்ணின் கற்பை அழிச்சுட்டீங்களே!யாம். மறியல் பண்ணினாங்க. நான் பெரியசாமியைப் பின்பக்கமா அனுப்பிச்சு, போலீஸ்காரங்களை வரவழைச்சு அவங்களைக் கலைக்கச் சொன்னேன். குச்சியைச் சுழட்டினதும் போய்ட்டாங்க...தம்பி, போர் அடிக்குதா?’

‘இல்லை...இல்லை...தயவு செய்து தொடருங்க’ என்றேன்.

‘தம்பி, கற்பு,காதல்-இந்த மாதிரி வார்த்தைகளையெல்லாம் பத்தி நீ என்ன நினைக்கிறே?’

‘நீங்க என்ன நினைக்கிறீங்க?’

‘அந்த சண்முகம் பய பேசாம வந்து சமரசமா, ‘முதலாளி, நீங்க என் பெண்ணுக்கு இப்படி செஞ்சது நியாயமா?’ன்னு கேட்டிருந்தா, ஒரு வேளை அப்பவே அந்தப் பெண்ணைக் கல்யாணம் செஞ்சிருப்பேன். அப்ப அவ கற்பு ‘ஸேல்’ ஆயிடறது. அதாவது வயக்காட்டிலே நேராமல் மேளம் கொட்டி தேக்கு மரக் கட்டிலிலே நடந்தா கற்பு காப்பாத்தப்படுகிறது. இல்லேன்னா, அந்த செயலுக்கு வெறி,காமம்னு பேரு...அதே பெண் எம்.ஜி.ஆர், சிவாஜி படத்தைப் பார்த்துட்டு ஒத்த வயசு வாலிபனோட வயக்காட்டுப் பக்கம் ஒதுங்கினா காதல், அதைப் பத்திப் பாட்டு பாடலாம். ஒசத்தியா எழுதலாம். இல்லையா?’

‘அதுவும் ஒரு அபிப்ராயம்தாங்க’

‘மறியல் செஞ்சாங்க. ஒழிக ஒழிக சத்தம் போட்டாங்க. எனக்கு வெறுப்பு ஏறிப்போச்சு. இந்தச் சண்டை பெரிசாப் போச்சு. பண்ணை ஆளுங்க பல பேர் ஒரு கட்சியா கூடிக்கிட்டாங்க. அவங்களுக்கு அந்தச் சம்பவம் ஒரு சாக்கு. அவங்களைத் தூண்டிவிட்டவன் வேறு ஒருத்தன். என் பங்காளி, கோர்ட்டிலே தோத்துப்போனவன். இதாண்டா சமயம்னு சில்லறை ரௌடிப் பசங்க சில பேரையும் சேர்த்து அனுப்பி மறுநாள் ராத்திரி களத்துல தீ வச்சுட்டாங்க. எவ்வளவோ பேர் சாப்பிடற நெல்லு...கருகிப் போச்சு. எனக்கு ரத்தத்திலே சூடேறிப்போச்சு. பார்த்தேன். அவங்களுக்கு சோதாப் பசங்க கிடைச்சா எனக்கும் கிடைக்க மாட்டாங்களா? அதுவும் பணம் என் பக்கத்திலே இருக்கு. ஆளுகளை விட்டு அந்த ஷண்முகத்தையும்-அதான் அந்த பொண்ணோட அப்பன், ஜெயராஜ்னு இன்னொருத்தன் அவனையும் ஒண்ணுலே ரெண்டு

தீர்த்துட்டு வாங்கடான்னு சொல்லிட்டு, மெட்ராஸ் போய்ட்டேன். அந்தப் பசங்க குடுத்த காசுக்கு கொஞ்சம் அதிகமாகவே அடிச்சுப் பிட்டாங்க.

ஷண்முகம் ரத்த சேதம் ஜாஸ்தியாகி ஒரு வாரத்திலே ஆஸ்பத்திரியிலேயே காலமாய்ட்டான். செத்தே போய்ட்டான். பெரியசாமி ரயிலேறி வந்து என்கிட்டே சொல்றான். எனக்கு திக்குனு போச்சு. பண்ணை பூரா சூறையாடறாங்க. போலீஸ் கேஸ், அது இதுன்னு ரகளையாப் போச்சு...'

'போலீஸ்லே கேஸ் பதிவாச்சு. ஷண்முகத்தை அடிச்சவனைப் பார்த்தவன் யாருமில்ல. நான் ஊரிலே இல்லை. ஜெயராஜ் காட்டிக் கொடுத்த ஆளைக் கைது செஞ்சாங்க. வக்கீல் பிச்சு உதறிப்பிட்டான். கேஸ் தள்ளுபடியாச்சு. ஒண்ணும் நடக்கலை. விரோதமும், நெருப்பும், அனாவசிய மரணமும்தான் மிச்சம். பார்த்தேன்.

இந்தப் பண்ணையை இனிமே நாம் ஒழுங்கா நடத்த முடியாதுன்னு ஒரே நாள்ல எல்லாத்தையும் சப்ஜாடா வித்தேன். அத்தனை ஏக்கராவையும் வித்தேன். ஊரையே விட்டுட்டேன். எங்கே போறேன்னு சொல்லலே. ஜில்லா மாறினேன். நடுநடுவே மெட்ராஸ் வந்து கொஞ்சம் பல்லாவரத்திலே ஜல்லி அடிச்சுப் பாத்தேன். சரிப்பட்டு வரலை. டயர் ரிட்ரெடிங் எடுத்தேன். அதுவும் தோல்வி. அப்புறம் லாரி வாங்கி ஓட்டினேன். ம்ஹூம்..எனக்கு ஏத்தது பூமிதான்னு வேற ஜில்லாவிலே-'லாண்ட் ரிஃபார்ம்' வந்துவிட்டது-அதனாலே கொஞ்சமா நிலம் வாங்கி சொந்தமா தனியா மத்த ஜனங்க வாசனை இல்லாம நடத்தறேன். முதல்லே முள்கம்பி போட்டேன். கூர்க்காவை வச்சேன். நாயை வாங்கினேன். டிராக்டரை வாங்கினேன். ரொம்ப தனியா இருக்கேன். நிம்மதி. ஒரு பெண்ணை கட்டிட்டு வாழறதுக்கு பதிலா மண்ணை உழலாம்' என்றார்.

சிரித்தேன். வெளியே பார்த்தேன். மிகத் தனியாகத்தான் இருந்தோம். வெகு தூரத்தில்-வெகு தூரத்தில் அந்த வேலியோரம் இருந்தது.

நான் கேட்டேன்.'அப்புறம் அந்தப் பெண் என்ன ஆனாள்?'

‘தெரியாது. அப்பன்தான் அடிபட்டு செத்தான் பைத்தியக்காரத்தனமா. அவனுக்கு அந்தப் பெண்ணும் ஒரு பையனும். பையன் பட்டணத்திலே படிச்சிட்டிருந்தான். அந்தப் பையன் நான் பார்த்ததில்லே. அவ தம்பிக்காரனோட பட்டணத்துக்குப் போயிட்டா. அவளுக்கு கல்யாணமே ஆகலே. வாத்யாராய் இருக்கான்னு கேள்விப்பட்டேன். எப்ப? அப்ப. அவ தம்பிக்காரன் ஒருத்தன் இருக்கானே, அவன் எனக்கு ஒரு லட்டர் எழுதினான். கன்னாபின்னான்னு ‘உன்னை ஜில்லா ஜில்லாவா துரத்தி வந்து பழிவாங்கப் போறேன்னு...எனக்காக காத்திரு’ அப்படி இப்படின்னு....அவன் பேர் கூட நாகராஜனோ என்னவோ...’

‘நடராஜன்’ என்றேன்.

‘ஆ! நடராஜன், நடராஜன்! உனக்கெப்படித் தெரியும்?’

‘நான்தா ன் நடராஜன்’என்றேன்.

****

திமலா

“உங்களைப் பார்க்க உங்கள்...” என்று வெளி ஆபீஸ் சொல்லி முடிப்பதற்குள் ஆத்மா குறுக்கிட்டு “எத்தனை முறை சொல்லிருக்கிறேன். இந்த வேளையில் பார்வையாளர்களை அனுமதிக்காதே என்று” வெட்டினான். கோபக் கதவு திறந்தது.

“நான் பார்வையாளர் இல்லை. உன் மனைவி”

“ஒ நித்யா! நீயா?”

“உள்ளே வரலாமில்லையா?”

“தாரளமாக. உனக்கு யார் தடை செய்ய முடியும்?. அருகே வா! முத்தம் தருகிறேன்.

நித்யா அருகே செல்லாமல் தீர்க்கமாக தன் கணவனைப் பார்த்தாள். ஆத்மாவின் மேசையில் டெர்மினல் திரையில் எழுத்துக்கள் அதி விரைந்தன.

சுவற்றில் உயர வரைபடங்கள் சிவப்பிலும் பச்சையிலும் உயிர் பெற்று ‘ஆத்மா & கோ’வின் அந்த நிமிஷ ஆரோக்கியத்தை அடித்துக் காட்டின.

ஆத்மா டச் போனில் “நியூயார்க்” என்று கூப்பிட்டு விட்டு “உட்காரேன் நித்யா” என்றான்.

நித்யா உட்காராமல் கைகளைக் கட்டிக்கொண்டு கணவனைக் கவனித்தாள்.

“நியூயார்க் நியூயார்க்!”

“நியூயார்க் சார்”

“எத்தனை வேண்டுமாம்?”

“இருபது மில்லியன்”

“பத்தொன்பதுக்கு தீர்த்துவிடு”

“நிக்ஸ் சார்”

“வாங்குவது யார்?”

“ராத்சைல்டு”

“அந்தக் கழுகா?. சரியாக ஒரு நிமிஷம் பார். அதன்பின் பத்தொன்பது நாற்பது வரை போ”.

“சரி”

ஆத்மா டச் போனிலிருந்து நிமிர்ந்து நித்யாவை ஒரு மில்லிசெகண்டு புன்னகைத்து விட்டு ””பிஸி பிஸி பிஸி. இந்த சமயத்தில் வந்தாயே?” என்றான். நித்யா பதில் சொல்லவில்லை ஆத்மா தன் கோட்டின் உட்பறத்தில்கைவிட்டு பேஸ்மேக்கரை அமைத்து இதயத் துடிப்பைஅதிகரித்துக் கொண்டான். மூளைக்கு ரத்த ஆக்ஸிஜன் அளவை அதிகரிததுக் கொண்டான்.

துல்லியமாக சிந்திக்க முடிந்தது. அந்த வரைபடங்கள் இன்னும் நடனித்துக் கொண்டிருந்தன.

“க்ரேட் ! ஒரு நிமிஷத்தில் ஒரு லட்சம் செய்துவிட்டேன். நித்யா
நீ நிற்கிறாயே என்னவேண்டும் சொல்”

“நான் யார் தெரியுமா உனக்கு?”

“என்ன பைத்தியக்காரக் கேள்வி? நீ என் மனைவி. ஹலோ நியுயார்க்
பத்தொன்பது ஐம்பதா? முடியாது இன்னும் நாற்பது செகண்டு தயங்கி நாற்பத்தி ஐந்துக்கு முடித்து விடு”.

“என்ன சொன்னே நித்யா”

“ஒன்றுமே சொல்லவில்லை. என் கணவன் இயங்குவதைப் பார்ததுக் கொண்டிருக்கிறேன்”.

“என்னவேண்டுமே? சொல்லவே இல்லையே”

“ஆத்மா,எனக்கு நீ வேண்டும்”

“நானா? அதுதான் எதிரிலேயே இருக்கிறேனே”

“என் எதிரில் இருப்பது ஒரு பணம் பண்ணும் இயந்திரம்”

“பணம் சக்தி நித்யா. வந்த காரியத்தை நாற்பது செகண்டுக்குள் சொல்”

“ஆத்மா நீ ஒரு மணிநேரம் எனக்கே எனககு என்று பிரத்தியேகமாக வேண்டும்”

“ராத்திரிதான் வருகிறேனே”

“வருகிறாய் ,மாத்திரை விழுங்குகிறாய் இதயத் துடிப்பைக் குறைத்துக் கொள்கிறாய். தூங்கி விடுகிறாய். காலை எழுந்து நான் காண்பது காலிப் படுக்கை”

“தேவைப் பட்ட போது ஸ்டிவியில் பேசிக் கொள்கிறோமே?”

“அது வெறும் பிம்பம் எனக்கு வேண்டியது நிஜ நீ”

“ஹலோ டோக்கியோ”

நித்யா டச்போனை பட்டென்று நிறுத்தினாள்.

“என்ன நித்யா இது?”

“ஆத்மா நான் சொல்வதை தயவு செய்து கவனி போன வருஷம் திமலா போவதற்கு அனுமதி கேட்டு எழுதினோமே ஞாபகம் இருக்கிறதா?”

“அதற்கென்ன?”

“அனுமதி கிடைததிருக்கிறது” என்று ஆர்வததுடன் ஒரு மஞ்சள் அட்டையை எடுதது அவனிடம் காட்டினாள் அதில் கம்பயுட்டர் அச்சில்

திமலா நிர்வாகம்

உங்கள் வேண்டுகோள்-

20-2-2080 அன்று காலை 10-16

உங்களுக்காக ஒதுக்கப் பட்டிருக்கிறது

நேரந்தவறாமல் வரவும்

இந்த அட்டையையும் கொண்டு வரவும்

உங்கள் பார்வையாளர் எண் 164396

(இது செயற்கைக் காகிதம்)

ஆத்மா அதை அவளிடம் திருப்பிக் கொடுத்து விட்டு “அப்பாடா கடைசியில் அனுமதி கிடைத்து விட்டது சந்தோஷம் போய்வா” என்றான்

நித்யா கோபத்துடன் தெளிவாகப் பேசினாள் “ஆத்மா நீயும் என்னுடன் வருகிறாய் வந்துதான் ஆகவேண்டும். ஒரு மணி நேரம்தான் ஆகும். வரவில்லையென்றால் இந்த அலுவலகத்தை நாசம் பண்ணிவிட்டுத்தான் போவேன் அத்தனையும் உடைத்து..”

“இரு இரு எப்போது போகவேண்டும்”

“நாளை காலை 10-16″

“ஹேய் கம்ப்யுட்டர் நாளை காலை 10-16 க்கு நான் ·ப்ரீயா?”

அறையில் ஓர் அமானுஷ்யக் குரல் ஒலித்தது.

“நாளைக் காலை 10-16க்கு வத்தாநபே வருகிறார் “

“ஓகாட்! வத்தாநபே ஜப்பானியன். மிக முக்கியமான சந்திர காண்ட்ராக்ட்.ஸாரி நித்யா நான் வரமுடியாது”

நித்யா இப்போது அழுந்தி உட்கார்ந்தாள். ”முடியாது நாளை நீ என்னுடன் வந்துதான் ஆக வேண்டும்.டச்போன் கொடு ஜப்பான்காரனுடன் பேசகிறேன். ஹேய் கம்ப்யுட்டர் வத்தாநபே கொடு”.

“ஸாரி கிடைக்கவில்லை” என்றது குரல்.

“போய் உன் தலையைத் தின்னு”

“ஸாரி தலை கிடையாது”

“இரு நித்யா கோபிக்காதே நான் வந்துதான் ஆகவேண்டும என்று என்ன கட்டாயம்? நீதான் திமலா பார்க்கத் துடித்துக் கொண்டிருந்தாய். தனியாகப் போய்ப் பாரேன் மற்றொரு முறை உன்னுடன் வருகிறேன்”

நித்யா பதற்றத்துடன் ” ஆத்மா எப்படி இதைச்சொல்வேன் இரண்டு பேரும் போவதாகத்தானே முதலிலிருந்தே பேச்சு. அட்டையைப் பார் அனுமதி இரணடுபேருக்கு!”

“கூட யாரையாவது அனுப்பட்டுமா?”

நித்யா அழ ஆரமபித்தாள்.

“நித்யா என்ன இது? இந்த நு¡ற்றாண்டில் யாரும் அழுவதில்லை”.

மேலும் அழுதாள்.

“இதோ பார் நித்யா உனக்கு என்ன குறை? கல்யாணம் செய்து கொள்ளும்போது என்னுடன் வாழ்க்கை இப்படிததான் இருக்கும் என்று நான் சொல்லவில்லையா?”

“ஒரே ஒரு மணி நேரம். அப்படி நான் என்ன பெரிசாகக் கேட்கிறேன்?”

“ஒன்று செய்யலாம், திமலா எவ்வளவு தூரம்?”

“நூற்றம்பது கிலோ”

“நீ முதலில் போ நான் சட்டென்று அவனுடன் பேச்சை முடித்துவிட்டு வந்துவிடுகிறேன்”

“முடியாது நீ வரமாடடாய்.எனக்குத் தெரியும். நான் போகிறேன். உனக்கு வாழ்க்கைப்பட்டதற்கு பதில் ஒரு கம்ப்யூட்டரைக் கட்டிக் கொண்டிருக்கலாம். ஹேய் கம்ப்யூட்டர் என்னைக் கல்யாணம் செய்து கொள்வாயா”

“ஸாரி பதில் இல்லை”

ஆத்மா சிரித்தான்.

“சிரிக்கிறாய்! எனக்குப் பற்றிக்கொண்டு வருகிறது. ஆத்மா நாம் பிரிந்து விடுவோம் என்று நினைக்கிறேன். எனக்காகப் பத்து பேர் மனுப் போட்டிருக்கிறார்கள்”

“அப்படி எல்லாம் பேசாதே நித்யா”

“பின்னே என்ன?”

“அந்த திமலா அப்படி என்ன முக்கியம் உனக்கு”

“முக்கியம் ஆத்மா.அங்கே போக வேண்டியது என் நிம்மதிக்கு முக்கியம், என் மனநிலை ஸ்திரமடைவதற்கு முக்கியம்.. ஒரு வருஷமாக நான் இதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அங்கே நமக்கு கிடைக்கப்போகும் ஆறுதலும் நிம்மதியும் பிரபஞ்சத்தில் எங்கேயும் இல்லை”.

“இந்த நூற்றாண்டில் இதெல்லாம் அபத்தமாக பிற்போக்காகப் படுகிறது எனக்கு”.

“ஒரு முறை வந்துபார். உன் மனம் மாறிவிடும். கணவன் மனைவியாகப் போவது பெரும் பாக்கியம் என்கிறார்கள்”.

“இந்த முறை மன்னித்துவிடு நித்யா மற்றொரு மனுப்போடலாம்”.

“ஹலோ ந்யூ யார்க் என்ன ஆச்சு?” நித்யா டச்போனைப் பிடுங்கி

எரிச்சலுடன் கீழே எறிந்தாள்

ஹை இம்பாக்ட் பாலிமரி'ல் செய்யப்பட்ட அது சேதமடையவில்லை.

ஆத்மா அதைப் பொறுக்கிக் கொண்டு "கோபம் கூடாது என் மனைவியே"என்றான்.

"நான் அனி உன் மனைவி இல்லை"

கம்ப்யூட்டர் குறுக்கிட்டது "ஒரு புதிய செய்தி வந்திருக்கிறது".

"என்ன?"

"வத்தாநபேக்கு வேறு அவசர வேலைகள் இருப்பதால் நாளை வர முடியாதாம் அதிக மன்னிப்புக்கள் கேட்கிறார்"

நித்யா முகம் மலர்ந்தாள் "வாழ்க வத்தாநபே. கம்ப்யூட்டரே நீயும் வாழ்க" என்று கூவினாள்.

"மிகைப் பட்ட உற்சாகம் எதற்கு என்று தெரியவில்லை எனினும் வாழ்த்துக்களும் அஸ்ட்ரா கம்பெனியின் சார்பாக வந்தனமும்" என்றது கம்ப்.

ஆத்மா சிரித்து" திருப்திதானே? நாளை வருகிறேன். முத்தம் உண்டா?".

நித்யா அவன் உதடுகளில் முத்தமிட்டாள்.

மறு நாள் ஒன்பது மணிக்கே தயாராகி விட்டாள். ஸ்டி.வி அலுவலகத்தில் சொல்லி விடுமுறை வாங்கிக்கொண்டாள். தன்னை மெலிதாக அலங்கரித்துக் கொண்டள். ஸின்த்ரானில் பாட்டு அமைத்தாள்.பைக்குள் தேவையான சாமான்களை அடைத்துக் கொண்டாள். டச்போனை எடுத்து வான டாக்ஸியை அழைத்தாள். ஒன்பது பதினைந்துக்கு மேல்மாடிக்கு வந்து காத்திருந்தாள். நிறைய சமயமிருக்கிறது.

திமலா!

அவள் எதிர்பார்த்து ஏங்கிய திமலா!

கணவனுடன் சென்று வரவேண்டும் என்ற ஒரு வருஷ வைராக்கியம் என் விரதம் இன்று பூர்த்தியாகப் போகிறது.

நித்யா மற்ற பெண்களைப் போல் இல்லை.

கணவன் மனைவி உறவுக்கு இந்த நூற்றாண்டின் புதிய அர்த்தங்கள் அவளுக்குப் பிடிக்கவிலலை. அயற்சேர்க்கை விழாவுக்கு அவள் போவதே இல்லை.

குருட்டுக் கூட்டுக்கள் அவளுக்கு பிடிக்காது. கணவன் மனைவி உறவில் இன்னும் சில கவிதை கலந்த சங்கதிகள் இருப்பதாகவே நம்புகிறவள்.

அவள் ஜீன்களில் கோளாறு என்று ஆத்மா சொல்லியிருக்கிறான்.

இருக்கட்டும் கோளாறு அவளுக்குப் பிடித்திருக்கிறது. எனக்கு ஆத்மா ஒருவன் போதும், அவனுடன் என் சுக துக்கங்கள் அனைத்தும் ஐக்கியமாகட்டும்.

மெலிதாக பெருமூச்சு விட்டுக்கொண்டு வான டாக்ஸி வந்து வரைந்த வட்டதில் இறங்கி சுவாசித்தது.

நித்யா ஏறிக் கொண்டாள் "எங்கே" என்றான் டாக்ஸி ஓட்டி.

"முதலில் அஜாக்ஸ் கட்டிடம். அங்கே கணவனை அழைத்துக்கொண்டு திமலா போகவேண்டும் பத்தே காலுக்குள். உன்னிடம் பூஸ்டர் இருக்கிறதா?".

"இருக்கிறது. நிறைய சமயமும் இருக்கிறது. அஜாக்ஸ் கட்டிடத்தில் எத்தனை நேரம் காத்திருக்க வேண்டும்?".

"அதிகப் படியாக ஐந்து நிமிஷம்"

"சரி"

டாக்ஸி நழுவியது.

அஜாக்ஸ் கட்டிடத்தில் இறங்கிய போது ஒன்பது நாற்பது முப்பது."ஒரு

நிமிஷம்” என்று சொல்லி அதிவேக லி·ப்ட்டில் இறங்கி ஆத்மாவின் அறைக்குள் சென்றாள். எப்போதும் போல் அவன் பணம் பேசிக்கொண்டிருந்தான்,

“ஹலோ லண்டன்! மெட்ரோவில் டாக்டர் டாம்லின்ஸன் வேண்டும். ஹலோ நித்யா”

“நேரமாகிறது கிளம்பு கிளம்பு”

“ஒரு நிமிஷம் டாக்டர் டாம்லின்ஸன் ஆத்மா ஹியர் ஐயம் ஹோல்டிங் எங்கே போகிறோம்?”

“நாசமாப் போச்சு. திமலா!”

“ஓ எஸ் திமலா திமலா நமக்கு அனுமதி கிடைத்து விட்டதல்லவா?.
இன்னும அரை மணி இருக்கிறதே, இதோ வந்துவிட்டேன்”.

ஆத்மாவை ஒரு வழியாக பிடுங்கிக்கொண்டு வர பத்தாகி விட்டது.
பத்து பதினாறுக்கு அனுமதி. நித்யாவுக்கு கவலை அதிகரித்தது. கடவுளே!
போக்குவரத்துக் குழப்பமில்லாமல் போய்ச் சேரவேண்டும்.

“டிரைவர் பத்து பதினைந்துக்கு நங்கள் அங்கே இருக்க வேண்டும்”

“கவலைப் படாதீர்கள் ·ப்யூல் செல்கள் எல்லாம் புதிதாக சார்ஜ் வாங்கியிருக்கின்றன பூஸ்டர் வைத்திருக்கிறேன். திமலாவில் எந்த ப்ளாட்பார்ம்?”

“புரியவில்லை”

“உங்கள் அனுமதி அட்டை என்ன நிறம்?”

“மஞ்சள்”

“பத்தாவது ப்ளாட்பார்ம்”

வான டாக்ஸி அம்பாக விரைந்தது. அதன் வேக ஈர்ப்புடன் நித்யாவின் வயிற்றில் எதிர்பார்ப்பின் ஈர்ப்பும் கலந்திருக்கிறது.

ஆத்மாவை முழுசாக பககத்தில் வைத்துக் கொண்டிருக்கிறாள்.

அவனை உரசிக் கொணடாள்

திமலாவுக்கு அவர்கள் வந்து சேர்ந்தபோது பத்து பதிநான்கு நாற்பது.

அப்பாடா!

ஒரு வழியாக வந்து சேர்ந்தோம்.

நீண்ட ப்ளாட்பாரத்தில் அதிகம் சந்தடி இல்லை.

'திமலாவுக்கு வரவேற்கிறோம்' என்று ஸோடியம் ஒளிர்ந்தது.

நித்யா வேகமாக நடந்தாள்.

நீண்ட சதுர இயந்திரங்கள் 'உங்கள் அனுமதிச் சீட்டை செருகுங்கள்' என்றன.

செருகினாள். உள்ளே அதன் காந்த எண்கள் படிக்கப் பட்டு

" நீங்கள் ஒரு நிமிஷம் முன்னதாக வந்திருக்கிறீர்கள் ஒன்பதாம் எண் கன்வேயரில் செல்லவும்". சற்று தூரம் நடந்தார்கள். ஒன்பதாம் எண் கன்வேயருக்கு.

ஒரு வரிசை காத்திருக்க மேலே ஒரு ஆரஞ்சு வண்ண விளக்கு பளிச் பளிச்சிட்டது.

'இன்னும் முப்பது செகண்டுகளில் புறப்படும்' என்றது ஒலிபெருக்கி ஆத்மாவும் நித்யாவும் அதன்மேல் ஏறிக்கொள்ள சற்று நேரத்தில் ஆரஞ்சு சிவப்பாகி டர்ன்ஸ்டைல் பூட்டிக் கொள்ள ஊவ்ஷ் என்ற சப்தத்துடன் பெல்ட் நகர ஆரம்பித்தது.

முதலில் ஒரு மண்டபத்தின் ஊடே விரைந்தது. மேலும் வேகம் பிடித்து

மிக மெலிதான கட்டத்துடன் சுற்றி வந்து ...கோபுரம் தெரிந்தது.

நித்யாவின் துடிப்பு அதிகரிக்க ஆத்மாவை அப்படியே அணைத்துக் கொண்டாள்.

பிரதான வாசல் திறந்திருந்தது. அவர் இங்கிருந்தே தெரிந்தார்.

நித்யா துள்ளினாள். "பார் ஆத்மா, அவர்தான்!".

வேகம் குறைந்து சரியாக பத்து பதினாறுக்கு ஆத்மாவும் நித்யாவும சன்னிதியில் அனுமதிக்கப் பட்டார்கள்.

மெலிதாக ஏர்கண்டிஷனரின் மூச்சு கேட்டது அருகே அருகே அருகே சென்றார்கள்.

"அப்பா! என்ன ஜாஜ்வல்யம் என்ன கம்பீரம்!"

"உங்களுக்காக சரியாக இருபது செகண்டு அனுமதிக்கப் பட்டிருக்கிறது ஆசை தீர சேவிக்கலாம்'என்று குரல் மேலே ஒலித்தது.

அர்ச்சகர் பட்டாடை அணிந்து நெற்றியில் நாமம் அணிந்து "அர்ச்சனை உண்டா? என்ன மொழி?" என்றார்.

"தமிழ்" என்றாள் நித்யா.

அர்ச்சகர் அருகே இருந்த பட்டன்களைத் தொட்டார். மெலிதான இசை பரவியது.

துல்லியமான கணீர் என்ற பெண் குரலில் பாட்டுக் கேட்டது-

"குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்
சென்று சேர் திருவேங்கட மாமலை
என்றுமே தொழ நம் வினை ஓயுமே"

"சேவிங்கோ சேவிங்கோ! நன்னா கண்குளிரச் சேவிங்கோ சீனிவாசப்

பெருமாள்! முன்னெல்லம் திருப்பதி திருவேங்கடம் திருமலைன்னு பேரு.இப்பதான் கம்ப்யூட்டருககுத் தோதா திமலான்னு சின்னதாக்கிட்டா... பூலோக தெய்வம்..பிராசீனமான கோயில்.

நின்ற திருஉருவம் திருமுடியும் தாளும் தடக்கையும்..“

கற்பூர ஒளியில் ஆத்மா “த்ரில்லிங்!”என்றான்.

இரண்டணா

இப்போதும் சிலர் இரண்டணா நாலணா என்ற சொற்களைப் பயன்படுத்தினால் சுதந்திரத்துககு முன் பிறந்தவர்கள் என்று நிச்சயமாக சொல்லலாம் இரண்டணா ஒரு தனி நாணயம். பித்தளை. சதுர வடிவில் இருக்கும். ஒரணா போல அசிங்கமான நௌ¤நௌ¤கள் இல்லாமல் கூர்மையான முனைகளை மழுப்பி ஒருபகக்ததில் ஆறாம் ஜார்ஜ் மன்னர் தன் தலையில் கிரீடத்துடன் சைடுவாகாக பார்த்ததுக கொண்டிருப்பார். அவர் கிரீடத்தை துக்கிப் பார்ததால் அப்போது தான் கிராப்பு வெட்டிக் கொண்டிருக்கலாம் என்று தோன்றும்

இரண்டணா அந்த தினங்களின் பொருளாதாரத்தில் முக்கியமான நாணயம் இந்த நாட்களின் எட்டுபைசாவுக்கு சமம் என்று அதை அலட்சியம் பண்ணிவிடாதீர்கள் நான் சொல்லும் நாட்களில் சீரங்கம் திருச்சி பஸ் கட்டணம் இரண்டணா. பெனின்சுலர் கபேயில் தோசை இரண்டணா . கிருஷ்ணன் கோட்டை வாசலில் இலநதைப்பழம் லேக்கா உருணடை கொடுக்காப்புளி எல்லாமே காலணாதான் அதாவது இரண்டணாவில் எட்டில் ஒரு பங்கு. டிபிஜி கடையில் அழிக்கும் ரப்பர் கட்டைபேனா மசிக்கூடு ரூல்டு பேப்பர் ப்ளாட்டிங் பேப்பர் வாங்கியும் இரண்டணாவுக்கு சில்லரை தருவார் அல்லது ஒரு புளிப்பு மிட்டாய் தருவார் . வைகுண்ட ஏகாதசி திருவிழாவின் போது மார்கழி மாதத்தில் பகல் பத்தில் தேர்முட்டியருகில் தரையில் பள்ளம் தோண்டி துருத்தி வைத்து சாணி பூசி பெரிய வாணலி அமைத்து அதில் கொள்ளிடம் மணலைக் கொட்டி அதனுடன் வருக்கப்பட்டு உற்சாகமாக வெடிக்கும் பட்டாணி ஒரு பை நிறைய இரண்டணாவுக்கு கிடைக்கும், இரவு பெடரமாக்ஸ் வெளிச்சத்தில் பெரிய எழுத்து விக்ரமாதித்தன் கதை கொக்கோகம் போன்ற புத்தகங்கள் எங்கேயோ பார்த்துக்கொண்டு வாங்கலாம். ரங்கராஜாவில் ‘காப்டன் மார்வல் ‘படம் தரைடிக்கெட்

இரண்டணா. தங்கராசு மிதிவண்டி நிலையத்தில் அவர்சைக்கிள் இரண்டணாவுக்கு எடுக்கலாம் அதற்கு கீழே ஒரணா அரையணா காலணா தம்பிடி போன்ற பரிவார நாணயங்கள் இருந்ததால் இரண்டணா இருக்கிறவன் ஆகாகான் போல உணரலாம் விகடன் பத்திரிகை நீல நிறத்தில் அச்சிட்ட சிறுவர் மலருடன் இரண்டணா .ஒரு பாக்கெட் கலர்கலராக இருக்கும் பலப்பம் இரண்டணா. லிப்ஸ்டிக் போல சிவப்படிக்கும் மிட்டாய் ஐஸ்கட்டியை சரக்சரக் கென்று தேய்த்து சர்பத் ஊற்றி உறிஞசுவதுடன் ஒரு காத்தாடி தலையாரி பம்பரம் எல்லாம் வாங்கலாம் என்ன என்ன வெல்லர்ம இரண்டணாவில் வாங்கலாம்!

அப்பேற்பட்ட இரண்டணா நாணயத்தை தொலைத்துவிட்டேன் சொல்கிறேன் பாட்டி என்னை ஒரு ஆழாக்கு எண்ணெய் வாங்கிக்கொண்டு வா என்று இரண்டணா கொடுத் அரையர் கடைக்கு அனுப்பினாள் கூடவே ஒரு கிண்ணியும் கொடுத்தாள். ஈயம் பூசினது வாயகன்றதுநான் அந்தவயசில் ஸ்தலத்திற்கு ஸ்தலம் ஓட்டம் தான் ஒரு நிமிஷத்துக்குள் அரையர் கடைக்கு வந்து “மாமா ஒரு ஆழாக்கு எண்ணெய்” என்றேன் அரையர் கடை என்று எப்படி பெயர் வந்தது தெரியாது கடை சொந்தக் காரர் அரையர் இல்லை அய்யங்கார்தான். ஆனால் கோவில் அரையர்கள் பரம்பரையெல்லாம் கீழ உத்திர வீதியில் இருந்தார்கள் இநத அரையர் எங்கள் வீட்டிற்கு எடடுவீடு தள்ளி இருந்தார் சாதி வழக்கத்துககு மாறாக பலசரக்கு கடைவைத்திருநத ஒரே அய்யங்கார் சன்னமான குரலில் வரவேற்பார் எப்போதும் பலகையில் உட்கார்ந்து கொண்டிருப்பார் நிலக்கடலையோ முந்திரிப்பருப்போ எதையும கண்ணெதிரே ,இருந்தாலும் வாயில் போட்டுக் கொள்ள மாட்டார். கையில் பனை விசிறிக்கொண்டு இருப்பார் அவர் கடையில் ஏலக்காய் கிராம்பு கோதுமை அரிசி லவங்கப்பட்டை சீமெண்ணை எல்லாம் கலந்து ஒரு சுகமான வாசனை வீசும்

“என்ன எண்ணைடா நல்லெண்ணையா தேங்கா எண்ணெயா ஆமணக்கு எண்ணெயா விளக்கெண்ணையா வேப்பெண்ணையா ” என்றார்

அப்போதுதான் இவ்வளவு எண்ணெய் இருப்பது தெரிந்து நான் மீண்டும் பாட்டியிடம் ஓடி வந்து “என்ன எண்ணை பாட்டி?”

“உன்னை கன்னம் கன்னமா இழைக்கணும் நம்மாத்தில எப்பவாவது

நல்லெண்ணையதவிர எதாவது பயன்படுத்துவமா நல்லெண்ணைதாண்டா”

மீண்டும் ஓடிப்போய் “ ஒரு ஆழாக்கு நல்லெண்ணை மாமா”

“நல்லெண்ணை ஆழாக்கு ரெண்டரை அணா ஆச்சேப்பா பாட்டி கிட்ட போய் இன்னும அரைணா வாங்கிண்டு வரயா” நான் மீண்டும் ஓடி வந்து சொல்ல“ ஏண்டா மடயா ஆழாக்கு ரெண்டரை அணான்னா ரெண்டணாவுக்கு உண்டானதை வாங்கிண்டு வரதுக்கென்ன புத்திகிடையாதா உனக்கு” இப்படி பரபக்கபரக்க ஓடிண்டேருப்பியா“

”நீ சொல்லவே இல்லையே பாட்டி“ என்றேன் நியாயம் தானே ”காதுல வாங்கிக்கோ அரையர் கிட்டபோயி போன வாரம்தான் ரெண்டணா ஆழாக்கு ஒரு முழு ஆழாக்கு கொடுத்தாரேன்னு கேளு இல்லைன்னா முக்காலே மூணுவீசம் ஆழாக்கு போடச் சொல்லு நன்னா பார்த்து எல்லா எண்ணெயும் பாத்திரத்தில விழுந்து கீழசொட்டாம வாங்கிண்டு வா வரப்ப ஓடி வராதே கொட்டிடப்போறே “ இந்த எச்சரிக்கைகளுக்கெல்லாம் தேவை இல்லாதபடி அடுத்த முறை அரையர் கடைக்கு போக விடாமல் வழியில் ஒரு சம்பவம் நிகழந்தது

ராஜன் கேர்ள்ஸ் ஸ்கூல் எதிரில் தெரு நடுவில் தேர்முடடியருகில் கொட்டு சப்தம் கேட்டது அதைக் கடந்துதான் அரையர் கடைக்கு போக முடியும் கூட்டம கூடிக்கொண்டிருந்தது நையாண்டி மேளம் கேட்டது . மத்தளம் அவ்வப்போது உருமியது பைஜாமா அணிந்த ஒரு சிறுமி அலட்சியமாக உள்ளங்கைகளை தரையில அழுத்தி பல்ட்டி அடித்து சுற்றி வந்தாள் அவளைவிட சற்றே பெரிய சிறுவன் ஒரு கழியை லாவகமாக துக்கி நிறுத்த மஸ்தான் தரையில் வட்டம வரைந்து அதில் பாம்புப் பெட்டிகள் ஒரு மகுடி வேறு என்னஎன்னவோ உபரகணங்கள் கோழிமூககு இறகு போர்த்திய போர்வை கருப்புத் துண்டு என்று பலவித உபகரணங்களை பரப்பிக் கொண்டிருக்க ”வாங்க வாங்க நாகூர் பாபா மோடி மஸ்தான் பரம்பரை , மனுசனை பாம்பாக்குவேன் பாம்மை மனசனாக்குவேன் “ ஒரு கீரி ஆணியில் தனிப்பட்டு சுற்றி வந்து கெர்ணடிருக்க மோடி மஸ்தான் என்னையே பார்த்து ”பயப்படாத பக்கத்ல வந்து குந்து“ என்று என்னை அழைத்தான் அந்த பரட்டைததலை சிறுமி சின்ன பல்வரிசையில் என்னைப் பார்த்து

சிரித்தாள்

ஆழாக்கு எண்ணெயை மறந்தேன் முதல் வரிசையில்போய் உட்கார்ந்துகொண்டுவிடடேன் அவ்வப்போது மத்தளம் தட்டிக்கொண்டு அவன் இடைவிடாமல் பேசினான்

”கந்துமதக்கரியை வசமாக்கலாம் கரடிபுலி வாயைக் கட்டுவேன் சிங்கத்தை முதுகிலல போட்டுப் பேன் பாம்பை எடுத்து ஆட்டுவேன் ... இது என்ன?“ என்ற சபையோரில் ஒருவரை கேட்டான்

”ஒரணா“ ”என்னது ஒக்காளியா“ என்று கேட்க சபையில் சிரிப்பு ”நெருப்பில அரதம்வச்சு வேதிச்சு வித்துருவேன் வேற யாருமபார்க்காம உலகத்தில உலாவுவேன் எப்பவும் இளமையா இருப்பேன் மத்தொருவன் சரீரத்தில பூந்துருவேன் தண்ணில நடப்பேன் நெருப்பில குந்துவேன் எல்லாம் எதுக்காக?“ என்று கேள்வி கேட்டு தயங்கி தன் சட்டையை நீக்கி பட்டென்று வயிற்றில் எதிரொலிகேட்கத் தட்டி ”பாழும் வவுத்துக்காக!“

”நீ காசு கொடுக்கவாணாம் உன் காசை உம் மடிலயே வெச்சுக்க வித்தை பாரு பாத்து மஸ்தான் குஷியாயிருச்சுன்னு ஒரணா ரெண்டணா கால் ரூபா அரை ரூபா ஒரு ரூபா தட்ல போடு பச்சைப்புள்ளையை பந்தாடப் போகூஷற்ன்“ எல்லாரும் பலமா கைத்தட்டுங்க என்று சொல்லி நாங்கள் கைதட்ட காத்திராமல் உய் உய் என விசிலடித்தான்

நான் அவன் வித்தையில் பரிபூர்ணமாக ஐக்கியமானேன் ”தகிரியமுள்ளவங்க யாராச்சும் இருந்தா வாங்க“ என்று கேட்க ஒரு சிறுவன் முன்னால்வந்து நின்றான் அந்தப் பையனை கூப்பிட்டு அவன்முன் விரல்களை என்னவோ பண்ண அவன் சட்டென்று துங்கிப்போக அழுக்குத் துணடால் போர்த்திப் படுக்க வைத்தான் ”யார் வூட்டுப் புள்ளையோ இது“ என்றான் தரையில் ஒரு முகம் வரைந்தான் அந்த முகத்திற்கு ஒரு வாய் மட்டும் பெரிசாக வரைந்தான் பக்கத்தில் ஒரு பேனாக்கத்தியை வைத்தான் பாம்புப் பெட்டியைத திறந்து அதை உசுப்பிவிட ஒரு முறை அவன் மணிக்கட்டில் கொத்தியது த என்று அதை அதட்டினான் உள்ளுணர்வில் அஙகிருந்து விலகவேண்டும என்றுதான் தோன்றியது ஆனால் கட்டிப்போட்டவன் போல ஆகிவிட்டேன சன்மத்துககு இந்த இடத்தைவிட்டு விலகப் போவதில்லை கீரிப்பிள்ளை ஒன்றுக்குப்போனது அந்த பைஜாமா சிறுமி

பெரிய கொம்பை வைத்துக் கொண்டு அவன் தோளிலிருநது கயிற்றுக்கு எவ்வி அதன்மேல லாவகமாக நடந்தாள் அதன்பின் கழி முனையில் படுத்திருக்க இவன் கீழே இருந்து பாலன்ஸ பண்ணி அவளை சுற்றினான் இந்த நேரத்தில் எல்லாம் பையன் கண்மூடிப் படுத்திருந்தான் எனக்கு மிகவும் கவலையாக இருந்தது ”யார் பெத்தபுள்ளையோ இதை எழுப்பவாணாமா?“

”வித்தை பாத்திங்கோ இப்ப நம்ம ராணி தட்டு கொண்டாருவா ஒரணா ரெண்டணா“ என்று சொன்னபோது சபையோர் மெல்ல எழுநதிருக்க ”ஏய்!“ என்று குலை நடுங்குமாறு ஒரு அதட்டுப் போட்டான் ”பாப்பார தெருவில வித்தை காட்டிட்டு காசு வாங்காம போகமாட்ன் நீ மட்டும காசு தராம வூட்டுக்கு போனே என்ன ஆகும்பாரு“ என்று கையில் அந்த பேனைக்கத்தியை எடுத்து தரையில் வரைந்திருந்த வாயில் கீறினான் படுத்திருந்த பையன் வாயிலிருந்து ரத்தம் வடிந்தது ”இதான் உனக்காகும் ராத்தரி“ அப்டியே எல்லோரும் மூச்சடங்கி கதிகலங்கி ப்போய் நின்றோம் மௌமான சூழ்நிலையில் அவன் கத்தியைக் காட்டிக்கொண்டே மெல்ல எங்களிடம வந்தான் நான் எனனிடமிருந்த இரண்டணாவைப் போட்டதை அவன் பார்க்கக் கூட இல்லை உடுக்கை அடித்துக் கொண்டே சற்றி வந்தான் கீரி சுற்றிக் கொண்டு இருந்தது வித்தை எப்போது முடிந்தது ஞாபகமில்லை மெல்ல கனவிலிருந்து விடுபட்டவன்போல நடந்து வந்தேன் வீட்டின் அருகில் வந்தபோதுதான் நிஜ உலகத்து நிதர்சனங்கள் எனக்கு உரைக்க ”எங்கே இரண்டணா“ என்பதுமட்டுமின்றி எங்கே கிண்ணி? கிண்ணியையும் வைத்துவிட்டு வந்துவிட்டேன பாட்டி சமயலறையிலிருநது குரல் கொடுத்தாள்” ஏண்டா இத்தனை நாழி எண்ணையை மோடைமேல வச்சுட்டு பாடம் படிக்கபோ“ என்றள் மீண்டும தெருக்கோடிக்கு ஓடினேன் அதற்குள் வித்தைக்காரன் சாமக்கிரியைகளை கவர்நதுகொண்டு சென்றிருக்க வேண்டும விறிச்சோடியருந்தது தெரு. போய்விட்டான்

நான் செய்வதியறியாது திகைத்து நிற்க தெற்கு சித்திரை வீதி மூலையில் மீண்டும் கொட்டு சப்தம்எதிரொலிததது சப்தம் வந்த திசையை நோக்கி ஓடினேன் தெற்குவாசல் அருகில் வாணி விலாஸ் பிரஸ் எதிரில் அவன் அடுத்த டேரா போடடிருக்க மெல்ல கூட்டம் கூடிக் கொண்டிருந்தது வித்தைககாரன் அருகில் சென்கஷற்ன அந்தப்பையன், வாயில் ரத்தம் வந்து கிடந்தவன் பைஜாமா பெண்ணுடன் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தான்

வித்தைக்காரன் எங்கள் விட்டுக் கிண்ணியை திருப்பித் திருப்பிப் பார்ததுக் கொண்டிருந்தான் இது எவ்வளவு பெறும் என்பதுபோல் ”வா தம்பி“ ”நான் வந்து கீழ சித்திரைவீதில விததை பார்க்க வந்தேங்க கிண்ணியை விட்டுட்டு போய்ட்டடங்க அந்த கிண்ணி என்னுது“ ”தம்பி வந்தியா கிண்ணி தரேன் ஆனா ஒருகண்டிசன் “என்ன ”எங்கூட வரியா வித்தைகாட்ட லர்ல்குடி பிச்சாண்டாரகோவில் இந்தபக்கம் குளித்தலை அந்தப்பக்கம் புதுக்கோட்டை வரைக்கும போகலாம்“ என்றாள். பைஜமா சிறுமி என்னைப் பார்த்து மோகனமாக சிரித்தாள்

”ஏபிசி புஸ்தவம் வெச்சிருக்கியா“ என்று கேட்டாள் நான் அங்கேயே உட்கார்ந்து கொண்டு விசும்ப ஆரம்பித்தேன் ”என் கிண்ணியை கொடு“ ” கொடுக்கறேன் கொடுக்கறேன் “ அவன் என்னிடம அந்த கிண்ணியை கொடுக்காமல் அவவப்போது நீட்டி நீட்டி கொடுப்பதுபோல் கொடுதது கையை இழுத்துக கொண்டான் நான் பெரிசாக அழ ஆரமபித்ததும் கொடுத்தான் ”கிண்ணியை கொடுத்துடடு வந்துரு நல்ல ஐயர் வூட்டு சாப்பாடு போடடறேன் ஊர் உலகமெல்லாம் சுத்தலாம் பனாரஸ் அலகாபாத் கல்கத்தா “ நான் வீட்டுக்கு திரும்பும்போது அந்தப் பெண் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள் ”வரல்ல? வரப்ப ஏபிசி பொஸ்தவம் கொண்டுட்டுவா” என்றாள் நான் ஓடிவந்து அவசரமாக என் உண்டியலை உடைதது எட்டு காலணா சேர்த்து அரையர் கடைக்கு போய் எண்ணை வாங்கிக்கொண்டு வந்து விட்டேன், *

பாட்டி திட்டுவாளோ என்று நான் வித்தைக்காரருடன் போயிருந்தால் என்ன ஆகியிருப்பேன் என்று இந்த வயசில் எப்போதாவது எண்ணிப் பார்ப்பேன் தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு ஒருகையால் மத்தளம் தட்டிக்கொண்டு மற்றொரு கையால்புல்லாங்குழல் வாசிக்க அந்தப் பெண் சுழனறு சுழன்று ஆட.... எது எப்படியோ இந்தக் கதையை எழு தியிருக்க மாட்டேன்.

****

மஹா பலி

மகிஷாசுரமர்த்தினி குகைக்கு முன்னால் பெங்காலிகள் ‘ஆஷோன்... ஆஷோன்’ என்று ஆரவாரத்துடன் போட்டோ பிடித்துக்கொள்ள... சென்னை-103-ஐச் சேர்ந்த ‘அன்னை இந்திரா மகளிர் உயர்நிலைப்பள்ளி’யின் ஆசிரியைகள் டீசல் வேனில் இருந்து உதிர்ந்து, மஹாபலிபுரத்தின் சரித்திர முக்கியத்துவத்தை விளக் கும்வகையில், ”இங்கதான்டி ‘சிலை எடுத்தான் ஒரு சின்னப் பெண்ணுக்கு’ ஷூட்டிங் எடுத்தாங்க” என்று வியக்க, கற்சிற்பிகளின் உளிச் சத்தம் எதிரொலிக்க, பிள்ளையார்களும் கொள்ளை முலைச் சுந்தரிகளும் சிலை வடிவில் டூரிஸ்ட்டுகளுக்குக் காத்திருந்தார்கள். ‘கல்லோரல் சீப்பா கிடைக்கும்னு யாரோ சொன்னாங்களே?’

இவற்றையெல்லாம் கவனிக்காமல் ஊடே நடந்த அந்த இளைஞன் கரைக் கோயிலின் அருகில் வந்து கடற்கரைப் பக்கம் சென்றான். 1200 வருஷம் கடலின் சீற்றத்தையும் உப்புக் காற்றையும் தாங்கி வந்திருக்கும் அற்புதத்தைச் சற்று நேரம் பார்த்தான்.

”கேமரா வேணுங்களா... நிக்கான், ஜப்பான்... ரேபான் கண்ணாடி, எலெக்ட்ரிக் ஷேவர்?”

அவன் மௌனமாக இருக்க,

”செருப்பு வேணுங்களா? ஜோடி இருபது ரூபாதாங்க... கோலாப்பூரி...”

”.....”

”பேச மாட்டீங்களா?”

அவனுக்குப் பள்ளிச் சிறுவன் போல அறியாத முகம். கருநீலத்தில் தொளதொள சட்டை அவன் சிவந்த நிறத்தை அடிக்கோடிட்டுக் காட்டியது. முதுகில் பட்டைவார் இறுக்கி பை வைத்திருந்தான். ஒருவேளை வடக்கத்திக்காரனாக இருப்பானோ என்று ”சேட், பந்த்ரா ரூபாய் மே லேலோ போணி!” என்றான் செருப்பு விற்ற சிறுவன்.

அவனை உணர்ச்சியில்லாமல் பார்த்துவிட்டு, கடலலைகளின் கோபத்தை மழுப்ப அமைக்கப்பட்ட கருங்கல் தடைகளில் ஒன்றில்

உட்கார்ந்திருந்தவரை அணுகினான்.

”எக்ஸ்கியூஸ் மி...”

அவர் திரும்ப, ”புரொஃபசர் சந்திரகுமார்?”

”யெஸ்...”

”என் பெயர் அஜய். நான்தான் உங்களுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். செக்ரெட்டரிக்கு விளம்பரம் கொடுத்திருந்தீர்கள்.”

”ஓ! நீதானா அது? ‘யங்’காக இருக்கிறாயே?!”

”எனக்கு 25 வயது!”

”எனக்கு ஏறக்குறைய 70” என்றார். ”கண்தான் சரியாகத் தெரியவில்லை. ராத்திரி கார் ஓட்ட முடியவில்லை. பொய்ப் பற்கள்... ஒருமுறை ‘பைபாஸ்’ ஆகி விட்டது. கடன் வாங்கின ஆயுள்!”

”மாடர்ன் மெடிக்கல் சயின்ஸ்” என்றான்.

கரைக் கோயிலின் கோபுரத்தைச் சிரத்தையாக அமிலம்வைத்துச் சுத்தம் பண்ணிக்கொண்டு இருந்தார்கள்.

”ஒரு வருஷமாவது இருப்பதாக வாக்களித்தால்தான் உனக்கு வேலை. சான்றிதழ்களை அப்புறம் பார்க்கிறேன். என் புத்தகத்தை முடித்தே ஆக வேண்டும்... பிரசுரகர்த்தர்கள் கெடு.”

”என்ன புத்தகம்?”

புல் போர்வையையும் கம்பி கேட்டையும் கடந்து சாலை நோக்கி நடந்தார்கள்.

”பல்லவர் காலச் சிற்பக்கலை பற்றி ஓர் அந்தரங்கப் பார்வை...”

பஸ் நிறைய மாணவர்கள் இறங்கி, விநோதமான ‘போஸ்’களில் படம் பிடித்துக்கொண்டு, ”என்ன மச்சி... கலர்ஸ் எல்லாம் ஒரு பக்கமா

ஒதுங்கிருச்சு!”

”இவர்களுக்கா பல்லவச் சிற்பக் கலை பற்றிச் சொல்லப்போகிறீர்கள்?”

”ஏன்?”

”பெரிப்ளூஸ் கிரேக்க யாத்திரை புத்தகத்திலும், யுவான் சுவாங்கிலும் குறிப்பிடப்பட்டு இருக்கும் இந்த இடத்துக்கு அசைவ உணவகத்தில் புரோட்டா தின்று, பிக்னிக் பெண்களைத் துரத்த வந்திருக்கும் இந்தத் தலைமுறை கலாசாரமற்றது.”

”நீயும் இந்தத் தலைமுறைதானே?”

”ஆம். ஆனால், வேறு சாதி.”

அவர் அவனை நிமிர்ந்து பார்த்து, ”பெரிப்ளூஸ் பற்றி உனக்குத் தெரியுமா?”

”கி.பி. முதலாம் நூற்றாண்டில் இருந்து இருக்கும் துறைமுகம் என்பதும், பல்லவக் கட்டடக்கலை பற்றியும் தெரியும்.”

அவர் அவனைச் சிநேகபாவத்துடன் பார்த்து, ”ஐ லைக் யூ!”

”எப்போது வேலைக்கு வரலாம்?”

”இப்போதே என்னுடன் வா... உன் பைகள் எல்லாம் எங்கே?”

”எல்லாம் என் முதுகுக்குப் பின்னால்!”

”இவ்வளவுதானா?”

”இதில்கூடப் புத்தகங்கள்தான் அதிகம்.”

”செஸ் ஆடுவாயா?”

”சுமாராக.”

”சுமாராக ஆடி என்னிடம் தோற்பவர்கள்தான் எனக்கு வேண்டும். பேசப் பேச உன்னைப் பிடித்திருக்கிறது. லூயிஸ் தாமசும் படிப்பேன் என்று சொல்லாதே...”

”மெடுஸா அண்ட் தி ஸ்னெய்ல்.”

”கிரேட் யங்மேன். உன்னை எனக்கு நிச்சயம் பிடித்துவிடப் போகிறது. என் பெண் வினிதா சம்மதித்தால் கல்யாணம் செய்து கொடுத்துவிடுவேன்.”

இருவரும் வெளியே சாலைக்கு வர, அவர் கார் அருகில் சென்று, ”மாருதி ஓட்டுவாயா?”

”நான் ஓட்டாத வாகனமே இல்லை!” என்று சிரித்தான்.

”சிகரெட் பிடிப்பாயா?”

”இல்லை.”

”கல்யாணம் ஆகிவிட்டதா?”

”இல்லை.”

”பர்ஃபெக்ட்! சம்பளம் எத்தனை வேண்டும்?”

”உங்கள் இஷ்டம்.”

மாருதி காரைத் திறந்து, முதுகுச் சுமையைப் பின் இருக்கைக்குத் தள்ளிவிட்டு, முன்னால் ஏறிக் கொண்டான்.

”ஓட்டுகிறாயா?”

”இல்லை, இந்தப் பிரதேசமே எனக்குப் புதிது.”

”எந்த ஊர் நீ?”

”எதும் என் ஊர் இல்லை.”

கடற்கரையோரம் சென்றபோது மௌனமாக வந்தான். அருச்சுனன் தவத்தைக் கடந்து, கல்பாக்கம் சாலையைத் தவிர்த்து, ஊருக்கு வெளியே சென்று நீல, மஞ்சள் நைலான் வலைகளையும், மீன் நாற்றத்தையும் கடந்து கடலோர வீட்டு வாசலில் சென்றபோது, வெள்ளைச் சடை நாய் வந்து வாலை ஆட்டியது.

”அமைதியான இடம்... இவன் பெயர் ஸ்னோ. இங்கேயே இருப்பதில் உனக்குத் தயக்கம் ஏதும் உண்டா?”

”இல்லை.”

”அலை ஓசை பழகிவிடும். மாடியில் என் மகனின் அறை இருக்கிறது. எடுத்துக்கொள். மகன் அமெரிக்காவில் இருக்கிறான், டெக் நிறுவனத்தில். மகள் சென்னையில் படிக்கிறாள். விடுமுறைக்கு வருவாள்.”

”அப்படியா?!” – உள்ளே வந்து சித்திரங்களைப் பார்த்தான்.

”யாருக்கு ஷகால் பிடிக்கும்?”

”எனக்கு. உனக்கு..?”

”கன்டின்ஸ்கி.”

”ஏதோ ஒரு விதி என்னிடம் கொண்டுசேர்த்திருக்கிறது உன்னை. நான் இதுவரை தேடிய ஆதர்ச இந்திய இளைஞன் கிடைத்துவிட்டதுபோலத் தோன்றுகிறது.”

அவன் புன்னகைத்தான். ”மிகைப்படுத்துகிறீர்கள்...”

‘எதுவரை படித்திருக்கிறாய்?”

”கல்லூரிக்கு முழுதும் போகவில்லை. படிப்பு தடைப்பட்டுவிட்டது. பி.ஏ. ஹிஸ்டரி படித் தேன்.”

”எங்கே படித்தாய்?”

”லண்டனில்.”

”விட்டுவிட்டாயா?”

”ஆம். பெற்றோரை ஒரு விபத்தில் இழந்த பின்...”

அவன் பையிலிருந்து சாமான்களை எடுத்துவைத்தான். பெரும்பாலும் புத்தகங்கள்... 101 கவிதைகள், லையால் வாட்ஸன் கட்டுரைகள், ரயில்வே அட்டவணை, சதுரங்கம் பற்றிய பாபி ஃபிஷரின் புத்தகம், ‘தி டவ் ஆஃப் பவர்’, மெக்கியாவல்லியின் ‘பிரின்ஸ்’, மோதியின் ‘ஜூரிஸ் புடன்ஸ்’...

”உன்னை வகைப்படுத்த முடியவில்லை.”

மறுபடி புன்னகைத்தான். பதில் சொல்ல விரும்பாதபோதெல்லாம் மையமாகப் புன்னகைப்பான் என்பது புரிந்தது.

முதல் மாதத்தில் அவன் முழுத்திறமையும் படிப்படியாகப் புரிந்தது.

அஜய் ஆறு மணிக்கு எழுந்து காபி போட்டுக் கொடுப்பான். சந்திரகுமாருக்குத் தேவையான ஐஸ் டீ, லெமன் கார்டியல் தேன் கலந்து கொடுப்பான். இரவு அவர் எழுதிவைத்திருப்பதை எல்லாம் பிழையே இன்றி மிகச் சுத்தமாக எலெக்ட்ரிக் டைப்ரைட்டரில் அடித்துக் கொடுத்துவிடுவான். ஒன்றிரண்டு திருத்தங்கள்தான் இருக்கும். புத்தகத்தின் உள்ளடக்கம் பற்றிப் பேசவே மாட்டான். மாலை செஸ் ஆடுவார்கள். ஒரு நாள் அவன் தோற்பான். ஒரு நாள் இவர்... சில நாள் ட்ரா!

ராத்திரி அவருக்குக் கண்பார்வை மங்கியதால், படித்துக்காட்டினான். ஒருநாள், ”மாறுதலுக்காக ஏதாவது உன் புத்தகத்தில் இருந்து படித்துக்காட்டேன்” என்றார்.

”என் புத்தகங்கள் உங்களுக்குப் பிடிக்காது.”

”நான் தற்போது எழுதும் புத்தகத்தைப்பற்றி என்ன நினைக்கிறாய்?”

”இது நம் நாட்டுக்குத் தேவைஅற்றது.”

”எப்படிச் சொல்கிறாய்?” என்றார் கோபப்படாமல்.

”மகேந்திரன் கட்டிய தூணுக்கும் ராஜசிம்மன் கட்டிய தூணுக்கும் வித்தியாசங்கள் பற்றி ஒரு அத்தியாயமே விளக்கும் புத்தகத்தால் இன்றைய இந்தியாவுக்கு என்ன பயன்?”

”நம் கலாசார மரபு தெரிய வேண்டாமா?”

”தெரிந்து..?”

”நம் இந்தியாவை ஒன்றுசேர்த்த இந்த மரபு இப்போது தேவை இல்லை என்கிறாயா?”

”இந்தியா ஒன்றல்ல! இந்த மஹாபலிபுரம் பல்லவ ராஜ்யமாக இருந்தது. அவன் விரோதி புலிகேசி சாளுக்கிய ராஜ்யம்... அது போல் சோழ மண்டலம்...வேங்கி... இந்தியாவாக இல்லை. இந்தியா பிரிட்டிஷ்காரன் அமைத்தது.”

”எங்கள் தலைமுறை அப்படி நினைக்கவில்லை. நாங்கள் சுதந்திர வேட்கைப்பட்டு, தியாகங்கள் செய்தோம்.”

”காரணம், உங்களை எல்லாம் ஒருமைப்படுத்த ஒரு பொது எதிரி இருந்தான். இப்போது நம் எதிரி நாமேதான்.”

”இருந்தும் இந்த நாட்டை ஒன்றுசேர்ப்பது கலாசாரம்.”

”இல்லை... ஏழ்மை!”

”உனக்குச் சிற்பங்கள் பிடிக்காதோ?”

”கரைக் கோயிலின் ஆர்க்கி டெக்சர் எனக்குப் பிடிக்கிறது. எனக்கு அதன் அழகை நிலவொளியில் பார்க்கப் பிடிக்கும். அதை அமைத்த பெயரில்லாத சிற்பி தான் என் ஹீரோ. மகேந்திரவர்மன் அல்ல.”

”மனம் மாறுவாய்” என்றார் சந்திரகுமார் புன்னகையுடன்.

வினிதா தசராவுக்கு வந்திருந்தபோது அவனை அறிமுகப்படுத்தினார். ”வினித், திஸ் இஸ் அஜய்... வினிதா என் பெண்.”

”ஹாய், யு லைக் மியூஸிக்?”

”பிடிக்கும்...”

”ஃபில் காலின்ஸ்?” என்றாள் எதிர்பார்ப்புடன்.

”மொஸார்ட்” என்றான்.

”யக்...” என்றாள் அருவருப்புடன்.

”புக்ஸ்? ஜெஃப்ரி ஆர்ச்சர்...”

”ஃபிக்ஷன் ரெண்டாம்பட்சம்... ஐ ரீட் போயம்ஸ்.”

”போயம்ஸ்! மைகாட்...”

”தேர் கோஸ் மை மேரேஜ் அலையன்ஸ்...” என்றார் சந்திரகுமார்.

”எங்கிருந்து அப்பா இந்தப் பிராணியைப் பிடிச்சுட்டு வந்தீங்க? ஹி இஸ் நாட் நார்மல்!” என்றாள் வினிதா.

இருவருக்கும் ஒரே ஒரு பொது அம்சம் – மே மாதத்தில் பிறந்தவர்கள் இருவரும். அவளுடன் விகற்பமில்லாமல் பழகினான். அவளைக் கவிதைகள் படிக்கவைத்தான். மொஸார்ட்டின் வாழ்க்கை வரலாற்றை வீடியோ பார்க்கவைத்தான்.

ஒருநாள் மாலை ‘ரொம்பப் போர் அடிக்கிறது’ என்று கட்டாயப்படுத்தி அவனை ஊருக்குள் அழைத்துச் சென்றாள். ”கடற்கரைப் பக்கம் வாக்மென் போட்டுக்கொண்டு நடக்கப்போகிறேன். நீயும் வருகிறாயா?”

கட்டாயத்தின் பேரில்தான் சென்றான். திரும்பி வந்ததும், ”இரவு எனக்கு நிலவொளியில் கரைக் கோயிலைப் பார்க்க வேண்டும்.”

”அழைத்துச் செல்கிறேன்!”

அவர்கள் சென்றதும் கொஞ்ச நேரம் சும்மா இருந்தார். இருவரும் நெருக்கமாகப் பழகுவது திருப்தியாக இருந்தது. ”அவனைப்பற்றி, குடும்பத்தைப்பற்றி விசாரிக்க வேண்டும். இவனைப்போல் மாப்பிள்ளை கிடைப்பது மிக அரிது.’

இருவரும் போனதும் வீடு வெறிச்சென்று இருந்தது. மேஜையில் அவன், அவளுக்குப் படித்துக்காட்டிக்கொண்டு இருந்த புத்தகத்தை எடுத்தார். காது மடங்கியிருந்த பக்கத்தில் திறந்தது… ‘How did you die?’

கவிதையின் தலைப்பே சற்று அதிர்ச்சி தந்தது.

‘Death comes with a crawl,

or comes with a pounce

And whether he is slow or spry

It is not the fact that

you are dead that counts

But only, how did you die?’

வாசலில் ஜீப்பில் இருந்து ஒருவர் மெள்ள இறங்கி வந்து, சுற்றிலும் சவுக்குத் தோட்டத்தைப் பார்த்தபடியே அணுகினார்.

”புரொஃபசர் சந்திரகுமார்?”

”யெஸ்…”

”ஐ’ம் ஃப்ரம் தி போலீஸ் ஸ்பெஷல் பிராஞ்ச்” என்று அடையாள அட்டையைக் காட்டி, ”இந்த போட்டோவில் உள்ளவனை நீங்கள் எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா?”

கண்ணாடி போட்டுக்கொண்டு வெளிச்சத்தில் பார்த்தார். மீசை இல்லை; கிராப்பு வெட்டப்பட்டுச் சுருக்கமாக இருந்தது. இருந்தும் திட்டவட்டமாகச் சொல்ல முடிந்தது.

”இவன் பெயர் அஜய். என் செக்ரெட்டரி...”

”இவன் உண்மையான பெயர் அஜய் இல்லை. அவன் இங்கே இருக்கிறானா?”

”என் மகளுடன் கடற்கரைக்குப் போயிருக்கிறான். இப்போது வந்துவிடுவான். ஏதோ அடையாளக் குழப்பம் போலிருக்கிறது.”

வந்தவர் மிக வேகமாகச் செயல்பட்டார் ரேடியோவில். ”சார்லி, திஸ் இஸ் தி ப்ளேஸ்... வி காட் ஹிம்!”

”விவரமாகச் சொல்லுங்களேன்?”

”இவன் யார் தெரியுமா? மை காட்! எங்கே கடற்கரைக்கா?”

”இன்ஸ்பெக்டர், இதில் ஏதோ தப்பு நிகழ்ந்திருக்கிறது. இந்தப் பையன் என்னுடன் இருக்கும் செக்ரெட்டரி... ரொம்ப நல்ல பையன்.”

”புரொஃபசர், இவன் யார் தெரியுமா? எல்லா போலீஸாலும் தேடப்படும் மிகப் பெரிய தீவிரவாதி... மொத்தம் 18 கொலைகள் இவன் கணக்கில் உள்ளன.”

”சம்திங் பாஸிட்டிவ்லி ராங்... ஆள் மாறாட்டம்... போட்டோ தப்பு” என்றார்.

”அவன் இங்கேதான் தங்கி இருக்கிறானா?”

”ஆம்...”

”எந்த அறையில்?”

”மாடியில்!”

”என்னுடன் வாருங்கள்...” சரசரவென்று மாடிப்படி ஏறினவரைத் தயக்கத்துடன் பின்தொடர்ந்து, அஜய் தங்கியிருந்த அறைக்குள் முதன்முதலாக நுழைந்தார். ”என் செக்ரெட்டரியைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. மணியான பையன். மிகுந்த புத்திசாலி. அழகுணர்ச்சி

உள்ளவன், படித்தவன், சிந்திப்பவன்...”

அதிகாரி அதைப்பற்றி எல்லாம் சிந்திக்காமல் இரை தேடும் சிங்கம் போல அறைக்குள் அலைந்தார். ஒழுங்கான அறை. சுவரில் கலையம்சத்துடன் நவீன சித்திரம் மாட்டியிருந்தது. அலமாரிப் புத்தகங்களை ஒழுங்காக அடுக்கிவைத்திருந்தான். மேஜை மேல் காகிதங்கள் அடுக்காக... ஜன்னல் மலர் ஜாடியில் ரோஜா.

அதிகாரி அவன் மேஜை இழுப் பறைகளைச் ‘சரக்... சரக்...’ என்று திறந்தார். மலர் ஜாடிகள் உருண்டன. காகிதங்கள் பறந்தன. பூட்டுகள் உடைந்தன.

”புரொஃபசர், இங்கே வந்து பார்க்கிறீர்களா, உம் நம்பிக்கைக்குரிய காரியதரிசியின் சொத்துக்களை?”

சந்திரகுமார் அருகே சென்றார்.

”இது உங்களுடையது அல்லவே?”

மேஜையின் மேல்மட்ட இழுப்பறையில் துப்பாக்கி இருந்தது. கீழ் அறையில் ஒரு காலாஷ் நிக்காஃப் ரைஃபிளின் பாகங்களும், மேகஸின்களும் இருந்தன. ஒரு ரேடியோ டிரான்ஸ்மீட்டர் இருந்தது.

”ஐ கான்ட் பிலீவ் இட்... திஸ் இஸ் இம்பாஸிபிள்!”

”இவன் பெயர் அஜய் அல்ல... இவன் பெயர் டோனு. கொஞ்ச நேரம் அமைதியாக இருங்கள். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். உங்கள் மகளுடன் எங்கே போய் இருக்கிறான்?”

”கடற்கரைக்கு என்று சொன்னேனே!”

”பதற்றப்படாதீர்கள், அவனுக்கு நாங்கள் இங்கு வந்து தேடுவது தெரியாது. அவனும் உங்கள் மகளும் திரும்பும் வரை பதுங்கி இருக்கலாம்.”

ஜீப்பைப் போகச் சொல்லி ஆணை கொடுத்தார். தபதப வென்று பத்து போலீஸ்காரர்கள் வீட்டுக்குள் நுழைந்து வாசல் கதவைச்

சாத்திக்கொண்டார்கள்.

”வெயிட்... யு கான்ட் டூ திஸ்... அவன் வேறு யாரையோ...”

”ஷட் அப் ஓல்ட்மேன்... கீப் கொயட்! ஒரு பயங்கரவாதிக்கு, தீவிரவாதிக்குப் புகலிடம் அளித்திருக்கிறீர்கள். வாயை மூடிக்கொண்டு நடப்பதைக் கவனிப்பது உசிதம்!”

”என்ன செய்யப்போகிறீர்கள்? காட்! என் மகள்... என் மகள் அவனுடன் இருக்கிறாள்!”

”அவளைக் காப்பாற்ற

முயற்சிக்கிறோம்.”

அவர் உடல் நடுங்க ஆரம்பித்தது. அலமாரியில் இருக்கும் ஸார்பிட்டால் தேவைப்பட்டது. நாக்கு உலர்ந்தது. ‘என்னவோ ஒரு பெரிய தப்பு நேர்ந்திருக்கிறது... ஆள்மாறாட்டத் தப்பு. இவன் இல்லை... தடுக்க வேண்டும்.’

”வர்றாங்க. எல்லாரும் தயாரா இருங்க. அநாவசியமா சுட வேண்டாம். நான் சொல்லும்போது சுட்டாப் போதும்!”

ஜன்னல் வழியே, வினிதாவுடன் அஜய் மெதுவாகப் பேசிக் கொண்டே வருவது தெரிந்தது. அவர்கள் கைகோத்துக்கொண்டு இருந்தார்கள். அவ்வப்போது அவன் தோளில் தட்டி ஆரவாரமாகச் சிரித்தாள்.

”ரெடி!”

ஒரு கணம் உலகமே நின்றது.

இங்கே துல்லியமாகத் துப்பாக்கிகளின் ட்ரிக்கரைத் தயாரிக்கும் சத்தம் கேட்டது. வீட்டை நோக்கி வந்துகொண்டு இருந்தவன், தரையில் ஈரம் இருந்ததைப் பார்த்தான். அதில் பதிந்திருந்த பூட்ஸ் அடையாளங்களைப் பார்த்தான். நின்றான். வின்னியிடம் ஏதோ சொன்னான். அவள் வியப்புடன் கீழே பார்த்தாள்.

”நாம் வந்திருப்பதைக் கண்டு பிடித்துவிட்டான், பூட்ஸ் அடை யாளங்களைப் பார்த்து. ஓடுங்க... பிடிங்க!”

இதற்குள் அஜய், வின்னியை முன்னால் இழுத்துத் தன்னை மறைத்துக்கொண்டான்.

போலீஸார் வெளியே வெள்ளமாகப் பாய்ந்தார்கள். அங்கிருந்து கத்தினான். தன் பையில் இருந்து எடுத்த துப்பாக்கியை வின்னியின் நெற்றியில் பதித்து, ”ஸ்டாப்! கிட்ட வந்தா பெண் இறந்து போவாள்... நில்லு!”

‘சினிமாவில்தான் இந்த மாதிரி காட்சிகள் வரும்’ என்று சந்திர குமார் நினைத்தார். ‘இப்போது கூட அனைத்தும் கனவு’ என்று விழிக்கத் தயாராக இருந்தார்.

அவர் பெண்ணை அவன் தரதரவென்று இழுத்துச் சென்று மாருதி காரில் திணித்து ஏற்றிக் கொண்டு புறப்பட்டபோது, போலீஸார் ‘வாக்கிடாக்கி’யில் ஆணைகள் பிறப்பித்தனர். ”க்விக்! செண்ட் த ஜீப்... ஹி இஸ் ரன்னிங்...”

புரொஃபசரைப் புறக்கணித்து விட்டு அனைவரும் ஓடினார்கள். நாய் வாலை ஆட்டிக்கொண்டு அவர்கள் பின்னால் கேட் வரை ஓடியது. புரொஃபசர் வெலவெலத் துப்போய், ”என் மகள்... என் மகளைக் காப்பாற்றுங்கள்...”

இரவு எட்டு மணிக்கு அவர்கள் திரும்பி வந்து, அவரைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார்கள்.

”என்ன ஆச்சு... என் மகளுக்கு என்ன ஆச்சு..?”

”ஓ! ஷி இஸ் ஆல்ரைட்...”

”பையன்?”

”கடற்கரையில் சுட வேண்டி இருந்தது...” அவர்கள் அந்த இடத்தை அணுக, வின்னி அவரை நோக்கி ஓடி வந்தாள்.

”வின்னி, தப்பித்தாயா! வின்னி, ஆர் யு ஆல்ரைட்?” என்று அவளைக் கட்டிக்கொண்டு நெற்றியில் முத்தங்கள் அளித்தார். ”எங்கேயாவது அடிபட்டதா?”

”இல்லை அப்பா... அவன் என்னை எதும் செய்யவில்லை.”

”எதும் செய்யவில்லையா?!”

”நான் அகப்பட்டுவிட்டேன். என்னை நிச்சயம் சுட்டுவிடுவார்கள். சாவதற்கு முன் கடற்கரைக் கோயிலை ஒரு முறை நிலவில் பார்த்து விட வேண்டும்” என்றான். அதற்காகத்தான் என்னைப் பணயக் கைதியாக அழைத்துச் சென்றான். இங்கே வந்ததும் என்னை விடுவித்து விட்டான்!”

சந்திரகுமார் கரைக் கோயிலைப் பார்த்தார். அதன் விளிம்புகளில் வெள்ளி பூசியிருந்தது. தூரத்தில் கடலலைகளின் சுருட்டல்களின் மீதும் வெள்ளி பிரவாகித்தது. அலை புரளும் ஓசை அவ்வப்போது உருண்டது.

”அப்பா, அவர்கள் அவனை... அவனை...” என்று விசித்து அழுதாள்.

கடற்கரைக் கோயிலின் அருகே மணல்வெளியில், நிலவில் நனைந்துகிடந்தான் அவன். மாருதியின் ஹெட்லைட் வெளிச் சத்தில் மார்பில் பாய்ந்திருந்த குண்டின் ரத்த உறைவு தெரிந்தது. சந்திரகுமார் கிட்டே போய் அவனைப் பார்த்தார்.

‘உங்களையெல்லாம் ஒருமைப்படுத்த ஒரு பொது எதிரி இருந்தான்... இப்போது நம் எதிரி நாமேதான்!’

”மைகாட்! வாட் வென்ட் ராங்?” என்றார் சந்திரகுமார்.

”என்ன?”

”நம் இளைஞர்களை நம் கடற்கரையில் நாமே சுட்டுப் பலி வாங்கும்படியாக எங்கே, எந்தக் கட்டத்தில் இந்த நாட்டில் பெரியவர்கள் தப்பு செய்துவிட்டோம்? நன்றாகத்தானே ஆரம்பித்தோம்! எங்கே தப்பு செய்தோம்? எங்கே... எங்கே...?”

”அந்தக் கேள்வியெல்லாம் கேட்கறதில்லை நாங் கள்” என்றார் அதிகாரி!

****

ஃபிலிமோத்ஸவ்

மந்திரி வந்திருக்க வேண்டும். எல்லோரும் தேர்தல் உற்சவத்தில் கவனமாக இருந்ததால்

டில்லி அதிகாரி ஒருத்தர் மட்டுமே வந்திருந்தார். வெள்ளைக்கார டைரக்டர்கள் சிலர்

வந்திருந்தார்கள். எதற்கெடுத்தாலும் 'வெரி நைஸ்', 'வெரி நைஸ்' என்றார்கள்.

மற்றொரு 'கல்யாணராம'னைத் தேடி தமிழ் சினிமா டைரக்டர்கள், கதாசிரியர்கள்,

பத்திரிக்கையாளர் என்று பல பேர் டேரா போட்டிருந்தார்கள். சகட்டுமேனிக்கு சினிமா

பார்த்தார்கள், குடித்தார்கள். விலை போகாத ஹிந்தி நடிகர்கள், குறுந்தாடி வைத்த

புதிய தலைமுறை டைரக்டர்கள், புதுக் கவிஞர்கள், அரசாங்க அதிகாரிகள், கதம்பமான

கும்பல். சிகரெட் பிடிக்கும் பெண்கள், சத்யஜித்ரேயைத் தொடர அவர் பொலான்ஸ்கியைக்

கட்டிகொண்டு போட்டோ எடுத்துக் கொண்டார்.

பட்டுப்புடவை அணிந்த ஒரு சுந்தரி குத்துவிளக்கு ஏற்றினாள்.

எல்லோரும் சினிமா எத்தகைய சாதனம், மனித சமுதாயத்தை எப்படி மாற்றக்கூடிய வல்லமை

படைத்தது என்பது பற்றி இங்கிலீஷில் பேசினார்கள். 'சினிமாவும் சமூக மாறுதலும்'

என்று புஸ்தகம் அச்சடித்து ஒல்லியான அதை இருபது ரூபாய்க்கு விற்றார்கள். உதட்டு

நுனியில் ஆங்கிலம் பேசினார்கள். சினிமா விழா!

நம் கதை இவர்களைப் பற்றி அல்ல. ஒரு சாதாரண பங்களூர் குடிமகனைப் பற்றியது. பெயர்

நாராயணன். தொழில் யஷ்வந்த்புரத்து பிஸ்கட் ஃபாக்டரியில் பாக்கிங் செக்ஷனில்.

ஃபிலிம் விழாவுக்காக தேதி அறிவிக்கப்பட்ட அன்று அதிகாலையில் சென்று வரிசையில்

நின்று தலா 11 ரூபாய்க்கு ஏழு டிக்கட் அடங்கிய புத்தகம் ஒன்றை

அடித்துப்பிடித்து வாங்கி வந்துவிட்டான்.

கூட்டத்தைத் தடுக்க போலீஸ் மெலிதான லட்டியடித்ததில் முட்டியில் வலி.

இருந்தாலும் முழுசாக வெளியே வந்துவிட்டான். டிக்கட் கிட்டிவிட்டது. ஏழு படத்தில

ஒரு படமாவது நன்றாக இருக்காதா..?

நாராயணின் அகராதியில் இந்த 'நன்றாக' என்பதை விளக்க வேண்டும். நன்றாக என்றால்

சென்சார் செய்யப்படாத.. குறைந்த பட்சம் ஒரு கற்பழிப்புக் காட்சியாவது

இருக்கக்கூடிய படம். நாராயணனின் குறிக்கோள் நவீன சினிமாவின் மைல் கல்களை

தரிசித்துவிட்டு விமர்சனம் செய்வதல்ல. அதற்கெல்லாம் பண்டிதர்கள்

இருக்கிறார்கள். அவனைப் பொறுத்தவரை ஒரு பெண்ணாவது ஏதாவது ஒரு சமயம்

உடையில்லாமல் ஓரிரண்டு ஃப்ரேமாவது வரவேண்டும். அப்போதுதான் கொடுத்த காசு

ஜீரணம்.

நாராயணின் ஆசைகள் நாசூக்கானவை.

அவன் தின வாழ்க்கையும் மன வாழ்க்கையும் மிகவும் வேறுபட்டவை. தின வாழ்க்கையில்

அவன் ஒரு பொறுப்புள்ள மகன். பொறுப்புள்ள அண்ணன். பக்தியுள்ள பிரஜை. பனஸ்வாடி

ஆஞ்ச நேயா, ராஜாஜிநகர் ராமன் எல்லாரையும் தினசரி அல்லது

அடிக்கடி

தரிசிக்கின்றவன். எவ்வித ஆஸ்திக சங்கத்துக்கும் பணம் தருவான். எந்தக் கோயில்

எந்த மூலைக் குங்குமமும் அவன் நெற்றியில் இடம் பெறும். நாராயணனுக்குத் திருமணம்

ஆவதற்கு சமீபத்தில் சந்தர்ப்பம் இல்லை. ஐந்து தங்கைகள், அனைவரும் வளர்ந்து

கல்யாணத்திற்குக் காத்திருப்பவர்கள். ஒருத்திக்காவது ஆக வேண்டாமா? பெண்களைப்

பற்றி இயற்கையாகவே நாராயணன் கூச்சப்படுவான். பஸ் நிலையத்திலோ, ஃபாக்டரியிலோ

அவர்களை நிமிர்ந்து பார்க்க மாட்டான். அவனை பலரும் புத்தன், ஞானி என்று

அழைப்பார்கள்.

அவன் மன வாழ்க்கை வேறு தரத்தது. அதில் அபார அழகு கன்னியர்கள் உலவி அவனையே

எப்போதும் விரும்பினர். இன்றைய தமிழ், இந்தி சினிமாவின் அத்தனை கதாநாயகியரும்

நாராயணனுடன் ஒரு தடவையாவது பக்கத்தில் அமர்ந்து தடவிக்கொடுத்திருக்கிறார்கள்.

எத்தனை அழகு என்று வியந்திருக்கிறார்கள்.

நாராயணனுக்கு கிருஷ்னஅ என்றொரு சிநேகிதன். அவன் அடிக்கடி நாராயணனிடம் கலர்கலராக

சில போட்டோக்கள் காண்பிப்பான். ஐரோப்பா தேசத்து நங்கைகள் வெட்கத்தை அறைக்கு

வெளியில் கழற்றி வைத்துவிட்டு தத்தம் அந்தரங்களைப் பற்றி சந்தேகத்துக்கு எவ்வித

சந்தர்ப்பமும் தராமல் இதோ பார், இதைப் பார் என்று நாராயணனைப் பார்த்துச்

சிரிக்கும் படங்கள். படங்களை விட அந்தப் புத்தகங்களில் வரும்

விளம்பரங்கள்,

சாதனங்கள் நாராயணனை ரொம்ப வருத்தின. இதெல்லாம் நம் நாட்டில் கிடைத்தால் என்னவா!

என் போன்ற தனியனுக்கு இந்த சாதனங்கள் சிறப்பானவை. பயமோ கவலையோ இன்றி எவ்வளவு

திருப்தியும் சந்துஷ்டியும் அளிக்கும்.

என்னதான் அழகாக அச்சிடப் பெற்றிருந்தாலும் சலனமற்ற இரு பரிமாணப் படங்களைவிட

சினிமாச் சலனம் சிறந்ததல்லவா? நங்கைமார் நகர்வதைத் தரிசிக்கலாம். கேட்கலாம்.

கிருஷ்ணப்பா சொன்னான், "அத்தனையும் சென்சார் செய்யாத படம் வாத்தியாரே! நான்

எதிர்த்தாப்பலே தியேட்டருக்கு வாங்கியிருக்கேன். தினம் தினம் படத்தைவிட்டு

வெளியே வந்ததும் எப்படி இருந்தது சொல்லு. நானும் சொல்றேன்."

நாராயணன் பார்த்த முதல் படம் ரஷ்யப்படம். சைபீரியாவின் பனிப்படலத்தில் எவ்வளவு

கஷ்டப்பட்டு அவர்கள் வேலை செய்து எண்ணெய் கண்டுபிடித்து.. படம் பூரா

ஆண்கள்,கிழவர்கள். பாதிப்படத்துக்கு மேல் பனிப்படலம். வெளியே வந்தால் போதும்

என்று இரண்டு மணி நேரத்தை இரண்டு யுகமாகக் கழித்துவிட்டு வெளியே வந்தான்.

கிருஷ்ணப்பா எதிர் தியேட்டரில் பார்த்த ஃபிலிமோத்சவப் படத்தில் ஐந்து நிமிடம்

விடாப்பிடியாக ஒரு கற்பழிப்பு காட்டப்பட்டதாம். கானடா தேசத்து படம்.

வர்ணித்தான். "பார்க்கிறவங்களுக்கே சுந்த் ஆயிடுச்சி வாத்தியாரே!" நாராயணன்

இன்னும் ஒரு நாள் இந்த தியேட்டரில் பார்ப்பது.. அப்புறம் எதிர் தியேட்டரில்

மாற்றிக்கொள்வது என்று தீர்மானித்தான்.

நாராயணன் பார்த்த இரண்டாவது படம் டிராகுலா பற்றியது. படம் முழுவதும் நீல

நிறத்தில் இருந்தது.

நீள நகங்களை வைத்துக்கொண்டு ராத்திரி 12 மணிக்கு கல்லறையிலிருந்து புறப்பட்ட

டிராகுலா அந்த அழகான பெண்ணின் ரத்தத்தை உறிஞ்சுவதற்குக் கிளம்பியபோது நாராயணன்

சிலிர்த்துக் கொண்டான். ஆகா, இதோ! ரத்தம் உறிஞ்சுவதற்கு முன்பு, இதோ ஒரு

கற்பழிப்பு, சிறந்த கற்பழிப்பு, அப்படியே அவள் கவுனைக் கீறிக் குதறிக்

கிழித்து, உள்ளுடைகளையும் உதறிப்போட்டு, மெதுவாக அங்கம் அங்கமாக அந்த நகங்களால்

வருடி, அப்புறம்தான் கழுத்திலிருந்து ரத்தம் எடுக்கப் போகிறது என்று

எதிர்பார்த்து ஏறக்குறைய நாற்காலியில் சப்பணமிட்டு உட்கார்ந்துகொண்டான்.

அந்தப் பாழாப்போன பெண், டிராகுலா அருகில் வந்ததும் தன் கழுத்தில் சங்கிலியில்

தொங்கும் சிலுவையைக் காண்பித்துவிட -வந்தவன் வந்த காரியத்தைப் பூர்த்தி

செய்யாமல், ஏன் ஆரம்பிக்கக்கூட இல்லாமல், பயந்து ஓடிப்போய் விடுகிறான். சட்!

என்ன கதை இது! நிச்சயம் இந்த தியேட்டரில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும்

சினிமாப்படங்கள் அத்தனையும் அடாஸ் என்று தீர்மானித்து வெளியே வர,

கிருஷ்ணப்பாவைச் சந்திக்கப் பயந்து, வேகமாக பஸ்ஸ்டாண்டை நோக்கி ஓட, கிருஷ்ணப்பா

பிடித்துவிட்டான்.

“என்னாப் படம் வாத்தியாரே! டாப்பு! அப்பன் தன் பொண்ன காணாம்னுட்டு தேடிக்கிட்டு

போறான். அவ, எங்க அகப்படறாத் தெரியுமா? செக்ஸ் படங்கள் எடுக்கறவங்ககிட்ட

நடிச்சிட்டு இருக்கா! எல்லாத்தையும் காட்டிடறான்! கொட்டகையிலே சப்தமே இல்லை..

பின் டிராப் சைலன்ஸ்.”

“கிருஷ்ணா, நாளைக்கு டிக்கட் மாத்திக்கிடலாம். நீ என் தியேட்டர்லேயும் நான் உன்

தியேட்டர்லேயும் பாக்கிறேன்!”

“நாளைக்கு மட்டும் கேட்காதே வாத்தியாரே! நாளைக்கு என்ன படம் தெரியுமா? லவ்

மெஷின், பிரஞ்சுப் படம். நான் போயே யாகணும்!”

“பிளாக்கில கிடைக்குமா?”

“பார்க்கிறேன்! துட்டு ஜாஸ்தியாகும். ஏன் உன் படம் என்ன ஆச்சு.”

“சே, பேசாதே! மரம் செடி கொடியைக் காட்டியே எல்லா ரீலையும் ஓட்டறான். நீ

எப்படியாவது எனக்கு பிளாக்கில ஒரு டிக்கட் வாங்கிடு. என்ன விலையா இருந்தாலும்

பரவாயில்லை!”

85 ரூபாய்க்கு ஒரு டிக்கட் மிகுந்த சிரமத்துடன் கிடைத்ததாக வாங்கி வந்தான்.

கிருஷ்ணா, “உன் டிக்கட்டைக் கொடு” என்றான்.

“இதை வித்து பார்க்க முடியுமான்னு சோதிச்சுட்டு அப்புறம் வர்றேன். நீ தியேட்டர்

போயிரு” என்றான்.

“படத்தின் பெயர் லவ் மெஷின் இல்லையாமே.”

“ஏதோ ஒரு மெஷின். கிராக்கிங் மெஷினோ என்னவோ! ஆனா படு ஹாட்! கியாரண்டி மால்.”

நாராயணன் பார்த்த அந்த மெஷின் படம் செக்கஸ்லோவேகியா படம். நிஜமாகவே ஒரு புராதன

சினிமா எந்திரத்தைப் பற்றியது. நடிகர்கள் ‘கப்ராஸ், கப்ராஸ்’ என்று வேற்று

மொழியில் பேசிக்கொண்டிருக்க, படத்தின் அடியில் ஆங்கில எழுத்துக்கள் நடுங்கின.

எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருந்த நாராயணனின் இங்கிலீஷ் அவ்வளவு வேகமாகப்

படிக்க வரவில்லை.

இரண்டு வார்த்தை படிப்பதற்குள் படக் படக் என்று மாறியது. படத்தில் மிக அழகான

இரண்டு பெண்கள் இருந்தார்கள். இரண்டு பேரும் ஏராளமாக கவுன் அணிந்து வந்தார்கள்.

கதாநாயகன் அண்ணனா, அப்பனா, காதலனா, என்று தீர்மானிக்க முடியவில்லை. கவுன்

போட்டிருந்த பெண்கள் சாஸ்திரத்துக்கூட அந்த கவுன்களைக் கழற்றவில்லை. இண்டர்வெல்

வரை ஒரு பட்டன்? ம்ஹூம்! படுக்கையில் அவர்கள் படுத்ததுமே காமிரா நகர்ந்துபோய்

தெரு, மண், மட்டை என்ற புறக்காட்சிகளில் வியாபித்தது. ஒரே ஒரு இடத்தில்

சினிமாவுக்குள் சினிமாவாக பாரிஸ் நகரத்தின் எஃபில் டவர்முன் ஒரு பெண் தன்

பாவாடையைக் கழற்றுவதாக ஒரு காட்சி வந்தது. அதாவது வரப் பார்த்தது. அதற்குள்

காமிரா அவசரமாக அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவன் முகபாவங்களைக்

காட்டத் தலைப்பட்டது. வெளியே வந்தான். கிருஷ்ணப்பா நின்றுகொண்டிருந்தான்.

“என்ன? பார்த்தியா? படம் எப்படி?”

“நீ பாக்கலை?”

”நான் என் டிக்கட்டை விற்கலாம்னு போனேன்! யோசிச்சேன். இன்னிக்கு இங்கதான்

பார்க்கலாமேன்னு உன் டிக்கட்ல உள்ளே நுழைஞ்சேன். கிடக்கட்டும் உன் படம்

எப்படி?”

“நாசமாய்ப் போச்சு. ஒரு எழவும் இல்லை. படம் முழுக்க குதிரை வண்டி கட்டிகிட்டு

ஒரு ஆள் பயாஸ்கோப் வைச்சுக்கிட்டு ஊர் ஊராப் போறான்!”

நாராயணன் கிருஷ்ணப்பாவை சற்று தயக்கத்துடன் கேட்டான்.

“உன் படம் எப்படி?”

“செமைப்படம் வாத்தியாரே.”

நாராயணன் மவுனமானான்.

“வேஸ்ட் ஆறதேன்னு உட்கார்ந்தேன். படுகிளாஸ். ஒரு முத்தம் கொடுக்கிறான் பாரு,

அப்படியே அவளைச் சாப்பிடறான். ஆரஞ்சுப்பழம் உரிக்கிற மாதிரி உடுப்புகளை

ஒவ்வொண்ணா ஒவ்வொண்ணா உருவி...”

“கிருஷ்ணா அப்புறம் பேசலாம். எனக்கு அர்ஜண்டா வேலை இருக்குது! வர்றேன்” என்று

விரைந்தான் நாராயணன். அவனுக்கு அழுகை வந்தது. கிருஷ்ணப்பா போன்ற எப்போதும்

அதிர்ஷ்டக்காரர்களிடம் ஆத்திரம் வந்தது. “நாளைக்கு எங்கே படம் பார்க்கிறே

சொல்லு...” என்று தூரத்தில் கிருஷ்ணப்பா கேட்டான். நாராயணன் பதில் சொல்லாமல்

நடந்தான். ரப்பர் டயர்வைத்த வண்டியில் பெட்ரமாக்ஸ் அமைத்து எண்ணெய் கொதிக்க

மிளகாய் பஜ்ஜி தத்தளிக்க பலபேர் தெருவில் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

கண்ணாடிப்பெட்டிக்குள் பொம்மை நங்கைகளின் அத்தனை சேலைகளையும் உருவித்

தீர்க்கவேண்டும் போல ஆத்திரம் வந்தது. மெல்ல நடந்தான். இருட்டு ரேடியோக்

கடையைக் கடந்தான். ‘டாக் ஆஃப் தி டவுன்’ என்கிற ரெஸ்டாரண்ட் வாசலில் ஒரு

கூர்க்கா நிற்க, ஒன்றிரண்டு பேர் அங்கே விளம்பரத்துக்காக வைத்திருந்த

போட்டோக்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். இன்று இரண்டு காட்சிகள்,

லிஸ்ஸி, லவினா, மோனிக்கா, டிம்பிள்.. நான்கு அபூர்வ பெண்களின் நடனங்கள்.

மேற்படி நங்கைகள் இடுப்பில் மார்பில் சில சென்டி மீட்டர்களை மறைத்துச்

சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த வாசல் இருட்டாக இருந்தது. வெற்றிலை பாக்குப் போட்டு ‘பதக்’ என்று

துப்பிவிட்டு ஒருத்தன் உள்ளே செல்ல, கதவு திறக்கப்பட்டபோது பெரிசாக சங்கீதம்

கேட்டு அடங்கியது.

உள்ளே செல்ல எத்தனை ரூபாய் ஆகும் என்று யாரைக் கேட்பது என்று தயங்கினான். அந்த

கூர்க்காவைப் பார்த்த மாதிரி இருந்தது. வீட்டில் வந்து அம்மாவிடம் சொல்லி

விடுவானோ? நடந்தான்.

சற்று தூரம் சென்றதும்தான் தன்னை ஒருவன் பின்தொடர்வதை உணர்ந்தான். முதலில் அவன்

பேசுவது புரியவில்லை. பின்பு தெரிந்தது. "ஆந்திரா, டமில்நாடு, குஜராத், மலையாளி

கேர்ள்ஸ் சார்! பக்கத்திலேதான் லாட்ஜ். நடந்தே போயிறலாம்."

நாராயணன் நின்று சுற்றுமுற்றும் பார்த்து "எவ்வளவு" என்றான்.

அவன் சொன்ன தொகை நாராயணனிடமிருந்தது.

"பிராமின்ஸ் வேணும்னா பிராமின்ஸ், கிறிஸ்டியன்ஸ், முஸ்லீம்? வாங்க சார்!"

நாராயணன் யோசித்தான்.

"நிஜம் ஸார் நிஜம்; நிஜமான பெண்கள்!"

நாராயணன் "வேண்டாம்ப்பா" என்று விருட்டெ ன்று நடந்து சென்றான்.

****

சுல்தான், நீ எங்கே இருக்கிறாய்?

அந்த நாள் என் சந்தோஷ நாள். எனக்கு வேலை கிடைத்து அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் வந்திருந்தது. அதை மாலதியிடம் காண்பிக்கச் சென்றபோது, அவள் ஊருக்குக் கிளம்பத் தயாராக நான்கு அவசர சாரிகளைப் பெட்டிக்குள் அடைத்துக்கொண்டு இருந்தாள்.

”மாலதி! எனக்கு வேலை கிடைத்துவிட்டது!”

மாலதி மற்றொரு சாரியைக் கசக்கி அடைத்தாள். அவள் முகம் என்னவோ போல் இருந்தது. ”ஏன் மாலதி என்னவோ போல் இருக்கிறாய்?”

மாலதி என்னை வெறித்துப் பார்த்தாள். ”நான் இனி இந்த வீட்டில் ஒரு கணம் தாமதிக்கப்போவதில்லை. சொந்த அப்பாவாக இருந்தால் என்ன, திஸ் இஸ் தி லிமிட்! நான் போகிறேன்!”

”இரு, இரு எங்கே போகிறாய்?”

”எங்கேயாவது!” அவள் கண்களில் நீர் ததும்பியது.

”ஆ, கம் ஆன்! அவசரப்படாதே. என்ன நடந்துவிட்டது? அப்பா ஸ்டார் டஸ்ட்’டை நிறுத்திவிட்டாரா! மாலதி நீ போய்விட்டால் டாக்டர் அவர்களைப் பார்த்துக்கொள்வது யார்? ஒரே ஓர் அப்பா இல்லையா?”

”பார்த்துக்கொள்வதற்கு ஆள் கிடைத்துவிட்டான். மாடிக்குப் போய்ப் பார்! உனக்குப் போட்டியாக மற்றொரு சிநேகிதன் வந்திருக்கிறான். சுல்தான்!”

எனக்குத் திரைக்கதை, வசனம், டைரக்ஷன் புரியவில்லை. சுல்தான்... இந்தப் பெயரை எங்கோ பார்த்திருக்கிறேனே? சே, அப்படி இருக்காது. எனக்குப் போட்டியாக ஒரு சுல்தானா?

மூன்று தாவலில் மாடி ஏறினேன். கதவு சாத்தி இருந்தது. டாக்டரின் குரல் கேட்டது. ”அப் சுல்தான், அப்! அப்படி சுல்தான், அப்படி அப்!”

புரியவில்லை. கதவைத் தட்டினேன். ”கம் இன். கதவு தாளிடப்படவில்லை. ஆ பையா! எங்கே வந்தாய்..?”

அறையில் டாக்டர் மட்டும் தான் இருந்தார்.

”டாக்டர், முப்பத்தைந்து செகண்டுகளுக்கு முன் யாருடன் பேசிக்கொண்டிருந்தீர்கள்?”

”ஓ. சுல்தானை நீ இன்னும் சந்திக்கவில்லை அல்லவா?அதோ பார்!”

டாக்டர் குறிப்பிட்ட திக்கில் அறையின் வடமேற்கு மூலையின் மேலே, வெண்டிலேட்டர் என்னும் காற்று ஜன்னலில் தொற்றிக் கொண்டிருந்த சுல்தானை முதல் தடவையாகப் பார்த்தேன்.

சுல்தான் சுமார் மூன்றடி உயரமுள்ள ‘சிம்பன்ஸி’ ரகக் குரங்கு. உடல் முழுவதும் கருகரு என்று கேசம். நீளநீள விரல்கள். முகத் தில் முக்கால் பாகத்தை அடைத் துக்கொண்டு பற்கள்.

மேற்படி பற்கள் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டுஇருந்தன. அந்த சினிமாஸ்கோப் சிரிப்பைச் சிரிப்பு என்கிற ரகத்தில்தான் சேர்க்க வேண்டும். பளீர் என்று வெண் பற்கள். ஒவ்வொன்றும் நாற்பது வாட்.

”சுல்தான், கீழே வா!” என்றார் டாக்டர், அது உடனே ரப்பராகத் தாவி, ஒரு கோட் ஸ்டாண்டு, ஒரு சோபாவின் விளிம்பு இவை மூலமாக எங்கள் அருகில் வந்து நின்றது. பக்கத்தில் பார்க்க இன்னும் மொசமொசவென்று அசிங்கமாக இருந்தது. ”டாக்டர், நான் போய்விட்டுச் சாவகாசமாக வருகிறேன். உங்களுக்கு எவ் வளவோ வேலை இருக்கும்.”

”பயப்படாதே. சுல்தான் ஒன்றும் செய்ய மாட்டான். சுல்தான். இது என் ஃப்ரெண்ட்! ஃப்ரெண்ட்! மாமாவுக்கு ஷேக்ஹாண்ட் கொடு.”

சொரசொர என்று ஒரு கரம் என் கரத்தைப் பற்றிக் குலுக்கிவிட்டு, ஒரு சலாம் போட்டது. ‘ஹலோ’ என்றேன். சுல்தான் என் பையிலிருந்து பேனாவை எடுத்துக்கொண்டுவிட்டது.

”டாக்டர், என் பேனாவைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லுங்கள்.”

”எப்படி! ஏறக்குறைய மனுஷாள் மாதிரியே பண்ணுகிறது பார்!”

டாக்டர், என்ன இது, குரங்கை வைத்துக்கொண்டு கூத்து! எங்கே பிடித்தீர்கள் இக் குரங்கை? எதற்காக? ஐயோ, என் பேனாவைக் கடிக்கிறதே! டேய், குடுத்துடுடா.”

”பையா, ஒரே ஒரு வார்னிங். அதை டேய் கீய் என்று மரியாதை இல்லாமல் பேசாதே. சில வேளை கோபம் வந்துவிடும்!” டாக்டர் குரங்கின் தலையை வருடிக்கொண்டே தொடர்ந்தார். ”சர்க்கஸில் வாங்கினேன். நொடித்துப்போன சர்க��

�கஸ் கம்பெனி. இதற்குப் பட்டாணி போடக்கூடக் காசில்லை. பையா, டாக்டர் க்யூலரின் ஆராய்ச்சிகளைப் பற்றிப் படித்திருக்கிறாயா?”

”டாக்டர், நான் கடைசியில் படித்தது ‘நீச்சலடி சுந்தரி’ என்கிற மர்ம நாவல். குமாரி ஜெயபுஷ்பா எழுதியது.”

”டாக்டர் க்யூலர், ‘தி மெண்டாலிட்டி ஆஃப் ஏப்ஸ்’ என்று அருமையான புத்தகம் எழுதி இருக்கிறார்.”

”டாக்டர்! மாலதி ரொம்ப கோபத்தில் இருக்கிறாள். என்ன நடந்தது?”

”நான் அவளிடம் சுல்தானை வாங்கி வந்ததைப் பற்றிச் சொல்லவில்லை. அவள் டிரெஸ் பண்ணிக்கொண்டிருந்தபோது உள்ளே எட்டிப் பார்த்துவிட்டான். கொஞ்சம் குழப்பம். அதிருக்கட்டும், குரங்குகளை வைத்துக்கொண்டு க்யூலர் நிறையப் பரிசோதனைகள் செய்திருக்கிறார்.”

”மாலதி ஊருக்குக் கிளம்பிக்கொண்டு இருக்கிறாள்!”

”எங்கேயும் தனியாகப் போக அவளுக்குத் தைரியம் கிடையாது. நாயர் கடை வரை போய்த் திரும்பிவிடுவாள். அவளுக்கு என்னை விட்டுவிட்டு இருக்க முடியாது... க்யூலர் கெஸ்டால்ட்டின் சைக்காலஜியை நிரூபிப்பதற்கு குரங்குகளுக்குச் சில புத்திசாலித்தனமான காரியங்களைக் கற்றுக்கொடுத்தார்... உதாரணத்துக்கு இதோ பார். கம் சுல்தான்...”

எனக்கு கெஸ்ட்டால்டின் மனோதத்துவத்தில் ஈடுபாடு அதிகம் இல்லை

என்று சொன்னதைப் பொருட்படுத்தாமல் டாக்டர் அவர்கள் அறையின் மூலையில் இருந்த கூண்டுக்குள் சுல்தானை அழைத்துச் சென்றார். அதைக் கூண்டுக்குள் அடைத்துப் பூட்டினார். சுல்தான் உள்ளே திருதண்டி சந்நியாசி மாதிரி குதித்தது. டாக்டர் அலமாரிக்குச் சென்று ஒரு நீளமான பச்சைநாடன் வாழைப் பழத்தை எடுத்துக் கூண்டின் அருகில் கொண்டுவந்து சுமார் எட்டு அடி தள்ளி வைத்தார். இரண்டு சிறிய மூங்கில் குச்சிகளைக் கூண்டுக்குள் சுல்தானிடம் கொடுத்தார்.

”பையா, வேடிக்கையைப் பார்!”

சுல்தான் முதலில் தன் உடம்பை ஹடயோகியைப் போல நீளமாக இழுத்து வாழைப்பழத்தை எட்டப் பார்த்தது. முடியவில்லை. ஒரு குச்சியை எடுத்துக்கொண்டு அதனால் வாழைப்பழத்தை எட்டப் பார்த்தது. குச்சி நீளம் போதவில்லை. சுல்தான் மற்றொரு குச்சியை வைத்து முயன்று பார்த்தது. ம்ஹூம். அதுவும் நீளம் போதவில்லை. இரண்டு குச்சிகளையும் கீழே போட்டுவிட்டுச் சற்று நேரம் கூண்டுக்குள் பின்கை கட்டிக்கொண்டு எலெக்ஷனில் தோற்றவன் போல உலாத்தியது. திடீரென்று ஞானோதயம் பிறந்தது போல ஒரு மூங்கிலை எடுத்தது. அதன் நுனியில் கடித்து நீளவாக்கில் கொஞ்சம் பிளாச்சாய்ப் பிளந்துகொண்டது. அந்தப் பிளவில் மற்றொரு குச்சியைச் சொருகிக்கொண்டது. அப்போது நீளம் போதுமானதாக இருந்தது. லாகவமாக வாழைப் பழத்தைக் குச்சியால் தன்பால் நகர்த்தி எடுத்துக்கொண்டுவிட்டது.

”பார்த்தாயா!”

”ரிமார்க்கபிள் டாக்டர். சுல்தான். நீ ஒரு ஜீனியஸ்!”

”ஜீனியஸ் அவனில்லை. கற்றுக் கொடுத்த நான்!”

”இன்னும் என்னவெல்லாம் செய்யும்? மோர்சிங் வாசிக்குமா?”

”பொறு, இதுவரை க்யூலரின் ஆராய்ச்சியின்படிதான் கற்றுக் கொடுத்திருக்கிறேன். இனிதான் டாக்டர் ராகவானந்தம் வருகிறார்.”

டாக்டர் அலமாரிக்குச் சென்று சிறிய பட்டாணி அளவில் இரண்டு சமாசாரங்களை எடுத்துவந்து எனக்குக் காட்டினார். ”இது என்ன

தெரியுமா? மெர்க்குரி செல் பேட்டரி. இது ஒரு சின்ன எலெக்ட்ரானிக் சர்க்யூட். பேட்டரியிலிருந்து சக்தி கொடுத்தால் இதிலிருந்து சின்னச் சின்ன அலைகள், மின் துடிப்புகள் கிடைக்கும். இந்த இரண்டையும் இணைத்துச் சுல்தானின் தலையில் ஆக்ஸிபிட்டல் பாகத்தில் பொருத்தப்போகிறேன். சுல்தானின் மூளைக்குச் சிறிய மின் அதிர்வுகள் கிடைக்கும்போது நடக்கப்போவது என்ன தெரியுமா...? நீ மைக்கல் க்ரைடனின் டெர்மினல் மான் படித்தாயா?"

"டாக்டர், நான் சமீபத்தில் படித்தது நீச்சலடி..."

"நிகழப்போவது மனித சரித்திரத்தில் ஒரு மைல் கல். சுல்தானுக்கு அறிவு கிடைக்கப்போகிறது. சுல்தான் இப்போது இருப்பதைவிடப் பதின்மடங்கு அறிவு பெறப்போகிறான்."

"டாக்டர், ஏற்கெனவே என் பேனாவைக் கடித்து உண்டு இல்லை என்று பண்ணிவிட்டது. குரங்குக்கு எதற்கு அறிவு கொடுக்க வேண்டும்?"

"இதில் ஒரு சிக்கல்."

"நல்ல வேளை."

"தன் தலையில் இந்தக் கருவியைப் பொருத்த விட மாட்டேன் என்கிறான் சுல்தான். என் ஒருத்தனால் சமாளிக்க முடியவில்லை."

"எனவே..."

"நீ கொஞ்சம் ஒத்தாசை செய்தால் காரியம் நிறைவேறும்."

"நோ நோ நோ. டாக்டர், எனக்குக் குரங்குகளிடம் அவ்வளவு பரிச்சயம் இல்லை. எங்கேயாவது பிடுங்கிவைத்தால்... சே சே! பல் ஒவ்வொன்றும் எவ்வளவு தீர்க்கமாக வளர்ந்திருக்கிறது பாருங்கள்."

"பையா, உதவி செய்யமாட்டாயா?"

"இல்லை டாக்டர். நான் உங்களுக்கு எவ்வளவோ உதவியிருக்கிறேன். ஆனால், குரங்கு வேலை வேண்டாம். என்னை மன்னித்துவிடுங்கள். என்னால் முடியாது!"

”அப்படியா?”

”ஆம். டாக்டர்.”

”முடியாதா?”

”ம்ஹூம். முடியாது.”

”சுல்தான்!” என்றார் டாக்டர். சுல்தான் நிமிர்ந்தது.

”ஷகூலா ஜாகராண்டா!”

”என்ன டாக்டர் அது. குரங்கு பாஷையா... ஹ...ஹ....” என் சிரிப்பு உறைந்தது. சுல்தான் தன் பற்களை ஆர்மோனியக் கட்டைகள் போல் விரித்து என் எதிரில் வந்து நின்றது. ஒரு தடவை எம்பிக் குதித்தது. ஒரு தடவை பாதி உட்கார்ந்து நிமிர்ந்தது. படபட என்று தன் தொடைகளில் தாராசிங் போலத் தட்டிக் கொண்டது.

”டாக்டர், எனக்குப் பயமாக இருக்கிறதே, என்ன செய்யப் போகிறது.”

சுல்தான் லபக் என்று என் தலைமேல் ஏறி டென்னிஸ் ரெஃபரி போல உட்கார்ந்துகொண்டது.

”டாக்டர், திஸ் இஸ் பிளாக் மெயில். என்ன இது! இறங்கச் சொல்லுங்கள்.” நான் தலையை அசைக்காமல் கரகம் ஆடுபவன் போல் இரண்டு கைகளையும் நீட்டி பேலன்ஸ் பண்ண வேண்டியிருந்தது. ”டாக்டர், ப்ளீஸ்!”

அவர் சும்மா இருந்தார்.

”டாக்டர், நீங்கள் என்ன வேண்டுமானாலும் கேளுங்கள். எத்தனை குரங்குகளை வேண்டுமானாலும் பிடித்துக்கொள்கிறேன். இதை இறங்கச் சொல்லுங்கள்!”

”தட்ஸ் த பாய்! சுல்தான், இறங்கு!”

இறங்கிவிட்டது.

”நீ பிடித்துக்கொள்ள வேண்டாம். நான் பிடித்துக்கொள்கிறேன். நீ தலையில் பேண்டேஜ் போல் இந்த சாதனத்தைக் கட்டிவிட வேண்டும். அவ்வளவுதான்.’

”செய்கிறேன் டாக்டர்.” டாக்டர் அவர்கள் சுல்தானைப் பிடித்துக்கொள்ள அந்த இரண்டு சாதனங்களையும் பதித்து பேண்டேஜ் போல என்னைத் தலையில் இறுக்கக் கட்டச் சொன்னார். சுல்தான் தன் பற்களை விரித்து என்னைப் பார்த்த பார்வையில். ‘உன்னை அப்புறம் கவனித்துக்கொள்கிறேன்’ என்றது.

”இது சாதாரணமாகவே புத்திசாலிக் குரங்கு. இதற்கு மூளையில் ‘பல்ஸ்’ கொடுத்தால் இதைச் சமாளிப்பது சற்றுச் சிரமமாக இருக்கலாம். கூண்டுக்குள் அடைத்துவிடலாம்” என்று சுல்தானைக் கூண்டுக்குள் அடைத்துப் பூட்டிவிட்டார்.

”நீயும் குரங்கு வித்தையில் சேர்ந்துகொண்டுவிட்டாயா?” என்று குரல் கேட்டுத் திரும்ப... மாலதி.

”நீ ஊருக்குப் போகவில்லையா? நல்ல வேளை!” என்றேன்.

”டாக்ஸிக்கு அனுப்பியிருக்கிறேன்” என்றாள்.

”மாலதி. கேன்சல் பண்ணு உன் பயணத்தை. சுல்தானைக் கூண்டில் அடைத்தாகிவிட்டது. இதோ பார், இனி இதனால் உனக்கு ஓர் உபத்திரவமும் கிடையாது” என்றார் டாக்டர்.

”கூண்டில் அடைக்க வேண்டியது வேறு இரண்டு ஆசாமிகளை. எத்தனை நாழி டாக்ஸி கொண்டு வர!”

”மாலதி டார்லிங்! இனிமேல் சுல்தானைக் கூண்டுக்குள் வைத்துத்தான் கண்காணிப்பேன்.”

வாசலில் கார் ஹாரன் சத்தம் கேட்டது

”மாலதி, போகாதே!”

”இந்தக் குரங்கு இந்த வீட்டில் இ

ருக்கும்வரை நான் இங்கே இருக்கப் போவதில்லை. காலையில் என்ன செய்தது தெரி யுமா?”

”சொன்னார்! அன்ஃபார்ச்சுனேட்” என்றேன்.

”மாலதி, டாக்டர் க்யூலர் என்ற ஜெர்மானியர்....” என்றார் டாக்டர்.

”பார்த்தாயா, ஆரம்பித்தாகிவிட்டது... டாட்டா!”

மாலதியின் பின்னே நானும் டாக்டரும் தொடர... அவள் வைராக்கியமாக இறங்கிக் கீழே வந்தாள். வாசலில் டாக்ஸி இல்லை. வேறு ஏதோ கார் சத்தம் கேட்டிருக்கிறது.

”மாலதி, இப்போதுகூட லேட் இல்லை. இனி உனக்கு எந்தத் தொந்தரவும் கிடையாது. சுல்தானுக்கு மனிதத் தன்மை கொடுத்துவிட்டேன். நாகரிகம் கொடுத்துவிட்டேன். அவன் இனி பாத்ரூமுக்குள் எல்லாம் எட்டிப் பார்க்க மாட்டான்.”

டாக்டர் அவர்கள் மேலே தொடர்வதற்குள் மாடியில் ‘டணாங்’ என்று சில்லறை இறைபடுவது போல் சத்தம் கேட்டது.

”டாக்டர், அது என்ன சத்தம்!”

”கண்ணாடி உடைந்திருக்கும்” என்றாள் மாலதி.

”இல்லையே. கூண்டுக்குள் பூட்டி வைத்துவிட்டுத்தானே வந்தோம்! பையா, வா பார்க்கலாம்.”

”நீங்கள் போய்ப் பாருங்கள். நான் மாலதியுடன் சற்று நே.... டாக்டர்!”

”என்ன?”

”என் அப்பாயின்மென்ட் லெட்டர்! என் வேலை! அதை மாடியில் வைத்துவிட்டேன்! கூண்டுக்கு அருகில் உள்ள மேஜையில்!”

”குரங்கு சாப்பிட்டிருக்கும். ஓடு” என்றாள் மாலதி. எனக்கு திகீர் என்றது. டாக்டருடன் மாடிக்கு நானும் ஓடினேன். அறைக்குள் நுழைந்தபோது...

அறை காலியாக இருந்தது. கூண்டு திறந்திருந்தது. மேஜை மேல் வைத்திருந்த என் அப்பாயின்மென்ட் லெட்டரைக் காணோம். சுல்தானையும் காணோம்!

”டாக்டர்! என் லெட்டர்!”

”பையா! என் குரங்கு!”

”எங்கே அந்த சுல்தான்?”

”சுல்தான்! எங்கே ஒளிந்துகொண்டு இருக்கிறாய்? வந்துவிடு! கண்ணல்லவா? பையா, என் ஆராய்ச்சி வெற்றி... வெற்றி! எப்படித் தப்பித்திருக்கிறது பார். அதற்கு அறிவு வந்துவிட்டது. மேஜை மேல் வைத்திருந்த சாவியைக் குச்சியால் தள்ளி எடுத்துப் பூட்டைத் திறந்திருக்கிறது. குரங்கு... பூட்டைச் சாவி போட்டுத் திறந்திருக்கிறது... வெற்றி!”

”டாக்டர், என் லெட்டரை ஏன் அது எடுக்க வேண்டும்? எங்கே அந்தத சுல்தான்!”

அதற்குப் பதில் போல கீழே வீல் என்று ஐயாயிரம் சைக்கிள் அலறல் கேட்டது. மாலதி! அங்கே விரைந்தோம். ”என்ன மாலதி? என்ன ஆச்சு!”

”குரங்கு...” என்றாள். அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. பயம் தொண்டையை அடைத்தது. அதே சமயம் பின்கட்டிலிருந்த டாக்டர் வீட்டுச் சமையற்காரர் அரை டிராயர் அணிந்துகொண்டு பிரசன்னமானார். ”சார்! டாக்டர் சார்! இனி ஒரு நிமிஷம் இந்தப் பைத்தியக்கார வீட்டில் காரியம் செய்ய மாட்டேன். குரங்கு வளர்க்கலாம். ஆனா, இவ்வளவு செல்லம் கொடுக்கக் கூடாது. நேரா சமையல் அறைக்கு வந்து என் வேஷ்டியையும் துண்டையும் உருவிக்கொண்டுபோய்விட்டது. சே!”

”கையில் ஒரு காகிதம் வைத்திருந்ததா? ரிஜிஸ்டர்டு லெட்டர்?” என்றேன்.

”அது என்ன இழவோ. எனக்குத் தெரியாது. மாலதி அம்மா இந்த நிமிடமே என் கணக்கைத் தீர்த்துவிடுங்கள்.”

”வேஷ்டியையா உருவிற்று? உருவக் கூடாதே!” என்றார் டாக்டர்.

”இன்னும் கொஞ்சம் நாழி இருந்தா டிராயரையும் உருவி இருக்கும்.”

”பையா, விபரீதம். அதன் தலையில் இருக்கும் சாதனத்தை எடுத்துவிடக்கூடும் இல்லையா?”

”முதல்லே குரங்கையே காணோமே டாக்டர்! என் லெட்டர் எனக்கு வேண்டும் டாக்டர்!”

”மாலதி, நீ சுல்தானைப் பார்த்தாயா?”

”திடுதிடுவென்று நடு ஹாலில் குறுக்கே நொண்டி ப்ளே விளையாடுகிற மாதிரி ஓடியது. அவ்வளவுதான் தெரியும் எனக்கு.”

”எந்தப் பக்கம் போச்சு?”

”வாசல் பக்கம்.”

”போச்சுடா!”

”பையா, வா! சுல்தானைப் பிடித்தே ஆக வேண்டும். இல்லா விட்டால் ஆபத்து.”

நானும் டாக்டரும் வெளி

யே வந்தோம். தெரு அமைதியாக இருந்தது. நாங்கள் மேலும் கீழும் பார்த்தோம். எலெக்ட்ரிக் கம்பங்களைப் பார்த்தோம். மரங்களைக் கூர்ந்து பார்த்தோம். சுல்தான் சுல்தான் என்று செல்லமாகக் கூப்பிட்டுப் பார்த்தோம். ம்ஹூம்!

”டாக்டர், அதோ பாருங்கள்...”

சாலை நடுவே குரங்கின் காலடிகள் மாதிரி தெரிந்தது. அருகே ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை தெரிந்தது. கடைக்காரரிடம் சென்று, ”ஐயா, இந்தப் பக்கம் ஒரு கறுங்குரங்கு போயிற்றா?” என்று கேட்டேன். அந்த ஆள் என்னை ஒருவிதமாகப் பார்த்தார். அதே சமயம், எதிர் வீட்டிலிருந்து ஒரு நனைந்த ஆசாமி ஓடி வந்தார். ”மாணிக்கம், சட்டுனு

ஒரு சோடா உடை! எனக்குப் படபப்பாக இருக்கிறது” என்றார்.

”என்ன ஆச்சு சார்?”

”கொஞ்ச நாளாகவே எனக்கு தத்துபித்து என்று கனா. ஆனா, சொன்னா நம்ப மாட்டே. பகல்ல முழிச்சுட்டு இருக்கிறபோது எனக்குக் கனா வருகிறது! தலையிலே முண்டாசு கட்டிக்கொண்டு ஒரு ஆப்பிரிக்க தேசத்துக் குரங்கு பாத் ரூம் வழியா எட்டிப் பார்த்து ஒரு பேப்பரை ஆட்டறாப்பலே! சோடா.”

”சார்! அந்த பேப்பர் என் அப்பாயின்ட்மென்ட் லெட்டர் சார். எங்கே அந்தக் குரங்கு?”

”அப்ப குரங்கு நிஜமா?”

”ஆம்!”

”அப்ப வீட்டுக்குள்ளே இருக்கு! குரங்கு உங்களுதா! அறிவுகெட்ட பசங்களா! என்னடா இது அக்கிரமம்? முண்டாசைக் கட்டிவிட்டுக் குரங்கை உள்ளுக்குள்ளேவிட்டு வேடிக்கை பார்க்கறீங்களா? எனக்கு சப்த நாடியும் அடங்கிப் போச்சு!”

”சார், இதை அப்புறம் சாவகாசமாக உங்களுக்குச் சொல்கிறேன். இப்ப அந்தக் குரங்கை முதலில் பிடிக்க வேண்டும். பையா! வா போகலாம்” என்று டாக்டர் கடையிலிருந்து ஒரு வாழைப்பழத்தை முறித்துக்கொள்ள இருவரும் அந்த வீட்டில் நுழைந்தோம்.

இக்கட்டாக இருந்த அந்த வீட்டில் ஸ்தம்பித்த ஒண்டுக் குடித்தனக்காரர்களைக் கடந்து, குறிப்பிட்ட பாத் ரூமெல்லாம் தேடி... அறை அறையாகத் தேடி (‘கார்ப் பரேஷன்காரர்களோ?’) பின்கட்டுக்குச் சென்றோம்.

சுல்தான் சாதுவாகச் சப்பணம் கட்டிக்கொண்டு ஒரு வயதான பாட்டிக்கு எதிரே உட்கார்ந்திருந்தது. அந்த மாது கண்களை இடுக்கி அதை உற்றுப் பார்த்து, ”யாரப்பா நீ நம்ம கிஷ்ணசாமி புள்ளையாட்டம் இருக்கே?” என்றுகேட்டுக் கொண்டிருந்தாள்.

`நான் ரகசியமாக, பைய, பின்னால் இருந்து அணுக முயற்சிக்க, சுல்தான் எங்க ளைப் பார்த்துவிட்டது. உடனே உயரமான பின்புறச் சுவரின் மேல் ஏறிக்கொண்டது.

”சுல்தான், நான் சொல்வதைக் கேள். வந்துவிடு!” என்றார் டாக்டர். ”சுல்தான், என் பேப்பரைக் கொடு!” என்றேன் நான். ”ஏன் சார், அந்தக் குரங்கு பேசுமா?” என்றது ஒரு குரல். ”கொசுவலை கொண்டுவரேன். அதைப் போட்டுப் பிடித்துவிடலாம்” என்றது மற்றொரு குரல். நான் ஓட்டுப் பக்கம் ஏறி, மெதுவாக மறுபடி சுல் தானைப் பின்புறம் அணுகி... அணுகி... அணுகிவிட்டேன். பிடித்துவிட்... ம்ஹூம். தப்பித்து அந்தப் பக்கம் குதித்துவிட்டது.

”பையா, சொல்வதைக் கேட்க மாட்டேன் என்கிறது! அந்தப் பக்கம் என்ன இருக்கிறது?”

”சின்ன சந்து, டாக்டர்.”

”சந்தின் முடிவில்?”

”தட்டி போட்டு அடைத்திருக்கிறது.”

”சார், அந்தத் தட்டிக் கதவைத் திறக்கிறீர்களா?” சந்தில் மடக்கி விடலாம். பையா, குரங்கு தெரிகிறதா?”

”தெரிகிறது, பத்தடி தூரத்தில் ராஸ்கல் நின்றுகொண்டிருக்கிறது.”

நானும் டாக்டரும் மெதுவாக நடந்தோம். எங்களுக்குப் பத்தடி முன்னாலேயே சுல்தான் நடந்தது.

”சுல்தான், கண்ணே! நில்லடா!” என்றார் டாக்டர்.

சந்தின் இறுதியில் தட்டி அடைத்திருந்தது. அதன் மேல் முதுகை வைத்துக்கொண்டு நின்றது. நாங்கள் அருகே வருவதைப் பார்த்ததும் தட்டியைப் பிரித்துக்கொண்டு அந்தப் பக்கம் சென்றுவிட்டது.

நான் தட்டியைப் பிரித்து அந்தப் பக்கம் என்ன என்று பார்த்தேன். என் ரத்தம் உறைந்தது.

அந்தப் பக்கம் ஒரு பொதுக்கூட்டம் நடந்துகொண்டு இருந்தது. பேசுபவர்கள் எங்களுக்கு முது கைக் காட்டிக்கொண்டு இருக்க... எதிரே திரளான மக்கள் குந்தி உட்கார்ந்துகொண்டு ஆ என்று வாய் பிளந்து பேச்சாளரைக் கேட்டுக்கொண்டு இருந்தார்கள்.

சுல்தான் முதலில் ஒரு மூலையில்தான் இருந்தது. யாரும் அதைக் கவனிக்கவில்லை. ஆனால், பக்கத்தில் ஒரு காவலர் இருந்தார். அவர் தொப்பி அருகில் இருந்தது.

”குமுறுகிறோம். கொதிக்கின்றோம். மக்களின் விருப்பத்தினையும் நலத்தினையும் சீரழிக்கும்...” பேச்சாளர்.

சுல்தான் அந்தத் தொப்பியை சைஸ் பார்த்துக்கொண்டு இருந்தது.

”....” ”.....” என்று டாக்டர் சன்னமாகக் கூப்பிட்டார் சந்தினூடே! போலீஸ்காரர் கால் மாற்றிக் கால் போட்டு உட்கார்ந்துகொண்டார். சுல்தான் அவரை நிமிர்ந்து பார்த்தது.

”மத்திய அரசைக் கேட்கின்றோம்!” என்றார் பேச்சாளர். ”உங்களுக்கு விருப்பமிருந்தால் வந்து எங்கள் அரியணையில் உட்கார்ந்து பாருங்கள். அது அரியணையல்ல... முள்!”

சுல்தான் அந்தக் காலி நாற்காலியில் போய் உட்கார்ந்துகொண்டது. மக்கள் பேச்சாளரின் உதடுகளிலேயே கவனமாக இருந்தார்கள்.

”சுல்தான்!” என்று எட்டு பாயின்ட் எழுத்துக்களில் அதட்டிப் பார்த்தார் டாக்டர்.

”வண்ணாரப்பேட்டை அறுபத்து மூன்றாவது வட்டம் கிளை சார்பாகத் தலைவர் அவர்களுக்கு மலர் மாலை” என்று சுல்தானுக்கு ஒரு மாலை போடப்பட்டது.

அப்புறம் அங்கே நிகழ்ந்ததை விவரிப்பது சற்றுச் சிரமமாக இருக்கிறது.

”டேய், குரங்குடா!” என்றது ஒரு குரல். அப்புறம் ஒரு சலசலப்பு!

”எதிர்க்கட்சிக்காரன் வேலைடா!”

”தொப்பி மாட்டிக்கிட்டிருக்குடா!”

டணாங் என்று ஒரு கோலி சோடா பாட்டில் மேடை நோக்கி விரைந்தது. அதைப் பிடித்து சுல்தான் திரும்ப எறிய, ‘அமைதி அமைதி’ என்று ஒலிபெருக்கி அலற, அந்தக் கூட்டம் கலைந்த தேனீக்கூடு போல் ஆகிவிட, தக்காளிப் பழம், முட்டை, ஒற்றைச் செருப்புகள் எல்லாம் பிரயோகமாக...

”டாக்டர், வாருங்கள்! பின்பக்கமாகவே ஓடிவிடலாம்” என்று நாங்கள் ஓட, எங்களுடனேயே சுல்தானும் ஓடி வர, ‘பிப்பீ’ என்று போலீஸ் விசில் சத்தம் கேட்க, என் தோளில் ஒரு முரட்டுக் கை பரவ...

மாஜிஸ்ட்ரேட் கனைத்துக்கொண்டார். ”கைதிகள் டாக்டர் ராகவானந்தம், முதுகுடுமிப் பெருவழுதி. இது அவர் சொந்தப் பெயரில்லை என்று நினைக்கிறேன். இருவரும் இ.பி.கோ.268 பப்ளிக் நியூசன்ஸ், உடன் இ.பி.கோ.289 இவ் விரு பிரிவுகளின்படி குற்றவாளிகளாக நிரூபிக் கப்பட்டு இருக்கிறார்கள். இருவருக்கும் தலா ரூ.500 அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. அப ராதம் செலுத்தத் தவறினால், இரண்டு மாதம் சிறைத் தண்டனை” என்று படித்தார்.

”டாக்டர், என்னிடம் சில்லறையாக இல்லையே?” என்றேன்.

”பையா, கவலைப்படாதே! யுவர் ஆனர்! அபராதத் தொகையைச் செலுத்தத் தயாராக இருக்கிறோம். மாலதி!” என்றார்.

சபையில் தலைமறைவாக இருந்த மாலதி ஓரமாக வந்து, ”அப்பா பேங்கில் மொத்தம் 550 ரூபாய்தான் இருந்தது” என்றாள்.

நான் திடுக்கிட்டேன். டாக்டர் தலையைச் சொறிந்து என்னை நோக்கினார். ”இப்ப என்ன செய்வது?”

”முதுகுடுமி ஜெயிலில் இருக்க வேண்டியதுதான்! க்யூலரின் அருமையான புத்தகம் கொண்டுவந்திருக்கிறேன். படித்தால் பொழுது போய்விடும். இரண்டு மாதம் தானே?” என்றாள் மாலதி.

****

ஓலைப்பட்டாசு

அந்த தீபாவளி, என் வாழ்க்கையில் மறக்க முடியாதது. அதைப் பற்றி சொல்வதற்குள் தேவைப்பட்ட அளவுக்கு மட்டும் சுயபுராணம். என் பெயர் எதற்கு? நான். அவ்வளவுதான். மற்றவர் பெயர்கள் முக்கியம். அது சந்தானம் ஐயங்கார், பெருந்தேவி, சின்னா இவர்களின் பெயர்கள் இந்த கதைக்கு என்னிலிருந்து அவர்களை அந்நியப்படுத்துவதற்கு முக்கியம்.

பார்த்தீர்களா... ஆரம்பித்த விஷயத்தை விட்டு அலைகிறேனே. காரணம் – என் வயசு இன்றைக்கு எழுபது. பார்த்த மரணங்கள் ஆறு. இரண்டு மனைவிகள். ஒரு தேசிய விருது. ஒரு நாள் ஜெயில். ஒரு ப்ராஸ்டேட் ஆபரேஷன். கராஜில் நெருக்கமாக மூன்று கார்கள். உறவினரின் துரோகங்கள். தென் ஆப்பிரிக்கா டர்பனில் இரண்டு வருஷம் இவ்வாறு அதிகம் சேதப்படாமல் எழுபதை அடைந்து விட்ட ஒருவன் இறந்துபோனால் ஹிந்துவில் எட்டாம் பக்கத்தில் நான்கு வரிகளில் எழுபது வருஷமும் அடங்கி போகும்.

சொல்ல வந்தது, அந்த ஒரு தீபாவளி பற்றி. சீரங்கத்தில் என் பன்னிரண்டாவது வயதில் என் பாட்டியின் கண்காணிப்பில் வாழ்ந்தேன். அதனால் கொஞ்சம் பணத்தட்டுப்பாடு. அந்த தீபாவளிக்கு பட்டாசு வாங்க மொத்தம் ஐந்து ரூபாய்தான் தந்தாள். இப்போது என் வீட்டில ஐந்து ரூபாய் தாளை, தரையில் விழுந்தால் வேலைக்காரர்கள் கூட பொறுக்கமாட்டார்கள். அப்போது குறைவான பொருளாதாரத்தில் ஐந்து ரூபாயில் அதிகப்படியாக சந்தோஷம் கிடைக்க... கொள்ளிடக் கரையருகில் ஓலைப்பட்டாசு சல்லிசாக விற்பார்கள். பனையோலையில் சின்னதாக வெடிமருந்தை வைத்து முடிச்சுப் போட்டு மிகச் சின்னதாக திரியுடன், பனையோலை வாலுடன் பிரமாதமாக வெடிக்கும். ஆனால், ரொம்ப உஷாராக இருக்க வேண்டும். பற்ற வைப்பதற்குள்ளே வெடித்து கையை உதறவேண்டி வரும். மேலும் ஒரு வாரம் வெயிலில் காயப்போட்டே ஆகவேண்டும். பாட்டி கொடுக்கும் காசில் ஓலைப்பட்டாசு பாதப் பணத்துக்கு வாங்கிக்கொண்டு, மிச்சத்தில் கொல்லன் பட்டறைக்கு போய் ஒரு வேட்டுக் குழாயும் கந்தகப் பொடியும் வாங்கிக் கொண்டேன். இது ஒரு மாதிரி மினி வேட்டுக்குழாய். நீண்ட கம்பியின் இறுதியில் ஒரு குழலும் போல்ட்டும் இருக்கும். குழலில் மஞ்சளான கந்கத்தை கெட்டித்து அதனுள் போல்ட்டை செருகி சுவரில் மடேர் என்று ஒரு அறை அறைந்தால்

கேட்கும் வெடிச் சத்தம், நம் காதில் விண்ண்ண்ண் என்று அலறும். வெடியை விட திண்ணையில் சுதேசமித்திரன் படித்து கொண்டிருக்கும் தாத்தாக்களின் பின்பக்கம் மெள்ள நழுவி, ஒரு டமால் அடித்துவிட்டு, கோரதமுட்டியை நோக்கி ஓடுவதில் உள்ள உற்சாகம்தான் மிக சுத்தமானது.

அந்த தீபாவளி ஓலைப் பட்டாசு காயப் போட மாடிக்கு சென்ற போது, பக்கத்து வீட்டு "எடுத்துக்கட்டி"யின் மேல் செருப்பு வைத்திருந்தது. அதில் ஏறினேன். பின்னால் யாரோ கஷ்டப்பட்டு முனகுவது போல் சத்தம் கேட்டது. உதவி தேவையோ என்று நான் சுவர் எகிறி குதித்து அந்தப் பக்கம் போய் பார்த்தபோது சந்தானமையங்கார் தலையில் முண்டாசு கட்டிக் கொண்டு, சின்னாவை பல இடங்களில் தடவிக் கொடுத்து சிகிச்சை மாதிரி என்னவோ செய்து கொண்டிருந்தார். சந்தானமையங்கார் அடுத்த வீட்டுக்காரர். எங்களையெல்லாம் ஓட ஓட விரட்டுபவர். கிரிக்கெட் பால் உள்ளே போனால் திருப்பி தரமாட்டார். கண்டபடி திட்டுவார். அவர் வீட்டு சுந்தர் எங்களுடன் விளையாட வரமாட்டான். அவர்கள் எந்த விதத்திலோ பணக்காரர்களாம். கொலுவுக்கு சில்க் ஜமக்காளங்கள் போட்டு, பெட்ரோமாக்ஸ் வைப்பார்கள். சின்னா அவர் வீட்டு சமையல்காரி. ரவிக்கை முந்தானையில் அவள் சேகரித்து இருந்த கொய்யாக் காய்கள் சிதறிக் கிடந்தன. தரை எல்லாம் வியர்வையால் ஈரமாக இருந்தது. சந்தானயைங்காரின் செருப்புதான் 'எடுத்துக்கட்டி'யில் மேல் வைத்திருந்தது. "என்ன மாமா பண்றீங்க "என்று கேட்டபோது அவர் திடுக்கிட்டு "இவளுக்கு உடம்பு சரியா இல்லை. மூச்சு வாங்கறதுன்னா... அதனால, தசமூலாரிஷ்டம் கொடுத்து சரி பண்றேன். போடா போடா... நீ எங்க இங்க வந்து தொலைச்சே... ஓடிப் போ" என்றார்.

"பட்டாசு காயப் போட வந்தேன். மாமியை கூப்பிடட்டுமா" என்றேன்.

"மாமி பெட்டவாத்தலை போயிருக்கா. சுவரேறி குதிச்செல்லாம் வரக்கூடாது. போலீஸ்காரன் புடிச்சுப்பான்" என்றார்.

இதையெல்லாம் கேட்காதது போல், சின்னா ஒரு மாதிரி மயக்கத்தில் கண் மூடிக்கொண்டு சற்றே நெற்றியை சுருக்கிக் கொண்டு

உட்கார்ந்திருந்தாள்.

நான் வீரராகவனிடம் சொன்னேன். வீரராகவன் எங்கள் கிரிக்கெட் காப்டன். “பாவம்டா அவ. மேல்மூச்சு வாங்கிண்டிருந்தது. சந்தான மாமா தடவிக் கொடுத்தார். இல்லைன்னா ரொம்ப கஷ்டப்பட்டிருப்பா” என்றேன்.

அவன் அதைக் கேட்டு கைகொட்டி கண்ணீர் வரச் சிரித்தான். “நீ கொக்கோகப் படம் எதும் பார்த்ததே இல்லையா? மார்கழி மாதம் உற்சவத்தில் விக்குமே?”

“இல்லை...”

அவன் “வா” என்று உள்ளே சென்று பரண் மேல் கத்யத்ரயம் திவ்யபிரபந்தசாரம் போன்ற புத்தகங்களின் நடுவே செருகியிருந்த பழுப்பான புத்தகத்தை எடுத்து பிரித்துக் காட்டினான்.

“ஆமாண்டா, இப்படித்தாண்டா சந்தான மாமாவும் சின்னாவும் இருந்தா...”

அவன் ஒரு வக்கீல் போல பல கேள்விகள் கேட்டு “இது தெரிந்ததா?”, “அது புரிந்ததா?” என்றெல்லாம் கேட்டு, அவவப்போது குபீர் குபீரென்று சிரித்து, “அடிச்சடா லக்கி ப்ரைஸ்” என்று சொன்னது எனக்கு விளங்கவில்லை. அவ்வப்போது என் நண்பர்கள் என்னை மரியாதையுடன் பார்த்தார்கள். மீண்டும் மீண்டும் அந்த காட்சியை விவரிக்க சொல்லியே வதைத்தார்கள்.

“எனக்கு எல்லாம் புரியறது. ஆனா எதுக்குடா தலைல முண்டாசு?” என்றான் பாச்சு.

“அதாண்டா ட்ரிக்கு. அதை கட்டிண்டா அடையாளம் தெரியாதாம். வேற யாரோனு நினைச்சுண்டுருவோமாம்” என்று வீரு விளக்கியது புரிந்தும் புரியாமலும் இருந்ததை அவன் என்னை ஒரு மாதிரி பார்த்து, “நீ ஒண்ணு பண்ணு. அவர்கிட்ட போய் ‘மாமா மொட்டை மாடில ஓலைப்பட்டாசு காயப்போட போயிருந்த போது உங்களையும் சின்னாவையும் பார்த்துட்டேனே. மாமி பெட்டவாத்தலைலேர்ந்து வந்தாச்சா’ன்னு... அவாள்லாம் சீட்டாடிண்டிருப்பா... அங்க போய்க்

கேட்டு பாரு...”

“ஐயோ... போடா... தோலை உரிச்சுருவார்...”

“அதான் இல்லை. பாரேன் நடக்கிறதை. எதுக்கும் ஓடத் தயாராவே இரு. ஓரமா நின்னு கேட்டுட்டு வந்துரு. நடக்கிறதைப் பாரேன்.”

அவர்கள் மிகவும் கட்டாயப்படுத்த நான் மெள்ள தைரியம் பெற்று பக்கத்து வீட்டு திண்ணைக்கு நழுவி ஓரத்தில் உட்கார்ந்தேன். வெள்ளி செம்பில் காபியும், பத்தமடை பாயுமாக “ஆஸ்” ஆடிக் கொண்டிருந்தார்கள். புகையிலையை துப்பிவிட்டு வாய் கொப்பளிக்க வரும்போது என்னை பார்த்து சந்தானமையங்கர் திடுக்கிட்டு “என்னடா?” என்றார்.

“மாமா, மாடில ஓலைப் பட்டாசு பெருந்தேவி மாமி வந்தாச்சா பெட்டவாத்தலைலருந்து?” இவ்வாறு ஆரம்பித்தவுடன் “வாடா” என்று என்னை அப்படியே அலாக்காகத் தூக்கி உள்ளே செலுத்தி, என் வாயில் கல்கண்டு, அரிசி பப்ரமுட்டு, லேக்கா உருண்டை என்று இனிப்பான வஸ்துக்களை திணித்துவிட்டு “என்ன பார்த்தே, சொல்லு...”

“நீங்க சின்னாவுக்கு சிகிச்சை எதும் பண்ணலை” என்றேன்.

“பின்ன என்னவாம் அது?”

“வீரு சொல்றான் கொக்கோகமாம் அது...”

“மாமிகிட்ட சொல்லாதே, சொல்லாம இருந்தா உனக்கு என்ன வேணும் சொல்லு? சொல்லுடா கண்ணு...”

நான் யோசித்து “எனக்கு சிங்க மார்க் பட்டாசு ஒரு சரம், ஒத்தை வெடி ஒரு டஜன், ரெட்டை வெடி ஒரு டஜன், கேப்பு துப்பாக்கி, குதிரைவால், தரைச்சக்கரம், ஊசிப்பட்டாசு, ராக்கெட், ஏரோப்ளேன், விஷ்ணு சக்கரம், லட்சுமி வெடி அப்புறம் பத்த வெக்க மட்டிப்பால் வத்தி” என்று என் சக்திக்கேற்ப ஒரு பட்டியல் சொல்லிப் பார்த்தேன்.

அவர் எழுந்து அலமாரிக்குச் சென்று ஒரு காகிதத்தில் எழுதி “இதைக் கொண்டு போய் டி.பி.ஜி. கடையில கொடு. உனக்கு வேணுங்கறதை

வாங்கிக்கோ. ஆனால மாடில என்ன பார்த்தே?”

“ஓலைப் பட்டாசு காயப் போடறப்ப உங்களையும் சின்னாவையும்.”

“ஏய்... யாரும் கேட்டா அங்க ஏதும் பார்க்கலைன்னு சொல்லணும்... அப்பத்தான் பட்டாசு.”

“சரி மாமா” என்றேன்.

“சரி மாமா” என்று என் தலையில் நெத்தினார்.

அந்த தீபாவளிக்கு நானும் வீரராகவனும் ஆசை தீர பட்டாசு வெடித்ததும் அல்லாமல், கார்த்திகைக்கும் நிறைய பாக்கி வைத்தோம். பாட்டி “ஏதுரா இத்தனை பட்டாசு?” என்றதற்கு “நாங்கள்லாம் சேர்ந்து சந்தா கட்டி வாங்கினோம் பாட்டி” என்று புளுகினேன்.

அடுத்த தினங்களில் நான எப்போது சந்தானமையங்காரை பார்த்தாலும் “இங்க வாடா” என்று உள்ளே பரிவுடன் அழைத்து “சர்க்கரைப் பொங்கல் சாப்பிடறியா? வறுத்த பாதாம் பருப்பு வேணுமா? அரவணை வேணுமா?” என்று தின்னக் கொடுத்துக் கொண்டேயிருந்தார்.

சில நாட்களில் தைரியம் பெற்று, “மாமா தெற்கு வாசல்ல புதுசா ஒரு பம்பரம் வந்திருக்கு. கோல் எடுத்தா கைல அப்படியே பூனைக்குட்டி மாதிரி தூங்கறது மாமா” என்றால்

“உடனே போய் ரெண்டு பம்பரமா வாங்கிக்கோ. தலையாரில குத்து பட்டா மாத்து பம்பரம் வேணுமோ இல்லையோ?” என்பார். அப்புறம் மேலும் தைரியம் பெற்று நிஜ கிரிக்கெட் பந்து, ஸ்டம்ப் எல்லாம் கேட்டுக் கூடக் கொடுத்துவிட்டார்.

பெருந்தேவி மாமி “என்ன இப்படி இந்தப் பிள்ளைக்குச் செல்லம் கொடுக்கறீங்க?” என்று கேட்டதற்கு “பையன் நன்னா படிக்கறான். அதுக்கு ஒத்தாசை பண்ணலாம்னு” என்றார் என்னைப் பார்த்து கண் சிமிட்டி.

இவ்வாறு இனிதாகக் கழிந்து கொண்டிருந்த தினங்கள் அதிகம் நீடிக்கவில்லை. வீரு “ஒரு பார்க்கர் பேனா கேட்டுப் பார்” என்று

சொல்ல சந்தானமையங்கார் வீட்டுக்குள் சுதந்திரமாக நான் நுழைய மரவேலைப்பாடுகள் நிறைந்த கறுப்பு மேசை கண்ணாடியில் தெரிய விறுவிறுப்பாக தன்னை விசிறிக்கொண்டு சந்தானமையங்கார் குறுக்கும், நெடுக்குமாக நடந்து கொண்டிருக்க, பக்கத்தில் அவர் மனைவி பெருந்தேவி கோபத்துடன் அழுதுகொண்டிருக்க, அருகே ஓரத்தில் சின்னா வாயை முந்தானையால் பொத்தி அவளும் அழுது கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் மாமி "வாடா... இந்த பிராமணன் செய்த அநியாயத்தை பார்த்தாயோ... மொட்டை மாடில சின்னாவை கூட்டி வெச்சுண்டு..."

"ஏய் நீ போடா..."

"ஏண்டி அந்த பிராமணன்தான் துப்புக்கெட்டு போய் உன் கையை புடிச்சான்னா உன் புத்தி எங்கடி போச்சு? இடுப்பொடிஞ்ச சக்களத்தி, நீ நல்ல பாம்புக்குட்டி, சக்கை திங்க வந்தவளே" அதன் பின் "உனக்கு குளிர் காய்ச்சல் வர... உனக்கு பாடை கட்ட" என்று பலமாக திட்டியதில் சின்னா, "கிணற்றில் விழப் போகிறேன்" என்று புறப்பட எனக்கு அழுகை வந்து விட... "பாருங்கோ.... இந்த பிள்ளை கூட வருத்தப்படறது. உங்களுக்கு வெக்கமா இல்லை... ஓசிச் சிறுக்கி."

நான் அழுதது அதற்காக இல்லை. சந்தானமையங்காரிடம் என் ப்ளாக்மெயில் இப்படி திடீரென்று மதிப்பிழந்து போய் விட்டதே என்றுதான்!

அடுத்த தீபாவளிக்கு பழையபடி ஐந்து ரூபாய்க்கு ஓலைப்பட்டாசு, வேட்டுக் குழாய்தான்.

அந்த தீபாவளியை மறக்க முடியாது தான். அந்த வயசிலேயே எனக்கு கொஞ்சம் அவசரப்பட்டுக் கிடைத்த சில சில ஞானங்களால் அறியாச் சிறுவன் அறிந்த சிறுவனாகிவிட்டேன். அது என் பிற்கால வாழ்க்கையை எவ்வளவு தூரம் மாற்றிவிட்டது! என் பிழைப்பே இந்த மாதிரி மற்றவர் பற்றி தகவல் அவதூறு சேகரித்து விலை பேசுவதாகி, அதைப் பயன்படுத்திக் கொண்டு பணம் சேர்ப்பதாகி விட்டது. எத்தனையோ பேரை என் நளின மூர்க்கங்களில் பயமுறுத்தி நிறையவே காசு சேர்த்து விட்டேன். இப்போது தீபாவளிக்கு என் இரண்டு மனைவியருக்கும் எட்டாயிரம் ரூபாயில் புடவை எடுக்கிறேன். என் பிள்ளைகள் தொடர்ந்து அறுபது நிமிஷம் வெடிக்கும் ஆயிரம் ரூபாய்

சரமெல்லாம் வெடிக்கிறார்கள்.

நான் பண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டு, என் நாய்களுடன் பேசுகிறேன். "சீஸர், ரீட்டா... அந்த தீபாவளியன்று சந்தானமையங்காரை மாடியில் பார்த்திராவிட்டால், நான் எங்காவது பி.காம். படித்து விட்டு ரயில்வே கிளார்க்காக நிம்மதியாக இருந்திருப்பேனே!"

ஆம்! என் முதல் பொய், முதல் பெண் தரிசனம், முதல் பணம் பிடுங்கும் வழி எல்லாமே அந்த தீபாவளியில்தான் துவங்கி திருத்த முடியாமல் விகாரப்படுத்தப்பட்டேன்.

க ாரணம் – ஓலைப் பட்டாசு!

****

ஜோதியும் ரமணியும்

புதிய பெண் லெக்சரர், ரமணியை எப்படி சமாளிக்கப்போகிறாள் என்று கதி கலங்கிப்போனோம். ரமணி என்று பெயர் இருந்தால் ஒருவன் எப்படி இருப்பான்? குழந்தை முகம், பெண்மை மிளிரும் தேக அமைப்புடன்தானே? தப்பு. இவன் மிலிட்டரி மீசையுடன் காட்டாகுஸ்தி பயில்வான் போல இருந்தான். போதாமல் பலத்த குரல். யாரையாவது விளித்தால் ஹாஸ்டலே அதிரும். சிரிக்கும்போது மட்டும் கண்களில் ரமணி தெரிவான். மற்றபடி காட்டான்.

ஒரு மாதம் லேட்டாகத்தான் சேர்ந்தான். முதலில் அவனை சர்வே கிளாசில் வெளியே ஹாஸ்டலைச் சுற்றி அளக்கும் பயிற்சியில் பார்த்தேன். ''என் பேர் ரமணி. ஆட்டோமொபைல் இன்ஜினீயரிங்ல புதுசா சேர்ந்திருக்கேன். கை குடு' என்றான். குடுத்த கை வெல்லப்பாகு போல் பிசுபிசுவென்றிருந்தது. நான் துடைத்துக்கொள்ள, ''கொஞ்சம் பிடிச்சுக்கோ'' என்று செயின் சர்வேக்கான சங்கிலியை என்னிடம் கொடுத்துவிட்டு நியூ ஆஸ்டலின் மூலையில் திரும்பி அங்கே ரத்தன்லாலிடம் எனக்குத் தெரியாமல் மறுமுனையைக் கொடுத்துவிட்டு வேறுவழியாக காண்டீனுக்கு போய்விட்டான். இருவரும் பேந்தா மாதிரி ஒரு மணி நேரமாகசெயினைப் பிடித்துக் கொண்டு நிற்கிறோம். 'என்னடா' என்று பட்டூஸ் என்கிற பட்டாபிராமன் விசாரித்ததில் ரமணி அந்தப் பக்கம் இருக்கிறான். அளந்துகொண்டு இருக்கிறான் என்று

இருவரும் சொல்ல, விசாரித்ததில் கேண்டீனில் பஜ்ஜி சாப்பிட்டுக் கொண்டு இருந்தான். ‘‘நானா! நீ வேற யாரையோ சொல்ற! எனக்கு சர்வே கிளாஸே கிடையாதே!’’ என்று சாது முகத்துடன் புளுகினதிலிருந்து அவனைக் கண்டாலே நானும் ரத்தன்லாலும் ஒதுங்கினோம். அந்த சம்பவத்தின் அவமானம் கலைய மூன்று மாதமாயிற்று.

ரமணி எப்போது யாரை எப்படிக் கவிழ்ப்பான் என்பது யாருக்கும் தெரியாது. சிறு நாடகங்களாடுவது அவனது இயற்கை. சின்ன விஷயத்துக்குக்கூட பொய் சொல்வான். மணி என்ன என்றால், அரை மணி கூட்டிச் சொல்வான். திங்கள்கிழமையை வியாழக்கிழமை என்பான். புதிய ஆட்களைச் சந்திக்கும்போது முத்தரையன், ரமணி ஐயர், அல்டாப் உசேன் என்று இஷ்டத்துக்கு பேர் மாற்றிச் சொல்வான். சொந்த ஊர் கேட்டால் ஒரு நாள் ஹைதராபாத், ஒரு நாள் சின்னாளம்பட்டி, ஒரு நாள் மொரிஷியஸ். நிஜப் பெயர் ரமணிதானா என்று எங்களுக்கு ரொம்ப நாள் சந்தேகமாக இருந்தது.

திடீர் என்று மொட்டை போட்டுக்கொள்வான். இட்லி விழுங்கும் போட்டியில் மற்ற பேர் பதினைந்து இட்லியிலேயே தவித்துக்கொண்டு இருக்கையில் ரமணி லேட்டாக மெஸ்ஸுக்கு வந்து சேர்ந்துகொள்வான். நாற்பது இட்லி போடச் சொல்லி சாம்பாரில் குளிப்பாட்டி கவளம் கவளமாக ஆக்கிக்கொண்டு கன்னங்களின் இடுக்கிலேயே வைத்துக்கொள்வான். போட்டிக்கான நேரம் தீர்ந்ததும் துப்பிவிட்டு இன்னும் இரண்டு இட்லி சாப்பிட்டுவிட்டு எழுந்து செல்வான். ஹாஸ்டல் தினத்தின்போது மார்க்கருடன் ராயபுரத்திலிருந்து சாராயம் வாங்கி வந்து டென்னிஸ் கோர்ட்டில் நெற்றியில் கர்ச்சீப் கட்டிக்கொண்டு ‘‘மார்க்கர் வருத்தப்படாதே! சரோ வரேன்னு சொல்லிவிட்டு வரலை பாரு. அதான் ரொம்ப துக்கம். எனக்கு ஒரு தேவாங்கு மட்டும் வாங்கிக் கொடுத்துரு’’

மார்க்கர், ‘‘கவலைப்படாதே தம்பி! சரோசா இல்லைன்னா சரசாவை இட்டாரேன்’’

‘‘எங்க இருக்கா சொல்லு’’ இவ்வாறு திரும்பத் திரும்ப உரத்த குரலில் அலம்பிக்கொண்டு இருப்பார்கள். ஒரு பத்தி நாடகம் போல இருக்கும். பிறகு ‘‘மார்க்கர், இப்டியே போ, ரெண்டு லைட்டு தெரியுது பாரு. அதுக்கு மத்தியில் நடந்து போ’’ என்று அனுப்புவான். சற்று நேரத்தில்

‘க்றீச்’ என்று ப்ரேக் சப்தம் கேட்கும்.

‘‘மார்க்கர் போய்ட்டான்டா’’

‘‘அவனா... அவன் ஏன் சாவறான். இன்னும் எவ்வளவு ஜிஞ்சர் அடிக்கணும் அவனுக்கு’’.

‘‘ரமணி தேவாங்கு வளக்கப் போறியா?’’

‘‘ஆமாடா’’

‘‘யார்ரா சரோ?’’

‘‘என் உயிர்க் காதலி. பேங்கல வேலைசெய்றா’’

‘‘எந்த பாங்க்?’’

‘‘ப்ளட் பாங்க்’’ என்று சிரித்தான்.

நியூ ஹாஸ்டலில் வடக்கத்தி மாணவர்களிடையே கைகலப்பு நேர்ந்தபோது ரமணி இடையே புகுந்து கையெடுத்துக் கும்பிட்டு சண்டையைச் சரளமாக இந்தி கவிதைகள் பேசி நிறுத்தினான். மற்றொரு சந்தர்ப்பத்தில் ப்ரேம் மல்ஹனை வெட்டக் கத்தியை எடுத்துக்கொண்டு துரத்தினான். வளாகத்தில் ஓடிப்பிடித்து அவன் கழுத்தில் கத்தி வைத்துவிட்டு சற்று யோசித்து, ‘‘கை குடு! வியாழக்கிழமை நான் கொல்றதில்லை’’ என்றான்.

முதல் செமஸ்டருக்குள்ளே அவனைக் கண்டாலே மற்ற மாணவர்களும் ஆசிரியர்களும் அலறத் தொடங்கி னார்கள். கிளாசுக்கு வரும்போது ஒரு ஜிம்மி நாய் கூட வந்து காத்திருக்கும். சிலவேளை உள்ளே எட்டிப் பார்க்கும். ‘‘வரேண்டா அவசரப்படாதே’’.

யாரைச் சந்தித்தாலும் கையை முதுகுப் பக்கம் முறுக்கி வலிக்கிறாற் போல் செய்துவிட்டுத்தான் விடுவான். ஏதாவது பதில் சொன்னால் நேராக அடிமடி மர்மஸ்தானத்தில் கை செலுத்தித் திருகுவான். நாம் துடிப்பதைக் கண்டு கண்ணீர் வரச் சிரிப்பான். அதீத பலாத்காரன். தொடாமல், அடிக்காமல், முதுகில் குத்தாமல், கன்னத்தில் தட்டாமல்,

அங்கே பிடிக்காமல் அவனால் பேசவே முடியாது!

பரீட்சை பேப்பர் திருத்துபவரை ஒருமுறை ரயிலிலிருந்து தள்ளுவதாகப் பயமுறுத்தியதில், ரமணி எல்லா சப்ஜெக்டிலும் பாஸ். கெமிஸ்டரி கிருஷ்ணசாமி ஒருமுறை வெற்றுப் பேப்பருக்கு நாற்பத்தைந்து போட்டார். ஓரத்தில் இரண்டு வரிதான் எழுதியிருந்தான்... ''பட்டா, மார்க் போடலை... தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்ல தள்ளிடுவேன்'.' தண்டவாளத்துக்குப் பக்கத்தில் இருந்ததால் அத்தனை ரெயில்களும் ஹாஸ்டலுக்கு அருகில் அலறிக்கொண்டு செல்லும். ''எதுக்கப்பா பொல்லாப்பு, ரெண்டு பொண்ணு, வயசான அம்மா இருக்கா. கிறுக்குப் பய ஒண்ணு கிடக்க ஒண்ணு செய்துட்டான்னா?'' என்று மார்க் போட்டு விட்டார்.

திடீர் என்று ராத்திரி ஒன்பதரைக்கு ''வா ஓடியன்ல புதுப் படம் போலாம்'' என்று எல்லாரையும் திரட்டிக் கொண்டு ஸ்டேஷனுக்குப் போவோம். ரமணி, ''டிக்கெட் வாங்கிட்டு வரேன்'' என்று படியேறிவிடுவான். ட்ரெய்ன் வந்து எல்லோரும் ஏறிக்கொள்ள அது நகர்ந்ததும் ரமணி எங்கள் தேசிய கீதமான ''முண்டபக்கற மாரபக்கற ஓய் ஓய் ஓய்! சைதாப்பேட்டை க்ரோம்பேட்டை ஓய் ஓய் ஓய்!'' சொல்லியபடி இறங்கி, ''டேய் டிக்கெட் வாங்கலைடா, போய்ட்டு வாங்க'' என்று டாட்டா காட்டுவான்.

இவன் கொட்டம் தாங்க முடியாமல் அத்தனை பேரும் உள்ளம் கொதித்துக்கொண்டு இருந்தாலும் அவனை நேர்கொள்ளும்போது நேசிக்காமல் இருக்க முடியவில்லை. நம் எல்லோரிடமும் உள்ள கோகுல கிருஷ்ணனின் விஷம இச்சை காரணமாக இருக்கலாம். இந்நிலையில் முதன்முதலாக ஆண்கள் காலேஜில் ஒரு பெண் லெக்சரராக சேரப்போகிறாள் என்று தெரிந்தபோது கதிகலங்கிப் போனோம். எப்போது ராஜினாமா கொடுப்பாள், மூணு நாளா... ஒரு வாரமா? என்று ரமணி இல்லாதபோது பந்தயம் கட்டி னோம்.

''எலக்ட்ரானிக்ஸ் லெக்சரர்றா... ரமணி ஆட்டோ. அதனால ப்ரச்னை வராது'' என்றேன்.

''ஹாஸ்டல்ல ரூம் கொடுக்கப் போறாங்களாம்.

''போச்சுரா.''

அவளை முதலில் ஸ்டேஷனில் வைத்துத்தான் பார்த்தோம். இந்த வருஷம்தான் பாஸ் பண்ணியிருக்க வேண்டும். படிப்பிலேயே கவனமாக, உடம்பை பார்த்துக்கொள்ளாமல் இருந்திருக்கிறாள் போல. மொத்தமே பத்து கேஜிதான் இருந்தாள். அஞ்சடிக்கு ஒரு அங்குலம்தான் மிஞ்சியிருந்தாள். பலமாக ஊதினால் விழுந்துவிடுவாள். ரமணி அவளை ஒற்றைக் கையால் தூக்கிவிடலாம். யாராவது காதலிக்க வேண்டும் என்றால் மிகுந்த கற்பனை வேண்டும் என்று தோன்றியது. ''குழந்தைடா அது'' என்றான் நித்யானந்தன். 'இரு' என்றான் ரமணி. அவள் வந்து சேரும்போதே, ரமணியை சந்திக்கும் துரதிர்ஷ்டமாகிவிட்டது. சபர்பன் ரயில் நிலையத்தில் புது ஜமக்காளம் சுற்றின படுக்கையும் தகரப் பெட்டியும் நடுவயதுத் தந்தையுமாக வந்து இறங்கியபோது, ரமணி ரெயில்வே பெஞ்சில் சிகரெட் கடைக்காரனிடம் கடன் சொல்லிக்கொண்டு இருந்தான். ''குடுக்கலைன்னா என்ன ரமணி? ஒண்ணாம் தேதி குடு. அதுக்கு எதுக்கு கையை முறுக்கறே!''

''எக்ஸ்க்யூஸ் மி! ஹாஸ்டலுக்கு எப்டி போகணும்?''

ரமணி சட்டென்று அஜித்குமாரின் கறுப்புக் கண்ணாடியை அணிந்துகொண்டு என் தோளைப் பிடித்துக்கொண்டு அருகே சென்று ''ஐயா எனக்கு அனகாபுத்தூர் போகணும். மெயின் ரோட்டுக்கு போகணும்... கண் தெரியலை. கூட்டிட்டுப் போறீங்களா?''

''ஸாரி ஸாரி'' என்றாள்.

''இவன் பேரு மோகன்தாஸ் காந்தி. எனக்காகப் பரீட்சை எழுதுவான். ஸ்பெஷல் பர்மிஷன் கொடுத் திருக்காங்க''

''மன்னிச்சுக்கங்க. நாங்களே குரோம்பேட்டைக்குப் புதுசு. உங்க பேர்?''

''அனகாபுத்தூர் அழகேசன்''.

அனைவரும் சிரிப்பை அடக்கி கொள்வதைப் பார்த்தாள்.

''அனகாபுத்தூரா?'' என்று நான் வியக்க, ''சும்மாரு'' என்று அதட்டினான்.

''எதிர்லயே ஹாஸ்டல் தெரியறதே'' என்றாள்.

‘‘பர்ஸ்ட் இயரா நீங்க?’’ என்றான்.

‘‘இல்லை, லெக்சரரா சேர வந்திருக்கேன்’’.

‘‘லெக்சரரா?’’ என்று அட்டகாசமாகச் சிரித்தான். தந்தை ‘‘ஜோதி! வா, கண்டவாளோட பேசாதே!’’

ரமணி எழுந்து அப்பனின் சட்டையைப் பிடித்தான்.

‘‘என் பேரு கண்டவன் இல்லை. மரியாதையா பேரு கேளு. தி நேம் இஸ் எல்.ரமணி’’

‘‘ஏய் சட்டையை விடு’’.

ரமணி, ‘‘டேக் இட் ஈசி. நீங்க போங்க சார். பாப்பா பயந்துக்கப் போறது. இப்படியே மேம்பாலத்தைக் கடந்தா அந்தப் பக்கம் குறுக்கு வழி இருக்கு’’.

‘‘என் பேர் கண்டவனாடா?’’

‘‘கண்டுக்காதே ரமணி’’.

‘‘வாம்மா, ஸ்டேஷன் மாஸ்டரைக் கேக்கலாம்’’.

‘‘கணபதி ஐயர்! உம்ம பொண்ணு எப்படி சேர்றான்னு பாத்துர்றேன்!’’ என்றபோது ‘‘என்ன நீ மரியாதை இல்லாமப் பேசறே?’’ என்று அந்த பெண் ரமணியை அதட்டினாள். சற்று நேரம் பூமி சுழல்வது நின்றது.

இளங்கன்று பயமறியாது என்று சொல்வார்கள். நாங்கள் பயந்துகொண்டு ரமணியை பார்க்க, அவள் யதார்த்தமாக, ‘‘அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் இருக்கு. என்னைத் தடுக்க நீ என்ன டைரக்டரா?’’

ரமணிக்கு இது புதுசு. இது வரை அவனை எதிர்த்தோ, ஏன் சமமாகவோகூட யாரும் பேசியதில்லை.

‘‘வா ஜோதி’’.

‘‘ஜோதியா? கவனிச்சுக்கறேன்.’’

ஜோதி ரிஜிஸ்ட்ராரிடம் பொறுப்பேற்ற கையோடு நடந்ததை ஒரு புகார் கடிதமாக எழுதிக் கொடுத்தாள். அப்போது ஆரம்பித்தது யுத்தம். டைரக்டர், ரமணியைக் கூப்பிட்டு விசாரித்திருக்கிறார். ‘‘உன்னைப்பற்றி கேள்விப்பட்டிருக்கேன். ரொம்ப ப்ராக்டிக்கல். ஜோக்ஸ் செய்றியாம். மனசுக்குள்ள என்னன்னு நினைச்சுட்டிருக்கே? ஒழுங்கா படிச்சு வெளிய வரணுமா? டிஸ்மிஸ் ஆகணுமா?’’

ரமணி தாசனுதாசனாக ‘‘சார் இனிமே அந்த மாதிரி கம்ப்ளெயிண்ட் வராது. இது உறுதி. எனக்கு எதிரிகள் யாரும் கிடையாது. விசாரிச்சுப் பாருங்க. ஸ்டேஷன்ல என் சாயல்ல ஒரு பிச்சைக்காரன் இருக்கான் சார். அவன் பேரும் ரமணி. அவனைப் பத்திதான் என் மேல குற்றம் சொல்லியிருக்காங்க. புதுசில்லையா? காலைலதான் ஊர்லருந்து வந்தேன்’’

‘‘அந்தக் கதையெல்லாம் வேண்டாம். ஸ்டேஷன்ல மிஸ் ஜோதிகிட்ட நீ நடந்ததுக்கு மன்னிப்புக் கேட்டு கடிதம் எழுது முதல்ல.’’

‘‘எழுதலைன்னா என்ன ஆகும் சார்... தெரிஞ்சுக்கலாமா?’’

‘‘உன்னை சஸ்பெண்ட் பண்ண வேண்டியிருக்கும்.’’.

‘‘வேண்டாம் சார். எங்கம்மா அப்பா உயிரை விட்டுருவாங்க. ரெண்டு பேருக்கும் ஹார்ட் வீக். எந்த பேப்பரைப் வேணா காட்டுங்க. கையெழுத்துப் போட்டுத் தரேன்.’’

அந்தக் கடிதத்தில் ‘‘சாது ரமணதாஸ், கேம்ப் மெட்ராஸ் 44’’ என்று கையெழுத்துப் போட்டான்.

அந்தப் பெண் இரண்டாம் வருஷத்துக்கு எலக்ட்ரானிக்ஸ் பாடம் எடுத்தபோது வகுப்பில் வந்து ரமணி உட்கார்ந்தான். அவனைப் பயத்துடன் பார்த்தோம்.

‘‘ரமணி இது உன் க்ளாஸ் இல்லை’’

‘‘அட ஜோஜோ... எப்படி சொல்லிக் கொடுக்கறதுன்னு டைரக்டர்

ரிப்போர்ட் கேட்டிருக்கார்''.

ஜோதி, ''தி பீரியட் ஆஃப் தி மல்ட்டி வைப்ரேட்டர் இஸ் ஒன் பை ஸி ஆர்'' என்றபோது, ''உன் பீரியட் எப்ப?'' என்றான். அவள் எழுதுவதை பாதியில் நிறுத்தி கரும்பலகையிலிருந்து திரும்பிப் பார்த்தாள். ''ரமணி, இது உன் கிளாஸ் இல்லை. இப்ப வெளிய போ'' என்றாள்.

''நான் ஃபேகல்ட்டி மாத்திட்டேன். இப்ப எலக்ட்ரானிக்ஸ்''.

''கிளாஸ் ரிஜிஸ்டர்ல உன் பேர் இல்லை. போ... கெட் அவுட்.''

''நீயே எழுதிக்க என் பேரை. எல்.ரமணி. டி.நம்பர் 504. இல்ல கொடு, நான் எழுதறேன்''.

ரிஜிஸ்தரில் தன் பெயரை எழுதினான். ''லேடி லேடி, எங்கிட்ட வாடி. எல்லாம் சொல்லித் தாடி''

ஒரு கணம் அவனையே கோபமாகப் பார்த்தாள். அந்த எளிய முகத்தில் அத்தனை கோபம்தான் சாத்தியம் என்பதுபோல் சட்டென்று கண்களில் நீர் நிரம்பியது. எத்தனை சபைகளில் எத்தனைப் பெண்கள் அவமானப்பட்டிருக்கிறார்கள். அவர்களது ஒட்டுமொத்தமான பிரதிநிதிபோல சரித்திரம் கடந்து சற்றுநேரம் நின்றாள். பிறகு சாக்பீஸ் கையைத் துடைத்துக்கொண்டாள்.

''தங்கைகளைப் படிக்கவெக்க முதமுதலா வேலைக்கு வந்து சேர்ந்திருக்கேன். ஏன் இப்படிப் படுத்தறீங்க?'' என்றாள்.

ரமணி ''டேய் படுத்தாதீங்கப்பா. எத்தனை தங்கைங்க?'' என்றான். சிகரெட் பற்றவைத்தான். பெஞ்சின் மேல் கால் போட்டுக்கொண்டு ஊதினான். எதிர்பாராதவிதமாக ஜோதி என்னைப் பார்த்து, ''576, நீ போய் ரிஜிஸ்ட்ராரைக் கூட்டிட்டு வாப்பா'' என்றாள்.

ரமணி என்னைப் பார்த்து, ''ரங்குஸ், பலி விழும்' என்றான்.

நான் மௌனமாக இருக்க, ''கிளாஸ்ல நாப்பது பேர் இருக்கீங்க.. யாருக்கும் தைரியம் இல்லையா?'' என்றாள். துரியோதனின் சபைபோல மௌனம்,.

''நான் போறேன் மிஸ். எங்கிட்ட லெட்டர் குடுங்க'' என்றான் ரமணி

அவளே போர்டை அழித்துவிட்டு டைரக்டரைச் சந்திக்கச் சென்றாள்.

மறுநாள் நோட்டீஸ் போர்டில் எல்.ரமணியின் மேல் மூன்று குற்றச்சாட்டுகள் பட்டியலிட்டிருந்தது. 'தப்பான வகுப்பறையில், தவறான வார்த்தைகள் பேசினது, வகுப்பில் புகை பிடித்தது. விசாரணை முடியும் வரை ரமணிக்கு வகுப்புகளில் நுழைய அனுமதி இல்லை' என்று அறிவித்தது.

அதன் பிரதியை ப்யூன் கொண்டு வந்து கொடுக்க ரமணி அவனைத் துரத்தி அடித்தான். ''வக்காளி, எனக்கு நோட்டீஸ் குடுக்க வைஸ் சான்சிலர் தாண்டா வரணும். எல்லாத்தையும் எல்லாரையும் பத்தவைக்கிறேன் பாரு. சிட்டில உள்ள அத்தனை காலேஜ்லயும் ஸ்ட்ரைக்' என்று ஆபீஸ் வளாகத்தில் சத்தம் போட்டான்.

அப்படி ஏதும் நிகழவில்லை. ஹாஸ்டலிலிருந்து புறப்பட்டுச் சென்றான். நடுராத்திரியில் திரும்பி வந்து ஜோதி தங்கியிருந்த ஹாஸ்டல் அறைக்கு முன் சத்தம் போட்டான். ''வெளிய வாடி ஏய்!'' என்று கல்லெறிந்தான். புது ஹாஸ்டல் கட்டுவதற்காகக் கட்டியிருந்த தற்காலிக நீர்த் தொட்டியில் குதித்து ஈரமாக வந்து அவள் கதவைத் தட்டினான். ''ஜோதி ஏய் ஜோதி, ரியலி சாரி ஜோதி. எனக்குப் பேதி ஜோதி. நான் ஏன் அப்படின்னு வெளிய வந்தா சொல்றேன். ஐ லவ் யு ஜோதி!''

அந்த அறை இருட்டாக மௌனமாக இருந்தது. முதல் மாடியிலிருந்து டிசௌஸா, மொரைரா, வெங்கடேசன், நான் எல்லோரும் அவனைச் சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றோம். அந்த அறையில் சலனமே இல்லை. பாவம் அந்தப் பெண், கிலியில் நடுங்கிக்கொண்டு சுருண்டு உட்கார்ந்திருக்க வேண்டும்.

ஹாஸ்டலிலிருந்து வகுப்பறைக்குச் செல்லும் பாதையில் சரக்கொன்றை மரங்களும் செம்பருத்தியும் நிழல் தரும் ஃபுட்பால் மைதானத்தில் ஒரு டக்கோட்டா ஏரோப்ளேன் இருக்கும். பேருந்துகளின் பணிமனை ஒன்று இருக்கும். ஜோதி அவ்வழியே தன் வகுப்புக்குப் பாடம் எடுக்கச் சென்ற போது, ஒரு புல்லட்டில் கடகடவென்று புழுதி பறக்க ஓட்டிவந்து அவளருகில் சுற்றி நிறுத்தி, ''வா வா, க்ளாஸ்ல கொண்டுவிடறேன்''. அவள், ''என்கூட பேசாதே'' என்று விரைவாக நடக்க, அடிக்கடி

த்ராட்டிலை விர்விர் பண்ணிக்கொண்டு பாடிகார்டு போல கூடவே ஓட்டி வந்தான்.

அவள் மேலாடைத் தாவணியைப் பிடித்து இழுத்ததாக ஜோதி தன் புகார் கடிதத்தில், போலீஸ் எழுதச் சொன்னார்கள். பாதுகாப்பு கேட்டிருக்கிறாள். பல்லாவரம் ஸ்டேஷனிலிருந்து இன்ஸ்பெக்டர் வந்தார். டைரக்டரின் அலுவலகத்திலும் அவர் க்வார்ட்டர்ஸிலும் போலீஸ்காரர்கள் நின்றார்கள். டைரக்டருக்கு மகா கோபம். மன்னிப்பே கிடையாது என்று வி.சி. ஆபிஸக்கு எழுதி பர்மிஷன் வாங்கி கேம்பஸைவிட்டு நீக்கி மூணு வருஷம் ரஸ்டிகேட் பண்ணும்படி சிபாரிசு செய்தார். லெக்சரர் டி.எம்.டி. ஜோதியைப் பலாத்காரம் செய்த குற்றத்துக்காக அவனை அரெஸ்ட் பண்ண போலீஸ் வாரண்ட்டுடன் வந்திருந்தார்கள்.

ஹாஸ்டலில் ரமணியைத் தேடினால் காணவில்லை. மாணவர்கள் அனைவரும் பரபரப்பாக முடிச்சு முடிச்சாகக் கூடி இருக்க, டைரக்டரிடம் இந்த தடவை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டோம்.

அவர், ''படிக்கிற பையன், ரேங்க் வாங்குற பையனுக்கு மன்னிப்பு கேளுங்கப்பா. இந்தப் பொறுக்கி எல்லாரையும் கொடுமைப்படுத்திருக்கான். இவனை யாராலயும் காப்பாத்த முடியாது.''.

''இருந்தாலும் இத்தனை கடுமையாத் தண்டிக்கணுமா?''

''இது குறைந்தபட்சத் தண்டனை. யூனிவர்சிட்டி ரூல்ஸ் அப்படி'' என்றார்.

''யாராவது ரமணிகிட்ட போய்ச் சொல்லி ஊருக்குப் புறப்பட்டுப் போகச் சொல்லிரலாம்'' என்று யோசனை சொன்னார்கள். ''இல்லைடா, அவனை ஒருமுறை உள்ள தள்ளினால்தான் புத்தி வரும்''

''மூணு வருஷம் டீபார் பண்றது தப்புடா. அவன் வாழ்க்கையே பாழாகிடும்''.

ரமணி லோக்கல் ட்ரெய்னிலிருந்து இறங்கி தூரத்தில் வந்துகொண்டு இருக்க, அவனை நோக்கி ஓடினேன். ''ரமணி இப்படியே ஊருக்குப்

போய்டு. உன்னை அரெஸ்ட் பண்ண போலீஸ் வந்திருக்காங்க.''

''அப்படியா? வெரிகுட் வெரிகுட்... எங்க?''

''டைரக்டர் ஆபிஸ்ல... போய்டுரா.''

''தேவையில்லை. யார் அந்த இன்ஸ்பெக்டர்? விசாரிக்கிறேன்.''

''ரமணி உன்னை மூணு வருஷம் டீபார் பண்ணிருக்காங்க. ஜெயில்ல போடுவாங்க. இது விளையாட்டில்லை புரியுதா?''

''என்னடா தப்புப் பண்ணிட்டேன்? எதுத்தாப்பல பஸ் வருது. ஒதுங்கிக்கன்னு அந்தப் பொண்ணைத் தொட்டேன், அவ்வளவுதான்''.

''நம்பச் சொல்றியா? ஏன் இப்படி மரமண்டையா இருக்கே ரமணி?''

''பாரு, நம்பாட்டிப் போங்க. ஐ டோண்ட் கேர்''.

''ரமணி சாரிடா''.

''நானே சாரி இல்லை. நீ ஏண்டா சாரி. ஜோதி அக்கா... எப்படி இருக்காங்க?''

''பயத்துல இன்னிக்கு பூரா கிளாஸ் வரலை. டைரக்டர் ஆபீஸ்லயே இருக்காங்க.''

''போய்ப் பார்த்தாகணும்''.

''வேண்டாம் ரமணி''.

''போடா!''

டைரக்டர் ஆபீசில் எதிர்ப்புக் குரல் கொடுத்தோம். ''ரமணி ரமணி' என்று கோஷமிட்டதும் ரமணி அரசியல் தலைவன்போல வணங்கிவிட்டு 'உங்களுக்கெல்லாம் நண்பர்களே, ரோஷமுள்ளவர்களே! நாட்டுக் கட்டைகளே! என் மேல இருக்கிற அக்கறைக்காக ஆளுக்கொரு ஏக்கரா நிலம் ஜூலியஸ் சீஸர்

உங்களுக்கு கொடுத்தாச்சு பழவந்தாங்கல்ல. தட்டுங்கடா கையை! வாழ்க ஜோதிபாய். மெஸ்ல நெய் ரோஸ்ட் போடச் சொல்லு. இப்ப வந்துர்றேன்'' என்று உள்ளே சென்றான்.

உள்ளே என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஒரு மணி நேரம் கழித்து முதலில் இன்ஸ்பெக்டர் வெளியே வந்து ஜீப்பில் ஏறிக்கொண்டார். கண்களைத் துடைத்துக் கொண்டு ரமணி மெல்லத்தான் வெளியே வந்தான். அவன் கையில் விலங்கு மாட்டினதுபோல் கர்ச்சீப் கட்டியிருந்தான். அதைச் சடுதியில் பிரித்து அவிழ்த்து, ''த்ரீ சியர்ஸ் டு ஜூலியஸ் சீஸர், ஹிப் ஹிப் ஹ§ர்ரே, முண்ட பக்கற மார பக்கற ஓய் ஓய் ஓய்!'' சொல்லிவிட்டு இரு கைகளையும் உயர்த்தி ''கை தட்டுங்கடா. எல்லா ஆர்டரையும் வாபஸ் வாங்கிட்டாங்க. போலீஸ் கேஸ§ம் வாபஸ்''.

நாங்கள் குதூகலத்துடன் ''என்னம்மா...எப்படி?''

''ஒரே ஒரு பொய் சொன்னேன். சால்வ் ஆயிருச்சு. நமக்குக் கைவந்த கலையாச்சே''

''என்னடா சொன்னே?''

''எனக்கு லுக்கிமியா... ஆறு மாசத்தில சாவப்போறேன். அந்த துக்கத்தை மறக்கத்தான் இந்த தமாஷ் எல்லாம் செய்தேன்னேன். டைரக்டர் அப்படியே அழுதுட்டார். அந்தப் பெண்ணும் தேம்பித் தேம்பி அழுதுது. பாரு எம்மேல சாஞ்சுகிட்டு அழுததில சட்டையெல்லாம் ஈரம்! எல்லா புகாரையும் வாபஸ் வாங்கிடுத்து. இன்ஸ்பெக்டர்கூட புறப்படறப்ப ஓரக்கண்ணைத் துடைச்சுகிட்டுத்தான் போனார். பாத்தியா? இந்தா சாப்பிடு'' என்று வேர்க்கடலை கொடுத்தான்.

அதை உடைத்தபோது உள்ளே எதிலும் பருப்பு இல்லை! ரமணியின் மற்றொரு ஏமாற்று வித்தை.

''டேய் போறுண்டா. இனிமேலாவது பொய் சொல்றதை விட்டுருடா.''

''பொய்தாண்டா என் உலகத்தை சுவாரஸ்யமாக்கறது. பொய் இல்லைன்னா வாழ்க்கையே ... உலகமே இல்லை!'' என்றான்.

மூன்றாவது செமஸ்டருக்குள் ஜோதி ராஜினாமா கொடுத்து விட்டாள். கல்யாணம் பண்ணிக் கொண்டு அமெரிக்கா போய் விட்டதாகச் சொன்னார்கள்.

ஊருக்குப்போன ரமணி மூன்றாவது செமஸ்டருக்கு வந்து சேரவே இல்லை. அதன்பின் அவனை நாங்கள் பார்க்கவே இல்லை. ஏன் என்று விசாரிக்கப் பயமாக இருந்தது.